JL
Y15 m211, M99M0
M99.15
1६२059

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XV. Madras: January 1913. No - 1.

புத்தகம் - ௧௫. சென்னப்பட்டணம்: ஜனவரிமீ 1913. இலக்கம் - 1.

## நமது பாடசாலைகளில்

## மதபோதனையும், ஒழுக்கப்பயிற்சியும் அவசியமா?

இந்தியாவில் சில காலமாய் ஓர் புதுக்கிளர்ச்சியுண்டாய் நம்மில் சிறந்த ஜனத்தலைவர்களும், கவர்ன்மெண்டாரும் கல்வியில் விசேஷ அக்கரை பாராட்டி வருவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். விவசாயப்படிப்பு, தொழிற் படிப்பு, மதபோதனை, ஒழுக்கப் பயிற்சி இவைகள் ஒரு தேசத்தின் க்ஷேமலாபத்திற்கு அவசியமல்லவாவென்று ஆலோசித்து வருகிறார்கள். தற்காலப்படிப்பில் வியாபாரம், விவசாயம், தொழில் போன்ற பொருளாதாரத் துறைகளில் விசேஷப்பயிற்சி வேண்டுமென்று யாவரும் ஒப்புக்கொள்கிறார்கள். படிப்பினால் குணமும், ஒழுக்கமும் விருத்தியடைய வேண்டுமென்றும், புத்தி விசாலிப்பதே பெருமை யல்லவென்றும் கூறுபவர் பலர். ஒழுக்கப்பயிற்சிக்கு மதப்படிப்பவசியமென்று வாதிக்கிறார்கள். ஆகையால் தற்காலப் படிப்பில் மதபோதனையில்லாததால் மாணாக்கர்கள் குருமார்களுக்கும், பெரியோர்களுக்கும் கீழ்ப்படியாதவர்களாயும், மரியாதைக் குறைவாய் நடப்பவர்களாயுமிருந்து ராஜத்துவேஷமுள்ள கூட்டங்களில் சேர்ந்து பொதுநலத்திற்கும், ஜீவகாருண்யத்திற்கு மேற்றதல்லாததான வழிகளில் அவர்கள் புத்தி செலுத்தப்படுகின்றனவென்றும் தேசாபிமானிகள் வருத்தப்படுகிறார்கள். மேலும் மதப்படிப்பில்லாததால் சிறுவர்கள் மனம் குழப்பமடைந்து பிறமதங்களைத் தழுவுவதற்கு வழியேற்படுகிறதென்று சிலர் கூறுகிறார்கள். ஆகையால் கவர்ன்மெண்டாருக்கும் ஜனத்தலைவர்களுக்கும் தீவிர உணர்ச்சி யுண்டாய் இதற்கு சிறந்த வுபாயமெதுவென்று யோசித்து பல ஸ்கீம்கள் வெளிவந்திருக்கின்றன.

பம்பாய், சென்னை, கல்கத்தா முதலியவிடங்களில் ஸ்கூல்களில் ஒழுக்கப் பயிற்சி எப்படி கற்பிக்கலாமென்பதை யோசனை செய்ய கமிட்டிகளை கவர்ன்மெண்டார் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். ஹிந்து ஜனத்தலைவர்கள் ஸ்ரீகாசியில் ஓர் ஹிந்து சர்வகலாசாலை ஏற்பாடுசெய்யப் பணம் வசூல்செய்துவருகிறார்கள். இதில் ஹிந்து மதப்படிப்பு பிரதானமாய் கொள்ளப்படுகிறது. அம்மாதிரியே மகமதியர்களும் அலிகார் பட்டணத்தில் ஓர் சர்வகலாசாலை ஏற்பாடு செய்து வருகிறார்கள். கிறிஸ்துமதப் பாதிரிகள் ஏற்கனவே சத்தியவேதத்தைத் தம்

162059



பாடசாலைகளில் கற்பித்து வருகிறார்கள். மைசூர் கவர்ன்மெண்டார் தம் சமஸ்தானத்திலுள்ள ஸ்கூல்களில் வேதபாடமும் மதப்படிப்பும் கற்பித்துக்கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

இந்த சமயத்தில் நாம் மதப்படிப்பு அவசியமாவென்பதைப்பற்றி யோசிக்கப் புகுவது சமயோஜிதமேயாகும். தற்கால முள்ள படிப்பினால் மாணாக்கர்கள் குணவான்களாயும் புத்திமான்களாயும் ஆகிறதில்லையா என்பதை நாம் கவனிக்கவேண்டும். கனம் கோகலே, சங்கரன்நாயர், வி. கிருஷ்ணசாமி அய்யர் போன்ற மஹான்கள் மதப்படிப்பின்றி கற்றதால் நல்ல குணவான்களாகவில்லையோ? ஆங்கிலத்திலும், சுயபாஷைகளிலும் சிறந்த புலவர்களால் இயற்றப்பட்டுள்ள மஹாகாவியங்களும், புஸ்தகங்களும் பாடமாகவைக்கப்பட்டிருக்கின்றன. ஷேக்ஸ்பியர், மில்டன், கம்பர், திருவள்ளுவர், மாணிக்க வாசகர் போன்றவர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களை வாசிப்பதாலேயே ஒழுக்கப்பயிற்சி ஏற்படாதா? உபாத்தியாயர்கள் தம்முடைய நடத்தையாலும் குணத்தாலும் மாணவர்களை குணவான்களாகச் செய்யமுடியாதா? மதக்கொள்கைகளையும் புராணக் கதைகளையும் படிப்பித்து வைத்து பாடமேற்றி வித்வான்களாகச் செய்தால் தான் நல்ல குணம் ஏற்படுமா என்றும் கேள்விகளை சிலர் கேட்கின்றனர்.

மதப்பயிற்சியின்றியே, ஒழுக்கத்தில் போதனை செய்தல் சாத்தியமில்லையாவென்று சிலர் கேட்கின்றனர். இந்தியாவில் பல மதங்களும், ஒரு மதத்திலே பல கிளைகளும், வித்தியாசங்களு மிருப்பதால், யாவருக்கும் சமிசமாய் மதபோதனை செய்யமுடியாமலிருப்பதால், ஒழுக்கப்பயிற்சிக்காக தனியாய் ஓர் புத்தகத்தை பாடமாக வைத்து நடத்துவது சிலாக்கியமென்பது சிலருடைய அபிப்பிராயம். இப்புத்தகத்தில் ராஜதந்திரிகள் மதாசாரியர்கள், இவர்களுடைய சரித்திரங்களும் அவைகளால் ஏற்படும் கற்பினையும் உள்ளவைகளாயிருக்கவேண்டும். திருநெல்வேலியில் A. கிருஷ்ணசாமி அய்யர் ஆரிய மதோபாக்கியானம் என்று ஒரு புஸ்தகம் பதிப்பித்திருக்கிறார். நீதியைக் கற்பிப்பதில் மதப்படிப்பு அவசியமென்று ஏற்படுகிறது.

நமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் தக்க உதாரணங்கள் இருக்கின்றன. இவைகளின்றி நீதியைமட்டும் போதித்தால் சிறுவர்கள் மனதில் ஆழப்பதியாதென்பதே பலருடைய கொள்கை. மேலும் ஆதிகாலத்திலேயே நாகரீமடைந்த இந்த தேசத்தில் மஹரிஷிகளால் வெளியிடப்பட்ட கொள்கைகளை நாம் அறிந்து அதன்படி ஒழுகவேண்டாமா? தாயார் வயிறெரிய மகேசுவர பூஜைசெய்தாற்போல் நம் மதத்தைப்பற்றி நமக்கொன்றும் தெரியாமல் பிறமதங்களை அறிய ஆவல்கொள்வது புத்தியீனமல்லவோ? எக்காலத்திலும் மதப்பயிற்சி இந்தியாவில் பெருமையாய் பாராட்டப்பட்டுவருகிறது. ஓர் மதவிஷயமாய் நாம் எடுத்துக்கொள்ளும் அக்கரைக்குக் கங்குகரையில்லை. ஏனெனில் பொதுவாய் இந்தியர்கள் கடவுளுக்குப் பயந்தவர்களாயும் ராஜவிசுவாச முடையவர்களாயுமிருப்பவர்கள். ஒருவன் கர்மபலத்தினால் நன்மையோ, தீமையோ அடைகிறானென்று நம்மில் சுலபமாய் நம்புகிறார்கள்.

ஐரோப்பியர்கள் ரசாயனசாஸ்திரம், நீராவி புகைக்கப்பல், ஆகாய விமானம் இவைகளைக் கற்பிப்பதில் நமக்கு உதவியாயிருந்தால் நாம் அவர்களுக்கு

SL
Y15m211, M99.1n5
M99.15



ஆத்மாவின் தத்வம், பரமாத்மாவின் இயற்கை, ஜந்மாஜந்மங்களின் பயன்
போன்ற விஷயங்களை அவர்களுக்கு போதித்து அவர்களை மதப் பற்றுடை
யவர்களாய்ச் செய்யவேண்டும். எல்லா மதங்களிலும் உண்மையுண்டு. ஆனல்
தத்துவசாஸ்திரம், தர்க்கம், வியாகரணம், மீமாம்சம் இவைகளில் நம்மவர்கள்
விசேஷ பாண்டித்ய மடைந்திருக்கிறார்கள். இந்த அறிவையும், ஞானத்தை
யும் மறைந்து போகும்படி செய்யலாமா? அவரவருக்கு தம்தம் மதத்தைப்
பற்றிய கொள்கைகளையும், நீதிகளையும் போதிக்கவேண்டாமா? நம்மில் ஆசா
ரங்களென்றும், சாஸ்திரக்கொள்கையென்றும் இருவகையுண்டு. சிற்சில ஆசா
ரங்கள் காலதேசவர்த்தமானத்திற்கேற்ப ஏற்பட்டன. இவை தற்காலத்துக்
குற்றவையா, அவை சாஸ்திர சம்மத முள்ளவையா யென்பதை அறிய மதப்
பயிற்சி அவசியம்வேண்டும். பெண்கல்வி, பெண்களுக்கு சுதந்தரம், ருது
வானபின் விவாகம்போன்ற விஷயங்களை சாஸ்திரோக்தமாய் ஆராய சாஸ்
திரத்தை அறியவேண்டியிருக்கிறது.

மதக்கொள்கைகள் மருந்தாகவும் ஆசாரங்கள் பத்தியமாகவும் நாம்
கொள்ளவேண்டும். மருந்து ஒன்றாயிருந்தாலும் பத்தியம் காலத்திற்குத் தகு
ந்தபடி வேறுபடும். ஆகையால் ஆசாரமாறுபாடு நன்மையேயொழிய தீமை
யல்ல. சிலர் கூறுவதாவது ஹிந்துமதம் பல கிளைகளாயிருப்பதாலும், ஆசாரங்
கள் வேறுபடுவதாலும் யாவற்குமொப்ப எப்படி மதபோதனை சாத்தியமென்று
கேட்கின்றனர். ஹிந்துக்கள் யாவரும் வேதத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள்.
சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளும் பின்பு ஏற்பட்டன. யாவருக்கும் பொதுவாய்
சில கொள்கைகளிருக்கின்ற பழக்க வழக்கங்களும், அநுஷ்டானங்களுமுண்டு.
இவைகளை அநுசரித்து ஓர் புஸ்தகம் எழுதி அதை மதபாடமாக ஸ்கூல்களில்
வைக்கலாம். மிஸஸ் அனிபெஸண்டு அம்மையார் சனாதனதர்மமென்று ஹிந்து
மதபுஸ்தகங்கள் வெளியிட்டுள்ளார். இவை காசி, திருச்சிமுதலிய இடங்களில்
பாடமாக வைக்கப்பட்டு மாணாக்கர்கள் இவைகளைப் படித்துவருகிறார்கள்.
இதை அநேகமாக எவரும் ஆக்ஷேபித்ததில்லை.

சிலர் ஹிந்து மதபோதனையால் பிராமணர்களுக்கு பிரதாந்ய மேற்படு
மென்று கூறுகிறார்கள். இது பிசகென்பது வெள்ளிடை விளங்கும். மதத்தில்
அஸ்திவாரமான கொள்கைகள் முக்கியமே யொழிய வருணாசிரமக்கடமைகள்
மாறுபடக்கூடியவைகளே. குணமுள்ளவர்கள் எவ்வருணத்தாராயினும் ஹிந்
துக்கள் அவர்களை மேன்மையாகக் கொண்டாடியிருக்கிறார்கள். நந்தனார், ஆழ்
வாராசாரியர். மேலும் விசேஷப் பாண்டித்யமடைய விருப்பமுள்ளவர்கள்
சாஸ்திரங்களையும், வேதஸ்மிருதி புஸ்தகங்களையும் நுட்பமாய் ஆராய்ந்து இக்
காலத்தில் படிப்பார்களேயொழிய அப்படியே விழுங்கிவிடமாட்டார்கள். எதி
லும் உண்மையையே நாடுவார்கள்.

இன்னொரு ஆக்ஷேபமென்னவென்றால் ஹிந்து சாஸ்திரங்களில் கட்டுக்
கதைகளும், நம்பத்தகாத விஷயங்களு மிருப்பதால் அவை மாணாக்கர்களின்
தற்கால அநுபவத்திற்கு சரியில்லாதவைகளை நம்பும்படிசெய்து மனதைக்
குழப்பஞ் செய்யுமென்பதே. இவைகளுக்கு தத்வார்த்தங்களு முண்டு. இதை
நல்லாசிரியர்கள்பால் கற்றுக்கொள்ளவேண்டும். எப்படி அன்னமானது நீரை
யும் பாலையும் கலந்துவைத்தால் பாலைக்கொண்டு, நீரை விலக்குகிறதோ அம்
மாதிரி பகுத்தறிவை காலேஜ் கிளாஸ்களில் தருந்த போதர்களின்கீழ் செலு
த்தி உண்மையை அறிவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பார்கள்.

கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் என்னசெய்யக்கூடும்? நல்லசாஸ்திர, நீதி புஸ்தகங்கள் பாடமாக காலேஜ்களில் வைக்கலாம். பொதுவான மதக் கொள்கைகளையும், ஒழுக்கங்களையும் பயிற்றுவிக்கலாம். என்றாலும் நம்மவர்களே இந்த விஷயாபி விருத்திக்கு முன்வரவேண்டும். மடாதிபதிகளும், தேவஸ்தானங்களும் தமது செலவுபோக மிகுந்த பணத்தை மதப்படிப்புக்காக உபயோகப்படுத்தவேண்டும். மதாசாரியர்கள் மதாபி விருத்தியிலும், சிஷ்ய கோடிகளின் க்ஷேமலாபத்தில் அக்கரை பாராட்டுவது உண்மையானால் அவர்களுக்கு அறிவுபுகட்டி, ஆத்ம விசாரத்தை அறிய வல்லவர்களாய்ச் செய்ய வேண்டும்.

தேவஸ்தாபனம் ஓர் மதஸ்தாபனமே. அதில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு மதபோதகர்களுக்கு பணம் செலவழிக்கப் படுமானால் ஜனங்களுக்கு தெய்வ பக்தியும் மதப்பற்றும் உண்டாகாதோ? சைவசமாஜம்போன்ற மதாபிவிருத்தியை நாடும் சங்கங்கள் உபந்யாசம் மூலமாயும், சிறுவர்களுக்கு தக்கவர்களைக்கொண்டு பகவத்கீதைபோன்ற சிறந்த நூல்களை வாரமொருமுறையேனும் கற்பித்துக் கொடுப்பதாக ஏற்பட்டால் அதினால் உண்டாகும் நன்மை கணக்கிட முடியாது.

வீட்டிலேயே மதபோதனை செய்யக்கூடுமென்பது சாத்தியமில்லை. நன்கறிந்த ஆசிரியர்கள் விஷயங்களை சொன்னால்மட்டும் சிறுவர்கள் மனதில் பதியும். தற்காலம் பெற்றோர்களும் அதிகமாய்த் தெரிந்தவர்களாயுமில்லை.

ஆகையால் கீழ் வகுப்புகளில் மதக்கொள்கைகளும், நீதிப் புஸ்தகங்களும் கற்பிக்கப்படவேண்டும். காலேஜ்களில் பெரியசாஸ்திரங்களையும், ஸ்மிருதிகளையும், பூர்வ கிரந்தங்களையும் பகுத்தறிவோடு Critical Comparative Study, பலமத சாஸ்திரங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து உண்மையையறிந்து பலருக்கும் தெரியப்பண்ணி விருத்தியடையச் செய்யவேண்டும்.

மதபோதனையால் ஒழுக்கப்பயிற்சிதானே ஏற்படும். ஏனெனில் நமது சாஸ்திரங்களும் மதபுஸ்தகங்களும் சிறந்த நீதிகளை யுடையவைகளாயிருக்கின்றன.

மதபோதனையும், ஒழுக்கப் பயிற்சியும் ஏற்பட்டால் குணமும் அறிவும் பலப்படுமென்பதி லையமில்லை. இக்காலத்தில் பலர் மதப் படிப்பில்லாமல் கடவுளிருப்பில் நம்பிக்கை யில்லாதவர்களாயும் விபரீதபேச்சை யுடையவர்களாயும் எடுத்தவர் கைப்பிள்ளை மாதிரி எந்த மதத்தவர்கள் சொல்பதற்கெல்லாம் சிரசை அசைப்பவர்களாயு மிருக்கிறார்கள்.

சிலர் ஆக்ஷேபிப்பதென்ன ஹிந்து மதப்படிப்பால் யோகாப்பியாசத்தில் மனஞ்சென்று காடுகளில் தவஞ்செய்யப்போய்விடுவார்களென்கிறார்கள். இதனால் பொதுஜனங்களுக்கு நன்மையில்லை யென்கிறார்கள். கர்மயோகம் ஞான யோகமென்று யோகம் இருவகைப்படும். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா பகவத்கீதையில் ஞானயோகத்தைவிட கர்மயோகமே சிறந்ததென்று கூறியிருக்கிறார். திருவள்ளுவர் கிருஹஸ்தாசிரமம் சிறந்ததென்று சொல்லியிருக்கிறார். ஆகையால் இவைகளை வாசிக்கும் மாணவர்கள் இமயமலைச் சாரல்களுக்கு யோகிகளாகப் போக விரும்பமாட்டார்கள்.



ஆகையால் மதப்படிப்பில் ஆக்ஷேபமில்லை யென்பதை விவகரித்து காட்டினேன்.. அதில்லாம லிருப்பதால் தீமையையும், அதினால் விளையக்கூடும் நன்மையையும் விளக்கிக்காட்டினேன். அது எப்படி கொடுக்கப்பட வேண்டுமென்றும், யார் இதற்காக முன்வந்துழைக்க வேண்டுமென்றும் குறிப்பித்தேன். ஆகையால் இங்கிலாந்தில் சிறந்த வித்தியாசாலைகளான Oxford, Cambridge இல்போன்ற இங்கேயும் மதபோதனைசெய்தல் சிலாக்கியமேயாகும்.

பகவத்கீதை, திருக்குறள் முதலிய வேதபுஸ்தகங்களை படிப்பதில் எம்மதத்தாரும் அருவருப்பைகொள்ளவேண்டியதில்லை. இதிலுள்ள உண்மைகளை யாவரும் ஒப்புக்கொண்டு சிலாகிக்கிறார்கள். அமெரிக்கர் பகவத்கீதையை பாராயணம் செய்கிறார்கள். திருக்குறளின் போப்பையரின் ஆங்கிலேய மொழிபெயர்ப்பை பலர் ஆவலோடு வாசிக்கிறார்கள். ஹிந்து வேதங்களையும் சாஸ்திரங்களையும் கொண்டாடி (Max Muller போன்ற துரைகள்) ஜர்மனியிலும், ஜப்பானிலும் அத்தேசத்துக் கல்விமான்கள் வாசித்து வருகிறார்கள்.

அப்படியிருக்க, நாம் இதை நிராகரித்தல் நன்மையாகுமோ? நமக்கு இதில் அவமானமில்லையோ? ஆகையால் மதப்படிப்பு சொல்லிவைக்க நாம் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்: நம்முடைய சாஸ்திரங்களையும், மத புஸ்தகங்களையும் அசட்டை செய்யக்கூடாது. யாவரும் ஹிந்து சர்வகலாசாலை போன்ற ஸ்தாபனங்களுக்கு தக்க உதவி செய்யவேண்டும். சைவ வைஷ்ணவ சமாஜம்போன்ற சங்கங்களை ஆதரித்து அதை சிரமப்பட்டு நடத்துபவர்களை உற்சாகப்படுத்தி வரவேண்டும். நாம் கண்ணாடியை சுத்திசெய்தால் நமக்குக் கண்ணாடி நன்றாய்த்தெரியும். கண்ணாடி பிரகாசமாயிருக்கும். நாம் சுத்திசெய்வது கண்ணாடியின் நன்மைக்காகவன்று, நமக்கு பிரதிபிம்பம் நன்றாய்த் தெரியவேண்டுமென்றே. அப்படியே இச்சங்கங்களை ஆதரிப்பது நம்முடைய க்ஷேமலாபத்திற்கே.

K. V. சுப்பிரமணிய ஐயர், B. A.

# சந்திரவதனன்—கமலம்.

ஆனால் தாய்க்கும் பெண்ணிற்கும் தற்போது சக்கரவர்த்தியாரிடம் சேனைக்காவல் கொண்டிருக்கும் ஒருவரிடம் புத்தி சென்றிருக்கிறது. அவரும் வதுவை செய்துகொள்ளத் தயாராயிருக்கிறார். பலவாறு முயன்றயிவர்கள் எண்ணம் பலியாமையால் ஒரு தந்திரயுக்தி செய்தார்கள். அதுவண்டிக்காரனிடம் சேனைக்காவலன் கடிதம்போல் தாங்கள் எழுதி இரவு ஒருமணி சுமாருக்கு அவர்கள் வாடகைக்கு கால்மயில் தூரத்தில் தன்னை வண்டியில் சந்திக்கும்படி யனுப்பியதே. அப்பெண்ணின் தாயும் ஊரில்லாமையால் கடிதப்படி பெண் நடப்பாளென்பது இவர்கள் கருத்து. அந்நேரத்தில் நீ வண்டி சவாரி செய்யவந்தாய். பின் நடந்தது உனக்குத் தெரியும். இச்சமாசாரம் சேனைக்காவலன் தெரிந்து இவர்க்கு யதோகடிதம் எழுதியிருக்கிறான். அது அவன் மன வருத்தத்திற்கு இவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது வேறு கல்யாணம் செய்ய முயற்சித்திருப்பதால் நன்றாய் விளங்குகிறதல்லவா? என்றான்.

வேறுகல்யாணம் எங்கே செய்யப்போகிறார்கள் என்றேன். சுப்பையன் விருந்தாளியாய் வருவது தெரியுமே. அவன் கடுஞ்செட்டன், பெருந்த வியாபாரி. அவனுக்கு முப்பதுகோடிக்கு ஐவேசியுண்டு. கேவலமாயிருந்து பெரிய மனிதனானான். அவனுக்குரிய ஏககுமாரி அவலக்ஷண சொரூபத்தை நம் சுசீலருக்குக்கொடுப்பதாயும் அப்பெண்ணிற்கு சீதனமாகப் பதினைந்துகோடி தருவதாயும் பெரிய ஜமீன்தார் பேசி முடித்திருக்கிறார். சுசீலர் முப்பதுகோடியும் தந்தாலும் கல்யாணம் செய்யேனென்கிறார் என்றான்.

இதற்குள் வரகுணப்பிரபுவும் சுசீலரும் வருகிற அரவங்கேட்டது. அவர்கள் தானென்றறிந்து சம்புநாதன் நாமிருவரும் சேர்ந்து போகவேண்டாம். நான் அரண்மனைக்கு முந்திச் செல்லுகிறேன். நீ தோட்டத்துள் மறைந்து அவர்கள் போகவிட்டு வரலாமென்றான். நாங்கள் இருந்த விடத்திற்குச் சில தூரத்தில் ஒரு செடி மறைவில் உட்கார்ந்திருந்தேன். பிரபுக்களிருவரும் நாங்களிருவரு மிருந்த பலகையில் வந்துட்கார்ந்தார்கள். நான் எழுந்துபோக முடியாது. நன்றாய் ஒளித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. சுசீலர் நான் சொல்லுவதைத் தடுக்கிறாய். அப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள மறுக்கிறாய். நம் ஜமீன் மீளவேண்டாமா? நாம் முந்திய ஏற்பாடு செய்தது முடிந்திருந்தால்நன்மையே. அதுதவறியதுமன்றி நாம் மோசக்கருத்துசெய்ததற்கும் பொய்க் கையெழுத்து செய்ததற்கும் சேனைக்காவலன் நம்மைக் குறைவு செய்வதாய் எழுதியிருக்கிறான். இந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்தால் நாம் விற்ற சொத்து மீளும். கடனும் தீரும். ஜமீன் பழையபடி நமது ஆகும் என்றார்.

தந்தையே! தங்கள் அபிப்பிராயப்படி நீங்கள் செய்த வீண் செலவிற்கெல்லாம் என்னைக் கையெழுத்து செய்யச்சொல்லிக் கடன் வாங்கினீர்கள். நான் வேண்டாமென்றாலும் கவுரவம் குறைந்துபோகுமென்றீர்கள். அது போதாதென்று நான் ஏறிட்டுப் பார்க்கமுடியாத லட்சணக்குறைவும் ஆபாச நடையுமுடைய ஓர் பெண்ணை விவாகம் செய்து என் வாழ்நாளை வியர்த்தமாக்கி எப்பொழுதும் நான் துன்பமும் அவமானமுமடைய எண்ணுகிறீர்கள். கேவலம் பொருள் விஷயத்திற்கும் பிறர் முகஸ்துதிக்கும் விரும்பி என்னெஞ்சை புண்செய்வ தழகல்லவென்றார்.

இதைக் கேட்டவர குணப்பிரபு மகனே உன் நன்மையை நாங்கள் மறந்தவர்களாய் பேசுகிறாய், உன் தாயும், நானும், உன் பெருமையை விரும்பியே நடந்தோம். அது இப்படியான துன்பத்தைத் தருமென்று நினைத்திலோம். எங்கள் விருத்தாப்பியக் காலத்து, எங்கள் யோக்கியதையும் சமீனையு மிழந்து துன்பமடையச் செய்ய நினைத்தையா? நாங்கள் நெஞ்சுடைந்து [illegible]கும்படிச் செய்யாதே, என்றழுது உனக் கிஷ்டமில்லாதிருந்தால் நீ வே[illegible].

தந்தையே அவ்வார்த்தை விவேகிகள் விரும்புவதல்ல; கேவலம், காமிகளே, ஒருபெண்ணிருக்க மறு பெண் விரும்புபவன். உலகிற் குதவியாய் தன் வாழ்நாளை மரியாதையோடு கழிக்க நினைக்கும் எவனும் விரும்பாத காரியம். பூமிக்குப் பாரமாய்த் தனக்குத் துன்பமாய் வாழ்நாளை முட்டாள்தனமாய்க் கழிப்போர்பால் தங்கள் ஆசிர்வாதம் சேரட்டும்; உங்களருமைக் குமாரனுக்கு வேண்டாம், தந்தையே என்வார்த்தைக்கு தங்கள் கண்ணியமுள்ள செவிகள் சற்றுக் கொடுங்கள். தேவநகரில் பிரபலமான பெரிய வியாபாரிகள் அநேகர் உண்டு. நாம் அங்கு சிலநாள் சென்றிருந்து நம் சௌகரியத்திற்கு ஒத்த ஓர் பெண்ணைத் தேடிக்கொள்ளலாம் என்றார்.



மகனே இம்மாதத்தில் முகூர்த்தம் வைப்பதாய், சுப்பையன் பிரபுவிற்கு வாக்குக்கொடுத்தேன். நாம் அவருக்குமூன்றுகோடிக்குமேல் கொடுக்கவேண்டியிருக்கிறது. நாம் வேறுவிதமாய் நினைத்தால் நம் சொத்தில் சட்டப்படி பிரவேசிப்பார். அதற்கென்செய்வதென்றார்.

சற்று இருவரும் மவுனமாயிருந்து, சுசீலர் தந்தையை நோக்கி பிரபு சுப்பையனை வரவழைத்து, தேவநகரில் ஓர் நெருங்கிய பந்து இறந்ததாயும், நாம் அங்கு போகவேண்டுமென்றும் ஆறுமாதம் கெடுக்கேளுங்கள்; அதற்குள் ஓர் ஏற்பாடு செய்துக்கொள்ளுவோம் என்றார். இருவரும் எழுந்து சென்றார்கள்.

செடிமறைவிலிருந்த நான் மெதுவாய் வெளிவந்தேன் (சோதரிகளே, நான் ஒட்டுக்கேட்டதாய் என் பேரில் அருவருப்புப் படமாட்டீர்களென்று நம்புகிறேன்.) சற்றுபலகையிலுட்கார்ந்து அரண்மனை போனேன். பிரபு சுப்பையன் வந்து பேசிப்போனதாய்த் தெரிந்து சில நாழிகைக்கெல்லாம் தேவநகரில் யாரோ முக்யமான பந்து இறந்ததாயும் ஜமீன்தார் தாரணியார் இளவரசு மூவரும், சில வேலைக்காரிகளும் போவதாய்த் தெரிந்து சுசீலர் முக்கிய வேலைக்காரர்களாகிய நாங்கள் போகவேண்டியதில்லையெனத் தெரிந்ததும் தேவநகர்க்கு என் அன்புடையாள் சுந்தரவதனியின்உத்திரவிற்காக நான்போகாமைக்குச் சந்தோழித்ததுமன்றி சம்புநாதன் என்னோடு தங்க நேர்ந்தமைக்கும் சந்தோஷித்தேன்.

மறுநாள்காலை நான்கு குதிரைகள் பூட்டிய ரதத்தில் சென்றார்கள். வீட்டு விசாரணைக் காரன்கீழ் நாங்கள் இருபது வேலைக்காரர்கள் தங்கினோம். அவன், பாகத்திற்கு பத்துப்பேராகப் பிரித்து வேலைதந்தான். இரண்டுபேர் செய்வது ஒரு மாதத்திற்கு போதியதாயிருந்தால் ஒரு பாகஸ்தர்கள் அவ்வேலைகளை சுலபமாய் செய்து இஷ்டம்போலிருந்தோம். என்பாகத்தில் சம்புநாதன் இருந்தமையால் எங்கள் சவுகரியத்திற்கு இடையூறுபட்டதில்லை.

சம்புநாதன் ஓர்நாள் சமீனைச்சேர்ந்தகோவிலொன்றிருப்பதாயும் அதனைப் பார்த்து வரலாமென்றும் அழைத்தான். கோவில்மிக்க அழகியதாகவும் பெரியதாயுமிருந்தது. அங்கு அநேக சனங்கள் சுக்கிரவாரமாதலால் கூடியிருந்தார்கள். அதில் ஓர் புருடரை நான் யேற்கனவே கண்டிருப்பதாய் நினைவிற்கு வந்தது. அவர் மறைவில் இரண்டு ஸ்திரீகள் நின்றுகொண்டிருந்தார்கள். ஒருத்தி விருத்தாப்பியமா யிருந்தாள். மற்றவள் நன்றாய் மறைப்பட்ட இடத்தில் நின்றதால் தெரியவில்லை. சம்புநாதனை யவர்களைச்சுட்டித் தெரியுமா வென? உசாவினேன்.

அவர் சந்தன புரியில் ஓர் குடித்தனக்காரரென்றும் அவர்மெத்த நற்குணமுடையவரென்றும் அவர் சமீபத்தில் நின்ற விருத்தையவர் தாயென்றும் மற்றொரு ஸ்திரீயைத் தானறியேனென்றும் அவர் வீட்டுவிருந்தாளி யாயிருக்கலாமென்றும் சொன்னான். நான் அவர்களையே கவனித்து நின்றேன். சடுதியிற் பக்கத்தில் நின்ற யௌவன ஸ்திரீயின் முகம் வெளிப்பட்டது. என்னையறியாது ஆ! வென்றேன். பின் அல்லவென நினைத்தேன். ஊன்றிநோக்கிய வளெனவே தீர்மானித்தேன். பாபம் எவ்வளவுமெலிந்து போயினர். அவரடையாளமே தெரியவில்லையே. எவ்வளவு செல்வத்திலிருந்த இவர்க்கு வந்த துன்பம் நானிருந்து அனுபவித்ததே. நானோடி அவரைக்கண்டு பேசநினைத்தேன். அவர் வியாகூல மின்னம் தெரியவில்லை. நாமவரைக் கோவிலில் சந்திப்பதிலும், அவர்சாகையிற்பார்ப்பது நன்மையெனவெண்ணினேன். அவர் தமது அம்மான் சற்குணர்வீட்டிற்கு வந்திருக்க வேண்டுமென்றும் சமீபத்தில் நிற்பவர் சற்குணர் என்றும், சற்குணதுரை யிறந்த மாளிகையில் கண்ட தானஞாபகமும்

வந்தது. அம்மாது தலைகுனிந்தவண்ணமே இருந்தார். அவரைப் பார்க்கப்பார்க்க என் பழைய நினைவுகள் வந்தது கற்பகவல்லி யாரென பெருமூச்செறிந்தேன்.

சம்புநாதன் என்கையைப்பிடித்து வெளியே அழைத்துப்போனமையால் இருவரும் சாலை சென்றோம். அன்றிரவெல்லாம் நல்ல நித்திரையின்றி, கற்பகவல்லி யார்க்குநேர்ந்த இடுக்கண்ணை நினைத்திரங்கி வருந்தினேன். காலையில் வீட்டுக்காரியங்கள் முடிந்து அவர் சாலைசென்று விசாரிக்க கற்பகவல்லியார் தேகம் ஆரோக்கியமின்மையால் அவர் சுகத்திற்காக கடற்கரை பட்டணம் சென்றிருப்பதாய்த் தெரிந்து நான் காலையிலெழுந்தவுடன் போகாமைக்கு வருந்திவீடுசென்றேன். பின்சின்னாள் வேறுவிசேஷமின்றியிருந்தது. ஓர்நாள் கடைத்தெருவுக்குச் சென்றிருந்த ஓர்வேலைக்காரன் ஊரில் நாடகம் நடிப்போர் வந்திருப்பதாயும் அதில் அற்புதமாய் நடிக்கும் ஓர் ஸ்திரீவந்திருப்பதாயும் அவளைப்போல் நடிப்பவர் உலகத்திற் காணுவதருமையென்றும் பலரும் ஒருமொழியாய்ப் பேசுவதாய் சொன்னான்.

சம்புநாதன் நாடகபபித்துடையோர் அவ்வாறு பேசுவது வழக்கமென்றும், அதைப்பற்றி அதிகமாய் அவர்கள் சொல்லுவது நம்பத்தக்க காரியமென்றும், எனக்குச் சொன்னதுமன்றி நீ நாடகம் பார்த்திருக்கிறையா வென்று கேட்டான். நானில்லை யென்றதும் அப்படியானால் உனக்காக ஓர்நாளைக்கு நானும் வருகிறேன் என்றான். எல்லோரும் வேலைக்காரர் தங்களை உத்திரவு கேட்டார்கள். அவன் ஒரு பகுதிவேலைக்காரர் ஓர்நாளும் மற்றொரு பகுதியார் பின்னும் போகும்படி உத்திரவு கொடுத்தான். இருதிறத்தாரும் சீட்டுப்போட மற்ற பகுதிகாரர்களுக்கு அன்று விழுந்தது. மறுநாள்காலை நாடகசாலை சென்று வந்தவர்கள் மெத்த ஆச்சரியமாய்ப் பேசியதுமன்றி நடன சுந்தரி என்றொரு பெண் நடிப்பதாயும் அது கண்டுகொள்ளாக் காட்சியென்றும் மெத்த ஆராமையாய்ப் புகழ்ந்தார்கள். அவர்கள் வார்த்தை எங்களைப் போய்ப் பார்க்கவேண்டுமென்ற அவாவைத் தூண்டியது.

அன்றிரவு சம்புநாதனும் நானும் சென்றோம். பற்பலவிதநாட்டியங்களும் சங்கீதங்களும் நடந்தது. நடன சுந்தரிவருவதாய்ப் பேசிக்கொண்டார்கள். நாங்களும் எதிர் பார்த்தோம். ஓர் திரை திறக்கப்பட்டது. அதிலிருந்து ஓர் பெரிய ஏரியும் அதின் கரையோரங்களில் அநேக பட்சி யுருவந்தரித்த ஸ்திரீகள் உலாவிநடிக்கவும் அவ்வேரி மத்தியில் ஓர் அழகிய மாது பறப்பதையும் பற்பல வேடிக்கைகள் செய்வதையும் காண, என்மனம் திடீரென நடுங்கி ஏங்கியது. ஊன்றிநோக்க அம்மாது ஐயோ எனன்பிற்குறிய சுந்தரவதனியெனக்கண்டேன். ஒன்றுதோன்றாது மயங்கினேன். ஆ! கற்புடைய நங்கையிப்படியும் செய்வாளா என எண்ணினேன். அவளுடைய பிசகல்ல என்னுடையதே. என்னாலேயே அவள் கொரோத்தகப்பனை விட்டு வெளிப்பட்டிருக்கவேண்டும். அவன் செய்த தொந்திரவே யிவ்வாறிருக்கவேண்டும். ஐயோ குணவதியாகிய கமலரேகையார்கதி என்னவாயிற்றோ? வேறுவழியின்றி இந்நாடகசாலையில் தன்கற்புக்குறைவின்றி காலந்தள்ள நினைத்திருக்கலாம். வேறு என் செய்வாள்?—இச்சமயம் நாடகத்தலைவன் அவள் கையைப் பிடித்து வந்து சபையோர்க்கு வந்தனம் செய்யச் சொன்னான். ஆம் அவளே சுந்திரவதனியெனத்தீர்மானித்தேன்.

கமலத்தன்னை.



# ராஜா டைரி.

என் தகப்பனார் நல்ல பணக்காரர். தற்கால நாகரீகம் அனுசரிப்பவர். எனக்கு தமக்கைகள் இருவர். மூத்தவள் பெயர் **கமலா**. அவள் வயது 17. இளையவள் பெயர் **ஆனந்தா**. அவள் வயது 15. என் பெயர் **ராஜா**. என் வயது 9. என் தமக்கைகள் நன்றாய் படித்தவர்கள். நல்ல அழகுடையவர்கள். மிகவும் புத்திசாலிகளென்று கொண்டாடப்பட்டவர்கள். அவர்களுடைய இஷ்டமானவரைத்தான் கலியாணம் செய்து வைப்பதாய் என் தகப்பனார் சொல்லிக் கொண்டிருந்தார். அதற்காக அநேக பணக்காரர்கள் வீட்டுபையன்களும் மற்றும் பெரிய மனுஷ்யர்களும் எங்கள் வீட்டுக்கு வந்துபோவதுமுண்டு. நான் பள்ளிக்கூடம் போகாமல் வீட்டு வாத்தியாரிடம்தான் வாசித்து வருகிறேன். என்னை எல்லாரும் கெட்டபையன் என்று சொல்லுகிறார்கள். என் எண்ணமோ அப்படியில்லை. ஆகையால் இதை தீர்மானம் செய்யத் தகுந்தவர்கள் இந்த **மாதர்மனோரஞ்சனி**யை வாசிக்கும் நீங்களே. அதற்காக சாட்சியார்த்தம் போனவருஷம் என் ரகஸ்யங்களையும் நான்செய்த காரியங்களையும் குறித்து வைத்துக் கொள்ளும்படி என் பிதா எனக்கு வாங்கிக் கொடுத்த டைரியை கொடுக்கிறேன். அதை கவனமாய் படித்து பார்த்தால் நான் கெட்டவன் தானா என்பது உங்களுக்கு நன்றாய் விளங்கும்.

“அப்பப்பா! இதென்ன உலகம் இப்படி யிருக்கிறதே. சிறு பையன்களாகிய நாங்கள் என்ன? கஷ்டத்திற்குதானா பிறந்திருக்கிறோம். ஐயோ! என் வயறு என்னமோ பண்ணுகிறதே. கண் துடைத்து துடைத்து என் சட்டையின் கைமுழுமையும் ஈரத்தால் இத்துப் போய்விட்டதே! ஓ! டைரியே உன்னிடத்திலேயாவது என் கஷ்டத்தை சொல்லிக் கொள்ளுகிறேனே. என் தகப்பனார் டைரியை வாங்கிக்கொடுத்தார். என்ன அதில் எழுதுவதென்று தெரியாமையால் தானே ஆநந்தாவின் டைரியை போய் பார்த்தேன். அவள் அறையைவிட்டு வெளியே போயிருந்த சமயத்தில் அவள் டைரியில் எழுதியிருந்த இந்த சமாசாரத்தை என் டைரியில் எடுத்து எழுதிக்கொண்டேன். அதாவது “சுந்திரம். என்ன அழகிய பெயர். சுந்திரம். என்று சொல்லும்பொழுதே எத்தனை ஆனந்தத்தை கொடுக்கிறது! இவர் அல்லவோ சுந்திரர். இவருக்குத் தகுந்த மீனாட்சி நானல்லவோ. என்ன அழகு உயர்ந்த நெற்றியும், அடர்ந்து நீண்டுவளைந்த புருவமும், வண்டுகளையும் மான்களையும் பழிக்கும் கண்களும், பளபளப்பான கன்னங்களும், கோவைப் பழத்தைப் பழிக்கும் செவ்வாயும், மல்லிகை மொட்டுபோன்ற பற்களும், கூறியநாசியும், சங்கம்போன்ற காதும், கும்பத்தின் கழுத்தைப்போன்ற கழுத்தும், பருத்ததோளும், அகண்ட மார்பும், தடிக்குப்போன்ற வயறும், நீண்ட கைகளும், துதிக்கையை ஒத்த கால்களும், சிறிய சிவந்த பாதங்களோடும் கூடிய இந்த அவதார சுந்திரத்தையன்றோ நான் அடையவேண்டும். ஏழையானால் என்ன. கை நிறைந்த பொன்னைவிட கண் நிறைந்த கணவனன்றோ ஸ்லாக்கியம்” என்றும் இன்னும் அநேகம் எழுதியிருந்தது. இதைமாத்திரம் என் டைரியில் எழுதி வைத்துக்கொண்டேன். ஆனால் என் தமக்கையின் அபிப்பிராயமும் இதினால் எனக்கு தெரிந்தமையால் அவளுக்கு நன்மை செய்யும் பொருட்டு குடும்பத்தார் எல்லோரும் சேர்ந்து சாப்பிட உட்கார்ந்திருக்கையில் என் தாயாரைப் பார்த்து, “அம்மா நான் டைரி எழுத கத்துக்கொண்டிருக்கிறேனே. நான் எழுதியிருப்பதைக் கேட்கிறாயா என்றேன்.” “படியப்பா, கேட்போம்” என்று தாயார்

சொன்னார். உடனே மறைவிடத்திலிருந்து டைரியை எடுத்து "சுந்திரம்! என்ன அழகிய பெயர்" என்று வாசித்துக்கொண்டு ஆனந்தா முகத்தைப் பார்த்தேன். உடனே அவள்முகம் வெளுத்தது. நான் கடகடவென்று வாசித்தேன். பாதி வாசிக்குமுன் ஆனந்தா ஐயோ! என்று என்னை ஒரு அடி அடித்து டைரியைப் பிடுங்க ஆரம்பித்தாள். என் தகப்பனார் என்னை விட்டுவிடும்படி சொன்னமையால் ஆனந்தா என்னை விட்டுவிட்டு சாப்பிடாமல் போய்விட்டாள். பிறகு நான் அதை வாசித்தேன். சாயங்காலம் என் தகப்பனார் வெளியில் போனபிறகு ஆனந்தா என்னைப் பிடித்து அதிகமாய் அடித்தாளே! இது நியாயமா? நான் அவளுக்கு நன்மைசெய்வதற்காகத்தானே அதை என் தகப்பனார் முன் வாசித்தேன். இதற்காக என்னை இம்மாதிரி அடித்த குறையை டைரியே உன்னிடம் தானே முறையிட்டுக் கொள்ளவேண்டும்."

* * * * * *

"நான் தமக்கைகளுக்கு தம்பியாயிருக்கிறேன். அதற்காக என் காதெல்லாம் சிவந்தா போகவேண்டும்? கன்னமெல்லாம் வீங்கியாபோகவேண்டும்? நான் அவர்களுக்காக தபாலாபீசுக்கு பிரதிதினம் இருமுறை போய்வருவதில்லையா? நேற்றுதானே வழியில் ஒரு பையனோடு கோலி ஆடவேண்டியிருந்ததால் கடிதத்தை தபாலாபீசில் வாங்கியதும் அது அவசர கடிதமா என்று போஸ்ட் மாஸ்டரைக் கேட்டேன். அவர் தெரியாதென்றமையால் நாமே பார்ப்போம் என்று உடைத்துப் பார்த்தேன். அதில் என் கண்ணேயென்றும், மூக்கேயென்றும் தாருமாராய் எழுதியிருந்தது. எனக்கு ஒன்றும் புரியாமையால் அங்கே வந்த கமலாவின் தோழி ஒருத்தியிடம் கொடுத்து கமலாவிடம் கொடுத்துவிடும்படி சொல்லிவிட்டு நான் கோலி ஆடப்போய்விட்டேன். அவள் ஏதோ தெரியாத்தனத்தாலோ, குதர்க்க சுபாவத்தாலோ, அதில் எழுதியிருந்ததை வாசித்து பார்த்துவிட்டு ஊரெல்லாம் சொன்னாளாம். அவள் செய்த குற்றத்திற்காக கமலாஎன்னை கன்னத்தைப்பிடித்து இழைத்துதலையில் குட்டினாளே இதுசரியா? இருக்கட்டும் ஆனைக்கு ஒருகாலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்."

"டைரியே, அன்றையதினம் கமலா என்னை அடித்ததாக உன்னிடம் சொன்னேனல்லவா. இன்றைக்கு ஒன்று பண்ணியிருக்கிறேன். என்னதெரியுமா? நேற்று சாயங்காலம் கமலா, ஆனந்தா இருவரும் கோச் வண்டியிலேறி வெளியே போனார்கள் தலைவலிக்கிறது நான் வரவில்லையென்று அவர்களிடம் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு மெள்ள அவர்கள் அறையினுள்ளே போய் அங்கிருந்த பீரோவைத் திறந்து சோதித்துப்பார்த்தேன். அதில் ஒரு தட்டில் அவர்களுடைய பட்டு கைகுட்டையால் கட்டி சில பொட்டகிராப் படங்களிருந்தன. அவைகளில் ஒன்றின் பின்னால் "கர்வம்பிடித்த தடியா!" என்றும் மற்றொன்றில் "காசுக்காரதொந்தி" என்றும், இன்னுமொன்றில் "இவனல்லவோ மன்மதன்" என்றும், "முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமாவென்றும்", "வாயை பாரம்மா ஏத்துச்சாலட்டம்" என்றும் "ஆஞ்சனேயரே, போதும் போதும் சிரிக்கவேண்டாம், கிட்டவர பயமாயிருக்கிறதென்றும்" அநேகங்களில் அநேகவிதமாய் எழுதியிருந்தது. இவைகளில் இரண்டு டஜன் எடுத்து சட்டைப்பையில் போட்டு ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டேன்.

இன்றுகாலமே காப்பி சாப்பிடும்பொழுது "என்னடா, ராஜா, சட்டைபை நிரம்பியிருக்கிறது. கோலி, பம்பிரம் வகைராவோ" என்று கமலா கேட்டாள்.



"என்னமோ அம்மா, பயித்தியத்துக்கு தக்க கந்தைத்துணி" என்று சொல்லிவிட்டு எழுந்து வெளியே வழக்கப்படி உலாத்தப்போகிறாப்போல் போய்விட்டேன்.

பிறகு அந்தபடங்கள் பிரதியாய் நிரூபிக்கும் என் தமக்கைகளை விவாகம் செய்துகொள்ள விரும்பும் வாலிபர்களிடமெல்லாம் போய் அவைகளின்மேல் எழுதப்பட்ட வார்த்தைகளோடு கூடிய அவரவர்கள் படங்களை அவரவர்களுக்குக் கொடுத்தேன். அதெப்படியென்றால் முதலில் சென்றவனிடம் சில நிமிஷங்கள் பேசிக்கொண்டிருந்தேன். அவன் எனக்குதின்பண்டங்கள் கொடுத்துவிட்டு என் தமக்கைகளின் க்ஷேம சமாசாரத்தை விசாரித்தான். அப்பொழுது அவன் போடோவை எடுத்து அவனிடம் கொடுத்தேன். அதின்பேரில் "கர்வம் பிடித்ததடியா" வென்று எழுதியிருந்தது. என் தமக்கைகள் அவன் மீசையை ஒரு பென்சில் கொண்டு நீளமாய் இழுத்துவிட்டதும் தவிர அவன் பல்லை கெஞ்சுவதுபோலவும் செய்துவைத்திருந்தார்கள். அதைப் பார்த்து அவன் திடுக்கிட்டு பிரமித்து நின்று "அயோக்கிய பயலே! யார் அப்படி செய்தது என்று கேட்டான்."

"குட்டிச்சாத்தான் செய்தது போலும்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டேன்.

இரண்டாவது ஒரு லாயர் ஆபீசுக்குள் போனேன். அவரைப் பார்த்தால் கொஞ்சம் பயமாயிருந்தது. ஆனாலும் தைரியமாய் கிட்டப்போய் இங்கே காட்சிக்காக அற்புத வஸ்து ஒன்று வந்திருக்கிறதாமே? அதெங்கே? என்றேன். அவர் எதையோ நினைத்துக்கொண்டு "என்ன?" என்று அதட்டிக்கேட்டார். ஆனால் இதென்ன பார்த்து சொல்லுங்கள் என்று "அடே காசுக்காரதொந்தி" யென்றும், வயிற்றின்மேல் பணப்பை பாரம் ஒன்று வைத்தாப்போல் எழுதப்பட்டிருந்த அவருடைய படத்தை அவரிடம் கொடுத்தேன்.

ஹா! ஹா! ஹா! அவர் முகம்போன போக்கை என்னென்று சொல்லுவேன். உடனே ஏதோ மானநஷ்டபிரியாது செய்வதாய் முணுமுணுத்துக்கொண்டு அவர் என்னைநோக்கி வருமுன்னே நான் ஓடிவந்துவிட்டேன். இம்மாதிரி மற்ற அநேகர்களிடம் அவர்கள் படங்களைக்கொடுத்து அவர்கள் அனுபவித்த அகத்தைப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். அடுத்த வாரம் எங்கள் வீட்டில் விருந்தாம். அது இவர்களை உத்தேசித்துதான் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இவர்களை அழைக்கப்போகிறார்கள். இவர்கள் வருவார்களோ பார்ப்போம். என் தமக்கைகள் இரக்கமில்லாமல் என் கன்னத்தைப் பிடித்து இழைத்ததின் பிரதி பிரயோஜனம் இது. அவர்கள் வயறு எரிவதை நான் பார்க்கப்போகிறேன். பதிலுக்கு பதில்தானே இது. இதனால் நான் ஒரு கெட்ட பையனா? இல்லவே இல்லையன்றோ!

நான் முன்சொன்னபடியே விருந்து தினம் நிச்சயிக்கப்பட்டு நல்வரவு கடிதங்கள் எல்லாருக்கும் அனுப்பப்பட்டன. வீட்டில் எல்லாரும் பரபரப்பாய் காரியம்செய்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் காலை பத்துமணி சுமாருக்கு எங்கள் வீட்டுவாசலில் இரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு கோச்வண்டி வந்து நின்றது. யார் என்று போய்பார்த்தோம். பக்கத்து ஊரில் இருக்கும் எங்கள் அத்தை அதிலிருந்து இரங்கினாள். அவள் வழக்கமாய் வருஷம் இருமுறை எங்கள் வீட்டுக்கு வந்து ஒருவாரகாலம் இருந்துவிட்டுபோகிற மாதிரியாகவே இந்த தடவையிலும்வந்தாள். அவளைப் பார்த்ததும் என் தமக்கைகளின் முகங்கள் வாடின. "இழுட்டுப்பிணம் அசந்தர்ப்ப குடுக்கையாய் தருணம் தவனியா

மல் வந்து நிற்கிறாள்." என்று முணுமுணுத்தாள். ஆனந்தா "அவள் கட்டாயம் விருந்துக்கு இங்கேயிருக்கத் தான் போகிறாள். வருபவர்களிடம் அசப்பாவிதமாய் கர்ணகடூரமாய் பிதற்றி அவர்களை வெறுக்கச்செய்யப்போகிறாள். இந்த தர்ம சங்கடத்திற்கு என்னசெய்கிறது? அதற்குள் புறப்பட்டுப்போய்விட்டால் நலம்" என்று கமலா சொன்னாள்.

"ஏது. அவளாவது போவதாவது. போனால்தான் நலம்" என்றாள் ஆனந்தா.

நான் இவர்களுக்கு செய்தகுற்றம் என் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது. அப்பா! குற்றமுள்ள நெஞ்சத்தை தரிப்பதைவிட கொலைப்பட்டு சாகலாம் மகாகஷ்டம்! மகாகஷ்டம்! போட்டோக்களைத் திருடிவான்களிடம் கொடுத்த குற்றத்திற்கு பதிலாக என் தமக்கைகளுக்கு ஒரு நல்ல காரியம் செய்யமனம் கொண்டிருந்தேன். அதின்பொருட்டு மனதிற்குப் பிடியாத என் அத்தையிடம் இவர்கள் சொல்ல சங்கோஜப்படும் இவர்கள் அபிப்பிராயத்தை நான்போய் அவளிடம் சொல்லி அவளைமெல்ல ஊருக்கு தாட்டிவிட்டால் என் தமக்கைகளுக்கு நன்மை செய்தவனாகுமென்று நினைத்து, என் அத்தையிடம் போய் "அத்தாய்! கமலாவினுடையவும், ஆனந்தாவினுடையவும் சந்தோஷத்தையும் சுகத்தையும் நீ கோருகிறாயா" என்றேன். "என்ன சொன்னாய்" என்றாள் அத்தை.

நீ அவர்கள் சந்தோஷத்தைக் கோரும்பட்சத்தில் விருந்து தினமாகிய வருகிற வியாழக்கிழமைக்கு முன்னமேயே நீ ஊருக்கு புறப்பட்டு போய்விடு. ஏனெனில் நீ அன்று இங்கே இருப்பது அவர்களுக்கு இஷ்டமில்லையாம். இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருந்ததை நான்கூடத்தில் கேட்டேன். நான் சொன்னதாக ஒருவருக்கும் சொல்லாமல் நீ தயவுசெய்து ஊருக்கு சீக்கிரம் போய்விடு. அதினால் எனக்கு ஒரு உபகாரம் செய்தாப்போலிருக்கும்" என்றேன்.

இதைக் கேட்டதும் அவளுக்கு மகாகோபம் வந்துவிட்டது. என்னது! நான் எவ்வளவோ மரியாதையாய் பேசியும் அவள்கோபித்துக்கொண்டாளே. இதுவோ நன்னடக்கைக்கு அடையாளம் என்று உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்தார்? நான் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொண்ட பிறகும் கூட என் தாயார் தமக்கைகளிடம் சொன்னதை யெல்லாம் சொல்லி அவர்கள்பேரிலும் கோபித்துக்கொண்டு இனி உங்கள் வீட்டு வாசல் மிதிப்பதில்லை என்று சொல்லிவிட்டு உடனே ஊருக்கு போய்விட்டாளே. இதுவோ பெரிய மனுஷ்யத்தனம்? அதுவும் தவிர ஏதோ அவள் பணக்காரியாகையால் அவளிடம் அவசரத்திற்கு கடன் கொஞ்சம் என் தகப்பனார் வாங்கியிருந்தாராம். அந்த பணத்தையும் உடனே செலுத்தும்படி கடிதமும் என் தகப்பனாருக்கு எழுதியனுப்பிவிட்டாள். இவள் செய்த விபரீத கூத்தின் பலன் என் தலையில் வந்து விடிந்தது.

ஒரு அறை அணு பிரம்பும் முறிந்தது. டாக்டர் பில்லுக்கும் பணம் செலவாயிற்று. எனக்கு வாத்தியார் தொந்திரவும் கொஞ்சநாள் நின்றது. இப்படித்தான் சிறு குழந்தைகளை நடத்துவதோ? நல்லது செய்ய உத்தேசித்த என் புத்தியை மெச்சாமல் என்னை சிட்சித்தார்களே. நாளை நான் பெரியவனாய் எனக்கு குழந்தை பிறப்பானன்றோ? அவனை எம்மாதிரி வளர்த்துகிறேன். பார்க்கட்டும். இன்று செய்ததற்குப் பதில் வட்டியுடன் வியாழக்கிழமை செலுத்தப்படப் போகிறது. டைரியே நீயே சாட்சியாயிரு.



இன்று விருந்து காலையில் மணியோ பதினொன்றாய்விட்டது. புதிதாய் அழைக்கப்பட்ட சில புருஷர்களும் ஸ்திரீகளும் மாத்திரம் வந்திருக்கிறார்கள். பழையவர்களும், ஆவலாய் எதிர் பார்க்கப்பட்ட வாலிபர்களும் அவர்கள் வீட்டார்களும் ஒருவராவது வரவில்லை.

கொஞ்சநேரமானதும் ஒரு ஆள் கடிதமொன்று கொண்டுவந்து கொடுத்தான். அதில் தன்னால் வரமுடியவில்லை யென்று சாக்குசமாசாரக்காகிதம் கூடவில்லாமல் ஒரு போட்டோ வைக்கப்பட்டிருந்தது. அதுதான் "காசுக்காரத் தொந்தி, என்று எழுதப்பட்டபோட்டோ. பிறகு ஒன்றுவந்தது. அதில் "மன்மதசெங்குரங்கே "என்று எழுதியிருந்தது. ஒன்றின் பின் ஒன்றாய் இருபது கடிதங்களுக்கு மேல்வந்தன. எல்லாவற்றிலும் போட்டோக்கள்தானிருந்தன. இச்சமயத்தில் என் தமக்கைகள் முகங்களைப் பார்க்க என்ன கொடுத்தாலும் தகும். என்னை அன்று கடிந்தார்களே! இன்றுநான் அவர்களைப் பார்த்து மனதுக்குள் சிரித்துக்கொண்டேன். வீட்டிலிருந்த குழப்பத்தை என்னவென்று சொல்லுவேன். இவ்வளவு குடும்பங்களை உத்தேசித்து செய்த சமையல் முழுமையும் வீணாகச் செய்ததோடும்கூட இவ்வளவு குடும்பத்தாருடைய விரோதத்தையு முண்டாக்கிய போக்கிரியை கண்டால் இப்பொழுது நசுக்கிவிடுவேன். இந்தக் காரியத்தால் நாம் இந்த ஊரையே விட்டுப்போகவேண்டும் போல தோன்றுகிறதே என்று கமலா சொன்னதும், ஒருக்கால் ராஜாவுக்கு ஏதாவது தெரியுமோ என்னமோ என்றார் ஒருவர்.

"அதொன்றும் எனக்குத் தெரியாது. ரோஸ் என்னும் என் நாயைக் கேட்டுப்பாருங்கள். அதற்குத் தின்பதற்காக சில போட்டோக்களைக் கொடுத்தேன். அது அவைகளை ஒருக்கால் தெருவில்போட்டு அவர்கள் கையில் அகப்பட்டதோ என்னமோ" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டேன்.

உண்மை வெளியாய்விட்டது. முன்பட்ட அடியே இன்னும் வலிக்கிறது. இப்பொழுதும் பிரகாரம் சரியாய் விழுமென்று தெரியும். ஆகையால் நான் வீட்டைவிட்டு இவர்கள் கையில் அகப்படாமல் ஓடிவிடப்போகிறேன். டைரியே உன்னிடம் சமாசாரத்தை சொல்லிவிட்டேன்.

என் ஆப்ததோழன் நீ ஒருவன்தானாகையால் வா போவோம். இப்பொழுது என் அத்தைக்கு இவர்களைக் கண்டால் ஆகாதாகையால் நான் இவர்களுக்குத் தெரியாமல் ஓடிவந்ததாக அவளுக்குத் தெரிந்தால் என்னை பிரியமாய் ஏற்றுக்கொள்ளுவள். ஆகையால் அவள் ஊருக்கு போகலாம் வா. அங்கே எனக்கு ஏதாவது குறையிருந்தால் உன்னிடம்தானே சொல்லிக்கொள்ள வேண்டும்."

பி. வி. எஸ். சர்மா.

## தர்மாம்பாள்—கிணற்றண்டை.

பின்வரும் விஷயம் அநேக இடங்களில் தினசரி வழக்கமாயிருந்தபோதிலும் பட்டணவாசியாகிய எனக்கு மிகவும் ஆச்சரியகரமானதாகவும் பரிதாபப்படத்தக்கதாகவும் இருந்தது என்றார் என் தோழர் ஒருவர். அதாவது:—

அதிக தீட்சண்யமாய் நாநாதிக்குகளிலும் சூரியன் தன் கிரணங்களை வீசி தன் பிரதாபத்தை வெளியிட்டுக்கொண்டிருந்தான். மண்டை வெடித்துப் போகும்போலவும் காலமொழிந்து போகும்போலவும் வெய்யில் அடித்துக்

கொண்டிருந்தது. மாதமோ மேமீ, காலமோ பகல் ஒருமணி சுமாரிருக்கும். வழியோ நடக்கமுடியாமல் தங்குமிடம் தேடி ஓடினேன். அப்பொழுது கொஞ்சதூரத்திலிருந்து ஒரு தளர்ந்த உருவம் என் வழியை நாடிவருவதைப் பார்த்தேன். கிட்டவந்ததும் மெலிந்து எலும்பெடுத்த சரீரத்தினின்றும், கருத்துவாடிய முகத்தினின்றும், குழிந்த கண்களினின்றும், வெகுளியாய் ஓய்ந்து பார்ப்போர் பரிதாபத்தை எதிர்பார்த்து நிற்கும் பார்வையினின்றும், தாங்கமுடியாத பாரத்தை எடுத்துக்காட்டும் நெருங்கிய தோள்பட்டைகளையுடையவும், தூக்கிய மோவாயையுமுடைய நடையிலிருந்தும், கந்தலான வஸ்திரத்தினின்றும் அவளைப் பார்த்தவுடன் நாம் எவ்வளவோ இழிவுடன் நடத்திவரும் பரயஜாதி ஸ்திரீயென்று சொல்லத்தேவையன்றியிருந்தது. அவளோ மிகவும் வயதுசென்ற கிழவி, தலையிலோ ஏதோ பணமென்ற பூதத்திற்கு எஜமானனாயிருக்கும் ஒருவனுடைய குதிரைக்காக கொண்டுபோகும் ஒரு பெரிய புல் சுமை ஒன்றை தாங்கிக்கொண்டிருந்தாள். வேர்வையால் ஸ்நானம்செய்து ஈரத்தோடு இருப்பவள்போல காணப்பட்டாள். அவளோ வாய் உலர்ந்து, உதடு சுருங்கி, தாகத்தால் பீடிக்கப்பட்டு, தாபம் தாங்காமல் தத்தளித்துக்கொண் டிருந்தாள்.

சமீபத்திலிருந்த சாவடிக்குள் நான் நுழைந்தேன். கீழ்ஜாதி ஆகையால் அவள் அதின் உள்ளே தான்வந்து தங்கசக்தி அற்று இருந்தாள். ஆனால் கிராமாந்திரவழக்கப்படி அத்தருவாயிலும் உயர்ஜாதி ஸ்திரீகள் தங்கள் வீட்டுக்கு ஜலம் எடுக்கும் பொருட்டு பளபளப்புள்ள பித்தளை குடங்களுடன் அங்கிருந்தகிராம கிணற்றுக்கு வந்திருந்தார்கள். அவர்களோ நல்ல ஆடைகளுடனும், தங்க நகைகளுடனும், வாரி முடிந்த கொண்டைகளுடனும், தங்களைப் பார்ப்போர்களை களிக்கச் செய்ய எண்ணங் கொண்டிருந்தார்களே ஒழிய தலையிலிருந்து சுமையை கீழேபோட்டு விட்டு தூரத்தில் ஆடையை அடக்கி, கால்களை சேர்த்து கைகளை கூப்பிக் கொண்டு பணிவுடன் நின்று "அம்மா! அம்மா! என்று தீனதொனியுடன் கூப்பிடும் உருவத்தை கவனிக்கவேயில்லை. பலமுறை மன்றாடிக் கெஞ்சும் அவளைப் பார்த்து கடைசியில் மிகவும் ஆசாரக்காரியாகிய ஒருபெரிய மனுஷி பாழும் பிணமே, என்னது? என்று கர்ச்சித்தாள்.

"அம்மா, கொஞ்சம் தண்ணி அம்மா, தாகம் தவிக்குது.

அம்மா, கொலையை பிடிக்குது அம்மா" என்ற வார்த்தைகளைக் கேட்டதும், "என்ன! உனக்கா! நானு உன்னருகில்வந்து ஜலம் வார்ப்பது? கேட்கும் தைரியத்தைப்பார். சீ, இங்கு நில்லாதே, போ என்றாள் தயாளுவான தர்மாம்பாள் என்றமாது சிரோன்மணி.

ஐயோ பாவம்! ஒத்தாசையற்று, தாகத்தால் பீடிக்கப்பட்டு, களைத்துப் போய், எவ்வளவோ தாழ்மையுடன் வேண்டியும், இரக்கமற்று, நில்லாதே போ, வென்று அதட்டிச் சொல்லப்பட்ட அந்த பரஸ்திரீயின் சித்தம் அப்பொழுது என்னமாயிருக்கும்? நீங்களே யோஜித்துக்கொள்ளுங்கள். ஏதோ தெய்வச்செயலால் இதை வாசிக்கும் ஸ்திரீ ரத்னங்களாகிய உங்களுக்கே இவ்வித கஷ்டம் நேர்ந்தால் உங்கள் மனது என்னவிதமாய் அதை சகிக்குமோ நீங்களே தெரிந்துகொள்ளலாம். அதுவும் இம்மாதிரி அந்த பரஸ்திரீயின் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய சக்தியிருந்தும், ஏதோ முட்டாள் கொள்கையை கைபிடித்த தோஷத்தாலேயே அவளுக்கு நன்மை புரியமாட்டேனென்ற



தோடுகூட அவளை திட்டினவளுமானவள் தெய்வத்தின் முன்னிலையில் அந்த பரஸ்திரீயினுடைய சகோதரியேயன்றோ! (ஏனெனில் ஸ்திரீகளெல்லாரும் ஒரே வகுப்பினரும் சகோதரிகளும்தானே!)

பதிலொன்றும் சொல்லாமல், மெதுவாய், குனிந்த தலையுடனும், தளர்ந்த நடையுடனும் அந்த பரஸ்திரீ அருகே ஓடும் சாக்கடையை நோக்கிச் சென்றாள். எதற்கு? நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

இதையெல்லாம் பார்த்திருந்த என் தோழர் வெறிகொண்டவர்போல ஓடி "நில்!" என்று கத்திக்கொண்டு அங்கே வைத்திருந்த ஒரு ஸ்திரீயின் பித்தளை குடத்தில் தண்ணீர் சேந்தி அந்த பரஸ்திரீயின் கரசம் புடத்தில் அருந்தும்படிவிட்டார். இதைப் பார்த்த அந்த குடத்தின் சொந்தக்காரியாகிய ஸ்திரீ ஒருவள் தன் குடம் தீண்டப்பட்டு போய்விட்டதென்றும் அதை சுத்திசெய்யும்பொருட்டு அதைக் கவிழ்த்து வைக்கும்படி அவரைப் பார்த்து கடிந்து சொன்னாள்.

அவர் அவளுடைய கடினச்சொற்களை கவனியால் "காரியமே கண்ணாயினார்" என்றபடி குடத்தைக் கவிழ்த்து வைத்து விட்டு, புல்சுமையை எடுத்து அந்தப் பரஸ்திரீயின் தலையில்வைத்து அவளை அனுப்பிவிட்டு சாவடியில் போய் உட்கார்ந்து கொண்டார். அங்கிருந்த கொஞ்சம் சாதுவான ஸ்திரீ ஒருவள் "பாபம், பூர்வஜன்ம பாபத்தின் பலனை அனுபவிக்கின்றதுகள்" என்று அந்த பரஸ்திரீயை நோக்கியவண்ணமாய் தானே சொல்லிக்கொண்டாள். என்ன தப்பெண்ணம்! பூர்வஜன்ம பாபத்தின் பலனா அல்லது கர்வம் கொண்ட மனிதருடைய கொடுமையா! எரிகிற நெருப்பில் நெய் ஆகுதி செய்யவுமாவேணும்? கீழ் ஜாதி என்று சொல்லப்பட்ட இடத்தில் ஜனித்துவிட்டதாலேயே சர்வசுவாதந்திரிய பரித்யாகத்துடன் மேல்ஜாதியின் மனப்போக்கை திருப்திசெய்ய ஆத்மபரித்யாகமுமா செய்யவேண்டும்? மனிதனாய்ப் பிறந்தமாத்திரத்திலேயே கடவுளுக்கு புத்திரனும் கடவுள் சொத்துக்கு பாத்தியதையையும், கடவுளுடைய மற்றபுத்திரர்களுடைய பாந்தவ்யத்தையும் கொண்டாட ஒரு மனிதனுக்கு அதிகாரமிருக்க, மனிதனே யல்லவோ ப்ராதுரு துரோகம்செய்து, கீழ்ஜாதி மேல்ஜாதி என்ற வியாஜத்தால் தான் சுகமடைய தன் சகோதரனை கஷ்டப்பட்டு தனக்கு ஊழியம் செய்வதுடன் ஊழியத்தில் பிராணனை விடும்படி செய்கிறான்! இதுதானோ மேலான நமது இந்துமத தர்மம்? இதுதானோ நாகரீக விர்த்தியின் பலன்?

தற்காலத்தில் உலகமுழுவதும் எங்கு பார்த்தாலும் ஸ்வாதந்தர்யத்தைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. நம் நாட்டிலோ சுயராஜ்ஜியம், ஸ்திரீகளுக்கு உயர்தர படிப்பு, ஸ்திரீ ஸ்வாதந்தர்யம் இவைகளைப்பற்றிய பேச்சை எங்கே வேண்டுமானாலும் கேட்கலாம். மேல்நாட்டிலும் ஸ்திரீ ஸ்வாதந்தர்யத்தைப்பற்றிய வழக்கு நாளுக்குநாள் விர்த்தியாய்க் கொண்டுவருவதுடன் ஸ்திரீ சாகசமும் பலவிதத்தில் வெளியாய்க்கொண்டு வருகிறது. இப்படியிருக்க தம் சகோதர சகோதரிகளுக்கு ஸ்வாதந்தர்யம் கொடுக்க தயாராயில்லாத நாமே வெட்கமில்லாமல் முதலில் ராஜாங்கத்தாரிடம் போய் ஸ்வாதந்தர்யார்த்தம் வாதாடுவது. வீடு இருந்தாலல்லவோ சாமான் வாங்கலாம், குடி இருந்தாலல்லவோ ஊராளலாம். தனிமரம் தோப்பாமா, உயர்தரத்தார் ஜனசங்கையையும், கீழ்தரத்தார் ஜனசங்கையையும் ஒப்பிட்டு பார்க்குமளவில், உயர்

திரத்தார் ஜனசங்கை வெகு கொஞ்சமன்றோ! ஆகையால் கீழ்திரத்தாரை கொண்டு தானே ராஜ்ஜியம் ஸ்திரமாய் நிற்கவேண்டும். அவர்கள் சந்தோஷமாயிருந்தாலல்லவோ அது முடியும். அவர்கள் சந்தோஷத்தை உயர்திரத்தார் என்ற பதத்தால் ஸ்திரீகளும், புருஷர்களுமாகையால், உயர்தர ஸ்திரீ புருஷர்கள் எல்லாருமேதான் கீழ்திரத்தாருக்கு நன்மை செய்து அவர்கள் அபிமானத்தைக் கோரி அடையவேண்டும். இப்படி செய்வதால் இகத்திற்கும் சுகம். பரத்திற்கும் சுகம். அதிகம் சொல்லவேண்டியதில்லை. ஆத்மமோட்சமும் அதினாலேயே உண்டாகும். ஆகையால் நம் இந்திய ஸ்திரீரத்தினங்களாகிய எல்லோரும் நம் பூர்வீக பெருமையாகிய தர்மத்தை மாத்திரம் கைப்பற்றி, முட்டாள்தனமான கோட்பாடுகளைக் குருட்டுத்தனமாய் விசாரணையில்லாமல் அநுசரியாமல் புத்திமான்களாய், தங்களுடைய நற்காரியங்களாலும் நல்ல வார்த்தைகளாலும் கீழோருக்கும் மேலோருக்கும் ஹிதத்தை உண்டாக்குவதுடன், தம் சகோதர சகோதரிகளையும் தம் நடக்கையால் தங்களை அநுசரிக்கும்படியும் செய்வார்களென்று நம்புகிறேன்.

இந்தியபுத்திரன்

# உஷ்ணம்.

அதுவேபோல் 40 பவுண்டு ஜலத்தை 80 டிகிரியிலிருந்து 90 டிகிரிக்கு உஷ்ணமாக்கவேண்டுமானால் 400 (uuit) உஷ்ணம்வேண்டும். ஜலத்தைப்போலவே தான் மற்றவஸ்துக்களிலும்; கனம் அதிகமாக அதிகமாக அதைச் சூடாக்கச் செலவழிக்கவேண்டிய உஷ்ணமும் அதிகமாகின்றது. டெம்பரேசர் ஏறவேண்டுமானாலும் உஷ்ணம் அதிகம் கொடுக்கவேண்டும். ஒவ்வொன்றும் 1 பவுண்டு நிறையாக, ஜலம், வெள்ளி, தாமிரம், தகரம், ஈயம், இவற்றை எடுத்துக்கொண்டு, ஏதோ ஒரு நிலையான டெம்பரேசரிலிருந்து இன்னொரு அளவிற்கு உஷ்ணமாக்கவேண்டுமானால், ஒவ்வொன்றுக்கும் ஒரே அளவான உஷ்ணம் கொடுக்கவேண்டியிருக்குமா—அல்லது வித்தியாசப்படுமா—என்று நீங்கள் சந்தேகப்படலாம். ஒரு சிறு பரிக்ஷைசெய்வோம். கிட்டத்தட்ட ஒரே அளவான மேற்சொன்ன வெள்ளி, ஈயம், தகரம், இரும்பு—இவற்றால்செய்த சிறுகுண்டுகள் எடுத்துக்கொள்வோம். ஒவ்வொன்றுக்கும் கொக்கியில்லாவிட்டால், இரண்டு நூல்களைக் கட்டித்தூக்குவதற்கு எளிதாய்ச் செய்துகொள்வோம். பிறகு இவற்றை எல்லாம் கொதிக்கும் ஜலத்திலாவது, காய்ச்சின எண்ணெயிலாவது 15, 20 நிமிஷம் வைத்து இருப்போம். எல்லா வஸ்துக்களும் ஒரே டெம்பரேசருக்கு வந்துவிடும் அல்லவா? இதற்குள் தேன்மெழுகால் ஒரு அடை செய்துகொள்வோம். அடையின் நீளமும் அகலமும் 3, 4 அங்குலம் இருந்தால் போதும்; பருமன் $\frac{1}{4}$ அங்குலம் இருக்கவேண்டும். இந்த அடையின்மீது மேற்சொன்ன, உஷ்ணமான பந்துகளை எடுத்து எல்லாவற்றை ஒரே சமயத்தில் வைத்தோமானால் இரும்பு குண்டு அடையை முற்றிலும் துளைத்துக்கொண்டு போய்விடுகின்றது. தாமிரமும் கிட்டத்தட்ட அவ்விதமே; தகரம் பாதிகூடப் போகிறதில்லை; ஈயமோ கற்குண்டுபோல் அடையின்மீது உட்கார்ந்து இருக்கின்றது. இதனால் என்ன தெரிந்துகொண்டீர்கள்? எல்லா வஸ்துக்களுக்கும் ஆரம்பத்தில் ஒரே டெம்பரேசர் தானே? இரும்பு கொடுக்கும் உஷ்ணம் அடையை முழுதும் உருக்கிவிட்டது; தாமிரத்திலிருந்து வரும் உஷ்ணம்



சற்று குறைவு; தகரம் வெளியிடும் உஷ்ணம் அதிலும் தணிவு; ஈயத்திலிருந்து வந்த அளவோ மிகக்கொஞ்சம்; இந்த ஒரு பரிக்ஷை நமக்கு எவ்வளவு உண்மைகளைக் கற்பிக்கின்றது பாருங்கள்! நாம் எடுத்துக்கொண்ட பொருள்களின் கனம் ஒரே அளவாய் இருந்தன; அவையெல்லாம் ஒரே டெம்பரேசரில் நின்றன; இருந்தபோதிலும் ஒவ்வொன்றும் வெளிவிட்ட உஷ்ணம் வித்தியாசமென்பது விளங்கவில்லையா?

இதுவேபோல் ஒருகாண்டியில் 10 ரூபாய் எடையுள்ள இரும்புத்தூள் எடுத்துக்கொள்வோம். அதைப் பத்து டிகிரிதூரம் உஷ்ணமாக்குவதற்கு ஒரு விளக்கில் காய்ச்சுவோம். 4 நிமிஷம் செல்லுமென்று வைத்துக்கொள்வோம். ஆகவே விளக்கினின்று வந்த உஷ்ணம் 4 நிமிஷத்தில் 10 ரூபாய் எடை இரும்புத்தூளை 10 டிகிரிதூரம் உஷ்ணமாக்கிற்று. மறுபடி அதேகாண்டியில் 10 ரூபாய் எடை தாமிரத்தை எடுத்துக்கொண்டு அதையும் முன்போலவே 10 டிகிரிதூரம் காய்ச்சப்பிரயத்தனப்படுவோம்; 3 நிமிஷத்திலேயே காரியம் நிறைவேறுகின்றது. மறுபடி அக்காண்டியையே சுத்தம்செய்து 10 ரூபாய் எடையுள்ள ஈயத்தூளைக் காய்ச்சினால் வெகுசீக்கிரத்தில் ஈயம் உஷ்ணமேறிவிடுகின்றது. (ஈயத்தூள் கிடைப்பதரிது; ஆனால் ஈயத்தகடு எடுத்துக்கொண்டு பரிக்ஷைசெய்யலாம்.) முன்போலவே ஜலத்தை எடுத்துக்கொண்டு பரிக்ஷையை மறுபடி செய்தால், இரும்பு 10 டிக்ரிதூரம் சூடேற எவ்வளவு நாழிகையோ அதைவிட 8, 9, மடங்கு அதிக நாழிகை ஆகின்றது; இப்பரிக்ஷைகளால், ஜலத்துக்கு உஷ்ணத்தை உட்கொள்ளும் சக்தி அதிகமென்று விளங்குகின்றதல்லவா? நாம் பார்த்த வஸ்துக்களுக்குள் ஈயத்துக்கு இச்சக்தி மிகக்குறைவு; தகரம், தாமிரம், இவற்றிற்கு முறையே அச்சக்தி அதிகமென்பதும் தெரியலாம். வஸ்துக்கள் உஷ்ணத்தை உட்கொள்ளும் சக்தியை ஆங்கிலேயர் ('Capacity for Heat') என்றுசொல்லுவார்கள். ஒவ்வொரு வஸ்துவுக்கும் இச் (Capacity) சக்தி வித்தியாசப்படுகிறதென்பதைக்காட்ட இன்னுமொரு நேர்த்தியான வழியுண்டு. 10 ரூபாய் எடையுள்ள இரும்புத்தூளை ஒரு பாத்திரத்தில் போட்டு, பாத்திரத்தைக்கொதிக்கும் ஜலத்தில் வைத்து இருந்தால் சிறிதுநேரம் கழித்துப் பாத்திரமும் இரும்புத்தூளும் கொதிக்கும் ஜலத்தின் டெம்பரேசரை அடையுமல்லவா? அதாவது அவற்றின் சூடு 212° யாய் இருக்கும். அதை காலதாமதம் செய்யாமல், ஜாக்கிரதையாய் ஏதோ ஓரளவு—20 ரூபாய் எடை என்று வைப்போம்—ஜலத்தில் கலந்துவிட்டு தெர்மாமீடரினால் கலக்குவோம். அப்படிச் செய்யும்போது இரும்பிலிருந்து ஜலத்துக்கு சூடு வருவதால் ஜலம் சூடேறும். எவ்வளவு டிகிரியிலிருந்து எவ்வளவு தூரம் சூடேறுகிறதென்று பார்ப்போம். கடைசியாய் ஜலமும் இரும்புத்தூளும் சமமான டெம்பரேசரை அடைந்தவுடன் சற்று நிலையான டெம்பரேசரை நாம் கவனமாய்ப்பார்த்து கணக்குச் செய்துகொள்ளவேண்டும். அவை வருமாறு:—

| | |
|---|---|
| 20 ரூபாய் எடையுள்ள ஜலம் முதலில் இருந்தது ... | ... 96° |
| இரும்புத்தூள் போட்டது பற்றி ஏறியது ... | ... 102° |
| ஏற்றம் ... ... ... ... | ... 6° |
| 10 ரூபாய் இரும்புத்தூள் கலக்குமுன் இருந்தது | ... 212° |
| ஜலத்துக்கு உஷ்ணம் கொடுத்தபின் ... | ... 102° |
| குளிர்ந்தபோது இறக்கம் ... ... | ... 110° |

10 ரூபாய் எடையுள்ள இரும்புத்தூள் 110° குளிரும்போது கொடுக்கும் உஷ்ணம் 20 ரூபாய் எடையுள்ள ஜலத்தை 6 டிகிரிதூரம் சூடாக்குகின்றது. இப்பாடம் முதலில் சொன்னதுபோல் 1 ரூபாய் எடை ஜலத்தை 1 டிகிரி உஷ்ணப்படுத்த 1 (unit) உஷ்ணம் வேண்டுமானால் இப்பொழுது ஜலத்துக்கு கிடைத்த உஷ்ணம் 120 (unit) ஆகின்றன. இந்த உஷ்ணம் முழுவதும் இரும்புத்தூள் கொடுத்ததல்லவா? ஆகவே 10 ரூபாய் எடையுள்ள இரும்புத்தூள் 110 டிகிரி குளிரும்போது 120 units உஷ்ணம் வெளிவிடுகின்றது. ஒரு ரூபாய் எடை இரும்பு 1 டிகிரிகுளிர்ந்தால் ($\frac{12}{110}$) unit உஷ்ணம் தானே வெளிவிடக்கூடும் 1 ரூபாய் எடை ஜலம் 1 டிகிரி குளிர்ந்தால் 1 unit உஷ்ணம்கொடுக்குமல்லவா? ஆகையால் இரும்புத்தூள் உஷ்ணம் அதே அளவு ஜலம் அதே நிலைமையில் கொடுக்கும் உஷ்ணத்தை விட ($\frac{12}{110}$) பங்கு தான் என்பது தெளிவாய் விளங்குகின்றது. ஆகவே, ஜலத்தின் சக்தி, உஷ்ணத்தை உட்கொள்ளும் விஷயத்தில், இரும்பின் சத்தியைவிட, 10 மடங்கு அதிகமானது. இம்மாதிரியே ஒவ்வொரு வஸ்துவைக்கொண்டும் பரிக்ஷைகள் செய்து, அவ்வவற்றின் சக்தியை நிர்ணயம் செய்யலாம். இவ்வாறு நிர்மானம் செய்தபோது ஜலத்தின் சக்தியை ஒன்றுவைத்துக் கொண்டால், கண்ணாடிக்கு 5-ல் ஒருபங்கு; இரும்புக்கு 10-ல் 1-பங்குச் சற்று அதிகம் ($\frac{12}{110}$); தாமிரத்துக்கு 10-ல் 1-பங்குச் சற்று குறைவு ($\frac{9}{100}$); தகரத்துக்குத் தக்கபடி 20-ல் 1-பங்கு தான். இவ்வாறே வஸ்துக்களுக்குத் தக்கபடி அவற்றின் "உஷ்ணத்தை உட்கொள்ளும் சக்தியும் வித்தியாசப்படும்." இன்னும் ஒரு முறை விவரிக்கின்றேன்.

1 பவுண்டு ஜலத்தை (1-ரூபாய் எடை ஒன்று எடுத்துக்கொண்டாலும் சரி 1 டிகிரி சூடேற்றச்செலவாகும் உஷ்ணத்தைக்கொண்டு 10 பவுண்டு இரும்பை 1-டிக்கிரிதூரம் உஷ்ணமாக்கலாம்; அதே உஷ்ணம் 20 பவுண்டு தகரத்தை 1-டிக்ரி உஷ்ணமாக்கும்; அல்லது 1 பவுண்டு தகரத்தை 20-டிக்ரி உஷ்ணமாக்கும்; ஆகையால் ஜலத்திற்கு உஷ்ணத்தை உட்கொள்ளும் சத்தி எவ்வளவு அதிகம் பாருங்கள்.

ஜலத்துக்கு இச்சக்தி அதிகமாய் இருப்பது பற்றி உலகத்துக்கு அநுகூலம் பல. பகலெல்லாம் சூரியன் காயும்போது நிலம் எவ்வளவு சீக்கிரம் சூடேறுகிறது பாருங்கள். ஒரே விதமாய் சூரியன் நிலம், நீர் இரண்டின்மேலும், பிரகாசித்தபோதிலும், நிலம் அதிகமாய் சூடேறவும், ஜலம் அம்மட்டாய் சூடேறாதிருக்கவும், காரணம் யாது? நிலத்துக்கு உஷ்ணத்தை உட்கொள்ளும் சக்தி மிகக் குறைவு; அவ்வளவுதான். நிலத்தைப்போலவே நீரும் உஷ்ணமாகுமானால் நாம் எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருக்கும் என்று ஆலோசனை செய்யுங்கள்.

மறுபடி இரவில் குளிரும்போது நிலம் சீக்கிரம் குளிர்ந்து விடுகின்றது. நீர் குளிர வெகுநேரமாகும். ஏனெனில் முன்செய்த பரிக்ஷைகளை ஆராய்ச்சிசெய்யவேண்டும். 1 பவுண்டு இரும்பு 1 டிகிரி தூரம் குளிரும்போது விடும் உஷ்ணத்தை 1 பவுண்டு ஜலம் ($\frac{1}{10}$) டிகிரீ குளிரும்போது கொடுக்குமல்லவா? ஆகையால் நிலம் குளிர்ந்துவிட்டபோதிலும் நீர்மட்டும் வெதவெதவென்று வெகுநேரமிருக்கின்றது. இந்த டெம்பரெசர் வித்தியாசம்பற்றி சமுத்திரக்காற்று, நிலக்காற்று இவை வீசுகின்றன. எப்படியென்று விவரமாய் இன்னொரு பாடத்தில் சொல்லுகிறேன்.

ஆர். கே. சுவாமி, பி. ஏ., எல். டி.



## நமது சித்திரப்படக் கதை.

# ப்ரத்யும்னன் ஜநநம்.

[டிஸம்பர் பத்திரிகையின் 268-வது பக்கத்தொடர்ச்சி.]

அவ்விதமே சமையல்செய்வோர் அதை உள்ளே எடுத்துக்கொண்டுபோய் அதை இரண்டு துண்டுகளாகச் செய்யவே, அதில் ஒரு அழகு பொருந்திய குழந்தை யிருக்கக்கண்டு அதிசயத்து மாயவதிக்கு இவ்வாச்சரிய சமாசாரத்தைத் தெரிவித்தார்கள்.

மாயாவதி உடனே வந்து இக்குழந்தையினுடைய சௌந்தரியத்தைப் பார்த்து மனங்களி கூர்ந்து வியப்படைந்து அதைவெகு ஜாக்ரதையாக சந்தேகத்துடன் வளர்த்துவந்தாள்.

[முதல்படத்தில் மாயாவதி குழந்தையை ஒற்றுப் பார்ப்பதை பாருங்கள்.]

நாரதமாமுனியானவர் மாயாவதி இச்சிசுவின் மேல்சந்தேகங்கொண்டிருப்பதை ஞானதிருஷ்டியால் அறிந்து அச்சந்தேகத்தை நீக்க அவளிடத்திற்கு வந்தார். மாயாவதி ரிஷிஸ்ரேஷ்டரைக் கண்டதும் திடீரென்று எழுந்து அர்க்ய பாத்தியம் முதலியவற்றால் அவரைப்பூஜித்து ஆசனங்கொடுத்து அதில் அவரை உட்காரும்படி வேண்டிக் கொண்டாள். நாரதமகா முனி உட்கார்ந்தவுடன் மாயாவதி அவர்முன் கைக்கூப்பி நின்றாள். ரிஷிஸ்ரேஷ்டர் தமக்கு எதிரில் நிற்கும் மாயாவதியைப்பார்த்து, "கேளாய் மாதுசிரோமணியே, இந்தபாலன் முன்பு உருத்திரபகவானால் தகிக்கப்பட்ட மன்மதன். இப்பொழுது இவன் உன்னுடைய தர்மகுணத்தால் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கும் ஸ்ரீருக்மணிதேவிக்கும் புத்திரனாக ஜனித்தான். நீயோ ரதிதேவி. காமதேவனுடைய உத்தம மனைவி. ஆகையால் நீ இக் குழந்தையைச் சரியாய் வளர்த்துவா. இவனுக்கு வயது வந்ததும் இவனை மணம்புரிந்து சுகித்து வாழக்கடவாய். இதுதான் என்னுடைய மனப்பூர்ண ஆசிர்வாதம்." என்று சொல்லி மாயாவதிமனதில் தோன்றிய சந்தேகத்தை நீக்கினார்.

மாயாவதி இதைக்கேட்டு மிகவும் சந்தோஷித்து "தபசிரேஷ்டரே, சம்பராசுரன் தன்னை மணம்புரியும்படி என்னை அடிக்கடி கேட்கிறானே. அதற்கு என்ன செய்கிறது?" என்றுகேட்டாள்.

நாரத பகவான் "ஓ மாதே, உனக்கு ஒரு நோன்பு உண்டென்றும் அது முடிய 18 வருஷம் பிடிக்கு மென்று சொல்லிவிடு. உன் கணவனாகிய ப்ரத்யும்னன் இத்துஷ்டனைப் பின்னிட்டு கொன்று விட்டு உன்னை விவாகம் செய்து கொள்வான். இது நிச்சயம்" என்றுசொல்லி விடைப்பெற்றுச் சென்றார்.

இச்சங்கதி கேட்டது முதற்கொண்டு மாயாவதி மிகுந்த களிப்படைந்தாள். மேலும் இவளுக்கு தனது புருஷன் தெய்வகதியால் வாய்த்தாரென்று. மிகுந்த ஆநந்தங்கொண்டு, இக்குழந்தையை அதிக அன்புடன் எவருக்கும் ஒன்றும் சொல்லாமல் ரகசியமாய் சகல உபசாரத்துடன் வளர்த்து வந்தாள்.

இவ்விதம் மாயாவதி இக்குழந்தையைப் போஷித்து வருகையில் ஒரு நாள் சம்பராசுரன் கன்னியாரத்தினமாகிய மாயாவதியை நோக்கி, "உன்னை நான் மணம்புரிய விரும்புகிறேன்" என்றான். மாயாவதி இவன் சொற்களைக் கேட்டதும் திகிலடைந்த போதிலும், மனதைத் தைரியம் செய்துகொண்டு "இராக்ஷதராஜனே, நான் சுமார் 18 வருஷம் புருஷனை விரும்பாதிருக்க ஒரு விரதம் அநுஷ்டித்து வருகிறேன். அது முடிந்தவுடன் தங்களிஷ்டப்படி நான் தங்களை மணம்புரியலாம்" என்றாள்.

முன்யோசனையில்லாத இவன் அவ் வார்த்தையை நம்பியிருந்தான். இவ்விதம் சிலகாலஞ் சென்றது. ப்ரத்யும்னனுக்கு பால்யம் போய் யௌவனப் பருவமும் வந்தது. அப்பொழுது இவன் மிக்க சௌந்தரியவனைத் தென்பட்டான். இவன் கண்கள் செந்தாமரையைப் போலிருந்தன. நீண்ட கைகளும் அகண்டமார்பு மிருந்தன. இவன் முகமும் புன்னகையுடன் கூடியதாயிருந்தது. மாயாவதி இவனை அருகி "என்னை மணபுரியவேண்டும் என்று" இவனை வேண்டினாள்.

இவன் "நான் உன்னை தாயாராக பாவித்து வருகிறேன். உன்னைமணம் புரிவது சாஸ்திரவிரோதம்" என்று பதிலளித்தான்.

மாயாவதி, "ஐயா அப்படியல்ல, பூர்வஜன்மத்தில் தாங்கள் எனது பர்த்தா. தங்கள் பெயர் காமதேவர். என் பெயர் ரதி. நான் தங்களுடைய தர்ம பத்னி. ஆகையால் என்னை மணம்புரிந்து கொள்ளலாம் என்று "தன் கையிலுள்ள அழகான பூமாலையை அவனுக்கு அணியச் செல்லுகிறாள். (இப்படத்தைப் பாருங்கள்).

☞ பத்திராதிபர்.

## பூனைக்கும் உண்டு நன்றியும் புத்தியும்.

வீட்டுப் பிராணிகள் பலவற்றிலும் நாயே நல்லது, புத்தியுள்ளது, நன்றியுள்ளது என்பது ஸஹஜம். பூனையை "பூனைக்கில்லை தவமும் தயையும்" என்னும் புத்தி, நன்றி இவை ஒன்றும் இல்லாதது என்றும் இகழ்வதுண்டு. ஆனால் இது ஸந்தர்ப்பத்தில் பூனைக்கும் சிறிது பதவி கொடுக்கலாம், என்பது சில மாசங்களுக்குமுன் லண்டன் நகரத்தில் ஒரு மூலையில் நடந்த ஸம்பவத்தால் ஸ்தாபிதமாகும்.

இங்க்லண்ட் தேசத்தில் சிலர் தங்கள் வீடுகளிலேயே கடைகளையும் வைத்துக்கொள்கிறார்கள். ஒரு கட்டடத்தின் முன்புறம் கடையாகவும் பின்புறம் குடியிருப்பாகவும் ஏற்படலாம். பெரிய வீடு ஒன்றின் கீழ்ப்பாகம் குடியிருப்பு, மேற்பாகம் தொழிற்சாலை ஆக இருக்கலாம்.

இப்படிப்பட்ட கட்டடம் ஒன்றில் ஒருவன் அச்சுக்கூடம் வைத்திருந்தான். ஒருநாள் வேலையை முடித்துவிட்டு இரவில் ஆள்களும் வீட்டாரும் சேர்ந்து ஒன்பதுபேர் அதில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய செல்லப் பூனையும் அதன் இடத்தில் படுத்திருந்தது. வேலைசெய்த களைப்பினால் எல்லாரும் அயர்ந்து நித்திரை போய்விட்டார்கள். பூனைக்குமாத்திரம் தூக்கம்



பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்தது. அப்பொழுது புகைநாற்றம் அடித்தாற்போல் தோன்றியது. பூனையும் உற்று உற்று பார்த்தது. மெத்தையின் படிக்கட்டு மூலையில் எரிந்தது அதற்குத் தென்பட்டது. உடனே பூனை பார்த்தது. 'ஏதோ அபாயம் சமீபத்தில் இருக்கிறது,' என்றெண்ணித் தன்னை வெகு ப்ரியமாய்ப் பாராட்டிவந்த வேலைக்காரியைப் போய்ப் பிறாண்டிற்று. அவளும் அப்படி இப்படித் திரும்பிப்பின் எழுந்தாள். சீக்ரம் அவளுக்கும் அபாயத்தின் அறிகுறி தெரியலானது. அவள் மற்றவர்களையெல்லாம் எழுப்பிச் செய்த ஆரவாரத்தில் அக்கம்பக்கத்தாரும் வந்து உதவ நெருப்பு அணைந்துவிட்டது. உயிர் ஒன்பதும் தப்பியது.

பூனை நாம் செய்வதுபோல் புத்தியும் நன்றியும் இல்லாததானால் இந்த உயிர் ஒன்பதும் ஒருமிக்க மாண்டு போயிருந்திருக்கும். புத்திசாலித்தனத்தால் புகைநாற்றத்தை அபாய அடையாளம் என்றறிந்து நன்றிமறவா நற்குணத்தால் தனக்குப்பாலும் சோறும் பரிந்திட்டுவந்த வேலைக்காரியைத் தப்புவிக்க எண்ணிச் செய்ததால் அது அவள்பொருட்டு வீட்டார் எல்லார்க்கும் ஆயிற்று.

பூனைக் குண்டு நன்றியொடு புத்தி
ஆனைக் குண்டு அந்தியில் பழி.

☞ அறந்தாங்கி.

## மனச்சாக்ஷி.

"அம்மா! இன்றைக்கு நான் குட்டைக்குப் போயிருந்தபோது நடந்த ஸங்கதி ஒன்று வெகு வேடிக்கையாக இருக்கும்" என்று ஒரு பையன் தன் தாயிடம் வெகு விநயமாய்ச் சொன்னான். அதுகேட்ட தாயும் தன்பிள்ளையின் மேல் ப்ரியப்பட்டு அப்பா! கண்மணி! என்ன அது? என்று வெகு ஸ்ரத்தையாய்க் கேட்டாள். உடனே பையனும் பார்! அந்தக்குட்டையில் ஓர் ஓரம்; அங்கே ஆழம் இல்லை. அதில் ஆமை ஒன்று வெய்யில் காய்ந்துகொண்டிருந்தது. அதைக் கண்டதும் அதை அடிக்கலாம் என்று கையில் இருந்த தடியையும் ஓங்கினேன். ஆனால் இருந்தது இருந்தாற்போல் எனக்குள்ளே யாரோ "ஊஹூ அதையேன் அடிக்கிறாய்?" என்று மிரட்டி என்னைத் தடுத்தாற்போலிருந்தது. நானும் ஓங்கிய கையை அப்படியே கொஞ்ச நேரம் வைத்திருந்தேன். பின் அந்த ஆமை அதன் பாட்டிற்குப் போய்விட்டது. அப்புரம் தான் அது இன்னது என்று அம்மாளைக் கேட்கலாம் என்று ஓடிவந்தேன்" என்று சொல்லி ஆச்சரியப்பட்டான்.

இந்த விருத்தாந்தத்தை ஆதியோடு அந்தமாய்க் கேட்டு ஆநந்தம் அடைந்து "ஏன் அப்பா! அதைத்தான் மனச்சாக்ஷி என்கிறார்கள். அதன்படியே நடந்தால் ஒருபோது ஒருசிறிதும் பிழையாகாது. அது உத்தமமான துணை. நாம் இதற்கு அடங்கி நடப்பதைப் பொறுத்தே நமக்கு இன்பமும் துன்பமும் நேரும். நமது மனமும் த்ருப்தியடையும். மனச்சாக்ஷியே நம்மை எல்லா நலத்தையும் அடைவிக்கும். அதனால் ஆகாதது எதுவும் இல்லை. அதனை அசட்டை செய்வதால் அனர்த்தம் அனந்தம் உண்டாகும்.

"உள்ளத்தில் உதிக்கும் மண்ணம் ஒருவனுக்கு உறுதியாகும்
உள்ளத்தி லுதிக்கு மெண்ணம் ஒருவனை ஒழிப்பதாகும்,
உள்ளத்தின் நினைவால் மாந்தர் உய்குவர் அழிவர், அந்தோ!
உள்ளத்தின் தீமையாலே உலகெலாம் பகையாம் கண்டாய்"

அப்பா! மனம் மஹா அறிஞன். அவன் ஆட்டுகிறபடியே நாம் ஆடுவது தான் முறையாகும்.

"மனமெனு மறிஞன் சொல்லு மந்திர மதியை ஓம்பி
உனக்கு நீ உண்மையோனாய் ஒழுகுதல் முறைமையாகும்,
எனவெழு யாரும் உயர்ந்து ஈடேறவே அன்றோ சொல்லாய்
சனற்குமாரற்கு உரைத்தார் தக்ஷிண மூர்த்தி தேவர்"

என்று இப்படிக்கெல்லாம் புத்திமதி சொல்லித் தாய் தன் மகனை வழிப்படுத்தினாள்.

பாலர் ஆசான்.

## மிஸ்ஸெஸ் அன்னிபெஸன்ட் கிராமப் படிப்பைப்பற்றி.

1912ளு டிசம்பர்மீ 7உ தேனாம்பேட்டையில் மிஸ்ஸெஸ் அன்னிபெஸன்ட் கிராமச் சிறுவர்களின் படிப்பைப்பற்றி பின் வருமாறு பிரசங்கம் செய்தார்:—"ஆதிகாலத்தில் இந்தியாவில் ஜனங்கள் முழுதும் எல்லா வர்ணங்களும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களா யிருந்தார்கள். இதற்கு உதாரணமாக, ஸ்ரீராமச்சந்திரர் அயோத்தியாவில் ஆண்டகாலத்தில் அந்த ராஜ்யத்தில் எழுதவாசிக்கத் தெரியாதவர் ஒருவராவது இல்லையென்று ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் காலத்தில் ஜனங்கள் மதம், ஒழுக்கம், லௌகிக விஷயங்கள் அனைத்தும் தெரிந்தவர்களாயிருந்து செல்வமும் வளப்பமும் பெற்றிருந்தார்கள்.

இப்போது அந்த நிலைமை போய்விட்டது. கிராமவாசிகள் பெரும்பாலும் எழுதவாசிக்கத் தெரியாதவர்களாயிருப்பதால் அவர்களுக்குப் புதிதாய் கல்வி கற்பிக்கவேண்டும். என்னவிதமான கல்வி கற்பிப்பது? கல்வி கற்று உடம்பை உழைக்காமல் குமாஸ்தாக் கூட்டங்களோடு சேர யோக்கியதை பெறுவார்களா? அல்லது ஹிந்துக்கள் பரம்பரையாய்ச் செய்துவந்த தொழில்களைச் செய்ய சாமர்த்திய சாலிகளாவார்களா? குமாஸ்தாக்களாவதால் பொருளாக்கும் வேலை குறைந்து இப்போது பட்டினியால் வருந்தும் கூட்டங்களை அதிகப்படுத்துவார்கள். அப்படிப்பட்ட கல்வியை கிராமவாசிகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில் கேடே யொழிய நன்மை இல்லை.

ஆகையால் கிராமவாசிகளுக்கு எழுதவாசிக்கவும் சொற்ப கணக்குகளும் அவர்களைச் சுற்றியுள்ள வஸ்துக்கள், மிருகங்கள், செடிகள் இவைகளின் சுபாவமும், தானியங்கள், மரங்கள், சில ஔஷதங்கள் இவைகளும் கற்றுக்கொடுக்கப்படவேண்டும். இவைகளோடு கூட நல்ல குணங்களும் ஆடுமாடுகளைப் பட்சத்துடன் வளர்ப்பதும், சிறிது பூகோள சாஸ்திரமும் (Geography) சொல்லி வைக்கவேண்டும். தங்கள் கிராமம், தாலூகா, ஜில்லா, தேசம் இவைகளைப் பற்றின விஷயங்கள் படிப்படியாய்ச் சொல்லிவைக்கப்பட வேண்டும். தோட்டம் வைத்து வளர்ப்பதையும் சொல்லிவைக்கவேண்டும். இவைகளன்றி பரிசுத்தமும், துணிவுடுத்தல் வீட்டு விஷயங்கள் இவைகளும் சொல்லிவைக்கவேண்டும். இம்மாதிரி விஷயங்கள் ஜனங்களின் வாழ்நாளில் உபயோகமுள்ளவைகளா யிருக்குமாகையால் அவைகளை கிராம ஸ்கூல்களில் பிள்ளைகள் கற்கவேண்டும். இந்த ஸ்கூல்களுக்கு வித்தையிலாகா உத்தியோகஸ்தர்கள் சொல்லுகிறபடி அலங்காரமான கட்டடங்கள் வேண்டியிராமல் கூரைபோட்ட கெட்டித்தரையாய் இருந்தாற்போதும். இம்மாதிரி படிப்புச் சொல்லிவைப்பதில் கவர்ன்மெண்டாரே எல்லா ஒத்தாசைகளும் செய்துவைப்பார்களென்று நம்புதல் பிசகு. கிராமங்களில் பஞ்சாயத்துகள் பழய மாதிரி ஸ்தாபிக்கப்பட்டுப் போனால் அவர்கள் இந்தக் கல்வியையும் மற்ற கிராம விஷயங்களையும் நடத்துவார்கள். அது செலவுள்ளதாயும் டாம்பீகமாயும் இருக்கக்கூடாது. ஜனங்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் உபயோகப்படக்கூடிய சாமானிய விஷயங்களைச் சொல்லிக்கொடுப்பதுதான் முக்கியம்".



## சமாசாரக்குறிப்பு.

இந்தியாவில் பொன்:—இந்தியாவில் உற்பத்தியாகும் பொன்னில் நூற்றுக்கு 96-பங்கு கோலாரில் உற்பத்தியாகிறதாம்.

பிரதிநிதிகளும் ஜார்ஜ் அரசரும்:—பக்கிங்ஹாம் அரண்மனையில் சமாதானப் பிரதிநிதிகளை அரசர் வரவேற்றார். அவர்களுடன் அரை மணிநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

ஜர்மனி தேசத்தில் தபால் தந்தி இலாக்காவில் 242,000 பெண்களும், அமெரிக்காவில் 229,000 பெண்களும், இங்கிலாந்து முதலிய விடங்களில் 184,000 பெண்களும் வேலைசெய்து வருகிறார்களாம்.

மிக ஆழமான தங்கச்சுரங்கம்:—ப்ரெஸில் தேசத்திலுள்ள ஸெண்ட்ஜான் டெல் ரே என்னும் சுரங்கம் தரைமட்டத்திலிருந்து கீழே 6500 அடி ஆழத்தில் இருக்கிறது. இது ஸுமார் $1\frac{1}{4}$ மைல் ஆழமாகிறது.

ஒரு வைரம்:—1649 காரட்நிறையுள்ள ஒருவைரம் சமீபத்தில் தென் ஆபிரிக்காவில் ப்ரிமியர் சுரங்கத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதுஉச்சியை நறுக்கிவிட்ட ஒரு முட்டைபோன்ற உருவாயிருக்கிறதாம். இவ்வளவு பெரிய வைரம் இதுவரையில் உலகத்தில் இல்லை.

ஜப்பான் தேசத்து உள்நாட்டிலிருந்து ஜப்பானியன் ஒருவன் ஒரு பட்சியின் மேலேறிச் சவாரிசெய்துகொண்டு ஆகாயவழியாய் ஸைபீரியாவுக்குச் சென்றானாம். ஷை பட்சி நூதனமானதாகவும், ரூபத்தில்பருந்தைப்போலவும், தீக்குருவியிலும் பெரிய ரூபமுடையதாகவு மிருக்கிறதாம்.

கருமுத்துத் தரும் ஒரு பூச்சி:—டாக்டர் பெஞ்சமன் எச். க்ரே என்பவர், கடலில் பின்னா வென்னும் ஒருவிதப் பட்டுப்பூச்சிக ளிருக்கின்றனவென்றும், அப் பூச்சிகளில் பட்டு நூல்களிருப்பதோடு மிகுதியாகக் கருமுத்துக்க ளிருக்கின்றனவென்றுங் கூறுகிறார். ஸராஸரியாக ஐந்து பூச்சிகளொன்றில் ஒரு கருமுத்திருக்கிறதாம்.

ஜார்ஜ் சக்கரவர்த்தியின் அனுதாபம்:—லார்ட் ஹார்டிஞ்சுக்கு டெல்லியில் விபத்து நேர்ந்ததும் லேடி ஹார்டிஞ் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு லார்ட் ஹார்டிஞ்சின்மேல் வெடி குண்டு போடப்பட்டதாயும், அது அவர்மேல் பட்டுக் காயங்களை யுண்டாக்கி விட்டதாயும் தெரிவிக்க, அவர் உடனே அப்பெருமாட்டிக்கு ஓர் அனுதாபத்தந்தி யனுப்பினார்.

---

சில ஸென்ஸஸ் கணக்குகள்:—இந்தியாவில் லக்ஷத்தில் 26 பேர் பித்தர்கள், 64 பேர் செவிடர்கள், 142 பேர் குருடர்கள், 35 பேர் குஷ்டரோகிகள். பைத்தியமாயும், செவிடாயும் இருக்கும் ஸ்திரீகள், புருஷர்களில் மூன்றில் இரண்டு பங்கு இருக்கிறார்கள். குஷ்டரோகியான ஸ்திரீகள் புருஷர்கள் தொகையில் மூன்றில் ஒருபங்குதான் இருக்கிறார்கள்.

---

பார்லிமெண்ட்சபையில் ஸ்தானம் வகிக்கும் பெரியவர்:—பார்லிமெண்ட் சபையில் ஈஸ்ட் காவானுக்கு (East Cavan) ஸ்தானம் வகிக்கும் மிஸ்டர் சாமுவேல் யெங்க் என்பவர் அந்த சபை மெம்பர்கள் எல்லாரினும் வயதானவராவார். அவருக்கு வயது 91-ஆகிறது. மிஸ்டர் ஜெஸ்ஸி காலிங்ஸுக்கு வயது 82. மிஸ்டர் ராபர்ட் கல்மிரானுக்கு வயது 87.

---

புதுக்கோட்டை பொருள்காட்சியில் அநேகவித நூதனதரிகளும், விசேஷமான உள்நாட்டு நகைத்தொழிற் சாமான்களும் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. கோயமுத்தூரிலிருந்தும், புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சார்ந்த பாகங்களிலிருந்தும், விவசாயிகள் கண்டு அதிசயிக்கத்தக்கனவும் உருவத்தில் அவ்வளவு பெரிதானவுமான விவசாயப் பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

---

ஒரு காயம்பட்ட சிப்பாய்:—ஸ்விட்ஸர்லாண்டு தேசத்தில் நடந்த யுத்தாப்பியாசக் காட்சியின்போது பிளம் குவிஸ்ட் என்று பேர்கொண்ட ஓர் போர்ச்சேவகன் ஓர் கூட்டாளியினுடைய பிசகினால் மண்டையில் ஓர் துப்பாக்கிகுண்டு ஊடுருவலானான். அவனை ஆஸ்பத்ரிக்குக் கொண்டுபோய் அங்கு டாக்டர்மார்கள் அவன் மண்டையோட்டைத் திறந்து குண்டை வெளியில் எடுத்துப்போட்டு அதனால் சேதமான மூளையின் பாகத்தையும் அப்புறப்படுத்தி பழையபடி மண்டையோட்டை அதன் ஸ்தானத்தில் வைத்து ஸரிப்படுத்தி சில தினங்களில் அவனைக் குணப்படுத்தினார்கள். போர்ச்சேவகன் மறுபடியும் ராணுவத்திற்போய்ச் சேர்ந்துகொண்டான். ஆனால் அவனுக்குச் சில தத்வங்கள் குறைவுபடுகிறதாகத் தெரியவந்தது. விசேஷமாய் வாசிக்கவும் எழுதவும் அவன் மறந்துவிட்டான். ஆனபடியால் அவனை ராணுவத்திலிருந்து நீக்கிப்போட்டு உபகாரச் சம்பளங் கொடுத்துவருகிறார்கள். சாஸ்திரிகள் அவனைத் தங்களுடைய பார்வையில் வைத்துக்கொண்டு அவன் விஷயத்தைப் பரிசோதனை செய்துவருகிறார்கள். அவனுக்குப் பழையபடி எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறார்கள். மேலும் தங்களுடைய நிதியிலிருந்து மாதம் 5 பவுன் சம்பளம் கொடுத்துவருகிறார்கள். மனிதனுடைய ஒவ்வொரு தத்துவத்துக்கும் அவனுடைய மூளையின் ஒவ்வொரு பாகம் ஆஸ்பதமாயிருக்கிறதென்கிறகொள்கையை இந்தப் போர்ச் சேவகனுடைய விஷயமானது ஸ்திரப்படுத்துகிறது.

---



ஸர் ஹார்கோர்ட் பட்லர்:—சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் வருஷாந்தர வெகுமதிக் கொண்டாட்டம் நடந்தபோது ஸர் ஹார்கோர்ட் பட்லர் அக்கிராசனம் வகித்து "இந்தியாவில் கல்வி வரவர அதிகரித்து வரும்படி முயற்சி செய்யவேண்டுமென்றும், எதிர்காலத்தில் அதிக நம்பிக்கைகொண்டு கல்வி விஷயமாகப் பாடுபடவேண்டுமென்றும், அதைவிட்டு மனஞ்சலித்துச் சும்மாயிருந்துவிடல் கூடாதென்றும்" சொன்னார்.

---

ராஜப்பிரதிநிதிக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி நிஜாம் அரசர்:—ராஜப்பிரதிநிதிக்கு டெல்லிநகரப் பிரவேச சமயத்தில் விபத்து நேர்ந்து விட்டதென்று தெரியவந்ததும், நிஜாம் அரசர் ராஜப்பிரதிநிதிக்கும், லேடி ஹார்டிஞ்சுக்கும், அனுதாபத் தந்திகள் அனுப்பிவிட்டு ஹைதராபாத் சமஸ்தான ரெஸிடெண்டுக்கும் ஓர் தந்தியனுப்பி ராஜப்பிரதிநிதிக்கு இவ்வளவு காயம்பட்டிருக்கிறதென்று அவருக்குத் தெரிந்தால் அதைத் தமக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

---

கண்ணாடியால் செய்யப்பட்ட கடிகாரம்:— ஜர்மனிதேசத்து பவேரியா நாட்டில் கண்ணாடி மெருகிடுவோன் ஒருவன், ஆறுவருஷம் ஸ்ரமப்பட்டு முழுதும் கண்ணாடியாலே ஒருகடிகாரம் செய்து முடித்திருக்கின்றானாம். அந்தகடிகாரத்திலுள்ள, சக்கரங்கள், முள்ளுகள், தட்டுகள், முதலிய எல்லாம் கண்ணாடியாலேயே செய்யப்பட்டிருக்கின்றனவாம். பாகங்களை ஒன்றோடொன்று சேர்க்க கண்ணாடி ஆணிகள் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. அந்த கடிகாரம் ஓடுகிறதாம்.

---

பரோடா கலா பாவன்.—பரோடா ஸமஸ்தானத்தில் ஒருதொழில் கல்விச்சாலை மகாராஜாவினால் 1890-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது. இந்த கல்விச்சாலையில் அந்த ஸமஸ்தானத்து மாணவர்களேயன்றி ப்ரிட்டிஷ் இந்தியா மாணவர்களையும் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஸமீபத்தில் ஒரு அமெரிக்கா தேசத்து ப்ரொபஸர் அதைப் போய்ப் பார்வையிட்டபோது, அமெரிக்காவி லிருப்பதுபோலவே இந்த கல்விச்சாலையும் நன்றாய் நடத்தப்படுகிறது என்று சொன்னது நமக்கு அதிக மகிழ்ச்சியை யுண்டாக்குகிறது.

---

நீடாமங்கலம் சத்திரம் பெண் பாடசாலை பரிசளிப்பு:—மேற்கண்ட ஸ்கூலில் 10-ந் தேதியன்று ஸ்கூல் பிள்ளைகளுக்கு பரிசு கொடுக்கப்பட்டது. அப்பொழுது தஞ்சாவூர் கலெக்டரின் மனைவியாரான மிஸ்ஸஸ் உட் அக்கிராசனம்வகித்தார். ஸ்கூல் ஹெட் மிஸ்ட்ரெஸ் ஸ்கூலின் வருஷாந்தர ரிப்போர்டை வாசித்தார். சம்பாஷணைப் பாடம், கும்மி, கோலாட்டம் முதலியவைகள் ஸ்கூல் பெண்களால் நடத்தப்பட்டன. பிரஸிடெண்ட் ஸ்கூல் பெண்களுக்கு பரிசுகொடுத்துவிட்டு, ஸ்கூலில் இங்கிலீஷ் கற்றுக்கொடுப்பதைப்பற்றி ஹெட் மிஸ்ட்ரெஸ்ஸைப் புகழ்ந்து பேசினார்.

---

ஜப்பானுக்கு இரண்டு வர்த்தகக் கப்பல்கள்:—12,000-டன் பாரமேற்றக் கூடிய இரண்டு பெரிய கப்பல்களை வேலைசெய்யும் படி நிப்பான் யூஸென் கெய்ஷா என்ற ஜப்பானியக் கப்பற்கம்பெனி நாகஸாகியிலுள்ள கப்பல் செய்யும் ஒரு தொழிற்சாலைக்கு உத்தரவு கொடுத்திருக்கிறது. இன்னொரு கப்பல்செய்யவும் உத்தரவு கொடுக்கப்படுமாம். அக்கப்பல்கள் ஐரோப்பாவுக்குப் பிரயாணஞ் செய்ய உத்தேசிக்கப்பட்டவை.

---

ஹோல்கார் மகாராஜாவின் நன்கொடை:—இந்தியாவில் தாழ்ந்த ஜாதியாரை நன்னிலைமைக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் உழைத்துவரும் (Depressed Classes Mission Society of India) சங்கத்தார் வேண்டிக்கொண்டதற் கிணங்க, பூனாவில் மேற்படி சங்கத்துக்கு ஒரு கட்டடம் கட்டுவதற்காக ஹோல்கார் மகாராஜா ரூபா இருபதினாயிரம் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார். அந்தக் கட்டடமானது, முன் அரசியாயிருந்த ராணி அகல்யாபாய் ஹோல்கார் பெயரால் நாமம் சூட்டப்படும். இவ்விராணியின் திவ்ய சரித்திரம் "இந்திய ஸ்திரீரத்னங்கள்" என்ற புஸ்தகத்தில் உருவப்படத்துடனிருக்கிறது.

சென்னைக்கு வரப்போகும் ககன ஸஞ்சாரிகள்:—ஆகாய விமானம் நடத்துவதில் பேர் பெற்றவர்களான மான்ஷ்யர் ஜீயார்ஜ் வர்மிக், மா. மாரிஸ்கிளிஷா, மா. மார்க் பவுர்ப் என்ற மூன்று ப்ரான்சியர்கள், ஸிலோனுக்கு வந்திருக்கிறார்களாம். தேசஸஞ்சாரம் செய்யப் புறப்பட்டிருப்பதாகவும், ஸுமார் 8-நாள் வரையில் ஸிலோனில் தங்கியிருந்து, பிறகு சென்னைக்கு வந்து அங்கிருந்து, பம்பாய், ஆஸ்ட்ரேலியா முதலிய விடங்களுக்குப்போக உத்தேசித்திருப்பதாகவும் சொன்னார்களாம். அவர்கள் தங்களோடுகூட ஆகாயரதங்கள் கொண்டு வந்திருக்கிறார்களாகையால், ஒவ்வோரிடத்திலும், விமானத்தை நடத்திக் காட்டுவார்கள்.

ஜர்மனி சக்கரவர்த்தினியின் பூனைகள்:—இந்தியாவுக்குக் கிழக்கிலுள்ள ஸயாம் தேசத்துப் பூனைகளில் அநேகம் ஜர்மனி சக்கரவர்த்தினியிடம் இருக்கின்றன. அப்பூனைகளைப்போல் அவ்வளவு நேர்த்தியானவை ஐரோப்பாவில் வேறுயாரிடத்திலுமில்லை. ஸயாம் தேசத்தின் அரசன் அரண்மனையிலிருந்தே கொண்டுவரப்பட்ட சில பூனைகள்தான் எல்லாவற்றிலும் மிக அழகுள்ளவை. அவைகள் கறுத்தநிறமாயும் பட்டுப்போன்ற மயிரை உடையவையாயும் இருக்கின்றன. கண்களோ தணல்போன்று பிரகாசிக்கும். சக்கரவர்த்தினியைப்பார்த்து அநேக ஸ்திரீகள் ஸயாம் பூனைகளைக் கொண்டாடத் தலைப்பட்டுவிட்டார்கள். சில தினங்களுக்குமுன் பாரீஸ் நகரில் ஒரு பூனை 200-பவுனுக்கு வாங்கப்பட்டது.

மதுக்குடி:—இந்தியாவிலே மதுக்குடி வரவர அதிகரிக்கிறது. இதைப்பற்றித் தற்போது இந்திய ஜனோபகாரிகள் அநேகர் மிகவும் கவலைப்படுகிறார்கள். இவர்கள் சிலநாட்களுக்கு முன்னே இந்த விஷயமாய் இந்திய மந்திரியாரைக் கண்டு பேசும்படி சில ப்ரபுக்களை ப்ரதிநிதிகளாய் அனுப்பினார்கள். அவர்கள் குடிவெறி யதிகரிப்பைப்பற்றி மந்திரியார்க்குப் பல விவரங்களையெடுத்துக் காட்டினார்கள். சென்ற 11-வருஷங்களிலே வங்காளத்தில் நாற்றுக்கு 24 வீதமும், பஞ்சாபிலே நூற்றுக்கு 120- வீதமும், சென்னை ப்ரதேசத்திலே நூற்றுக்கு 120-வீதமும், பம்பாய் ப்ரதேசத்திலே நூற்றுக்கு 90 வீதமும் குடிவெறி அதிகமாயிருக்கிறது. இதைப்பற்றிய அரசிறையும் இந்தக்காலத்திலே முன்னிலும் ரொம்ப அதிகரித் திருக்கிறதாகக் கணக்குக்காட்டியிருக்கிறார்கள்.

சென்னை சட்டசபை இலக்ஷென்கள்:—சென்னைச் சட்டசபைக்கு முனிசிபாலிடிகள் டிஸ்டிரிக்ட்போர்டுகளால் தெரிந்தெடுக்கப்படும் 9-மெம்பர்கள் நியமனமாய்விட்டார்கள். இவர்கள் ராவ்பகதூர் B. N. சர்மா, மிஸ்டர் ராமசந்திரராவ் பந்துலு, மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ், மிஸ்டர் P. கேசவப்பிள்ளை, மிஸ்டர் ராமன் மேனன், மிஸ்டர் B. V. நரசிம்மய்யர், ராவ்பகதூர் A. சுப்பராயலு ரெட்டியார், ராவ்பகதூர் V. K. ராமானுஜாச்சாரியர், மிஸ்டர் ராமய்யங்கார். சென்னைக் கார்ப்பொரேஷனுக்கு டாக்டர் T. M. நாயரும், மிராசுதார்களுக்கு மிஸ்டர் சிதம்பரநாத முதலியாரும், தென்பாகத்து ஜமீன்தார்களுக்கு மிஸ்டர் ராமபத்திர நாயுடுவும் போட்டியில்லாமல் நியமானம் பெற்றிருக்கிறார்கள். யூனிவர்ஸிட்டியின் பிரதிநிதியாக ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி ஐயர் ஸினெட் சபை மீட்டிங்கில் தேர்ந்தெடுக்கப்பட்டார். மிஸ்டர் வி. எஸ். சினிவாச சாஸ்திரி அவர்களைக் கவர்ன்மெண்டார் நியமனம் செய்தார்கள்.



முடிசூட்டு வைபவ தினம், சக்கரவர்த்தியின் சுப சமாச்சாரம்:—சென்ற டிசம்பர்மீ 12உ சக்கரவர்த்தி முடிசூட்டின் வருஷதினமாதலால் அன்றைக்கு ஜார்ஜ் சக்ரவர்த்தி தம்பதிகளின் மனம் இந்தியாவின்பால் விசேஷமாய்ச் சென்றிருக்கிறதென்றும், டெல்லி முடிசூட்டு மகோற்சவம் இந்தியர்களுக்கு சகல சௌபாக்கியங்களையும் நிச்சயமாய்க் கொடுக்கப்போகிற புதிய சகாப்தத்தின் ஆரம்பமாகவே பாவிக்கும்படி எல்லாம்வல்ல கடவுள் அநுகிரகிப்பாரென அவர்கள் நம்பியிருப்பதாகவும் ராஜப்பிரதிநிதிக்கு சுபசமாச்சாரம் அனுப்ப, அவர் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு அதற்காக நன்றி செலுத்தி டெல்லி முடிசூட்டு மகோற்சவதினத்தை என்றைக்கும் இந்தியர் நினைத்துக் கொண்டிருப்பார்களென்றும், போனவருஷ முழுதும் இந்தியர் அனுபவித்த சுபிட்சமும் க்ஷேமமும் சக்ரவர்த்தியின் விஜயத்தால் இந்தியாவுக்கு விளையவிருக்கும் முன்னேற்றதைக் குறிப்பிடும் பிரதம பலன்களாகக் கருதப்படுமென்றும், பதில் தந்தி அனுப்பினர்.

ஆஸ்டிரியா சக்கரவர்த்தியின் சாப்பாடு திருடப்பட்டது:—ஆஸ்டிரியாவின் சக்ரவர்த்தியாகிய ப்ரான்ஸிஸ் ஜோஸப்புக்குத் தயார் செய்யப்பட்டுவைத்திருந்த காலை ஆகாரம் சில தினங்களுக்கு முன் திருட்டுபோய்விட, அரண்மனை எல்லாம் பெரிய குழப்பமாய்விட்டது. இரவில் 3-30 மணிக்கு சக்கரவர்த்தி படுக்கையினின்று எழுந்து உடனே ஆகாரம் சாப்பிடுகிறது வழக்கம். ஆகையால் சமையல்காரன் இரவு இரண்டு மணிக்கு எழுந்து சமையல் செய்ய வேண்டும். சக்ரவர்த்தி கொஞ்சமும் தாமதத்தைப் பொறுக்கமாட்டார்.

பிரஸ்தாபதினத்தில் ஆகாரத்தைக் கொண்டு வரும்படி மணியடிக்க, சமையல்காரன் ஆகாரம் வைத்திருந்த இடத்தைப் போய்ப் பார்க்க சாமான்களில் சில காணமலிருக்கக் கண்டு உடனே அரண்மனைப் போலீஸுக்கு அறிவித்தான். ஆகாரம் வைத்திருந்த அறையில் கரிப்பட்ட பூட்டைப் போட்டுக்கொண்டு யாரோ நடந்திருந்த அடையாளங்கள் காணப்பட, போலீசார் ஒருவிதமாய்ச் சந்தேகப்பட்டு புகையைபோக்கியை சுத்திசெய்கிறவன் வீட்டுக்குப்போக அவன் சக்கரவர்த்தியின் ஆகாரத்தை சாப்பிட்டு கொண்டிருக்க கண்டார்கள். அவனும் சமையல் அறையில் காவலிருக்கவேண்டிய மற்றொருவனும் அரெஸ்ட் செய்யப்பட்டார்களாம்.

புதுக்கோட்டையில் பொருட்காட்சி:—புதுக்கோட்டையில், மார்த்தாண்ட விவசாய கைத்தொழில் கல்விப் பொருட்காட்சி சென்றமீ 21உ யன்று இரண்டாம் தடவையாக நடை பெற்றது. எக்ஸிபிஷன் கமிட்டி காரியதரிசியான மிஸ்டர் M. தியாகராஜ ஐயர் திவான் பேஷ்காரை பொருள் காட்சியைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளவே, திவான் பேஷ்கார் ராவ் பஹதூர் தர்மராங்காஜா அவர்கள் பொருள்காட்சியைத் திறந்துவைத்து, "விவசாயமும், கைத்தொழிலும், கல்வியும் முன்னேற்றத்திற்கு இன்றியமை

யாத சாதனங்களென்றும், இம்மூன்றும் சம்பந்தப்பட்ட பொருட்காட்சி ஏற்படுத்தியதால், ஜனங்கள் மிகுந்த நன்மை யடைவார்களென்று தாம் நம்புவதாகவும், இந்தப்பொருள்காட்சியில் உள்நாட்டில் செய்யப்பட்ட அநேக கைத்தொழிற் சாமான்களும், விவசாயப் பொருள்களும் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருப்பதோடு கல்வியைப்பற்றியும், கைத்தொழிலைப்பற்றியும், பிரசங்கங்கள் செய்வதற்கு அவைகளில் நிபுணத்துவமுள்ள அநேகரைத் தருவித்திருப்பதாகவும், இந்தியாவின் பூர்வீக நாகரீகத்தையும், அக்காலத்தில் இந்தியா அடைந்திருந்த சிறப்பையும் இப்போது அதிருக்கும் நிலைமையையும் பற்றிப் பேசி, விவசாயிகளும், கைத்தொழிலாளிகளும் ஊக்கமடைந்த தங்கள் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்ய இத்தகைய பொருள்காட்சிகள் சாதகமாகுமெனக்" கூறினர்.

---

வயதுவராப் பெண்கள் பாதுகாப்பு:—மேற்கண்ட விஷயமாய் ஆனரபில் மிஸ்டர் தாதாபாயால் ராஜப்பிரதிநிதி சட்டசபையில் கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதாவைப்பற்றி ப்ரிட்டிஷ் இந்தியன் அஸோஸியேஷன் வங்காள கவர்ன்மெண்டுக்கு எழுதியகடிதத்தில், மசோதாவில் கண்ட தீங்கு, வங்காள மாகாணத்தில் பரவியில்லையென்று தாகர்களைப்பற்றி இந்தியன்பினல் கோடைச் சிறிது மாற்றுவது போதுமென்றும், மற்ற விஷயங்களைப்பற்றி சட்டத்தை மாற்றத் தேவையில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பெண்கள் சம்மதிக்கும் வயதை (Age of consent) உயர்த்துவது மதக் காரணங்களையும் ஜனாசாரக் காரணங்களையும் முன்னிட்டு ஆட்சேபிக்கப்படும் என்று அந்தச் சங்கம் நினைக்கிறது. அவ்விஷயத்தில் கவர்ன்மெண்டார் தலையிட்டுக்கொள்ளத் தேவையில்லை என்றும், வீட்டிலுள்ளவர்கள் என்ன செய்கிறார்களென்று வீட்டுக்காரனுக்குத் தெரியாமலிருக்கலாமாகையால், வீட்டுக்காரனைத் தண்டனைக்குட்படுத்த வேண்டியது சரியல்லவென்றும், விபசாரத்தைத் தடுப்பது அஸாத்தியமான காரியமென்பதுமல்லாமல், மீட்கப்பட்ட ஸ்திரீகளுக்கும் பெண்களுக்கும் தக்க வீடுகளை ஏற்பாடுசெய்வது கஷ்டமாயிருக்குமென்றும், ஆகையால் புதிதாய்ச் சட்டம் செய்யத் தேவையில்லை என்றும் அந்தச் சங்கம் அறிவிக்கிறது. நம்மால் செய்ய முடியாதவைகளுக்குக் கவர்ன்மெண்டு சட்டம் தேவைதான். வீணாக சட்டம் வேண்டாமென்று சொல்வது தப்பே.

---

புதைந்து கிடக்கும் பூர்வீக பாடலிபுரம்:—வடஇந்தியாவில் இப்பொழுது பாட்னா என்று சொல்லப்படும் பட்டணத்தின் கீழ் பூர்வீக காலத்தில் பிரசித்தி அடைந்த நகராகிய பாடலிபுரம் புதைந்து கிடக்கிறதென்று அநேக மேதாவிகளின் அபிப்பிராயம். அப்படி இருக்கிறதா என்று சோதனைசெய்யும் பொருட்டு விஸ்தாரமாய் பூமியை ஆழமாய் வெட்டிப்பார்க்கும் செலவை மிஸ்டர் டாடா தாம் கொடுப்பதாக வாக்களித்ததை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். நினைக்குமாறு இருக்குமானால் பூர்வீக நாகரீக சம்பந்தமான அநேக விஷயங்கள் வெளி வரலாம்.

---

மிஸ்ஸஸ் ஸ்ரீனிவாச அய்யங்கார் நடத்திய ஸ்திரீகளின் தோட்டக் கச்சேரி:—சென்னையில் பிரபல வக்கீல்களுள் ஒருவரான மிஸ்டர் S. ஸ்ரீனிவாச அய்யங்காரின் மனைவியார் 11-ந்தேதி மாலை யன்று "அம்காட்பாச்" என்ற தம் பங்களாவில் ஒரு தோட்டக்கச்சேரிநடத்தினார். ரிக்ரியேஷன் கிளப்பு நேஷனல் இந்தியன் அஸோஸியேஷன் இவைகளைச்சேர்ந்த ஸ்திரீ மெம்பர்



களை விருந்துக்கு வரவழைத்திருந்தார்கள். லேடி பெண்ட்லாண்டு அந்த விருந்துக்கு வந்திருந்தார். இந்திய ஸ்திரீகள் தவிர கோஷா ஸ்திரீகளான கபிலசுரம் ராணி, போடிநாயக்கனூர் ராணி, நூஜ்வீடு ராணி, மிஸ்ஸஸ் லாட் கோவிந்ததாஸ், லேடி பாஷ்யம் அய்யங்கார் முதலியவர்களும் விருந்துக்கு வரவழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் லேடி பெண்ட்லாண்டுக்கு அறிமுகஞ்செய்விக்கப்பட்டார்கள். தோட்டம் விளக்குகளினால் பிரகாசிக்கப்படுத்தப்பட்டதும், விருந்தினர்கள் தங்கள் ஆடையாபரணங்களுடன் சந்தோஷமாய் விளங்கினதும் குறிப்பிடத்தக்கவை. வந்தவிருந்தினர்களை மிஸ்ஸஸ் ஸ்ரீனிவாச அய்யங்கார், மிஸ்ஸஸ் சுப்ரமணியம், மிஸ்ஸஸ் மாடிலே இவர்கள் வரவேற்றார்கள். லேடிபெண்ட்லண்டைவரவேற்று, அவருக்குத்தங்கமுலாம் பூசிய திவ்ய ஹாரம் ஒன்றைச் சூட்டினார்கள். சங்கீதக்கச்சேரி நடந்தது. லேடிகள் அனைவரும் பல விளையாட்டுகளை விளையாடினார்கள். போட்டிவிளையாட்டில் ஜெயித்தவர்களுக்கு லேடி பெண்ட்லண்டால் பரிசு கொடுக்கப்பட்டது. பரிசுகளைப் பெற்றவர்கள் கமலாபாய், மிஸ் S. லாஸரெஸ், மிஸ் Z. லாஸரெஸ், மிஸ் டைலர், மிஸ்ஸஸ் ஷர்ஜா, மிஸ் ஹாண்டே, மிஸ் A ஹென்ஸ் மான், மிஸ் சரஸ்வதி. பரிசுகளின் விவரம்:—பென்ஸில்கள் அடங்கிய வெள்ளிப்பெட்டி, குண்டூசிகள் வைக்கப்படும் வெள்ளிச்சிமிழ், படங்கள் வைக்கும் புஸ்தகம், (Album) பணம் வைக்கும் பெட்டி, வாசனை திரவியங்கள் அடங்கிய சீசா முதலியவைகள் ஆகும். மிஸ் ஸெயிண்ட் லீஜர் காஸ்மீர தேசத்துப் பாட்டையும், டாக்டர் நஞ்சுண்டராவின் குமாரத்தி, வீணையுடன் தொடர்ந்த இந்தியப் பாட்டையும், க்ருடர் என்பவர் ஹிந்துஸ்தானிப் பாட்டையும் பாடி சபையோரை ஆனந்தப்படுத்தினார்கள்.

விருந்துக்கு அடியிற்கண்ட இந்திய ஆங்கில ஸ்திரீகள் வந்திருந்தார்கள் லேடி பென்ஸன், லேடி வாலிஸ், ஸ்டீவர்ட், லேடி தேசிகா சாரியார், லேடி சங்கரன் நாயர், மிஸ்ஸஸ் மில்லர், மிஸ்ஸஸ் டாட் ஹண்டர், மிஸஸ் T. நபபெருமாள் செட்டி, அவருடைய குமார்த்திகள், மிஸஸ் சுப்ரமணியம், மிஸஸ் ராமராவ், மிஸ்ஸஸ் T திருவெங்கடாசாரியார், மிஸஸ் ஸ்மிட், மிஸஸ் பெக்கௌஹால் பாஷ், மிஸஸ் பியாஸ், அர்தர் டேவிஸ், மிஸஸ் ஆடாம், மிஸ் டெய்லர் முதலியவர்கள்.

---


# மாதர் மனோரஞ்சனி.

இது மாதர்களுக்கும் பெண்களுக்கும் அறிவைப்புகட்டும் ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதில் சித்திரப்படங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது இதற்கு 15-வது வருஷம் நடந்துவருகிறது. இதன் வருஷசந்தா (சாதாரண பதிப்புக்கு) ரூபா - 2. உயர்ந்த பதிப்புக்குச் சந்தா ரூபா - 2. அணா-8. வேண்டுவோர் சி. எஸ் இராமசுவாமி ஐயர், மாதர் மனோரஞ்சனி பத்திராதிபர், நெ. 12, தணிகாசலப்பிள்ளை தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவேண்டும். சந்தாமுன்பணமாகக் கட்டப்படவேண்டும். விலாசம் மாறும்பொழுது தெரியப்படுத்தவேண்டும்.

# * பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷததசாலை,

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

33. **சித்த மகாத்துவஜம்:** இது மகாத்துவஜத்தை விட சிறந்த ஔஷதம். இதனால் தீராத வியாதி ஒன்றுமில்லை. சர்வ சுரங்கள், காசம். இருமல், க்ஷயம், அக்கினி மாந்தம், காலரா, சீதபேதி, ரத்தபேதி, சகல வாயுவு, இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம்மருந்து உபயோகித்தவருக்கு. ஆயுசு 100 வருஷமானாலும் பூர்ண பலம் குறையாம லிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. எழு வேளைக்குள்ள மருந்து ரூபா 3, வி. பி. சிலவு பிரத்தியேகம்.

34. **வாயு சம்ஹாரி:**—கை, கால், சனுக்களின் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால் முடக்கு தேகத்தில் உளைச்சல், குற்றல், குடைதல், தலைநோய் பக்க சூலை. பார்சு வாயுவு, திமிர்வாயுவு, அஜீரணம், குன்மம், அண்ட வாயுவு, சூலைவாதம், மலஜலக்கட்டு முதலிய அநேகவித வாயுவு ரோகங்களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபாய் 1, வி பி. சிலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

35. **காலரா என்னும் வாந்தி பேதிக்கு மருந்து:**—இக் கொடிய நோய்க்கு, இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா ஒன்று, வி. பி. சிலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

36. **மலபந்த நிவாரணி:**—மல ஜலக்கட்டு, அக்கினி மாந்தம், வாயுவு, குடல் புரட்டல், மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செரியாமை, புளித்த யேப்பம், தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10 வி. பி சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

37. **சந்திராமிருத ரசம்:**— அசாத்தியமான காசம், இருமல், க்ஷயம், முதலிய நுறையீரலைப்பற்றிய வியாதிகளை குணப்படுத்தும். நல்ல பசியும், தேகபலமும் உண்டாக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி சிலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. **சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து:**—எத்தனைநாள் பட்டதானாலும் இம்மருந்தினால் வயிற்று கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி கிராணி, வயிறு கடுப்பு, முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்,

39. **விஷ்ணுதிலா:**—எப்பேர்க் கொத்த தலைவலிக்கும் நெற்றியின் இரண்டுபொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சம் தடவி நன்றாகத் தேய்க்கவேண்டும். இடுப்பு நோய், கழுத்துநோய், பக்கசூலை, கைகால்பிடிப்பு, முதலியவும் இன்னும் தேகத்தில் காணும் மற்றுமுள்ள சகல வலிகளுக்கும் இம்மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ள இடத்தில் நன்றாக தேய்க்க சுகமாகும். தேள், நட்டுவாக்களி பூரான், இதுகள் கொட்டின அல்லது கடித்தவிடத்தில் இம்மருந்தைத் தடவிநன்றாய்தேய்த்தால்சௌக்கியமாகும். சீசா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

40. **நாக்குப்பூச்சி மருந்து:**—குடலிலுள்ள எல்லாவித கிருமிகளையும் வெளியாக்கி நாக்குப் பூச்சிகளால் உண்டாகும் எல்லாவித பாதைகளையும் நிவாரணம் செய்யும். தேக ஆரோக்கியத்தை தரும். நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால், அடிவயற்றில் கனம், பசியின்மை, அபரிமிதமான பசியைப்போல் தோற்றல், சாப்பிட்டபின் வயிற்றுநோவு, வயிற்று போக்கு, வாய் நாற்றம், வாந்தி, வெகுட்டல், சுரம், தலைவலி, மூக்கிலும், ஆசனத்திலும் அரிப்பு, வாயில் உமிழ்நீர் ஊறல், நாக்கு இழுத்துக்கொள்ளல், சிலசமயம் மலச்சிக்கல், சிலசமயம் மலக்கழிச்சல், முதலிய பற்பல நோய்கள் நாக்குப்பூச்சிகளால் உண்டாவதை இம்மருந்து முற்றிலும் குணமாக்கும். விலை—சீசா 1-க்கு அணா 10. 1-முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

* என்னுடைய ஔஷததசாலையின் ஹெட் ஆபீஸை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீஸாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.



## இதற்குச் சமானம் வேறு கிடையாது!
## விலையிலோ எதற்கும் நிகரற்றது!!
## வேலைத்திறமாயும், நீடித்துழைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை!!!

# NEW & SURPRISING DISCOVERIES
FOR
# MOST UP-TO DATE & FASHIONABLE INDIVIDUALS.

இதிலேயே சாவியிருக்கிறது. புதியமாதிரியான்து விசித்திர அலங்காரமுடையதாயும், சாதாரண கெட்டி மூடியுடையதாயுமிருக்கிறது ஜுவல்களும், முகப்பில்கெட்டியாயும், வெண்மையுமுள்ள முகப்புமுடையது. கெட்டியான ஹேர் ஸ்பிரிங்கும், லெவர் சரியான நிலைமையிலும், கெட்டியான க்ரிஸ்டல் கண்ணாடியுமுடையது இது பார்க்க அழகாயும் நேர்த்தியாயுமிருக்கும், இதைப்பார்த்தவுடன் இதைவாங்க வேண்டுமென்று தோன்றும், மற்ற கெடியாரங்களைவிட இதன் விலை குறைந்ததென்றும் தெரியும். லேடிகளுக்கும், பிரபுக்களுக்கும் தகுந்த மாதிரி யிருக்கிறது.



"LOVELY"

"காரண்டி சர்டிபிகேட்" இக்கெடியாரம் வாங்குபவர்கட்கு கொடுக்கப்படும். விலை:

| | | |
|---|---|---|
| கோல்ட்பில்ட் வாட்ச் | ... | ... ரூபா 13 |
| ஸ்டர்லிங் சில்வர் வாட்ச் | ... | ... ரூபா 9 |

இவை இரண்டுக்கு 3 வருஷங்களுக்கு உத்திரவாதம் கொடுக்கப்படும்.

வொயிட் மெடல் வாட்ச் ... ... ... ரூபா. 5

ஒருவருஷம் உத்திரவாதம் கொடுக்கப்படும்.

பளபளப்பான கற்களமைந்த இந்த மோதிரங்கள் சுத்தமானவும், நேர்த்தியுமான ப்ரஷியன் உலோகத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளை நாகரிகமான எவரும் அணியலாம். பிறந்தநாள். விவாகம் முதலிய சமயங்களிலும் இனாமாகக் கொடுக்கலாம்.



1 2 3 4

வேண்டுவோர் தங்கள் விரலின் அளவை எழுதி அனுப்பவேண்டும்.

1. "Lightnig" இதில் 5 கற்களிருக்கின்றன ... விலை ரூபா 3-8-0.
2. "Hoop" இதில் 3 கற்களிருக்கின்றன ... ... ஷை 3-0-0.
3. "Double anake" சர்ப்பத்தின் தலையிலும் கண்களிலும் கற்களிருக்கின்றன ... ... ... ஷை 2-8-0.
4. "Lucky Star" ஒரு பளபளப்பான கல் இருக்கிறது ஷை 2-0-0.

☞ தயவுசெய்து இதைக்கவனியுங்கள்! மாதர்களுக்கும், கனவான்களுக்கும் யாவராலும் மதிக்கப்பட்ட அதிக அழகான வெகுமதிகள்!!

விநோதமானவும், புதியதானதும், விலைமதிக்கக்கூடிய வெகுமதிகள் கிருஸ்த்மஸ் பண்டிகை, வரைக்கும், புதிய வருஷம் வருமளவும் கொடுக்கப்படும்!!!

மேற்கூறிய சாமான்களில் ஒரு டசன் வாங்குபவர்கள் ஒரு கோல்ட் பில்ட் வாட்சும், ரோல்ட் கோல்ட் செயினும், அரைடசன் வாங்குபவர்கள் ஸ்டர்லிங் சில்வர் வாட்சும், கோல்ட்கேஸ்ட் ப்ரஷியன் மெடல்செயினும், கால் டசன் வாங்குபவர்கள் ஒரு மோதிரமும் பெறுவார்கள்.

N. B. மொத்தமாய் வாங்கும் வியாபாரிகள் அப்ளிகேஷன் செய்துகொண்டால் கமிஷன் கொடுக்கப்படும்.

☞ JN. HOWELL & Co.,
*7, Mangoe Lane, Calcutta.*

☞ இங்கிலீஷில் கடிதங்களை எழுதி அனுப்பவேண்டும். நமது பத்திரிகையில் இவ்விளம்பரத்தைக் கண்டதாக இங்கிலீஷில் எழுதினால் உபகாரமாயிருக்கும்.

# ஹார்மோனியம்

வாசிக்கும்போது சிறந்ததை விலைக்கு வாங்க நிச்சயம் செய்துகொள்ளுங்கள்.



உயர்ந்த பிலஸ்டினா ஹார்மோனியம்.
ஒரு இசைக்குழாயுள்ளது விலை ரூபா 25, 35, 40 இரட்டை இசைக்குழாயுள்ளது விலை ரூபா 40, 50, 65.
இதற்குமேல் விலையுமுள்ளது.
லோக கீர்த்திபெற்ற
மெலோடினா ஹார்மோனியம்.
ஒரு இசைக்குழாயுள்ளது விலை ரூபா 18, 20, 22, 25 இரட்டை இசைக்குழாயுள்ளது விலை ரூபா 28, 30, 35, 40.
இதற்குமேல் விலையுமுள்ளது. ஆரம்பம் செய்கிறவர்களுக்கு விலை ரூபா 10, 12, 15,

ஆர்டர் செய்கிறவர்கள் விலையின் நாலி லொருபாகம் முன்பாக அனுப்பவேண்டும்.
வேண்டுவோருக்கு கேட்டலாக் இனாமாக அனுப்பப்படும்.

**JN. DE & Co.**, 10 & 11, *Oakhill Mystery Lane, Calcutta.*
*Telegrams*: "PHELASTINA, CALCUTTA."
Also Stocked by—**The Elphinstone Co.**, *Broadway, Madras,*
*and all respectable dealers throughout India, Burma and Ceylon.*

# GURURAJA COMPANY.
**Triplicane, Madras.**

## டயமண்டு சோப் கம்பெனி, பம்பாய்.

வீடுகளில் சாயம்போடும் உடைகளுக்கு விலை சாசமாயுள்ள டயமண்டு தயாரான சாயச்சோப்புகளாகிய ரோஸ், காஷாயம், பச்சை, நீலம், ஊதா, மஞ்சள், சிகப்பு, கறுப்பு, காகி.
**48** பில்லைகள் ஒரு காகிதபெட்டியில் அடங்கியது.
சாயத்திற்கு உத்தரவாதம்.
ஒரு டஜன் பில்லை விலை அணா **12**. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.
ஏஜன்விகளுக்கும் மற்ற வேண்டியவைகளுக்கும் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

## குருராஜா அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.


### சமாசாரத்திரட்டு.

காங்கிரஸ் மஹா சபை:—1912ம் வருஷத்திய காங்கிரஸ் மஹாசபை ஆனரெபில் ராவ்பகதூர் R. N. மதோல்கர் அக்கிராசனத்தின் கீழ் பேகார் மாகாணத்திலுள்ள பாங்கிப்பூரில் நாளது டிசம்பர் மாதம் 26, 27, 28ந் தேதிகளில் நடைபெற்றது.

---


# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol. XV. | Madras: February 1913. | No. 2. |
| புத்தகம் - கரு. | சென்னப்பட்டணம்: பிப்ரவரிமீ 1913. | இலக்கம்—2. |


## சமூக சீர்திருத்தமும் அதில் ஸ்திரீகள் கடமையும்.

தற்காலத்தில் இந்தியாவில் பல விதங்களிலும் சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டுமென்றும், இந்தியாவின் நிலைமை உயர்த்தப்பட வேண்டுமென்றும் இந்தியாவிலுள்ள சகல இந்தியர்களும் சுகத்தையும் சௌக்கியத்தையும் அடைந்து ஆங்கிலேயர்கள் ஜப்பானியர் முதலிய ஜாதியர்களைப்போல் உன்னதபதவியை அடையவேண்டு மென்றும் அதின்பொருட்டு ஒத்துமையும் ஐக்கிய உழைப்பும் இந்தியர்களில் ஏற்பட வேண்டுமென்றும் சகலரும் நம்பி அதின்பொருட்டு நம்மில் தேவையான சீர்திருத்தங்கள் பல விஷயங்களிலும் செய்ய அநேகர் சுயநயம் பாராட்டாமல் தம்மா லியன்றமட்டில் உழைத்தும் வருகிறார்கள். இப்படி உழைக்கும் பெரியவர்களைப் பார்த்தும் தாமே இந்தியாவில் நிலைமை திருப்திகரமா யில்லையென்று பல காரணங்களாலும் அறிந்து அதின்பொருட்டு தாமும் உழைக்க குதூகலம் கொண்டிருக்கும் இளைஞர்கள் செய்ய உத்தேசிக்கும் காரியங்களை "செய்வனதிருந்தச்செய்" என்றபடி சரிவர பலனடையும்படி செய்வதற்காக அநுபோகமுள்ள பெரியோர்கள் சொல்லியிருக்கும் சில புத்திமதிகளை எல்லோரும் கவனிப்பது நலமாயிருக்கும். நம்மா லியன்றமட்டும் ஜனசமூக சீர்திருத்தம் (Social Reform) கொஞ்சமாய் செய்யப்படவேண்டும். தவிர செய்யும் சீர்திருத்தம் சரியான பலனோடு கூடியிருக்க வேண்டுமானால் நாம் மேற்கொள்ளும் விஷயத்தை சிறியதாகவே எடுத்துக்கொண்டு அதைப்பற்றி பூர்த்தியாய் ஆராய்ந்து அறிந்துகொண்டு பிறகு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கவேண்டும்.

முதலில் நம்மை சுற்றிலும் இருப்பவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்கள் இன்னவைகள் என்று நன்றாய்தெரிந்து கொள்ளவேண்டும். அதற்காக நாம் கற்றறியும் விஷயங்களையெல்லாம் காரியத்தில் செய்துகாட்டுகிற உத்தேசத்துடனேயே கற்கவேண்டும். தேசாபிமானியாகிய ஒருவன் ஜன நன்மையை கோரும் பட்சத்தில் அவன் சாதாரண ஜனங்களுடைய தினசரி வாழ்வை ஆராயவேண்டும். அதாவது அவனைச் சுற்றிலுமுள்ள ஜனங்களைப்பற்றியும், அவர்கள் இருப்பிடங்களைப்பற்றியும், அவர்கள் தொழில், நடை, உடை, பாவனைகளைப்பற்றியும் அவர்கள் சுகாசுகங்களைப்பற்றியும் தெரிந்து கொள்ளவேண்

டும். பிறகு அவர்களுடைய கஷ்டங்களின் காரணங்களையும், அவைகளை நிவர்த்திசெய்யும்பொருட்டு மற்று முள்ளோர் சொல்லும் வழிகளையும், அந்த வழிகளை எம்மட்டில் சரியாய் பிரயோகிக்கலா மென்பதையும், ஏன் அவ்வழிகள் இதுவரையில் அனுசரிக்கப்படவில்லையென்றும், அனுசரிக்கப்பட்டிருந்தால் அதனால் உண்டாயிருக்கும் நன்மைகளையும் தீமைகளையும் நன்றாய் தெரிந்துகொள்ளவேண்டும்.

இத்துடன்கூட ஜனங்களின் மனோபாவத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அவர்களிடத்தில் குடிகொண்டிருக்கும் சில நீடித்த வழக்கங்களும் அவைகளைப் பற்றிய அவர்களுடைய மனோபாவமுமே சில சமயங்களில் சமூக சீர்திருத்தத்திற்கு இடையூறாக விருக்கலாம். இவ்விதமான வேறு இடையூறுகளையும் கவனிக்கவேண்டும். இப்படி கவனிப்பதால் நிவர்த்திசெய்யக்கூடிய இடையூறுகளை தக்க சமயத்தில் தக்க பரிஹாரத்தினால் நிவர்த்திக்கலாம்.

இப்படி ஒருவாறு சீர்திருத்தம் செய்யவேண்டிய விஷயத்தைப்பற்றி தெரிந்து கொண்டமேல், திடீரென்று அவசரப்பட்டு காரியத்தை செய்ய ஆரம்பிக்காமல் தக்க சமயம்பார்த்து ஜாக்கிரதையாய் தக்கவழியில் சீர்திருத்தங்களைச்செய்ய ஆரம்பித்து ஊக்கமுடன் உழைக்கவேண்டும். எவனும் தனிமையாக ஒரு காரியத்தைச் செய்வதென்பது அசாத்தியம். ஆனால் இம்மாதிரி விஷயத்தைப்பற்றி கற்றறிந்த ஒரு தேசாபிமானியுடன் அவனுடைய பரோபகாரியத்தில் அநேகர் சேர்ந்து ஒத்தாசை செய்து தாங்களும் பிரயோஜனத்தை அடைய தயாரா யிருப்பார்கள். சமூக சீர்திருத்தமானது ஜனங்களுடைய பிழைப்பு, வாழ்வு, தொழில், தேகஸ்திதி, மதாசாரம், ராஜபக்தி முதலிய எவ்விஷயத்திலும் செய்யப்படலாம். இம்மாதிரியான பல விஷயங்களையும் ஒருவனே ஏற்றுக்கொள்ளாமல் ஒவ்வொரு விஷயத்தில் சிற்சில ஜனங்கள் சேர்ந்து பொது நன்மையைக் கோறி உழைத்தால் கட்டாயம் தேசத்தின் ஸ்திதி எவ்விதத்திலும் உயர்த்தப்படும்.

சீர்திருத்தம் நல்ல வழியில் செய்தால் எல்லோருக்கும் சம்மதமாய்தானிருக்கும். ஆனால் முற்றிலும் நல்ல வழி இதுதானென்றும் அதில் சமயோசிதமாய்செல்ல வேண்டியவரையளவு இவ்வளவுதானென்றும் தீர்மானித்துசொல்லுவதென்பது எவராலும் முடியாது. ஏனெனில் ஒருவருக்கு நல்லதென்று தோன்றும் வழி மற்றொருவருக்கு அம்மாதிரியாக தோன்றாமலிருக்கலாம். ஆனால் பொதுவாய் நல்லதென்று பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப்பட்டு அவ்வழியில் சிற்சிலவிடத்தில் சீர்திருத்தப்பட்டும் வருகிற வழக்கங்களை முதலில் எல்லோரும் சரிவர பூர்த்தியாய் நல்ல வழியில் சீர்திருத்தம் செய்து அனுபவிக்க முயலவேண்டும்.

இப்பொழுது இந்துக்களாகிய நம்மைப்பற்றி கவனிப்போம். நம் புராதீன வழக்கங்களில் சிலவைகள் நாளடைவில் ஏற்பட்ட பற்பல காரணங்களால் மாறுபட்டிருக்கின்றன. தத்காலரீதியை அனுசரித்து அவைகள் முன்னிருந்த மாதிரியேயாவது அல்லது இக்காலத்தில் நமக்கு நன்மையை உண்டுபண்ணக்கூடியவழியிலாவது அவைகள் சீர்திருத்தம் அடையவேண்டியவைகளாயிருக்கின்றன. உடன் கட்டையேறுதல், நரபலி கொடுத்தல், அடிமைக்கு விற்றல், முதலிய வழக்கங்கள் தத்காலத்தில் நினைக்கும்பொழுதே பயங்கரமாய்



தோன்றுகின்றன. இப்பேர்ப்பட்ட வழக்கங்கள் காலரீதியை அனுசரித்து மாறுபாட்டை அடைய ராஜாங்கத்தாரின் ஒத்தாசை முக்கியமாய் வேண்டியிருந்தது. வேறு சிலவழக்கங்கள் நம்மாலேயே இச்சமயம் சீர்திருத்தம் அடையவேண்டிய வைகளாயிருக்கின்றன. கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழலாமா? கோறிய பொருளாகிய நெய்யை அடைவது கொஞ்சம் சிரமத்தோடு கூடியதாயிருந்தால் அதற்காக சிரமபட்டுத்தான் தீரவேண்டும். வேறான்றிய ஒரு பெரும் மரத்தை ஒருவனே இலகுவாய் பிளப்பதென்பது வெகு கடினமான காரியமாயிருந்தாலும் ஆளுக்கு ஒரு விரகாய் ஒவ்வொருவரும் வெட்டிக்கொண்டு போனால் சீக்கிரத்தில் மரம் இருந்த இடம் கூட தெரியாமல் போய்விடுமல்லவா? ஒவ்வொருவரும் தம்தம் கடமையென்று நினைத்து தேசாபிவிர்த்தியைப்பற்றி உழைக்க வேண்டுமென்பது அவசியமே.

சாதாரணமாய் ஜனங்களில் உத்தமர், மத்யமர் அதமர் என்ற மூன்று வகுப்பினரைக் காண்கிறோம். ஏதாவது சத்விஷயம் போதிக்கப்படுங்கால் அதைக்கேட்டு தத்சமயம் குதூகாலம் கொண்டு அக்காரியத்தை கட்டாயம் செய்வதென்று தீர்மானம் செய்துகொண்டு பிறகு அப்படிச்செய்தால் உண்டாகும் இடை யூறுகளினின்றும் பயந்துகொண்டு காரியத்தை ஆரம்பிக்காமல் கூட விட்டுவிடுவோர்கள் அதமர். காரியத்தை ஆரம்பித்து இடையூறுகளால் தடுக்கப்பட்டதும் விட்டுவிடுவோர் மத்யமர். இடையூறுகளால் தடுக்கப்பட்டபோதிலும் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார், என்றபடி ஊக்கமுடன் காரியத்தைச் செய்து பலனை அடைவோர்கள்தான் உததமர். பரோபகார சிந்தையுள்ள ஒவ்வொருவனும் உத்தமனாக முயலவேண்டும்.

அதேமாதிரி தேசகால நிலைமையை நன்றாய் ஆராய்ந்தறிந்து தேசத்தின் நன்மையின் பொருட்டும் அபிவிர்த்தியின் பொருட்டும் சில நல்லமார்க்கங்களை போதிப்போர் ஒருவகுப்பினர்.

தம்மாலியன்றமட்டில் பிதற்றாமல் செய்யலாமே என்று சொல்லிக்கொண்டு அம்மாதிரி செய்தும் வருகின்றவர் மற்றொரு வகுப்பினர். தாமும் ஒன்றும் செய்யாமல், செய்யச் சொல்பவர்களையும், செய்கின்றவர்களையும், நிந்திப்பதிலும், ஏளனம் செய்வதிலும் அவாவுடையவர்கள் இன்னுமொரு வகுப்பினர். இவ்வகுப்பினர் சொல்வதென்னவென்றால்: 'ஆமாம் ஐயா பூனையைப் பிடித்து கழுத்தில் மணியைக் கட்டிவிட்டால் பூனைவரும் சமயம் சூசிக்கப்படும். அப்பொழுது நாம் மறைந்துகொள்ளலாமென்று எலிகள் தங்களுக்குள் தீர்மானம் செய்துகொண்டால், பூனைக்கு மணிகட்டுவது எந்த எலி' என்பதுதான். பூனையைப் பிடித்து ஒரு எலி மாத்திரம் மணிகட்டுவது அசாத்தியமானாலும் எலிகளெல்லாம் ஒன்று சேர்ந்துவிட்டால் பூனையின் கதி அதோகதிதான். ஆனால் அச்சண்டையில் சில எலிகள் உயிரையிழக்கவேண்டியிருந்தபோதிலும் பொது நன்மையை உத்தேசித்து எலிகள் அம்மாதிரிசெய்யத்தான்வேண்டும் என்று பதில் சொன்னால் உடனே "நீர்தான் இம்மாதிரி பேசுவதைவிட காரியத்தை செய்து காட்டுமே" என்கிறார்கள். அப்படி ஏதாவது ஒருவன் துணிந்து செய்தால் சரி சமுத்திரத்தில் பெருங்காயம் கரைக்கிறார் போலும் என்கிறார்கள்.

பிரசங்கம் செய்பவர்களும், பத்திரிகைகளுக்கு எழுதுகிறவர்களும் இப்பொழுது இந்தியாவுக்கு தேவையில்லை. காரியம் செய்து காட்டக்கூடிய

வர்களை தேவை என்று உத்தண்டமாய் சொல்லுவது முற்றிலும் சரியல்ல. எப்படி யுத்தத்தின் ஆரம்பமுதல் ஜெயபேரிகை முழங்கப்பட்டணப் பிரவேசம் செய்யும் வரை துருப்புகளின் வீர்யத்தையும் குதூகலத்தையும் குன்றாமல் அதகரிக்கச்செய்ய யுத்தபேரிகையின் கோஷம் தேவையோ அம்மாதிரியே தூண்டுகோல் போல் நம்மில் அடங்கியிருக்கும் தீயாகிய தேசாபிமானத்தைக் கிளப்ப சங்கங்களிலும் சபைகளிலும் பிரசங்கங்களும், பத்திரிகைகளில் வியாசங்களும் எக்காலத்திலும் தேவையே.

தற்காலத்தில் இந்து மதாசாரங்களிலும், இந்திய நடவடிக்கைகளிலும் சீர்திருத்தங்கள் தேவையென்று பெரும் பான்மையோர் ஒத்துக்கொள்ளுகிறார்கள். மேல் நாட்டுவழக்கங்களும் கீழ்நாட்டுவழக்கங்களும் ஒத்துநடக்கும் வழியைத் தேடுகிறார்கள். புத்தியும் அறிவும் நாளுக்குநாள் மாறுபட்டும் வேறுபட்டும் வரவர அதற்கு தக்கபடி நம் கட்டுப்பாடுக்களையும் கோட்பாடுகளையும் மாற்றிக்கொண்டுதான் வரவேண்டியிருக்கிறது. எவ்வழக்கமும் பண்டைய காலத்தென்பதினாலே சிரேஷ்டமானதாயும் நூதனமானதென்பதினாலேயே நிகிருஷ்ட மானதாயும் சொல்லக்கூடாது. புத்திமான்கள் அவைகளை பரீட்சித்து நல்லதை கிரஹித்து கெட்டதை விடுப்பார்கள். மூடன்தான் மூக்கணாங் கயற்றால் இழுக்கப்படும் மாடுபோல் மற்றவர்கள் சொல்லும்படியே சொல்லுவான். எவனுக்கு ஸ்வயஞானம் கிடையாதோ அவனுக்கு சாஸ்திரம்தான் என்ன பிரயோஜனத்தை செய்யும்? கண்ணில்லாதவனுக்கு கண்ணாடியால் என்ன பலன்?

சீர்திருத்தம் செய்வதென்றால் எந்த விதத்தில் செய்கிறது. சாஸ்திர சம்பந்தமாயா அல்லது சமயோசிதமாயா? நம் சாஸ்திரங்களோ மிகவும் சிரேஷ்ட மானவை. எவ்வளவோ சிரமப்பட்டு ஞானக்கரையை கண்டு பிரம்மத்தோடு ஐக்கியத்தையும் அடைந்திருக்கிற மகான்கள் எழுதிய நம் சாஸ்திரங்கள் பொய்யென்றும், பிசகென்றும் அசம்பாவிதமென்றும், அக்காலத்துக்கு சரியா யிருக்கலாம் இக்காலத்திற்கு ஒத்து வராது எனறும் திடீரென்று ஆராய்ந்து அறியாமல் சொல்லத்துணிவது பிசகு. சாஸ்திரங்களை பூராய் ஆராய்ந்து அனுசரித்தால் தக்காலரீதிக்கு ஒத்துதான் வரும். இக்காலத்தில் நம் சாஸ்திரங்களை சரிவர ஆராய்ந்து சாராம்ஸத்தை சொல்லுவோர்கள் ஆயிரத்தில் ஒருவர் கிடைப்பது அரிதாயிருக்கிறது. ஏதோ படித்து தெரிந்து சொல்லுகிறேனென்று வெளிவருபவன் நிர்வாண தேசத்தில் கௌபேனம் கட்டிய பயித்தியக்காரன்போல் காணப்படுகிறான். ராமர் வாலியைக் கொன்றது தப்பென்று முதலில் மேல் பார்வையாய் பார்ப்போருக்கு தெரிகிறது. ஆனால் உட்பொருள் ஆராய்ந்து அறிந்தவன் அதற்கு காரணம் சொல்லி சரியென்று ஸ்தாபிக்கிறான்.

ருதுவான பெண்களை விவாஹம் செய்வது, சப்பலேரி அன்னிய தேசம் போவது இம்மாதிரி சில காரியங்கள் இக்காலத்தில் இந்தியாவின் அபிவிர்த்தியின்பொருட்டு தேவையா யிருந்தாலும், அவைகள் சாஸ்திரத்திற்கு விரோதமானவைகள் என்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் அதற்கு சாஸ்திர முறையிருக்கிறதென்று எடுத்துக் காட்டி புஸ்தகங்களும் எழுதியிருக்கிறார்கள். சாஸ்திரம் சுவற்றின்மேலிருக்கும் பூனையென்றும், அது எப்பக்கம் வேண்டுமானாலும் குதிக்குமென்றும் சொல்லுவோர்களும் சிலர். அப்படி சொல்லுவது சரியன்று. அந்தப் பூனையை நன்றாய் அறிந்தவர்களுக்கு அது குதிக்கும்பக்கம் தெரியுமாகையால் சாஸ்திரத்தை நன்றாய் அறிந்தவர்கள் இக்காலத்துக்கு வேண்டிய எவ்வித அனுசரணைக்கும் வழிகாட்டக்கூடும். முன்னோர்களை முட்டாள்களென்றும் தாம்தான் புத்திமான்கள் என்று ஜனங்கள் இப்பொழுது அபிப்பிராயம் கொண்டால் அப்படித்தானே நமக்கு பின் வருவோர்களும் நம்மை நினைப்பார்கள். நம்முன்னோர்கள் பெரியவர்களேயானாலும், அவர்கள் செயல்களெல்லாம் தெய்வச் செயலில்லாமல் மனுஷ்யச் செயல்களாகையால் அவைகளில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தாலும் இருக்கலாம். அல்லது நாளடைவில் பலவித காரணங்களால் மாறுபட்டு இப்பொழுது அநாகரீக வழக்கங்களாய் தோன்றலாம். அவைகளை நன்றாய் தெரிந்து சமயோசிதமாய் சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டியது நம் கடமையே.



## வஸ்துக்கள் நிலைமாறுதல்.

ஒரு வஸ்துவை உஷ்ணப்படுத்திக்கொண்டேபோனால் அதன் டெம்பரேசர் முறையே உயர்ந்து கொண்டுபோய் கடைசியில் கனபதார்த்தமா யிருந்தால் திரவ பதார்த்தமாக உருகியும், திரவ பதார்த்தமானால் வாயு பதார்த்தமாக ஆவியாகவும், போகின்றன. இதை ஒவ்வொரு நாளும் நாம் பார்க்கிறோம். தோய்ந்துபோன நெய், அடுப்பில் வைத்தால், உருகிப்போகின்றது. மெழுகு வர்த்தி எரியும்போது மெழுகு உஷ்ணத்தால் உருகி ஓடுகின்றது. அரக்கை விளக்கின் மூக்கில் காய்ச்சினால் உருகிச் சொட்டுகின்றது. ஈயத்தை இரும்புக் கரண்டியில்போட்டு அடுப்பில்வைத்தால் சிறிது நேரத்தில் ஜலம்போல் ஓடவாரம்பிக்கின்றது. காப்பி காய்ச்சப்போட்டு இருக்கும் கெட்டிலின் ஜலம் காய்ந்தபிறகு கொதித்து ஆவியாய் வெளிப்படுகின்றது. யூகலிப்டிஸ் எண்ணெய், கர்ப்பூரதிராவகம், சாம்பிராணித் திராவகம் இவைகளும் அப்படியே.

இவ்விஷயங்களில் என்ன அதிசயங்க ளிருக்கின்றன. தினம் பார்க்கும் விஷயங்கள்தானே! இவற்றைப்பற்றிப் பேசவும் வேண்டுமோ? என்று நீங்கள் கேட்கலாம். பொறுத்துப் பரிக்ஷைசெய்தால் மிக அற்பமான விஷயத்திலும் கூட நாம் அறியவேண்டிய சங்கதிகள் பலவுள. உதாரணமாக நெய்க்கல் சட்டியை அடுப்பில்வைத்து அதனுள் இருக்கும் நெய்யை ஒரு தெர்மாமீடரினால் கிளறுவோம். முறையே உஷ்ணம் ஏறக்காணலாம் நெய் உருக ஆரம்பிக்கின்றது. தெர்மாமீடர் என்ன டெம்பரேசர் காட்டுகின்றது. சுமார் 95 டிகிரீ என்று தெரிவிக்கின்றது. இப்பொழுது மிக கவனமாய்ப் பார்க்கவேண்டும். முன்போல் படிப்படியாய் டெம்பரேசர் ஏறுகிறதா? இல்லை. நெருப்பில்லையா? இருக்கின்றது; பின்னை ஏன் நெய்யின் டெம்பரேசர் ஏறவில்லை; சற்று பொறுப்போம். இன்னும் 95-ம் டிகிரி பக்கத்திலேயேதான் ரசம் நிற்கின்றது. கிட்டத்தட்ட எல்லா நெய்யும் உருகியாய்விட்டது; கொஞ்சந்தான் பாக்கி இருக்கின்றது. இப்பொழுது தெர்மாமீடர் சரசரவென்று மேலேபோகின்றது. நெய் உருகும்போது ஏன் தெர்மாமீடர் அவ்வளவு வேகமாய் ஏறவில்லை.

இன்னுமொரு பரிக்ஷை செய்வோம். ஒரு கண்ணாடிக்குழாயில் மெழுகு வர்த்தியின் தூளை நிரப்புவோம். சுமார் $\frac{1}{2}$ வரிசை நிரம்பினதும் அதன் நடுவில் தெர்மாமீடரைச் செருகுவோம். வேறு ஒரு பாத்திரத்தில் ஜலம் வைத்து

கரியடுப்பில் காய்ச்சுவோம். ஜலம் காயும்போது கண்ணாடிக்குழாயை தெர்மாமீடருடன் ஜலத்தில் அமிழ்த்தவேண்டும். மெழுகுவர்த்திச் சீவல் முழுவதும் ஜலமட்டத்துக்குக் கீழ் இருக்கவேண்டும். ஜலம் காயக்காய ஜலத்தின் உஷ்ணம் கண்ணாடி வழியாய் மெழுக்கு ஏறவே மெழுகின் டெம்பரேசர் படிப்படியாய் உயரும். சுமார் 120 டிகிரி ஏறினதும் டெம்பரேசர் அதற்கு மேல் ஏறாமல் நின்று விடுகின்றது. அப்பொழுதே மெழுகும் உருக ஆரம்பிக்கும். மெழுகெல்லாம் கிட்டத்தட்ட உருகி ஆகும் வரையில் டெம்பரேசர் மேலே ஏறும். ஆகையால் மெழுகும் ஒரு குறிப்பிட்ட டெம்பரேசர் உண்டானபொழுதுதான் உருகுமென்பது விளங்கவில்லையா? மேலும் எல்லா மெழுகும் உருகின்றவரையில் டெம்பரேசர் ஏறுவது இல்லை யென்பதும் தெளிவாகின்றது. அப்படியேதான் கொழுப்பு, ஈயம், முதலானவைகளும். இப்பரிக்ஷையை முன்னேயே நீங்கள் ஒருவிதமாய்ப் பார்த்து இருக்கிறீர்கள். எங்கே என்று ஞாபகம் வருகின்றதா? முன் தெர்மாமீடரை, பொடியாக்கின பனிக்கட்டியால் வைத்தபோது கூட, பனிக்கட்டியெல்லாம் உருகும் வரையில் ஒரேநிலையில் தெர்மாமீடரில் உள்ள பாதரசம் நிற்கக் கண்டோம் அல்லவா? பனிக்கட்டியும் உருகி ஜலமாகும்போது நிலையான ஒரு டெம்பரேசர் ஏற்படுகின்றது. ஆகவே எல்லா கனப் பொருள்களும் (உருகக்கூடுமானால்) திட்டமாய் ஒவ்வொரு நிலையான டெம்பரேசர் வந்த பிறகுதான் உருகும்; உருக ஆரம்பமானதும் வஸ்து முழுதும் உருகும்வரையில் டெம்பரேசர் அந்நிலையிலேயே நிற்கும். இந்த டெம்பரேசரை அவ்வப்பொருளின் 'உருகும்நிலை' என்பர் சாஸ்திர ஆராய்ச்சியில் வல்லவர்கள். ஆங்கிலேய பாஷையில் அந்த டெம்பரேசருக்கு 'Melting point' என்று பெயர். உருகின வஸ்து குளிர்ந்தால் மறுபடி அவ்வஸ்து கனப் பொருளாய் மாறுகின்றது. உருகின நெய், மெழுகு, நாப்தலீன், இவற்றில் தெர்மாமீடரை வைத்து ஜலபார்த்தம் குளிரும்போது ஜாக்கிரதையாய்ப் பரிக்ஷை செய்தால், அவை உறையும்போது தெர்மாமீடர் முன்போலவே (உருகும் சமயம்போலவே) நிலையான டெம்பரேசரில் நிற்கக்காணலாம்.

உருகும் டெம்பரேசர் ஒவ்வொரு வஸ்துவுக்கும் வேறுபடுகின்றது. ஆனால் ஒரே வஸ்துக்கு நிலையாய் மாறுபாடு இல்லாமல் இருப்பதால் அதன் 'உருகு நிலையைக் கண்டுபிடித்து, அவ்வஸ்து சுத்தமானதா இல்லையா, என்பதைத் தீர்மானிக்கலாம் சுத்தவஸ்து அன்றிக் கலப்புப்பொருளாய் இருப்பின் அதில் கலந்துள்ள ஒவ்வொரு வஸ்துக்கும் ஒவ்வொரு உருகும் டெம்பரேசர் இருக்கும். ஆகையால் நிலையாய் அவ்வஸ்து ஒரே டெம்பரேசரில் உருகாது. இதைப்பார்த்து வஸ்துவின் சுத்தத்தை ஒருவாறு நிச்சயிக்கலாம். பலபரிக்ஷைகள் செய்து, சாஸ்திரபண்டிதர் தீர்மானம் செய்து இருக்கும் 'உருகுநிலை' பின்வருமாறு:—

| வஸ்து. | அதன் உருகுநிலை (Melting point). |
| --- | --- |
| பனிக்கட்டி ... ... ... ... | 32° |
| வெண்ணெய் ... ... ... ... | 95° |
| மெழுகு ... ... ... ... | 120° |
| சோடாவுப்பு ... ... ... ... | 96° |
| நாப்தலீன் (பூச்சி உருண்டை) ... ... ... | 176° |

உருகும் சமயத்தில் டெம்பரேசர் நிலையாய் நிற்கக்காரணம் என்ன? முன் ஒரு பாடத்தில் கொஹீஷன் என்னும் இயற்கைச் சக்தியைப்பற்றிப் பேசி இருக்கிறோம் அல்லவா? அப்பாடத்தைத் திரும்ப வாசியுங்கள். கனப் பொருளில் இச்சக்தி, திரவப்பொருள்களில் இருப்பதை விட அதிகம் என்று சொல்லவில்லையா? ஒரு கனப்பொருள் திரவப் பொருளாக மாறவேண்டுமானால் அதன் கொஹீஷன் மிகவும் குறைய வேண்டும்; அச்சக்தியைக் குறைத்து வஸ்துவின் அணுக்களை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க, இவ்விடத்தில் உஷ்ணமே உபயோகப்படுகின்றது. ஒரு கல்லால் (நமது பலத்தை உபயோகித்து) ஒரு சுண்ணாம்புக் கட்டியைப் பொடிசெய்தால் அதன் அணுக்கூட்டங்கள் கலைந்து, பிரிந்து போகின்றனவல்லவா? ஆகையால் கட்டியைப் பொடி செய்யும்போது நாம் நமது கைபலத்தை உபயோகித்து கொஹீஷனுக்கு எதிராய் வேலை செய்கிறோம்.



உருகின திரவபதார்த்தத்திலும் இதுவேபோல் கொஹீஷனுக்கு எதிராக வேலை நடக்கின்றது. அவ்வேலையைச் செய்வது உஷ்ணமே! உருக ஆரம்பிக்கு முன் உஷ்ணமெல்லாம் வஸ்துவின் டெம்பரேசரை ஏற்றவேண்டிய வேலையையே வெகுவாய்ச் செய்துகொண்டிருந்தது. உருகத் தொடங்கினதும் அவ்வஸ்துவைநிலைமாற்றி திரவமாக்குவதேவேலையாகமேற்கொண்டு அதுமுதல் வஸ்து முழுதும் உருகும்வரையில் உஷ்ணம் எல்லாம், டெம்பரேசரை ஏற்றுவதில் செலவாகிறதில்லை. தெர்மாமீடருக்கு டெம்பரேசர் அதிகமானால் காட்டக் கூடிய சக்தி உண்டே ஒழிய, டெம்பரேசர் நிலையாய் நின்றால் ரசமும் அசையாமல் நின்ற விடத்திலேயே நிலைபெற்று இருக்கும். இவ்வாறு செலவான உஷ்ணத்தை "உருக்கச் செலவான உஷ்ணம்" என்று சொல்லலாம். இதை ஆங்கிலேயர் Latent Heat of Fusion' என்பர். Latent என்றால் 'கண்ணுக்குப் புலப்படாத' என்று பொருள். "தெர்மாமீடரின் நுட்பமான கண்ணுக்கு இவ்வுஷ்ணம் புலப்படுகின்றதில்லை யாகையால், இந்த உஷ்ணத்தை நாமும் 'புலப்படா உஷ்ண' மெனவும், 'காணப்படா உஷ்ண'மெனவும், சொல்வதற்கு என்னதடை" என்கிறார் ஒரு தமிழாசிரியர். எப்படி வைத்துக்கொண்டாலும் சரியே. நான் மட்டும் சௌகரியமான இடமெல்லாம் (Latent Heat of Fusion) என்பதற்கு 'உருக்கச்செலவழிந்த உஷ்ணம்' என்றே பேசுவேன்.

உருகும் சமயத்தில் உள்ள பனிக்கட்டியில் தெர்மாமீடரை வைத்தால் அது 32-ம் படியில் நிற்கின்றதல்லவா? எல்லாப் பனிக்கட்டியும் உருகினதும் 32 - ம் படியிலேயேதான் நின்றுகொண் டிருக்கின்றது. அப்பொழுதுதான் உருகின ஜலமும், உருகிக்கொண்டிருக்கும் பனிக்கட்டியும் ஒரே டெம்பரேசரில் இருக்கின்றதென்றால், இவ்விரண்டிற்கும் என்ன வித்தியாசம்? ஜலம் திரவப்பொருள், பனிக்கட்டி கனப்பொருள். ஜலம் 32-ம் படியில் உள்ள பனிக்கட்டி கொஞ்சம் உஷ்ணத்தை எடுத்துக்கொண்டு அதே டெம்பரேசரில் நிற்கும் ஜலமாயிற்று. பனிக்கட்டியில் இருப்பதைவிட ஜலத்தில் உஷ்ணம் அதிகம்; அவ்வளவுதான்; டெம்பரேசரில் என்றும் வித்தியாசமில்லை. இது ஏதோ புதிர் போட்டதுபோல் தோன்றவில்லையா? 10 ரூபாய் எடை பனிக்கட்டி எடுத்துக்கொள்வோம்: அதன் டெம்பரேசர் 32° அது உருகின தக்ஷணம் அந்த ஜலத்தின் டெம்பரேசரும் 32° தான்; இன்னும் கொஞ்சம் பனிக்கட்டி எடுத்துக்கொண்டு அதில் அப்பொழுதுதான் உருகின ஜலத்தை ஊற்றினால் இரண்டும் ஒரே டெம்பரேசரில் இருப்பதுபற்றி பனிக்கட்டியிலிருந்து ஜலத்துக்காவது, ஜலத்திலிருந்து பனிக்கட்டிக்காவது, உஷ்ணம் போவதில்லை.

உருகின ஜலம் மறுபடி உறையும்போதுதான் உட்கொண்ட உஷ்ணத்தை வெளிவிடுமோவென்று கேட்கலாம். ஆக்ஷேபணையென்ன! உறையும்போது அவ்வஸ்து, திரவமானபோது உட்கொண்ட உஷ்ணத்தை மறுபடி கக்கிவிடுகின்றது. இத்தகைய விஷயங்களை முதலில் பூர்த்தியாய் ஆராய்ச்சி செய்தவர் (Dr. Black) டாக்டர் பிளாக் என்னும் தத்துவசாஸ்திரி? அவர் 18-ம் நூற்றாண்டின் கடைசியில் எடின்பரோ யூனிவர்சிடியில் தத்துவபோதகராய் இருந்தவர்.

ஆகவே ஒவ்வொரு கனப்பொருளும் உருகும் டெம்பரேசர் வந்தவுடன் தன் உருமாறி திரவத்தன்மையை அடைய ஏதோ ஒரு அளவு உஷ்ணத்தை உட்கொள்ளுமென்பது நிச்சயமாயிற்று. ஒரே அளவான பல பதார்த்தங்களையும் எடுத்துப் பரிசைசெய்து பார்த்தால் ஒவ்வொன்றும் கிரகித்துக் கொள்ளும் உஷ்ணம் வித்தியாசப்படும். எல்லாப் பொருள்களையும்விட பனிக்கட்டிதான் அதிக உஷ்ணத்தை எடுத்துக் கொள்ளுகின்றது; 1 ரூபாய் எடை பனிக்கட்டி $32\frac{1}{2}$ இருந்து அதே டெம்பரேசர் உள்ள ஜலமாக மாறும்போது அது உட்கொள்ளும் உஷ்ணத்தால் 80 ரூபாய் எடை ஜலத்தை 1 டிகிரி நூரம் காய்ச்சலாம். ஆகையால் உருகும் பனிக்கட்டிக்கு வேண்டிய உஷ்ணம் அபரிமிதமானது! இதன் விசேஷத்தைக் கவனித்தால் சர்வேசுவரனுடைய இயற்கை அற்புதம் நன்குவிளங்கும். பனிக்கட்டி கொஞ்சம் உஷ்ணத்தை கிரஹித்த உடனே நீராக மாறுமானால் ஹிமயகிரிபோன்ற மலைகளில் உள்ள பனிக்கட்டிகள் ஜனங்களுக்கு எவ்வளவு நாசத்தை விளைவிக்கும் என்று ஆலோசனை பண்ணுங்கள்? சூரியவெப்பம் பட்டவுடனே பனிக்கட்டிகள் உருகி ஆறுகளாய்ப் பெருகி இந்தியாவின்மேல் நாடெல்லாம் சமுத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்குமல்லவா? அவ்வித விபத்து வாராமல் தடுப்பதற்கு ஈசன் செய்துள்ள உபாயம் இதுவென்று விளங்கவில்லையா?

சிலவஸ்துக்கள் உருகினவுடன் தம்மளவில் அதிகமாகின்றன. அதுபற்றி அவற்றின் பொருள் நெருக்கம் குறைந்து விடுகின்றது. அவ்வித வஸ்துக்கள் மெழுகு, நாப்தலீன், நெய், தாமிரம் இவை போன்றவை. உருகின திரவப்பொருளில் உருகாத கனப்பொருளைப் போட்டால் கனப்பொருள் திரவப்பொருளில் மூழ்கிவிடும். சிலவஸ்துக்கள் உருகினபோது தம்மளவில் குறையும். அதுபற்றி அவை பொருள் நெருக்கம் அதிகமாகின்றன. இத்தகைய திரவப்பொருள்களில் கனப்பொருள்களைப் போட்டால் அவை மிதக்கும். உதாரணமாக தண்ணீரில் பனிக்கட்டி மிதக்கின்றது. உருகின இரும்புத்திரவத்தில் கட்டியான இரும்பு குண்டைப்போட்டால் மிதக்கும். சிலவஸ்துக்கள் சாதாரணமாய் நாம் கொடுக்கும் உஷ்ணத்தால் உருகுவதேயில்லை. வெங்கச் செங்கல் உருகுவது மிகக்கஷ்டம்: கரி உருகி அடுப்பில் ஓடுவதை யாராவது பார்த்ததுண்டா? உருகும் சமயம்வந்ததும் சிலவஸ்துக்கள் உடனே கனநிலைமையிலிருந்து திரவ நிலைமைக்கு வந்து விடும். சில வஸ்துக்கள் படிப்படியாய்க் குறைந்த களிமண் பிசைந்ததுபோல் நெகிழ்ந்து பின் உருகும். உதாரணமாக கண்ணாடி, அரக்கு, இரும்பு முதலியன. நெகிழும் நிலையிலிருக்கும் போது இரண்டுதுண்டுகளை யொன்றாய்ச் சேர்ந்து அழுத்தினால் இரண்டும் சேர்ந்து ஒரேதுண்டாய்விடும். இரண்டு இரும்புத்துண்டுகளைப் பழுக்கக்காய்ச்சி செம்மட்டியால் அடித்து ஒரேதுண்டாகச்செய்வதும் இம்மாதிரியே.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.



# ராஜாடைரி.

"விருந்திற்கு தங்கள் சிநேகிதர்கள் வாராமல் போனதிற்கு காரணம் நான்தான் என்று என் பெரியோர்கள் கண்டுகொண்டதும் என்னை உடனே கவனித்து சிட்சைசெய்ய உத்தேசியாமல் வந்தவர்களை உபசரணை செய்வதில் முயற்சி யுடையவர்களா யிருந்துவிட்டார்கள். இதுதான் சமயமென்று என் டைரியுடன் நான் சேர்த்து வைத்திருந்த கொஞ்சம் பணமுள்ள பையையும் எடுத்துக்கொண்டு வெளியேபோகுமுன் உக்கிராண அறைப்பக்கம் போனேன். தத்சமயம் அங்கொருவரும் இல்லாம லிருப்பதைக் கண்டு அங்கே செய்து வைத்திருக்கும் பட்சணங்களில் கொஞ்சம் எடுத்து என் கைகுட்டையில் கட்டிக்கொண்டு வெளியே ஒருவருக்கும் தெரியாமல் போய்விட்டேன். வழியெல்லாம் பட்சணம் தின்றுகொண்டே நேராக ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று, என் அத்தை ஊராகிய சித்திரபுரத்திற்கு சார்ஜ் எவ்வளவென்று அங்கிருக்கும் டிகெட் குமாஸ்தாவிடமிருந்து தெரிந்துகொண்டு டிகெட்பெற்று, ரயில் வந்ததும் அதிலேறி சித்திரபுரம் வந்தேன்."

சித்திரபும் ஊருக்கு வந்ததும் நேரே வீட்டுக்குப்போகாமல் வழியில் ஓரிடத்தில் மரக்குரங்கு ஆடிக்கொண்டிருந்த சிலபையன்களோடு சேர்ந்து கொஞ்சநேரம் நானும் விளையாடினேன். ஆட்டத்தில் நான் ஓடி மரம் ஏறும் பொழுது என்னை பின்பற்றி பிடிக்க வரும் பையன் ஒருவன் என் சட்டையை பிடித்திழுக்க சட்டையும் மரக்கிளையில் மாட்டிக்கொண்டு கிழிந்து போனதுடன் என் உடம்பிலும் காயம்பட்டது."

* * * *

"இத்துடன் அழுதுகொண்டு அத்தை வீடுபோய்ச் சேர்ந்தேன். அத்தைக்கு என்னைப்பார்த்ததும் அதிக சந்தோஷம் உண்டான போதிலும் "ஏதப்ப, இங்கே வந்தகாரணம்" என்று கொஞ்சம் அசிரத்தையாய்க் கேட்டாள். ஏனெனில் பழையகோபம் இன்னும் சொல்பம் பாக்கியிருந்தாற் போலும். ஊரில் நடந்த சங்கதியைச் சொல்லி நான் இங்கே வந்திருப்பதை ஒருவருக்கும் தெரியாமல் ரகஸ்யமாய் வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதைக்கேட்டதும் அத்தை அதிக சந்தோஷத்துடன் என்னைகட்டிமுத்தமிட்டுக்கொண்டாள். பிறகு மரக்குரங்கு ஆடினவிஷயம் சொல்லவேண்டி நேரிட்டது. அதைக்கேட்டு வியசனப்பட்டு விட்டு என் சட்டையைத்தைத்துக்கொடுத்து என்காயத்திற்கும் மருந்து போட்டாள். அன்று ராத்திரி அவளுடைய அழகிய நிலக்கண்ணாடிகளமைத்த கட்டிலின்மேல் என்னை அருகில் படுக்கவைத்துக் கொண்டு தூங்கினாள்.

எனக்கு தூக்கத்தில் மரக்குரங்கு ஆடும் கனவே அதிகமாயிருந்தது. நான் என்சட்டையை கிழித்த பையனை துரத்துவது போல் கனவுகண்டு விழித்து எழுந்தேன். கண்முன் ஒருபையன் என்னை எட்டிப்பார்ப்பது போல் தெரிந்ததும் எட்டி உதைத்தேன். ஐயோ! பையனைக்காணோம். கட்டிலுக்கு பக்கத்தில் வைத்திருந்த நிலக்கண்ணாடி மாத்திரம் பொடிப்பொடியாய் போய் விட்டது. உடனே அதில் நான் உதைத்தபையன் அறையில் எரிந்துகொண்டிரு

ந்த விளக்கு வெளிச்சத்தால் கண்ணாடியில் பிரதிபலித்த என் உருவம் தானென்று தெரியவந்தது. என்ன செய்வேன்! என் அத்தையும் திடுக்கிட்டு எழுந்து கொண்டாள். கண்ணாடி உடைந்து போன விதத்தை சொல்லி என்னை மன்னிக்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டேன். கோபமும் வருத்தமும் மேலிட்ட அத்தை என்னை தாழ்வாரத்தில் ஒருபாயில் படுக்கச்செய்து விட்டு தானும் ஒரு சாய்வுநாற்காலியில் சாய்ந்து வருத்தப்பட்டுக் கொண்டேயிருந்து தூங்கி விட்டாள். கண்ணாடி உடைந்து போனது என் குற்றமா? முட்டாள்தனமாய் ஏன் என் கால்பக்கத்தில் கண்ணாடியை வைத்திருக்கவேண்டும். இருந்த போதிலும் இச்சமயம் அத்தையின் உதவி எனக்கு மிகவும் தேவையாயிருந்தமையால் குற்றத்தை நானே ஒப்புக்கொண்டு அவளை மன்னிப்பும் கேட்டுக் கொண்டேன். இனி இவள் வீட்டில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். என்று எண்ணினேன்.

* * * *

"மறுநாள் "ராஜாவைக்காணோம்" என்று தகப்பனாரிடமிருந்து அத்தைக்கு ஒரு தந்திவந்தது "ஆனால்சீக்கிரம்தேடுங்கள்" என்று அத்தையை அதற்கு பதில் அனுப்பச்சொன்னேன். இந்த பதிலிலிருந்து நான் சித்திரப் புரத்திலில்லை யென்று என்பெற்றோர்கள் எண்ணிக்கொண்டு விட்டார்கள்.

சிலநாள் வெகு ஜாக்கிரதையாயும் பயத்துடனும் அத்தைக்கு பற்பல சிலகாரியங்கள் செய்துவந்தேன். அத்தையும் என்மேலிருந்த வருத்தத்தை விட்டு என்னைப்பற்றி சந்தோஷ மடைந்தாள். ஒரு நாள் மத்தியானம் தன் அலமாரிச் சாவியை என்னிடம் கொடுத்து அலமாரியைத்திறந்து கொஞ்சம் பட்சணம் எடுத்துக்கொள்ளும்படி சொன்னாள். நானும் அப்படியே செய்துவிட்டு பிறகு எனக்கு உபயோகப்படட்டு மென்று அலமாரியை மாத்திரம் பூட்டாமல் சாவியை அத்தையிடம் கொடுத்துவிட்டேன்.

சாயங்காலம் வீட்டின் மேல்மாடியில் அத்தை காற்றுவாங்கிக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து மெள்ள உள்ளேபோய் அலமாரியைத்திறந்தேன். அதிலிருந்து ஒரு பெரிய வெள்ளைப்பூனை தாவிக்குதித்தது. சங்கதிதெரிய வந்தது. பூனையைத்துறத்தினேன். அது அங்கேயிருந்த சுவர்ணவிக்கிரகங்கள் வைத்திருந்த பூஜை மண்டபத்தில் போய் ஒளிந்து கொண்டது. ஒரு தடியை எடுத்து அதைக்குத்தினேன். அது கிளம்பி விக்கிரகங்கள் மீது குதித்து அவைகளை யெல்லாம் கீழே தள்ளிவிட்டு, அந்தவிக்கிரகங்களின் ஒன்றின் கழுத்திலிருந்த ஒரு மணிமாலை அதின் வாலில் மாட்டிக்கொள்ள, அத்துடன் காலை நொண்டிக்கொண்டு வெளியே போய்விட்டது. நானும் பயந்து வெளியே ஓடி விட்டேன்.

ராத்திரி ஒன்றும் அறியாதவன்போல் நடித்துக்கொண்டு மனதில் மாத்திரம் பயத்துடன் உட்கார்ந்து இருந்தேன். பூஜைசெய்ய என் அத்தையின் கணவர் அறைக்குப் போய் விளக்கை யேற்றினதும் அங்கிருந்த காட்சியைப் பார்த்துதிடுக்கிட்டு விசாரிக்க, நான் அறையின் உள்ளே போகும் பொழுது பார்த்திருந்த சமையல் காரன் அதின் விபரம் என்னைக்கேட்டால் தெரியுமென்றான். நான் ஒன்றும் அறியேனென்றேன். இதற்குள் பூனையும் நொண்டிக்கொண்டு வந்தது. என்னைப் பார்த்ததும் மறுபடி ஓட ஆரம்பித்தது. உடனே சங்கதி வெளியாய் விட்டது. ஆனால் மணிமாலை விஷயம் தெரியவில்லை. நானும் பயத்தால் சொல்லவில்லை. வீட்டில் எல்லாரும் பூனை செய்த குற்றத்திற்கு என்மேல் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். அத்தையின் அருமைப் பூனையின் கால் நொண்டியாய் விட்டபடியால் என்னுடன் அவள் பேசவேயில்லை. துர்சொப்பனம் காணுவதிலேயே நான் இரவெல்லாம் கழித்தேன்."



"என் கையிலிருந்த பணம் சிலவாய்விட்டதாலும், மிகுதி யிருந்தது ரயில் சார்ஜுக்கு போதாம லிருந்தமையாலும், அதைக்கொண்டு என் தகப்பனாருக்கு நான் இங்கே சித்திரபுரம் வந்திருப்பதாகவும் என்னை வந்து உடனே அழைத்துப் போகும்படியாயும் மறுநாள் ஒரு தந்தி அனுப்பினேன். அவரும் வந்திருக்கிறார். டைரியே! நாம் போவோம் வா. இவ்வித கஷ்டம் அனுபவிக்கும்படி பிரம்மன் என் தலையில் எழுதினானே! எங்குபோனாலும் என்னை எல்லோரும் கெட்டபையன் என்கிறார்களே. இனிமேலாவது கட்டாயம் நல்ல பையனாய் விடுகிறேன். வா போவோம்.

* * * * *

சித்திரபுரத்தி லிருந்து என் தகப்பனாருடன் ஊருக்கு திரும்பிவந்து இரண்டு தினங்களாயின. நேற்று சாயங்காலம் என் தகப்பனாருடைய சிநேகிதர் ஒருவர் பங்களாவில் நடந்த தோட்டக் கச்சேரிக்கு நானும் தகப்பனாருடன் போயிருந்தேன். விருந்து வெகு விமரிசையா யிருந்தது. எனக்கு பட்சணம் அதிகமாய் கிடைத்தது. அங்கே நடந்த விநோதக் காட்சியைப் பார்த்து விட்டு ஒன்றுமாத்திரம் என்மனதில் நிச்சயம் செய்துகொண்டு விட்டேன். டைரியே? அதை உன்னிடம் சொல்லுகிறேன் கேள்.

பெரியவனானதும் "இந்திரஜாலகேஸரி (Professor) ப்ரோபஸர் ராஜா" என்று பெயர் வைத்துக்கொண்டு நேற்று விருந்தில் ஜாலவித்தை செய்தவன் போல் நானும் ஜாலவித்தைக் காரனாகப்போகிறேன். ஜரிகை வரவழைத்தல், கடிகாரம் வரவழைத்தல், கத்திவிழுங்கல் முதலிய வித்தைகளை நன்றாய் கற்றுக்கொண்டு, காட்சிசபைகூட்டி, டிகெட்வைத்து, பணம் சம்பாதிக்கப் போகிறேன்.

* * * * *

டைரியே நேற்று உன்னிடம் சொன்னபடி இன்று வித்தை செய்தேன். அது பார்ப்பதற்கு எவ்வளவு இலகுவா யிருந்ததோ அவ்வளவு இலகுவாய் செய்துபார்த்தால் முடியவில்லை. ஆகையால் ஜாலவித்தைக் காரனாகும் எண்ணத்தை விட்டுவிட்டேன்.

இன்று சில சிநேகிதர்கள் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது வித்தைசெய்து பழக்கம் செய்துகொள்ள உத்தேசித்தேன். என்னிடம் ஜால வித்தைக்காரன் வைத்திருந்தாப்போல் சிறிய ஜரிகை துவால் இல்லாமையால் ஹாலில் மாட்டியிருந்த ஒரு சிநேகிதருடைய ஜரிகை வேஷ்டியின் கரை மிகவும் அகலமா யிருந்தமையால் அதுவே போதுமென்று ஒரு கரையைக் கிழித்து எடுத்துக் கொண்டேன். வித்தைக்கு வேண்டும் இன்னும்

சில சாமான்களை யெல்லாம் ஒரு அறையில் மேஜையின்பேரில் சரியாய் வைத்துவிட்டு என் சகோதரிகளையும். வந்திருந்த அவர்களுடைய சிநேகிதர்களையும் பார்த்து "கனவான்களே! இந்திரஜாலகேஸரி ப்ரொபஸர் (Professor) ராஜாவினுடைய ஜாலவித்தைத் திறமையை நீங்கள் கண்டு களிக்கவேண்டாமா? டிகெட் ஆளுக்கு நாலு அணாதான்" என்றேன். எல்லாரும் என்னைப்பார்த்து நகைத்தார்கள். எல்லாருக்கும் சேர்த்து ஒருவர் டிகெட்டுக்காக இரண்டு ரூபாய் என்னிடம் கொடுத்தார்.

ஜரிகையைக் காட்டி "கனவான்களே இந்த ஜரிகைத் துவாலையைக் கொளுத்திவிட்டு அதைத் திரும்பவும் வரவழைக்கப் போகிறேன்" என்றேன். உடனே சகலரும் மறுபடியும் நகைத்தார்கள். அந்த ஜரிகை தன் வேஷ்டியின் கரையென்று வேஷ்டியின் சொந்தக்காரருக்கு தெரியவில்லை. அவரும் சிரித்தார். பிறகு ஒரு நெருப்புக் குச்சிகொண்டு ஜரிகையைக் கொளுத்தி சாம்பலாக்கினேன். சாம்பலை என் கைக்குட்டையால் மூடிக்கொண்டு ஜாலவித்தைக்காரன் செய்தாப்போல் செய்தேன். ஜரிகைத்துவால் மாத்திரம் திரும்பி வரவில்லை. என்ன செய்தும் அது வாராமைகண்டு "இது போனால் போகட்டும். இன்னுமொருதரம் செய்து காண்பிக்கிறேன்" என்று சொல்லி விட்டுப்போய் இன்னுமொரு கரையைக் கிழித்து கொளுத்துவதற்காக வேஷ்டியை ஹாலிலிருந்து எடுத்துவந்தேன். அதைப் பார்த்ததும் சொந்தக்காரர் முகம் ஒன்றரை முழநீளம் நீண்டது. ஆநந்தாவோ என்னை பளீரென்று ஒரு அடி அடித்து வெளியில் இழுத்துவிட்டதுடன் என் தகப்பனாருடன் சொல்லி என்னை சிட்சிக்கச் சொல்லுவதாகச் சொன்னாள். இப்படியிருக்கிறது சமாசாரம். என்னைப்போன்ற அறியாப் பிள்ளைகள் தவறிப்போய் ஏதாவது சிறு பிழைகள் செய்துவிட்டால் அதை ப்ரமாதப்படுத்தி விடுகிறார்கள். "சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே!" என்று உபாத்தியாயர் சொன்னது பொய்தான்போ லிருக்கிறது. இந்த அல்பக் குற்றத்திற்காக வீட்டிலுள்ளோர் யாவரும் என்னைத் திட்டுகிறார்கள். இதுவும் என் அதிர்ஷ்டம்தான்.

மறுநாள் என் விளையாட்டுத் தோழர்களிடம் என் திறமையைக் காட்ட உத்தேசித்தேன். அதற்காக மாட்டுக் கொட்டத்தில் ஜாலவித்தைக் காட்சி செய்துகாட்ட உத்தேசித்து டிகெட்டுகளின் ரேட்டை (Rate) ஒரு அணாவாக்கினேன். அநேகம் பையன்கள் வந்தார்கள். என் தாயாருடைய மேஜையின் அறையிலிருந்து அவளுடைய தங்கக் கடிகாரத்தை முன்னமே எடுத்து என் தோழனாகிய ராமனிடம் கொடுத்து வைத்திருந்தேன். அவனை சார்ஜ் இல்லாமல் காட்சி பார்க்கவிடுவதாய் சொன்னதும் அவன் என் இஷ்டப்படி எனக்கு ஒத்தாசையாய் நடப்பதாய் சொன்னான்.

"கனவான்களே! யாராவது உங்களுடைய கைக்கடிகாரத்தை கொடுங்கள். கடிகாரவித்தை செய்து காட்டுகிறேன்" என்றேன். "நான் கொடுக்கின்றேன்" என்று ராமன் அவனிடமிருந்த என் தாயாருடைய தங்க கடிகாரத்தை என்னிடம் கொடுத்தான். ஒரு கருங்கல்கொண்டு அதைக் கொட்டிப் பொடியாக்கி என் குல்லாய்க்குள் போட்டுக்கொண்டு "கடிகாரம் பொடிப்பொடியாய் விட்டது பார்த்தீர்களா?" என்றேன். "சரி" யென்று எல்லாரும் கத்தினார்கள். பிறகு என் கைக்குட்டையால் அதை மூடி ஜால வித்தைக்காரன் செய்தாப்



போல் அதற்கு மந்திரம் போட்டுவிட்டு துணியைத் திறந்து கடிகாரத்தை எடுத்தேன். அது முன்போல் தங்க கடிகாரமாய் வாரமல் பொடிப்பொடியாகவே யிருந்தது. பையன்கள் எல்லாரும் பயந்து போய்விட்டார்கள். நானும் பயந்து ஆட்டத்தை நிறுத்திவிட்டேன். ஆனால் ஜாலவித்தை சரியாய் செய்யவில்லையென்று தாங்கள் கொடுத்த பணத்தை என் தோழர்கள் திருப்பிக் கேட்க அதைக் கொடுத்துவிட்டு, பொடியான கடிகாரத்தை மாட்டுக் கொட்டகையில் ஒளித்துவிட்டு காட்சிசபையைக் கலைத்துபோய்விட்டேன். வீட்டிற்குள் போனதும் கடிகாரத்தைக் காணோம் என்று எல்லாரும் தேடிக்கொண்டிருந்தார்கள். என் தாயார் வருத்தப் பட்டுக்கொண்டிருந்தாள். நானும் எல்லாருடன் கூடதேடி விட்டு மிகவும் வருத்தப் படுகிறவன்போல் நடித்துக்கொண்டு என் தாயாரிடம் போய் உட்கார்ந்து கொண்டேன். என் தகப்பனாரும் வீட்டிலுள்ள வேலையாட்களைக் கூப்பிட்டு விசாரித்துக் கொண்டிருந்தார். கொஞ்ச நாழிகைக்குப் பிறகு தோட்டக்காரனும் சமயல்காரியும் பொடியாய்ப் போயிருந்த கடிகாரத்துடன் என் தாயாரிடம் ஓடிவந்தார்கள். க்ஷணநேரத்தில் வீட்டிலுள்ளோர் எல்லோரும் அவ்விடத்தில் கூடி விட்டார்கள். யாவரும் கடிகாரத்தைப் பார்த்ததும் என்னையும் பார்த்து முகத்தைச் சுளித்தார்கள்.

"மாட்டுக் கொட்டத்தை சுத்தம் செய்யும்பொழுது இதைக் கண்டேன்" என்று தோட்டாக்காரன் இளைப்பு வாங்க வாங்க சொன்னான்.

"அம்மா! உங்கள் மேஜையின் அறையிலிருந்து லட்சுமி—அதுதான் எங்கள் பசுங்கன்றுக் குட்டியின் பெயர்—கடிகாரத்தை எடுத்துக் கடித்து பொடித்துவிட்டாப் போலிருக்கிறது. எங்கே! பல்பட்ட காயம் அதில் தெரிகிறதாவென்று பார்ப்போம். கடிகாரத்தை என்னிடம் கொடுங்கள்" என்றேன்.

"ஐயோ? என் கண்மணியே" என்று சொல்லிக்கொண்டு என் தாயார் விம்மி அழுதாள்.

"இதை ஏன் பொடியாக்கினாய்" என்று என் தகப்பனார் அதட்டியதும் நான் நடுநடுங்கிப் போய்விட்டேன்.

டைரியே! பின் நடந்த விர்த்தாந்தத்தைச் சொல்லி என் ஆப்தனாகிய உன் மனதை ஏன் புண்படுத்தவேண்டும். மறுபடி ஓடிப்போகலாமென்றாலும் போக்கிடமில்லையே. காலும் அசாத்திய மாய்வலிக்கிறது. நடக்கமுடியவில்லை. என்னை இம்மாதிரி கஷ்டப்படும்படி செய்துவிட்டதுடன் "கெட்ட பையன்" என்ற பட்டப் பெயரையும் எனக்குக் கொடுக்கிறார்கள். இதுவும் தெய்வச் செயல்தான்.

பி. வி. எல். ஸர்மா.

## நமது சித்திரப்படக் கதை—1.

# ப்ரத்யும்னன் ஜனனம்.

(20-வது பக்கத் தொடர்ச்சி.)

மாயாவதி ப்ரத்யும்னனைப் பார்த்து, "ஸ்ரீ ருக்மணிதேவியார் உம்மைக் காணாமல் சோகத்துடனிருப்பார்கள். இவ்வசுரனைச் சீக்கிரத்தில் கொன்று விட்டு நாம் துவாரகாபுரிக்குச் செல்லவேண்டும். சம்பராசுரனே உமக்கு ஜன்ம சத்ரு. அவன் மிக்கபலமுள்ளவன், மாயா விநோதங்கள் செய்பவன். அவனை ஜயிக்கவேண்டுமானால் நான் சொல்லும் விஷயங்களைக் கற்றுக்கொண்டால் அவனை சுலபமாக ஜயித்துவிடலாம்" என்று சொன்னாள்.

ப்ரத்யும்னனும் தனது மனைவியின் மூலமாக அநேக மாயமான செய்கைகளைக் கற்றுக்கொண்டான். மாயாவதி "எனது அன்பிற்குரிய பிராணநாதா! இந்த மாயையால் அவனை ஜயிக்கலாம்" என்று சொல்லி, தம் கணவரை அவனுடன் யுத்தம்புரிய அனுப்பினாள்.

ப்ரத்யும்னன் சம்பராசுரனண்டையிற் சென்று அவனுக்கு ரோஷம் பிறக்கும்படியான வார்த்தைகளுரைத்து தன்னுடன் யுத்தம்புரியவா அழைத்தான். அவன்கேட்டு கடுஞ்சினமடைந்து கெதையை கரத்தினேற்றுங்கி கண்களில் நெருப்புப்பொறி பறக்கும்படி ஓடிவந்து இடி இடித்தாற்போல் ப்ரத்யும்னன்மீது அதைப் போட்டு அட்டகாசஞ்செய்தான். [சம்பராசுரனுக்கும் ப்ரத்யும்னனுக்கும் நடக்கும் யுத்தபடத்தைப் பாருங்கள்.]

அப்போது ப்ரத்யும்னன் தனது கெதையினால் அவ்வசுரனுடைய கெதையைப் பொடிசெய்துவிட்டான். அசுரன் உடனே மாயையினால் ஆகாயத்தில் கிளம்பி கல்மழை பொழியச்செய்தான். ப்ரத்யும்னன் தான் மாயாவதியினிடமிருந்து கற்றுக்கொண்ட மாயையினால் அக்கல்மழையைத்தடுத்து மின்னலுக்கொப்பான கத்தியை கையில் வைத்துக்கொண்டு அத்துஷ்ட அசுரனுடன் அகோரயுத்தம்புரிந்து அவனைக்கடைசியில் கொன்றான். இதைத்தேவர்கள் கண்டு களிப்புற்று ப்ரத்யும்னன்மீது புட்பமாரி சொரிந்தார்கள். ப்ரத்யும்னன் மிகுந்த சந்தோஷத்துடன் அரண்மனைசென்று சங்கதிகள் யாவும் மாயாவதிக்குச் சொன்னான். இருவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆகாயத்திற் கிளம்பி மின்னலோடுங்கூடிய மேகம்போல் விளங்கிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அந்தப்புரத்தில் அநேக ஸ்திரீகளின் நடுவில் வந்து குதித்தனர்கள். அவர்கள் ப்ரத்யும்னனைப் பார்த்து ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கொப்பான வண்ணமும், உருவமும், ஆபரணமும் சரியாயிருந்தமையால் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய புத்திரன்தானோ என்று எண்ணலானார்கள். ருக்மணிக்குக்கூட சந்தேகம் உண்டானது. ஏனெனில் குழந்தை பிறந்து பத்துதினம்கூட ஆகாமுன் சம்பராசுரன் குழந்தையை எடுத்துச்சென்றானன்றோ? அதனால் ருக்மணிதேவி சந்தேகங்கொண்டாள். உடனே ஸ்ரீ கிருஷ்ணபகவானும், நாரதமகாரிஷியும் இவ்விடத்திற்குவந்தார்கள். நாரதர் ப்ரத்யும்னன் கதைமுழுவதையும் விவரமாகச்சொன்னார். ஸ்ரீ கிருஷ்ணனும், ருக்மணியும் தாங்கள் இழந்த குமாரனை திரும்பிப்பெற்றதற்காக மிகவும் சந்தோஷப்பட்டார்கள். அரண்மனையிலும் மாத்திரமல்ல துவாரகாபுரி முழுவதும் குதூகலமாயிருந்தது.

முற்றிற்று.



**Pradyumna fighting Shambarasura.**



प्रद्युम्न शंबरासुरयुद्ध.

Recognition of the lost son.



प्रद्युम्न अभिज्ञान.

'The Lakshmi Art,' Bombay.



# ரஸிகை.

## ஓர் நவீன தமிழ் நாடகம்.

### காப்பு.

பாசிவம் பரிவொடு பயந்திடு புதல்வரும்
பிரசமார் மலர்வதி பெதும்பையு முளங்கொடு
மூசறைந் தென்விசை முழக்குற வவனியி
லிரசிகை யெனுங்கதை யினிப்புற வியம்புவாம்.

### அங்கம்-1. காட்சி-1.

[சாஸ்வதிபுரி என்ற நகரின் அரசனது மாளிகைக்குப் புறத்தேயுள்ள தோர்வனம். மாலைப்பொழுது. ஓர் வர்த்தகன் புத்திரனாகிய **ஸத்யலோசனன்** வருகிறான். தனிமையிற் சிந்திக்கின்றான் ]

"ஹ! என்ன வேளையில் நாங்கள் அகத்தைவிட் டகன்றோம்! என்சகோதரன் மானைத் தொடர்ந்தோடி நெடுநேரமாயிற்றே. அந்த வசீகரமான் அவனை எங்கே அழைத்துச் சென்றதோ! அவனுக்கு யாது தீங்குற்றதோ! யான் அவனைப்பிரிந்தது பெரும்பிழை. அவன் மானைப்பிரியாது தொடர்ந்தோடியவாறு யானும் அவனைப்பிரியாது ஓடியிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு தானே இவ்வளவு தூரம் ஓடிவந்தேன். என் சகோதரன் என்னை நோக்கி நோக்கி, "லோசனா! இனி என்னோடு ஓடிவருவதை விட்டு யான் வருமளவும் இவ்வசோக விருக்ஷத்தருகேயே இரு எனச் சொன்னமையாற்றான் நான் நின்றேன். அண்ணனது ஆணைப்படி ஒழுகுவதும் ஆவஸ்யகமல்லவா? ஸ்ரீராமர் மாரீசனென்ற மாயமானைப் பின்தொடர்ந்தோடிய பொழுது அவரது கட்டளைப்பிரகாரம் அவரதுபிரிய சகோதரனும் பிரியாச் சகோதரனுமாகிய லக்ஷ்மணர் தன் அகத்திற்கினிய அண்ணலைப் பிரிந்து நின்று விடவில்லையா? ஆகையால் என் மீது பிழை யொன்று மில்லை. (சிறிது நேரம் மௌனம். (ஹா! பாழும் மனமே?என்ன எண்ணம் எண்ணுகிறாய்! நீ உன் சகோதரனைப்பிரிந்தது நியாயமென்று ஸ்தாபிக்க என்னென்ன நியாயங்கள் தேடுகின்றாய்! இளையபெருமாள் சீதாபிராட்டி தனிமையிலிராவண்ணம் ஸ்ரீராமர் கட்டளைப்படி அவரோடு மானைப்பின் தொடர்ந்தோடலை ஒழித்து நின்றார். நான் எந்தப் பிராட்டியைக் காப்பதற்கு நின்றேன்? தனிமையெனுந் தையலைக் காப்பதற்கோ? அல்லது இவ்வசோகத் தருவாகிய அணங்கினைக் காப்பதற்கோ? அண்ணா! அண்ணா! எப்பொழுது திரும்பி வருவாய்? நாம் எப்பொழுது இல்லிற்குச்செல்வது? இந்த க்ஷணத்திலேயே நமது வீடுநோக்கி புறப்பட்டாலும் வீடுசேர்வதற்கு நள்ளிருளாகுமே! ஐயகோ! நாம் வழக்கம்போல் தீபமேற்றுவதற்கு முன்பு இன்று வீட்டிற்குத் திரும்பி வாராமையால் நமது அன்னையும் தந்தையும் எவ்வாறு வருந்துவார்களோ? என் செய்வேன்! என் சகோதரன் சென்றவழியே சென்றேனும் அவனைத்தேடுவேன். (சிறிது தூரம் நடக்கின்றான். பின்பு திடீரென நிற்கின்றான்.) ஹா! என்னவேலை செய்கின்றேன்? "யான் வருமளவும் இவ்விடத்திற்றானேயிரு" என்று என் சகோதரன எனக்குக் கட்டளையிட்டிருக்க யான் அக் கட்டளையைமீறி அவ்விடத்தை விட்டுப்பெயர்ந்து சென்றால், அவன் ஒரு கால் வேறு வழியாய்க் குறித்த

இடத்திற்கு வந்து என்னைக்காணாது தேடியலைந்தாலும் அலைவனே. அவன் மானைத்தொடர்ந்தலைந்ததுமன்றி என்னையுந்தேடி அலைவதற்கோ யான் குறித்த விடத்தை விட்டகன்றேன். (மீட்டும் அசோகமரத்தருகே வருகின்றான்.) அண்ணன் வரும் வரையில் இவ்விடத்திற்றானே இருப்பேன். (சிறிது நேரம் மௌனம்.) ஒருகால் என் சகோதரன் ஏதேனும் இடருற்றிருந்தால் யான் இங்கிருப்பதிற் பயனென்ன? அவனைத் தேடியே செல்வேன். (சிறிது தூரம் சென்று நிற்கின்றான்.) வீரலக்ஷ்மி சஹிதனாயிருக்கும் எனது சகோதரனுக்கு என்ன தீங்கு நேரிடும்! அவன் வேறு வழியாய்த் திரும்பிவந்தால் என்னைக் காணாது எவ்வாறு வருந்துவான்! ஆகையால் யான்முன் பிருந்தவிடத்திற்கே செல்வேன். (மீட்டும் தான் முன்பு நின்றுகொண்டிருந்த விடம்நோக்கிச் சிறிது தூரம் வந்தபின் மீட்டும் நிற்கின்றான்.) ஆனால் மானைத்தொடர்ந்தோடியவன் வேறுவழியாய் வருவன் என்பதற்கு நியாயமென்ன இருக்கின்றது? அவன் சென்றவழியே அவனைத் தேடி செல்வதுதான் உத்தமம்." (நிலத்தைப் பார்த்துக்கொண்டே மறுபடியும் போகின்றான்).

(அவனது சகோதரன் ருக்மணி ரமணன் மெல்லநடந்து அவன் முன்பு நிற்கின்றான்.)

*ஸத்யலோசனன்:*—(புன்னகையுடன்) அண்ணா! (இருவரும் ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளுகிறார்கள்.)

*ருக்மணி ரமணன்:*—லோசனா! நீ அவ்வசோக விருக்ஷத்தைப்பிரிந்து சென்றதையும், மீட்டும் அதனருகே சென்றதையும் மீட்டும் அதைநோக்கிச் செல்வதையும் கண்ணுற்றவுடனே, நளராஜன் தன் காதலியைப்பிரியும்பொழுது "செல்லும் வெந்துயரொடு செல்லக்காலெழி தொல்லையின் மீளும்." என்ற அதிவீரராமபாண்டியன் மொழிகள் என் ஞாபகத்திற்கு வந்தன.

*ஸத்யலோசனன்:*—நீ எப்படி அண்ணா! நான் சென்றதையும் மீண்டதையும் அறிந்தாய்?

*ருக்மணிரமணன்:*—நான் நெடுந்தூரத்திலிருந்தே உன்னைப்பார்த்துக் கவனித்துக்கொண்டே வந்தேன். நீ உன் ஆலோசனையிலேயே கருத்தாயிருந்தமையால் நான் எதிரே வருவதைக்கவனிக்கவில்லை.

*ஸத்யலோசனன்:*—அந்த மான் எவ்வாறாயிற்றண்ணா?

*ருக்மணிரமணன்:*—உன்னைக்கண்டதும் மானை மறந்தேன் லோசனா! நீ அம்மானைப்போன்ற அழகிய பிராணியை எப்பொழுதாவது பார்த்திருக்கின்றனையா? அதைப்பற்றி நினைக்கும்பொழுதே என் உள்ளம் எவ்வளவு குதூகலமடைகின்றது. அந்தோ! அது என் கைக்ககப்படாமற் போயிற்றே. அதைக் கொல்ல எண்ணியிருந்தால் க்ஷணத்திற் கொன்றிருப்பேன். ஆனால் அவ்வளவு சுந்தரம் வாய்ந்த ஜந்துவின் உயிரைப்போக்க எந்தப்பாதகன்றான் துணிவான்! அதை உயிரோடுபிடித்து நமதகத்திற்கு கொண்டுபோகலா மென்றெண்ணினேன். என் எண்ணம் நிறைவேறாமற்போயிற்றே லோசனா! நாம் அகத்திற்குச்சென்றதும் நீ அம்மானைப்போன்ற உருவத்தை எனக்குச் சித்திரித்துக் கொடுக்கவேண்டும். (இன்னும் வரும்.)



# சந்திரவதனன் ஓர் நாவல்.

அச்சமையம் என் நெஞ்சுபதைத்தது. என் அன்பிற்குரியாளை ஓர் கூத்தாடி கைப்பிடித்து சபையி லிழுத்துப் பேசுவது என்னுள் அக்கினி சுவாலையை எழுப்பியது. சமீபத்திலிருந்த சம்புநாதனையும் மறந்து எழுந்து சனங்களை விலக்கிப் போனேன். நாடகம் நடிக்கும் பந்தலின் வாயிற்படியில் சென்றேன். அங்கு காவலாய் நின்ற ஒருவன் நான் உள்ளே பிரவேசிக்க எண்ணுவதைக் கண்டு நீயார் என்றான். ஜமீன்தார் வாகுணப்பிரபுவின் அரண்மனை என்னுமுன் என்னை உள்ளேபோகச் சொல்லினன்.

உள்ளே சென்றேன். பாதையில் ஓர் படுதா ஓரத்தில் இருவர் பேசி நிற்பதைக் கண்டேன். ஒருவர் என் சுந்திரவதனியும் மற்றொருவர் அரண்மனையில் விருந்துண்ட பிரபு கோபாலகிருஷ்ணன் எனவுங் கண்டேன். என் அன்புடையாள் நாடகவுடையுடனிருந்தாள். அப்பிரபு நல்ல அலங்கார வுடையுடனிருந்தார். நானவர்கட்கு ஓர் கோல்தூரத்தி லிருந்தமையால் அவர்கள் மெதுவாய்ப் பேசிய வார்த்தை என் காதில் விழுந்திலது. கால்மணி நேரம்வரை ஏதோ பேசியபிறகு பிரபு அவள் கைகளை தன் கைகளில் பிடித்துக்கொண்டு "சுந்திரம்" உன் அபிப்பிராயப்படி நாளை எனக்கு உன் பிரியமான பதில் கிடைக்குமென நம்புகிறேனெனச் சொல்லி அவள் கைகளை விலகவிட்டு பந்தலின் வெளியே போயினர்.

நான் கொஞ்சதூரம் அவள் பின்சென்று "சுந்திரவதனி" என அழைத்தேன். அவள் திரும்பிப் பார்த்து நின்றாள். நான் அவள் சமீபத்தில் சென்று அவளது கையைப் பிடித்து. "சுந்திரமே" உன்னருமைத் தாய் கமல ரேகையார் என்று கூறியதும் அவள் கண்களில் தாரைதாரையாய் சலம் பெருகச் சற்று என் முகத்தை நோக்கி என் கைகளைப் பறித்து வேகமாய் போய்விட்டாள்.

நானும் பின்பற்றி நாடகப் பெண்கள் தங்கும் அறைக்குச் சமீபத்திற் சென்றேன். நீ யார்? இங்கு ஏன் வந்தாயென்று நாடகத் தலைவன் என் கையைப் பற்றிக் கொண்டான். நடன சுந்தரியைப்பார்க்க வந்தேனென்றேன். உன் பெயரென்ன வென்றான். சந்திரவதன னென்றேன். என் கையைப் பிடித்தபடியே ஒருவனைக் கூப்பிட்டு என்னை நடன சுந்தரிக்குத் தெரியுமா வெனக் கேட்டுவரச் சொன்னான். சில நிமிஷங்களில் அவன் திரும்பிவந்து அந்தப் பெயருள்ளவனைத் தனக்குத்தெரியா தென்றும்தான் ஒருவரையும் பார்க்கத்தயாரா யில்லையென்றும் அவள் சொல்லியதாய் வந்துசொன்னான். நாடகத் தலைவன் உனக்குவந்த பதில்தெரிந்து கொண்டையா? எனச்சொல்லி என் பிடரியைப் பிடித்து நெக்கிக் கொண்டுபோய் பந்தலுக்கு வெளியே விட்டான்.

சம்புநாதனிடம்போ யுட்கார்ந்தேன். அவனென்னை யேதோகேட்டான். நானென்னவோ பதில் கூறினேன். பின்னடந்த தொன்றுமே தெரியாது, சம்புநாதன் அரண்மனைக்குச் செல்வோம் வாவென்றான். அப்பொழுது நாடகம் முடிந்ததாய்க் கண்டு அவன்பின் போனேன். அவனென்னவோ நீ ஓர் மாதிரியா யிருக்கிறையே. நடன சுந்திரியைக் கண்டு மயங்கினையோ வென்றான். நானொன்றும் பதில் கூறவில்லை. அரண்மனை சென்றதும் என் படுக்கையறையிற் சென்று படுத்தேன், என் கண்ணில் சலப் பிரவாகமா யோடித் தலை

யணையை நனைத்தது. சேவற் கூவுமளவும் நித்திரையின்றி அழுதேன். பின்பு நித்திரைவந்து தூங்கினேன். ஏதேதோ சொற்பனங்கள் கண்டு காலை ஒன்பது மணிக்கு விழித்தேன். இராவெல்லாம் சுரம்கண்டு நீங்கினவன் தேகம்போலிருந்தது, தேகம் பலக் குறைவாய்த் தோன்றியது, என் தோழர்கள் உனக்கென்ன? தேகசுக மில்லையாவென்று கேட்டார்கள். சாயங்காலம் தேகம் கொஞ்சம் கனங் குறைந்ததாய்க் கண்டேன். அன்றைப்போது ஓர் வேலையும் செய்யவில்லை.

மறுநாள் சாயங்காலம் வெளியே உலாவிவரக் கடைத்தெருவுபுரம் போனேன். அங்கு கூட்டம் கூட்டமாய் பலர் பேசிக்கொண் டிருந்தார்கள். அஃதென்னவெனத் தெரிந்துகொள்ளுமாறு சமீபத்தில் சென்று கேட்டேன். பிரபு கோபாலகிருஷ்ணன் நடனசுந்தரியைக் கைப்பற்றிப் போனான் எனத் தெரிந்தேன். இனி என் சுந்திரத்தை மறந்துவிட வேண்டியதாய் நினைத்தேன். அவளன்பும் அவளது கல்வி ஞானமும் அவளது சாந்த குணமும் நான் வெறுக்கக் கூடியதாயில்லை. அவளருமைத் தாய் கமலரேகையார் கதி என்ன வாயிற்றென்பது புலப்படவில்லை. தேவபுரிக்கு அவர் விலாசத்திற்குக் கடிதம் எழுதித் தெரிவோமென்றால் அக்கடிதம் சூதன் கைப்படின் என்னைக் கொல்லக் கருதுவான். இனியேனும் அவள் திருந்தி வருவாளாயின் அவளையும் தாயாரையும் போஷிக்கலாமென எண்ணினேன். நான் விசாரித்தவளவில் கோபாலகிருஷ்ணப் பிரபுவிற்கு பல விடங்களில் கட்டடங்களிருப்பதால் இன்னயிடத்தில் அவள் கொண்டுபோய் வைக்கப்பட் டிருக்கிறாளென்பது தெரியாது எனக் கண்டேன்.

மறுநாள் ஜமீன்தார் குடும்பத்துடன் தேவபுரியிலிருந்து திரும்பிவந்தார்கள். சுசீலருக்குத் தோளில் காயமுண்டாகி அதினால் நோய்பட்டுத் திரும்பினார்கள் எனத் தெரிந்தது. இரவு சம்புநாதன் என்னைத் தனியே ஓரிடத்து அழைத்துப்போய் சந்திரவதனா? ஜமீன்தார் தேவபுரிபோய் வந்தவிஷயம் சொல்லுகிறேன் உட்காரு என்றான். இருவரும் உட்கார்ந்தோம்.

நம் பிரபுக்கள் உத்தேசப்படி தேவபுரிநகரில் ஓர் வியாபாரியின் பெண்ணை விசுவாசிக்க இடமுண்டாயிற்றாம். அவ்வியாபாரியும் ஜமீன்தார் என்ற பெருமைக்குப் பிரியப்பட்டு தன் மகளை இருபது கோடி ரூபாய் சீதனத்துடன் தருவதாய் ஒப்புக்கொண்டானாம். ஓர் பிரபு வீட்டில் நடந்தவிருந்திற்கு சுசீலரால் விசுவாசிக்கப்பட்ட குமுதவல்லியென்று பெயருடைய வியாபாரி மகளும் சுசீலரும் சென்றிருந்தார்களாம். அங்குமுன் இவர்கள் போய் கையெழுத்து செய்தெழுதிய சேனைக் காவலனும் வந்திருந்தானாம். அவன் நம் சுசீலரை உதாசீனமாய்ப் பேசிச் சண்டைக்கழைத்து இருவரும் கத்திச் சண்டைசெய்து நம் பிரபுவிற்குத் தோளிற் காயப்பட்டு ஒருபட்சமங்கு சிகிச்சை செய்து கொண்டிருந்து, குமுதவல்லி அங்கு வராமையால் அவர்கள் தங்களை வெறுப்பதாய்க் கண்டு ஊர்வந்து சேர்ந்தார்கள். வரும்போது சுசீலர் குமுதவல்லிக்குத் தான் ஏற்கனவே நடந்தவைகளை ஒளியாமற் சொல்லியிருந்தாயும் அது தெரிந்தும் தன்னை அவள் விசுவாசித்தமையால் அதினாலேற்பட்ட இச்சச் சரவைக்கொண்டு தன்னை வெறுத்தது நியாயமாகாதென்றும் ஓர் கடிதம் எழுதி வந்தாராம். இதுதான் போய்வந்த விசேஷமென்றான். பலவார்த்தைகள் பேசி இருவரும் எங்க ளிருப்பிடஞ் சென்றோம்.

சிலதினங்களில் சுசீலரும் தேகம் முற்றுங் குணப்பட்டார். பிரபு சப்பையனும் விருந்திற் கழைக்கப்பட்டான். மறுபடியும் அவன் பெண்ணின் கல்யா



ணத்தைப்பற்றிப் பேசினான். கல்யாணம் நிச்சயம் செய்யப்பட்டது. ஒருமாதம் எட்டியும் தேதி குறிக்கப்பட்டது. கல்யாணச் செலவிற்கு சப்பையன் பணமும் கொடுத்தான். ஆனால் சுசீலர் முகம் அன்று முதல் தெளிவின்றியே யிருந்தது.

ஓர்நாள் நான் மத்தியானம் மூன்று மணி சுமாருக்கு தோட்டத்தின் பின்புரம் கதவைத் திறந்துபோய் அங்குள்ள நீரோடையிற் சலமோடும் தெளிவையும் அழகையும் நோக்கிப் போய்க்கொண் டிருந்தேன். என் எதிரில் ஓர் விருத்தை முதுகில் மூட்டை கிடக்க ஓர் பிரம்பு கையிற்கொண்டு வந்தவன் நின்று என் முகத்தை நோக்கி கையை நீட்டச்சொல்லி அதனைச் சிலநேரம் பார்த்தாள். பின் என் முகத்தை நோக்கி உன் மனதிற்கொண்ட பெண் அடுத்த வருஷம் இதே நாளிலிரவு 12 மணிக்கு இறப்பாள். இன்றைக்கு பதினைந்தாநாள் நீ இந்த இடம்விட்டுப் போவாய் என்றாள். என் மனது பயமும் சஞ்சலமுமடைந்து என்னிடமிருந்த நாலணாவை அவளிடங் கொடுத்தனுப்பினேன். அவளும் போயினள். அவள் குறிப்பால் என் சுந்தரியின் சாக்காட்டை நினைத்தமையால் வருந்தினேன். அக்கால்வாயின் கரையோரமே சென்றேன். அது பெரிய ரஸ்தாவை சந்திப்பதாதலால் அப்பெரிய பாட்டைக்குச் சமீபத்தில் கொஞ்சதூரம் துரிதமா யோடிவந்த இரண்டு அஸ்வங்கள் பூட்டிய வண்டிவந்து நின்றது. அது நின்றதைக் கண்டு நானும் தியங்கி நின்றேன். அதிலோர் பெண்ணிருந்து இறங்கி வருவபவளாய்க் கண்டேன். அவள் என்னை நோக்கியே நடந்து வருபவளாய் காணப்பட்டது. அவள் சமீபத்தில் வரவர சாதாரண உடைதரித்திருந்தாலும் அழகிய வுருவமாய்க் காணப்பட்டது. கொஞ்சம் நெட்டையான உருவமாயும் கண்கள் விசாலமாயும் முகத்தின் அழகை வெளிப்படுத்துவதாயுங் காணப்பட்டது. கருத்து நீண்டு விளங்கிய சிகை அம் முகத்திற் கேற்புடையாய்க் காணப்பட்டது. முகவசீகரத்திற்குச் சிறந்த தேக அங்கங்கள் முதலிய சிறப்பால் லட்சணமுடையார் வகுப்பில் சேர்க்கப்படவேண்டிய பதினாறு வயதுள்ள ஓர் மாதாய்க் காணப்பட்டாள்.

அவளென் சமீபத்தில் வந்ததும் ஜமீன்தார் வரகுணப்பிரபுவின் அரண்மனையைச் சேர்ந்தவனாகுமோ யென்றாள். நான் அவருக்கு மரியாதை செய்து ஆம் அம்மணி நான் அவர்கள் அரண்மனை வேலைக்காரனென்றேன். மிகவும் நன்மை நீ எனக் கோருபகாரம் செய்வையா வென்றாள். அம்மணி யெதுவாயினும் செய்யத்தவறேனென்றேன். அவள் முகத்திலான முறுவலுடன் தன்னிடமிருந்த ஓர் முத்திரையிட்ட கடிதத்தை என்னிடந் தந்து இக்கடிதத்தை பிறரறியாது சுசீலர் கையில் சாக்கிரதையாய் சேரும்படிச் செவ்வையா வென்றாள். அம்மணி கொஞ்சமுந்தவறாது நடப்பேனென்றேன். உன் முகத்தோற்றமும் உன் வார்த்தை வெண்மையையும் நான் நம்ப ஏதுவாய் விளங்குகிறது என்று ஓர் பவுனை எடுத்து உனக்கு நான் தந்த சிரமத்திற்கு இதை அங்கீகரிக்கவேண்டுமென்றாள். அம்மணி நான் அதை முற்றும் மறுக்கவேண்டிய காரியம் என்றவுடன் அவளழகிய முகம் வாட்டமடைவதைக்கண்டு அம்மணி பிரபு சுசீலர் வேலைக்காரன் நான். அவர்க்குச் சேரவேண்டிய கடிதத்திற்கு நான் கூலி பெறேன். தயவு செய்து என் துணிகரமான வார்த்தைக்கு மன்னியுங்களென்று திரும்பி அரண்மனை நோக்கி ஓடினேன். கொஞ்சதூரம் போய்த் திரும்பிப்பார்த்த போது அவள் தன்வண்டியிலேறித் திரும்பிப்போவதைக் கண்டேன்.

நான் அரண்மனை சென்று சுசீலர் தன்னறைக்குள் தனித்திருப்பது தெரிந்து அங்கு அறைக்கதவை மெதுவாய்த்திறந்து உட்சென்றேன். தன்முகத்தை கரத்தில் வைத்திருந்தவர் திடீரென என்னரவங்கேட்டு ஏனிந்தத்தவறு? அழையாமல் எப்படிவந்தாய்? என்று அவர் முகத்தைத் துடைத்துக் கொண்டு என்னைப்பார்த்தார். அவர்முகம் பருத்துக் காட்டியதால் தன்னால் கூடியவளவு அழுதுகொண்டிருந்தாரென்பது விளங்கியது. நான் கையிலிருந்த கடிதத்தை மேஜையின்பேரில் வைத்தேன். அதின்மேல் விலாசத்தைப்பார்த்தவுடன் ஆ? குமுதவல்லி என்று தவறிச் சொன்னவர்போல் நிறுத்திக்கொண்டு அந்த கடிதத்தைப் பிரித்துக்கொண்டே உன்னிடம் இக்கடிதம் யார் தந்தது? அவர்களெங்கே? நீ அவர்களை எங்குகண்டாய் என்று பதில் விரும்பாது சொல்லிக்கொண்டே படித்தார். திரும்பப்படித்தார். அவர்முகம் செழுமைகொண்டது. கடிதத்தை பதனப்படுத்திக்கொண்டு இதனைச் சந்திரவதனியாரிடமும் கூறுதே. அவளை நீயே கண்டாயா? என்றார். ஐயனே எனக்கின்னாரென்பது தெரியாது பதினாறு வயதிருக்கும் ஓர் பெண். போதும் இந்தக் கடிதம் எனக்கெல்லாம் கூறியது நீ போ என்றார். நானும் சென்றேன். இரவு கழிந்தது. சூரியவுதயத் தெழுந்தேன்.

அரண்மனை முற்றுங் குழப்பமாயிருந்தது. என்னவென விசாரித்தேன். சுசீலர் தன் மேஜையின்பேரில் ஓர் கடிதம் எழுதி வைத்திருந்தாரென்றும் அக்கடிதத்தில் தேவபுரி வியாபாரி பெண் குமுதவல்லிதன்னை விசுவாசிப்பதாயும் அவள் தாய்தந்தை அனுமதியு மின்றி நாங்களிருவரும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாயும் தன் பெற்றோர் தன்னை மன்னிக்கும்படியும் அதில் வரையப்பெற்றிருந்ததென்றும் சுசீலரும் சம்புநாதனும் இரவுபோய் விட்டார்களென்றும் தெரிந்தது. வரகுணப்பிரபுவும் பெரியநாயகியாரும் அடங்காத் துக்கத்துடன் தங்களுக்கு அவசியமாய் வேண்டப்படும் சாமான்களை எடுத்துக்கொண்டு வண்டி பூட்டிச் சென்றார்கள். அவர்கள் சென்றவுடன் சப்பையன் ஜப்திக்கட்டளைக்கொண்டு அமீனா சேவகர்களுடன் அரண்மனை புகுந்து எல்லாவற்றையும் வசப்படுத்திக்கொண்டான். எங்கட்கெல்லாம் ஒரு வருட பாக்கியான சம்பளத்தைக் கொடுத்தான். நான் என் சாமான்களை எடுத்துக்கொண்டு என் உடன் தோழர்களிடம் சொல்லிக்கொள்ளப் போனேன். அவரவர்கள் தங்கள் தங்கள் பிரயாணத்திற்கு வேண்டியவைகளைச் சேகரிப்பதால் என்னுடன் பேசமுடியாமற்போவதைக் கண்டேன். இனி நான் இருப்பது தகுதியன்றென வெளியே வந்து பாட்டை வழியே வண்டிப் பேட்டையை அடுத்து அங்கு ஓர் பலகையில் உட்கார்ந்தேன்.

## தனபதி சாலை.

தேவநகர்க்கு கோழிபுரி வடக்கே இருபதுமயிலென்றும் கோழிபுரிக்கு வடகீழ் பாகத்து நந்தன நாடு நாற்பதுமயிலென்றும் தெரியவேண்டியது. இதற்கிடையே இருபதாவது மயில் சந்தனநாட்டிற்கு நேர் தென்பாகத்தும் கோழிபுரஞ் சென்று வடகீழ்பாகமாகவும் 'செல்லூர்' என்ற ஓர் சிற்றூர் இவ்வூருக்கு வண்டி புறப்படத் தயாராயிருந்தது. நான் போகவேண்டிய இடம் இதுவென்று நிலையில்லாமையால் வண்டிபோகுமிடத்திற்குப் போகத்தயாரானேன். எனக்கு ஜமீன்தார் வீட்டில் சம்பளம் ரூபாய் நூற்றியெண்பதும் நான் மறுவேலைத் தேடிக்கொள்ள ஒரு மாத கெடுவிற்குரிய சம்பளம் ரூபாய் பதினைந்தும் ஏறத்தாழ ரூபாய் இருநூறு என்னிடமிருந்தது. நான் வேலை விட்டு வருமுன் அரண்மனைத்தலைமை வேலைக்காரன் எல்லோர்க்குந் தந்தபடி,



எனக்கும் ஓர் நற்சாட்சிப் பத்திரந்தான். அது எனக்கோர் புதிய வேலை தேடிக்கொள்ள ஏதுவாயிருந்தது. நான் நல்ல உடைகளைத் தரித்துக்கொண்டு அவ்வண்டியி லேறினேன். செல்லூர்வந்து சேர்ந்தேன்.

அங்கு ஓர் சிறிய சத்திரத்தில் தங்கினேன். உண்டு களையாறி அச்சத்திரத் தலைவனை இவ்வூரில் பிரபுக்கள் உண்டாவென்றும் என்னை வேலையில் அமர்த்திக்கொள்ளப் பிரியப்படுவார்களாவென்றும் கேட்டேன். அவன் இவ்வூரில் தனபதிசாலை ஒன்றிருக்கிறதென்றும் அம்மாளிகை முன்னோர் பிரபுவினதென்றும் தேவபுரி நகரில் வியாபாரத்தால் பெருத்த திரவியந் தேடிய செல்வ சாதனன் என்கிற வியாபாரி பத்து வருடமாய் சுகவாசியாய் வந்திருக்கிறானென்றும் அவன் மனைவி அலங்காரி என்பவள் ஓர் ஜமீன்தார மகளென்றும் அவர்கட்கு குழந்தை யில்லையென்றும், அவர்களிடமிருந்த வேலைக்காரரில் ஒருவன் பத்துதினங்கள் முன்னர் தன் சொந்த காரியமாய் வேலையை விட்டுப்போயினனென்றும் அவன் காலிஸ்தானத்திற்கு ஓர் வேலைக்காரன் தேவையாய்த்தா னிருக்குமென்றும் கூறினன். நான் மாலை மூன்றுமணி சுமாருக்குச் சென்றேன். தனபதிசாலை இதுவென அங்குள்ளவர்கள் காட்டச் சென்றேன். அம்மாளிகை முன் தோட்டவாயிற்படியைத் தாண்டினேன். அவ்வாயிலிற்கு அரைபர்லாங்கு தூரத்தில் மாளிகையிருந்தது. மாளிகை முன்புரம் தோட்டத்தில் இரண்டொரு புட்பச்செடிகளும் இரண்டொரு பெரு விருக்ஷங்களும் மாளிகையை யொட்டி இரண்டொரு பெரு விருக்ஷங்களுமே தோன்றின. அலங்காரத்திற்காகவும் உற்சாகத்திற்காகவும் அங்கு பயிர் செய்யப்பட்டன எதுவுங்காணேம். மாளிகையின் சமீபத்திற் சென்றேன், அது லட்சணமாகவும் கெட்டியாகவும் கட்டப்பட்ட ஓர் கட்டிடமா யிருப்பினும் அதனை புதுபிக்காமலே அதன் பரிசுத்த பார்வைக்குறைவாய் காணப்படுவதையும் கண்டேன். சன்னல்களின்பேரில் தொங்கவிடப்பட்டிருந்த வஸ்திரங்கள் பழயனவாயும் அழுக்கடைந்தனவாயு மிருந்தன. இச்சமயம் உள்ளிருந்து உயரமாயும் ஒல்லியாயும் பழமையான ஓர் உயர்ந்த உடைதரித்து அவலட்சணமென்று சொல்லமுடியாத ஓர் மாதும் அவள்பின்னே நெட்டையும் ஒல்லியுமான ஓர் வேலைக்காரன் இரண்டு நாய்களைக் கட்கத்தில் இடிக்கிவந்தான். அந்நாயகளும் அதிகக் கொழுப்பேறி யில்லாமலே இளைப்புடையனவாய்த் தோன்றின. இப்படி வெளி வந்தவர்களைக் கண்டு சற்றுவிலகி அவள்விட்டு எஜமானியாகலாமென்று எண்ணி மரியாதை செய்தேன். அவள் நீயார் என்றாள்.

நானிம்மாளிகைக்கு வேலைக்காரன் தேவையெனக் கேள்விப்பட்டு வந்தேனென்றேன். அவளென்னை ஊன்றி நோக்கி நம்மாளிகைக்கு வேலை தேடிவந்தனையா? என்றாள். ஆம் அம்மணி என்றேன். சற்று மரியாதையான தூரத்தில் விலகிவா என்றாள். அப்படியே அம்மணி என்றேன். நான் சொல்லுவதற்கு எதிற்பேசாதே யென்றாள். நானும் பின்னால் நடந்துபோனேன். அவள்பின் வந்தவனும் வெறுக்கத்தக்கவிதமாய் என்னைப் பார்த்தான். அரைமயில் தூரம் வயலடுத்த பாதைவழி உலாவித் திரும்பினாள். மாளிகை சென்று ஓர் நாற்காலியில் உட்கார்ந்தாள். அவள்வந்து உட்கார்ந்த விபரம் அப்பொழுது தெரிந்தவள் போல் பக்கத்தில் பழ வஸ்திரங்களைத் தைத்துக் கொண்டிருந்த ஓர் மாது தன் கைவேலையை அப்படியே போட்டு விசிறி எடுத்துவந்து விசிறினள்.

எஜமானியின் வேலைக்காரியாகிய பேச்சழகியை அழைத்து இன்று உலாவப்போனதில் எனக்கு மெத்த சிரமமாய் போயிற்றென்றாள். ஆம் தங்கள் தேகம் தாங்காதென்று பேச்சழகி பதில் கூறினள். சோம்பேறி

என்னும் நமது வேலைக்காரன் என் பின்னே நாயைச் சுமந்து வருவதற்குப் பதிலாக நானறியேனென்று என் பின்னால் அவைகளை நடத்திவந்தான். அத்துன்பம் என்மனதை வருத்துகிறதென்றாள். பேச்சழகி நீங்கள்பலதரமும் இது விஷயமாயும் கண்டித்திருந்தும் அவன் கவனிப்பதில்லையென்றாள்.

பின்னலங்காரியம்மாள் என்னை வேலை பார்த்து வந்ததெங்கேனுமுண்டா? என்றாள். அம்மணி சுகுண துரைமாளிகையிற் சிலகால மிருந்தேன். சந்தன நகர் ஜமீன்தார் வீட்டில் வேலைபார்த்த நற்சாட்சிப் பத்திரமிதோயிருக்கிறதென்றேன். சந்தன நகர் ஜமீன் என் நெருங்கிய பந்து. அவர்கள் குடும்பம் பரிதாப நிலைமையை யடைந்தது நேற்றுத்தான் தெரியும் என்று சற்று வருத்தப்படுபவள் போல கண்ணைத்துடைத்துக் கொண்டு அந்நற் சாட்சிப் பத்திரத்திற்கு நாம் மரியாதை கொடுக்கவேண்டிய தென்றாள். பேச்சழகியும் ஆம், கொடுக்கவேண்டியது தானென்றாள். உன் பெயரென்ன வென்றாள். சந்திர வதனனென்றேன். பெயரவ்வளவு கெடுதலல்ல வென்றாள். பேச்சழகியும் ஆமவ்வளவு கெடுதலல்லவென்றாள். மாதச்சம்பளம் எத்தனை என்றாள். பதினைந்து ரூபாய்களென்றேன். அது கொஞ்சம் சாஸ்திதானென்றாள். பேச்சழகியும் மெத்த சாஸ்தியென்றாள். இரவு ஒன்பதுமணிக்கு வேலைக்கு உன் சாமான்களை எடுத்துக்கொண்டுவா யென்றாள். நான் விடைப்பெற்று வெளியே வந்தேன்.

தெருவாயிற்படிக் கெதிரில் ஓர் தடித்த மனிதன் சற்று குள்ளமாயும் கொஞ்சம் நாகரீகமாய்விளங்கும் உடைதரித்து எதிரில்வந்தார். அவர் என்னை யாரென்றார். நான் இம்மாளிகைக்கு வேலைக்காரனாயமர்த்தப்பட்டு என்சாமான்களைக் கொண்டுவருவதற்குச் செல்கிறேனென்றேன். எத்தனைமணிக்கு வருவாயென்றார். ஒன்பது மணிக்கு வருவேனென்றேன். அவர் நானிவ்வீட்டெஜமானன் நான் சொல்லுகிறபடி நீ நடக்கவேண்டும். நீ எட்டரை மணிக்கே வந்துசேரவேண்டியதென்றார். நானும் சரியென்று சொல்லி நடந்தேன். மாளிகைக்கு வெளியே வந்தேன்.

செல்லூருக்கும் தனபதிசாலைக்கும் ஒரு மயில் பெரிய ரஸ்தாவை யொட்டியுள்ள ஓர் தனித்த கட்டடம். மற்றப்பக்கங்களெல்லாம் நஞ்சை நிலங்களுள்ளன. மாலைகாலமதலால் நடந்துபோவது சமாதானமாயிருந்தது. நான் தேடிய புதிய வேலைக்குரிய இடத்தில் கண்ட மனோ துன்பமான காரியங்களைக் கண்டு அங்கு வேலைக்கு போகாதிருப்பது நலமென எண்ணினேன். இருப்பினும் கிடைத்தவேலையையும் விட்டு கையிலிருக்கும் பணத்தைச்சிலவு செய்து கொண்டிருப்பதிலும் அவ்வேலையை ஒப்புக்கொள்வது நலமெனத் தீர்மானித்தேன். அவகாச மிருந்தால் அவ்வூரைச் சுற்றிப்பார்த்துவரத் தீர்மானித்து சுற்றி ஓர் சாப்பாட்டிற்குரிய கடையில் உட்கார்ந்து கொஞ்சம் தேத்தண்ணீரருந்தினேன். வாயிற்படியில் ஓர் வண்டிவந்து நின்றது. அவ்வண்டியிலிருந்து கோபாலகிருஷணப்பிரபு இறங்கித் தேத்தண்ணீர் வந்து கேட்டார். நான் திடீரென வெளியே வந்து அவ்வண்டியினுள் எட்டிப்பார்த்தேன். என் அழகிய சந்திரவதனியைக் கண்டேன். இதற்குள் சாரதி என் கையைப் பிடித்திழுத்து கையிலிருந்த சவுக்கால் ஓர் பூசை கொடுத்து கீழே உருட்டித்தள்ளினான். நான் எழுந்திருக்குமுன் வண்டி ஓடவாரம்பித்தது. பக்கத்திலிருந்தவர்களெல்லாம் நல்ல பதில் பெற்றானென்று சிரித்தார்கள். நானெழுந்து வண்டியைப் பின்பற்றி ஓடினேன். வண்டி வெகு வேகமாய் ஓடிப் போயிற்று. நான் காலலுத்து ஓர் கல்லின்மேல் உட்கார்ந்து அழுது என் களையாறினேன்.



பின் எழுந்து சத்திரத்திற்குச் சென்று என் சாமான்களை எடுத்துக்கொண்டு ஓர் போக்கு வண்டியிலேறி தனபதிசாலை சென்றேன். அவ்வீட்டுத் தலைவர் ஓர் தீபத்தைக் கொடுத்து உன் சாமான்களைக் கொண்டு ஓர் அறையைக் காட்டி அதில் வைத்து பின் தீபத்தை நிறுத்தி உண்டுவந்து பின் தீபத்தை ஏற்றி பெத்தநாழி தாமசியாமல் படுக்கை தயாரித்துக்கொண்டு தீபத்தை நிறுத்திவிடவேண்டியது. காலை ஆறுமணிக்குள் எழுந்திருக்கல் வேண்டும், இரவு ஒன்பது மணிக்கு உன் படுக்கைக்குப் போகலாமென்றார்.

அவர் சொன்னபடியே சென்று போசன சாலை சென்றேன். அங்கு எல்லாம் மிதமாகவே நடப்பது கண்டேன். சுகுணதுரை மாளிகையிலும் சந்தன் நகர் ஜமீன்தார் வீட்டிலும் ஏழைகட்கு உபயோகத்திற்காக உபகரிப்பனவே இங்கு உயர்ந்த ஆகாரமாய்க் கருதப்பட்டது. ஒவ்வொருவருக்கும் போஜனத்திற்கு இவ்வளவென்று கணக்கிடப்பட்டு அதின் கணக்கின்படியே சாமான்களும் அன்றாடம்கொடுக்கப்பட்டது. ஆதலால் அளவுமிஞ்சிபோசனம் கிடைக்காது. தீபமும் அளவுமிஞ்சி எரியாது. எரியுமானாலும் எரியும்படிச் செய்தல் கூடாது. சமையற்சாரன் ஒருவன். சோம்பேரி என்பவன் அன்றாடம் சமையல் சாமான்களை இரவே சமையற்காரனுடன் துலக்கி பந்தோபஸ்து செய்து காலையில் வேண்டியவைகளைக்கொடுக்கவேண்டியது. வீடு கூட்டவேண்டியது. எஜமானி உலாவப்போனால் கூடவே போகவேண்டியது. நாய்களை கவனிக்கவேண்டியது. பேச்சழகி, ஆசனங்களைத் துடைத்து கிழிந்த உடை முதலியவைகளைத் தைத்து எஜமானிக்குபகாரமா யிருக்கவேண்டியது. நான் கூப்பிடும்போது ஆஜராகி வெளிவேலைகள் பார்க்கவேண்டியது. ஆ! ஆ! நால்வரே அப்பெரிய மாளிகைக்கு வேலைக்காரரென்பது கஷ்டமும் விசனமுமான காரியம். நானுண்டபின் படுத்து நித்திரை செய்யப்போனேன்.

சற்று நேரத்திற்கெல்லாம் செல்வ சாதனர் என்னறைக்குப் பக்கத்திலுள்ள சோம்பேரி அறையில் தீபம் எரிவதைக் கண்டு ஒன்பதுமணி ஐந்து நிமிஷங்கள் சென்றன. உன் முட்டாள் தன்மையான வேலையை எவ்வளவு கண்டித்தும் நீ கவனிப்பதில்லை யென்று கோபித்து தீபத்தை உடனே நிறுத்தும்படி கட்டளையிட்டார். அவனும் பயந்தவனாய் உடனே நிறுத்தினான். இம்மனோ தொந்திரவான காரியங்களைப் பேசிப் படிப்போரை வருத்த எனக்கு மனமில்லை.

ஒருமாதம் சென்றது. அவ்வீட்டிற்கு விருந்திற்கே யாரும் அழைக்கப்படுவதில்லை. ஓர் நாள் எஜமானன் ஓர் கடிதத்தைக் கொடுத்து செல்லூரிலுள்ள ஓர் மனிதர்க்கு கொடுத்து வரும்படிச் சொன்னார். நானும் அக் கடிதத்தைக் கொடுத்து திரும்பி வரும்போது கடைத்தெருவைப் பார்த்து பாட்டை இரும்புமிடம் வந்து மாளிகைவருவதற்குள்ள பாதையில் வந்தேன். இருபது கோல் தூரத்தில் சூதன் நிற்பதைக் கண்டேன். என் மனம் நடுங்கி அசைவற்று ஒரு நிமிஷம் நின்று பின் பிரக்ஞைவந்து சூதனைப் பார்த்தேன். அவனின்னும் காணவில்லையெனத் தெரிந்து சமீபத்திலிருந்த ஓர் போஜன சாலைப்புரம் ஓடினேன். அவ்வோரத்தில் என்னழகிய அன்புடையாள் சந்திர வதனி நிற்பதைக்கண்டேன். அவள் அத்தானென்று என் கையைப் பிடித்துக் கொண்டாள். நானும் பரிசுத்தமான நெஞ்சுடன் எனன்பே! என்றேன். இருவர் கண்களும் சூதன்பாற் சென்றன. சூதனும் அங்கோரழகிய வீட்டில் நுழைந்ததைக் கண்டோம்.

கமலத்தன்னை.

# நமது வைஸிராயின் பேச்சு.

"தம் உயிரை மிகுத்ததற்காகக் கடவுளைப் பிரார்த்தனை செய்துவிட்டு இந்திய ஜனங்கள் அனைவரும் எவ்வித வேற்றுமையுமில்லாமல் லேடி ஹார்டிஞ்ஜும் தாமும் தப்பினதற்குச் சந்தோஷப்பட்டு அநுதாபங்காட்டினார்களென்று தாங்கள் இருவருக்கும் உண்டாயிருக்கும் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்தார். அவர்கள் ஹௌதாவில் போய்க்கொண்டிருக்கும் போது பின்னால் பணிவிடை செய்துகொண்டிருந்த இருவர் கொலை பாதகனுடைய வெடிகுண்டினால் இறந்து போனார்களென்று தாம் அடங்காத் துயருற்றதாகவும் அவர்கள் குடும்பத்துக்கு தமது முழு அநுதாபத்தையும் காட்டுவதாகவும் சொன்னார்.

இரண்டு வருஷமாக நடத்தின சட்டசபையில் மெம்பர்களாக இருந்தவர்களிற் சிலர் இப்போது மெம்பர்களாயில்லாவிட்டாலும் அவர்களை நான் நேசர்களாகவும் துணைவர்களாகவும் இன்னும் கருதுகிறேன். அப்போதிருந்தவர்களிற் சிலரும் மெம்பர்களாக வந்திருக்கிறார்கள். புதுமெம்பர்களும் வந்திருக்கிறார்கள். அனைவரையும் நான் சந்தோஷமாய் ஏற்று, சென்ற இரண்டு வருஷமாக சபை எவ்வளவு கம்பீரமாயும் நிதானமாயும் நடந்ததோ அந்த அநுஷ்டானத்தை இப்போதுபகௌன்சிலும் பின்பற்றி வருமென்று பூரண நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

நான் காயப்பட்டு பிரக்ஞை தப்பி மறுபடியும் பிரக்ஞை திரும்பப் பெற்றபோது, எனக்கு முதலிலுண்டான எண்ணம் இந்த உபயோகமற்ற பாதகச் செயலைச் செய்து இந்தியாவின் அழகிய நற்பெயரைக் கெடுத்து விட்டானேயென்றும், இந்திய ஜனங்களின் மனசைப் புண்படுத்திவிட்டானென்றும், இந்திய ஜனங்களின் ஜீவகாருண்யத்துக்கும் ராஜ பக்திக்கும் அவர்களுடைய மதக் கொள்கைகளுக்கும் இப்படிப்பட்ட பாதகச் செயல் முற்றிலும் விரோதமென்றும் எனக்குச் சிந்தனையுண்டு பண்ணிற்று. ஜனங்களுக்கு நான் சுலபமானவனாக வேண்டுமென்ற விருப்பத்தினால் அனாவசியமான முன் ஜாக்கிரதைகள் வேண்டியதில்லையென்று என்னைப் போலீஸார் காக்க உத்தரவிடாமல் தடுத்து, ஜனங்களின் சம்ரக்ஷணையில் லேடி ஹார்டிஞ்ஜும் நானும் நம்பிக்கை வைத்திருந்தோம். இப்படி நம்பிக்கைவைத்திருந்தது பிசகென்று நான் இப்போது நினைக்க நியாயமில்லை.

ஆயினும் இந்தப் பாதகச் செயலினால் இந்தியா முழுமையும் ஆத்திரமும் கோபமுங்கொண்டது. அந்தச் செயல் செய்தவனைப் பிடித்து அவனுக்கு ஒத்தாசையாயிருப்பவர்களைக் கண்டித்து அந்தச் செயல்களில் அருவருப்பும் அவைகளை இனி செய்யாதிருக்க நிச்சயமும் உண்டாக்குவதில் பலன் பெறுமென்று நம்புவது அதிகமா? இவர்கள் ஒரு தனியான வகுப்பாரென்றாவது அவர்கள் ஒரு சமூகத்தைச் சேர்ந்து ஜனங்களுடன் பழகாதவர்களென்றாவது நம்புதல் கஷ்டம். அவர்கள்மீது செல்வாக்குள்ளவர்களும் அவர்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களும் இல்லையா? நிதான புத்தியும் விவேகமும் உள்ளவர்களோடு அவர்களுக்குச் சம்பந்தமில்லையா?



ஆயினும் இந்த சம்பவத்தால் இந்தியாவிடம் நான் கொண்டிருக்கும் நோக்கம் மாறாதென்று இந்திய ஜனங்களனைவருக்கும் உறுதி சொல்வேன். இதுவரையில் அனுஷ்டித்து வந்த ராஜாங்க முறையை ஒரு மயிரிழையும் தவறாமல் இனியும் அநுஷ்டிப்பேன். இப்படி லார்ட் ஹார்டிஞ்ஜ் பேசிவிட்டு சமீபத்தில் சில வருஷங்களாக இந்தியாவில் நேரிட்ட கொலைக் குற்றங்களைப் பற்றிப் பேசப் புகுந்து, இந்தக் குற்றங்கள் இந்தியாவின் பெயருக்கு ஒரு பெரும் மாசைக் கொண்டு வந்துவிட்டதென்றும் அந்த மாசை யகற்றுவதில் எந்தப் பிரயத்தனமும் அதிக மாகாதென்றும் சொன்னார். இந்தியாவை ஆளுகை புரிந்து அதன்நற்பெயரைவெகு கவலையுடன் காக்ககடமைப்பட்டிருக்கும் ராஜப்ரதிநிதியாகவும் நமது ராஜ சக்ரவர்த்தியின் கோடிக்கணக்கான விசுவாசமுள்ள பிரஜைகளில் ஒருவனாகவும் இந்தியாவிலும் இந்தியாஜனங்களிடத்திலும் அவர்கள் மத்தியில் வசித்து அன்பு வைத்திருக்கிறவனாகவும் இப்படி நான் சொல்லுகிறேன்.

இம்மாதிரிக் குரூரச் செயல்களால் இந்தியருக்குண்டாகும் அருவருப்பு ஆத்திரம், கோபம் முதலியவைகளை அறிந்தவனாக நான் கேட்பது என்னவென்றால், இவைகளை யடக்குதல் எந்த உபாயத்தாலும் சாத்தியமல்லவா? உபாயம் இருக்கிறதென்றே நம்புகிறேன். ஜனங்களின் பொது அபிப்பிராயம் அவைகளுக்கு விரோதமாய் வெளியாகி பலவந்தமாய்ச் செலுத்தப்படுவதால் மட்டும் அவைகள் முற்றிலும் அற்றுப்போகவேண்டும். அப்படிப்பட்ட குற்றங்களுக்குச் சிறிதேனும் இடங் கொடுக்கக்கூடாதென்றும் அப்படிக் குற்றஞ் செய்கிறவர்களையும் அவர்களுக்கு உதவியாய்ப் பின் நிற்பவர்களையும் சமூக விரோதிகளென்றும் நிச்சயமுண்டாகவேண்டும். குற்றங்களுக்குத் தூண்டுதல்களா யிருப்பவைகளில் ராஜாங்கத்தைப்பற்றி மிதமற்ற வார்த்தைகள் சொல்லி குற்றங்காணுவதும் ராஜாங்கத்துக்கு விரோதமான வழிகளை யனுஷ்டிப்பதும் அதனால் நிலையற்ற மனதுள்ளவர்களைச் சிறிது சிறிதாகக் குற்றங்கள் செய்யும்படி செய்வதும் ஒன்றாக நினைக்கவேண்டும்.

ஆயினும் 24-ந் தேதி பாதகச் செயலினால் இந்திய ஜனங்கள் அடைந்த துக்கத்தினாலும் கோபத்தினாலும் இனி இக்குற்றங்கள் நடக்கக்கூடாவென்று இந்திய ஜனங்கள் நிச்சயம் செய்திருக்கிறார்களென்றும் இந்தியாவின் நல்ல பெயர் காக்கப்படும் என்றும் நம்பிக்கையுண்டாயிருக்கிறது. இந்தக் கோரிக்கையும் நம்பிக்கையும் என் மனதிற் புகுந்து இந்தியாவிலும் அதன் பிற்காலத்திலும் அதன் ஜனங்களிடத்திலும் எனக்குள்ள விசுவாசம் அசையாமலே இருக்கின்றது. இப்படி என் விசுவாசம் நான் நம்பியிருக்கிறபடி உறுதிப்படுமானால் 23-ந்தேதி இரண்டு அருமையான உயிர்ச்சேதமடைந்த பெருந்துக்கம் நல்லதாய் முடியக்கூடும்."

சுதேசமித்திரன்.

## பண்டிதர் பரிஷத்.

"திருவையாற்றில் கூடின பரிஷத் என்று வடமொழியிற் சொல்லப்படும் பிராமணப் பண்டிதர்களின் சபையைப் பல அம்சங்களில் காலவேற்றுமையைக் குறிக்கும் அடையாளமாகக் கொள்ளவேண்டும். இந்தியாவில் பல டாக

ங்களிருந்து பண்டிதர்கள் ஒன்றாய்ச் சேருவதே கஷ்டம். சுமார் 120 பண்டிதர்கள் பற்பலதூர ஸ்தலங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். இவர்களில் ஸ்மார்த்தர், வைஷ்ணவர், மாத்வர், என்ற மதத்தினரும் ஹிந்து சமூகத்தின் ஆசாரங்களில் திருத்தங்கள் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒன்றாய்ச் சேர்ந்தது இதுவரையில் நேரிடாத காரியம். இவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து மனவருத்தமில்லாமல் சமாதானத் திருத்தங்களைப்பற்றி விவகரித்தார்கள்.

“சமுத்திர யாத்திரை செய்வதும், பெண்கள் பெரிய மனுஷியான பிறகு விவாகம் செய்வதும் நாம் எல்லோரும் புண்ணிய பூமியென்று அன்புடன் கருதும் இத்தேசத்தின் பிற்கால க்ஷேமத்துக்கு இன்றியமையாவென்பதை அறியாமல் விரோதமாய் அபிப்பிராயப்பட்டார்கள். வரசுல்கம்மட்டும், அதாவது பெண்கள் விவாகம் செய்யப்படும்போது மாப்பிள்ளைகளுக்குப் பணங்கொடுக்கும் வழக்கமட்டும், சாஸ்திர விரோதமென்று ஒரேமனதாய்ச் சொன்னார்கள். இப்படிச் சொன்னது அனுபோகத்தில் எவ்வளவு பலனைக் கொடுக்குமோ தெரியவேண்டும். இவர்களுடைய அபிப்பிராயத்தைவிட பிள்ளைகளே பெண்களிடத்திலிருந்து பணம் வாங்குவதில்லையென்று விவாகத்துக்கு முன்னால் நிச்சயம் செய்துகொண்டால் அதனால் அதிகப் பலன் விளையுமென்று நினைக்கிறோம்.

ஒரு பண்டிதர் சமுத்திரயாத்திரை செய்ததற்கு அனுகூலமாகச் சில நியாயங்கள் சொன்னார். கிருஷ்ணன் துவாரகையில் வசித்தபோது அவரைப் பார்க்கப் பிராமணர் சமுத்திரம் தாண்டிச் செல்லவில்லையா? மார்மகோவா என்ற இடத்தில் பிராமணர் கப்பல் யாத்திரை செய்தார்களென்று எழுதியிருக்கும் சிலாசாஸனம் இல்லையா? நரேந்திரனாகிய சக்ரவாத்தி இங்கிலாந்தில் வசிப்பதால் அவரைத் தரிசிக்கப் பிராமணர்கள் செல்லுவது கடமையல்லவா? என தர்க்கித்தார்.”

## சமாசாரக்குறிப்பு.

ஆகாயக்கப்பற் காட்சி:—கொழும்பில் இரு ஆகாயக்கப்பல்களோடு வந்திறங்கிய இருபிரான்சுக்காரர் அக்கப்பலேறி மூன்றுநாள் காட்சி காட்டினார்கள். அனேக சனங்கல் இவ்வரிய காட்சியைக்கண்டு பெரிதும் ஆச்சரியப்பட்டனர்.

ஜப்பானின் பிரதான நகரமாகிய டோக்கியோவிம் 800 ஸ்நானக் கட்டங்களிருக்கின்றனவாம். அவற்றுள் மூன்று லட்சம் பேர் தினந்தோறும் ஸ்நானஞ் செய்கின்றனராம். அதற்காக ஒவ்வொருவரும் ஒரு அணு வீதம் வரி செலுத்த வேண்டுமாம்.

உலகத்தில் பிரன்சு பாஷை பேசுகிறவர்கள் 4½ கோடி ஜனங்கள், ஜெர்மன் பாஷை பேசுகிறவர்கள் 8 கோடி ஜனங்கள். ஆங்கில பாஷை பேசுகிறவர்கள் 16 கோடி. ஜனங்கள். தமிழ்ப் பாஷை பேசுகிறவர்கள் 2½ கோடி ஜனங்கள். தெலுங்கு பாஷை பேசுகிறவர்கள் 3 கோடி. வங்கபாஷை பேசுகிறவர்கள் 4½ கோடி ஜனங்கள்.

இப்போதுள்ள போஸ்டு கார்டுகள் செலவானவுடன் ஜார்ஜ் சக்ரவர்த்தி சக்ரவர்த்தினி இருவரும் பதிக்கப்பட்டுள்ள புதுப்போஸ்ட் கார்டுகள் விற்ப



தற்கு வெளியிடப்படும். அவை ஐந்தரை அங்குல நீளமும், மூன்றேகால் அங்குல அகலமுமுள்ளனவாக விருக்கும். தலையொட்டும் பக்கத்தில் சரிபாதியில் கோடுபோட்டிருக்கும். அக்கோட்டின் வலதுபுறத்தில் விலாசமெழுதி இடதுபுறத்திலும் சமாசாரமெழுதலாம்.

வட அமெரிக்காவிலுள்ள கெண்டக்கி யென்னும் மாகாணத்தில் ஒரு தேனீக் கூடு இருக்கிறதாம். அதிலிருக்கும் ஒரு அறைமாத்திரம் நூற்றைம்பது அடி உயரமும் பத்து ஏக்கர் அகலமும் உள்ளதாம். அந்தத் தேன் கூடானது கற்பாறையினால் செய்யப் பட்டிருக்கிறது. கற்பாறையின் நாலு பாகங்களிலும் சட்டை போட்டாற்போல தேனீக்கள் கூடு கட்டிக்கொண்டிருக்கின்றனவாம்.

இப்பூமியில் பிராணிகளின் விகாஸமுறையில் (Evolution of Animals) மனிதன் 4 லக்ஷம் வருஷங்களுக்கு முன்னர் தோன்றினான் என்று ஒரு பிரான்சு தேசத்து அறிஞரும், 30 லக்ஷம் வருஷங்களுக்குமுன்னர் தோன்றினான் என்று அத்தேசத்து வேறு ஒரு அறிஞரும், சொல்லுகிறார்கள். பிரஹ்மஞான தர்சனத்தின் புத்தகங்களின்படி 1 கோடியே 80 லக்ஷம் வருஷத்திற்கு முன்னர் மனிதவர்க்கம் உண்டாயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

ஒரு அதிசயக் காட்சி:—சூரியன் அஸ்தமிக்கும் சந்தர்ப்பத்தில் மாலை 5-45 மணிக்கு வானத்தில் மேற்குத் திசையில் ஒரு பிரகாசமான நட்சத்திரம் காணப்படுகிறது. அது உயர உயர நகர்ந்துகொண்டே செல்லுகிறது. அதைச் சிறு நட்சத்திரங்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. அது புதிதாய்த் தோன்றியிருக்கும் நட்சத்திரமாக இருக்குமோ என்னமோ என்ற சந்தேகம் அநேகருக்கு உண்டாயிருக்கிறது.

மின் சாரசக்தியால் தூங்கப்பண்ணுதல்:—ஒரு ஜர்மன் வைத்தியர் முயல்களையும் நாய்களையும் மின்சார சக்தியை (Electricity) அவற்றின் மூளையில் புகவிடுதலினால் தூக்கத்தை உண்டு பண்ணுகிறார். அப்படிச் செய்வதில் யாதொரு அபாயமு மில்லையாம். அநேக மனிதர்கள் தூக்கமில்லாமல் வருந்துகிறார்கள். அவர்களுக்கு இத்தகைய மின்சார சக்தியைப் பிரயோகம் பண்ணுவதால் தூக்கத்தை உண்டுபண்ணக் கூடுமென்று மேற்கூறியவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

போபால் பீகம் சாகிபாவின் மற்றொரு பிரேரணை:—போபால்பீகம் சாகிபா ராஜப்பிரதிநிதி பூராவாய் தேகசுகத்தை யடையும் தினத்தின் ஞாபகமென்றைக்கு மிருக்கும்படி அந்த தினத்தில் டில்லியில் ஒரு தர்ம ஆஸ்பத்திரியாவது, அல்லது, தர்ம அநாதைக் கிரகமாவது ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தார்களல்லவா? இப்போது அப்பெருமாட்டி, அப்பிரேரணை சரியாய்த் தோற்றவில்லையானால், அன்றைபதினம் தர்மம் செய்ய எடுத்து வைக்கப்படும் பணம் அத்தனையும் போர்க்களத்தில் காயம் பட்டவர்களுக்குத் தாதித் தொழில் செய்யும் வகையில் செலவு செய்யப்படுவதற்காகக் கொடுக்கப்படலாமென்று பிரேரித்திருக்கிறார்கள்.

கோயமுத்தூரில் ஸ்திரீகளின் கூட்டம்:—கோயமுத்தூரில் ஸ்திரீகள் பலர், பெண்களுக் கென்றேற்பட்ட டிரெய்னிங்கூலில் சபை கூடினார்கள். அத்தருணம் மிஸஸ் ஹெம்மிங்கே சபாநாயகராக வீற்றிருந்தார். கோயமுத்தூர் டவுன் ஸ்திரீகளும் விவசாயக் காலேஜுக் கருகில் உத்தியோகஸ்தர்களு

க்கென்று கட்டப்பட்டிருக்கும் வீடுகளிலுள்ள ஸ்திரீகளுமாக சுமார் 50-பேர் வந்திருந்தார்கள். பாட்டுகள் பாடப்பட்டன, பெண்கல்வியைப்பற்றி மிஸ்ஸஸ் நாகராஜ அய்யர் ஒரு வியாசம் வாசித்தார். அதை மிஸஸ் தேவசகாயம் ஆதரித்துப் பேசினார். சேர்மன் தம் அபிப்பிராயத்தைச் சொன்னவுடன் சபை கலைந்தது.

ஜப்பானில் மூங்கிலிலிருந்து காகிதம் செய்தல்:—ஜப்பானில் புதிதாய் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. தொழில் முயற்சிகளில் மூங்கிலை உபயோகத்துக்குக் கொண்டுவருவதே அந்தக் கம்பெனியின் நோக்கம். ஜப்பானிலுள்ள கோப் நகரத்துக்கு அருகிலுள்ள ஒரு சாஸ்திர ஆராய்ச்சி சாலையில் அநேக சோதனை முறைகளைச் செய்து திருப்தியடைந்து, அந்தக் கம்பெனியார் பார்மோஸாத் தீவில் 8000 ஏக்ரா பூமியை மூங்கில் வளர்ந்த காட்டை நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 300 டன் மூங்கிலை வேலை செய்வதற்குத் தகுந்த ஒரு தொழிற்சாலையை இப்பொழுது காகி என்ற பட்டணத்துக்கு அருகில்கட்டிக்கொண் டிருக்கிறார்கள்.

சீனாவில் இளம் போத்துக்களையே கடிதம் செய்வதற்கு உபயோகப்படுத்துவது நீடித்த வழக்கமாயினும், ஜப்பானில் முற்றின மூங்கிலையும் உபயோகிக்கிறார்கள். தொழிலுக்குவேண்டிய மூங்கில் கிடைக்குமா என்ற பயமே இல்லை; ஏனென்றால் மூங்கில் அதிகவிரைவாக வளரக்கூடியது. மூங்கிலை ஒன்றிரண்டு அங்குல நீளத் துண்டுகளாக வெட்டி, ஸல்பேட் ஆப் லைமுடன் சூளைகளில் வேகவைத்து, நீரில் கழுவி, மின்சார சக்தியால் வெளுத்து மறுபடி கழுவி, இடித்து கூழ்செய்து, நீராவியால் காயவைத்து பிறகு ஜப்பானில் கடிதமாகச் செய்யப்படுமாம்.

டெல்லிபோன் (Telephone) இயந்திரத்தின் நூதந உபயோகம்:—இந்த இயந்திரத்தால், சமாசாரங்கள் பேசிக்கொள்ளுவதை நாம் அறிவோம். ஒரு தாயார் தன் குழந்தையைவிட்டு வேறு இடத்திற்குப் போயிருந்தாள். அப்போது, குழந்தை அழுதது. அதை அங்கிருந்த வேலைக்காரி, தாயாருக்கு டெல்லிபோன் மூலம் தெரிவித்தாள். தாயார் குழந்தையின் காதின் அருகாமையில், டெல்லிபோனை வைக்கும்படி திரும்பத் தெரிவித்தாள். உடனே டெல்லிபோன் மூலமாய் தாயார் ஒரு தாலாட்டு பாட்டை பாடி அக் குழந்தையைத் தூங்கும்படி செய்தாள். பின் தான் போன காரியத்தை முடித்துக்கொண்டு தன் வீட்டுக்குத் திரும்பினாள். அதுவரை அக்குழந்தை நன்றாய்த் தூங்கியதாம்.

புதைந்துகிடக்கும் தனம்:—வங்காளப் பத்திரிக்கையொன்று பின் வருமாறு கூறுகின்றது:—"டெக்கா ஜில்லா" விக்ரம புரத்தைச்சேர்ந்த ராம்வால் என்னுமிடமானது மஹாராஜா புலால்ஸென் காலத்தில் அவரது ராஜ்யத்துக்குத் தலைநகரமாயிருந்தது. அந்தக் கிராமத்திலுள்ள ஒரு பழைய குளத்தில் கல் கட்டடமொன்று மறைந்து கிடக்கின்றது. அந்தக் கட்டடத்தில் புலால் ஸென் ராஜாவின் திரவியங்களெல்லாம் ஒளித்து வைக்கப்பட்டிருப்பதாக வெகு நாளாகக் கூறப்பட்டு வருகின்றது. தற்போது டெக்கா ஜில்லா மாஜிஸ்டிரேட் மேற்படி குளத்தை வெட்டி பரிசோதனை செய்யும்படி உத்தரவிட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

அலிகர் காலேஜூம் போபால் பீகம் சாகிபாவும்:—போபால் பீகம் சாகிபா மகமதிய யூனிவர்ஸிடி நிதிக்கு லட்சம் ரூபாய் உபகரித்திருக்கிறார். அது தவிர அலிகாரிலுள்ள மகமதியப் பெண்பாடசாலைக்கு அப் பெருமாட்டி வருஷத்தில் ரூபா 1400 நன்கொடை கொடுத்து வருகிறார்கள். அலிகர் மகமதியக் கல்விக் கான்பரென்ஸுக்கும் மாதந்தோறும் ரூபா 200 உபகரித்துவருகிறார்கள். இப்போது அந்தப் பெருமாட்டி அலிகார் காலேஜூக்கு மாதந்தோறும் ரூபா 500 நிரந்தரமாய் திரவிய சகாயம் செய்து வருவதாய் வாக்களித்திருக்கிறார்களென்று அந்தக் காலேஜ் டிரஸ்டிகள் தெரிவித்திருக்கிறார்கள். மகமதியக் கல்வி விருத்தி விஷயமாய் போபால் பீகம் சாகிபா காட்டிவரும் அக்கரை விசேஷ நன்குமதிப்புக்குரியதே.



சென்னை முஸல்மான் ஸ்திரீயின் தர்மம்:—சென்னை வாசியான முஸல்மான் விதவை ஒருத்தி காலை போஜனஞ் செய்வதை ஒழித்துவிட்டு, அதனால் கொஞ்சம் பணத்தைச் சேகரித்து அதை துருக்கி யுத்தத்தில் மாண்டவர்களின் மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்கும் காயம்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்கும் என்று ஏற்பட்ட லேடி ஹார்டிஞ்சுப் பண்டுக்கு அனுப்பினாள். அவ்வித தர்மத்தைக் கண்டு மெச்சி அவளுக்கு ஜனவரி மீ 22உ டெல்லி ராஜப்பிரதிநிதி லாட்ஜிலிருந்து ஒரு தந்தி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தத் தந்தியில் துருக்கி ஸ்திரீகள் அனாதைக் குழந்தைகள் இவர்களைக் காப்பாற்றுவதற்கென்று ஏற்பட்டிருக்கும் நிதிக்கு அந்த ஸ்திரீ இவ்வளவு பிரியத்துடன் பண உதவி செய்திருக்கிறதைக் கண்டு லேடி ஹார்டிஞ்சு அவளுக்கு வந்தனம் அளிக்கிறார். தவிர ஒருவேளை போஜனத்தை விட்டுவிட்டு அதனால் கொஞ்சம் பணம் சேர்த்து அனுப்பவேண்டும் என்று அந்த ஸ்திரீக்கு உண்டான உணர்ச்சியை லேடி ஹார்டிஞ்சு மெச்சினார் என்றும் கண்டிருக்கிறது.

ஸ்திரீகளின் பொதுக்கூட்டம்:—சென்னை கவர்ன்மெண்ட் ஹவுஸில், லேடி பெண்ட்லண்டின் முயற்சியின்பேரில் ஸ்திரீ கூட்டமொன்று நடைபெற்றது. லேடி ஹார்டிஞ் தமது கணவருக்கும் தமக்கும் நேரிட்ட அபாய சம்பவத்தில் காட்டிய தைரியத்தையும் பொறுமையையும்பற்றி உவந்து சென்னை ராஜதானியில் ஸதிரீகள் ஜாதிமத வித்தியாசமின்றி ஒன்று கூடி லேடி ஹார்டிஞ் இடத்தில் தங்களுக்குண்டான சந்தோஷத்தையும் மதிப்பையும் தெரிவித்துக்கொள்ளுமாறு சொல்வதற்கு ஆரம்பமாக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்தின்பலனாக லேடி ஹார்டிஞ்சுக்குக் கொடுக்கப்படவேண்டிய "அட்ரஸ்" பத்திரத்தில் சென்னையிலுள்ள ஸ்திரீகளிடத்தும் இந்த ராஜதானியைச்சேர்ந்த மற்றப் பாகங்களிலுள்ள ஸ்திரீகளிடத்தும் கையெழுத்து வாங்குவதற்காக, ஸ்திரீகளடங்கிய பிரதிநிதி கமிட்டியொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

மதுரை தர்மசாஸ்திர சபை:—மேற்கண்ட சபையின் பண்டிதர்கள் 12-ந் தேதி மதுரையில் சபைகூடி மைலாப்பூர் தர்ம சாஸ்திர ஸம்ஸ்கிருத காலேஜ் ப்ரொப்ஸரான பண்டித T. V. ஸ்ரீனிவாச சாஸ்திரியாரால் எழுதப்பட்ட "துவிஜப் பெண்களின் விவாககாலம்" என்ற நூலைப்பற்றி சர்ச்சைசெய்தார்கள். அதில் ஒரு பண்டிதர் அடியில்வருமாறு கூறினார். "பெண்களுக்கு 8-வது வயதில் விவாகஞ்செய்வது உத்தமம். எட்டுக்குமேல் பன்னிரண்டு வயதிலும் விவாகஞ்செய்வது மத்திமம். ப்ரௌடையான பிறகு விவாகஞ்செய்வது அதமம் என்றும் மேற்கண்ட மூன்று காலங்களிலும் விவாகஞ்செய்யலாம் என்று ஹிந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ப்ரௌடையாகி மூன்று

வருஷத்திற்குள் விவாகஞ்செய்யலாம் என்று மனுசொல்லியிருக்கிறார்" என்று அந்தப்பண்டிதர் சொல்லிமுடித்தார். இதே விஷயத்தைத் தான் பண்டித ஸ்ரீநிவாச சாஸ்திரியரும் தம் நூலில் எழுதியிருக்கிறார். இதைப்பற்றி இன்னும் பண்டிதர்கள் சர்ச்சைசெய்து ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

---

ஸ்ரீ சாரதா ஸ்திரீ சங்கம்:—ஸ்ரீ சாரதாலேடீஸ் யூனியன் சங்கத்தின் முதல்வருஷப் பூர்த்திதினம் சென்றமீ கடைசியன்று எழும்பூரிலுள்ள மிஸ் டாஸ்லஸ் ட்ரெயினிங் ஸ்கூலில் கொண்டாடப்பட்டது. மிஸ்ஸஸ் T. சதாசிவ ஐயர் அக்கிராசனம் வகித்தார். சங்கத்தின் காரியதரிசியாகிய மிஸ் R. S. சுப்புலக்ஷ்மிஅம்மாளால் படிக்கப்பட்ட சங்கத்தின் வருஷாந்தர ரிபோர்ட் மேற்படி சங்கமானது மிகுந்த அபிவிருத்தி யடைந்து வருகிறதென்று காட்டிற்று. ஸ்ரீமதி K. அலமேலு மங்கையம்மாள் பெண்குழந்தைகளுக்கு சரீரப்பியாசம் வேண்டுமென்பதைக் குறித்து ஓர்பிரசங்கஞ்செய்தார். அதன் பிறகு ஸ்ரீமதி கிருஷ்ணவேணி "ஐக்கியம்" என்னும் விஷயத்தைப்பற்றி வெகு அழகாய்ப் பேசினார். அக்கிராசனம் வகித்த மிஸ்ஸஸ் சதாசிவ அய்யர், தாம் மேற்படி சங்கத்தின் அபிவிருத்தியை விரும்புவதாகவும், பிரசங்கஞ் செய்தவர்களின் திறமையையும் அபிப்பிராயத்தையும்பற்றி மெச்சுவதாகவும் சொன்னார். பிறகு காரியதரிசி அக்கிராசனாதிபதிக்கும் மற்றவர்களுக்கும் வந்தனங்கூறி முடிந்ததும், சபை கலைந்தது.

---

சென்னை மிருகங்கள் அடைக்கப்பட்டிருக்கும் தோட்டம்:—சென்னை கார்பொரேஷன் பிரெஸிடெண்டான மிஸ்டர் P. L. மூர், I. C. S. பின் வருமாறு எழுதுகிறார்:—இப்பொழுது பீபில்ஸ்பார்க்கில் ஏற்பட்டிருக்கும் மிருகங்கள் அடைக்கப்பட்டிருக்கும் தோட்டத்தில் மாம்ஸபட்சணிகளான பெரிய மிருகங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு அறை போதாது. இரண்டு அறைகள் அவசியம் வேண்டும். நாளுக்குநாள் பெரியவைகளாக வளர்ந்துகொண்டு வரும் இரண்டு ருஷியக் காடிக் குட்டிகளுக்கும் விஸ்தாரமான இடம்வேண்டும். பட்சிகளுக்குத்தகுந்த கூடு ஒன்று அவசியம் வேண்டும். இவைகளுக்குப் பிடிக்கும் செலவுகளை கார்ப்பொரேஷன் ஏற்றுக்கொள்ளுவது முடியாத காரியம் என்று சொல்ல வரவில்லை. கல்கத்தா முதலிய பெரிய நகரங்களில் ஔதார்ய குணமுள்ள கனதனவான்கள் இப்பேர்க்கொத்த வேலைகளுக்குப் பிடிக்கும் செலவை தாங்களே ஏற்றுக்கொண்டு மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் வேண்டிய இருப்பிடக் கட்டடங்களைக் கட்டி முடித்திருக்கிறார்கள். அவர்கள் அந்த தர்மத்தில் தங்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகையால் இச்சென்னையில் மிருகங்கள் பட்சிகள் இவைகள் அடைக்கப்பட்டிருக்கும் தோட்டத்தில் கனதனவான்கள் தங்களுடைய பேர்களால் தர்மத்தின்பொருட்டு கட்டிக்கொடுக்க முன் வருவார்கள் எனறு நம்புகிறேன். இது விஷயமாய் விவரங்கள் அறிய விரும்பும் கனவான்கள்.எனக்கு எழுதித்தெரிந்துகொள்ளலாம்.

---

பால்கன் யுத்தம்:—சிற்றரசுகளுக்கும் துருக்கிக்கு மிடையில் நடந்த யுத்தம் நிறுத்தப்பட்டுச் சமாதான ஒழுங்குகள் செய்வதற்குத் தத்துவ அரசுகளின் தானாதிபதிகள் லண்டன் நகரிலே கூடி ஆலோசனை செய்கின்றார்கள். யுத்தத்தை நிறுத்திச் சமாதான ஒழுங்குகள் செய்ய கிரேக்க அரசு மாத்திரம் சம்மதிக்கவில்லை. இது இப்பொழுதும் துருக்கியோடு யுத்தம் நடத்திக் கொண்டே வருகின்றது. இந்தக் கிரேக்க அரசானது யுத்தத்தை நிறுத்தச் சம்



மதியாதுவிட்டதாயினும் லண்டன் நகரில் கூடியிருக்குஞ் சமாதான சபைக்கு ஓர் பிரதிநிதியை அனுப்பியிருக்கின்றது. சமாதான ஒழுங்குகள் செய்யப்பட்டு இந்த யுத்தம் நிறுத்தப்பட்டுவிடுமோ, அன்றி இந்த யுத்தம் காரணமாக ஓர் பெரிய ஐரோப்பிய யுத்தம் நிகழுமோ தெரியவில்லை. பால்கன் சிற்றரசுகளிலொன்றாகிய சேர்வியா அட்ரியாற்றிக் கடலில் தனக்கோர் துறைமுகம் கொடுக்கப்படவேண்டுமென நிற்கின்றது. இது ஆஸ்திரிய அரசுக்குப் பிரியமன்று. ஆஸ்திரியாவில் யுத்தத்திற்கேற்ற முயற்சிகள் செய்யப்படுகின்றன. ருஷியாவும் தனக்கு நஷ்டம் விளைக்கக்கூடிய ஒழுங்குகள் செய்யப்படுமாயின் யுத்தத்திற்றலையிட ஆயத்தமாய் நிற்கின்றது. துருக்கியர் இப்பொழுது பலமான ஸ்தானங்களில் நிற்பதால் தமக்கு வாய்ப்பான ஒழுங்குகள் செய்யப்படாவிடின் சமாதானத்துக்கு உடன்படமாட்டார்கள். ஆகையால் சகலருக்கும் திருப்தியை விளைக்கக்கூடிய சமாதான ஒழுங்குகள் செய்வது எளிதாகுமென எண்ண இடத்தைக் காணோம். யுத்தமும் மறுபடி ஆரம்பமாயிற்று.

---

ஸ்திரீ சுதந்தரவாத மும்முரம்:—இங்கிலாந்தில் ஸ்திரீ சுதந்தரவாதிகள் அடாத செய்கைகளைச் செய்வதாகத் தெரிகிறது. சென்ற 27-ந் தேதி அன்று லண்டனிலுள்ள ஒரு சாபாமண்டபத்தில் எழுதப்பட்டிருந்த சித்திரத்தைக் கெடுக்க எத்தனம் செய்துகொண்டிருக்கையில், ஸிப்ஸியா பாங்காஸ்ட் என்றவள் அரெஸ்ட் செய்யப்பட்டாள். வேறு நான்கு ஸ்திரீகள் ஒரு கூட்டத்துக்கு முன் பிரசங்கம்செய்ய எத்தனிக்கையில் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள். ஸ்திரீ சுதந்தரவாதிகளின் தலைமை ஸ்தானத்தை வகித்த மிஸ்ஸஸ் பாங்கர்ஸ்ட், ஆங்காங்கு ஸ்திரீ ஸ்வதந்தரவாதிகள் சண்டைபோடவேண்டுமென்றும், தாங்கள்செய்யும் இம்சைகளால் ஜனங்களுடைய வாழ்வு துக்கமுள்ளதாக வேண்டுமென்றும் பிரசங்கம் செய்தார். ஸ்திரீகளுக்கு வோட்டுக் கொடுக்கும் சுதந்தரத்தைக் கொடுக்கக்கூடியதான திருத்த மசோதாவைப் பார்லிமெண்டில் ஆலோசனைக்குக் கொண்டுவராமல் கவர்ன்மெண்டார் நிறுத்திவிட்டதால், கவர்ன்மெண்ட் மெம்பர்கள் பார்லிமெண்டின் நடவடிக்கையை அறிந்தவர்களே அல்லவென்றும், பொறுப்புள்ள ஸ்தானங்களை வகிக்கத் தகுதியுள்ளவர்களல்லவென்றும், அல்லது கெட்ட அயோக்கியர்கள் என்றும் நினைத்தவாறு அவர் பேசினார். டப்ளினில் ஜன்னல்களை உடைத்த சில ஸ்திரீகள் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள். பிரசங்கம் செய்ய எத்தனிக்கையில் அரெஸ்ட் செய்யப்பட்ட நான்கு ஸ்திரீகளும் 2 வாரம் காவல் தண்டனை விதிக்கப்பட, கோர்ட்டிலிருந்த மற்ற ஸ்திரீ சுதந்தரவாதிகள் பெருங்கூச்சலிட்டுச் கலகம் செய்தார்கள். அபராதம் செலுத்தி அவர்கள் விடுதலை அடைய கூடியதாக சிட்சை விதிக்கப்பட்டபோதிலும், அபராதம் செலுத்த அவர்கள் சம்மதிக்கவில்லையெனத் தெரிகிறது.

---

மிஸ்ஸெஸ் சத்யபாலதேவி பூனாவிலும் சென்னையிலும் நடத்திய சங்கீதக் கச்சேரி:—தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட எல்லா இந்திய சங்கீத சபையின் ஆதரணையின்பொருட்டு இந்தியாவெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் சங்கீத சாஸ்திரத்தில் கீர்த்திபெற்ற சத்யாபாலதேவி 21-ந் தேதியன்று பூனாவில் ஒரு கச்சேரிநடத்தி அதில் அடியில் வருமாறு பேசினார். சங்கீதம், சித்திரம் எழுதி வர்ணம் இடுதல் ஆகிய இத்தொழில்களை இந்தியாவிலுள்ள ஸ்திரீ ஜனங்கள் கட்டயமாய் அப்பியசித்து வரவேண்டும். இப்பொழுது அநேககுடும்பங்களிலுள்ள ஸ்திரீகள் பொழுது போக்குவதற்கு உபயோகமுள்ள தொழில்களை

அறியாமல் வம்பு வளர்ப்பதில் வீணாகக் காலத்தைக் கழித்து வருகிறார்கள். மேற்கண்ட இரண்டு தொழில்களை அப்பியசித்து வந்தால் வம்பு வளர்ப்பதில் காலங்கழிக்கும் ஸ்திரீகளை இந்தியாவில் காண்பது அரிதாகும் என்றார். சத்ய பாலதேவி சென்னைக்கு 25-ந் தேதி மாலை விக்டோரியா ஹாலில் பாட்டுக்கச்சேரி நடந்தது. அச்சமயம் பலர் வந்திருந்தார்கள் ஸர் C. சங்கரன்நாயர் ஸ்ரீமதி ஸத்யபாலதேவியைப்பற்றிச் சிறப்பாய்ச் சில வார்த்தைகளைப் பேசினார். இந்திய சங்கீத சம்பந்தமாய் அந்த ஸ்ரீமதி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உழைத்திருப்பதைப் பற்றி மிஸ்டர் T. ரங்காச்சாரியார் பேசினார். சங்கீதக் கச்சேரி ஆரம்பிப்பதற்கு முன்னரே, தம்மால் பம்பாயில்ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் எல்லா இந்திய சங்கீத அக்காடெமியைப்பற்றியும், அதன் கிளை ஒன்று இச்சென்னை நகரில்ஸ்தாபிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றியும் அவ்வம்மை பேசினார். சங்கீத சாஸ்திரத்தைசாஸ்திரோக்தமாய் கற்பிக்க வேண்டிய முறைகள் இன்னவை என்பதைவிவரிப்பதின் பொருட்டு இந்தியா வெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து சங்கீதத்தை சாஸ்திர முறைப்படி அப்பியசிக்கும் வழியைக் காட்டி வருகிறார். சங்கீதம் பாடி ஜனங்களின் காதுகளுக்கு இன்பத்தை உண்டுபண்ணும் பொருட்டு வரவில்லை. அவர் சொல்லுவது சாஸ்திரமுறையாதலால், அதில் சம்பூர்ண ஞானம் உள்ளவர்களுக்கு இன்பத்தைக் கொடுத்திருக்குமேயன்றி, ஏனையோக்கு அவ்வளவு இன்பத்தைக் கொடுக்கவில்லை என்று நினைக்கிறோம்.

மாதர் மனோரஞ்சினி.

இது மாதர்களுக்கும் பெண்களுக்கும் அறிவைப்புகட்டும் ஒரு மாதாந்தரப் பத்திரிகை. இதில் சித்திரப்படங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது இதற்கு 15-வது வருஷம் நடந்துவருகிறது. இதன் வருஷசந்தா (சாதாரண பதிப்புக்கு) ரூபா - 2. உயர்ந்த பதிப்புக்குச் சந்தா ரூபா - 2. அணா-8. வேண்டுவோர் கோயம்புத்தூர் சி. எஸ். இராமசுவாமி ஐயர், மாதர் மனோரஞ்சனி பத்திராதிபர், நெ. 12, தணிகாசலப்பிள்ளைத் தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவேண்டும். சந்தா முன்பணமாகக் கட்டப்படவேண்டும். விலாசம் மாறும்பொழுது தெரியப்படுத்தவேண்டும்.

GURURAJA COMPANY.
Triplicane, Madras.

டயமண்டு சோப் கம்பெனி, பம்பாய்.

வீடுகளில் சாயம்போடும் உடைகளுக்கு விலை சரசமாயுள்ள டயமண்டு தயாரான சாயச்சோப்புகளாகிய ரோஸ், காஷாயம், பச்சை, நீலம், ஊதா, மஞ்சள், சிகப்பு, கறுப்பு, காகி.

48 பில்லைகள் ஒரு காகித பெட்டியில் அடங்கியது.

சாயத்திற்கு உத்தரவாதம்.

ஒரு டஜன் பில்லை அணா 12. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

ஏஜன்ஸிகளுக்கும் மற்ற வேண்டியவைகளுக்கும் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

குருராஜா அண்டு கம்பெனி,
திருவல்லிக்கேணி, சென்னை.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. XV. புத்தகம் - கரு. | Madras: March 1913. சென்னப்பட்டணம்: மார்ச்சுமீ 1913. | No. 3. இலக்கம் 3.

## நீராவியும் ஜலம் பொங்குதலும்.

உலையில் ஜலம் காய்ந்து பொங்குவதை அனைவரும் கண்டிருக்கிறோம். பொங்கும் ஜலத்திலிருந்து நீர் ஆவி 'உஸ்' என்று வெளிவருவதையும், 'மலமல' வென்று ஜலத்தின் ஊடே எப்புறமும் இருந்து கொப்புளங்கள் கிளம்புவதையும் பாராதிருப்பது அரிது. சிறுதட்டம் ஒன்றில் கொஞ்சம் ஜலம் வைத்துச் சிறிது நேரம் சென்றபின் பார்த்தால் தட்டம் உலர்ந்து இருக்கின்றது. ஜலம் ஆவியாய்ப் போய்விட்டதென்கின்றோம். சாம்பிராணித்தைலம், கற்பூரத்தைலம், யூகலிப்டஸ் எண்ணை, விளக்கெரிக்கும் சாராயம், டர்பெண்டைன், முதலான திரவப் பொருள்களும் இவ்விதமே ஆவியாகப் போகக் கூடியவை. பின் சொல்லியபடி ஜலம்முதலிய வஸ்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாய் ஆவியாக மாறுவதற்கும் முதலில் சொல்லியபடி அதே பொருள்கள் பொங்கி ஆவியாக மாறுவதற்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன.

ஜலம் ஆவியாக எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றது; ஆனால் எப்பொழுதும் பொங்குவதில்லை. ஆவியாய் போகும்போது மேற்றளத்திலிருந்து மட்டுமே ஆவி கிளம்புவதேயன்றி பொங்கும் சமயம்போன்று எப்புறமும் இருந்து வருவதில்லை. இன்னும், பொங்கும் சமயத்தில் ஆவி எவ்வளவு சீக்கிரம் உண்டாகின்றதென்பதும் நீங்கள் கவனிக்கவேண்டும். பொங்காத நீரில் இருந்து வெளிப்போகும் ஆவி வெகு மெதுவாய்ச் செல்கின்றது.

மேற்சொன்ன வஸ்துக்கள் பொங்கும்போது வருகிற ஆவியைக் குளிரச் செய்தால் ஆவி மறுபடி அந்த திரவப் பொருளாகவே மாறுகின்றது. சில திரவப் பொருள்கள் அங்ஙனம் மாறாதனவும் உண்டு. விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் இவற்றைப் பொங்கவிட்டால் வெள்ளிய புகை அவற்றிலிருந்து வருவதைப் பார்த்து இருக்கலாம். இல்லாவிடில் இப்பரிசை ஒவ்வொருவரும் செலவில்லாமல் எளிதாய் செய்து பார்க்கக் கூடியதே. அவ்வெள்ளிய புகையை ஒரு பெரிய பாத்திரத்தில் பிடித்துக் குளிரச்செய்தால் மறுபடி எண்ணெய் காண்பதில்லை. நீராவிக்கும் பொங்கும் எண்ணையிலிருந்துவரும் புகைக்கும் இதுதான்வித்தியாசம். நீர் ஆவி, சாராய ஆவி, இவை குளிர்ந்தால் அவ்வவ் திரவப்பொருளே மறுபடி கிடைக்கின்றன. விளக்கெண்ணையைப்போன்ற

விறகுவெட்டி:—சாமி! நீங்க யாரு? பெரிய எடத்துப் பிள்ளைகபோலத் தோணுதே.

ருக்:—அப்பா! அந்தப் பேச்சுக்கள் பிறகு பேசுவோம். என்தொண்டை வெந்து சாம்பலாய் விடும்போ லிருக்கிறது. ஜலமிருக்கு மிடத்தைக் காட்டுவாயானால் சுகிர்தம் பெறுவாய்.

விறகுவெட்டி:—இல்லீங்கசாமி! கோபம் வாணு! அதோ தெரியுது பாருங்கோ ஒரு வேலி. அந்த வேலிக்கப்பாலே ஒரு கொளமிருக்கு. ஆனால் அந்த வேலிக்கப்பாலே ஓர்த்தரும் போகப்படாது.

ஸத்:—ஏன்?

விறகுவெட்டி:—ஏனெண்ணு, அந்தக் கொளமும் அதைச் சுத்தியிருக்கும் வேலியும் இந்த ஊரு ராசாத்தி யம்மாமாரு விளையாட ராசா ஏற்படுத்திருக்கார்.

ஸத்:—நாங்கள் தாகத்தைத் தணிப்பதற்கு ஜலமிருக்கு மிடத்தைக் காட்டென்றால் என்னென்னவோ கதைகள் சொல்லுகிறாயே, வேறெந்த இடத்தில் ஜலம் பெறலாம், சொல்.

விறகுவெட்டி:—ஊருக்குள்ளே ஒரு கொளமிருக்கு. என்னோடெவந்தா காட்றேன்.

ஸத்:—அண்ணு! நான் இவனோடு சென்று நமது கூஜா நிறைய ஜலம் கொண்டு வருகின்றேன், நான் வருமளவும் இவ்விடத்திற்றானே இரு.

ருக்:—போய் விரைவில் மீண்டுவா, லோசனு?

[ஸத்யலோசனன் போகின்றான். ருக்மணி ரமணன் சிறிது நேரம் மௌனமாய்க் காத்திருக்கின்றான். பின்பு தனக்குட் சிந்திக்கின்றான்.]

ஹா! இக்கொடிய தாகம் எங்கேயிருந்து என்மிடற்றிற் புகுந்ததோ? வடவைத் தீயென்பது இதுதானோ? என் செய்வேன்! லோசனன் இன்னும் வரவில்லையே. விறகுவெட்டி கூறிய தடாகம் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றதோ? அப்பேதை கூறியது உண்மைதானோ? அவன் பேசியதே வெறியன் பேச்சுப்போ லிருந்ததே. லோசனு! எப்பொழுது வருவாய்? (தன் கழுத்திற் கை வைத்துக்கொண்டு தரையில் உட்காருகின்றான்.) ஐயோ! என் பிராணன் போய்விடும்போ லிருக்கிறதே. என் பெற்றோர்கள் எவ்வாறு என் பிரிவைச் சகிப்பார்கள்! அனலிற்பட்ட புழுவாய்த் துடிப்பார்களே! லோசனு! நீயும் எவ்வாறு வருந்துவை? ஹா! விறகுவெட்டி கூறியதை மறந்தேன். அதோ காணப்படுகிற வேலிக்கப்பால் ஓர் தடாகமிருக்கிறதென்றானே, என்ன நேரிடினும் அத் தடாகத்திற்கே சென்று என் தாகத்தைத் தணிப்பேன்.

(வேலியை நோக்கி விரைந்து செல்லுகின்றான்.)

---

(அங்கம்-1. (காட்சி-2.)

(ஸாஸ்வதி புரத்தரச புத்திரிகளது பூம்பொழில்.)

(அரசனது ஜேஷ்ட புத்திரியாகிய ரஸிகை தன் கரங்களில் புஷ்பத்தட்டை ஏந்திக்கொண்டுவருகிறாள்.)

ரஸிகை:— வசீகரி! நாழிகை யாகின்றதே. இவ்வளவு நேரமா பூக்கொய்கிறாய்?

வசீகரி:—(மறைவிலிருந்தே)இதோ வந்துவிட்டேனக்கா!(வசீகரியினிடக் கையால் அழகிய புஷ்பத்தட்டைத் தாங்கிக்கொண்டு வலக்கையில் ஓர் அழகிய



மாங்கனியோடு வருகின்றாள். அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் காணப்படுகின்றன.)

ரஸிகை:—இவ்வளவு நேரம் என்ன செய்தாயடி? உன் தட்டிலும் புஷ்பம் அதிகமாயில்லையே. உன் முகத்திலென்ன இவ்வளவு வியர்வை! நாம் பந்து விளையாடும்பொழுது கூட இவ்வளவு வியர்வை உன் முகத்தில் காணப்படவில்லையே. தமயந்திக்கு ஓர் அன்னப்பறவை போதித்துவிட்டதுபோல் உனக்கும் ஓர் அன்னப்பறவை ஏதேனும் உபதேசித்துவிட்டதோ?

வசீகரி:—ஒன்றுமில்லையக்கா. இம்மாங்கனியைப் பறிப்பதற்குத்தான் இவ்வளவு சிரமமடைந்தேன். இக்கனியைப்பார். இதைப்போன்ற அழகிய கனியை நீ எப்பொழுதேனும் பார்த்திருக்கிறாயா? (வசீகரி மாங்கனியைத் தன் சகோதரிக்குக் கொடுக்கிறாள்.)

ரஸிகை:—(தன் கையிலுள்ள கனியைப் பார்த்துக்கொண்டே) ஹா! எவ்வளவு சுந்தரம் வாய்ந்த கனி! என்ன நிறம்! என்ன காந்தி! என்ன திரட்சி என்ன வசீகரம்! இதனுள் நிறைந்துள்ள தீஞ்சாறு என் விழிகளுக்குப் புலப்படுவதுபோலவே தோற்றுகின்றதே. கற்பகநாட்டுக் கனிகளுக்கும் இவ்வளவு சோபிதமுண்டோ? காரைக்காலம்மையார் சிவபிரானருளாற்பெற்ற மாங்கனி வர்க்கத்தைச் சேர்ந்த கனியோ? என்னென்றியம்புவது! எந்த விருக்ஷத்திலிருந்தடி வசீகரி இதைப்பறித்தாய்?

வசீகரி:—நான் புஷ்பங்கொய்துகொண்டு "அமிர்தாள்" என்ற மாமரத்தருகே வந்தேன். அப்பொழுதுதான் ஒரு குயில் அமிர்தமாகப் பாட ஆரம்பித்தது. உடனே தலையை நிமிர்த்திப் பார்த்தேன். அமிர்தாளது கிளைகளொன்றை உல்லாசமாய்த் தழுவிக்கொண்டிருந்த இக்கனியின் மீதமர்ந்து அக்குயில் பாடிக்கொண்டிருந்தது. கனியைக்கண்டதும் அதன் மீதிருந்த பறவையையும் அதன் தீங்குரலையும் மறந்து கனியைப் பறிக்கக் கையை நீட்டித் தாவினேன். உடனே குயில் பறந்தோடிற்று. ஆனால் கனிகைக்ககப்படவில்லை. பின்பு நெடுநேரங் குதித்துக்குதித்து அப்பழத்தைப் பறிக்க முயற்சித்தேன். அது என் கைக்கப்படாமல் என்னை நோக்கி நகைத்துக்கொண்டேயிருந்தது. என் உள்ளத்தில் ஆத்திரமும் ஆசையும் பொங்கி எழுந்தது. ஆகையால் அவ் விருக்ஷத்தின் மீது ஏறியே இக்கனியைப் பறித்துக்கொண்டு வந்தேன்.

ரஸிகை:—(புன்னகையுடன்) இந்த அற்புத மாம்பழம் வசீகரியையும் வசீகரித்து அவளுக்கு மரமேறும் வித்தையும் கற்பித்து விட்டது. இப் பழத்தின் பெருமையே பெருமை!

(பழத்தை முத்தமிடுகின்றாள்.)

வசீகரி:—அக்கா? இக் கனியை நமது அன்னைக்குத் தானே ஸமர்ப்பிக்க வேண்டும்?

ரஸிகை:—ஆமாம். இன்று நமது சாரதாம்பாள் உன் கனியைப் பெற்று அகங்களித்து நீ விரும்பியவை யனைத்தும் உனக்களிப்பாள். நீ என்னென்ன விரும்புகின்றாய்? வசீகரி!

வசீகரி:—நான் என்ன விரும்புகின்றேன்! நமது குடிகள் நல்வழியிலொழுகி நமது தந்தையின் செங்கோல் நின்று நிலவுதலும், அவரது வீரமும் நமது நாட்டின் பெருமையும் சூரிய வெளிபோல் எங்கணும் பரவுதலுமே நான் விரும்பும் வரங்கள்.

ரஸிகை:—இவ்வளவுதானு நீ விரும்புகின்றாய்! வேறொன்றுமில்லையா?

வசீகரி:—வேறென்ன எனக்கு வேண்டுமக்கா?

ரஸிகை:—(புன்னகையுடன் வசீகரீ! நான் உன் சகோதரியல்லவா! என்னிடத்தில் ஏன் உன் உள்ளத்தை ஒளிக்கிறாய்?

வசீகரி:—நான் எனக்கா உன்னிடத்தில் என் உள்ளத்தை ஒளிக்கின்றேன்? நமது நாட்டின் பெருமையும் நமது தந்தையின் செங்கோலும் வளர்வதைத் தவிர நமக்கு வேறு என்னவேண்டும்? நீதான் சொல்லேன்.

ரஸிகை:—நமது தந்தையின் குணமும் ஒழுக்கமும் புகழும், இம் மாங்கனியைப் போன்ற சௌந்தரியமும், உன்னிடத்தில் இம் மாங்கனியின் சுவை போன்ற அன்பும், உடைய கணவனைப்பெற நீ விரும்பவில்லையா?

வசீகரி:—என்னக்கா! நீயே என்னைப் பரிகாசம் பண்ணுகிறாய்!

ரஸிகை:—வசீகரீ! நான் உன்னைப் பரிகஸிக்கவில்லை. இன்று நாம் உள்ளங் கலந்துகொள்வோம். உன்மனத்தி லிருப்பவை யனைத்தும் நீ எனக்குச் சொல்வாய். நான் என் உள்ளத்தி லிருப்பவை யனைத்தும் நான் உனக்குச் சொல்லுகிறேன்.

வசீகரி:—உன் இஷ்டப்படியே நீ கேட்ட விஷயத்தைப்பற்றி என் உள்ளத்திலிருப்பதை வெள்ளையாய்ச் சொல்லிவிடுகிறேன்.

ரஸிகை:—(புன்னகையோடு) அப்படிச் சொல்லடி என் கண்மணி! அப்பொழுதுதான் நாமிருவரும் மெய்ச் சகோதரிகளாவோம்.

(தன் தங்கையை அன்போடு ஆலிங்கனித்து அவள் கன்னமொன்றை முத்தமிடுகின்றாள்)

வசீகரி:—அக்கா! எனக்கு விவாஹத்தில் விருப்பமேயில்லை.

(தொடரும்.) சு. அ. சுப்பராயன்.

# மனைவியின் ஒழுக்கம்.

கணவன் தன் தினசரி வேலைகளை முடித்துத்தான் வீடு வரும்போது தன்னை மலர்ந்த முகத்துடன் மனைவி எதிர்கொண்டழைத்து வேண்டிய உபசரணைகள் செய்து தன்னிஷ்டப்படியான உணவு முதலானவைகளைத் தயார் செய்து வைத்திருப்பின் அவளிடம் எவ்வளவு அன்பும் நன்றியறிவும் பாராட்டுவான் என்பதை ஒருவர் கூறவும் வேண்டுமோ. உதாரணமாக: இரவிலும் நெடுநேரம்வரை தாலூகா முதலான கச்சேரிகளில் வேலைசெய்யும் ஓர் குமாஸ்தாவை யெடுத்துக் கொள்வோம். காலைமுதல் இரவும் சுமார் பத்து மணிவரை வேலைசெய்து மெய்யெலாம் சோர்ந்து வீட்டிற்குத் திரும்பிவரும் கணவனை வீட்டுக்கதவைத் தட்டுவதற்குமுன் திறந்து சந்தோஷமாய் மனைவி எதிர்கொண்டால் அவன் மெய்ச்சோர்வும் இளைப்பும் பாதி நீங்குமென்பதில் சந்தேகமில்லை. அன்னவளிடம் அவனுக்குப் பிரியம் அதிகரிக்குமென்பதிலும் ஐயமில்லை. அவ்விதமில்லாமல் கணவன் திரும்பி வருவதற்குள் தான் அயர்ந்து நித்திரைபோய் நெடுநேரம் கதவைத் தட்டியபின் தூங்கிய கண்ணுடனும் கடுகடுத்த முகத்துடனும் கதவைத்திறக்கும் மனைவியைப் பார்த்ததுமே அவனுக்கு மிகுந்த அதிருப்தி ஏற்படுமென்பதிலும் சந்தேகமில்லை. எவ்வளவோ துன்பங்களெல்லாமடைந்து சிரமப்பட்டு வேலைகளைச்செய்து வீட்டிற்குத் திரும்பிவரும் புருஷர்களை முகமலர்ச்சியுடனெதிர்கொள்வது ஸ்திரீகளுக்கு முக்கிய கடமையெனத் தோன்றுகிறது.



ஓர் நாள் ஓர் நண்பர் வீட்டிற்கு யாம் சென்றிருந்தபோது அவர் தன் மனைவியை அவசரமாகக் கூவியதும் சாம்பலால் பாத்திரம் தேய்த்துக்கொண்டிருந்த கைகளுடனே வந்தெதிரில் நின்றாள். சிலர் சாணிக் கைகளுடனும் வந்து நிற்கக்கூடும். இக்கோலத்துடன் வந்தெதிர்நிற்கும் இல்லாளை யென்னென்று கூறுவாம். கணவன் மனதுக்கு எவ்வளவு அருவருப்புண்டாகக் கூடியதா யிருக்கிறது? கூப்பிட்டதும் கைகால்களை சுத்தஞ் செய்துகொண்டு வருவது அசாத்தியமான காரியமல்ல. இவ்விதமான சிறு விஷயங்களே கணவர்களின் மனதை தாங்கள் அக்கினிசாக்ஷியாய் மணம் புரிந்த பெண்களினின்றும் வேறுபடுத்துகின்றன. அவைகளே சில கணவரின் கெட்ட நடத்தைகளுக்கும் காரணமாகின்றன.

இக்காலத்தில் அநேகம் பெண்கள் தங்கள் தங்கள் வீடுகளைக் கூடத் தாங்களே சுத்தம் செய்துகொள்வது அகௌரவமாய்ப் பாவித்து வீடுகளில் பல விடங்களில் பூச்சிக்கூடு முதலானவைகள் ஏராளமாயிருக்கவும் "ஒட்டடை" என்று சொல்லப்பட்டவை எங்கு பார்த்தாலும் ஆலவட்டங்கள்போல் [illegible] வண்டி[illegible]வும் விட்டுவிடுகிறார்கள். எல்லோருமே பணக்காரர்களாக இரு[illegible] [illegible]கிறார்கள். [illegible]ட்களைவைத்து வீடுகளை சுத்தம்செய்ய முடிகின்றதா? வீட்[illegible]லத்திலும் தங்[illegible]த்தமா யிருப்பதைக் கண்டால் புருஷருக்கு மனம் வருந்[illegible]ம். அவ்விதம் நட[illegible] வீடுகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். [illegible]பதை யறியார்போ[illegible]ளென்று நினைக்கக்

மேற்கூறிய விஷயங்களை நன்கு விளக்கும் ஓர் சிறு[illegible] இணைத்ததும் பாடிகம் வருகிறது. அநேகருக்கும் தெரிந்திருப்பினும் புத்திம[illegible]போகாது. கணவன்த்தும் பண்டைய நாளையக் கதைகளைப் பன்முறை எழு[illegible]ராயின் மிகுந்த நன்மையையே பயக்குமாதலின் இங்கெழுதத் துணிந்தேம்.[illegible]சய்யத் தகாதவை[illegible] வருமாறு:— [illegible] கணவனையும் [illegible]லவிலிருக்கும்

ஒவ்வொரு நாளும் இரவில் சாப்பிட்டவுடன் சற்றுநேரமா[illegible]னையப் புகட்டு வில்லாமல் 'கதவைத் தாளிடு' என்று சொல்லி வெளியே போ[illegible] கணவன் எவ்விடம் செல்லுகிறார் என்பதை யறியவேண்டும் என்[illegible] கொண்ட கமலினி யென்பவள் ஒருநாள் தன்னகமுடையான் வீ[illegible] இரவில் சாப்பிட வருமுன் தன் போஜனத்தை முடித்து கணவன் சாப்பிட்[illegible] வெளிக்கிளம்பியதும் தானும் கதவைப்பூட்டிக் கணவனறியாமல் அவனைப்பின் பற்றிச் சென்றாள். சிறிது தூரம் போனதும் தன் புருஷன் ஓர் வீட்டில் கதவைத்தட்டுவதைக் கண்டு நடக்கும் விஷயங்களைக் கவனிக்க எதிர்வீட்டுத் திண்ணையிலுட்கார்ந்தாள். வீட்டுக் கதவு தட்டினதும் திறக்கப்பட்டது. அது ஒரு பொது மகளின் வீடெனக் கமலினி சந்தேகங் கொண்டாள்; உடனே ஓர் அறையின் ஜன்னல்கள் திறக்கப்பட்டன. பளீர் என்று பிரகாசமான விளக்கின் வெளிச்சம் கண்களைக் கவர்ந்தது. கமலினீ அவ்வறையை யுற்று நோக்கச் சாளரத்தினருகே வந்தாள். அறையோ மிகவும் சுத்தமாயும் சில படங்களால் அலங்கரிக்கப்பெற்று மிருந்தது. அதன் மத்தியிலிருந்த கட்டிலில் ஓர் பெண் சயனித்திருக்கக்கண்டாள். இவ்வாறு கமலினி கவனித்துக்கொண்டிருக்கும்பொழுதே அவள் கணவனும் கட்டிலினருகே வந்து நிற்பதையும்

பார்த்தாள். இவைகளையெல்லாம் கண்ட கமலினி அவ் வீடு ஓர் பொதுமகள் வீடென்றும் தன் புருஷன் அப்பொதுமகளை நேசித்து வருகிறனென்றும் அறிந்தாள். பன் முறை கூப்பிட்டும் பதில் இல்லை. தூங்குகிறவர்களை எழுப்பக் கூடும், விழித்திருப்பவர்களை எங்ஙனம் எழுப்புதல்கூடும் என்று கமலினி நினைத்தாள். பிறகு தட்டி எழுப்பியவுடன் நித்திரை நீங்கி எழுந்திருப்பவள் போல் தன்காலினால் தன்னை எழுப்பியவரை யுதைத்துக்கொண்டே போலித் துயில்கொண்டிருந்த பெண் கட்டிலின்மீது உட்கார்ந்தாள். கமலினிக்கு அவள் முகம் நன்றாய்த் தெரிந்தது.

சுத்தமான ஆடையாபரணங்களை யணிந்தவளாய் சற்று முன்புதான் முகம் கழுவி திலகமிட்டவளாய்க் காணப்பட்டாள். மேலும் அவள் முகத்தில் கோபக்குறிகள் முதலியவையில்லாமல் புன் சிரிப்பேயிருந்ததையும் கவனித்தாள். நேரமாய்விட்டதால் தன் வீட்டிற்குக் கமலினி திரும்பினாள். திரும்பி வரும்போதுதான் பார்த்த வீடும் பெண்ணும் மிகவும் சுத்தமாயிருக்கும் தன்மையே தன் மனதில் தோன்றினும் கேவலம் ஓர் தாசியின்கால் தன் கணவன் உடம்பில் தாக்கியதே என்று நினைத்து நினைத்து வருந்தினாள். மறுநாட்காலையில் தன் கணவன் சாப்பாடு முடித்துத் தினசரிவேலைக்குச் சென்றபின் தன் வீடு முழுவதையும் கமலினி ஓரிடத்திலாவது சிறிதேனும் குப்பையில்லாமல் சுத்தம் செய்தாள். விளக்குகளையெல்லாம் துடைத்துப் பிரகாசமாயிருக்கச் செய்தாள். பெட்டியில் ஜாக்கிரதையாய் நெடுநாளாகப் பூட்டிவைத்திருந்த தன் ஆடையாபரணங்களை யெல்லாம் எடுத்து நகைகளை மாசாறத் துடைத்து அணிந்தாள். புடவைகளை சற்றே வெயிலி லுலர்த்தி எடுத்துவைத்தாள். நெடுநாளாக உபயோகிக்காத கட்டிலையும் துடைத்துச் சீர்செய்து மெத்தை தலையணைகளெல்லாவற்றிற்கும் வண்ணானிடமிருந்து சலவை செய்துவந்து வெகுகாலமா யுறங்கும் உறைகளை எடுத்துப்போட்டாள். சில படங்களையும் சுவரில் மாட்டினாள். வீடு முழுவது மிவ்விதம் சுத்தமாய் பார்ப்போர் மனதுக்கின்ப மளிக்குமாறு செய்தபின்னர் ஒரு நாளும் அனுபவியாத சந்தோஷம் கமலினிக்கு உண்டாயிற்று.

சாயங்காலமே நல்ல சமையலும் செய்து முடித்தபின்னர் தன் கணவன் வரவை எதிர்பார்த்தவளா யிருந்தாள். கணவன் காலடிச் சப்தங் கேட்குமுன்னர் விரைந்து கதவைத் திறந்தாள். தான் கூப்பிடு முன்னமே கதவு திறக்கப்பட்டது. நூதனமாயும் மனதுக்குத் திருப்திகரமாயு மிருந்தது. ஏனெனில் நாடோறும் பன்முறை கூவியும் கதவைத்தட்டியும் தன் கையும் தொண்டையும் சற்று வலியெடுத்த பிறகுதான் கதவுதிறக்கப்படுவது வழக்கம். கணவருக்குக் கைகால் சுத்தம் செய்துகொள்ள ஜலம் கொண்டுவந்து கொடுத்தாள். இதுவும் இன்றேற்பட்ட நூதன வழக்கம்தான். சாப்பாடு முடிந்தெழுந்திருப்பதற்குச் சற்று முன்னதாகவே கைகழுவத் தண்ணீரெடுத்து வைத்துத் தன் அறைக்குச்சென்று புது ஆடையணிந்து கட்டிலின்மீது கமலனி சயனித்தாள். சாப்பிட்டுக் கைகழுவியதும் மனைவியைக் கதவைத் தாளிடச் சொல்லி மிக விரைவுடன் பொதுமகள் வீடுபோவது அவள் கணவரின் வழக்கமென்று முன்பே கூறினோம். அவ்வாறே இன்று தன் மனைவியைக் கூப்பிட வாய்வரவில்லை., சமையலிடத்தில் பார்த்தும் கமலினி காணப்படவில்லை. பிறகு அவள் படுத்திருக்கும் அறைக்குச் சென்றான். பிரகாசமாய் விளக்கெரிவதையும் எப்புறம் பார்ப்பினும் சுத்தமாயிருப்பதையும் தன் மனைவி புது ஆடை யணிந்தவளாய் கட்டிலின் மீது சயனித்திருப்பதையும் கவனித்தான். பலமுறை பெயரிட்டழைத்தும் பதிலில்லை. பிறகு தட்டியெழுப்பினதும் தன்கால் சற்றே அவனுடலில் படும்படியாய்த் தூங்கி விழிப்பவள் போல் புன்முறுவலுடன் கமலினி எழுந்து கட்டிலினின்று கீழிறங்கி நின்றாள். அவள் கால் தன்மேல் சிறிது தாக்கினதற்குச் சினந்ததும் கமிலினி கேவலம் பொதுமகளின்கால் நேற்றிரவு தங்கள் சரீரத்தில் பலமாகவே தாக்கினபோது தங்களுக்குக் கோபம் வாராமலிருந்ததே, என்மேல் ஏன் இவ்வாறு கோபம் கொள்ளவேண்டும் என்று சிரித்த முகத்துடன் வணக்கமாய்க் கூறினாள். இம்மொழியைக் கேட்டதும் மிகவும் வெட்கமடைந்தான். அவனுக்கோ பேசுவதற்கும் நாவெழவில்லை. இப்போதுதான் கமலினியும் ரூபவதியாயிருப்பதாகவும் கண்டான். சில விநாடிகளுக்குப்பின் கமலினியே முன்னாள் இரவுதான் பின் தொடர்ந்த விஷய முழுவதும் சொன்னாள். தான் அவசரமாய் பொதுமகளின் வீட்டுக்குப் புறப்பட்ட எண்ணமே அவனை விட்டகன்றது. அன்றுமுதல் தன் மனைவியுடன் இல்லற சுகங்களெல்லாம் அனுபவித்து என்றுங்குறைவு படாத மன ஒற்றுமையுடன் இருவரும் வாழ்ந்தார்கள். இச்சிறுகதையினால் விளங்குவதை நாம் சொல்லாமலே இதனைப்படிப் போரனைவருமறியக்கூடும்.

பாடத் தெரிந்த ஸ்திரீகளுள் சிலர் தங்கள் கணவர் எவ்வளவு வேண்டினும் பாடுகிறதில்லை. பலவிதமான முகாந்திரங்களைச் சொல்லிவிடுகிறார்கள். தனியே யிருக்குங் காலத்திலும் வீட்டு வேலைகள் செய்யுங் காலத்திலும் தங்களுக்கே பாடிக்கொள்வதை அநேகர் கவனித்திருக்கலாம். அவ்விதம் நடத்தலால் தங்கள் புருஷர்களுக்கு மனம் வருந்து மென்பதை யறியார்போலும். தங்கள் வார்த்தைகளை அவமரியாதை செய்கிறார்களென்று நினைக்கக்கூடு மென்பதையு மறியார்போலும். தெரிந்தவரை கணவனுரைத்ததும் பாடினால் புருஷர்களுக் கவர்களிடம் பிரிய மேற்படாமற் போகாது. கணவன் சொற்களைத் தங்கள் சிரமேற்கொண்டு அதன்வழி நடப்பாராயின் மிகுந்த நன்மையைத் தருமென்பதில் தினையளவும் சந்தேகமில்லை. செய்யத் தகாதவைகளைச் செய்யும்படி சொல்லும் கணவரரிதே. அவ்விதமான கணவரையும் மனைவிமார்கள் நேர் நெறியாகவே நடந்து அவர்கள் சொல்லுதலிலிருக்கும் தப்பிதங்களை யவர்களுக்கே தெளிவாய்க் காட்டுவித்து நன்மதியைப் புகட்டுதலும் கூடுமானதே.

"இருந்து முகந்திருத்தி யீரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினா ளாடிப் பழமுறத்தால்
சாடினா ளோடோடத் தான்."

என்று ஔவையார் ஓர் சமயத்தில் கூறியபடி இன்னும் எத்தனை கணவர்கள் விருந்தினர் தப்பித்தவறி தங்கள் வீட்டிற்கு வந்துவிடில் தங்கள் மனைவிகளிடம் அவஸ்தைப் படுகின்றனர். இவ்விதம் நடந்துகொள்ளும் பெண்களிடம் அவர் புருஷர்களுக்குப் பிரியம்வருவதெங்ஙனம்?

ஸ்திரீகளிடமிருந்து அவர் கணவர்களுக்கு மனம் வேறுபடுவதின் காரணங்களுள் சிலவற்றையே எடுத்துரைத்தோம். முக்கியமாகத் தங்கள் மனம் கோணாமல் நடக்கும் பெண்களிடம் புருஷர்கள் எக்காலும் நன்றியறிவுடனும் மிகுந்த அன்புடனு மிருப்பார்களென்பதிலையமில்லை.

"பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக விருப்பளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசங் கொள்."

என்றதையு மிவ்விடம் ஞாபகப்படுத்தலாம்.

S. சுவாமிநாதன், பி. ஏ.

## கமலாலயம்—வான ஆராய்ச்சி.

(நவம்பர்மீ மாதர்மனோரஞ்சனி 233-ம் பக்கத்திலிருந்து தொடர்ச்சி).

முன் விஷயம்: சந்திரனை முற்றும் பரிசோதித்த பிறகு சந்திரனைப் பற்றிப் பல தேசத்தார் கொண்டிருந்த அபிப்பிராயங்களையும் பற்றிப் பேசி, இன்னும் மற்றக் கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் பரிசோதிக்கத் தொடங்குகின்றனர்.

சந்திரசேகரர்: "நமது தலைக்குமேல் இரண்டு கஜ அகலத்துக்கு வெளேர் என்று தென்புறமிருந்து வடபுறம் வரையில் பரவி யிருக்கின்றதே அதைப் பற்றியல்லவா அறிய விரும்புகிறீர்கள்? இவ் வெளிச்சத்தை 'Milky Way' என்று சொல்வது; என்றால் 'பால்வழி'—வெள்ளிய பாகம் என்று பொருள். இதன் விபரத்தைப் பூர்த்தியாய்ச் சொல்வதென்றால் சுலபமான காரியமன்று; மேலும் அவகாசமுமில்லை. இதைச் சரியாய் அறிய சாதகமான முன்னே தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்களும் பல. ஆயினும் தூரதிருஷ்டிக் கண்ணாடியில் நீங்கள் எல்லாரும் பார்த்ததும் அதன் விவரத்தை சில வார்த்தைகளால் என்னால் கூடியமட்டும் தெளிவாய்ச் சொல்ல முயற்சி செய்கிறேன். இப்பொழுது 'பால் வழியின்' ஒரு ஓரத்துக்கு கண்ணாடி திருப்பப்பட்டு இருக்கின்றது. வெறுங்கண்ணால் முதலில் கவனித்துப் பாருங்கள் அதே இடத்தை; எவ்வளவு நக்ஷத்திரங்கள் செவ்வையாய் விளங்குகின்றன. கிட்டத்தட்ட ஒன்றுகூட இல்லையென்றே சொல்லிவிடலாம். அதே இடத்தை குழாய் வழியாய் பரிசோதனை செய்யுங்கள்" என்றுசொல்லி விலகி நின்றுகொண்டார்.

முதலில் மீனாம்பிகை பார்த்து—"இது என்ன விந்தை! ஒன்றுகூடச் சரியாய்க் காணாத இடத்தில் இப்பொழுது முணுக் முணுக் என்று எத்தனை நக்ஷத்திரங்கள் கண்ணை கொட்டுகின்றன!! என் கண்களை நம்பவே முடியவில்லை; நீங்கள் எல்லாரும் பார்த்து களிகூருங்கள்" என்று நகர்ந்தாள்.

ஞானம்: "நான்கூட இதுவரையில் பார்த்ததில்லை. இந்த நக்ஷத்திரங்களைச் சுற்றி மறுபடி இன்னும் ஏதோ புகைபோல் பிரகாசிக்கின்றதே அது என்னவோ?"



சந்திரசேகரர்: "அதுவும் (Milky Way) பால்வழிதான். இன்னும்பெரிய கண்ணாடியினால் அவ்விடங்களில் உள்ள நக்ஷத்திரங்களையும் செவ்வையாய்ப் பார்க்கக்கூடும். நம்மிடம் உள்ள இந்தக் கண்ணாடியே நீங்கள் அற்புதமானதென்று எண்ணினால் இதைவிடப் பெரியதாய் உள்ளதை பார்த்து நீங்கள் எவ்வளவு ஆச்சரியப் படமாட்டீர்கள்! அவ்விதக் கண்ணாடியால் காணும் காக்ஷியை கேவலம் ஆனந்தம் என்றே கூறலாம்; அத்துணை விநோதமாய் இருக்கும். நமது கண்ணாடி திருப்பியிருக்கும் இத்தனை இடத்துள் நிறைந்துள்ள நக்ஷத்திரக்கூட்டம் இவ்வளவானால் இப் 'பால்வழி' முழுதும் நிறைந்து கிடக்கும் நக்ஷத்திரங்களைக் கணக்கிட முடியுமா? இல்லாவிட்டால் மனதில் அநுமானமாவது செய்துகொள்ள சாத்தியமா? அளவிடக்கூடாத நக்ஷத்திரங்களின் வெளிச்சமெல்லாம் ஒன்று கூடி தம்மிற் கலந்து வெளேரென்று பால் வழிய விட்டதுபோல் காணப்படுகிறதேயன்றி வேறில்லை. இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று முன்னும் பின்னுமாய் எவ்வளவோ கோடிக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. இன்னும் இரண்டு மூன்று இடங்களிலும் பாருங்கள்" என்று கண்ணாடியைத் திருப்பினார்.

எல்லாரும் பார்த்தான பிறகு சுந்திரவல்லியம்மாள் "தாய்மார்களே! நாம் செய்வதெல்லாம் பயித்தியகாரத்தனம். துணியிலும், மணியிலும், பொம்மைவாங்குவதிலும், காசு செலவழிப்பதைவிட்டு நாமெல்லாம் ஒன்றுகூடி ஒரு கண்ணாடிவாங்கி சபையில் வைத்துக்கொண்டால் சாவகாசப் படும்போதெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கலாம் அல்லவா? நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

சாவித்திரியம்மை "நீங்கள் சொல்வது சரியே. இந்த விநோதங்களைப் பார்க்கும்போது இப்பொழுது உங்களுக்கு இவ்விதம் தோன்றுகின்றது! நாலுபேர் நல்லபுடவை உடுத்துக்கொண்டுபோனால் அக் கூட்டத்தில் நாமும் கலந்து இருக்கும்போது நாம் அவர்களைவிட விலை உயர்ந்த ஆடை தரிக்கவில்லையே என்கிற நினைவு பாதிக்கின்றது. சில வீடுகளில் கொலுவு அலங்காரமாய் இருந்தால் நாம் அவர்களைவிட சிறப்பாய் கொலுவுவைக்க வில்லையே என்று தோன்றுகின்றது. இது எனக்கும் உள்ள குறைதான்; உங்களுக்கும் உள்ள குறைதான்; மனுஷிய சுபாவமே அப்படி யிருக்கின்றது" என்றாள்.

சந்திரசேகரர்: "இன்றைக்கு இம்மட்டுடன் பால்வழியை விட்டுவிடுவோம். பொழுது போகிறபடியால் இன்னும் இரண்டொரு விஷயம் காட்டி விடுகிறேன்.

"உச்சிக்குச் சற்று அப்பால் கீப்புறம் பாருங்கள். ஒற்றை நக்ஷத்திரம் பிரகாசிக்கின்றது. உண்மையாகவே அது நக்ஷத்திரமன்று; நமது பூமிபோன்ற ஒரு கிரகம்; அதன் நிறத்தைப் பார்த்தீர்களா? சற்று சிவப்பாய் இருக்கின்றது. இதைத்தான் 'செவ்வாய்' என்றும், 'அங்காரகன்' என்றும் சொல்லுகிறோம். முழுவதும் பிரகாசமாய் ஒரு நக்ஷத்திரம் போலவே காணப்பட்டபோதிலும் கண்ணாடியின் வழியாய்ப் பாருங்கள் அதன் விநோதத்தை!!" என்று அதன்புறம் கண்ணாடியைத் திருப்பினார்.

"அங்காரகன் நமது பூமிக்கு அப்பால் உள்ள கிரகங்களில் ஒன்று. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பரிசோதனை செய்வதற்கு மிகவும் ஏற்ற கிரகங்க

ளூர் இதுவொன்று. இச்சிகப்பு கிரகம் பலவிதங்களில் நமது பூமியைப்போன்றிருக்கின்றது. அதில் கருப்புக் கருப்பாய்த் தோன்றுகின்றனவே அவைதான் சமுத்திரங்கள். ஆகையால் செவ்வாய் கிரகத்தில் பூமிபோலவே நீர் ஏராளமாய் உண்டு. பளபளப்பாய்த் தெரிகின்றனவே அவைதான் நிலம். நிலத்தின் பரிமாணம் ஜலத்தைவிட அதிகமென்று காண்கின்றது. நமது பூமியில் ஜலம் நிலத்தைவிட அதிக விஸ்தீர்ண முடையது. இவ்விதமாய்க் கண்டங்களும் சமுத்திரங்களும் காணப்படுவதுடன் வடபுறமும் தென்புறமும் ஓரத்தில் வெளேர் என்று தோன்றும் பாகமே துருவப் பிரதேசங்கள். அங்கே பனிக்கட்டிகள் உறைந்துபோய்க் கிடக்கின்றன. கண்டங்களின்மேல் காணும் கரிய கோடுகளைக் கால்வாய்கள் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். நமது பூமியில் பயிர்பச்சை வளர்வனபோன்று அங்கேயும் வளர்கின்றனவாம். ஆகையால் பலவிதங்களில் அங்காரகன் பூமியைப் போலவே இருக்கிறான் என்பதற்கு சந்தேகமேயில்லை."

"ஆனால் மனிதர்களும் குடியிருக்க வேண்டுமே" என்று ஒருவர் வினவ, ஐயா "அதைத்தான் சாஸ்திரம் இன்னும் நிர்ணயம் செய்யக்கூடவில்லை. நிச்சயிக்கவும் முடியாமல் இருக்கின்றது. (Proctor) ப்ராக்டர் என்னும் ஆங்கிலேய வானசாஸ்திரி செவ்வாய் கிருகத்தைப் பலநாள் பரிக்ஷை செய்தபின் 'செவ்வாய் தற்காலம் ஜீவராசிகள் குடியிருக்க ஏற்றதென்று எனக்குத் தோற்றவில்லை: நிலமும் நீரும் நீராவியும், மேகங்களும், காணப்பட்டபோதிலும், மழைபெய்து, அருவிகூடி, ஆறு பெருகுவது நிச்சயமேனும், நீர் பாய்ந்து நிலம் விளைவதுபோல் தோன்றினும், ஜீவகோடிகள் வாழ்ந்து மாண்டுபோய் கல்பகோடி காலங்கள் கழிந்து இருக்கவேண்டுமென்பதே என தபிப்பிராயம். அதன் சிவப்பு நிறத்திலிருந்தே இம்மாதிரி அநுமானிக்க இடம் உண்டு. சந்திரன்போன்று நீரற்று, காற்றின்றி, ஆவியும் அரிதாய், ஜீவராசிகள் வாழவும், புல் பூண்டு விளையவும், முடியவே முடியாதென்று சொல்லக்கூடிய நாசகதியை அடைய இன்னும் பலகாலம் செல்லவேண்டும். ஆனால் அத்தகைய கதிவரும் என்பதற்குமட்டும் சந்தேகமில்லை. அது 10, 20, 100, 1000, 2000 வருஷங்களில் ஆகக்கூடிய வேலையன்று. எவ்வளவோ கற்பங்கள் செல்லவேண்டும்' என்றார்.

ருக்மணி "செவ்வாய்க்கு இரண்டு மூன்று கஜம் கீழே சற்று மந்தமாய்ப் பிரகாசிக்கும் நக்ஷத்திரம் என்னவோ; அதைப்பார்ப்போமா," என்றாள் ஞானத்தினிடத்தில்.

சந்திரசேகரர் "அதுதான் சனி; இக்கிரகத்திலும் நீங்கள் பெரும் கண்ணால் காணக்கூடிய விசேஷம் ஒன்றும் இல்லைப் பார்த்தீர்களா? ஆனால் கண்ணாடி வழியாய்ப் பார்த்தால் தெரியும் அந்த வேடிக்கை."

ருக்மணி (பார்த்துக்கொண்டே) "இது என்ன அம்மா. ஆட்டுக்கல் மத்தியில் போட்ட குழவிபோல் தோன்றுகின்றதே! இதுவா நாம் வெறுங்கண்ணால் பார்த்த சனியன்!!" என்று சொல்லிவிட, எல்லாரும் ஆவலோடு பார்த்து முடித்தனர்."

ஐயர் "குழவிபோல் இருப்பதே சனி; சுற்றிவளைவுகள் தோன்றுகிறதே அவைகள் சனியின் வளையங்கள். இவ்விதமான வளையங்கள் வேறு கிரகத்துக்கு இல்லவே இல்லை. இப்பொழுது அவ்வளையங்கள் நன்றாய்க் காணப்படும் காலம். சில சமயங்களில் அவை ஒரு வெள்ளிய கோடுபோலமட்டுமே தோன்றும். நமது கண்ணாடியில் இரண்டு வளைவுகள் நன்கு புலப்படுகின்றன. உற்றுப் பார்த்தால் உட்புறத்தில் 3-வது வளையம் ஒன்றுகூடத் தென்படுகிறது. கிரகத்தின்மேல் கரியகோடுகள் வட்டமாய்த் தெரிகின்றனவே அவைதான் முதல் இரண்டு வளையங்களின் நிழல்கள். சனியை விசித்திரகிரகம் என்று சிலர் சொல்வதற்குக் காரணம் தெரிகின்றதல்லவா?



"இதன் நிலைமையை யோசிக்குமிடத்து இக்கிரகம் இன்னும் உஷ்ணமாகவே இருப்பதாகவும் சரியாய்க் குளிர்ந்து நிலமும் நீரும், ஆவியும் மேகமும் வரையரையாய் ஏற்படவில்லை யென்றும், ஆகையால் புல், பூண்டு, பிராணி என்ற பிரஸ்தாபமே கிடையாதென்றும் சாஸ்திர பண்டிதர் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

"மணியும் சுமார் 9-ஆகின்றது. இரண்டுமூன்று விஷயமே இன்று யாம் கவனித்தவை. அதே இத்தனை பொழுதாய்விட்டது. இன்னும் பார்க்கவேண்டிய விஷயங்கள் பலஉள. மற்றொருசமயம்கிடைத்தால் சந்தோஷமே. கடைசியாக நான்சொல்லவேண்டுவது ஒன்றுளது. சந்திரன்எப்படிப்போனாலென்ன? சனியன் வளையத்தோடிருந்தால் இல்லாவிட்டால் என்ன! என்று நினையாமல் நீங்கள் எல்லாரும் இவ்வளவு தூரம் பனியில் பிரயாசப்பட்டு வந்ததற்கு மிகவும் வந்தனம்."

"அடே வீரா" என்னுமுன் நானும் எதிரேபோய் நின்றேன். இச் சிறுபிள்ளை எத்தனை விஷயங்களை அறிந்துகொண்டு மூவுலகிலும் உள்ள விசேஷங்களை விவகரிக்கத்தொடங்குகிறானே, என்று எனக்கு ஆச்சரியம் இன்று இரவில் சொன்னதெல்லாம் எனக்குக் கதை போலும், கனவுபோலும் தோன்றினது மட்டும் அன்றி என் அறியாமையை நினைக்க நினைக்க எனக்குண்டான துக்கத்துக்களவில்லை. பெண்டிர் ஒவ்வொருவராய் நகரவே என்னைப் பார்த்து ஐயா "நாமும் போவோமா இதோ கண்ணாடியையும் முக்காலியையும் தூக்கிக் கொள்" என்று சொல்லும்வரையில் மனோராஜ்யம் செய்துகொண்டே இருந்து விட்டேன்.

☞ வாயில்காட்டோன்.

## பார்லிமெண்ட் திறக்கப்பட்டது.

### நமது சக்ரவர்த்தியின் பேச்சு.

இம்மாதம் 10உ திங்கட்கிழமை பார்லிமெண்ட் திறக்கப்பட்டது. சக்ரவர்த்தியும் மேரிராணியும் பரிவாரங்களுடன் தங்கள் மாளிகையிலிருந்து பார்லிமெண்ட் சபைக்குச் சென்றார்கள். தெருக்களில் ஜனங்கள் கூட்டமாய் நின்று சக்ரவர்த்திக்கு மரியாதை செய்தார்கள். சக்ரவர்த்தியும் மேரிராணியாரும் லார்ட் சபைக்கு வந்தார்கள். அப்பொழுது லார்ட்களும், சீமாட்டிகளும் சிறந்த உடைகளைத் தரித்துக்கொண்டு வந்திருந்தார்கள். சக்ரவர்த்தி சிம்மாசனம் ஏறியபொழுது மகுடம் தரித்துக்கொண்டது [illegible]வையல்ல

வா? இப்பொழுது மகுடம் தரித்துக் கொண்டு பார்லிமெண்ட் சபைக்கு வந்தது இரண்டாந்தடவை. மேரி சக்ரவர்த்தினியும் வைரக்கீரீடமும், பட்டுடையும் வைர ஆபரணங்களும் தரித்துக்கொண்டு வந்தார்கள். சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் சிம்மாசனத்தில் உட்கார்ந்ததும் உத்தியோகஸ்தர்கள், மெம்பர்கள் முதலியவர்கள் சகல மரியாதைகள் செய்தார்கள்.

## சக்ரவர்த்தியின் பேச்சு.

"இன்றுதான் என் பிதாவுக்கும் மாதாவுக்கும் விவாகமாய் 50-வருஷம் பூர்த்தியாயிற்று. இந்த 50-வருஷகாலமாக எனது அன்புள்ள மாதா ஜனங்களுடைய குறைவற்ற அபிமானத்தையும் பக்தியையும் பெற்றிருக்கிறார்கள். என் மாதாவின் பர்த்தாவின் தேகவியோகத்தால் உண்டான அழியாத துக்கத்துக்குப் பிரஜைகளின் உணர்ச்சி பெரும் ஆறுதலாயிருக்கிறது.

பிரிட்டனுக்கும் அந்நியதேசங்களுக்கும் உள்ள நேச சம்பந்தம் தொடர்ந்து வருகிறது.

பால்கன் யுத்தம் விஷயமாக சமாதான பேச்சு நிறைவேறாமற்போய் மறுபடியும் யுத்தம் நடந்துவருகிறதானது எனக்கு மிகுந்த விசனத்தை யுண்டு பண்ணுகிறது. பிரிடிஷ் கவர்ன்மெண்ட் மற்ற அரசர்களோடு சேர்ந்து சமாதானத்தை நிறைவேற்ற முயன்றுவருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் சமாதானம் முடியுமென்றும் நான் கோருகிறேன்.

பிரிடிஷ் கவர்ன்மெண்ட் இதர அரசர்களுடன் சேர்ந்து ஏதாவதொரு விஷயத்தில் வித்தியாசமான அபிப்பிராய மிருந்தபோதிலும் ஐரோப்பாகண்ட முழுவதிலும் சமாதானமே பரவியிருக்க ஒத்துழைக்கும்.

பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தின் கடற்காப்பு சம்பந்தமாய் கானடா, மலேய நாடுகள் ஆஸ்டிரேலியா செய்து வரும் உபகாரத்தையும் எல்லோருக்கும் பொதுவாய் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தைக் காப்பதில் உண்டாயிருக்கும் அக்கரையும் சிறந்ததே.

"டிசம்பர் மாசம் 23உ என்னுடைய இந்தியராஜ்யத்தில் டெல்லியில் ராஜகோலத்துடன் என்னுடைய கவர்னர் ஜெனரலும் வைசிராயு மாகிய லார்ட் ஹார்டிஞ்ஜ் பிரவேசித்தபொழுது அவரைக்கொலைசெய்ய ஒருதுஷ்டன் முயற்சிசெய்தான்.

கடவுள் கிருபையால் அந்த கிராதகச் செயல் நிறைவேறவில்லை. ஆயினும் நிரபராதிகளான சிலர் மாண்டுபோனதைப்பற்றியும், வைசிராய்க்கு ஆபத்துகரமான காயம் உண்டானதைப்பற்றியும் மிகவும் விசனப்படுகிறேன். லார்ட்ஹார்டிஞ்ஜும், லேடிஹார்டிஞ்ஜும் காட்டினதைரியமும் நிதானமும், கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் தைரியமாயும் அடக்கமாயுமிருந்ததும் என்னுடைய ஆழ்ந்த மகிழ்ச்சிக்கு உரியன. இந்த துஷ்டச் செய்கையால் என்னுடைய இந்திய மன்னர்களும் இந்திய பிரஜைகளில் சகல வகுப்பாரும் ஒற்றுணர்ச்சியையும் ராஜவிசுவாசத்தையும் தெரிவித்ததை நான் நன்றியுடன் அங்கீகரிக்கிறேன்,"

இந்தியாவில் பப்ளிக் சர்விஸ்களுக்கு வேண்டியவைகளைப்பற்றி விசாரணை செய்ய என்னால் நியமிக்கப்பட்ட கமிஷனர்கள் இந்தியாவில் பல முக்யஸ்தலங்களுக்குப் போய் இந்தியன் சிவில் சர்விஸைப்பற்றியும் ப்ரொவின்ஷியல் சர்விஸைப்பற்றியும் முக்கியமான சாட்சியங்கள் பெற்றுவருகிறார்கள்."



பிறகு நமது அரசசக்ரவர்த்தியார் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வியாபாரம், கைத்தொழில் கல்விமுதலிய விஷயங்கள் சம்பந்தமாய் பார்லிமெண்ட் செய்யப்போகும் சட்டங்கள் இன்னவையென்றும் சொல்லிமுடித்தார்கள். இச்சமயத்தில் ஸ்திரீசுதந்தரவாதிகள் தங்கள் சம்பந்தமாய் சக்ரவர்த்தி அவர்கள் ஒன்றும் பேசவில்லையென்று கோபங்கொண்டு கலகம் செய்து தொந்திரவு செய்ய தீர்மானித்தார்கள். சிலர் பிடிக்கப்பட்டு கைதிசெய்யப்பட்டார்கள் சில ஸ்திரீகள் இவ்விதம் இங்கிலாந்தில் செய்துவருவதை அங்குள்ளோர் வெறுக்கிறார்கள். நாமும் அவர்கள்இவ்விதம்செய்வது சரியல்லவென்று நினைக்கிறோம்.

## THE STORY OF PERDITA OR THE KING'S LOST DAUGHTER.

[*Copyright Registered.*]

தாயார்: ஐயா, வாருங்கள், எங்கள் பக்கத்தில் உட்கார்ந்து ஒரு கதை சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

குமாரன்: அது சந்தோஷமாகவா அல்லது துக்கமாகவா யிருக்கவேண்டும்



தாயார்: உன்னிஷ்டப்படி சந்தோஷமாக யிருக்கட்டும்.

குமாரன்: மழைகாலத்தில் துக்கமான கதைதான் மிகவும் நல்லது. பூதபிசாசக் கதைகளில் ஒன்று எனக்குத் தெரியும்.

தாயார்: நல்லது, ஐயா, அதை இன்றைக்கு வைத்துக்கொள்வோம். வந்து இங்கு உட்காரு. உன்னுடைய பூதபிசாசக் கதைகளின் ஆவேசத்தால் என்னை பயமுறுத்த உன்னால் ஆனமட்டும் செய்.

## பெர்டிடாவின் கதை அல்லது காணாமற்போன அரசகுமாரத்தி.

சிஸிலிதேசத்து அரசனாகிய லியான்டஸும் அவனது அழகுள்ளவும், மகா பதிவிரதையாயுமுள்ள ஹர்மியோன் மனைவியும் வெகு அந்நியோந்நியமாய் ஒற்று வாழ்ந்து வந்தார்கள்.

**1. அரசனது கோபம்:—அதிக தப்பு செய்த ராணி ஹார்மியோன். அதிக துன்பமு , தோந்திரவும் மாசற்ற ஜனங்களுக்கும் நேரிட்டன.**

காலபேதத்தால் இவர்கள் சந்தோஷத்துடன் வாழ்ந்த வாழ்க்கைக்கு இடையூறு நேரிட்டது. .முக்கியமாக அரசனுடைய கெட்ட எண்ணங்களே காரணபூதங்கள் என்று சொல்லலாம். ஏனெனில், **லியாண்டஸ்** கோபம் பொறாமை இவைகளை அடக்கக்கூடாத துர் எண்ணத்தால் பீடிக்கப்பட்டு திடீரென்று, துஷ்டனாகவும், மனுஷத்தன்மை யற்றவனாகவும் ஆய்விட்டான். பெருந்துக்கமும், உபத்திரவமும் இவனது சாதுவானவும், பொறுமையானவும் உள்ள மனைவிக்கு சம்பவித்தன. கோபமூட்டப்பட்ட அரசன் ஒருநாள் தனது சிறிய குமாரனுடன் ஹார்மியோன் உட்கார்ந்திருந்த அறைக்கு உக்கிரத்துடன் சென்றான். அப்பொழுது அரசகுமாரன் **மேமிலஸ்** தனது தாயாருக்கு சந்தோஷ முண்டாகும்படி ஒரு சிறந்த கதை சொல்ல ஆரம்பித்தான். அரசன் உள்ளே நுழைந்து குழந்தையை வெளியே எடுத்துக்கொண்டு சிறைச் சாலைக்கு ஹார்மியோனை யனுப்பிவிட்டான்.

மேமிலஸ் சிறியபையனா யிருந்தபோதிலும் தனது அன்பிற் குரியவும், அழகு பொருந்தியவுமான அருமையான தாயாரை உருக்கமாய் நேசித்து வந்தான். தன் தாயார் மேற்கூறிய வண்ணம் அவமதிக்கப் பட்டதைக் கண்டபொழுது அவள் தன்னிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு சிறையில் வைக்கப் பட்டதையும் கண்டு, ஆழ்ந்த மனநோவால் பீடிக்கப்பட்டு, பசியற்று தூக்கத்தைத் துறந்து சில நாளளவில் வாடி வதங்கி தேகமெலிந்தவனானான். இவ்விசனம் இவனைக் கொன்றுவிடும்போலிருக்கிறதே என்று எண்ணி துக்கப்பட்டார்கள். மனநோய் எப்போதும் தேகத்தை நெருப்பில்போட்ட மெழுகைப்போல் கரைத்துவிடுமன்றோ? மனநோவுக்கு மருந்துண்டோ?

பதிவிரதா சிரோன்மணியாகிய சாந்தமுள்ள ஹார்மியோன் சிறைச் சாலையிலேயே ஒரு குழந்தையை ஈந்தாள். அந்த அழகுபொருந்திய குழந்தையைப் பார்த்து சந்தோஷமடைந்து, அடிக்கடி அக் குழந்தையைப் பார்த்து "என்னைப்போல் ஜயிலில் அடைப்பட்டிருக்கும் குழந்தையே! நீ எவ்வளவு மாசற்ற குழந்தையா யிருக்கிறாயோ அவ்வளவு தீங்கற்றவளாய் நானிருக்கிறேன் என்று சொல்வாள்.

**(2) சிறைச்சாலையில் ஹார்மியோனும் அவளது கைக்குழந்தையும் அவளது சகியாகிய பெருந்தன்மையுள்ள பாலினாவின் அன்பும்.**

சிஸிலிதேசத்து பிரபுவாகிய அன்டிகோனஸின் மனைவியாகிய பாலினாவுக்கு ஹார்மியோனிடத்தில் இரக்கமும், பக்ஷமுமுண்டு. அவளது நற்குணங்கள்யாவும் இவளுக்கு நன்றாகத் தெரியும். இவளது கணவன் லியான்டிஸ் அரசனிடத்தில் வேலையா யமர்ந்திருந்தார். தனது எசமானியாகிய ராணி குற்றம் சுமத்தப்பட்ட சங்கதியைக் கேள்வியுற்று, மிகவருந்தி ஹார்மியோனிருக்கும் சிறைச்சாலைக்குப்போய், அங்கு அவளுக்குத் துணையாக யிருக்கும் எமிலியாவைக் கண்டு, "அம்மா! நமது ராணியார் இவ்வித துன்பத்தை யனுபவித்து வருவது மிக்க விசனமா யிருக்கிறது. ராணியார் என்னை நம்பி தமது கைக் குழந்தையை என்னிடத்தில் துணிந்து கொடுத்தால் அதன் தகப்பனாராகிய நமது அரசனிடத்திற்கு அதை எடுத்துச் செல்லுகிறேன். தனது குற்றமில்லாத குழந்தையைக் கண்டு மனமிளகி அவளை மன்னிப்பாரோ, மன்னிக்கமாட்டாரோ என்பது நமக்குத் தெரியாது" என்றாள்.



பெருந்தன்மையுள்ள மாதே! தாங்கள் உயர்குலத்துக் குரியவண்ணம் செய்யக்கருதும் கொடையைப்பற்றி ராணியாருக்குத் தெரிவிக்கிறேன். 'ராணியாரும் நமது சகிகளில் எவராவது துணிவுடன் இக்குழந்தையை அரசன்முன் கொண்டுபோக மாட்டார்களா' வென்று இன்றுதான் விரும்பினார்கள்" என்றாள் எமிலி.

"ராணியாருக்காகப் பரிந்து என்னால் கூடியமட்டும் தைரியமாக லியான்டஸினிடம் பேசுவேன் என்பதை ராணியாருக்குச் சொல்லுங்கள்" என்றாள் பாலினா.

கடவுள் உம்மை ஆசீர்வதித்து தீர்க்காயுளை உமக்கு அளிப்பாராக. நமது மாட்சிமைதங்கிய ராணியாரிடத்தில் உமக்கு அதிக அன்பு பொங்கியிருக்கிறது என்றாள் **எமிலா**. உடனே எமிலா விடைபெற்று, ஹார்மியோன் ராணியாரிடத்திற்குப் போய் நடந்த சமாச்சாரங்களை யெல்லாம் விவரமாகச் சொன்னாள். ஹார்மியோன் சந்தோஷத்துடன் பாலினா கைவசம் குழந்தையை ஒப்புவிக்கும்படி எமிலாவிடத்தில் கொடுத்தாள். ஏனெனில் **பாலினா**வைவிட அதிக துணிவுடன் மற்றெவரும் தன் கணவரிடம் குழந்தையைக் காண்பித்து தமக்காகப் பரிந்துபேச முடியாதென்றும் காரண மில்லாமல் வந்த கோபத்தை ஒரு வேளை இவள் தணிப்பாள் என்றும் எண்ணி னாள்.

எமிலியா ஹார்மியோனிடமிருந்து குழந்தையைப் பெற்று பாலினா வசம் ஒப்புவித்தாள். பாலினாவின் கணவன் அரசனது கோபத்திற் கஞ்சி அவளை இவ்விதம் செய்யாமலிருக்க தடுத்தும் அவள் துணிகரமாய் நன்மை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அரசன் முன்பாகக் குழந்தையை எடுத்துக்கொண்டுபோனாள். அதன் தகப்பன் காலின்கீழ் குழந்தையை வைத்து ஹார்மியோனுக்குச் சார்பாக பல அனுகூலமான விஷயங்களை எடுத்துக்காட்டி கம்பீரமாய் பிரசங்கமாறி பொழிந்தாள்.

அரசனது கொடுமைக்காக அவனைக் குரூரமாய் நிந்தித்து, துக்கசாகரத்தில் முழ்கியுள்ள அவனது வணக்கமுள்ள மனைவியின்மீது இரக்கம் வைக்கும்படி வேண்டிக்கொண்டாள். ஆனால் பாலினாவின் முயற்சியுள்ள ஆட்சேபங்கள் லியான்டஸின் மனக்குறையை அதிக கேடாக்கின. தன் முன் வாதாடிக்கொண்டிருக்கும் பாலினாவை தூர இட்டுக்கொண்டுபோகும்படி அவள் கணவனுக்கு கோபத்துடன் உத்திரவு செய்தான்.

**அரசன் தனக்குப் பிறந்த பெண்குழந்தையை வனாந்தரக்கரையில் விட்டு வரும்படி கட்டளை செய்தான்.**

அரசன் தனிமையா யிருக்கும்பொழுது குழந்தையைப் பார்த்து யாதொரு குற்றமொன்றுமறியாத உதவியற்ற குழந்தையின்மீது இரக்கங்கொள்வானென்று எண்ணி அவன் காலின்கீழ் குழந்தையை விட்டுவிட்டு பாலினா திரும்பிப்போய்விட்டாள்.

நல்ல ஹிருதயமுள்ள பாலினா எண்ணிய பிரகாரம் நடக்கவில்லை. அவள் தப்பபிப்பிராயங் கொண்டாளென்றே சொல்லலாம். ஏனெனில் இவள் அவ் விடத்தைவிட்டு அகன்றதும் சிறிதும் இரக்கமில்லாத இக்குழந்தையின் தகப்ப

னார் பாலினாவின் கணவனாகிய அன்டிகோனஸைக் கூப்பிட்டு, குழந்தையை எடுத்துக்கொண்டு கடலுக்கப்பாலுள்ள வனாந்தரத்தில் இதை விட்டுவிட்டு வரும்படி கல்நெஞ்சுடன் கட்டளையிட்டான்.

அன்டிகோனஸ் அரசனது ஆக்ஞைப்பிரகாரம் நடந்தான். உடனே கப்பலில் குழந்தையை வைத்துக்கொண்டு கடலைத்தாண்டி தான் முதலில் காணும் வனாந்தரத்தின் ஓரத்தில் விட்டுவிட நினைத்து, புறப்பட்டான்.

### ராணியின் விசாரணை—பட்டத்துக்குரிய கைக்குழந்தையின் மரணம்.

அரசன் ஒரே பிடிவாதமாய் தன் மனைவியின் குற்றத்தையே நினைத்து நினைத்து வருந்தி மனச்சமாதானமின்றி அவள் தனது குழந்தையை இழந்த துக்கத்தால் மிக்க துயரமுற்றிருக்கையில் அவளை விசாரணை செய்ய தனது சமஸ்தானத்து பிரபுக்களுக்கு முன் அவளை வரவழைத்தான். லியான்டஸ் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஒரு மனிதன் உள்ளே நுழைந்து மகாராஜாவே! இச்சிம்மாசனத்துக்குரிய தங்களது புத்திரன் தனது அருமையான தாயாரின் விசாரணையைக்குறித்து கேள்வியுற்று துக்கத்தாலும், வெட்கத்தாலும் மனோவியாதியால் பீடிக்கப்பட்டு திடீரென்று மரணமடைந்தான் என்ற சமாச்சாரத்தை அரசனுக்குத் தெரிவித்தான்.

தனது துர் அதிர்ஷ்டத்திற்காக மிக வருந்தி தனது உயிரை பலிகொடுத்த தனது பிரியம்வாய்ந்த சிறு குமாரனது மரணத்தைக் கேட்டு மெய்ம்மறந்தாள். இந்த துக்கசமாச்சாரம் இவன் ஹிருதயத்தைத் துளைக்கவே, சந்துஷ்டி சிறிதுமில்லாத தன் மனைவிக்காகி இரக்கங்கொள்ள ஆரம்பித்தான். உடனே அவள் அருகாமையிலிருந்த பலினாவையும், இன்னுமுள்ள ஸ்திரீகளையும் கூப்பிட்டு தன் மனைவியை இட்டுக்கொண்டுபோய் அவளுக்கு மயக்கம் தீர்ந்து சொஸ்தமடையுமாறு செய்யும்படி கட்டளையிட்டான். அவர்கள் அவ்விதமே செய்தார்கள். பாலினா பின்பு அரசனிடத்திற்குத் திரும்பி வந்து, மகாராஜாவே! தங்கள் மனைவி இறந்துவிட்டாள். நாங்கள் செய்த சைத்தியோபசாரங்கள் பிரயோசனப்படவில்லையென்று சொன்னாள்.

### லியாண்டஸ் தான் குரூரமா யிருந்ததைப்பற்றி பச்சாத்தாபம் மேலிட்டு மிக்க வருந்துகிறான்.

தான் இழந்த குமாரத்தியைப் பெற கெஞ்சுகிறான்.

ராணி இவ்வுலகைவிட்டு வானுலகுக்கு ஏகினாளென்பதைக் கேட்டபொழுது அவளிடத்தில் குரூரமாய் தானிருந்ததைக் குறித்து துக்கப்பட்டான்.

இப்பொழுதுதான் தான் கடின நெஞ்சுடன் அவளை நடத்தியது அவள் ஹிருதயத்தைப் பிளந்துவிட்டதென்று நினைத்து அவள்மீது அபாண்டமாகத் தான் சுமத்திய குற்றங்கள் அவளிடத்தில் சிறிதுமில்லை என்பதை உண்மையாக நம்பினான். சிறிய இராஜகுமாரனாகிய பேமிலஸ் மரித்தமையால் தான் இழந்த குமாரத்தியை மறுபடியும் அலைந்துதிரிந்து தேடி அளிப்பவருக்கு தன் இராஜ்யத்தைக் கொடுப்பதாகக் வாக்களித்தான். வியாகூலம் மேலிட்டு தனிமையாக துக்கமான எண்ணங்களைக்கொண்டும், தனது பதிவிரதாசிரோன்மணியாகிய மனைவியினிடத்தில் குரூரமாகயிருந்த தந்நிமித்தம் பொங்கி வரும் துக்கத்தில் ஆழ்ந்தும், அநியாயமாய் சந்தேகங்கொண்டதற்காக மிக்க வருந்தி அரசன் தன் வாழ்நாளை சுகமின்றிக் கழித்தான்.



## சந்திரவதனன்—ஓர் நாவல்.

எங்கள்கண்கள் சந்தித்தன. அவளழகியதோற்றம் எனக்காச்சரியத்தை யுண்டுபண்ணியது. அவளைக்காண என்மனம் வெறுப்படையவில்லை. பரிசுத்த தேகமும் பரிசுத்த மனமுமுடையவளாய்க் காணப்பட்டாள். என்மனம் தத்தளித்தது. இன்னது பேசுவதெனத் தோன்றவில்லை. சற்றுநேரம் அவளென்னைப் பார்த்து "அத்தான் சுகமா யிருக்கிறீர்களா? கடவுள் இங்கு சற்று நேரமாவது சந்திக்கச் செய்தமைக்குச் சந்தோஷிக்கிறேன். என் தாயும் நானும் உம்மை நினைத்து பலதடவையும் வருந்தினோம். நீரிப்போ தெங்கிருக்கிறீர்" என்றாள். இவ் வார்த்தைகளைக் கேட்டபின் என்மனத் தோற்றங்கள் வெளிவந்தனவாதலால் உன்னைக் கடைசியாய் இந் நிலைமையிற்காணச் சந்தோஷிக்கிறேனென்றேன். அவளிவ்வார்த்தையின் பொருளுணராதவளாய்க் காணப்பட்டாள். பரிசுத்தபார்வை யுடையவளாய் என்னைப் பார்த்து ஒன்றுங்கூறாது திகைத்து நின்றாள். அத்தோற்றம் அவள் தவறுநடை யுடையவளல்லவென எனக்கு சாண்பித்தது. "இச்சமையம் அத்தான், அத்தான் ஓடிப்போம். தகப்பனார், தகப்பனார்." என்றாள். நானும் சூதன் நாங்களிருந்தவிடம் நோக்கி வருவதைக்கண்டேன். அவ்வன்ன சாலையிற் திண்ணையண்டை ஒதுங்கி ஒளிந்துகொண்டேன். சூதனும் சுந்திரமென்றான். அவளும் என்பா என்று சென்றாள். இருவரும் சென்றார்கள். நானும் பதுங்கியிருந்தே அவர்கள் போவதைக் கவனித்தேன். ஓர் வண்டியி லிருவருமேறிச் சென்றார்கள். வண்டியும் என்கண்ணுக்கு மறைந்துபோயிற்று.

பதுங்கி நின்ற இடம் விட்டுவந்தேன். அவள் தந்தையிடம் அவள்போய்ச் சேர்ந்தமைக்குச் சந்தோஷித்தேன். எனக்குதவிசெய்து சூதன் காவலிலிருந்து என்னை வெளிப்படுத்தியதற்கே அவள் தொந்திரவுப்பட்டு ஓடிவந்திருக்கவேண்டும். சூதன் எவ்வளவு பிறருவருக்கும் குணமுடையனாயினும் தன் பெண்ணைத் தேடி யழைத்துப் போனமைக்குச் சந்தோஷித்தேன். இவ்வித எண்ணங்களுடன் மாளிகைவந்தேன்.

பின்னொருமாதம் சென்றது. முன்போற் பின்னொருதரம் செல்லூர் போய்த் திரும்பினேன். வரும்போது உயர்ந்த மரங்கள் சூழ்ந்த பாட்டையோரத்தில் உட்கார்ந்து யேதோ சிந்தித்துக் கொண்டிருந்தேன். அப்போது அம் மரங்கள் நடுவிலுள்ள ஓர் பாட்டையில் அதிவேகமாய் வரும் குதிரைக் காலடிச் சத்தம் கேட்டது. நானெழுந்து நின்றேன். துரிதமாய்வந்த குதிரையின் முதுகிற் ஓர் புருடனும் ஓர் பெண்ணும் சவாரிசெய்து வந்தார்கள். சமீபத்தில்வர அவள் சுந்திரமும் கோபால கிருஷ்ணப் பிரபுவும் எனத் தெரிந்துகொண்டு சுந்திரமென்றேன். இருவரு மென்னைத் திரும்பிப் பார்த்தார்கள். நானும் குதிரையைப் பிடிக்கப் பின்னே யோடினேன். நானோடுவதைக்கண்ட இருவரும் நகைத்தார்கள். குதிரை என் கண் மறைந்தது. என் மனம் நோவடைந்தது. மாளிகைக்குத் திரும்பினேன்.

பின்னொருமாதம் சென்றது. மாளிகை புதுப்பிக்கப்பட்டது. சன்னல்களின் தொங்கல்கள் புதிதாய் வாங்கப்பட்டன. வேலைக்காரர்கட்கு புதிய உடைகள் வாங்கப்பட்டன. மாளிகைக்குக்கீழ் விரிப்புகள் வாங்கப்பட்டன. இன்னும் மநேக சாமான்கள் சேகரிக்கப்பட்டன. செல்வ சாதனர்க்கும் அலங்காரி யம்மைக்கும் சில புதிய உடைகள் சேகரிக்கப்பட்டன. இவையெல்லாம் பதினை

ந்து நாள்களாய்த் தெரிந்தாலும் ஒரு பட்சத்திற்குப் பிறகே எங்கட்கு இவை நடப்பதின் காரணம் தெரியும். வீட்டின் எஜமானியின் சகோதரி ஓர் மாதத்திற்கு விருந்தினளாய் மறுபதினைந்தாம்நாள் வருவாளென்பதே இவ்விசேஷங்கட்கு காரணம். இங்கு படிப்போரை கதைத் தொடர்ச்சியினின்று சற்று நிறுத்திச் சொல்லவேண்டி வருகிறது.

தேவநகர்க்கு இருபது மயில்கள் தெற்கே ரத்தினபுரி யென்று ஓர் நகர் உள்ளது. அந்நாட்டின் ஜமீன்தாருக்கு முதல்தாரமாய் வந்த மனைவிக்கு அலங்காரி ஒரேபெண். இரண்டாவது தாரத்திற்கு இரண்டு புருடக் குழந்தைகளும் மூன்று பெண்களும் அதில் முதற்பெண்ணிற்கு கல்யாணம் நடந்துவிட்டது. இரண்டாவது கமலவதனி என்னும் பெண். அம்மாதே இங்கு விஜயம்செய்வதாய்த் தீர்மானித்தது. அலங்காரியம்மையும் அவர் புருடனும் தனபதி சாலையைவாங்கி தேவநகரிலிருந்து வந்ததுமுதல் அவா குடும்பத்தார் யாருமே வந்ததில்லை. அலங்காரிதான் ஜமீன்தார் மகள் என்னும் பெருமையை இடையிடையே தன் புருடனோடு சம்வாதம் செய்வதில் பேசிக்கொள்வது வழக்கம். விருந்தாய்வரும் கமலவதனி அலங்காரி யம்மையின் குணம் நடையழகு முதலியவைகளில் முற்றும் எதிர் நடையா யிருப்பாளென்றும் கேள்விப்பட்டு வேலைக்காரரெல்லாம் திருப்தியாயிருந்தோம்.

மற்றும் பதினைந்து நாள்கள் சென்றன. அன்று மாலை மூன்று மணிக்கு கமலவதனி வருவதாய் எதிர்பார்க்கப்பட்டது. மாளிகை புதிய சாமான்களால் அலங்கரிக்கப்பட்டது. தலைவர் தலைவியுள்பட வேலைக்காரர்களும் புதியவுடை தரித்துக்கொண்டோம். நானம்மாளிகைக்கு வேலைக்கு வந்தபோது புதிய வுடை ஒரு சதையும் இப்போது மூன்று மாதத்திற்குள் புதியவுடை ஒரு சதையும் கிடைத்து விட்டதைப் பற்றி மற்ற வேலைக்காரர்கள் என்னிடத்தில் பொருமை கொண்டார்கள். மாலை மூன்று மணிக்கு மூன்று நிமிஷங்கள் முன்னர் எல்லோரும் வாயிற்படியில் வந்தோம்.

மூன்று மணியாயிற்று, நான்கு குதிரைகள் பூட்டிய ஓரழகிய வண்டி மாளிகை வாயிலில்வந்து நின்றது. எல்லோரும் வண்டியினிடம் போனோம். உத்திரவிட்டபடி வண்டியின் கதவை முன்னர் நான் திறந்தேன். நாகரீகமும் லட்சணமுமுடைய ஓர்பெண் பதினெட்டு வயதுடையவள் வண்டியிலிருந்து முன்னர் இறங்கினாள். அவள் கைலாகுதர மறுபடி ஓர்பெண் பதினாறு வயதிருக்கக் கூடியவ ளிறங்கினாள். இள நகையும் விசால நேத்திரமும் பார்ப்போர் கண்களைக் கவரும் அழகிய வதனமும் கம்பீரத் தோற்றமும் ஒத்த உயரமும் தயாள சிந்தனை முகத்தில் வெளிப்படையாய் விளையாடவும் பட்டுப் பூச்சிப் போல் தேகத்தின் மினுமினுப்பும் மிருதுவும் விளங்கியது. நாங்கள் வந்தனம் செய்தோம். பதில் மரியாதைசெய்து தன்தளர்ந்த நடையுடனும் குழறிப் பேசும் வார்த்தைகளால் சந்தோஷத்திற்குரிய மரியாதை வார்த்தைகள் சில சொல்லி இள முறுவலுடன் சென்று தன் பக்கத்தில் நின்ற சோதரியைத் தழுவிக் கொண்டாள். அவரும் தன் சோதரியை இறுகத் தழுவி சந்தோஷத் வரவுகூறி மகிழ்ந்தார். பின் தன் தமக்கை நாயகன் முகத்தை நோக்கினள். அவரும் மகிழ்வுடன் கமலவதனி கைகளைப் பிடித்து முகந்து மரியாதை செய்தார்.

பின்னெல்லோரும் மாளிகை சென்றோம். வந்தவண்டியை திருப்பியனுப்பி விட்டார்கள். பின் அலங்கரிக்கப்பட்ட இடத்தில் மேஜை முன்னிருந்த நாற்காலிகளில் மூவருட்கார்ந்தார்கள். கமலவதனியுடன் வந்த தாதி சரசவ



ல்லி யென்பாள் வேலைக்காரர்களுடன்வந்து சேர்ந்துகொண்டாள். ஆகாரம் சேகரிக்கப்பட்டிருந்தன. வந்தவர்களும் மற்றயவர்களும் உண்டபின் சரசவல்லி என்னை யழைத்துப்போனாள்.

உன் பெயரென்ன வென்றாள். சந்திரவதன னென்றேன். இவர்கள் மாளிகையில் நீ வேலைக் கமர்ந்தது மிக்க விசனமான காரியம். நீ இன்னும் சில மாதங்களிருந்து விடுவையானால் நீ இவர்களைப்போல் கன்னமொட்டி சதுப்பொட்டி பின்னும் சில நாளில் சமாதிக்குழி தேடவேண்டியதுதான். இவர்கள் தரித்திரிய நடைகண்டே இவர்களைச் சேர்ந்தா ரொருவருமிங்கு வருவதில்லை. என்னவோ என் எஜமானிக்கு இவர்களைப் பார்ப்பதிலும் ஓர் சந்தோஷம் உண்டாகியது. நாங்கள் கேள்விப்பட்ட படியே இங்கு எல்லாம் செட்டா யிருப்பதைக் கண்டேன். இங்குள்ள வேலைக்காரர்களும் உன்னைத் தவிர வீட்டெஜமான்களுக்கு ஒத்தவர்களாகவே காணுகிறார்கள். உன்னைப் பார்த்தவுடன் எனக்கேதோ பிரியமுண்டாயிற்று. என் போதுபோக்கிற்கு நீ யொருவனிங் கிருப்பதில் சந்தோஷம் என்றாள். இதற்குள் கமலவதனி கூப்பிடும் மணிச்சத்தம் கேட்க அவள் போயினள்.

அன்றிரவு போஜன நேரத்தில் அவளைக் கண்டேன். அவள் பெயருக் கேற்ப வேடிக்கைப் பேச்சுகளில் பிரிய முடையவளா யிருந்தாள். அவள் பேசுவதில் ஒரு நாளும் சந்தோஷித்தறியா சோம்பேரியும், பரிசாரகனும், பேச்சழகியும் சிரிப்பார்களென்றால் என்னைப் பற்றி கேட்பானேன்? அப்படியவர்கள் நகையா திருந்தாலும் இவர்கட்கு ஆகாரம் வயிறு நிறையக் கிடையாமையால் அவர்கட்கு நகைக்கும் பலமேது என்பாள், உண்டபின் அவளெஜமானியின் பணிக்குப் போயினள்.

மறுநாட் காலமே எழுந்து தேகசுத்தி செய்து வேலைக்காரரெல்லாம் இருக்கும் சமையல் செய்யு மிடத்திற்குப் போனேன். வீட்டுத் தலைவர்கட்கு காப்பி முதலிய ஆகாரங்கள் கொடுத்தபின் எங்கட்குக் காப்பி போராமையால் வடிக்கட்டிய தூளை மறுபடியும் உபயோகப் படுத்த பரிசாரகனும் சோம்பேரியும் எத்தனப் படுவதைக் கண்ட சரசவல்லி வேறு வைத்திருந்த புதிய தூளை காப்பிப் பாத்திரத்தில் போட்டு நாங்கள் உங்கள் மாளிகை விட்டுப்போகும் வரையி லிந்தவேலை செய்யாதீர்க ளென்றாள். சமீபத்தில் நின்ற பேச்சழகி தன் காலைக் கீழே மோதி சரசவல்லியைப் பார்த்து நீ செய்தது முட்டாள்தனமும் அதிகப்பிரசங்கித் தனமுமாம். அத்தூள்கள் மூன்று நாள்களுக்கு நிறுத்துக் கொடுக்கப்பட்டது. நீ என்ன எஜமானிக்கு மேற்பட்ட யெஜமானியாய் நினைத்தாய்போலும். ஓர் வேலைக்காரிக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் கூடாதென்று கடுத்துக் கூறினாள்.

அதற்கு சரசவல்லி அம்மையே, பேச்சழகியாரே, உங்கள் பேச்சழகு உங்கள் எஜமானிமட்டு மாகட்டும்- என் னெஜமானி எந்தப் பிராணியும் தன்னிடம் திர்ப்தியா யிருக்கவென்று கருதுகிறவர். நாங்களுள்ளவரையில் நாங்கள் சிலவு செய்வது எங்கள் சிலவேயாகும். நீங்கள் கவலைப் படாதீர்களென்றாள். அவளும் பதிற்கூறாது கடுத்த முகத்துடன் போயினள். அன்றைப்போதும் போயிற்று.

மறுநாட் காலமே சரசவல்லி என்னைக் கண்டு நான் செல்லூர் கடைத் தெருவிற்குப்போய் சில சாமான்கள் வாங்கிவரக் கருதுகிறேன் நீ என்னுடன் வருவாயா? வென்றாள். நான் பதில் கூறாது நிற்பதைக் கண்டு உன் எஜமானி உத்திரவு கிடைத்தால் வரலாமல்லவா? என்றாள். அப்படியிருந்தால்

நானுன்னோடுவருவதில் சந்தோஷம் உண்டாவதன்றி வேறென்ன என்றேன். அவளும் புன்சிரிப்புடன் போயினள். நான் திரும்பியபோது பேச்சழகி என்னெதிர்வந்து, நீங்கள் பேசிக்கொள்வதைக் கேட்டிருந்தேன். நீ அவளுடன் கடைத்தெருபோகக் கூடாதென்றாள். வீட்டெஜமானி உத்திரவு கிடைத்தாலென்றேன். உன்தேகம் குணமில்லையென்று சொல்லென்றாள். அப்படிச் சொல்வது கூடுமோவென்றேன். நம்மெஜமானியின் தயவை நானுனக்கு தேடிவைக்க முடியுமாதலால் நான் சொல்லியபடி எப்படியும் நடக்க வேண்டுமென்று சொல்லிப் போயினள்.

மாலை மூன்று மணிக்கு சரசவல்லி என்னறைக்கு வந்து சந்திரவதனா உனக்காக ஐந்து நிமிஷங்கள் வெளியில் காத்திருப்பேன்.

உன் எஜமானி உத்திரவு பெற்றாயிற்று, சீக்கிரம் வாவென்றுபோயினள். நானும் பதிற்கூறாது வேறுடை தரித்துச் சென்றேன். எனக்காக அவளும் வாயிற்படியில் காத்திருந்தாள். என்னைக் கண்டவுடன் ஆறு நிமிஷங்கள் சென்றன, அனாவசியமாய் ஒரு நிமிஷம் காக்கவைத்தாய் என்று நகைத்து என் கையைப் பிடித்தழைத்தாள். இருவரும் மாளிகை தாண்டியதும் நல்ல காற்று வீசியதால் நாம் நடந்துபோவதில் சந்தோஷமாய் நினைக்கிறேன். நீ அவ்வளவு தூரம் நடப்பாயோ என்கிற சந்தேகமென நகைத்தாள். உன் விளையாட்டுப் பேச்சுக்களில் எனக்கு சந்தோஷ மிருத்தலால் நடந்தேபோவோமென்றேன்.

போகும்போது வழியில் என் விர்த்தாந்தங்களைக் கேட்டாள். நான் சூதன் சம்பந்தத்தையும் சந்திரவதனி சம்பந்தத்தையும் விலக்கி மற்றவைக் கூறினேன். என்னிலைமையைப்பற்றி அவள் பரிதாபப்பட்டதுமன்றி கண்ணீரும்விட்டாள். முன்னிலும் அதிகமாய் என்னிடம் பிரியம் பாராட்டத் தலைப்பட்டாள். நாங்கள் கடைத்தெரு சென்றதும் அவள் எஜமானிக்கு வேண்டிய சில சாமான்களுந் தனக்குவேண்டிய சிலதும்வாங்கி உனக்கேதேனும் தேவையோவென்றாள். எனக்கொன்றும் தேவையில்லையென்றதும், சில தேயிலைப் பெட்டிகளும், காப்பித்தூள் டப்பிகளும், சீனிவகைரா சில சாமான்களும் வாங்கி எல்லாம் பந்தோபஸ்தாய் மூட்டைக்கட்டி தபால் வண்டியில் தனபதி சாலைக்கு சத்தமுள்பட கொடுத்தனுப்பி கடைத்தெருவைச் சுற்றிப்பார்க்கத் திரும்பினோம். ஓர் காப்பிக்கடையில் சில தின்பண்டங்களும் தேநீரும் உண்டு வெளிவந்தேன். என் தோளை யாரோ பிடிக்கக்கண்டேன். திரும்பிப் பார்க்க சம்புநாதன். இருவரும் சந்தோஷத்துடன் தழுவிக்கொண்டோம். சம்புநாதன் சந்திரா உன்னைக் காணச் சந்தோஷமாயிருக்கிறது. சிலருடன் இரகசியமாய் இரவே போகவேண்டியிருந்ததால் உன்னுடன் சொல்லிப்போக முடியாது போயிற்று என்றான்.

இச்சமயம் சமீபத்தில்நின்ற சரசவல்லியைப் பார்த்தேன். சம்புநாதனும் அப்பெண்மணி யாரென்றான். நான் விடை கூறினேன். அவன் அவள் கையைப் பிடித்து முகர்ந்துகொண்டு என்னன்பன் எனக்கோர் புதிய சிநேகத்தைத் தேடி வைத்தானென்றான். நானும் உங்கள் சிநேகம் புதுமையாகவே தோன்றினால் எனக்கின்னும் திருப்தியா யிருக்குமென்றேன். சம்புநாதன் சந்தோஷத்துடன் என்னைப் பார்த்தான். சரசவல்லி சங்கையுள்ளவளாய் உன் வேடிக்கைப் பேச்சு உன்னிடம் இருக்கட்டுமென்றாள்.

நானும் சரசவல்லி மெத்த கோபித்துக்கொள்வதுபோல் காண்கிறதால் சம்புநாதா மற்ற விஷயங்களைக் கூறென்றேன். சம்புநாதன் என் கையை ஓர்



கரத்தும் சரசவல்லி கையை ஓர் கரத்தும்பற்ற மெதுவாய் நடந்துபோனோம். சந்திரவதனா நீ கொண்டுவந்த கடிதம் உன்னிடம் தந்தவர் குமுதவல்லியே. சுசீலர் தான் அவர்களால் வெறுக்கப்பட்டு திரும்பிவரும்போது குமுதவல்லியார்க்கு ஓர் கடிதம் எழுதினார் என்று சொல்லியிருந்தேனல்லவா? அக்கடிதங் கண்டவுடன் அவர் சுசீலரை மெத்த விசுவாசித்தமையால் வருந்தி தன் பெற்றோரிடம் கடிதத்தைக்காட்டி மன்னிப்புக்கேட்டனராம். பொய்க்கையெழுத்து செய்யும் அவர்கட் கிரங்குவது கூடாதென்று நினைத்தமையால் தன் பிரார்த்தனை செல்லாமைக்கு வருந்தி தான் சுசீலரிடத்துகொண்ட அன்பு மேற்கொண்டவராய் தனியே புறப்பட்டு வந்து அக்கடிதத்தை உன்னிடம் தந்தார். அக்கடிதப்படி ஓர் சத்திரத்தி லவரைக் கண்டோம்.

இருவருக்கும் கல்யாணம் நடந்தேறியது. குமுதவல்லியாரின் அத்தை பத்துலட்சம் ரூபாய்கள் இறந்துபோகும்போது இவர்பேருக்கு தேவநகர் கஜானாவில் வைத்திருக்கிறார். இதுகாறும் பலவூர்களைச் சுற்றி வந்தோம். இப்போது தேவநகர்போய் மேற்கண்ட தொகையை வைத்துக்கொண்டு இருவரும் சீராய்க் குடித்தனம் செய்ய நினைத்திருக்கிறார்கள் என்றான். வாகுணப் பிரபுவும் பெரியநாயகியாரும் என்னவாயினரென்றேன். அவர்களிருக்குமிடம் தெரியவில்லை, தலைநாட்டில் சென்றிருப்பார்களென நம்பவேண்டி யிருக்கிறதென்றான். இதற்முன் அவன் கடிகாரத்தைப்பார்க்க மணி ஐந்தாயினமையால் இனி நான் தாமதிக்கக்கூடாது. மணி ஆறுக்கு இங்கிருந்து தேவநகர் பயணம் போகிறோம். அங்கு சென்றதும் கடிதம் எழுதுகிறேன் என்று எங்களிருவரிடமும் விடைபெற்றுச் சென்றான். நாங்கள் மாளிகை நோக்கித்திரும்பினோம். வழியில் சரசவல்லி ஏதோ யோசனையாய் இருப்பவளாய்க் காணப்பட்டாள். நானவள் குறிப்பறியான்போல் என் நேசன் நற்குணங்களைப் புகழ்ந்து வந்தேன். அவளும் விருப்பாய்க் கேளாதுபோல் எல்லாம் கேட்டாள். கடைசியாய் அவர் கடிதம் எழுதுவதாயும் சொன்னாரல்லவா? என்றாள். ஆம் எழுதுவானென்றேன். மாளிகை சமீபித்தமையால் இருவரும் சென்றோம். கடையில் வாங்கிய தேயிலை காப்பி சீனிமுதலியவைகளைப் பரிசாரகன் கையிற் கொடுத்தான். அன்றுமுதல் பேச்சழகி என்னுடனும் சரசவல்லியுடனும் பேசுவதில்லை. இப்படி ஒருமாதம் கடந்தது. கமலவதனியை தன்னூருக்கு வரும்படி அவள் பெற்றோர் கடிதம் கிடைத்தது. அதற்கு அலங்காரியர் இன்னும் இரண்டு மாதங்கள் தன்னோடிருக்கும்படி பதில் கடிதம் விடுத்தார். அதற்கு திருப்திகரமான பதில் கடிதம் கிடைத்தது. பேச்சழகி தவிர மற்றை எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தந்தது.

சிலநாள் சென்றபின் வேலைக்காரர்களெல்லாம் ஓர்புரத்து உட்கார்ந்து சரசவல்லி சாதுரிய வார்த்தைகளில் சந்தோஷித்துக் கொண்டிருந்தபோது தபாற்சேவகன் என் விலாசத்திற்கோர் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். அக்கடிதத்தை பிரித்துப்பார்த்து சரசவல்லியை குறிப்பாய் பார்த்து நகைத்தேன். அவள் தன் சந்தோஷ முகத்தை நீக்கி சஞ்சலப்படுவதைக் கண்டேன். பின்னவளைப் பார்த்து இதோ சம்புநாதன் கடிதம். தாங்கள் தேவநகர் சுகமாய் சேர்ந்து ஓர் சாலையி லிருப்பதாயும் அதின் விலாசத்தையு மெழுதி "சரசவல்லிக்குப் பிரியமானால் தனக்குக் கடிதம் எழுதிக் கொள்ளும்படியும் அவ்விலாசத்தை தெரிவிக்கும்படியும் எழுதியிருக்கிறானென்றேன். நீயொரு அயோக்கியப் பயல் எப்போதும் விளையாட்டுப் பேச்சென்றாள். உன்னிலும்

வேடிக்கைப் பேச்வாரிங்கில்லை. ஆனல் இச்சமயம் நிதானமாய் காணுகிற
தென்றேன். சடுதியில் என் கையிலிருந்த கடிதத்தைப் பறித்துக்கொண்டு
அதனுள் தன் விலாசத்திற் கோர்கடிதம் முத்திரித் திருப்பதை கண்டெடுத்
துக்கொண்டு போக்கிரிப் பயலென்முள். அக் கடிதத்தைப் படித்தபிறகு நீங்
கள் உங்கள் கடிதத்திற்கு பதிலெழுதுவீர்கள்போ லிருக்கிறது. அத்துடன்
என் கடிதத்தையும் சேர்த்தனுப்ப பிரபுவுக்கு சம்மதமோ வென்முள். சம்பு
நாதனும் உங்கள் கடிதத்தை வாங்கி யனுப்புவதற் காகத்தான் எனக்குக் கடி-
தம் எழுதியது என்றேன். அவள் லச்சையுடன் எழுந்துபோயினள். மூன்று
மணிக்கு அலங்காரி அம்மையும் கமலவதனியும் வெளியே உலாவப் போனார்
கள். செல்வசாதனர் என்னிடம் ஓர் கடிதம் கொடுத்து முன்னைய வழக்கம்
போல் செல்லூர் போய்வரச் சொல்லினர். நான் போவதறிந்த சரசவல்லி
சம்புநாதனுக்கு ஓர் கடிதம் எழுதித்தந்தாள். அதனையும் வாங்கி நானெழு
திய கடிதத்துடன் சேர்த்து முத்திரித்து தபாலாபீஸில் சேர்ப்பதற்காக எடுத்
துக்கொண்டேன்.

அக்காலம் மாசூல் அறுவடையான கோடைகாலமாதலால் வயலினுள்ள
ஓடிப்பாதை வழியே செல்லூருக்குப்போக எண்ணி அவ்வழியே கொஞ்ச
தூரம் சென்றதும் என்னெதிரே ஒரு பர்லாங் தூரத்தில் என் எஜமானியும்
அவர் சகோதரியும் உலாவி வந்தார்கள். அவர்கட்கு கொஞ்சதூரத்தில் ஓர்
பசுக்கிடை மேய்ந்துகொண்டிருந்தது. அக்கிடையில் நின்ற விருஷபம் அவர்
களைக் கண்டதும் திடீரெனத் தன் வாலை வளைத்து மேலே தூக்கிக்கொண்டு
கொம்புகளுடைய தலையை கீழே தாழ்த்திக்கொண்டு பாய்ந்தோடிவந்தது.
இதனை நான் கண்டேன். அவர்களும் பார்த்துவிட்டார்கள். இருவர் வாயினின்
றும் வீரிட்டசத்தம் கேட்டது. நான் ஓடியவேகத்தில் ஓர் சொற்பகல் தட்டி-
யிருந்தாலும் என்முகம் சிதறுண்டேபோகும். இருவரும் ஓடிவந்தார்கள்.
ரிஷபம் சமீபித்ததும் அலங்காரியார் இடறி கீழே விழுந்தார். கமலவதனிக்கு
பின்புறம் ஓர் கோல் தூரத்து விருஷபம் நெருங்கியது. நானும் போனேன்.
அக்காளைக்குமுன் நான் நின்றுகொண்டு என் கையிலிருந்த ஓர் சிறிய வஸ்
திரத்தை அதன் கண்களுக்கெதிரில் பிரித்துக் குலுக்கினேன். அக்காளையின்
முகத்திற்கும் எனக்கும் நாலடிதூரமே யிருக்கும். அது திடீரென வந்த
வேகம்போல் திரும்பி யோடியது. இக்காட்சிகளைக் கண்ட ஓர் குடித்தனக்
காரன் அச்சமையமங்கு ஓடிவந்தான். அவனென் தைரியத்திற்கு மெச்சி உன்
உயிரை மதித்தாயில்லை. சிறுவனே நல்லகாரியம் செய்தாயென்றான். நானவனை
ஐயா நீர் அதோ துலையில் விழுந்து கிடக்கும் என் னெஜமானியைப் பாரு
மென்று பின் கமலவதனியைத் திரும்பிப் பார்த்தேன். அவள் துலைதூரம்
ஓடிப்போ யிருப்பாளென்று நினைத்தேன். என் காலடிக்குச் சமீபத்திலேயே
பிரக்ஞையின்றி வீழ்ந்துகிடக்கக் கண்டேன். மெதுவாய் அவளைத் தூக்கி
மடியில் சாத்திக்கொண்டேன் ஒரு நிமிஷத்திற்குப் பிறகு அவள் பாக்க
விழித்து என்னைப் பார்த்தாள். திரும்பவும் என்மேல் சாய்ந்து கண்களை
மூடிக்கொண்டாள். நான் அம்மணி அம்மணியென்று மெதுவாய்க் கூப்பிட்
டேன்.

கமலத்தன்னை.



## எழும்பூர் கவர்ன்மெண்டு விதவாச்ரமம்.

பிராமண பால்ய விதவைகளைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டுவந்து
அவர்கள் கௌரவமாய் ஜீவிக்க வழிகாட்டும் பொருட்டு நமது காருண்ய கவ
ர்ன்மெண்டார் ஒரு ஹோம் ஸ்தாபித்திருப்பதை நமது சகோதாசகோதரிகள்
அறிந்திருக்கலாம். ஆயினும் அதைப்பற்றிய விவரங்கள் பலருக்குத் தெரிந்
திலவாதலின் அவற்றை அறிவிப்போம்.

சென்ற வருஷம் சகோதரி சுப்புலக்ஷுமி யம்மாள் ஸ்தாபித்த "ஏழைப்
பெண்கள் ஐவேஜி"யின் உதவியினால் சென்ற 1912-ம் வருஷம் ஜூலை மா
சம் "சாரதா வித்யாச்ரமம்" என்ற பெயர் பூண்ட ஒரு விதவாச்ரமம் ஏற்படு
த்தினர். அந்த ஆச்சிரமத்தில் நான்கு விதைவைகள் சேர்ந்தனர். இரண்டு
மாத காலத்தில் ஆறு பேர்கள் அவ்வாச்சரமத்தில் படிக்கத் தொடங்கினர்.
பொதுஜன ஊக்கமும் ஒத்தாசையும் மிகக் குறைந்திருந்தபடியால் ஆச்ரமத்
தை நடத்துபவர்கள் மனத்தளர் வடைந்தார்கள். மேற்கண்ட ஐவேஜி ஸ்தா
பித்து ஆறு மாதங்களாயினும் சேர்ந்த தொகை ஒரு ஆயிரங் கூடவில்லை.
ஆகவே சென்ற செப்டம்பர் மாதம் பெண்கள் பாடசாலை இன்ஸ்பெக்டரெஸ
கனம் லிஞ்ச், பிராமண பாலவிதவைகளைப் படிப்பித்து முன்னுக்குக் கொண்டு
வரும் பொருட்டு ஒரு "ஹோம்"ஸ்தாபிக்க வேண்டுமென்று சிபார்ஸு
செய்திருந்ததைக் கவர்ன்மெண்டார் ஒத்துக்கொண்டுவிடவே சகோதரி
சுப்புலக்ஷ்மி தான் ஏற்படுத்திய ஆச்சிரமத்தையும் அதிலிருந்த மாணவர்களை
யுங் கவர்ன்மெண்ட் விதவாஹோமில் சேர்த்துவிட்டார். இப்பவும் இந்த
ஹோமில் ஒன்பது விதவை களிருக்கின்றனர். ஒன்பது வயது முதல் பத்
தொன்பது வயது வரையிலிருக்கிறார்கள். எல்லாரும் பிராமணரே. இவர்
களில் இருவர் தெலுங்கர், ஒருவர் மாத்வர், மற்றவர் ஸ்மார்த்தர் வகுப்பையும்
சேர்ந்தவர்கள். இவர்கள் குடியிருக்கவிடமும் சாப்பாடும் இனாமாக அடை
வதுமன்றி ஒவ்வொருவருக்கும் மாதம்ரூபா 3கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு
வருக்கும் புஸ்தகங்கள், துணிமுதலிய செலவுகள் சராசரி மாதம் மூன்று
ரூபாய்க்குமேலிராது. ஆகவே இவர்கள் மிகவும் சௌக்கியமாகவும் யாதொரு
கவலையுமின்றித் தமது கவனமுழுமையும் படிப்பிலே செலவிடலாம். இவ்
விதமாகப் படித்துக் குறைந்தபட்சம் ஒரு மெட்ரிகுலேஷன் பரிக்ஷையாவது
பாஸ்செய்து சிலவிதவைகள் முன்வரின் நமது ஜனசமூகத்திற்கு எவ்வளவு
உதவி என்பது சொல்வதரிது. இந்த ஹோம் எழும்பூர், ஹைரோட் 51 நெம்
பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கப்பட்டிருக்கிறது.

ஏழைப்பெண்கள் ஐவேஜியின் தொகை இப்பொழுது ரூபா 1200 சேர்ந்
திருக்கின்றது. இத்தொகையைப் பாங்கியில் போட்டால் மாதம் சுமார் 6 ரூபா
வட்டிவரும். இந்த ஆறு ரூபாயைக்கொண்டு நம்விதவைகளை எவ்வாறு முன்
னுக்குக்கொண்டு வருவதெனத் தெரியவில்லை. இந்த ஹோமிலிருக்கும் வித
வைகளிற் சிலரை தையல் முதலிய கைத் தொழில்களிற் பழக்குவதற்கும்,
அவர்களுக்கு சங்கீத ஞானமும் சம்ஸ்கிருத பாஷாஞானமும் பயிற்றுவிப்
பதற்கும் இப்பணம் போதாது. ஹோம் மாணவர்கள் கொஞ்சம் சம்ஸ்கிருத
பாஷா ஞானமும் பயிற்றுவிப்பதற்கும் இப்பணம் போதாது. ஹோம் மாண
வர்கள் கொஞ்சம் சமஸ்கிருதம் பயின்றுவருகின்றனர். ஆகவே பணம் சேர்

வதற்கே காத்திருக்கிறார்கள். இல்லாவிடின் முன் சொன்னவைகள் ஹோமில் ஏற்படுத்தியிருக்கும். மேற்படி ஐவேஜியின் காரியதரிசிகள் பொதுஜன உதவியை விரும்பி நமது சகோதர சகோதரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கின்றனர்.

இச்சமயத்தை இழந்து போகாமல் நமது மித்திரர்கள் தமது விதவை சகோதரிகளையும் பெண்களையும் அவர்கள் சந்தோஷமாக வசிக்கும்பொருட்டும் அவர்கள் கௌரவமாக ஜீவனம் செய்யும்பொருட்டும், நமது ஹோமில் சேர்த்துப் படிப்பிப்பார்களாக.

V. S. V. அம்மாள்.

## சமாசாரக்குறிப்பு.

ஜார்ஜ் அரசர் : — ஜார்ஜ் அரசர் பக்கிங்ஹாம் அரண்மனையில் ஹெக்கி பாகூஷாவை வரவேற்று, அந்நிய விஷய மந்திரியாகிய ஸர் எட்வர்ட் கிரேக்கு அறிமுகஞ் செய்துவைத்தார்.

கோயம்புத்தூர் காலேஜ்பண்டு:—கணியூர் மிராசுதார் மிஸ்டர் K. S. இராமசாமி அய்யர் காரனேஷன் மெமோரியலுக்கு ரூபா 1000-மும் காலேஜ் பண்டுக்கு ரூபா 250-ம் உதவியிருக்கிறார்.

பூகம்பத்தால் ஒரு பட்டணம் நாசமாயிற்று:—மத்ய அமெரிக்காவிலுள்ள க்வாடிமாலா என்கிற நாட்டில் க்வாஜிம் க்யுலாபா என்கிற பட்டணம் சென்ற சனி அன்று அங்கு உண்டான பூகம்பத்தால் நாசமாயிற்று.

வேல்ஸ் இளவரசர்:—இம்மாதம் 17உ ஜெர்மனிக்குப் போவாரென்றும் அவர் கோடைகால விடுமுறை நாளின் ஒரு பகுதியை ஜெர்மன் சக்கரவர்த்தியின் அரண்மனையில் கழிப்பாரென்றும் ராய்ட்டர் தந்தி அறிவிக்கிறது.

வல்லரசுகளின் ஆகாய பலம்:—பிரிட்டிஷாருக்கு 2 ஆகாயக் கப்பல்களும், ஜெர்மனிக்கு 13-ம், பிரான்ஸுக்கு 10-ம், ருஷியாவுக்கு 6-ம், இருக்கின்றன ஆகாய விமானங்களில் பிரிட்டிஷாருக்கு 30-ம், ஜெர்மனிக்கு 25[illegible]-ம், பிரான்ஸுக்கு 400-ம், ருஷியாவுக்கு 250-ம் இருக்கின்றன.

அதிக மரணத்தின் காரணம்:—ஏழில் ஒரு பங்கு ஜனங்கள் மூக்கினாலும் வாயினாலும் புழுதியை உட்கொண்டு அதனால் உண்டான வியாதிகளால் இறந்துபோகிறதாக ஒரு சாஸ்திர விற்பன்னர் கணக்கிடுகிறாரென்றும் ஆகையால் சென்னையில் மரணம் மிகுதியாயிருப்பது அதிசயமல்லவென்றும் சென்னை 'டைம்ஸ்' எழுதுகிறது.

ஆஸ்பத்திரிகளில் தாதிகள்:—வெளியூர் ஆஸ்பத்திரிகளில் தேர்ச்சியடைந்த தாதிகள் இல்லாததைக் கவர்ன்மெண்டார் கவனித்து வருகிறார்கள். இனி ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளைக் கவனிப்பதற்குத் தகுந்த தாதிகளை நியமித்து வரவேண்டும் என்பதை எல்லா டிஸ்டிரிக்டு போர்டு பிரஸிடெண்டுகளும் முனிசிபல் சேர்மன்களும் கவனித்து வரவேண்டும் என்று கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள்.



இந்தியாவில் கம்பியில்லாத் தந்தி:—லாகூரில் கம்பியில்லாத் தந்தி ஸ்டேஷன் ஒன்று தற்போது திறக்கப்பட்டிருக்கிறது. பம்பாயில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டு வரும் ஸ்டேஷனும் சீக்கிரத்தில் தயாராய்விடுமாம். சென்னை, ஸெகிந்திராபாத், பிஷவார், கல்கத்தா முதலிய இடங்களில் மேற்கண்ட கம்பியில்லாத்தந்தி ஸ்டேஷன்கள் ஏற்படுத்துவதற்காக பிரயத்தனங்கள் செய்யப்பட்டு வருவதாகக் காண்கிறது. ஒவ்வொரு ஸ்டேஷனும் அறுநூறுமைல் தூரத்திற்கும் பேசக்கூடியதாயிருக்கும்.

மைசூர் பெண்கல்வியும் விவாக சீர்திருத்தமும்:—மிஸ் C. A. டென்னண்ட், திங்கள் அன்று மாலை மைசூர் மகாராணி காலேஜில், பெண் கல்வியைப்பற்றியும், ஹிந்து, பார்ஸி, மகமதிய ஸ்திரீகள் அடங்கிய ஒரு பெரிய கட்டடத்தில் உபந்நியாசஞ் செய்தார். மிஸ்ஸஸ் R. H. காம்பெல் அபிப்பிராயத்தின்படி நடப்போமானால், தற்காலத்தில் மேற்கண்ட விஷயங்களின் அபிவிருத்திக்குத் தடையாக நிற்கின்றன என்று சொல்லப்படும் நிர்ப்பந்தங்கள் தானாகவே விலகிப்போகும் என்று சபாநாயகர் சொன்னார்.

கோயமுத்தூரில் ஸ்திரீகளின் சங்கம்:—மார்ச்சுமீ 12உயன்று கோயமுத்தூர் ஸ்திரீகளின் சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்கள் கோயமுத்தூர் காலேஜ ஹாலில் மிஸ்ஸஸ் ஹெம்மிங்வேயின் அக்கிராசனத்தின் கீழ் கூடினார்கள். அச்சங்கத்தின் செக்ரிடேரிகளுள் ஒருவரான மிஸ்ஸஸ் A. தேவசகாயம் மனிதசரீர சாஸ்திர சம்பந்தமாய் "ஜீரணமும் இரத்தோட்டமும்" என்கிற விஷயத்தைப் பற்றி ஒரு உபந்நியாசஞ் செய்தார். அந்த அம்மாள் செய்த உபந்நியாசத்தைப்பற்றி மிஸ்ஸஸ் ஹெம்மிங்வே புகழ்ந்து பேசினார்.

இந்தியப் பெண்களின் கல்வி:—இந்தியப் பெண்களின் கல்வியை விருத்திசெய்ய இப்போது செய்யப்பட்டு வரும் ஏற்பாடுகளைவிடத் திருப்திகரமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று கருதப்பட்டு வருவது எல்லோரும் அறிந்த விஷயம். இப்போது வங்காளக் கவர்ண்மெண்டார் அவ்விஷயத்தைக் கவனிக்க மிஸ்டர் நாதனை (Mr Nathan) பிரெஸிடெண்டாய்க் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்களென்று தெரிகிறது. டாக்கா யூனிவர்ஸிடி பிரேரணைக் கமிட்டிக்குச் சேர்மனாயிருந்த வரும் இவரே யாவார்.

டாடா எஃகு வேலைச்சாலையிலிருந்து 1912-ம் வருஷத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பாள இரும்பின் கிரயம் 5,25,471 ரூபாய் என்று சென்ற டிசம்பர் மாதத்தில் கணக்கிடப் பட்டதென்றும், 1911-ம் வருஷத்தில் ஒன்றே கால் லட்சரூபாய் பெறுமானமுள்ள இரும்பும் 1910-ம் வருஷத்தில் 57,671 ரூபாய் பெறுமானமுள்ள இரும்புந்தான் ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதைப் பார்க்க டாடா எஃகு வேலைச் சாலையின் தொழில் மிகத் திருப்தியான விருத்தி அடைந்து வந்துகொண்டிருக் கிறதாகத் தெரியு மென்றும் பயோனியருக்கு ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

கவர்ன்மெண்டாரின் பண உதவி:—கோயமுத்தூரில் எலிமெண்டெரி ஸ்கூல்கள் புதிதாய் கட்டுவதற்காக 5000 ரூபாய் செலவழிக்கலாம் என்று கவர்ன்மெண்டார் டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கு உத்தரவு அனுப்பி யிருக்கிறார்கள். இந்தத்தொகை இந்த வருஷம்மட்டும் செலவழிக்கலாமேயன்றி வருஷாவருஷம் அல்ல என்பதை டிஸ்ட்ரிக்ட் போர்டாருக்கு தெரிவித்திருக்கி

ஞர்கள். ஆகையால் டிஸ்ட்ரிக்ட் போர்டார், இன்ஸ்பெக்டிங்கு ஆபீஸர்க
ளோடு கலந்து, இந்த விஷயத்தில் சீக்கிரம் யோசனைசெய்து முடிவுசெய்ய
வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

---

லாகூர் ஸ்திரீகளும் டெல்லி விபத்தும்:—டெல்லிவிபத்துக்கு லேடி
ஹார்டிஞ்சு தப்பியதற்காக அப்பெருமாட்டிக்கு வாழ்த்துக்கூறவும் லார்ட்
ஹார்டிஞ்ச் அவ்விபத்துக்குப்பிறகு சுகப்பட்டெழுந்ததற்காக அவருக்கு வாழ்
த்துக்கூறவும், பொதுவாய் அவர்களிருவருக்கும் உயிர்ச்சேதம் நேரிடாதபடி
அனுக்கிரகஞ் செய்ததற்காக தெய்வத்துக்கு நன்றிசெலுத்தி வந்தன வழிபாடு
கள் செய்யவும், கவர்ன்மெண்ட் ஹவுஸில் லேடிபிடேன் அக்ராசனத்தின் கீழ்
மீட்டிங் கூடிற்று. மிஸஸ் சாரளாதேவி சௌதாரிணி இதற்கு முதன்மை
யாயிருந்தார்.

---

லேடி ஹார்டிஞ்சும், சென்னைமாகாண ஸ்திரீகளும்:—டெல்லி விபத்தில்
லேடி ஹார்டிஞ்சு காட்டிய தைரியத்தையும் தன் மறுப்பையும் பற்றி உவந்து
சென்னை மாகாணத்திலுள்ள ஸ்திரீகளால் லேடி ஹார்டிஞ்சுக்கு உபசாரபத்
திரம் ஒன்று கொடுக்கப்பட வேண்டுமென லேடி பெண்ட்லண்ட் சில தினங்
களுக்கு முன் கவர்ன்மெண்டு ஹவுஸில் ஸ்திரீகளின் சபையொன்று கூட்டு
வித்ததை நேயர்களறிவார்கள். சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பலபாகங்
களிலுமுள்ள ஸ்திரீகளிடமிருந்தும் அவ்வுபசாரப் பத்திரத்தில் கையெழுத்து
வாங்கும் பொருட்டு கமிட்டியொன்று ஏற்படவேண்டுமென அக்கூட்டத்தில்
தீர்மானிக்கப்பட்டது.

---

டெல்லி விபத்தும் ஸ்திரீ பொதுக்கூட்டங்களும்:—சென்ற 24-ந்தேதி
யன்று பூனாவிலுள்ள பார்ஸி ஸ்திரீகள் ஒரு பெரும் பொதுக் கூட்டங்கூடி,
டெல்லியில் சுபகாரியம் நடை பெறுவதான சமயத்தில் நேரிட்ட விபத்தைக்
குறித்துச் சிந்தித்ததும், வெடிகுண் டெறிந்த செய்கையில் வெறுப்பைக்
காட்டியும், லேடி ஹார்டிஞ் அச்சமயத்தில் காட்டிய தைரியத்தையும் தன்
மறுப்பையும்பற்றிப் புகழ்வதாயும் தந்தியனுப்பிக் கொண்டார்கள். மேலும்
பூனாவிலுள்ள ஹிந்து ஸ்திரீகளும் மகம்மதிய ஸ்திரீகளும் சேர்ந்து ஒரு
பொதுக்கூட்டங் கூடி லேடி ஹார்டிஞ்சுக்கு அநுதாபத் தந்தி அனுப்பி
னார்கள்.

---

ஸ்திரீ சுதந்திர வாதிகள்:—இரண்டு ரயில்வே ஸ்டேஷன்கள் சென்ற
10உ அன்று ஸ்திரீ சுதந்திர வாதிகளால் தீவைக்கப்பட்டு, எரிந்து போய்
விட்டன. சென்ற 10உ ஸ்திரீ சுதந்திர வாதிகளின் மீட்டிங் ஒன்று லண்டனில்
நடந்தது. பார்லிமெண்டைத் திறந்து வைத்தபோது சக்கரவர்த்தி பேசியதில்
ஸ்திரீ சுதந்திரவாதிகள் பாதபத்தைப் பற்றி ஒன்றும் சொல்லப் படாததால்,
அடாச்செய்கை இல்லை என்று அவர்களின் தலைவிகளில் ஒருவராகிய மிஸ்
அன்னிகென்னி சொன்னாள். ராஜ சக்கரவர்த்தி யிடத்தில் நேரில் விண்ணப்
பம் செய்துகொள்ள எத்தனம் செய்த 5 ஸ்திரீ சுதந்திரவாதிகள் வோல்ட்
ஹால் அரண்மனையில் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள்.

---

இரங்கூனில் பூகம்பம்:—சென்ற 6உயன்று பகல் 1-15 மணிக்கு ரங்கூ
னில் ஒரு பூகம்ப அதிர்ச்சி உண்டாய் 5, 6 விநாடி நீடித்திருந்தது. அதன்
பிறகு அவ்வளவு சவகாசமில்லாத இரண்டு சிறிய அதிர்ச்சிகளும் உண்டாயின.



அதிர்ச்சி உண்டானது தெரிந்தவுடன் கோர்ட்டிலிருந்த ஜட்ஜ முதலியவர்
கள் எழுந்து போய்விட்டு அது நின்றபிறகே திரும்பவந்தார்கள். பழய கட்ட
டங்கள் எல்லாம் அதிகமாக அசைந்தன. புதுக் கட்டடங்களிலும் அதிர்ச்சி
நன்றாய்த் தெரிந்தது. ஆபீஸ்களில் இருந்த உத்தியோகஸ்தர்கள் எல்லோ
ரும் ஓடிவிட்டார்கள். பீங்கான் பாண்டங்கள் விசேஷமாகச் சேதப்பட்டன.
ஸெய்ஸ் மொக்ராப் என்கிற பூகம்பக் கருவியால் ரங்கூனுக்கருகில்தான் பூமி
யின்கீழ் கம்பம் உற்பத்தியானதாகத் தெரிகிறது.

---

புத்தகவரவு:—இந்துஸ்திரீரத்னங்கள் C.S. ராமசாமி அய்யரால் எழுதப்
பட்டது. நமது மத்தியகாலத்து சரித்திரத்தில் பேர்பெற்று விளங்கின பத்
மினி, தாராபாய், ராணி, அகல்யாபாய் முதலான பத்து உத்தம ஸ்திரீகளின்
வீரபராக்கிரமமும், கல்வி பரோபகாரம் கற்புமுதலான நற்குணங்களும் இவர்
கள் நடந்துகொண்ட மாதிரியும் சிறுவர்கள் படித்து அறியுமாறு எளிய
தமிழ் நடையில் ராமசாமி அய்யர் எழுதி முதற்பாகமாகப் பிரசுரித்திருப்பது
புகழ்ச்சிக் குரியது. இம்மாதிரிச் சரித்திரங்களை நமது ஸ்திரீகள் படிப்பதால்
எவ்வளவோ உபயோக முண்டாகி மேலான குணங்களை கைக்கொள்வதற்குச்
சாத்தியமாகும். இதில் சில அழகான சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருக்
கின்றன. 120 பக்கங்களுக்கு அதிகமா யுடையது—சுதேசமித்திரன்.

---

திருவல்லிக்கேணியில் பெண்களுக்கு ஒரு ஹைஸ்கூல்:—திருவல்லிக்
கேணியிலுள்ள விஜயநகர மகாராஜா பெண் பாடசாலையை கவர்ன்மெண்ட்
ஸ்கூலாக மாற்றப்பட்டதைப்பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறோம். உபாத்தி
மார்கள் புதிதாய் நியமனம் பெற்றுவிட்டார்கள். இப்பொழுது அந்த ஸ்கூலில்
மூன்றாவது பாரம் வரையிலும் கற்றுக்கொடுக்கப்படும். பெண்கள் சேரச்சேர,
உயர்ந்த வகுப்புகள் ஏற்படுத்தப்படும். காலஞ்சென்ற திவான்பகதூர் M. ராம
சாமி நாயிடுவால் பெரிய தெருவில் புதிதாய் கட்டப்பட்ட கட்டடத்தில் அந்த
ஸ்கூல் நடந்துவருகிறது. திருவல்லிக்கேணியிலுள்ள கனவான்கள் தங்கள்
புத்திரிகளை யனுப்பி இது ஹைஸ்கூலாகும்படி இச்சமயத்தைக் கைநழுவ
விடாமல் கூடிய சீக்கிரத்தில் முயற்சிப்பார்களென்று நம்புகிறோம்.

---

லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப்:—சென்ற பிப்ரவரிமீ 14உ மாலை 5-மணி
க்கு மைலாப்பூர் சில்வன் லாட்ஜில் மேற்படி கிளப்பிற்கு H. E. லேடி பெண்ட்
லண்ட் திடீரென்று விஜயம்செய்ய, மெம்பர்கள் அனைவரும் ஆச்சரியத்தினால்
பிரமித்தார்கள். செக்ரடரி மிஸஸ் திருவேங்கடாசாரியால் அவர் வரவேற்கப்
பட்டு, ஏற்கெனவே விளையாடிக்கொண்டிருந்த டெனிஸ், பாட்மிண்டன், க்ரோ
க்கே முதலிய விளையாட்டுகள் காண்பிக்கப்பட்டுச் சந்தோஷமடைந்தார்.
லேடி பென்சன், மிஸஸ் சீனிவாச அய்யங்கார், மிஸஸ் திருவேங்கடாசாரி,
மிஸஸ் மேடிலி, மிஸஸ் சிங்காரபாபு, மிஸஸ் பேர்ட், மிஸஸ் சுப்பிரமணியம்,
மிஸஸ் ஹெண்ட், இன்னும் மற்ற எல்லா மெம்பர்களிடமும் அவர் தாராளமாய்
சம்பாஷித்துவிட்டு மாலை சுமார் 7-மணிக்குத் தமதிருப்பிடம் சென்றார்.

---

கற்களைப்போல் தோன்றும் செடிகள்:—தென்னாபிரிக்காவில் விநோத
மான சில செடிகள் உண்டாகின்றன. அவைகள் பார்ப்பவர்களுக்குச் செடிக
ளாய்த் தோன்றாமல் கூழாங்கற்கள் என்று நினைக்கும்படியாய் இருக்கின்றன.
ஒருவிதமான செடிகள் பூமியில் உண்டாகிறது. அதன் வழியாய்ப் போகும்
அந்யர்கள் அதைக் கல்லாகவே நினைத்து எடுத்துப்பார்த்து ஏமாந்துபோகிறார்

கள். வேறொரு தினுசு குன்றுப்புறங்களில் உண்டாகிறது. அதன் இலைகள் வாத்தின் முட்டையவ்வளவு பெரிதாயிருக்கின்றன. இலைகளின் நிறம் கற்களைப் போல் ஒருவித பழுப்பு நிறமாயும் பச்சைநிறம் மேலோடு பூசினாற்போலவும் இருக்கிறது. இந்தச்செடிகள் கற்கள்போலவே தோன்றும். ப்ரகாசமான மஞ்சள் புஷ்பங்கள் கொஞ்சநாள் பூக்கும். இன்னொருவிதமான செடி ஸ்படிகம் போல் தோன்றும் அது ஸ்படிகக் கற்கள் இருக்குமிடத்திலேயே உண்டாகிறது.

இனாமாய் வைத்தியம் செய்வதால் டாக்டர்களுக்குக் கோபம்:—ஜெர்மனி தேசத்திலுள்ள பவேரியா நாட்டின் ராஜவம்சத்தைச் சேர்ந்த ப்ரின்ஸ் லட்விக் பெர்டினாண்ட் என்றவர் வைத்தியப் பட்டம் பெற்றவர். அவர் வியாதியஸ்தர்களிடமிருந்து ஒரு பிரதிப்பிரயோசனத்தையும் கேட்காமல் தம்மிடம் வருகிறவர்களுக்கு வைத்தியம் செய்துவருகிறார். மருந்துக் கிரயம்கூட வாங்குகிறதில்லை. ஆகையால் அவருடைய தொழில் விசாலமாய்விட, அவருடைய அரண்மனையில் இடம் போதவில்லை ஆகையால் யூனிவர்ஸிடி கட்டடத்தில் ஒன்றை உபயோகிக்குமாறு கல்வி இலாகா அவருக்கு அனுமதி கொடுக்க அங்குள்ள மியூனிச் யூனிவர் ஸிடியிலுள்ள வைத்திய போதகர்களெல்லோரும் பக்ஷபாதமாய் அவருக்குத் தயவு காட்டப்பட்டதென்று கல்வி இலாக்காவுடன் சண்டைக்குப் போகிறார்களாம். பணம் சம்பந்தப்பட்டால் படிப்பின் பிரயோஜனம் பறந்துவிடும் போலும்!

அனாதைக் குழந்தைகளின் ஸம்ரக்ஷணைக்காகச் சென்னையில் ஏற்பட்டிருக்கும் சங்கம்கூடி ஐந்தாவது வருஷாந்த ரிபோர்ட்டை அங்கீகரித்ததில், அந்த சொஸைட்டி எவ்வளவு நல்ல காரியத்தைச் செய்து வருகிறதென்றும், அதற்குத் தக்க பலமுண்டானால் இன்னு எவ்வளவு நல்லகாரியம் செய்யலாமென்றும் புலப்படுகின்றது. போனவருஷம் இந்தச் சங்கம் 46 அனாதைக் குழந்தைகளை வைத்து ஸம்ரக்ஷித்தது. சில குழந்தைகளுக்குப் பெரிய மனுஷர்கள் வீட்டில் வேலைக்காரராக உத்தியோகம் சம்பாதித்துக் கொடுத்தது. வேறுசில குழந்தைகள் தொழிற் கல்விச் சாலையில் தொழிலுக்காக விடப்பட்டன. லார்ட் பெண்ட்லண்ட் அக்கிராசனம் வகித்துப்பேசின சில உசிதமான வார்த்தைகளில், இது குழந்தைகளின் காலமென்றும் குழந்தைகளின் வளர்ப்பு, பயிற்சி முதலியவைகளைப் பற்றிப் பொதுவாய் அவ்வளவு கவலையும் சிரமமும் பொழியப்பட்டகாலம் இப்போதைப்போல் எக்காலமும் இருந்ததில்லையென்றும் சொன்னார்.

கோடீஸ்வரர்களும் உலக மன்னர்களும்:—கோடீஸ்வரர்கள் தாங்கள் தூங்குவதற்கு ஹம்ஸ தூளிகா மஞ்சங்களையும் விலையுயர்ந்த படுக்கைகளையும் உபயோகித்து வருகிறார்கள். தேசமன்னர்களோ அப்படியல்ல. அந்த விஷயத்தில் ஆடம்பரம் செய்கிறதே இல்லை. ஜெர்மன் சக்கரவர்த்தி சாதாரண படுக்கையில் படுத்துக்கொள்ளுகிறார். இத்தாலியா, ஆஸ்டிரியா தேசத்து மன்னர்கள் சிறிய இரும்புக் கட்டில்களில் தூங்குகிறார்கள். ஜப்பான் தேசத்து புருஷ சக்கரவர்த்தி தரையில் ஒரு ஜமக்காளத்தை விரித்து அதில் படுத்துக்கொண்டு இரண்டு மூங்கில் கழிகளைத் தலையணையாக உபயோகித்துவருகிறார். பெல்ஜியம் தேசத்து மன்னர், தொட்டிலில் படுத்துத்தூங்குகிறார். அதில் படுத்துக்கொண்டால் தான் அவருக்கு நல்ல தூக்கம் வருமாம். ஆல்பான்ஸோ அரசர், ஐந்தாவது ஜார்ஜ் அரசர், இவர்கள் இருவர் மாத்திரம் அலங்காரமான அறைகளிலும் விலையுயர்ந்த படுக்கையிலும் படுத்துத் தூங்குகிறார்கள். ருஷ்யா



சக்ரவர்த்தியும், ரோமன் காதலிக் மதத்தலைவரான போப்பும் சிறிய அறைகளில் சாதாரண படுக்கைகளில் படுத்துத் தூங்குகிறார்கள்.

ஜப்பான் தேசத்தில் ஸ்கூல்களும் வித்தியார்த்திகளும்:—ஜப்பான் தேசத்தில் 100-க்கு 96 பெண்கள் வீதம் பிரைமெரி படிப்பைக் கற்று வருகிறார்கள். ஜப்பானிய ஆண் பெண், குழந்தைகளுக்கு ஏற்பட்டிருக்கும் பிரைமெரி ஸ்கூல்களின் மொத்தத்தொகை 27125. அதில் சொல்லிக் கொடுக்கும் உபாத்திமார்களின் சங்கியை 122,038. உயர்தரப் படிப்பைக் கற்றுக் கொடுப்பதற்காக, பெண்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் ஸ்கூல்களின் தொகை 133. அவைகளில் ஏற்பட்டிருக்கும் உபாத்திமார்களின் சங்கியை 2011. உயர்தர உபாத்தினிகளுக்குப் போதனா முறையைச் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பட்டிருக்கும் நார்மல் ஸ்கூல்களின்தொகை ஒன்று. ஸ்திரீகளுக்கு ஏற்பட்டிருக்கும் சர்வகலாசாலை ஒன்றுண்டு. பிரைமெரி ஸ்கூல்களில் படிக்கும் குழந்தைகளின் (ஆண்பெண்கள் சேர்ந்து) தொகை 60,00,000 இப்பெருந்தொகையில் பேர்பாதி பெண் குழந்தைகள். ஆனால் உயர்தரப் படிப்பைக் கற்பிக்கும் ஸ்கூல்களில் படிக்கும் பெண்களின் மொத்தம் 40,000. உயர்தரப் படிப்பைக் கற்பிக்கும் ஆண்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஸ்கூல்களில் படிக்கும் ஆண் பிள்ளைகளின் தொகை 12,000.

தஞ்சையில் பெண் கல்வியைப்பற்றி உபந்நியாசம்:—பெண் கல்வியைப் பற்றி சென்ற 7உயன்று தஞ்சையில் ஸ்ரீமதி தாயாரம்மாளால் ஓர் உபந்நியாசம் செய்யப்பட்டது. மைசூர் மாஜி திவான் மிஸ்டர் V. P. மாதவராவ் C. I. E. அக்கிராஸனம் வகித்தார். ஹிந்துப் பெண்களுக்குப் பிரத்தியேகமாக ஒரு பள்ளிக்கூடம் தஞ்சையில் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று பிரசங்கி வற்புறுத்திப்பேசினார். வக்கீல் மிஸ்டர் N. K. இராமஸ்வாமி அய்யரும் மாஜீ டிப்டி கலெக்டர் மிஸ்டர் N. இராமச்சந்திர அய்யரும் அதைத் தாங்கிப்பேசினார்கள். பிறகு மிஸ்டர் மாதவராவ் எழுந்து பின்வருமாறு தமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தார். "பெண்கள் பருவமடைந்த காலத்தில் நல்லமனைவிகளாகவும், நல்ல தாய்களாகவும் ஆகக்கூடியதாக அவர்களுக்குக் கற்பிக்கிற கல்வி இருக்க வேண்டுமென்றும், தாயைப் பொறுத்தே குழந்தைகளுக்கும் குணம் படிகிறபடியால், தம் மக்கள் விளையாடும் வயதினர்களா யிருக்கையிலேயே ராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அவர்களுக்கு சன்மார்க்கம் கற்பிக்கப்பட வேண்டுமென்றும், ஹிந்துப் பெண்களுக்காக ஒரு தனிப் பள்ளிக்கூடம் இல்லாமலிருப்பது தஞ்சாவூருக்கு ஒரு பெரிய இகழ்ச்சியே என்றும், சபையில்கூடி யிருந்தவர்கள் அதற்கான யோசனை செய்ய வேண்டுமென்றும்" பேசினார். அவ்விஷயமாய் மறுநாள் கூடி யோசிப்பதாகத் தீர்மானமாய், சபை கலைந்தது.

கட்டடங்கள் நகர்த்தப்படுதல்:—நியூயார்க்கில் பிரசுரமாகும் "பில்டர்" (Builder) என்ற பத்திரிகையில் விசித்திரமான வியாசம் ஒன்று காணப்படுகிறது. நியூயார்க் ஸ்டேட்டைச் சேர்ந்த களென்ஸ்பாலஸ் என்ற இடத்தில் 105 அடி நீளமும் 60 அடி அகலமும் இரண்டு தளங்கள் வைத்துக் கட்டப்பட்டதுமான ஒரு வீட்டை அதிருந்தயிடத்திலிருந்து 300 அடி தூரம் வரையில் நகற்றிக்கொண்டு போகப்பட்டு மற்றோரிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாம். அந்தவீடானது இருபது வருஷங்களுக்கு முன்னால் 15000 பவுன் செலவில் கட்டப்பட்டதாம். அவ்வீட்டை முன்னூறு அடிதூரம் ஒரு பொது வீதியின் வழியே நகற்றியதுமன்றி திருப்பவும், செய்தார்களாம். முதல் முதல் புதிய

இடத்தில் பலமான அஸ்திவாரங்கள் கட்டிக்கொள்ளப்பட்டன. பிறகு எஃகு உத்தரங்களை கட்டடத்தின் குறுக்கே நுழைத்து அவைகளின் கீழ் திருகு களை வைத்துக்கிளப்பிய பிறகு அதன்கீழ் உருளைகளை வரிசையாய் வைத்து நகரக்கூடிய நிலைமைக்குக்கொண்டு வரப்பட்டது. பிறகு குதிரைகளைக்கொண்டு மெதுவாய் நகர்த்தப்பட்டன. வைக்கப்படவேண்டிய இடத்திற்குவந்துசேர்ந்த தும் மறுபடியும் திருகுகளை (Jacks) வைத்து உயர்த்தி அஸ்திவாரம்போடப் பட்டிருந்த இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாம். நகற்றப்பட்ட கட்டடத்தின் மொத்த நிறை 2250 டன் என்றும் இந்தவேலை முடிய அறுபதுநாள் பிடித்த தென்றும் இதற்குச்செலவு 8000 பவுன் ஆயிற்றென்றும் தெரிகிறது. இந்த அறுபதுநாளும் டிராம் வண்டிகளும் மற்றப் போக்குவரத்துக்களும் அவ்வீதி யில் நிறுத்தப்பட்டுப்போயின. யாதொரு சேதமாவது வேலையில் குந்தமாவது நேரிடவில்லையாம். கட்டடங்கள் ஓரிடத்திலிருந்து வேறொரிடத்திற்கு மாற் றப்பட்டதை வெகு நாளாய்க் கேள்விப்படவில்லை யென்றும் இவ்விஷயம் உல கத்தில் ஒரு மூலையிலிருக்கும் நமக்கு ஆச்சிரியமாயிருக்குமென்றும், ஆனால் அமெரிக்கர்கள் அப்படி ஆச்சரியப்படும் வழக்கத்தை விட்டுவிட்டார்களென் றும் “இந்தியன் எஞ்சினீரிங்” என்ற பத்திரிகை வியந்து எழுதுகிறது.


## மாதர் மனோரஞ்சினி,

இது மாதர்களுக்கு பெண்களுக்கும் அறிவைப் புகட்டும் ஒரு மாதாந் தரப் பத்திரிகை. இதில் சித்திரப்படங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது இதற்கு 15-வது வருஷம் நடந்துவருகிறது. இதன் வருஷசந்தா (சாதாரண பதிப்புக்கு) ரூபா-2. உயர்ந்த பதிப்புக்குச் சந்தா ரூபா 2-8-0. வேண்டுவோர் கோயம்புத்தூர் சி. எஸ். இராமசுவாமி ஐயர், மாதர் மனோ ரஞ்சினி பத்திராதிபர், நெ. 12, தணிகாசலப்பிள்ளைத் தெருவு, திருவல்லிக் கேணி, சென்னை என்று எழுதவேண்டும். சந்தா முன்பணமாகக் கட்டப்பட வேண்டும். விலாசம் மாறும்போது தெரியப்படுத்தவேண்டும்.

# GURURAJA COMPANY,

**Triplicane, Madras.**

**டயமண்டு சோப் கம்பெனி, பம்பாய்.**

வீடுகளில் சாயம்போடும் உடைகளுக்கு விலை சாசமாயுள்ள டயமண்டு தயா ரான சாயச்சோப்புகளாகிய ரோஸ், காஷாயம், பச்சை, நீலம், ஊதா, மஞ்சள், சிகப்பு, கறுப்பு, காகி.

48 பில்லைகள் ஒரு காகிதபெட்டியில் அடங்கியது.

சாயத்திற்கு உத்தரவாதம்.

ஒரு டஜன் பில்லை விலை அணு 12. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

ஏஜன்ஸிகளுக்கும் மற்ற வேண்டியவைகளுக்கும் அடியிற்கண்ட விலா சத்திற்கு எழுதவும்.

# குருராஜா அண்டு கம்பெனி,

**திருவல்லிக்கேணி, சென்னை.**


PROPERTY OF THE ... 27 AUG 1913 ... MADRAS.


# மாதர் மனோரஞ்சினி.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.”—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol. XV. | Madras: April 1913. | No. 4. |
| புத்தகம் - கரு. | சென்னப்பட்டணம்: ஏப்ரல்மீ 1913. | இலக்கம் 4. |


## ஆவியும் ஜலமும்.

212 டிகிரி வரையிலும் வந்துள்ள 50 ரூபாய் எடை ஜலத்தை 5 நிமிஷம் பொங்கவிடுவோம். சூடு 212 டிகிரிக்குமேல் போவதில்லை. ஆனால் கொஞ்ச ஜலம் ஆவியாய்ப் போகின்றது. உடனே பாத்திரத்தை ஜாக்கிரதையாய்க் குளிரவிட்டு நிறுத்துப்பார்த்தால் சுமார் 5, 6, ரூபாய் எடை நீர் குறைந்து இருக்கும். மறுபடி கணக்குப்போடுவோம். 5 நிமிஷத்தில் 5 ரூபாய் எடை ஜலம் ஆவியாக மாற 3050 யூனிட் உஷ்ணம் செலவழிந்துபோய் இருக்க வேண்டுமல்லவா? ஏனெனில் 10 நிமிஷத்தில் 6100 யூனிட் எடுத்துக்கொண் டது. விளக்கோ அல்லது ஸ்டவ்வோ ஒரேவிதமாய் எரிவதுபற்றி மறுபடி 5 நிமிஷத்தில் பாத்திரம் 6100-ல் பாதி உஷ்ணத்தை தானே எடுத்துக்கொள் ளும். அந்த உஷ்ணத்தின் காரணத்தால் என்ன நிகழ்ந்தது? 5 ரூபாய் எடை ஜலம் ஆவியாக மாறிற்று. 5 ரூபாய் எடை ஜலத்தைக் கொதிக்கும் டெம்பரே சரில் ஆவியாகமாற்ற 3050 யூனிட் வேண்டுமல்லவா? ஆகையால் 1 ரூபாய் எடை ஜலம் ஆவியாகமாற சுமார் 508 யூனிட் செலவழியுமல்லவா? அதா வது பொங்கும் தருணத்தில் இருக்கும் 1 ரூபாய் எடை ஜலத்தை ஆவியாய் மாற்றக்கூடிய உஷ்ணம் எவ்வளவு அதிகம் பாருங்கள்!! அதைக்கொண்டு 508 ரூபா எடையுள்ள ஜலத்தை ஒரு டிகிரிதூரம் உஷ்ண மாக்கிவிடலாம்.

பொங்கும் ஜலத்தினின்றுவரும் ஆவியும் அதே 212 டிகிரி சூடாய்த் தான் இருக்கின்றது. நமது தெர்மாமீடரை ஜலத்துக்குமேல் அரை யங்குலம் உயர்த்தி ஆவியிலேயே பிடிக்கத் தெரியவரும்.

இவ்வுஷ்ணத்தை நாம் ‘ஆவியாக்கச் செலவான உஷ்ணம்’ என்னலாம். ஆங்கிலேயர் இதனை ‘Latent heat of vaporisation’ என்பார்கள். இதுவும் ‘புலப்படா உஷ்ணமே’ தான். யாருக்குப் புலப்படுகிறதில்லை இவ்வுஷ்ணம்? தெர்மாமீடரின் நுட்பமான கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

சாராயம், டர்பெண்டைன் முதலிய திரவப்பொருள்களுக்கும் இப்படியே; ஆனால் அவை ஜலத்தைப்போல் அவ்வளவு அதிக உஷ்ணத்தை உட்கொள்வ

தில்லை. முன்சொன்ன மாதிரி பரிக்ஷைசெய்து பார்த்தால் 1 ரூபாய் எடை சாராயம் ஆவியாய்மாறச் செலவாகும் உஷ்ணம், ரூபாய் எடை ஜலத்தை ஆவியாய் மாற்றச் செலவான உஷ்ணத்தில் பாதிக்கே குறைவாய் இருக்கும்.

ஜலம் நீராவியாக மாற ஏராளமான உஷ்ணம் எடுத்துக்கொள்வது பற்றி சமுத்திர ஜலத்தைக் காய்ச்சி உப்புச் செய்யவும் கரும்பு ரசத்தைக் காய்ச்சி வெல்லம் செய்யவும் எவ்வளவோ விறகு செலவாகிவிடும். உப்புக் காய்ச்ச விறகு செலவழிக்காமல் சூரிய வெப்பத்தால் நீரை ஆவியாக்கி உப்பு செய்கின்றனர். கரும்பு ரசத்தைக் காய்ச்ச செலவு குறையும்பொருட்டு கரும்புச் சக்கைகளையே மலைமலையாக எரிக்கின்றனர். இன்னும் ஆவியில்சமையும் பதார்த்தங்களான இட்டலி, மோதகம் இவை செய்யும்போது செலவாகும் விறகு எவ்வளவென்று ஆலோசனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள் !! மேற்காட்டிய உதாரணங்களில் நீரை ஆவியாக்கச் செலவாகும் உஷ்ணம், மிக அதிகமென்றும் அதனால் நமக்கு விசேஷ நஷ்டம்தான் விளையுமென்றும் நீங்கள் எண்ணலாம். அது தப்பு. சர்வேசுவரனுடைய சிருஷ்டியின் விசித்திரம் இவ்விஷயத்திலும் நன்றாய்ப் புலப்படுகின்றது. நீர் ஆவியாக அதிக உஷ்ணத்தை அபகரியாமலாவது, சொற்ப உஷ்ணத்தை உட்கொண்டாலாவது விடுமானால் அதன் விபரீதம் என்னவாகும் என்பதை ஆலோசிக்கவேண்டிய தவசியம் !! காப்பி காய்ச்சப்போட்ட கெட்டிலில் ஜலம் பொங்கும் தருணத்துக்குவந்ததோ இல்லையோ உடனே எல்லா ஜலமும் ஆவியாய் மாறி கெட்டிலை உடைத்துக்கொண்டு பஞ்சாய்ப் பறந்துவிடும். நீராவியந்திரங்கள் வேலைசெய்வதும் அசாத்தியமே. ஏனெனில் என்ஜினில் உள்ள நீர் கொதிக்க ஆரம்பிக்கவே எல்லா நீரும் ஒரே அடியாய் ஆவியாய்மாறி என்ஜின் வெடித்துப்போம். அப்புறம் நமது ரயில் வேகமும், பஞ்சுயந்திரங்களும், நீர் இறைக்கும் இயந்திரங்களும் வேலைசெய்ய வேறு ஒரு நூதனவழி கண்டுபிடிக்க வேண்டிவரும். இந்த விபரீதமெல்லாம் நிகழாதிருக்க நீரை ஆவியாக்கப் "புலப்படா உஷ்ணம்" இவ்வளவு அதிகமாய் இருக்கின்றது !!

ஆர். கே. சுவாமி, பி-ஏ., எல்-டி.

## சமூகசீர்திருத்தமும் அதில் ஸ்திரீகளின் கடமையும்.

(முன் தொடர்ச்சி.)

சமயோசிதமாய் சீர்திருத்தம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லும்பொழுது சாஸ்திரத்தையே முக்கிய சாட்சியமாகக்கொண்ட சிலபேர்கள் நம்மில் சில வழக்கங்கள் தத்கால ரீதிக்கு தக்கபடி சீர்திருத்தப்பட வேண்டிய சமயத்தில் சாஸ்திரானுமதிப்படி அவ்விதமாய் செய்வதற்கு இல்லையென்றும் நம் புத்திக்கு அவ்விதமாய் செய்வது சரியென்று தோன்றினாலும் சாஸ்திரானுமதியில்லாமல் அவ்விதம் செய்ய முடியாதென்றும் சொல்லுகிறார்கள். சாஸ்திர ஒத்தாசையைக் கொண்டு திருத்தக்கூடிய சமயங்களிலும் காரியங்களிலும் சாஸ்திர நியாயங்களைக் கொண்டும், சாதுர்யமாயும்,



புத்திசாலித் தனமாயும் மனதில் பதியும்படி சொல்லும் சொற்களாலும், சுபாவ்ய சாதாரண உதாரணங்களோடும் பேசி திருப்பக்கூடிய விஷயங்களில் அம்மாதிரியே அனுஷ்டித்து நற்புத்தியைப் புகட்டியும் நன்மையைச் செய்ய முயல்வோர்களைப் பார்த்து, சாஸ்திரானுமதிதான் சகல காரியங்களுக்கும் தேவையென்று அபிப்பிராயங்கொண்டிருக்கிறவர்கள், அப்படி செய்வது சரியல்லவென்றும், சமயோசிதமாய் சாஸ்திரத்தையும், புத்தியையும் உபயோகித்து அடையும் பலனினாலேயே உபயோகித்த வழி சிலாக்கியமாகாதென்றும் சொல்லுகிறார்கள். சிலர் சாஸ்திரானுமதியே தேவையில்லையென்றும், எது புத்திக்கு நல்லதென்று தோன்றுகிறதோ அதுதான் சரியானதென்றும சொல்லுகிறார்கள்.

ஆனால் யுத்திக்கும் அனுபவத்திற்கும் நல்லதென்று தோன்றும் விஷயம் சாஸ்திரத்தை தக்கபடி பரீட்சித்து பார்போர்களுக்கு அதின் அனுமதிபெற்றதாகவே இருக்கும். சாஸ்திர ஆராய்ச்சி பூர்த்தியாய் செய்யாமல் மேல்படிப்பினால் பிரயோஜனமில்லை.

சிலர் விஷ்ணுதான் பெரியவர் என்றும், சிலர் சிவன்தான் பெரியவரென்றும் கொண்டாடுகிறார்கள். ஞானிக்கு சிவனும் விஷ்ணுவும் ஒன்றுதானகையால் ஜனங்களுக்கு பகவத்கீதையும் உபநிஷத்துகளும்தான் தேவை. வேதம் தேவையில்லை யென்றாவது அல்லது வேதம்தான் முக்கியம், மற்றவைகள் தேவையில்லை யென்றாவது சொல்லக்கூடாது. நமக்கு கீதையும், உபநிஷத்துகளும், வேதம் முதலியவைகளும் தேவையே. நாம் அவைகளைச் சரிவர கற்றறியவேண்டியது நம் கடமையே.

இக்காலத்தில் ஒவ்வொருவருக்கும் சாஸ்திர ஆராய்ச்சி பூர்த்தியாய்செய்ய சாத்தியமில்லாமலிருக்கலாம். நம்மில் உதாரகுணமுள்ளவும், திரவியவான்களுமாகிய நம் முக்கிய புருஷர்கள் சாஸ்திர ஆராய்ச்சிசெய்ய புத்திமான்களை ஏற்படுத்தி அவர்களின் அபிப்பிராயங்களை சாதாரண ஜனங்களுக்கு பிரசங்க ரூபமாயும் புஸ்தகரூபமாயும்எடுத்துரைத்து பொதுநன்மையைச்செய்யவேண்டும். ஒரு தேசம் விருத்தியும், தைரியமும் அடையவேண்டுமானல் அத்தேசத்தின் விவசாயமும், கைத்தொழிலும் சரிவர பாதுகாக்கப்பட வேண்டுமாகையால் அதின்பொருட்டு நம் கீழ் ஜாதி ஜனங்களுடைய க்ஷேமத்தையும் சௌக்கியத்தையும் கோறி அவர்களை முன்னுக்கு எவ்விதத்திலும் கொண்டுவந்தால் நமக்கும் நம் நாட்டுக்கும் க்ஷேம சௌக்கிய முண்டாகும்.

சாஸ்திர சம்பந்தமான மட்டில் நம் வழக்கங்களை எப்படி திருத்திக்கொள்வதென்று பேசுங்கால் இடையிடையே காலரீதியை ஒத்து மாறி வந்திருக்கும் வழக்கங்களைப்பற்றி சற்று யோசிக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக நம்மில் வழங்கிவரும் கோஷா வழக்கம் (Purdah system) இந்தியாவில் முன்காலத்தில் இல்லையென்றும் இடையே மகம்மதியர் இந்தியாவுக்கு வந்தபின் சில காரணங்களால் ஏற்பட்டது என்றும் அநேகர் அபிப்பிராயம் கொள்ளுகிறார்கள்.

ஆனால் புராதீன கிரந்தமாகிய ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் சில ஸ்லோகங்களிலிருந்து அந்த வழக்கம் அக்காலத்திலும் இருந்திருக்கவேண்டு

மென்று ஊகிக்க இடமிருக்கிறது. அந்த ஸ்லோகங்களின் சந்தர்ப்பங்களும் பொருளும் என்னவென்றால் (1) ராமர் ஸீதையுடன் வனவாசத்திற்காக புறப்படுஞ்சமயத்தில் வருத்தப்பட்ட அயோத்தியா ஜனங்கள் சொல்லுகிறார்கள்:—"ஹா! ஆகாயத்தில் உலாவும் பட்சிகளாலும் பார்ப்பதற்கரிதாகிய ஸீதை இப்பொழுது தெருவழியாய் நடந்துபோவதை எல்லா புருஷர்களும் பார்க்கக் கூடும்படி ஏற்பட்டதே!"

2. ராவணன் யுத்தகளத்தில் மாண்டுபோகும் சமயத்தில் அரண்மனையிலிருந்து அலறி புடைத்துக்கொண்டு அங்கேவந்து அவன்மீது விழுந்து அழும் மண்டோதரி சொல்லும் ஸ்லோக மென்னவென்றால்—"ஹே நாதா! அரண்மனையை விட்டுவிட்டு ஊருக்கு வெளியே இவ்விடத்திற்கு உமதுபட்ட மகிஷியாகிய நான் படுதாயில்லாமல் காலால் நடந்து வந்திருக்கிறேனே. ஏன் நீர் எழுந்து என் நடத்தைக்காக என்னைக் கோபித்துக் கொள்ளமாட்டே னென்கிறீர்?"

(3) இன்னும், யுத்தம் முடிந்ததும் விபீஷணர் ஸீதையை ராமரிடம் அழைத்துவர பாரா சேவகர்கள் ஜனங்களைத் தூரத்தி புருஷர்கள் ஸீதையை பார்க்க முடியாமல் தூரத்தில் ஓட்டுவதைப் பார்த்து ராமர் தடுத்து சொல்லுகிறார்:—"கஷ்டகாலங்களிலும், ஸ்வயம்வர காலத்திலும், யாககாலத்திலும், கல்யாண காலத்திலும் ஸ்திரீகளை புருஷர்கள் பார்ப்பதில் குற்றமில்லை" என்பவைகளே.

நிற்க, தற்காலத்தில் கோஷாவழக்கம் மிகவும் அநாகரீக மானதென்றும் அதை நீக்க வேண்டுமென்றும் அபிப்பிராயங் கொள்ளுவோர்கள் சிலரிருக்க, அப்படி செய்யக் கூடாதென்றும் நமக்கு அவ்வழக்கத்தை நீக்குவதால் கெடுதியே ஒழிய நன்மை யில்லையென்றும் அபிப்பிராயங் கொள்ளுவோர்களும் சிலரிருக்கிறார்கள். முன்வகுப்பினர் நம் ஸ்திரீகளுக்குள் அன்யோன்யத்தை விருத்திசெய்யும் பொருட்டு மேல் நாட்டாரைப்போல், ஸ்திரீ சங்கங்களும், (Ladies Clubs) அன்யோன்ய கூட்டங்களும், (Ladies' Social gatherings) ஏற்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் நம்மில் அவ்வித வழக்கங்கள் இல்லையென்று அபிப்பிராயம் கொள்ளக்கூடாது. உதாரணமாக ஒரு வழக்கம் என்னவென்றால் நவாத்திரிகாலத்தில் நம் வீடுகளில் கொலுவைப்பதும், அந்த கொலுவில் ஒவ்வொரு வீட்டுபெண்களும் தங்கள் தங்களுடைய சித்திரங்களையும், பாசிவேலைகளையும், நூல் வேலைகளையும், தங்கள் சகோதரர்கள், புருஷர்கள் தங்களுக்கு பிரியமாய் செய்துகொடுத்த வஸ்துக்களையும், விலைக்குவாங்கின விசித்திர சாமான்களையும், அபூர்வ சாமான்களையும், இன்னும் பல வஸ்துக்களையும் சேகரித்து அதை ஒருவித விசித்திர காட்சியாக (Fine Art Gallery) செய்வதுடன், அச்சமயத்தில் ஒன்பது நாளும் குளிர்ந்த சாயங்காலங்களில் தங்களை அலங்கரித்துக்கொண்டு தங்கள் தோழிமார்களையும் மற்ற அயல் வீட்டு ஸ்திரீகளையும் வித்தியாசமன்னியில் தங்கள் வீடுகளுக்கு அழைத்து அங்கே ஒருமித்து பாடல்கள் பாடி, சிற்றுண்டியும்தாம்பூலமும் வந்தவர்களுக்குகொடுத்தனுப்பிவிட்டு தாங்களும் அவர்கள் வீடுகளுக்குப் போய் அதேமாதிரி தாம்பூலம் பெற்றுக்கொண்டு வருவது வழக்கம். இதைவிட அன்யோன்ய விருத்தி சபை வேறொன்றுண்



டோ? இம்மாதிரியே அநேக நல்வழக்கங்கள் நம்மில் இருக்கின்றன. ஆனால் சரிவர அனுசரிக்கப்படுகிறதில்லை. கிராமாந்திரங்களில் அவை நடைபெறலாம். பட்டணவாசங்களில் முடியாதென்றுசொல்லலாம். அவைகளை நமது ஸ்திரீகள் கைநழுவவிடாமல் நடத்திவரவேண்டும். இந்தியாவில் கிராமங்களில்தான் அதிகமே ஒழிய பட்டணங்களில் அதிகமல்ல. இருந்தபோதிலும் பட்டணங்களில் ஸ்திரீகள் சபை கூடுவது சாத்தியமாயிருக்கையில் இவைகளும் நடைபெறுவது சாத்தியமே. இம்மாதிரியாகவே கோஷா வழக்கமும் சரிவர அனுசரிக்கப்பட்டால் நமக்கு ஒத்தவைகளாகவே இருக்கும் என்னும் கொள்கையுள்ளவர்களு மிருக்கிறார்கள்.

கோஷா வழக்கத்தை அனுசரிப்பதாலேயே நம் ஸ்திரீகள் நாகரீக மற்றவர்களாயும், படிப்பற்றவர்களாயும், குடித்தனம்பண்ணத் தெரியாதவர்களுமாகவே தான் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. நாம் புகழ்ந்துகொண்டாடும் ஸ்திரீ ரத்தினங்களாகிய ஸீதா, தாரா, திரௌபதி, தமயந்தி, சாவித்திரி முதலியவர்கள் பதிவிரதைகளாய் பதிசுச்ருஷை, க்ரஹகிருத்தியம், க்ரஹஸ்த தர்மம்முதலியவைகளைச் சரிவர செய்துதானேவந்தார்கள் என்று சொல்லப்படுகிறார்கள். ஏன் அம்மாதிரியே இக்காலத்திலும் இல்லறத்தை சுகசாதகமாகவும், மோட்ச சாதகமாகவும் நம் ஸ்திரீகள் செய்யமுடியாது? அவர்களுக்கு கல்வியும் நல்வழக்க போதனைகளும் நம் வீடுகளிலேயே கொடுக்கவேண்டும். நம் பெண்களுக்கு சில காலம் வரையில் பெண்பாடசாலைகளில் கல்வி கேள்விகளையும், கலைகளையும் கற்றுக்கொடுக்கவேண்டும். பிறகு வீடுகளிலேயே மேல்படிப்புக்கு சாதகங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆங்கிலபாஷையில் அபிவிர்த்தியைக் கோருவது தத்சமயம் சரியல்ல. ஏனெனில் நம் ஸ்திரீகளில் பெரும்பான்மையோர் தம் தாய் பாஷையே தெரியாதவர்களாயிருக்கிறார்கள். தவிர நம் உத்கிருஷ்ட கிரந்தங்கள் எழுதப்பட்டிருக்கிற சம்ஸ்கிருத பாஷை க்ஷீணஸ்திதியை அடைந்திருக்க, அப்பாஷையே தெரியாமல் அதில் எழுதப்பட்டிருக்கும் சாராம்சத்தை எப்படி நம் ஸ்திரீகள் அறிந்துகொண்டு நமக்கு ஹிதமாய் நடப்பதுடன் நம் குழந்தைகளையும் நற்போதனையுடன் உத்தம குணமுள்ளவர்களாய் வளர்த்தக்கூடும்? ஆகையால் பூர்த்தியாய் அபிவிர்த்தி செய்யமுடியாத அன்னிய பாஷையைக் கற்பதைவிட நம் ஸ்திரீகள் எல்லோரும் நம் தாய் பாஷையைக்கற்றுக்கொண்டு அதில் தேர்ச்சி அதிகமாயடைந்த பிறகு சாவகாசம் ஏற்படுங்காலத்திலும், நம் பாஷாபிவிர்த்தியிலிருந்து உண்டாகும் நன்மைக்கு மீறி அன்னிய பாஷைபயிற்சியிலிருந்து நம் ஸ்திரீகளால் குழந்தைகளுக்கு நன்மை ஏற்படவேண்டியிருக்குங்காலத்தில்தான் அதைப்பற்றி யோசிக்கவேண்டும். தத்காலம் அன்னிய பாஷைபயிற்சி தேவையில்லை யென்று தோன்றுகிறது.

இவ்வளவு தூரம் குணாகுணங்களை யோசித்து ஸ்திரீகளுக்கு படிப்பு கொடுக்க நாம் பிரயத்தனப்படுங்கால் அவர்களுக்கும் அதில் அபிலாஷை இருப்பதாக ஸ்திரீகள் காட்டிக்கொண்டால்தான் நலம். ஸ்திரீகள் திருந்தமாட்டோம் முட்டாள்தனமாய்த் தானிருப்போம் என்று சொன்னால் புருஷன் என்ன செய்வது? இதற்கு முக்கிய பொருள் ஸ்திரீ உதவிதான். [illegible] ஆகிய இரண்டு மாடுகளன்றோ சேர்ந்து வாழ்நாளாகிய வண்டியை [illegible] இழுக்கவேண்டியிருக்கிறது. இதற்கு அடையாளமாகத் தான் [illegible] விவாஹங்களில் தம்பதிகளின் தோள்களின்மேல் நுகத்தடியை வைத்துக்காட்டுகிறார்

162059
Y15m211, M99M0
M99.15

போனாம். ஆகையால் ஸ்திரீகளும் தம் கடமையைச் சரியாய்செய்து புருஷர்களுடன் ஒத்து வாழ்ந்து வாழ்நாளை சபலமாக்கவேண்டும்.

சாஸ்திரங்களைத்தான் அநுசரிக்கவேண்டுமென்ற கொள்கையுடன் சாஸ்திர ஆராய்ச்சி செய்து அலைகளில் கப்பல்யாத்திரை, ருதுவான பெண்களின் விவாஹம், முதலிய இன்னும் பலவிஷயங்கள் அங்கீகாரம் செய்யப்பட்டிருப்பதாய் ஒப்புக்கொள்ளுவோம். தத்சமயம் ஒரு புருஷன் அப்படி செய்ய விரும்பி தன் பெண்ணின் விவாஹத்தை அவள் ருதுவானபின் செய்யப்போவதாயும், அதுவரையில் பெண் கலாசாலை சென்று கல்வி கற்கவேண்டுமென்றும், தன் குமாரனை சீமைக்கு அனுப்பி படிப்பிக்கப்போகிறதாகவும் தன்னுடைய தாயார், சகோதரிகள், பார்யா முதலிய வீட்டோர்களிடத்தில் சொன்னதும் அவர்கள் அதை அங்கீகாரம் செய்யாமல் "நம் குழந்தை லட்சுமிக்கு எட்டு வயதிலேயே அழகாய் எல்லா நகையும் போட்டு சிரிக்க சிரிக்க கலியாணம் செய்து பார்க்கவேண்டுமென்று எங்கள் பாட்டிக்கு ஆசையாயிருக்கிறது. எட்டாவது வயதில்தான் விவாஹம் செய்யவேண்டும். பிறகு பாட்டி பார்க்கக் கொடுத்துவைத்திருக்கிறாளோ இல்லாமல் இறந்துபோகிறாளோ என்றும், நம் பையனை ஊர்விட்டு ஊர், தேசம்விட்டு தேசம் அனுப்புவதாவது? ஏதோ ஊரோடும் வீட்டோடும் வாசலோடும், பத்தோபதினைந்தோ சம்பாதித்து, கஞ்சியோ கூழோ சாப்பிட்டுவிட்டு வயிற்றை கழுவிக்கொண்டிருந்தால் போதும். எங்கள் கண்மணியை அவ்வளவு தூரம் அன்னியதேசத்துக்கு அனுப்பமாட்டோம்" என்று அழுத கண்ணும் சிந்தின மூக்குமாய் சொல்லுவார்களேயானால் அம்மனிதன் என்ன செய்வான்? இம்மாதிரி சொல்லும் அநேக ஸ்திரீகளும் இருக்கிறார்கள். நல்ல வழிகளையும் அவைகளை அனுஷ்டிப்பதால் உண்டாகும் பிரயோஜனத்தையும் எடுத்துச் சொல்வது புருஷன் வேலையாயிருந்தபோதிலும் அதற்கு இணங்கி ஒத்து நடக்கவேண்டியது ஸ்திரீகளுடைய கடமையன்றோ?

சாஸ்திரானுமதியுடன் செய்யும் காரியங்களுக்கே ஸ்திரீகள் இம்மாதிரி தடை சொன்னால் சாஸ்திர விரோதமென்று குருட்டுத்தனமாய் சொல்லப்படும் விஷயங்களில் ஒரு மனிதன் எவ்வளவு புத்திசாலியாயும் தீரனுயுமிருந்தபோதிலும் ஸ்திரீகளின் ஒற்றுமையன்னியில் சீர்திருத்தம் செய்யமுடியாது. ஏனெனில் அவ்விஷயங்களில் "அதெப்படி? ருதுவான பிறகு விவாஹம் செய்வதாவது? ருதுவான பெண்ணை கண்ணை கட்டியல்லவா காட்டில் கொண்டுபோய் விடவேண்டும். தவிர பெண் பத்துவயதுக்குமேல் வீட்டை விட்டு வெளியே போகலாமா? அண்டைவீட்டுக்காரர்கள் அசல் வீட்டுக்காரர்கள் கண்டு காரித்தல்லவோ கொட்டிவிடுவார்கள். குதிருபோல் பெண் பள்ளிக்கூடம் போவதாவது" என்றும், பையனை சீமைக்கு அனுப்பும் விஷயத்தில் "அவன் சீமையிலிருந்து திரும்பி வந்தால் அவனுடன் யார் பேசுவார்கள்? நம் வீட்டுக்கு அவன் வந்தால் நம்மையும் ஜாதியை விட்டு தள்ளிவிடுவார்களே. நாம் பிள்ளையென்று பாவித்து வீட்டுக்குவரச் சொன்னாலும் ரேழியிலல்லவோ உட்காரவைத்து சாதம் போடவேண்டும்" என்றும் பலவிதமாய் ஸ்திரீகள் பிதற்றுவார்கள். ஆகையால் இல்லறத்தைச் செவ்வையாய் நடத்தக்கூடிய ஸ்திரீகளும் சரியான குணத்தோடும் புத்தியோடும் இருந்தாலல்லவோ சீர்திருத்தம் எவ்வகையிலும் செய்ய சாத்தியமாகும். புருஷர்கள் ஸ்திரீகளுக்கு நன்மைகளை எடுத்துக்காட்ட ஸ்திரீகள் அவைகளை அங்கீகாரம் செய்து



கொண்டு ஒத்து நடக்கவேண்டும். நம் குழந்தைகளையும் சகோதர சிறுவர் சிறுமிகளையும் தான் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி புத்தி கற்பிக்கக்கூடும். படிப்பில்லாமல் இருக்கிற நம் தாயார்களையும் பெரியோர்களையும் எப்படி சீர்திருத்தம்செய்வது என்ற கேள்விவரலாம். ஆனால் கிரீக்தேசத்து ஞானியாகிய சாக்ரெடீஸ் (Socrates) என்பவரும், நம்மில் அநேக ரிஷிகளும், பெரியோர்களும் போதனையினாலேயே ஜனங்களுக்கு நன்மைகளை உபதேசித்திருக்கிறார்கள். அதுபோலவே நாமும் இப்பொழுது குருட்டு கொள்கைகளைக்கொண்ட நம் பெரியவர்களையும் மற்றவர்களையும், அவர்களுக்கு பலமுறை நல்ல உதாரணங்களோடும் சாதுர்யமான வசனங்களோடும் சொல்லும் போதனைகளால் தான் மாற்றவேண்டும். அப்படி செய்வது கொஞ்சம் சிரமசாத்தியமானதுதான். ஆழமாய் அடிக்கப்பட்டுள்ள ஆணியைப் பிடுங்க முடியாதென்று நினைத்துக்கொண்டு அதை இன்னும் உள்ளே அடித்துவிடாமல் மெதுவாய் சித்துளிகொண்டு தட்டி ஆட்டி பிடுங்கினால் கொஞ்ச நாழிக்கெல்லாம் பிடுங்கிவிடலாம், பிறகு ஏதாவது கோணல் இருந்தாலும் அதை நிமித்திக்கொள்ளலாம். அதுபோல் புருஷர் சிரமப்பட்டு இம்மாதிரி செய்கையில் ஸ்திரீகளும் தம் கடமையையும் அதேமாதிரி செலுத்தவேண்டுமென்று மறுபடியும் சொல்லவேண்டியிருக்கிறது.

பொதுவாய்ப் பேசுமிடத்தில் இம்மாதிரியிருக்க ஒவ்வொருவரும் முதலில் ஜய சாதகமான மார்க்கமாகிய ஸ்வகுடும்ப சீர்திருத்தத்தைச் செய்யவேண்டும். தன்னையும் தன் குடும்பத்தாரையும் சீர்திருத்தம் ஒவ்வொருவரும் செய்துகொண்டால் இம்மாதிரி சீர்திருத்தப்பட்ட குடும்பங்கள் ஒன்று சேர்வது க்ஷணநாழிகைக் காரியமன்றோ! ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தன் பெண்களுடையவும் சகோதரிகளுடையவும் அபிவிர்த்தியைக் கல்வி கேள்விகளிலும், சங்கீதத்திலும், மதானுசாரத்திலும், குடும்ப சம்ரட்சணையிலும் இன்னும் மற்ற விஷயங்களிலும் கோறவேண்டும். அதின்பொருட்டு சுயநன்மையைப் பாராட்டாமல் பரோபகாரார்த்தம் உழைக்கவேண்டும். தேசசரித்திரங்களைப் படிக்குங்கால் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு ஜாதியாரிலும் அவரவர்கள் மதமும், கலைகளும் அவரவர்கள் ஸ்திரீகளாலேயே பரிபாலிக்கப்பட்டும் விர்த்திசெய்யப்பட்டும் வருகிறதாகத் தெரிகிறது. இந்திய ஸ்திரீரத்தினங்களாகிய சீதா, தாரா, திரௌபதி, தமயந்தி முதலியவர்கள் தங்கள் மட்டில் பக்தி சிரத்தையுடையவர்களாய் மாத்திரம் இராமல் தங்கள் நடக்கைகளாலும், நற்குணங்களாலும், பிரத்தியட்சபோதகர்களாயுமிருந்தார்கள். அவர்களையே சாட்சிகளாய் வைத்துக்கொண்டு நம் ஸ்திரீகளும் விர்த்தியடைய முயலவேண்டும். அன்பு, ஆசை, க்ஷமை, சாந்தி, ஈவு, இரக்கம், பச்சாதாபம் முதலிய நற்குண நற்செய்கைகளோடு கூடிய நம் இந்துமதத்தை தம் காரியங்களால் போதித்துவந்ததோடுங்கூட சாகித்யம், சங்கீதம், சித்திரம் முதலிய சகல கலைகளிலும் வல்லவர்களாயிருந்த அநேக பெண்மணிகள் நம் இந்திய மாதாவுக்கு புத்திரிகளாய் முந்நாட்களில் இருந்திருக்கிறார்கள்.

தற்காலத்தில் அதெல்லாம் போய், கலைகளில் வாசனையே அற்றுப் போயிருக்கும் நமக்கு மதவிஷயமாயும் போதனை செய்யஒருவரும் முன்வாரமலிருக்கும் இந்த பரிதாபப்படத்தக்க நிலைமையை என்னென்று சொல்லுகிறது! நம் இந்தியாவாகிய ஒரு தேசத்தில்தான் மதஞானமும் கலைகளும் சேர்ந்து வழங்குகின்றன. நம் சங்கீதத்தின் சாரமெல்லாம் தெய்வபக்

திலே. சங்கீதமும் தெய்வபக்தியும் இல்லாத ஸ்திரீ முன் காலத்தில் இந்தியாவில் காணப்படுவது அரிது. நம் செய்கைகளெல்லாம் மதபோதக சக்தியுடைய செயல்களே. பக்தி, நற்குணம், நாகரீகம், பெருந்தன்மை இவைகளெல்லாம் பரம்பரையாய் வருகின்றவைகளே. நம் குழந்தைகளுக்கும் நம்மோடிருப்பவர்களுக்கும் இக்குணங்களைச்சுலபமாய் பிரியத்துடன் புகட்டக்கூடிய சக்தியுடையவர்கள் நம் ஸ்திரீகளே ஆகையால் நம் மதஞானத்தோடு கூடியவும் சாஸ்திர ஞானத்தோடு கூடியவுமான சங்கீதத்தை நம் ஸ்திரீகள் ஊக்கமாய் பிரியப்பட புருஷர்களும் க்ஷீணதிசையை அடைந்திருக்கும் சங்கீதத்தை விர்த்திசெய்து நன்மையை அடையவேண்டும். "தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்ற பழமொழிப்படி தாயால்தானே குழந்தை நல்லவழியிலோ கெட்டவழியிலோ கொண்டுவரப்படுகிறது. "டெல்லிக்கு பாச்சாவானாலும் தல்லிக்கு பிள்ளைதானே."

காரிய துரந்தரத்தினால் ஒரு அடி அடித்து தள்ளிவிட்டு சென்றாலும் "அம்மம்மா—ஆ—ஆ—" என்று அழுதுகொண்டுபோய் குழந்தை அந்த தாயின் காலைத்தானே கட்டுகிறது. அப்பேர்ப்பட்ட குழந்தையைச் சரிவர கொண்டுவரும் சக்தி தாய்க்குத்தானிருக்கிறதாலும், இன்றைக்கு குழந்தையாயிருக்கும் பெண் நாளை தாயாகி சமுசாரியாகி கஷ்டமில்லாமல் குடித்தனம் செய்யவேண்டுமென்ற எண்ணம் எந்த தாய்க்கும் இருக்குமாகையாலும், நம் குழந்தைகளின் க்ஷேமமும் சுகமும் காலத்தை அனுசரித்த சீர்திருத்தங்களால்தான் உண்டாகக்கூடுமென்று ஏற்படுங்கால் ஏன் நம் ஸ்திரீகளும் தங்கள் கடமையைஅறிந்து முட்டாள்கொள்கைகளைக்கைவிட்டு நல்வழக்கங்களைக் கைப்பற்றி புருஷர்களுடன் ஒற்று உழைத்து பரநன்மையையும், சுயநன்மையையும், அதினாலேயே தேசநன்மையையும் அடையக்கூடாது? அப்படியே எல்லோரும் கட்டாயம்செய்து நம் இந்தியாவை உன்னத ஸ்திதிக்கு எவ்விதத்திலும் கொண்டுவருவார்களென்று நம்புகிறோம்.

(முற்றிற்று.) வி. எஸ். சர்மா.

## The Story of Abradates and Panthea.

## அப்ராதாதுவும் பாந்தியம்மாளும்.

யவனதேசத்தில் * அத்தெனே † நகரத்தில் சுமார் கி. மு. 400-ம் வருடம் செனபகன் ‡ என்று பெயர் புனைந்த நூலாசிரியர் ஒருவர் வசித்துவந்தனர். இவர் எழுதிய அநேக புத்தகங்களில் "கைரோபிடியா ||" என்னும் புத்தகம் ஒன்று. இப்புத்தகம் கைரஸ் $ என்னும் பாரசீகதேசத் தரசனது சரித்திரத்தைக் கூறுகிறது. கைரஸ் அனுபவத்தில் நடந்த அநேக கதைபோன்ற விஷயங்களில் நம் கதையும் ஒன்றாகும்.

* Greece. † Athens. ‡ Xenophon. || Cyropeidia. $ Cyrus the Great.



கைரஸ் அரசன் தன்ராஜ்யத்தை விஸ்தீரணப்படுத்தும்பொழுது அநேக
ருடன் சண்டைசெய்ய நேர்ந்தது. ஒருசமயம் அஸ்ஸைரியருடன் சண்டை
யிட்டு வென்று, தத்தம் பங்கு கொள்ளையை பாரசீகர் பங்கிட்டுக்கொண்டிருந்
தனர். அகப்பட்ட கைதிகளில்' வெளியூருக்குச் சென்றிருந்த அப்ராதாது
என்னும் ஓர் சிற்றரசனது மனைவியாகிய பாந்தி யம்மாள் இருந்தாள். இம்
மடந்தை மிகுந்த வனப்பும் ஸ்திரீகளுக்கு வேண்டிய சகல லக்ஷணங்களும்
அமையப் பெற்றிருந்தனள். தானதி பதிகள் இவ்வழகிய அணங்கை தம்மர
சன் கைரசுக் கேற்றவள் என ஒதுக்கி வைத்தனர். கைரஸின் தோழனும்
அவன் கீழ்த்தலைமைத்தானம் பெற்ற வனுமாகிய அரஸ்பஸ் என்பானொரு
வன் கைரஸுக்கு அவ்விஷயத்தைத் தெரிவித்தான். கைரஸ் அந்தப்பெண்
தனக்கு வேண்டாமென்று சொல்லி அவளை அவளிஷ்டம்போல் விட்டுவிடக்
கட்டளையிட்டதைக் கேட்ட அரஸ்பஸ் ஆச்சரியப்பட்டு "அப்பா, நீ அப்பெண்
மணியை ஒரு முறையேனும் பார்த்ததில்லையே" என உசாவினான். கைரஸ்
பார்க்கவில்லை யென, அரஸ்பஸ் "நீ அவளை ஒருமுறை பார்த்தால் இவ்விதம்
பேசமாட்டாய்! அவளழகை வர்ணித்தல் சாத்தியமில்லை! அதை உற்று
நோக்குவதோ கடினம்! ஆஹா! என்ன அழகு! பாந்தி யாவைப்போல்
பெண்கள் இப்பாருலகில் உண்டோ?"

'காணவேணும் லட்சம் கண்கள் ... ... ... ...' என பல்லவி
பாடத் தொடங்கினான். இதைக் கேட்ட கைரஸ் சிரித்து, "அப்பா அரஸ்பஸ்!
உன் வர்ணனையைக் கேட்டு அதில் ஈடு பட்டு இப்பொழுது என் விவகாரங்
களை ஒதுக்கி விட்டு, அப்பெண்ணைப் பார்க்க வருவேனாயின், உன் வர்ணனைக்
கர்த்தாவாகிய அப்பெண்ணையே நேரில் பார்த்தால், அவளுக்கு அடிமையாகி
என் ராஜ்யத்தைக் கவனியாமல் அடியோடு அவளுடன் வசிப்பேன்" எனச்
சொன்ன கைரஸைப் பார்த்து அரஸ்பஸ் நகைத்துச் சொன்னதாவது, "ஐயனே
நின் மனோதைரியத்தை அறிந்தேன். மனிதனுக்கு மனதோராஜா; மற்றஎவ்
விஷயங்களையும் மனதினாலடக்கிப் போடலாம். காதற் கருத்தளவே, காதலன்
தன்னறிவு அழிந்து தன் கடமையைச் செலுத்தத் தவறான்." கைரஸ்
பொறுமையுடன் "அப்பா அரஸ்பஸ்! நீ என்னைவிடவயதில் மூத்தவனாயிருந்
தும் உலக நடவடிக்கைகளை நீ சரியாய் அறிந்தனையில்லை. மனிதர் கெடுவ
தெல்லாம் காதலினாலே. காமமே கேட்டிற்குக் காரணம். எல்லாரும் மனோ
சக்தி நிரம்பப் பெற்றவர்களல்ல. அப்படி மனோதிடம் பெற்றவர்களிற் சிலரே
காமத்தை யடக்கவல்லர். காமம் எனும் நாமமே இல்லையெனில் மனிதனுக்கு
வேறு நரகக் கேடு இல்லை; ஆகவேகாமத்திற்கு அடிமையாகி மீளுதல் கடி
னம்" என்றான். அரஸ்பஸ் மீண்டும் கைரஸைப் பார்த்து "நீ என்னதான்
சொன்னபோதிலும், நான் காமத்தை என் மனோசக்தியால் அடக்கு வேன்.
என் தைரியம் ஏளனஞ் செய்யத்தக்கதல்ல" என்று பதிலுரைத்தான். கைரஸ்
ஆத்திரப்படாமல் "அரஸ்பஸ்! அப்பெண்மணியை உன்னிடம் ஒப்புவித்
தேன். மிகவும் ஜாக்கிரதையாய்க் காத்துவை. அவள் மனோபீஷ்டத்திற்குத்
தகுந்தபடி நட" என உத்தரவளித்துத் திரும்பினன்.

பிறகு அரஸ்பஸ் சந்தோஷத்துடன் தன்வீட்டுக் கேகினான். சிலநாட்கள்
அரஸ்பஸ் கிரகத்தில் பாந்தியா வசித்து வந்தாள். தன் கணவனுக்குச் செய்தி
சொல்லியனுப்பி விட்டு அவன் வரவை எதிர்பார்த் திருந்தனள். அரஸ்பஸ்
தன்னாலான மட்டும் தன் காதலை வெளியிட்டு, அவளைத்தன் வழிதிருப்ப

முயன்றனன். ஆடினான், பாடினான், கெஞ்சினான், அரற்றினான்; ஒன்றும் பயனில்லை. இவற்றை யெல்லாம் பார்த்த பாந்தியா பயந்து கைரஸுக்கு ரகசிய மாய்ச் செய்தி சொல்லி யனுப்பினாள். அரஸ்பஸ் தன்சித்த சுவாதீன மற்றவனாயினான். செய்தி கேட்ட கைரஸ் பெருமை பேசினவன் கதி இப்படித் தான் எனச்சிரித்து, அரஸ்பஸ்ஸின் நிலைமைக்கு பரிதாபமுற்று, தன் தானாதி பதிகளில் ஒருவனை, அவனிடம் அனுப்பி, பாந்தி யாவை பலாத்காரம் செய் யாமல் அவனால் கூடியவரையில் வாசாலகத்தால் வென்று கொள்ளலாம் எனத் தெரிவித்து வரச்சொன்னான். அம்மனிதன், கைரஸ் சொன்னதைச் சொல்லா மல் அரஸ்பஸ்ஸைக் கடிந்து, நம்பிக்கைத் துரோகம் செய்ததாக அவனைக் கோபித்தான். அரஸ்பஸ் மனம் நொந்து, தான் முன் பெருமை பேசிக்கொண்ட கைரஸிடம் எவ்வாறு முன்னிற்பது என எண்ணி யெண்ணி ஏங்கினான். கடை சியாக, பலர்முயன்று அரஸ்பஸ்ஸை கைரஸிடம் அழைத்துச் சென்று கைர ஸிடம் தெரிவித்தார்கள். கைரஸ்ஸைப் பார்த்து அரஸ்பஸ் தலையைக்குனிந்து கொண்டு, தன்னை மன்னிக்கும் படிவேண்டினான். உடனே கைரஸ் "அப்பா அரஸ்பஸ், இவ்விஷயம் மனிதருக்குச் சகஜமே. நான் முன் சொன்னபோது நீ நம்பவில்லை. இப்பொழுது உன் விஷயத்தில் அவ்வாறு நடக்கவே நீ உணர்ந் தாய்" என்றான். அரஸ்பஸ் தாழ்ந்த குரலில் "ஐயா! நான் இனி, இவ்வாறு நடந்தபிறகு, என் மனம் இங்கே இருப்பதை ஒப்பவில்லை" என, கைரஸ் மிகு ந்த கருணையுடன் "இதுவே நல்ல சமயம்! நீ இப்பொழுது என் விரோதியாய் விட்டது போல, எதிரிகள் தேசம் சென்று அவ்விடத்திய விசேஷங்களை எனக்குத் தெரிவித்துக் கொண்டிரு" எனச்சொல்லி அவனை மிகுந்த அன் புடன் அனுப்பினான்.

இஃதிவ்வாறிருக்க, பாந்தியாவின் செய்தியறிந்த அப்ராதாது தன்னாட்க ளுடன் கைரஸ்பக்கம் வந்து சேர்ந்தனன். பாந்தியாவைப் பார்த்து குதூ ஹலித்து இருவரும் க்ஷேமாதிசயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். அச் சமயம் கைரஸ் அப்ராதாதுவைப் பார்க்கவர, உடனே அவன் கைரஸ்ஸை வந் தனம்செய்து "ஐயா! அருமை சகோதரரே! நீங்கள் எங்களிருவருக்கும் செய்திருக்கும் உபகாரத்திற்கு பிரதிசெய்வதரிது. ஆயினும் எங்கள் ஆயுள் முழுமையும் உங்களுக்கு சேவகம் புரிகிறோம். நீங்களும் எங்களுக்கேற்ற நிலை மையில் வைத்திருப்பீர்கள் என பூர்ணமாய் நம்புகிறேன்" என்றான். கைரஸ் "ஐயா! நீர் எனக்கு இனிச் சகோதரரும் சிநேகருமாயினீர். நான் என்னி டம் அடைக்கலமா யிருந்தவளை முறைப்படி பாதுகாத்திருந்ததேயன்றி வேறொன்றும் செய்யவில்லை. உமது புகழ்ச்சிக்கு நான் பாத்திரனல்ல" என அவனுக்குத் தன்கீழ் உயர்ந்த தானாதிபதி வேலை யளித்தனன். மறுபடியும் அப்ராதாதுவும் பாந்தியாவும் அவனுக்கு வந்தன மளித்தார்கள்.

சில நாட்கள் அப்ராதாது வெளிவேலையின்றி, ஊரிலேயே பாந்தியாவு டன் வசித்துவந்தான். பகற்காலங்களில் கைரஸுடன் ராஜ்யாதி விஷயங்க ளைக் கவனிப்பான். மற்ற நேரங்களைப் பாந்தியாவுடன் வேட்டையாடுதலி லும், சிலசமயம் கைரஸுடன் போலிச் சண்டைகள் போடுவதிலும் நாட்க ளைக் கழித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்க, கைரஸ் மறுபடியும் சண்டைக்குச் செல்ல நேரிட்டது. கைரஸ் தன் சேனாவீரர்களை ஒழுங்காய் அணிவகுத்து தயாராயிருந்தான்.



அப்ராதாது தலைமைத் தானாதிபதி யாதலின் ஓய் வொழிவின்றி சேனா வீரர்க ளைத் தைரியப் படுத்திக் கொண்டிருந்தனன். பாந்தியா தன் கணவனுக்காக ஈட்டிகள் பொருந்தப் பெற்ற ஒரு ரதத்தைத் தயாரித்து பட்டுக்கொடிகள் கட்டி, தன் கணவனுக்கு கற்கள் பதியப்பெற்ற ஒரு சிறந்த கவசத்தைப் பூட்டி அவனை நோக்கி, ஐயனே! நாம் இப்பொழுது கைரஸ்ஸுக்காகச் சண் டையிடுகிறோம். அவன் நமக்குச் செய்திருப்பதை நினைத்துக்கொள். மேலும் போர்வீரன் சாவுக்குப் பயப்படாமல் கீர்த்தியைக் கருதவேண்டும், வீர ஸ்வர் க்கம் அதோ திறந்திருக்கிறது, நாம் நுழைய வேண்டியதே தாமதம்!" என் றாள். உடனே அப்ராதாது அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "நமது உயிர் கைரஸினதே, அவனுக்கே சொந்தம். ஆதலின் அவன் விஷயமாய் இச் சண்டையில் அவ்வுயிரை அர்ப்பணம் செய்வேன். ஆயினும் வீணாக செய்ய மாட்டேன். பெருமையுடன் சண்டையிட்டு வெற்றி வருவித்துக்கொண்டு பிறகு அச்சண்டையில் இறப்பேன். உன்னைப் பற்றி எனக்குப் பயமில்லை. நீ செய்யப்போவதை நான் அறிவேன்" என்றான். பிறகு இருவரும் கடைசி யாகப் பிரிந்தனர்.

அன்று யுத்தம் வெகு மும்முரமாக நடந்தது. ஹேஹே எனக் கத்திக் கொண்டு ஒரே கூட்டமாய்த் தாக்குவோரும், தோற்றுப்போய் உயிர்விடப் பயந்து முதுகுகாட்டி ஓடுவோரும், ஜெயித்த சந்தோஷம் தாங்காமல் ஆர்ப்ப ரிப்போரும், இவர்களின் நடுவில் கைரஸ் வீரர்களோடு வீரராய்ச் சண்டை செய்வதையும் அப்ராதாது பார்த்தான். உடனே ஆவேசம்கொண்டு யுத்தகள த்தில் போர்முனையிற் புகுந்தான். அவனை எதிரிகள் எதிர்த்தார்கள். அப்ரா தாதுவோ தன் பாணங்களினால் அநேகரை எமலோகப் பட்டணம் அனுப்பி னான். அவன் சென்ற விடமெல்லாம் சாவுதான். தன் ரதத்திலிருந்து ஈட்டி கள் நீட்டிக்கொண்டிருப்பதால், ரதம் சென்ற விடமெல்லாம் பலர் இறந்து கொண்டிருந்தனர். எதிரிகள் கூட்டத்தின் நடுவே திடீரென்று ரதத்தைச் செலுத்தி அநேகரைக் கொன்றுவிடுவான். அவன் எறியும் ஈட்டிகளும் பாணங்களும் அநேகரைக் கொன்றுவிட்டன. ஆயினும் அப்ராதாது உயிரு டன் போர்க்களத்தினின்றும் மீளவில்லை. பலர் தண்டாயுதங்களினால் அடித்த படியினால் ரதமுடைந்துபோக அப்ராதாது கீழேகுதித்து கத்திகொண்டு நெடு நேரம் சண்டையிட்டு அநேகரை வீழ்த்தினான். அவன் தேகமுழுதும் ரத்த மயமா யிருந்தது; உடம்பு முழுதும் குத்துகளும் காயங்களுமா யிருந்தன. இச்சமயம் பின்னிருந்து ஒருவன் மண்டையிலடிக்க, மூளை சிதறிக் கீழே அப்ராதாது இறந்து விழுந்தான். அவன் எதிரிகளில் அநேகரைக் கொன்று விட்டபடியால் மிச்சமிருந்த சொற்பவீரரை கைரஸின் வீரர்கள் நிமிஷத் தில் வென்றுவிட்டனர். கைரஸ் வெற்றிபெற்று, பின் நடக்கவேண்டிய வியவ காரங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

யுத்தகளத்தை நோக்குவோம். எங்கு பார்த்தாலும் மனிதர்கள் படுத் துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். கால் போனவரும், கை போனவரும், அதிக காயங்கள் பட்டதனால் நடக்கச் சக்தியற்றவரும், கீழே விழுந்து கிடந் தனர். ஓரிடம் ஒரே பிணக்குவியலாயிருந்தது. மற்றோரிடம் பலர் எமலோக பட்டிணத்தை எட்டிப் பார்த்துக்கொண்டு இறங்குந் தறுவாயில் மூச்சுவிட் டுக்கொண் டிருந்தனர். பலர் தம் வீட்டில் விட்டுவிட்டு வந்த பிரிய மனைவி மக்களை நினைத்து ஏதோ பிதற்றிக்கொண்டே இறந்தனர். ஆகாயத்தில் கழுகு

கள் சூரியாஸ்தமனத்தை வேண்டி வட்டமிட்டுக்கொண்டிருந்தன. சமீபத்திலிருக்கும் காடுகளிலிருந்து ஓநாய், நரிகள் தாங்கள் சீக்கிரம் விஜயம் செய்யப்போவதைத் தெரிவிக்குமாறு ஊளையிட்டுக்கொண்டிருந்தன. ஓரிடத்தில் ஓர் அழகிய ஸ்திரீ,

"—பருத்த தொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்"

எனச் சொல்லிக்கொண்டு, கீழேயிருக்கும் பிணங்களை நீக்கிக் யாதோவொன்றைத் தேடிக்கொண்டிருந்தனள். அவளுடன் இரு வேலைக்காரரும் தேடிக்கொண்டிருந்தனர். இவள் யார் என நாம் சொல்லாமலே தெரியலாம்.

பாந்தியா அப்ராதாதுவின் சரீரத்தைத் தேடுகிறாள். கடைசியாக ஒரு தேகத்தைக் கண்டுபிடித்து எடுத்துக்கொண்டு ஓராற்றங்கரை சேர்ந்தனள்.

அவ்விடத்தில் தன் வேலைக்காரரை விட்டு ஒரு ஆழ்ந்த குழி தோண்டுவித்து தன் கணவர் தேகத்தை மடியிலிருத்திப் பார்த்துக்கொண்டிருந்தனள். இங்கே இவ்வாறிருக்க, வெற்றி விஷபமாகச் செய்யவேண்டியதைச் செய்து திரும்பிய கைரஸ் தன் பக்கத்தில் இறந்தவர்களில் அப்ராதாது ஒருவன் எனக் கேட்டு மிகவும் வருந்தி அவன் சரீரத்தைக் கேட்க அதை பாந்தியா தூக்கிச் சென்றாளென வறிந்து உடனே குதிரைமேலேறி ஆற்றங்கரை வந்து சேர்ந்தான். அப்ராதாதுவின் தேகத்தைப் பார்த்த கைரஸ் கண்ணீர்விட்டுக் கதறி "என் அன்பனே! என் வெற்றியில் நின் ஆவியை ஈந்தனை. நான் இனி என் செய்வேன்? என் யுத்தகளம் இருளடைந்ததே!" என வருத்தமுற, உடனே பாந்தியா "ஐயா கைரஸ், எங்கள் ஆவி உமதே! நீர் காப்பாற்றியபடியால் உமக்கே அதை அர்ப்பிதம் செய்தோம். நீர் செய்த உதவிக்குப் பிரதிசெய்ய முடியாது" என்று சொன்னாள். பிறகு கைரஸ் அப்ராதாதுவின் சமீபம் முழந்தாளிட்டுப் பணிந்து அவன் ஆவி மோக்ஷம் சேருமாறு பிரார்த்தித்தான். உடனே எழுந்து பாந்தியாவை நோக்கிச் "சகோதரி! அப்ராதாது தன் ஆவியைப் பிறர்பொருட்டு அர்ப்பிதம் செய்ததற்காக, உலகத்தார் யாவரும் அக்கீர்த்தியை யறியும்படி, என்று மழியாத ஒரு சிறந்த கோபுரம் இவ்விடம் கட்டுவேன். உன்னை வெகு மேன்மையாகவும் ஜாக்கிரதையாகவும் பாதுகாப்பேன். நீ இஷ்டப்பட்டவிடம் செல். ஒரு அரண்மனையும் மற்று வேண்டியவைகளும் அளிக்கச் சொல்கிறேன்" என, பாந்தியா சிரித்து, "ஐயனே! உமது பட்சத்திற்கும் கருணைக்கும் என்னால் கைம்மாறு புரிய முடியாதென முன்னமே சொன்னேன். இப்பொழுது நான் செல்லவேண்டிய விடமும் எனக்குத் தேவையானவையும் சீக்கிரம் அறிவாய்" என்றாள். உடனே கைரஸ் மிக வருத்தத்துடன் பாந்தியாவிடம் விடைபெற்றுச் சென்றான்.

பாந்தியா தன் வேலையாட்களை அனுப்பிவிட்டு தன் தலைமை தோழிக்குச் சில விஷயங்கள் சொல்லிவிட்டுக் கத்தியை உருவித் தன் மார்பில் குத்திக்கொண்டு தன் கணவன்மேல் இறந்து வீழ்ந்தனள். இத்தக் காட்சியைக் காண சகியாமல் சூரியனும் மேற்றிசையில் மறைந்தான். பட்சிகளெல்லாம் அழுதுகொண்டு, கா கூ எனக் கதறியோடின. ஆற்று ஜலம் இரைச்சல் நிறுத்தி அமர்ந்து நின்றது. மரங்கள் எல்லாம் அசைவற்று நின்றன. சூரியன் தனக்குத்



தெரிவித்ததை நேரே பார்க்க விரும்பிச் சந்திரனும் ஆகாயத்தில் எட்டிப் பார்த்தனன்.

பாந்தியா இறந்து விழுந்ததைப்பார்த்த தோழி, அவளையும் அவள் கணவனையும் ஒரே வஸ்திரத்தாற் சுத்தி குழியிலிருத்தினாள். மற்ற வேலைக்காரர்களும் வந்து செய்தியை யறிந்து கதறியழுது தாங்களும் குத்திக்கொண்டு இறந்து விழுந்தனர். ஆஹா! எவ்விதமான வேலைக்காரர்கள்! இத்தியாதி விஷயங்களைக் கேட்ட கைரஸ் ஒருபக்கம் விசனமும் ஒரு பக்கம் பக்தியும் மேலிட்டு இவர்கள் இறந்த இடத்தில் ஒரு சிறந்த கோரி கட்டுவித்து அவர்கள் இறந்த நாளை வருஷாவருஷம் உத்சவமாகக் கொண்டாடும்படி ஏற்படுத்தினான்.

ஐரோப்பியரின் இல்லற ஐதிகம் இதற்கு முற்றும் மாறானது. ஐரோப்பிய கதைகளெல்லாம் கலியாணத்திற்குமுன்னே நடப்பவை. கலியாணம்தான் கதையின் முடிவு. கதாவிஷயங்களெல்லாம் இருவரும் உலகமறிய கலியாணம் நடப்பதற்குமுன் நடந்தவை. ஆனால் இந்தியக்கதைகளும் மற்றக் கிழக்கித்திய கதைகளும் கலியாணத்திலிருந்து ஆரம்பிக்கும். கதையிலிருக்கும் விஷயங்கள் கலியாணத்திற்குப் பிறகே நடப்பவை.

இக்கதையினால் நமக்கு மூன்று முக்கிய நீதிகள் தெரிகின்றன. பெருமை தலை சாய்க்கும். மனிதருக்கு முக்கியமாய் வேண்டிய குண[illegible]றிதலாம். ஸ்திரீகளுக்குச் சிறந்த பூஷணம் கற்பு. இம்மூன்றிற்கும் உதாரணங்கள் இக்கதையில் இருக்கின்றன.

V. N. R.

PAGES FOR BOYS AND GIRLS.

## கெலிலியோ.

சிறுவர்களே!

நீங்கள் பள்ளிக்கூடத்தில் பூகோளசாஸ்திரம் படிக்க ஆரம்பிக்கையில் உங்கள் உபாத்தியாயர் பூமி உருண்டையாயிருப்பதாயும், பூமி தான் சூரியனை 24 மணி நேரத்துக்கு ஒரு தடவை சுற்றி வருகிறதென்றும் சொல்லிக் கொடுக்கிறார் அல்லவா? ஆனால் நாம் பிரத்யக்ஷமாய் பார்ப்பதற்கு பூமி தட்டையாய் இருப்பதாயும், சூரியன்தான் பூமியைச் சுற்றி வருவதாயும் காணப்படுகிறது? ஆகையால் எது உண்மையென்று கேட்டால் உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பதுதான் உண்மை. அவர் சொல்வதை விளக்கிக் காட்டும்பொருட்டு பல உதாரணங்களும் உங்களுக்கு அவர் சொல்லியிருப்பார். இப்பொழுது நான் சொல்லப்போகிற தென்னவென்றால், பூமி உருண்டையென்றும், சூரியனைச் சுற்றி பூமிதான் வருகிறதென்றும் சொல்லும் நியாயத்தை முதலில் கண்டுபிடித்த கேலிலியோ வென்ற மகானுடைய வாழ்நாளைப்பற்றிச் சில வார்த்தைகளே.

ஐரோப்பா கண்டத்தில் இடாலி (Italy) என்ற தேசத்தில் ப்ளாரேன்ஸ் (Flarence) என்னும் நகரத்தில் முன்காலத்தில் உயர்ந்த நிலைமையிலிருந்து, கால வித்தியாசத்தால் தற்சமயம் கொஞ்சம் ஏழ்மையான ஸ்திதியை யடைந்திருந்த ஒரு நல்ல குலத்தில் ஜனித்த வின்ஸென்ஸோ (Vincenzo) வென்றவருடைய குமாரர் இவர். இவர் தகப்பனார், கலைகளில் தேர்ந்தவரும், நாகரீகமுடையவரும், சங்கீதத்தில் அதிக ஞானமுள்ளவராயுமிருந்தார். ஆனால் அவர் ஒரு பெரிய குடும்பி. சிலவுக்குத் தக்கிய வரவு அவருக்கில்லையாகையால் இந்த கேலிலியோவை மேன்மையாய் வளர்த்துவர அவருக்கு முடியவில்லை. ஆனால் கேலிலியோவுக்கோ தன் முன்னோர்களின் உயர்ந்த ஸ்திதியைப்பற்றி அடிக்கடி தன் தகப்பனாரிடமிருந்து கேட்டிருந்தமையால் தான் மிகவும் சிரமப்பட்டு தன் குலத்தை உத்தாரணம்செய்து தான் முன்னோர்களிருந்த ஸ்திதிக்கு வரவேண்டுமென்னும் ஆவல் அதிகமாயிருந்தது. உயர்தரத்தாரையே நமக்கு மாதிரியாக வைத்துக்கொண்டு நாமும் மேன்மையடைய பிரயத்தனப்படுவதுதான் எவருக்கும் ஹிதமான வழி. அப்படியே இவரும் செய்ய விரும்பினார்.

இந்த கேலிலியோ என்பவர் 1564௵ மார்ச்சு௴ 15௳ பைசா (Pisa) என்னும் ஊரில் பிறந்தார். இவர் சாதாரண குழந்தைகளைப்போலல்லாமல் சிறுவனாயிருக்கும்பொழுதே களிமண்ணால் பலவித விசித்திரமான உருவங்கள் செய்வதினாலும், தன் தோழர்கள் அஜாக்கிரதையால் உடைத்திருக்கும் விளையாட்டுக்கருவிகளை தன் புத்தியை உபயோகப்படுத்தி மராமத்து செய்வதினாலும், சுற்றுப் பக்கங்களிலுள்ள சிறுவர், சிறுமிகளோடு வெகு சீக்கிரத்தில் சிநேகம் செய்துகொண்டு அவர்களுக்கு நல்லவனாயிருந்தார்.

பாலியத்திலேயே மற்ற பையன்கள் பம்பரம் (top) சுற்றி விளையாடும்போது இவர் அப்படி விளையாடாமல் பம்பரம்சுற்றும்மாதிரியையும், அது சுற்றுவதற்குக் காரணத்தையும் சாஸ்திரரீதியாய் தெரிந்துகொள்ள முயலுவார். முதல் முதல் இவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். ஆனால் வருமையின் கடூரத்தால் பீடிக்கப்பட்ட இவர் தகப்பனார் கொஞ்சகாலத்திற்கெல்லாம் இவரைப் பள்ளிக்கு அனுப்புவதை நிறுத்தவேண்டியிருந்தது. ஆனால் இவர் படிப்பு அதினால்குந்தகப்பட்டதோவென்றால் அதொன்றுமில்லை. புத்திவிசாலமாய் பல சமாசாரங்களையும் தெரிந்துகொள்ளக்கூடிய சமயத்தில் சிரேஷ்டமான களிமண்ணானது வேலைத்திறமையோடுகூடிய குயவன் கையில் அகப்பட்டாப்போல் இவர் வின்ஸென்ஸோ (Vincenzo) வாகிய இவருடைய தகப்பனாருடைய சிட்சையிலேயே இருந்தமையால் அது அவருக்கு நன்மையை விர்த்தி செய்யக் காரணமாயிற்று. வெகு சீக்கிரத்தில் கேலிலியோ படிப்பு, சித்திரம், கவிகல்பனை, சங்கீதம் முதலியவைகளில் பாண்டித்யத்தை யடைந்தார். ஆகையால்தான் இக்காலத்திலும்கூட, தனவான்களாயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி பிதாக்கள் தங்கள் குழந்தைகளின் படிப்பைப்பற்றியும் நடவடிக்கையைப் பற்றியும் தாங்களே நேரில் கவனிக்கவேண்டுமென்று அநேக பெரியோர்கள் ஓயாமல் போதிப்பது.

நாம்தான் தனவானாயிருக்கிறோமேயென்று பிள்ளைகளின் படிப்பைக் கவனியாமல் தகப்பன்மார்கள் அவர்களை வீட்டு வாத்தியார்வசமாவது வேறு தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் வசமாவது ஒப்புவித்துவிடுகிறார்கள். அதன்



பலன் பின்னுக்கு விபரீதமாய் முடிகிறது. பிள்ளையும் கெட்டுப்போகிறான். தகபபன் காலத்திற்குப் பிறகு குடும்பத்திற்கும் க்ஷீணதிசை ஏற்பட்டுவிடுகிறது. அதிகம் சொல்வானேன். ப்ரத்யட்சத்தில் உதாரணங்கள் கணக்கில்லாமலிருப்பதால் தகப்பன்மார்கள் பிள்ளைகளை விருத்திக்குக் கொண்டுவரும் விஷயத்தில் தாங்கள் நேரில் கவனித்துச் செய்யவேண்டியது என்ற கோறிக்கை ஒன்றுதான்.

பிள்ளையின் நோக்கத்தை யறிந்து சமாசாரங்களைக் கற்றுக்கொடுக்கும் சிறந்த தகப்பனாரின் கீழ் கற்றுவந்த கெலிலியோ நல்ல வித்வானாகவும், நன்னடக்கையுற்றவராகவும், அன்பு, தயாளத் தன்மையோடு கூடிய சுபாவத்தையுடையவராயும், எந்த சமாசாரத்திலும் உண்மையறிய ஊக்கமுடையவராயும், ஜனங்களுடைய ப்ரீதிக்கு பாத்திரராயும் ஏற்பட்டார். அவரைப்பற்றி பேசாத நாக்கும், அவரை நினையாத நெஞ்சமும் அந்த ஊரிலில்லை. இவ்வவளவு சிறந்த புத்திரனைப் பெற்ற தகப்பனாரும் பெருமையடையவும், ஆநந்தப்படவும் நியாயமேற்பட்டது. ஆனால் வறுமை யல்லவோ குறுக்கே நின்றது. என் செய்வார் பாபம். உயர்தரபடிப்பிற்கு பிள்ளையையனுப்ப சக்தியற்றவராயிருந்தார். பிள்ளை புத்திசாலியாகையால் வியாபாரத்தில் அமர்த்தினால் ஏராளமாய் திரவியம் சம்பாதிப்பானென்று நினைத்தார். நினைத்தபடி உடனே செய்யாமல் மறுபடியும் யோசித்தார். அதற்குள் பையனுடைய சுறுசுறுப்பும், புத்தி கூர்மையும், விடாமுயற்சியும், சிநேகிதர்களுடைய புத்திமதியும், கடைசியில் அவரை கேலிலியோவுக்கு ஒரு தொழிலை உத்தேசித்து உயர்தரப் படிப்புக் கற்றுக் கொடுக்கும்படி செய்தன. அப்படியே, பதினேழாவது வயதில், வைத்திய சாஸ்திரம் படிக்க இவர் அனுப்பப்பட்டார். இவருக்காக தன் ஆஸ்தியில் பாதிக்குமேல் சிலவிட உத்தேசித்தார். இவர் தகப்பனார் இவர் படித்து முன்னுக்கு வந்துவிட்டால் பின்னுக்கு தன் சகோதரர்களுக்கு ஒத்தாசை செய்து அவர்களையும் முன்னுக்குக் கொண்டுவருவாரென்று நம்பினார். ஆனால் பின்னால் வரப்போகும் கெடுதியை அவர் எதிர்பார்க்கவில்லை.

பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்பொழுது வயித்திய சாஸ்திரத்தைதவிர, தர்க்கம், நியாயம் முதலிய எந்த சாஸ்திரத்திலும் புத்தியைச் செலுத்தக்கூடாதென்கிற நிபந்தனையுடனேயே இவர் அனுப்பப்பட்டார். ஆனால் இவர் தன் தொழில் படிப்பைப்பற்றி அதிகமாய் கவனிக்கவில்லை. ஏனெனில் தத்காலத்தில் ஏற்பட்டிருந்த ரூடியாய் படிப்பிக்கும் விதமானது, உண்மையையும், நியாயத்தையும், காரணத்தையும் ஆராய்ந்து அறிய விரும்பிய அவர் சுபாவத்திற்கு எதிரிடையாக இருந்தது. மூக்கணாங் கயிற்றால் இழுக்கப்படும் மாடுபோல், வாத்தியாயர்கள் சொன்னதை அப்படியே சரியென்று ஒப்புக்கொள்ளாமல் கேலிலியோ வானவர் அவர்கள் சொல்லும் சமாசாரங்களின் உண்மையை விசாரித்து, நியாயம் கூற முடியாத விஷயங்களை விடுத்தார். இம்மாதிரி தாங்கள் சொல்லுவதைப் பற்றி மறுத்துப் பேசுவோர்களை இதுவரையில் கண்டிராத அந்தக்காலத்து பண்டிதர்களுக்கு இவருடைய நடத்தை அதிக வருத்தத்தை உண்டுபண்ணியது. சுயபுத்தியோடு நியாயவிசாரம் செய்யும் ஒரு வாலிபன் கிளம்ப பண்டிதர்கள் அவனுக்கு விரோதமாய் கட்சி கட்ட ஆரம்பித்தார்கள்.

இச்சமயத்தில் அரண்மனைப் பிள்ளைகளுக்கு அவர்கள் உபாத்தியாயர் கோணங்களையும் அளவுகளையும் பற்றிய ஜியாமெட்ரி (Geometry) என்னும்

சாஸ்திரத்தைச் சொல்லிக் கொடுப்பதை கெலிலியோ அகஸ்மாத்தாய்க் கேட்டு, அந்தசாஸ்திரத்தில் ப்ரீதிகொண்டு அதைத்தானேகற்க ஆரம்பித்தார். இதைக் கேட்டு அரண்மனை உபாத்தியாயர் இவருக்குத் தானே கணிதசாஸ்திரம் கற்றுக்கொடுத்தார்.

வின்ஸென்ஸோ (Vincenzo) தன்பிள்ளைக்குத் தொழில் படிப்பு ப்ரீதியில்லாமையையும், அவனுடைய புத்திகணிதசாஸ்திரத்தில் வெகுசீக்கிரம்பாண்டித்தியம் அடைவதையும்கண்டு, அதிலேயே தேற்சியடையும்படி விட்டுவிட்டார். கெலிலியோவும் பத்தொன்பது வயதிலேயே கடிகாரத்தின் பெண்டுலத்தின் (Pendulum) சமகால ஆட்டத்தைப்பற்றி (Isochronism) ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்துவிட்டார். அதெப்படியெனில், ஒருநாள் பைசா (Pisa) நகரத்து சாய்ந்த கோபுரம் என்று பிரசித்திபெற்ற கட்டடத்தின் உள்ளே ஒருபக்கத்து மண்டபத்தில் நடந்து போகும்பொழுது அதில் தொங்கவிட்டிருக்கும் விளக்கொன்று ஆடுவதைக்கண்டார். உடனே அதைக் கவனிக்கலானார். அந்த விளக்கானது முன்னும் பின்னும் ஆடி வருவதற்கு சமமான காலத்தை எடுத்துக் கொள்வதை கவனித்தார். ஒவ்வொருதரம் ஆடும்பொழுதும் முன்னும் பின்னும் சமமானதூரம் அது போய்வருவதையும் கவனித்தார். இதைபலமுறை பல இடங்களில் பரிசைக்ஷசெய்து பார்த்தார்.

பிறகு இதுவரையில் திரஸ்கரிக்கப்படாத உத்கிருஷ்டமான காலநிரூபணவிதத்தைக் கண்டுபிடித்தார். அப்பொழுது வைத்திய சாஸ்திரமும்கூட கற்றுவந்ததால், ஒருவஸ்து முன்னும் பின்னும் ஆடும்பொழுது சமமான காலத்தை எடுத்துக்கொள்ளுகிறது (The Law of Oscillation) என்ற நியாயத்தை நாடிபார்ப்பதிலும் உபயோகப் படுத்தினார்.

இவர் முதலில் ஒரு வியாசம் எழுதினார். அது வஸ்துக்களை நீரில் எடைபோட்டு சரியான எடை கண்டுபிடிக்கும் விதத்தைப்பற்றியும் அதற்கு வேண்டும் திராசை (Hydrostatic balance) பற்றியதாயு மிருந்தது. அது பைஸா நகரத்து காலேஜின் தலைமை உபாத்தியாயர் கையில் போய்ச்சேர அவர் அதை எழுதிய கெலிலியோவின் சுயபுத்தியின் சிரேஷ்டத்தை கவனித்து இவரை கலேஜில் கணிதசாஸ்திர உபாத்தியாயராய் ஏற்படுத்தினர். உபாத்தியாயரா யிருந்துகொண்டு அரிஸ்டாடல் (Aristotle) என்கிற பூர்வீக தற்கக் கியானியின் பிரபந்தங்களில் குற்றங்களைக் காட்டி பரிகஸித்துப் பேச ஆரம்பித்தார். இதனால் இவருக்கு எதிராக காலேஜ் வித்வான்களில் ஒரு கட்சி ஏற்பட்டது. 1592-ம் வருஷம், வெனிஸ் (Venice) தேசத்தில் படுவா (Padua) என்னும் ஊர் காலேஜில் கணித சாஸ்திர பண்டிதராக ஏற்படுத்தப்பட்டார். அங்கே இவர் வெகுவாய் கொண்டாடப்பட்டார்.

1609-ம் வருஷம் டெல்லஸ்கோப் (Telescope) என்ற நூதன பொருளைக் கண்டுபிடித்தார். அதிலிருந்து அநேக வான்விசேஷங்களைப் பிறகு கண்டுபிடித்தார். வெனிஸ் தேசத்திலிருக்கும்பொழுது உலாந்து தேசத்தில் (Holland) தூரத்தில் இருக்கும் வஸ்துவை சமீபத்திலிருப்பதுபோல் காட்டும் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாய்க் கேள்விப்பட்டுதான் அம்மாதிரி ஒரு கருவி தன் புத்தியினால் கண்டுபிடிக்க உத்தேசித்தார். ஒரு ஈயக் குழாயில் இரண்டு மூக்குக் கண்ணாடியின் வில்லைகளைப்போன்ற வில்லைகளை



ஒருவிதமாய் அமைப்பதால் தூரத்திலிருக்கும் சிறிய வஸ்து பெரிது செய்யப்பட்டுக் காட்டும் ஒரு கருவியைச்செய்தார். அதற்குப் பிறகு அதிக நுட்பமான வஸ்துவையும் சமீபத்திலிருப்பதுபோலவும் பெரியதாயும் எடுத்துக் காட்டும் டெல்லெஸ்கோப் (Telescope) என்னும் தூரதிருஷ்டிக் கண்ணாடியைச் செய்தார். இப்பொழுது தான் அக்கண்ணாடியின் உதவியால் மற்றொரு பூமிபோன்ற சந்திரனையும், அதிலுள்ள மலைகளையும் பள்ளத்தாக்குகளையும், மற்ற நட்சத்திரங்களின் அமைப்பையும், முக்கிய கிரஹங்களையும், அவைகளின் சுற்று கிரஹங்களையும், இன்னும் ஆகாயத்திலுள்ள வஸ்துக்களையும், அவைகளின் பெருமையையும், கவனித்து பார்க்க ஆரம்பித்தார். இவருடைய பெருமையைக் கேட்டு அநேகம் ஜனங்கள் இவர் வானஆராய்ச்சி செய்வதைப் பார்க்க அங்கேவந்தார்கள். இவரை இவர் திறமைக்கு வெகுமதியாக காலேஜில் ஆயுள் பரியந்திரம் உபாத்தியாயராக ஏற்படுத்தினர்கள்.

ஆனால் ப்ளாரென்ஸ்ராஜா தன்னுடைய அரண்மனை கணித சாஸ்திரியாக ஏற்படுத்தி இவரை இவர் சொந்த ஊருக்கு அழைத்துக்கொண்டான். இனி இவருக்கு வானசாஸ்திரத்தில் ஊக்கம் அதிகமாயிற்று. ஆனால் சீக்கிரத்தில் கஷ்டம் இவருக்கு ஏற்பட்டது. எப்படியெனில் இவர் ஆராய்ச்சிக்குமேல், பூமி ஸ்திரமில்லாமல் சூரியனைச் சுற்றிவருகிறதென்றும், சூரியன் தான் ஸ்திரமாயிருக்கிறதென்றும்சொல்ல ஆரம்பித்தார். இது அக்காலத்துஜனங்களுக்கு புதிதாயிருந்தமையால் அவர்களுடைய மடாதிபதிகளெல்லாம் ஒரு சபைகூடி அதில் கெலிலியோ சொல்வதெல்லாம் பொய்யென்றும், இனிமேல் அவர் அம்மதிரி எண்ணத்தை விட்டுவிட்டு அதை ஒருவருக்கும் உபதேசிக்கக்கூடாதென்றும், உபதேசித்தால் அவருக்கு பெருத்த கடினகாவல் விதிக்கப்படுமென்றும் தீர்மானித்தார்கள். கெலிலியோவும் உயிருக்கு பயந்துதான் தன் எண்ணத்தை ஒருவருக்கும் உபதேசிப்பதில்லையென்று ஒப்புக்கொண்டார். இத்துடன் நில்லாமல் அவர் பதினாறு வருஷகாலம் சிறமப்பட்டு வானசாஸ்திரத் தேர்ச்சி யடைந்து கடைசியில் பூமி சூரியனைச்சுற்றி வருவதாய் நிரூபித்து ஒரு புஸ்தகம் எழுதினார். ஆனால் அந்த புஸ்தகம் பொய்யென்று சொல்லி கெலிலியோ ரோம் (Rome) என்னும் ஊருக்கு தருவிக்கப்பட்டு அங்கே கட்டாயத்தின் பேரில் பூமி ஸ்திரமென்றும், சூரியன் தான் 24-மணி காலத்திற்கு ஒருவிசை பூமியைச் சுற்றி வருகிறதென்றும் சொல்லி சத்தியம் பண்ணும்படி செய்யப்பட்டார். இவரை 4-நாள் ஜெயிலில் வைத்திருந்தார்கள். பிறகு விடுவிக்கப்பட்டு அந்த ஊரிலேயே ஆறுமாதம் இருக்கும்படி செய்யப்பட்டார்.

பின்பு ஊருக்கு வந்ததும் அவருடைய அருமையானவும், அன்புள்ளவுமான குமாரத்தியை யிழந்தார். இந்தப் பெண்மணி வெகு புத்திசாலி, பிதுருவாத்சல்யமுள்ளவள். கெலிலியோவின் வயது சென்ற காலத்தில் இவள் தாப்பனுக்கு செய்திருக்கும் சிசுருஷைகளைச் சொல்லிமுடியாது. சிறியோர்களெல்லாம் இந்த பெண்மணியைப்போல் பெற்றோர்களுக்கு பணிவிடை செய்தால் தான் அவர்கள் கடமையை சரியாய் செய்வர்களாவார்கள். இவருடைய எழுபதாவது வயதில் தான் ஆங்கில மகாகவி மில்டன் என்பவர் இவரைப்போய் தரிசித்துவந்தார். இரண்டு வருஷத்திற்கெல்லாம் திருஷ்டி மங்கிவிட்டது. 1642ம் வருஷமாகிய அவருடைய எழுபத்தெட்டாம் வயதில் இவர் சுவர்க்கலோகப் பிராப்தியடைந்தார்.

உலகஜனங்களுக்கு பல நல்ல விஷயங்களைக் கண்டுபிடித்து அதினால் நன்மையைச் செய்து, ஜனங்களுடைய ஞான அபிவிர்த்திக்கு சாதகமாய் பல

விஷயங்களைப் போதித்து, அவர்களிடத்தில் குடிகொண்டிருந்த முட்டாள் கொள்கைகளைத் தப்பென்று ரூபித்துக் காட்டி, அதின்பொருட்டு கஷ்டத்தை தாங்களும் அனுபவித்த பரோபகாரம் செய்த மகான்களில் கெலிலியோ ஒருவர். சிறுவர்களும் சிறுமிகளும் புத்தியை சரிவர நல்வழியில் உபயோகித்து உண்மையையே நாடி உழைக்கும் பட்சத்தில் சுயநன்மையை அடைவதுடன் பரநன்மையையும் விர்த்தி செய்வார்கள்.

B. V. சேஷாத்ரி ஸர்மா.

## FUN & LAUGHTER RAJA'S DIARY.

## ராஜா டைரி.

இன்று எங்கள்வீட்டுக்கு மனோஹரர்என்ற ஒருசிநேகிதர்வந்திருந்தார். அவர் ஆரணிக்கோட்டை திவான் குமாரராம். ஆள் மிகவும் வாட்டசாட்டமாய்த்தான் காணப்பட்டார்; ஆனால் மூளை என்னும் விஷயம் மாத்திரம் பூஜ்ஜியம்தான்போல் தோன்றிற்று. அவர் பேசும் பொழுதாவது சிரிக்கும் பொழுதாவது வாயில் பளீர் பளீர் என்று என்னமோ தெரிந்தது. தவிர தங்கக்கட்டு கட்டிய கொஞ்சம் மங்கலான கருப்பு மூக்குக்கண்ணாடி ஒன்றை எப்பொழுதும் எடுக்காமல் போட்டுக்கொண்டே யிருந்தார். இன்றுசாயங்காலம் அவர் ஹாலில் ஆநந்தாவுடன் பேசிக்கொண்டிருக்கையில் நான் அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தேன். சுபாவத்தில் நம் பற்களுக்கு நடுவில் சிவப்பாய் மாத்திரமிருக்க அவர் பற்களின் நடுவில் தங்கம்போல் மின்னுவதற்கு காரணம் என்னவென்று அவர் பேசும்பொழுது அவர் வாயையே நான் கவனிப்பதைப் பார்த்த என் தமக்கை ஆநந்தா என்னை அழைத்து அம்மாதிரி புதிய மனிதர்களை உற்றுப் பார்த்தல் நன்நடக்கைக்கு அடையாளமல்ல வென்று சொல்லிவிட்டு என்னை படிக்கப்போகச் சொன்னாள். நான் உடனே போய் ஒரு புஸ்தகத்தை எடுத்துக் கொண்டுவந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, விரித்துவைத்த புஸ்தகம் மாத்திரம் கையிலிருக்க அவர் முகத்தையே நோக்கியவண்ணமாய் கொட்டாத கண்ணுடனும், திறந்த வாயுடனு மிருந்தேன். என்னைப்பார்த்து அவர் புன்சிரிப்புடன் "பையன் வெகு தமாஷாய்க் காணப்படுகிறான்" என்றார்.

"உம்முடைய பற்களைப்பார்க்கப் பார்க்க எனக்கும் வெகு தமாஷாய்த்தானிருக்கிறது" என்றேன்.

"ராஜா! என்ன போக்கிரியா யிருக்கிறாய். அப்பாவின் புஸ்தக அறையில் போய்படி. இல்லாவிடில் அம்மாவிடம் சொல்லுவேன்" என்றாள் ஆநந்தா.

சரி, நான்போகவேண்டியிருந்ததால் வெளியே போய்விட்டேன். ஆனால் அவரைப் பாராமலிருக்க என்னால் முடியவில்லை யாகையால், சமையல் அறைக்



குள் போய் ஆநந்தா வாங்கிவரச்சொன்னதாகச்சொல்லி ஒரு தட்டில் சிற்றுண்டியும் ஒருபேலாவில் காப்பியும் வாங்கிக்கொண்டுபோய் என் தாயார் அனுப்பியதாய் அவரிடம் சொல்லி ஒருசிறு மேஜையை அவர் சமீபத்தில் போட்டு அவைகளை வைத்து விட்டு அங்கேயே நின்று அவர் கண்களையும் பற்களையும் மறுபடியும் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் காப்பியை மாத்திரம் சாப்பிட்டு விட்டு, தன்பற்கள் எங்கே எனக்கு மறுபடியும் தெரிந்து விடுகின்றனவோஎன்ற பயத்தால் சிற்றுண்டியை சாப்பிடவேயில்லை. இதுவும் நம்அதிர்ஷ்டம் தான் என்று சிற்றுண்டித்தட்டை அவர் பார்த்த வண்ணமாகவே சீக்கிரத்தில் காலி செய்துவிட்டேன். அவர் கண்ணுக்கு கருப்புக் கண்ணாடிபோட்டுக் கொண்டிருக்கும் காரணம் மாத்திரம் தெரியவில்லை. அவரோ கண்ணாடியை எப்பொழுதும் கழட்டமாட்டார்போல் தோன்றிற்று. ஆகையால் அதற்கு ஒரு உபாயம் செய்யவேண்டுமென்று எண்ணிக்கொண்டு வெளியே போய்விட்டேன். மெதுவாய் ஆநந்தா அறையில் போய் இரண்டு சிறிய அத்தர் சீசாக்களை எடுத்துக்கொண்டேன். அவைகளிலிருந்த அத்தரைக்கலந்து ஒரு சீசாவில் கொட்டிக்கொண்டு மற்றொன்றைக் காலிசெய்து அதில் என் தகப்பனார் மருந்துபெட்டியிலிருந்து அமோனியா (Ammoniah) திராவகத்தை எடுத்துகொட்டிக்கொண்டு ஹாலுக்கு வந்து மனோஹரரிடம் போய் அத்தர் சீசாவைத்திறந்து அவர் மூக்கினருகில் கொண்டுபோய் வாசனை காட்டி வாசனை எப்படியிருக்கிறது என்றேன். அவர் நன்றாயிருக்கிறது என்றார். அதை என் மூக்கினருகில் வைத்துக்கொண்டு நன்றாய் உரிந்து காட்டி, இப்படி யல்லவோ வாசனை பார்க்கவேண்டுமென்றேன். ஆனால் இங்கே கொண்டுவா நன்றாய் முகர்ந்து பார்ப்போம் என்றார். உடனே அமோனியா (Ammoniah)சீசாவைத் திறந்து அவர் மூக்குக்கு வெகு சமீபத்தில் கொண்டுபோனதும் அவர் அதை தீர்க்கமாய் உறிஞ்சி முகர்ந்ததும் திராவகத்தின் காரம் சிரசுக்கேறி கண்ணிலும் மூக்கிலும் தாரைதாரையாய் நீர் பெருகி கண்ணாடியும் மங்கிவிட்டது. அவர் அதை கழட்டி மேஜையின்மேல் வைத்துவிட்டு கண் துடைக்கையில் அதை எடுத்து என் சட்டைப்பையில் ஒளித்துவைத்துக்கொண்டேன். அவர் கண்ணை நன்றாய்ப் பார்க்குங்கால் அவருக்கு கருப்புக்கண்ணாடியின் தேவை அதிகமென்றே தெரிந்தது. ஏனெனில் அவர் பார்வையோ வக்ரப்பார்வை. ஆநந்தாவைப் பார்த்து "நீ மனோஹரர் மாதிரி பார்க்கமுடியுமா" வென்றேன். அவள் என்னை வெளியே போவென்றாள். உடனே வெளியே வந்து மூக்குக் கண்ணாடியை நான் போட்டுக்கொண்டு என் தாயாரிடம் போய் "அம்மா! என் தகப்பனாருக்கு என்ன உத்யோகம் என்றேன். "அவர் ஒரு பெரிய வக்கீல்தார்" என்றாள். "இந்தக்கண்ணாடி என்முகத்திற்கு நன்றாய் இருக்கிறதா" என்றேன்.

எங்கே எனக்கொன்று உடனே வாங்கித்தரச் சொல்லுவேனோவென்று பயந்து "உனக்கு நன்றாயில்லை" என்றாள் என் தாயார். "ஆனால் திவான் குமாரருக்குத் தான் நன்றாயிருக்குமோ; அவர் தான் இம்மாதிரி ராஜபார்வை பார்ப்பாரோ" வென்று சொல்லிக்கொண்டு மனோஹரர் பார்ப்பதுபோல் வக்ர பார்வை பார்த்தேன். என் தாயார் சிரித்துக்கொண்டு அம்மாதிரி மற்றவர்களை ஏளனம் செய்யக்கூடாதென்று சொன்னாள். ஆநந்தாவும் நான் கண்ணாடியைத் தெரியாமல் எடுத்து வந்ததாக என் தாயாரிடம் வந்து சொல்ல, தாயார் என்னை கோபித்துக்கொண்டு கண்ணாடியை வாங்கி ஆநந்தாவிடம் கொடுத்து மனோஹரருக்கு அனுப்பிவிட்டாள்.

நான் வெளியே வந்து அங்கே படுத்திருந்த மனோஹரருடைய நாயினுடன் கொஞ்சம் விளையாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது மனோஹரரும் ஆநந்தாவும வெளியே வரக்கண்டு பக்கத்திலிருந்த தட்டியின் பின் ஒளிந்துகொண்டேன். விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்கு போவதற்கு முன் நாளையதினம் சாயங்காலம் எட்டுமயில் தூரத்திற்கப்பாலிருக்கும் எங்கள் பூந்தோட்டத்திற்கு ஆநந்தாவுடன் மனோஹரரும் போவதாய் சொன்னார். "ஆ" ராஜாவுக்கு மாத்திரம் இச்சங்கதி தெரியக்கூடாது என்றார். ஆநந்தாவும் சரியென்று ஒப்புக்கொண்டு அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டாள். இம்மனோஹரருக்கு என்மேல் ஏன் இவ்வளவு வருத்தம்? ஏதோ என் சந்தேகத்தை தீர்த்துக்கொண்டால் இதற்காக இவ்வளவு கோபமா? இருக்கட்டும், ஆநந்தாவை இவர் விவாகம் செய்துகொள்வதை நான் பார்த்துவிடுகிறேன். டைரியே! நாளை என்ன செய்யப்போகிறேன் பார்.

மறுநாள் சாயங்காலம் மனோஹரர் ஒரு அழகிய டாக்கார்ட் (DogCart) வண்டியில் மயிரடர்ந்த தன் நாயையும் வைத்துக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தார். வண்டியை வெளியே நிறுத்திவிட்டு என் தமக்கையை அழைத்துவர உள்ளே சென்றார். அவர் வரவை எதிர் பார்த்துக்கொண்டு அங்கே ஒரு மறைவிடத்தில் காத்துக்கொண்டிருந்த நான் வெளியே வந்து வண்டியில் கட்டியிருந்த நாயை அவிழ்த்துக்கொண்டுபோய் குதிரை லாயத்தில் கட்டிவிட்டேன். பிறகு முன்னமேயே தயாரித்து வைத்திருந்த என் தகப்பனார் வண்டியில் கால்வைக்குமிடத்தில் போட்டிருந்த ஒரு மயிரடர்ந்த ஆட்டுத்தோலை எடுத்துக்கொண்டு வண்டியிலேறி உட்காரும் பெட்டியின் அடியில் பதுங்கிக்கொண்டேன்.

மனோஹரரும் ஆநந்தாவும் வந்ததும் வண்டியில் நாயைக்காணமையால் நாயைத் தேடும்படி ஒரு ஆளுக்கு உத்திரவு கொடுத்துவிட்டு இருவரும் வண்டியேறி சவாரி போனார்கள். உள்ளே பதுங்கி உட்கார்ந்து கொண்டிருப்பது கஷ்டமாயிருந்தது. காலோ மறுத்துப்போயிற்று. உடம்பெல்லாம் வேர்த்துப் போய்விட்டது. ஏன் வண்டியி லேறிக்கொண்டோமென்று இருந்தது. என் தமக்கையும் மனோஹரரும் விடாமல் பேசிக்கொண்டே வந்தார்கள். மனோஹரரும் ஆநந்தாவைப் பார்த்து ஒரு குழந்தையைப்போல் சண்ணேயென்றும், செல்லமேயென்றும், எவ்வளவோ இனிமையாய் பேசிவந்தார். என் காதும், கன்னமும் அவள் கால்களின் சிறுநகத்தால் அனுபவிக்கும் ஆநந்தத்தை இவர் காதும், கன்னமும் அனுபவிக்கும் பட்சத்தில் இவர் இம்மாதிரி பேசுவாரா என்று எண்ணிக்கொண்டேன்.

வெகுதூரம் பூந்தோட்டம் சென்று திரும்பி வருகையில் அடியில் பதுங்கியிருப்பது கஷ்டமாயிருந்தமையால் மெதுவாய் என் தமக்கையின் காலைப் பிறாண்டினேன். அவள் திடுக்கிட்டு "ஐயோ! இதென்ன நாய்போலிருக்கிறதே" என்று பயந்து எழுந்திருந்தாள்.

"பயப்படாதே என் உயிர்போனாலும்-என்று சொல்லிக்கொண்டே மனோஹரர் அடியில் காலை நீட்டினார். உடனே அவர் காலை கெட்டியாய் கடித்தேன், தவிர என்னை மூடிக்கொண்டிருந்த ஆட்டுத்தோல் அவர் காலில் பட்டதும், மயிரடர்ந்த அவருடைய நாய் தான் அடியில் ஒண்டியிருந்து வெறிகொண்டு



அவரை இம்மாதிரி கடித்ததென்று நினைத்துக்கொண்டு "ஐயோ வெறி நாய் என்னை கடித்துவிட்டது. எனக்கு பயித்தியம் பிடித்துப்போகும்" என்று அலறிக்கொண்டு வண்டியினின்றும் கீழே குதித்துவிட்டார்.

தன் உயிர்போனாலும் என் தமக்கையை கைவிடாமல் காப்பாற்றுவதாய் சொன்ன வீரருடைய தைரியத்தை நீங்களே பாருங்கள்!

நானும் இதுதான் சமயமென்று என் சட்டைப் பையில் தயாராய் வைத்துக் கொண்டிருந்த பட்டாஸ் (Crackers) கட்டு ஒன்றை ஒரு தீக்குச்சி கொளுத்தி குதிரையின் காலண்டையில் போட்டேன். அதுவும் பட்டாஸ் சப்தத்தால் வெறுண்டு ஓட ஆரம்பித்தது. என் தமக்கை வீரிட்டுக்கத்துவதையும், மனோஹரர் கீழேவிழுந்து புரண்டெழுந்து பயந்து வெளுத்து விழிப்பதையும் குதிரை வாயுவேக மனோவேகமாய் ஓடுவதையும் பார்க்க வெகு விநோதமாயிருந்தது! கடிவாளத்தை எட்டிப்பிடித்து குதிரையை நிறுத்தலாமென்றாலோ கடிவாளம் கீழே நழுவிப்போய்விட்டது. குதிரையும் வேகமாய் ஓடியது. வெகுதூரம் ஓடி ஊருக்குள் வந்ததும் ஜனங்கள் குதிரையைப் பிடித்து வண்டியை நிறுத்தினார்கள். குதிரை நல்ல குதிரையாகையால் நேர்வழியிலேயே ஓடினதால் நாங்கள் கீழே விழாமல் தப்பினோம்.

என் தமக்கைக்கு என்மேல் உண்டான கோபத்திற்கும் வருத்தத்திற்கும் அளவேயில்லை. என்னை எவ்வளவோ திட்டுவதற்காக ஆரம்பித்து ஒன்றும் சொல்லாமல் திகைத்து நின்றுவிட்டாள்.

நானும் அவளைப்பார்த்து நகைத்தேன். "வீட்டுக்குள்வா, தகுந்த வெகுமானம் கொடுக்கச் சொல்லுகிறேன்" என்றாள் என் தமக்கை. "அதில் மனோஹரர் பங்கு எவ்வளவு?" என்றேன். எல்லாரும் கொல்லென்று சிரித்தார்கள்.

உடனே மனோஹரர் ஞாபகம் உண்டாக வண்டியை ஒரு ஆள்வசம் அனுப்பி வழியில் விழுந்து கிடக்கும் மனோஹரரை அழைத்துவரும்படி சொல்லிவிட்டு என்னை வீட்டுக்குத் தள்ளிக்கொண்டு போனாள். வீட்டில் போஜனசமயமாயிருந்தது. ஆநந்தாவிடமிருந்து சமாசாரம் முழுமையும் தெரிந்துகொண்ட என் தகப்பனார் "இவ்வித துஷ்டத்தனம் சகிக்கமுடியாது. நான் வரும்வரையில் என் அறையில் போயிரு" என்றார்.

"என்னசெய்வது? இம்மாதிரி சதா கஷ்டத்திற்கே ஆளாகவேண்டியிருக்கிறதே இன்று வண்டியில் பதுங்கியிருந்ததே உடம்பெல்லாம் வலிக்கிறது! இன்னும் என் தகப்பனார் கைப்பிரம்புடன் என்னை கவனிப்பாராகில் வலி அசாத்தியமாயிருக்குமே! இக்கண்டத்தினின்று தப்புவது எப்படி? நல்லது இருக்கட்டும். ஒரு யோஜனை தோன்றுகின்றது. அதுவும் நல்லவழிதான். இதோ வேலைக்காரப்பையன் வருகிறான். அவனும் என்தோழன்தான். என் சொற்படி கேட்பான். உடுப்புவைக்கும் பீரோவின் கீழ் அறையில் நான் ஒளிந்துகொண்டு மூச்சுவிடுவதற்குமாத்திரம் கொஞ்சம் இடம் விட்டுவிட்டு அதை மூடிவிடும்படி சொல்லுகிறேன். தகப்பனார் வந்து தேடுவார். பிறகு வேடிக்கை பார்ப்போம்.

ஐயோ! அசந்தர்ப்பமாய் தும்பல் (Sneezing) ஒன்று வாராமலிருந்தால் விளக்கு போட்டுத் தேடிப்பார்த்தாலும் என் தகப்பனார் என்னைக் கண்டு பிடித்திருக்க

மாட்டார். நாம் கோராமலிருக்கும் சமயத்திலும், நாம் வரவேண்டாமென்னும் சமயத்திலும் ஏன் மனிதர்களுக்கு தும்பல் (Sneeezing) வருகிறது? ஒரு தும்பல் எனக்கு விளைத்ததீங்கை என்னென்று சொல்லுவேன்?

நல்லது, இன்னும் இரண்டு கட்டு பட்டாஸ் (Crackers) பாக்கியிருக்கிறது, பழிக்குப் பழிவாங்குவதென்றால் வெகு சந்தோஷமாய்த் தானிருக்கிறது—தகப்பனார் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு "இடிமுழக்கமா, அல்லது பூகம்பமா" என்று பயந்து போகாவிட்டால் என் பெயரென்ன ராஜாவா!

* * * *

(இன்னும் வரும்) ☞ பி. வி. சேஷாத்திரி சர்மா.

# சந்திரவதனன்.

ஓர் நாவல்.

அவள் மறுபடியும் என்னை விழித்துப்பார்த்தாள். அப்பார்வை அவள் மயக்கந்தெளிந்த பார்வையே. அப்பார்வையால் தன் கடமை என்னிடத்து அளவு கடந்த நன்றியைப் பாராட்டுவதாய்க் காட்டியது. அப்பார்வை எனக் கச்சம் தந்தது. நான் அம்மணி அதோ உமது தமக்கையார் மூர்ச்சித்து கிடக்கிறார். அவரை உபசரிக்கவேண்டுமே என்றேன். என் தமக்கைக்குத் தீங்கில்லையே என்றெழுந்தாள். இல்லையென்று நானும் எழுந்தேன் அச்சமயம் பயிரிடுவோன் அலங்காரி யம்மையை தன் மார்போடு சாத்தி உபசரித்துக் கொண்டிருந்தான்.

கமலவதனி சடுதியில் என்னிருகரங்களையும்பற்றி சந்திரவதனா உடலும் உயிருமளித்த உனக்கு வேறு கைம்மாறென்னை? இவ்வுடலு முயிரும் சத்தியத்திலுன்னுடையதேயென்றாள். இவ்வார்த்தை எனக்கு நடுக்கத்தைத் தந்தது. வா, தமக்கையை ஆதரிப்போமென்றாள். அங்கு சென்றோம். அச்சமயம் அலங்காரியார் கண்விழித்துப்பார்த்தார். கமலவதனி அவர்க்கு ஆறுதல் கூறினாள். விவசாயனும் அம்மா நீங்கள் பயப்படவேண்டியதில்லை யெழுந்திருமென்றான். அவரும் எழுந்தார். அப்போது குடித்தனமுடையான் உங்களிருவருயிரையும் இச்சிறுவன் தன்னுயிர் கொடுத்துக் காத்தான். இவன் சாகசத்தால் மூவரும் பிழைத்தீர்கள். கொஞ்சம் தவறினால் இவன் குடல் கிழிபட்டே கிடப்பான். அவனுக்கு நீங்கள் நன்றி பாராட்டக் கடமைப் பட்டீர்களென்றான்.

கமலவதனி தன் குளிர்ந்த பார்வையால் நன்றியை வெளிப்படுத்தினள். அலங்காரியார் தங்கையோடு மாளிகை வந்து தேத்தண்ணீருருந்திப் போகும்படி கூறினர். நான் மறுத்து கடிதத்தைக் கொடுத்துவருவதாய்ச்சொல்லி குடித்தனக்காரனை அலங்காரியார் மெத்த சிரமமாயிருத்தலால் அவரைக் கைப்பற்றாய் மாளிகை கொண்டுபோய் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டேன். அவனும் ஒப்புக்கொண்டான். நானும் வேகமாயோடி கடிதத்தைக் கொடுத்து தபாற் கடிதத்தையும் போட்டு மாளிகை திரும்பினேன்.

நான் வாயிற்படி சென்றேன். சரசவல்லி யெதிரில் நின்றாள். என்னைக் கண்டதும் என் கையைப்பிடித்துக்கொண்டு அடே நீ யொரு வேடிக்கைக்காரப்பயல். உன் தையிரமென்னடா உன் பல்லொளியும் முகவழகும் விளங்குவதுபோல் உன் வயது மேறியிருந்தால் நானுன்னை கல்யாணம் செய்துகொள்ள பிரியமடையாதிருக்க முடியாது.



இருப்பினும் எனக் கோருத்தம சகோதரன் வாயென்றழைத்துப்போய் நல்ல தேநீர் தன் கையால் வைத்துத் தந்தாள்.

நான் வெளியில் வந்து என்னறைக்குள் நுழையப்போனேன்; அறைவாசற்படியிற் பேச்சழகி என்னை வழிமறித்தாள். அவள் பின் சரசவல்லியும் வந்தாள். அவளென்னைத் தடுப்பதைக் கண்டு திகைத்து நின்றாள். சரசவல்லியை பேச்சழகி பார்க்கவில்லை. என்னைப்பார்த்து அந்த பச்சைச்சிரிப்புக்காரச் சிறுக்கியுடன் கூடிப் பல்லிளிக்கும் உன்னைப்பார்க்கிறேன். நீ ஏதோ எஜமானியைக் காப்பாற்றிவிட்டதாய் நினைத்துப் பெருமையடையாதே. உனக்கு நான் சத்துரு. உன்னை நான் கெடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டுப்போனாள். நானொன்றுங் கூறவில்லை. சரசவல்லி இவையெல்லாங் கேட்டிருந்தாள். பின் பேச்சழகி சரசவல்லியைக்கண்டதும் முகவாட்டமாய்ப் போய்விட்டாள்.

சரசவல்லி என்னிடம் வந்து சந்திரவதனா இவையெல்லாம் என்ன காரணத்தால் விளைந்ததென்றாள்; நான் முன்னடந்தபடி கூறினேன். அவள் கேட்டு இவ்வற்ப குணமுடையாள் ஏன் நம்மை வெறுக்கிறாள்? அவளுக்கு நாம் செய்த தீங்கென்ன? இன்னும் என்ன செய்வாள் பார்ப்போமென்று போயினள்.

கமலவதனியும் களைப்படைந்திருப்பதாய்த் தெரிந்தது. அலங்காரியார் மெத்த நலிப்பட்டுப் படுத்தார். வயித்தியன் வந்து பார்த்து சுரம் கடுமை யென்றான் மறுகாலமே ஆகாரமுண்டதும சரசவல்லி யென்னை யழைக்கத் தோட்டத்தின் பின்புரம் ஓர் மரத்தின் நிழலில் இருவரும் உட்கார்ந்தோம். அவள் சற்று என் முகத்தைப் பார்த்து சந்திரவதனா உனக்கு என் எஜமானி நேற்று நீ செய்த பேருதவிக்கு உபசாரம் சொல்லும்படி சொல்லினர். அதற்காக நானிங்குன்னை யழைத்துவந்தேனென்றாள். நான் செய்தது ஒன்றும் உபகாரமல்லவே. ஆன்மாக்கள் ஒருவர்க்கொருவருபகரித்துக்கொள்ளவேண்டியது ஈஸ்வராக்கினை. அன்றியும் நான் வேலை பார்க்கும் வீட்டெஜமானிகள் அவர்கட்கு நான் நடந்தது கடமையன்றி உபகாரம் எப்படியாகுமென்றேன். அதற்கவள், அடே நல்ல நீதிவாக்கியமடா பேசினாய்! இனிமேல் யாரேனும் உனக் குபகாரமாய் சம்பளம் கொடுத்தால் உபன்யாசம் பண்ணத்தலைப்படுவாய்போலிருக்கிறது. அது கிடக்கட்டும். ஓர் வேலைக்காரன் அவன் கடமையை மெச்சத்தக்கவிதமாய் நடந்தால் அதனை யெஜமானாயிருப்பவர்கள் கவனித்து நடப்பது அவர்கள் கடமை யல்லவா? என்றாள்.

ஆம், அவர்கள் கடமையென நினைத்தால்தான் என்றேன். அவள் அப்படி நினைத்து நடக்கும் நல்ல துரைசானியல்லவா ? என்னெஜமானி யென்றாள். அந்த வார்த்தை நாம் சந்தோஷமா யொப்புக்கொள்ள வேண்டியதென்றேன். அவள் முகம் சற்று மலர்ச்சியடைந்தது. பின் என்னைப் பார்த்து, சந்திரவதனா! இரவெல்லாம் என்னெஜமானி உன்னைப்பற்றிய ஒவ்வொரு விஷயமும் தவறாது கேட்டனள். உன் விருத்தாந்தங்களை நீ சொல்லியபடி அவளுக்குச் சொன்னேன். இடையே என்னைப்போலவே அவள் கண்ணங்களிலும் கண்ணீரோடியது உன் பிறப்பைப்பற்றிய சந்தேகம் ஏதோ ரகசியமிருத்தல்வேண்டும். அது ஓர் காலத்து வெளிப்படையாகுமாறு உன் பெற்றோருன்னை ஏற்றுக்கொள்ளுமாறும் கடவுளைப் பிரார்த்தித்தோம். என்னெஜமானி உன் விஷயத்தில் பெருமகிழ்வு கொண்டிருக்கின்றனர். அவர் தன் நன்றிபாராட்டலுக்காக இதோ இதனைத் தந்தனர். நீ பெற்றுக்கொள்ளவேண்டுமென்று என் கையில் முத்திரித்த ஓர் கடிதப்பையைத் தந்தனள்.

நான் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். சந்திரவதனன் செய்த பேருபகாரத்திற்காக நன்றிசெலுத்தும் கமலவதனி என்றெழுதிய ஓர் கடிதமும் அதனுடன் நூறு ரூபாய் நோட்டுகளில் ஐந்திருந்தன. என்முகம் மாறுபட்டதைக் கண்டு அவளாச்சிரியப்பட்டு என்னவென்றாள். நான் நோட்டுகளைந்தையும் அவள் கையிற் கொடுத்து இக்காரியத்திற்கு நான் தகுதியற்றவன். என் டெஜமான் வீட்டிற்கு விருந்தினராய் வந்திருக்கும் அவர் கையிலிப் பெருங்காரியத்தைப் பெறக்கூடாது. அப்பெருங்காரியத்தைப் பெற நான் தகுதியற்றவன். தயவுசெய்து அவர்கட்கு மனவருத்தமின்றி இந்நோட்டுகளைத் திருப்பிக்கொடுக்கவேண்டியது உன்கடமையாய்ப் பிரார்த்திக்கிறேனென்றெழுந்தேன். அவளென்கையைப் பிடித்துட்காரவைத்து நீ என்னடா ஓர் விளையாட்டுப்பயலாருக்கிறாய்! இப்படி செய்வது நியாயமா? வென்றாள். சரசவல்லி நீ அக்காரியத்தில்

என்னைப் பிடிவாதம் செய்யாதிருக்க வேண்டுகிறேனென்றெழுந்து போனேன். அவ
ளும் பதிற் கூறாதுபோயினள். அன்று நான்கு மணி மாலை. செல்வசாதனர் வெளியே
போயினர் அலங்காரி நோயறையில் பேச்சழகி யிருந்தாள். சோமஸ்பரியும் பரிசாரகனும்
சமையற் கட்டிலிருந்தார்கள். என்னறைக்குச் சரசவல்லி வந்து சந்திரவதனா கமலவதனி
யார் தன்னறையிலிருக்கிறார். அவருனக்கு நன்றி சொல்லவேண்டுமெனக் கருதுகிறார்.
அவரைக்காக்க வைக்காது போவென்றாள்.

நானும் மனக்குழப்பமாய் அவளறை வாயிற்படியிற் சென்றேன். ஓர் நாற்காலியி
லுட்கார்ந்தவள் சடிதியிலெழுந்து என்கையைப்பற்றி உள்ளேயழைத்தாள். நானும் திப்பி
ரமைகொண்டு உள் சென்றேன். அவளென் கையைப் பிடித்தபடியே சந்திரவதனரே
உமக்கு நானுயிருமுடலும் கடமைபட்டவளென்பதற்கே உம்மையிங்கழைத்தது. உமது
விருத்தாந்தங்களைக் கேட்டபோது நானறிந்திருந்ததை விட விசேஷமாய் பணத்தை
மறுத்த பெருந்தன்மையாற் கண்டேன். உம்மை என் தமக்கை மாளிகைக்கு வண்டியிலி
றங்கியபோதே கண்டதும் என்மனம் உமதுவழிசென்றது. உமக்காகவே இக்கஷ்டமா
ளிகையிலித்தனை நாள் தங்கியது. உமது உத்தம குணங்களை உம்மையறியாமலே கவனி
த்துவந்தேன். என்மனதை உம்மிடமிருந்து திருப்ப முயன்றேன். அது நாளுக்குநாள்
விர்த்தியேயடைந்து அவ்வெண்ணம் வேரூன்ற நீரென்னுயிரையுங் காத்தீர். பணவிஷய
மாய் நேற்று உமது பெருந்தன்மையையுங் கண்டேன். இந்நிமிஷம் முதல் சத்தியத்தில்
எமதுடைமைகள் உம்முடையதே. நானிவ்வளவு துணிகரமாய்ப்பேசுவதாய் எண்ணாதீர்.
எவ்விதம் இவற்றை வெளியிடுகிறது? உம்மைப் பெறாதிருக்கின் அது என்னுயிரையு
முடலையு முண்ணும். இன்றுமுதல் நீரென்னழகிய கொழுநனன். நானுமதன்புடையாள்.
நாளைமூன்றுமணிக்கு எப்படியாவது அன்றென்னுயிர் காத்த வயல்புரம் வாரும், இங்கு
அதிகநேரம் உம்மோடு நான் பேசுவதால் என் வேலைக்காரி ஏதேனும் சந்தேகிப்பாள்
என்று கையைப் பிடித்து முத்தமிட்டு வெளியே அழைத்து வந்து விட்டு தான் கதவைச்
சாற்றிக்கொண்டு போயினள்.

நான் என்ஸ்வாதீனமின்றி என்னறைக்குவந்தேன். நான்கேட்டதெல்லாம் கனவோ
நினைவோ என்றெண்ணினேன். சற்றுநாழிகை ஆலோசனையின்பேரில் நினைவென்றே
கண்டேன். இது உண்மையாய் அவள் கூறிய வார்த்தைகள்தானா என்பதை யோசித்
தேன். அதுவும் உண்மையென்றே விளங்கியது. என்சுந்திரவதனியின் ஞாபகம்வந்தது.
அவள் என்னை வெறுக்காதிருந்தால் நானிவளை மறுத்தேயிருப்பேன். அவள் விசுவா
சத்தைம் பெறமுடியாதென்றமையால் இவள்வார்த்தைகள் தகுதியற்ற எனக்குப்
பொருந்துமோ எனயோசித்தேன். உண்மையில் இவளை நேசிக்கிறதாயென என் மன
தை விசாரித்தேன். அது சுந்தரி வதனியை நன்றாய் நேசிப்பதாய் கூறியதன்றி கமல
வதனியை வெறுப்பதாய்க் கூறவில்லை. கடைசியாய் கமலவதனி வார்த்தைக் கிணங்காம
லிருப்பதே நியாயமாய்த் தீர்மானித்தேன். நாளை அவள் குறிப்பிட்ட நேரத்தில் அவளை
இனி என் ஞாபகம் வைக்காமல் செய்ய எண்ணினேன்.

சரசவல்லி என்னை மறுபடிகண்டபோது அவளும் ஒன்றும் கேட்கவில்லை. நானும்
ஒன்றும் சொல்லவில்லை. அலங்காரியார்க்கு தேகம் குணப்பட்டது. இருப்பினும் நட
மாடமுடியவில்லை. மூன்றுமணிக்கு செல்வசாதனர் வழக்கம்போல் ஓர் கடிதம் கொடுத்
துக்கொண்டுபோகச் சொல்லினர். அதனை வாங்கிக்கொண்டு போனேன். முன் போன
வயற்பாதையின்பேரில் போனேன். அன்று இருவரைக் காப்பாற்றிய இடத்தில் நின்று
சுற்றிப்பார்த்தேன். என் பின்னால் கமலவதனி நெருங்கிவந்தனள். சந்திரவதனா நில் என்
றாள்.

அவள் சமீபத்தில் வந்ததும் நாம் நமது எண்ணம் கூடிவரும் வரையில் நீர் ஓர்
வேலைக்காரனாகவே நான் பேசவேண்டியிருந்ததற்கு மன்னிப்பீராக என்று அங்கு தனி
யே ஓரிடிந்த கட்டிட மறைவில் என்னை வரும்படி யழைத்துப் போயினள். நானும்
அசையும் யந்திரம்போல் அவள் பின் போனேன். ஓர் சுவர்மறைவில் எதிரெதிராய் இரு
வரும் உட்கார்ந்தோம். அவள் என் கைகளைப் பிடித்துக்கொண்டு அன்பரே உமது விசு
வாசத்தைப் பெறுதற்கே இத்தனைநாள் நான் காத்திருந்தேனென்பது நேற்று நான்
கூறினதல்லவா? நான் ஒரு சிற்றரசன் மகளென்பது உமக்குத் தெரியும். எனக்குச்



சுதந்தர எண்ணங்களைக் காட்டாமல், நீரென் உயிர்காத்ததற்காக உம்மை இந்நிலைமையி
னின்றும் மாற்றவேண்டுமென்று சிபார்சுசெய்து அரண்மனையில் ஓர்நல்லவேலை
தேடிவைப்பேன். நானும் இவ்விஷயத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்து உம்மைத் தகுந்த
வேலையிற் சேரும்வரையிற் சிபார்சு செய்வேன் - பின்னும்மை நான்விசுவாசிப்பதை
வெளிப்படுத்தின் அவர்கள் மறுக்கார்கள். உமது அளவு கடந்த படிப்பும் நற்குணமும்
உம்மைமேன்மைக்குக் கொண்டுவருமென்பது நான் திண்ணமாய் நினைக்கிறேன். என்
எண்ணங்கட்கு ஒப்புவீரா? என்னெண்ணம் நிறைவேறும்படி இணங்குவீரா என்றாள்,

அம்மணிநீங்கள்.— என்றேன். அவள்முகம் வாட்டங்கண்டது. இனிநாம் தனித்
திருக்கும்போது நான்உமக்குக் கமலவதனியே என்றாள். நானவ்வார்த்தைக்கு பதில்
கூறாது நீங்கள் ஓரரசகுமாரி நானொரு வேலைக்காரன் என்னுமுன், அவள்போதும்
உமது எண்ணம் தெரிந்துகொண்டேன். வேலைக்காரனென்ற எண்ணத்தை உம்மை
விட்டுநீக்கி ஓர் அரசகுமாரியை விசுவாசிக்கும் யோக்கியதை உமக்குண்டு என்று
நினைக்கும் தகைமையை செய்து வைக்க வேண்டியது என்கடமை. அதுவரையும் உம்மை
இனியொன்றுங் கேளேன். நான்மெத்த நாழிகை உம்மோடு பேசிக்கொண்டிருப்
பதையாரேனுங்கண்டால் நாம்யோசித்தபடி நடக்கமுடியாது தடைப் படினும் படும்,
என்று என்கைகளை இறுகப்பிடித்துக் குலுக்கிப்போயினள்.

நேற்றுநான் மெத்தக்கடுமையாய்ப் பேசிமறுக்க நினைத்தேன். என் செய்வேன்.
இனியகுரலும், அழகிய முகம் பரிதாபமாய் கூறும் வார்த்தைகளின் முன்னும் என்னி
லைமைக்கு எத்தனையோ ஆயிரம் பங்குகள் மேன்மையுடைய ஓரரசசெல்வி முன்னும்
என் தயிரமும் இயற்கையிலே கடுமைக்குணமில்லாது நான்பேசி முடிப்பதாய் சேகரி
த்து வைத்திருந்த கடுமை வார்த்தைகள் எப்படி என்னுள் மடியாமல் வெளிவரும்? அன்
றியும் என்சுந்திர வதனியின் அழகிய தோற்றம் என்னுள் நிலவரமாய் ஊன்றி நில்லாது
சஞ்சலத்தை தந்து கொண்டிருந்ததால் கமலவதனி வார்த்தைகள் என்செவியிலேற
யிடம் பெற்றது.

அவள் போனபின் நான் அவ்விடமிருந்து குறிப்பிட்ட யிடத்தில் கடிதம் கொண்டு
போய்க் கொடுத்துத் திரும்பி மாளிகை சென்றேன். பின்னொரு வாரஞ் சென்றது.
கமலவதனிக்கு விருந்து நடத்த தீர்மானித்தார்கள். அவளையு மவள் தந்தை வீட்டார்
அடுத்தவாரத்தில் எதிர் பார்ப்பதாய்க் கடிதம் எழுதினார்கள். அக்கடிதத்தின் பிறகு
விருந்தை நடத்த தீர்மானித்து மறுநாள் இரவு விருந்து குறித்து பக்கங்களிலுள்ள [illegible]
பகஸ்தர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. எங்கட்கு வேலைசாஸ்தியாயிருந்தது.
சரசவல்லி மறுநாட்காலமே செல்லூர் சென்று தன் எஜமானிக்கு ஏதோ சாமான்
வாங்கப் போவதாயும் இச்சமயம் என்னையழைத்துப் போகமுடியாமைக்கு வருந்துவதா
யும் கூறினள். பந்தோபஸ்திலிருந்த வெள்ளிசாமான்கள், நகைகள் முதலியவைகள்
வெளியிலெடுக்கப் பட்டன; இரவு கழிந்தது.

மறுநாட்காலமே யெழுந்தேன். அறைவிட்டு வெளியேவந்தேன். சரசவல்லி செல்லூ
ருக்குப் பயணமாய் எதிர்வந்தாள். அவள்முகம் வியாகூலமாய்க் காணப்பட்டது. என்
முகத்தைப்பார்த்து போனாள்-நான்எதிர் நின்று செல்லூருக்கு இவ்வளவுகாலமே பயண
மாயென்றேன். அவளென்னைக் கடுமையாய் விலகச் சொல்லி நீ யோர் [illegible]த்தை
யுள்ள அயோக்கியன், நீ ஸ்திரீகளுடன் ஸ்நேகம் செய்யத் தகுதியற்றவன். உன்கெட்ட
நடை இதுவரையும் வெளியாகாமையால் நானொரு சோதரிபோல் சிநேகம் செய்தேன்.

இனி என்னுடன் அறிமுகமாவது சம்பாஷணையாவது கூடாது என்று சொல்லிவிட்டு வேகமாய்ச் சென்றாள்.

எனக்கடங்காத் துயரமுண்டாயிற்று. நான்பிறர் வருந்தும் நடைகளையாவது பிறர் வெறுக்குங்குணங்களையாவது அனுசரித்தவனுமல்ல, அனுசரிக்கும் பிரியமுடையவனுமல்ல; ஒர்வேளை கமலவதனியின் சம்பாஷணைகளை ஒட்டுக் கேட்டிருப்பளோ? அப்படியிருப்பினும் அதில் நான்தேடிய பிசகொன்றுமில்லையே. வேறெக்காரணமும் என்னைவெறுப்பதற் கில்லையே. அவளைத்திரும்பவும் வழிமறித்து அநியாயமாய் குற்றஞ் சாட்டியதற்கு காரணம் கேட்பதென வெண்ணினேன். அதற்குள் வேகமாய் அவள் போய் விட்டபடியால் அவள் வருவதை எதிர் பார்ப்பது நலமென்று எண்ணியிருந்தேன்.

சமையலறைக்குப் போனேன். அங்குபரிசாரகனும் சோம்பேரியும் கையைமுறித்துக்கொண்டு கைதவறிப்போன யெதையோ தேடுவதாய்க் கண்டேன். அவர்களை என்னவெனக் கேட்டேன். போஜனத்திற்குரிய வெள்ளிசாமான்களில் சிலதைக்காணோமென்றும் அவைகள் அன்று நடக்கவேணடிய விருந்திற்காக வெளியிலெடுக்கப்பட்டனவென்றும் சொன்னார்கள்-இன்று காலமே எழுந்தது யாரென்றேன். சோம்பேரி மாளிகையில் ஒருவரு மெழுந்திருக்கு முன்னெழுந்தேனென்றான். நான் கதவு களெல்லாம் சாத்தப்பட்டிருந்தனவா வென்றேன். ஒர் சன்னல் கதவுகூட திறக்கப்படவில்லை; எல்லாம் நேற்றுநான் சாத்தியபடியிருந்த தென்றான்.

இதற்குள் வேலைக்காரரையழைக்கும் மணிச்சத்தம் கேட்டது. நானோடினேன். அங்கு செல்வசாதனரும், கமலவதனியும், அலங்காரியாரும் தங்கள் தங்கள் ஆசனத்திலிருந்தார்கள். பேச்சழகி தலைகுனிந்த வண்ணமாய் ஏதோ தைத்துக்கொண்டு அலங்காரியார்சமீபத்திலிருந்தாள். செல்வசாதனரென்னைக்கண்டதும் சந்திரவதனா கமலவதனியாரின் கையிலிருந்த மோதிரத்தை இரவு யாரோ கழற்றியிருக்கிறார்கள். அவர்சயனத்திற்குச் செல்லும்போது தம் கையி லணிந்திருந்தனராம். அதைப்பற்றி உனக்கேதேனும் தெரியுமாவென்றனர். நானாச்சரியத்துடன் மவுனமாயிருந்தேன். அவர் சந்தேகத்துடன் என்னகாரணம், ஏன்குழப்பமடைகிறாய்? சீக்கிரம்சொல் என்றார். ஐயா மோதிரத்தைப் பற்றியானொன்று மறியேன். சமையற் கட்டில் வெள்ளி சாமான்களைக் காணோமென்று தேடிக்கொண்டிருந்தார்கள். அதனால் திருடர் ப்ரவேசமாயிருந்திருக்கவேண்டு மென்றெண்ணினேன் என்றேன். வெள்ளிசாமான்களையும் காணோமா? அப்படியாயின் உண்மையில் திருடர் பிரவேசமாகியிருக்கவேண்டும். ஓடு சந்திரவதனா மற்றவர்களையும் இங்குகொண்டுவா. நானோடிமற்றவர்களையும் அழைத்துவந்தேன். சோம்பேரி என்னிடம் கூறியபடிதான் காலைநாலுமணிக்கெழுந்ததாயும் - தான்நேற்று சாற்றிப் படுத்தபடியே மற்றக்கதவுகள், சன்னல்களெல்லாம் இருப்பதாயும், பாகசாலைக்கதவும் வெள்ளி சாமான்கள் வைத்திருந்த அலமாரியும் மாத்திரமே திறக்கப்பட்டிருந்தன வென்றுங் கூறினான். அதற்குள் அலங்காரியார் அப்படியாயின் வீட்டிலுள்ளவர்களே திருடியிருக்கவேண்டு மென்றாள். பேச்சழகி ஆம் வீட்டிலுள்ளவர்கள் தான் திருடியிருக்கவேண்டும் என்றாள். செல்வசாதனர் நான் ஒவ்வொருவர் அறையும் சோதித்து வருகிறேன் என்றார். அதற்கு அலங்காரியார் நான் வீட்டிற்கு எஜமானியாதலால் நான் தான் சோதிக்கவேண்டும் என்றாள். பேச்சழகியும் ஆம் நீங்கள் தான் எஜமானி, நீங்கள்தான் சோதிக்கவேண்டுமென்றாள். செல்வசாதனர் எல்லாவற்றிற்கு நான்தான் எஜமான் என்று சொல்லி எங்களைத் தம்பின்வரும்படி ஆக்ஞாபித்து எழுந்து சென்றனர்.



நாங்கள் பின்பற்றிச் சென்றோம். முதலில்பரிசாரகன் அறை. அதை அவன் தவிர மற்ற மூவரும் சோதித்தோம். அதற்கெதிரில் பேச்சழகியறை. அதையும் எல்லோரும் சோதித்தோம். பின்பரிசாரகனறைக்குப் பக்கத்து சோம்பேரியறை. அதை அவன் தவிர சோதித்தோம். அதற்கெதிரில் சாசவல்லியறை அதையும் அவளில்லாவிட்டாலும் சோதித்தோம். அதற்கெதிரில் சோம்பேரி அறைக்குப் பக்கத்தில் ஆங்கு என்னைத்தவிர மற்றவர்கள் சென்றார்கள். என்பெட்டியை சோதித்தவிடத்தில் ஒருகடிதத்தில் சுருட்டப்பட்ட மூட்டை ஒன்றை என்பெட்டியிலிருந்து எடுத்து வந்து பார்த்தார். அதைப்பிரித்ததும் ஆ ! சந்திரவதனா! இதோ வெள்ளித் தாளங்கள் ! நீ இவ்வளவு சாதுரியனா! என்று திரும்பிப்போய் என்பெட்டியை நன்றாய்க் கொட்டிப்பார்க்க அதில் மோதிரமும் கிடைத்தது. என்னையேசினார். நான் ஒன்றும் பேசவா யெழாது நின்றேன். சோம்பேரியையும் பரிசாரகனையும் என்னை சாக்கிரதையாய் கொண்டுவரும் படிதாக்கீது செய்தார். அவர்கள் கைப்பிடியாய் கொண்டு போனார்கள். அலங்காரியும் கமலவதனியு மிருக்கு மிடத்திற்கு போய்ச் சேர்ந்தவுடன் திருடன் வெளிப்பட்டான். அவன் சந்திரவதனனே. அவனறையில் இவைகண்டு பிடிக்கப்பட்டன என்றார். நான் ஒன்றுஞ்சொல்லமுடியாதுநின்றேன். அலங்காரியார் என்னையுடனே போலீஸாரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றாள்.

நானிவ்வார்த்தை கேட்டவுடனே என்பிரக்கினை வந்தது. என்னிலைமை யுணர்ந்தேன். உடனே செல்வ சாதனர் காலைப்பிடித்துக்கொண்டு எஜமானே நான் திருடனல்லேன், நீங்கள் என்னுண்மை காணக்கடவுள் கிருபைசெய்வார்; அக்காலத்து என்னைக் கெடுத்து விட்டதற்காக நீங்கள் வருந்தும்படி நேரிடும். எனக்கு உதவி ஒருவருமில்லை. இந்த விசாலமான உலகத்து நான் ஒருவன் தனி. என்னை மன்னிக்கவேண்டும். நான் திருடியவனல்ல. இரங்குங்கள் என்றேன். அலங்காரி உடனேபோலீஸாரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றாள். பேச்சழகி ஒத்துப்பாடினாள். செல்வசாதனர் சோம்பேரியை ஊர்க்காவலரையழைக்க உத்திரவிட்டார். அச்சமயம் கமலவதனி செல்வசாதனரைத் தடுத்து தயவுசெய்து அக்காரியத்தை இப்போது நிறுத்திவையுங்கள். இவன் வார்த்தையில் நம்பிக்கை விளங்குகிறது. அன்றியும் எனக்காக விருந்துகுறித்த யிந்நாளில் இத்துன்பம் வேண்டாம். விருந்திற்காக யெங்குஞ்சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கும் வேலைக்காரர்களை வேறு வேலையிட்டால் எப்படி விருந்துக்காரியம் நடைபெறும் என்றாள். அலங்காரியார் சோதரி சொல்வது நியாயமென்றார். பேச்சழகி எப்பொழுதும் அலங்காரியார் வார்த்தைக் கொத்துபாடுபவள் இப்போது மாத்திரம் திருடனை எங்கு வைப்பது? போலீஸாரிடம் ஒப்புவிப்பதே நன்மையென்றாள். செல்வசாதனர் என் மைத்துனி பேசியது கிரமமாயிருத்தலால் என்மைத்துனிவார்த்தைக்காக நிறுத்திவைக்கவேண்டியதுதானென்றார்.

கடைசியாய் மாளிகைக்கு வெளிப்புறத்து ஓர்வண்டி கிடத்திவைக்கப் பட்டிருந்த அறையில் மறுநாள்வரையில் வைத்து பூட்டிவைக்கும்படி தீர்மானமானது. சோம்பேரி என்னை அங்குவைத்துப் பூட்டிப்போனான். அங்குபல யோசித்தேன். அன்றுகாலை சரசவல்லி கோபமாய்ப் பேசியதுமன்றி வைதாள் அவளும் இதுவிஷயமாய் சந்தேகித்திருப்பாளோவென எண்ணினேன். ஆனால் அவள் போனபிறகே சாமான் திருட்டுப்போன பிரஸ்தாபம் வெளிக்கிளம்பியது. வேறொன்றுந்தோன்றாமையால் அழுதுகொண்டு அவ்வறையிற்கிடந்த வண்டியிற் படுத்திருந்தேன். ஒன்பதுமணிக்கு அறைக்கதவைத் திறந்து ஆகாரம் கொண்டுவந்தான். எனக்கொன்றுந் தேவையில்லை யென்றேன். அவன் கதவைப் பூட்டிக்கொண்டுவந்ததை எடுத்துப்போனான். மறுபடி இரண்டுமணிக்கு ஆகாரங்கொண்டுவந்தான். அப்பொழுதும் மறுத்துவிட்டேன். சாயங்காலம் ஏழுமணிக்குக் கொண்டுவந்தான். மெத்தவாட்சியாயிருந்ததால் ஜலத்தைமாத்திர மருந்தி சாசவல்லிவந்தனளா என்

றேன். காலமே போனவள் வாராமையால் எல்லோரும் வருத்தமா யிருக்கிறார்கள்' அவள் வாங்கியனுப்பிய சாமான்கள் மாத்திரம் வந்து சேர்ந்தன என்று கதவை சாற்றிப்போனான். அச்சமயம் அவன் கதவு பூட்ட மறந்தானென்று கண்டேன். கதவைத் திறந்து பார்த்தேன். நானினைத்தபடி யிருந்தது. மறுபடியும் கதவைச் சாற்றிப் படுத்தேன்.

சாசவல்லி வாராமைக்கு நானும் வருந்தினேன். அவளுக்கு யேதோ ஆபத்து நேர்ந்திருக்க வேண்டுமென்றெண்ணினேன். எட்டு மணிமுதல் விருந்துண்போரின்வண்டிகள் வந்து கொண்டிருந்தன. ஆரவாரம் சாஸ்தியா யிருந்தது. பதினொரு மணிமுதல் வண்டிகள் திரும்பிப் போயின பதினொன்றரையுடன் அதுவும் நின்றது. அச்சமயம் இருவர் நானிருக்கு மறைக்குள்ளே வரக்கண்டேன். யாரென் கவனித்தேன். எனக்குப் புலப்படவில்லை. மெதுவாய் பேச்சுக்குரல் கேட்டது. ஒருவன் மற்றவனைப் பார்த்து கருப்பா! அவர்கள் விளக்கு நிறுத்திப்படுக்கும் வரையில் நாமிங்கிருக்கலாமென்றான். அவ்வார்த்தை என்பழக்க முடையவர்கள் வார்த்தையாய்க் காணப்பட்டது. அச்சமயம் கருப்பன் என்பவன் மற்றவனைக் குரும்பா! என்றான். என் மனம் நடுங்கியது. சுகுணதுரை மாளிகையிலவனுடன் பிச்சையெடுக்கப் போன போது அவன் பற்கடித்துப் பேர்னதும் சூதன் வீட்டில் சந்திரவதனி தப்பிஓட வழி செய்தபோது சூதனுடன், குரும்பனும் என்னைக் கொல்ல யோசித்ததாய்ச் சந்திரவதனி சொல்லியதும் என் நினைவிற்கு வந்தது.

கமலத்தன்னை.

## வேதார்ணியம் பெண்பாடசாலை.

வேதார்ணியம் கவர்ன்மெண்டு பெண்பாடசாலையின் வருஷாந்திர பரிசளிப்புக் கொண்டாடம் 1913-ம் வருஷம் ஏப்பிரல்மீ 26-ந் தேதி மாலை 4-மணிக்கு நடைபெற்றது. தென் ஆற்காடு தஞ்சாவூர் ஜில்லா பெண்பாடசாலைகளின் ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்ஸ் மிஸ். பிரேஜர் அம்மாள் அவர்கள், B. A., L. T. அக்கிராஸனம் வகித்தார்கள்.

பிரதமத்தில் பாடசாலைச் சிறுமிகள் அக்ராஸனாதிபதி யவர்களுக்கும், சபையோர்களுக்கும் நல்வரவு கீர்த்தனங்கள் (Welcome songs) பாடினார்கள். பிறகு ஸம்ஸ்கிருத ஸ்லோக ரூபமாயும் தேவாரம், திருவாசகம், அருட்பா முதலிய திருப்பாசுர ரூபமாகவும் தேவப் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. பெண்கள் இரு வகுப்பாக நின்று ஒரு வகுப்பார் பெண்கல்வி அவசியமென்றும், மற்றவகுப்பார் அநாவசியமென்றும் தக்க நியாயங்களை ஒவ்வொருவரும் எடுத்துக்காட்டி, வசனங்களாலும் இன்னிசைப் பாடல்களாலும் ஸம்வாதம் செய்து, கடைசியில் பெண்கல்வி அவசியம் என்று சித்தாந்தப்படுத்தினார்கள். பாடசாலை மாணவிகள் அநேகவிதமான வர்ணமெட்டுகளுள்ள பாடல்களுடனும் நடனொடி பாவனைகளுடனும் கும்மி கோலாட்டங்கள் போட்டார்கள். பின்பு சபையோர்களின் மனதைக் கவரத்தக்க சில அபிநயப் பாடல்கள் பாடினார்கள். பிறகு ரத்தினம் என்னும் ஒரு சிறுமி சபையிலெழுந்து "பெண்கள் செய்த ஆடல் பாடல்களில் உள்ள குற்றங்களை நீக்கி குணத்தை கிரஹித்து ஆசீர்வதிக்கும்படி சபையோர்களைப் பிரார்த்தித்து அக்கிராஸனாதிபதி யவர்களுக்கும் சபையோர்களுக்கும் வந்தனோபசாரம் செய்தனள். இச்சிறுமி பேசியது சபையோர்களுக்கு மிகவும் ஆநந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கிற்று.



மேற்படி பாடசாலை தலைமை உபாத்தியாயர் "சகல வளப்பங்களும்நிறைந்துவிளங்கும் இவ்வேதாரணியக்ஷேத்திரத்தில் பெண் பாடசாலையில்லாப் பெருங்குறையொன்றை நீக்குமாறு 1904-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில் இவ்வூர் ரிடையர்டுதாசில்தார் ம-ா-ா-ஸ்ரீ பிச்சைப்பிள்ளை அவர்கள் சிறியகட்டிடம் ஒன்றை ஸ்தாபனம்செய்து 40 பிள்ளைகளுடனும், இரண்டு உபாத்தியாயர்களோடும் பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி தம்சொந்தச்சிலவிலேயே நடத்திவந்து 1908-ம் வருஷத்தில் நம் காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களிடம் மேற்படி பள்ளிக்கூட கட்டிடம், சாமான்கள் புஸ்தகசாலை முதலியவைகளை யாதொரு பிரதிப்பிரயோஜனத்தையும் கருதாமல் ஒப்பிவித்தார்கள். கவர்ன்மெண்டார் அவர்களும் தாம் கைக்கொண்ட பாடசாலையை ஊக்கத்துடன் பரிபாலித்துவருகிறார்கள். தற்காலம் 101பெண்களடங்கிய 6வகுப்புகள், 3உபாத்தியாயர்களைக் கொண்டு ஒழுங்காய் நடைபெற்றுவருகிறது. இத்துடன் இன்னும் அநேக பெண்களும் இப் பள்ளிக்கூடத்தில் சேரக்கூடியவர்களாயும் இருக்கிறார்கள். அவசியம் கட்டடத்தை விசாலப்படுத்தி விருத்தி செய்வதுடன் குறைந்த பக்ஷம் இன்னும் ஓர் உபாத்தியாயரையும் ஏற்படுத்தித் தரவேண்டுமெனப் பன்முறைமே லதிகாரிகளுக்கு விண்ணப்பஞ் செய்திருப்பதாயும் சீக்கிரம் அவ்விதமே நடைபெறுமென்றும் யாவரும் ஒற்றுமையாய் பள்ளிக்கூடத்தை விருத்திக்குக் கொண்டுவர முயற்சிக்கவேண்டுமென்றும்" சொல்லி சபையோர்களுக்கும் அக்கிராஸனாதிபதி யவர்களுக்கும் வந்தனமளித்து ரிபோர்ட்டை முடித்தார்.

அக்கிராஸனாதிபதி குழந்தைகளுக்காக ஏற்படுத்திய வெகுமதிகளை அளிக்க, குழந்தைகள் வந்தனத்துடன் அவைகளைப் பெற்றுக்கொண்டார்கள். மேலும் குழந்தைகளுக்கு கற்கண்டு முதலிய சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

பிறகு சபையிலிருந்த உத்தியோகஸ்தர்களும், கனவான்களும் பெண்கல்வி விஷயமாகவும் இப்பாடசாலையின் அபிவிர்த்தியைநோக்கியும் விஸ்தாரமாக எடுத்துப்பேசினார்கள்.

அக்கிராஸனாதிபதி மிஸ்பிரேஜர் அம்மாள் அவர்கள் தம்மை சேர்மெனாக நியமித்ததற்காக வந்தனோபசாரம் சொல்லி அநேக விஷயங்கள் எடுத்துப் பேசி நம் தேசத்தில் பெற்றோர்கள் பெண்களுக்குக் கல்வியில் அற்ப அறிவு உண்டாகிற காலமாகிய 10 அல்லது 11வயதில் பெண்களைப்படிக்காமல் தடுத்து விடுகிறார்களென்றும் அதனாலேயே பெண்கல்வி விருத்திக்குவரவில்லையென்றும், எந்ததேசத்தில் பெண்கல்வி விருத்தியாயிருக்கிறதோ அந்ததேசத்தில் மற்றெல்லாஸம்பத்துகளும் நிறைந்திருக்கிறதென்றும் பள்ளிக்கூடக் கட்டடத்தை விருத்திசெய்வதற்கு வேண்டிய முயற்சி முக்கியமாய் யாவரும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் தாமும் இயன்றவரையில் முயற்சிப்பதாயுஞ் சொன்னார்கள். ஆதியில் பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து பரிபாலித்து வந்த மிஸ்டர் ா. பிச்சைப்பிள்ளை அவர்கள்விஷயத்தில் தாம் மிகவும் ஸந்தோஷமாய் இருப்ப

தாய்ச் சொல்லி பள்ளிக்கூடமானது வரவர விருத்தியடையுமாறு பிரார்த்தித்து தம்முடைய பேச்சை முடித்தார்கள்.

பிறகு ஒரு சிறுமியால் அழகிய மலர்மாலை அக்கிராஸனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டது. பிறகு அக்கிராஸனாதிபதியவர்களுக்கு சபையோர்களால் வந்தனோபசாரங்கள் சொல்லப்பட்டு சந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பட்டன.

பாடசாலைச்சிறுமிகளால் ராஜாவாழ்த்துப் பாடி முடிந்ததும், சபை கலைந்தது.

## ஹாஸ்யத் துணுக்குகள்.

ஒரு பையன் பலசரக்குச் செட்டியார் கடைக்கு ஓடி, செட்டியாரே! காகிதமெடுத்துப் பின் சொல்பவைகளைக் குறித்துக்கொள்ளும் என்றான். செட்டியார் ஆவலுடன் எழுத ஆரம்பித்தார்.

பையன்: பலம் $2\frac{1}{2}$ அணா வீதம் 25 பலம் சூடம்.
செட்டியார்: ஹூ ரூபா 3-8-3. அப்புறம்!
பையன்: சேர் 7 அணா வீதம் 37 சேர் நல்லெண்ணெய்.
செட்டியார்: ஹூ! ரூபா 16-3-0 ஆச்சு. அப்புறம்!
பையன்: வீசை $6\frac{1}{2}$ அணா வீதம் 23 வீசை மிளகாய்.
செட்டியார்: ஹூ! ரூபா 9-5-6 ஆச்சு. அப்புறம்!

இவ்விதமாக பையன் அநேக சாமான்களின் விலையைத் தெரிந்துகொண்டான். செட்டியார் சிரமப்பட்டு கணக்குபோட்டு விலை சொன்னார். பையன் உடனே, ஐயா! அந்த கணக்கை இப்படிக் கொடும் என்று வாங்கிக்கொள்ள, செட்டியார், சாமான்கள் எப்பொழுது வாங்குவீர்? என்று கேட்டார். பையன் சிரித்து "சாமான் வாங்குவதா? எங்கள் வாத்தியார் வீட்டுக்கணக்குகள் போட்டுவரச் சொன்னார். எனக்குச் சோம்பலாயிருந்தது. உங்களிடம் கொடுத்து போடச்சொன்னேன். செட்டியார் தான் ஏமாந்து போனதற்கு வெட்கப்பட்டாலும், பையன் யுக்திக்கு மெச்சி அவனுக்கு ஒரு கல்கண்டு கட்டி கொடுத்தனுப்பினார்.

*    *    *    *    *

எசமான்: ஏ பையா! மாடு கறந்தாய்விட்டதா!
பையன்: ஆ! கறந்துட்டேனையா!
எசமான்: மாடு என்ன கொடுத்தது?

பையன்: கொடுக்கிறத்துக் கென்ன! உங்களுக்கு அரைப்படி பாலும் எனக்கு நாலு உதையும் கிடைத்தது.

*    *    *    *    *



வாத்தியார்: ஏய்! இருவர் சேர்ந்து ஓரிடத்திலிருந்து 60 கொய்யாப் பழங்கள் திருடித்தின்றார்கள். ஆளுக் கென்ன கிடைக்கும்?

பையன்: (அவன் தகப்பனார் வைத்தியர்) ஐயா! வயிற்று நோவு கிடைக்கும்.

இன்னொருபையன்: (அவன் தகப்பனார் மாஜிஸ்ட்ரேட்) சார்! ஆளுக்கு நாலுகசையடி விழும்.

*    *    *    *    *

பெருமாள் கோவில் பரிசாரகன் ஒருவரிடத்தில் பின்வருமாறு சொன்னான்:—"ஐயா, திருக்கோவிலின் திருவாயில் திருவழியே திருநாய் புகுந்தது. திருத்தடி எடுத்து திருப்பூசை சாத்தும்போது திரு நாய் திருலொள் லொள் என்றது" இதைக் கேட்ட அவர் ஒன்றுந் தெரியாமல் மயங்கி சமீபத்தி லிருந்தவரிடம் விஷயம் தெரிந்துகொண்டு, ஐயங்கார் பரிபாஷையைக் கேட்டு விழுந்துவிழுந்து சிரித்தார்.

*    *    *    *    *

நமது விகடகவி.

## முக்ய சமாசாரம்.

ஸ்திரீகளின் அறியாமைக்கு இரண்டு காரணங்களை லேடி பென்ஸன் எடுத்துச் சொன்னார். "முதலாவது பெற்றோர்களின் சிரத்தையின்மை. இரண்டாவது பெண்களுக்குள்ள நகைப்பைத்தியம். பெறுரர்களுக்குமட்டும் தங்கள் பெண்கள் படிப்பில் சிரத்தை யிருக்குமானால் இப்போது கோடிக் கணக்கான பொருள் நகைகளில் வீண்செலவு செய்யப்படுவது போலச்செய்யப்படாமல் அவர்களின்படிப்பு விஷயத்தில் செய்யப்படும். பெண்கள் மட்டும் படித்தவர்களாய் புருஷருடன் ஒத்துழைக்க வல்லவர்க ளாகும்பட்சத்தில் ஸ்திரீகள் நேராகச் செய்யவேண்டிய கடமைகளாகிய குழந்தைகளின் வளர்ச்சியும் குடும்பங்களின் யோகக்ஷேமமும் காக்கப்படுவதுமன்றி தேசத்து வியாபாரம் தொழில், ராஜ்ய விவகாரம், ஆசாரத்திருத்தம், இவைகள் அனைத்தும் சீர்பெற்று நல்ல நிலைமைக்குவரக் காரணமாகும். பெண்களின் படிப்பு விஷயத்தில் கவர்ன்மெண்ட் பணவுதவி செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஆனாலும் பெண்களின் படிப்பு ஜனங்களின் முக்கியமான கடமையே யல்லாமல் கவர்ன்மெண்டின் கடமையல்ல. ஜப்பானில் எங்கு பார்த்தாலும் பெண்பாடசாலைகளைப் பார்த்ததாகவும் அவைகளில் பெரும்பாலான ஜனங்கள் தருமமாகக் கொடுத்த சொத்துக்களிலிருந்து ஸ்தாபித்து நடத்தப்படுவதாகக் கேள்விப்பட்டதாகவும் சொன்னார். படிப்பு விஷயத்தில் இந்தியர்கள் அக்கறையில்லாதவர்கள் என்று சொல்ல முடியாது. ஆயினும் இந்த அக்கறை தற்காலம் புருஷர் விஷயத்தில் பாராட்டுவதுபோல ஸ்திரீகள் விஷயத்தில் பாராட்டப்படுவதில்லை."

நந்தவனம்:—தாய்மார்கள் படிப்பில்லாதவர்களா யிருக்கிறபடியால் பிள்ளைகளுக்கு இந்த புத்தி யுண்டாவதில்லை. ஆகையால் ஸ்கூல்களைச் சுற்றித் தோட்டங்கள் ஸ்தாபிக்கும் பட்சத்தில் பிள்ளைகள் தங்கள் கைகளினால் செடிகளை நட்டும் வளர்த்தும், தோட்டத்தைச் சுத்தமாய் வைத்துக்கொண்டும், கைவேலை செய்வதில் பழகுவதுமன்றி, மரம் செடிகள் தழைத்துப் புஷ்பித்துப் பழுத்து அலங்காரமாய் விளங்குவதையும் பார்த்துச் சந்தோஷிக்கக் கற்றுக் கொள்வார்கள். இந்தப் பயிர்ச்சி ஆண்பிள்ளைகளைவிடப் பெண்பிள்ளைகளுக்கு மகா அவசியம். நம்தேசத்துப் பூர்வீக ஸ்திரீகள் நந்தவனங்களிலும் புஷ்பத் தோட்டங்களிலும் நடமாடிப் பலவிதமாய் ஆனந்தமடைவது வழக்கமாயிருந்தது. புஷ்பங்களைக் கொய்து மாலைகளாகச் செய்து சரீரத்தில் அணிந்து கொண்டு சந்தோஷப்படுவதும் வழக்கம். கோவில்களிலும் புஷ்பத்தோட்டங்கள் இருக்கும். இந்தத்தோட்டங்கள் ஸ்தாபித்து வளர்ப்பது புண்ணிய காரியமென்னும் கருதப்பட்டது. செடிகள் வைத்து வளர்ப்பதால் நம்வாசஸ்தலங்கள் சுத்தப்படுகின்றன. நாம் பழைய புஸ்தகங்களை வாசிக்கும்போது நம் தேசத்தில் கணக்கற்ற மரங்களும் செடிகளும் புஷ்பங்களும் ஏதேஷ்டமாயிருந்து பார்ப்போருக்கு அழகையும் ஆனந்தத்தையும் கொடுத்துவந்தனவென்று தெரிகிறது. பல காரணங்களால் இத்தகைய நல்ல வழக்கம் இப்போது குறைந்து போயிற்று. இந்த வழக்கத்தை மறுபடியும் உண்டுபண்ண வேண்டும்.

## மேரி சக்கரவர்த்தினியும் லக்நௌ கோஷா ஸ்திரீகளும்.

ஐக்கிய மாகாணத்தில் லெப்டினெண்டு கவர்னரா யிருந்தவரின் மனைவியாரான லேடிலெல்லி போர்ட்டர் லக்னௌவில் மகம்மதிய கோஷா ஸ்திரீகளுக்குத் ஒரு ஸ்கூல் ஸ்தாபித்து, அதில் அவர்களுக்கு தையல் வேலைகளைக் கற்பித்துக் கொடுத்துவந்தார். அந்த ஸ்கூலின் கீர்த்தி இங்கிலாந்து முதலிய தூரதேசங்களுக்குப் பரவியது மல்லாமல், சக்கரவர்த்தினிக்கும் எட்டிற்று. சக்கரவர்த்தினி அந்த ஸ்கூலில் செய்யப்பட்ட சிறந்த தையல் வேலைகளின் மாதிரிகளை விலைக்கு வாங்கினார். அவைகளைக் கண்டு சந்தோஷப்பட்டு அவைகளைச் செய்தவர்களுக்குப் புகழ்ச்சித் தந்தியொன்றை அனுப்பியிருக்கிறார். இந்தத் தொழிற்சாலை 1893-ம் வருஷத்தில் ஸர் ஜேம்ஸ் லாடௌச்சின் யோசனையின்பேரில் லேடி போர்ட்டரால் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் கற்றுவரும் ஸ்திரீகள் அனைவரும் மகம்மதிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்குச் சித்திரத் தையல் வேலை கற்றுக்கொடுப்பதற்கு ஒரு பீகம் ஏற்பட்டிருக்கிறார். மிஸ்ஸஸ் பிக்காட் இப்பொழுது அந்த ஸ்தாபனத்தின் இன்சார்ஜிலிருக்கிறார்.

# முக்கிய அறிவிப்பு.

**நாம் சுமார் 2 மாதகாலம் கோயம்புத்தூருக்குத் தேகசௌக்கியத்திற்காகப் போயிருந்தமையாலும் பத்திரிகைக்குப் போதுமான திரவியசகாய மில்லாமையாலும் பத்திரிகை வெளிவர தாமதமானதைப்பற்றி மிகவும் விசனப்படுகிறோம்.**

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 11 OCT 1913 MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் "—ஔவையார்.

Vol XV. | Madras: May & June 1913. | No. 5&6.
புத்தகம் கரு. | சென்னப்பட்டணம்: மேமூ, ஜூன்மூ 1913 | இலக்கம் 5&6

## PARENTS AND CHILDREN.

## பெற்றோரும் குழந்தைகளும்.

குழந்தைகளிடம் ஏற்படும் தீய குணங்களுக்கும் கெட்ட வழக்கங்களுக்கும் பெரும்பான்மை பெற்றோரே காரணமாவர். குழந்தைகளைக் குற்றம் சாட்டுவது சரியல்ல. பெற்றோர்களின் எண்ணங்களும் நடத்தைகளுமே குழந்தைகளினிடமும் தோன்றுகின்றன. ஆதலால் குழந்தைகள் நல்ல வழியில் நடப்பதும் தீயவழியிற் செல்வதும் அவர்களின் பெற்றோரைச் சார்ந்தே நிற்கின்றது.

நமது எண்ணங்களின் பலமும் அவைகளால் முடியக்கூடிய செயல்களும் இவ்வளவுதான் என்று வரையறைந்து சொல்வது அசாத்தியம். தற்காலம் மின்சாரத்தி னுதவியால் எவ்வளவோ அற்புதங்களெல்லாம் காண்கின்றோம். மற்றும் நாளடைவில் எவ்வளவு அதிசயங்களை அதனுதவியால் காணப்பெறுவோமோ தெரியவில்லை. அதன் வேகமோ ஆச்சரியத்தையுண்டாக்குகிறது. நம் எண்ணங்கள் இத்தகைய மின்சாரத்தினும் பலமடங்கு அதிக வேகமானதாகவும் அதிக அற்புதமான காரியங்களைச் செய்யக்கூடியதென்றும் கூறுகிறார்கள். இந்நூதன மாயகருவியாகிய "எண்ணம்" என்பதால் பலவித நன்மையை அடையக்கூடும். முக்கியமாய் குழந்தைகளை நல்வழியில் கொண்டுவருவதற்குப் பெற்றோரின் எண்ணங்களின் பலமே சிறந்த பலம் என்று தோன்றுகிறது.

குழந்தைகளை யடக்கிச் சீர்திருத்த முயலுவதற்குமுன் பெற்றோர்கள் தங்களைத் தாங்களே யடக்கிக்கொள்ளல் வேண்டும். குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே தங்கள் எண்ணங்களின் மூலமாய் நற்குணமும் நன்னடக்கையுமே பொருந்திய குழந்தை வேண்டுமென்றே எண்ணி வருவாராயின் அவ்விதமே குழந்தையும் ஏற்படும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு ஒரேமனதாய் சஞ்சலமற்று எண்ணங்களை நினைக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அவ்வெண்ணங்களுக்குப் பலமேற்பட்டுப் பயன் தருகின்றன.

நமது ஒவ்வோர் எண்ணமும் நாம் அவைகளை இரகசியமாய் நினைத்திருப்பினுங்கூட உலகமெங்கும் பரவி நல் எண்ணமாயின் நன்மையையும் தீய எண்ணமாயின் தீமையையும் விளைவிக்கிறதென்றுரைத்திருக்கிறார்கள்.

“தன்னினம் தன்னைக்காக்கும், வேலி பயிரைக்காக்கும்” என்றவாறு நம் நல் எண்ணங்கள் உலகத்திலிருக்கும் நல் எண்ணங்கள் முழுவதையும் தன்னிடம் ஆக்கிரஹித்து ஒன்றுக்குப் பன்மடங்காய் நன்மையைப் பயக்கும். அவ்விதமே கெட்ட எண்ணங்களும் ஏற்கனவே பரவிக்கிடக்கும் கெட்ட எண்ணங்களையே தன்னிடம் சேர்த்து பன்மடங்கு கெடுதல்களுக்குக் காரணமாகும். ஆதலால் தீய எண்ணங்களையே விலக்கி உயர்ந்த எண்ணங்களையே நம்மிடம் குடிகொண்டிருக்கச் செய்வதால் நன்மை நமக்கும் மற்றோருக்கும் ஏற்படுகின்றது. சாதாரணமாய் சந்தோஷமாகவும் உயர் குணங்களையே ஆலோசித்துக்கொண்டிருப்பின் நமக்கே மனத்திருப்தி அதிகரிப்பதைப் பலர் கவனித்திருக்கலாம். அங்ஙனமின்றி துக்கம், விசாரம், கொடிய குணங்கள் இவைகளையே நினைப்பின் மிகவும் மனவருத்தமடைந்து மென்மேல் மனத்தாழ்ச்சியைப் பெறுவதையும் கவனித்திருக்கலாம். இவைகளின் காரணம் மேலே கூறினதேயாம்.

எண்ணங்களின் யோக்கியதை இவ்வாறிருக்க நம் எண்ணங்களால் குழந்தைகளை எம்மட்டில் சீர்திருத்தல் கூடுமென்பதைப்பற்றி விசாரிப்போம். குழந்தைகளிடம் இயற்கையாகவே துர்குணங்கள் ஏற்படுவதில்லையெனத்தோன்றுகிறது. குழந்தையினிடம் கெட்ட வழக்கமும் துர்க்குணமுமிருப்பின் அக்குற்றம் பெற்றோரைச்சார்ந்ததே. பெற்றோரின் குற்றம் குறைகளும் குழந்தையினிடமும் அவை காணப்படுகின்றன. பெற்றோரின் எண்ணங்களே ஒருங்கே சேர்ந்து குழந்தையினிடம் உருவாய்த் தோன்றுகின்றன.

தாங்கள் தான் காரணமேயன்றிக் குழந்தையின் மேல் தவறில்லை என்று நினைப்பின் குழந்தையினிடம்முன்னிலும் அதிகப் பக்ஷமும் விசுவாசமும் தயாளுத்வமும் உண்டாகும். அவைகள் செய்யும் தவறுகளிலும் நடும் சினமும் வாராது. இவைகளே நன்மையையும் தீவிரமாய்ப் பயக்கும். மேலும் எவ்விஷயமும் அவசரப்படின் கைகூடுவதில்லை. துர்குணங்களைச் சீர்திருத்துவதோ சாமான்ய காரியமல்ல. ஆகையால் இவ்விஷயத்தில் பொறுமை என்பது பெற்றோரிடம் நிறைவாயமைந்திருத்தல் வேண்டும். தங்களையே சீர்திருத்திக்கொள்வது போல பாவித்து உறுதியுடனும் ப்ரியத்துடனும் விசாலமனதுடனும் தயையுடனும் நடத்தல் வேண்டும்.

குழந்தைகள் ஏதாவது விஷமம் செய்தாலும் அதிகமாய் அழுதாலும் சற்றுதூரம்வரைக் காதுகேட்கும்படி பற்களைக் கடித்து மிகுந்த கோபா



வேசத்தால் முகம் மனுஷ்ய முகம்தானா என்று சந்தேகிக்கும்படியாய் வேறுபட்டு கடிந்த சொற்களை வாயில் வந்தமட்டும் கூறி அதட்டுகின்ற பெற்றோருமிருக்கிறார்கள். இவ்விதம் சினந்து நடப்பதால் குழந்தைகளுக்கு நன்மையுண்டாகுமென்று தோன்றவில்லை. குழந்தைகளின் எதிரிலேயே கோபக்குறிகளைக் காட்டுவதும் கடுஞ்சொற்களையுரைப்பதும் கூடவே கூடாது. அவ்விதம் செய்வதால் நினைக்கும் சீர்திருத்தம் ஏற்படாமல் அக் குழந்தைகளுக்கும் கோபம் முதலிய எண்ணங்கள் அவர்கள் மனதில் தாக்கி அவைகளையே அவர்களிடத்தும் உண்டாக்கும். ஆதலால் சீர்திருத்தம் போய் கெட்ட குணத்துக்கே காரணமுமாகும். முன்னிலும் அதன் குணம் கெ[illegible]லையே அடையும். தங்கள்கோபத்தை முற்றிலும் அடக்கி தீய சொ[illegible]மிட்டு விலக்கி அமரிக்கையுடனும் உறுதியுடனும் சிரித்த முகத்துடனும் [illegible]ன் பிசகையைப் போதித்துக் குழந்தையை நல் வழிக்கு வரும்படி செய்ய[illegible] கொஞ்ச[illegible]. நமது எண்ணம் குழந்தையின் மூளையில் தாக்கி அதன் நன்மை[illegible] விசா[illegible]விளைவிக்கும். குழந்தை தூங்கும்போது அமைதியுடனும் நல் எண்ண[illegible]ங்களுடனும் அதன் படுக்கையருகே சென்று விழித்திருப்பின் எவ்விதம் சந்தோஷ காலத்தில் முத்தமிட்டு விளையாடிப் பேசுவோமோ அவ்விதமே செய்வதாலும் நல் விஷயங்களைப்பற்றியும் உயர் குணங்களைக் குறித்தும் புகழ்ந்து சொல்வதாலும் ஒரே மனதாய் நினைப்பதாலும் குழந்தைக்கு மிகுந்த நன்மையை விளைவிக்கலாம் என்று பலர் [illegible]தியிருக்கிறார்கள். அவ்விதம் செய்வதால் நாளடைவில் நாம் எந்த [illegible]ணங்கள் எந்தவழக்கங்கள் அதனிடமிருக்கவேண்டுமென்று அடிக்[illegible]டி விரும்புகிறோமோ அவைகளே அக் குழந்தைகளினிடம் காணப்படும். இவ்விதமாய் உயர்தர எண்ணங்களையே குழந்தைகட்குப் புகட்டுவோமாயின் அவர்களிடம் கெட்ட எண்ணங்களுக்கு இடமிராது. நற்குணமும் நன்னடக்கையுமே குடிகொள்ளும்.

இங்ஙனம் குழந்தைகளை அடக்கிவராமல் கெட்ட எண்ணங்களையே அவர்களிடம் நிரம்பச் செய்துவிடின் அதனால் விளையும் கெடுதல்கள் இவ்வளவுதான் என்று சொல்லவேமுடியாது. எண்ணங்களிலுண்டாகக்கூடும் நன்மையும் தீமையும் இன்னவைதானென்றுரைப்பது கடினமென்று முன்பே சொன்னோம். கெட்ட எண்ணத்தால் இருப்போர்க்குண்டாகக் கூடிய கெடுதல்களும் இனிப்பிறப்போர்க்குமுண்டாகக்கூடிய கெடுதல்களும் இன்னவைதான் என்று சொல்வதும் முடியாது.

ஒருவன் தன் வாழ்நாள் முற்றிலும் தீய செயல்களையே அதிகமாய்ச் செய்து அதனால் தீய எண்ணங்களே அதிகமாய் அவனிடமிருப்பின் அதன் கெடுதல்கள் அவன்மட்டோடு நில்லாமல் அவன் பின் தலைமுறைகளிலும் சென்று அவர்களையும் அவ்விதமே செய்யும்படி தூண்டுவதற்கு

ஆதாரமாகிறது. இது விஷயமாய்ப் பல கணக்குகள் தேர்ந்தெடுத்துப் பார்த்து அவைகளுள் முக்கிய உதாரணமாக ஒன்றை ஓர் நூலாசிரியர் எழுதியிருக்கிறார்.

"எப்போதும் ஏதாவது குற்றத்தையே செய்யும் குணம் வாய்ந்த ஓர் ஸ்திரீ 1827-ம் வருஷம் காலம் சென்றாள். அவளுக்கு அநேகம் குழந்தைகளிருந்தன. எல்லாக் குழந்தைகளினிடமும் தாயினிடமிருந்த குற்றம் செய்யும் சுபாவமே அதிகமாய் இருந்ததாம். அவர்கள் வம்ச பரம்பரையை சோதித்துப் பார்த்ததில் 1902-ம் வருஷம் மே மாதம் வரை அவள் வம்சத்தில் 700 பேருக்குக் குறையாமல் தாங்கள் செய்த குற்றங்களுக்காக கவர்ன்மெண்டாரால் தண்டனை விதிக்கப் பெற்றார்களென்றும் 37பேர் கொலை செய்த குற்றத்திற்காக தூக்கிலிடப்பட்டார்களென்றும் காணப்பட்டது." இவ்வளவுக்கும் காரணம் ஆதிநபரின் பேரிடமிருந்த தீய எண்ணங்களே. "கெட்ட எண்ணங்கள் கெட்ட அங்கங்களையே தம்மிடம் சேர்க்கின்றன. குழந்தைகளிடமும் இந்நினைப்பு கெடுதல்களான எண்ணங்களையே சேரும்படியும் செய்தன. நற்குணங்கள் குழந்தைகளிடம் பெற்றோராலேயே உண்டாக்கப்படுகின்றன. அது விஷயமாய் பெற்றோர் எவ்வளவு ஜாக்கிரதையுடனிருக்க வேண்டுமென்பது மேலெடுத்துக் கூறிய மிகவும் பரிதபிக்கத்தக்க உதாரணத்தால் விளங்கும். "தாயைப்போல பிள்ளை" என்ற பழமொழியும் சொல்லுகிறார்களல்லவா? குழந்தையின் குணத்தை நன்றாய் கவனித்தே அதன் பெற்றோரின் குணத்தையும் அறியலாம்.

மேற் கூறிய விதமாய் கெடுதலான எண்ணங்களே அபரிமிதமாயிருப்பின் ஒரு தலைமுறையிலேயே நல்ல எண்ணங்களின் பலத்தாலும் நல்ல சேர்க்கைகளாலும் அவைகளை முற்றிலும் களைந்து உயர்ந்த குணங்களைப் புகட்டுவது கடினமாயினும் நாளடைவில் அவைகள் விலகி சில தலைமுறைகளுள் முற்றிலும் சீர்திருத்தம்பெற்று நற்குணமே பின்பிறக்கும் குழந்தைகளிடம் காணப்பெறும்.

பெற்றோர்கள் குழந்தைகளின் மனதில் ஜீவகாருண்யம், அன்பு, நன்றியறிவு, தயை, ராஜவிசுவாசம் முதலிய மிகப்பெருமை வாய்ந்த குணங்களையே பதிவுபெறச் செய்யவேண்டும். படிப்பிலும் செல்வத்திலும் குணமே சிறந்ததாகும். "மிகவும் நற்குணம் வாய்ந்த குழந்தைகள்" என்று பேரெடுப்பதுதான் அவசியம் என்று தோன்றுகிறது. நற்குண நற்செயல்களுடன் கல்வியும் செல்வமும் கூடின் ஒன்றிற்கொன்று அதிகமேன்மையைக் கொடுக்கும். நற்குணமின்றி அவை யிரண்டிற்கும் சிறப்பு மட்டேயாகும்.

குழந்தைகளின் தேஹாரோக்கிய விஷயத்திலும் தங்கள் எண்ணங்களைப் பெற்றோர் மிகவும் கவனிக்கவேண்டும். சிலர் "பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு இந்த வியாதி வந்திருக்கிறது. என்னமாக முடியுமோ என்று வருத்தப்படுகிறார்கள். நம்ம குழந்தைக்கும் எங்கு வந்துவிடுமோ என்னமோ" என்று சதா சொல்லிக்கொண்டும் ஆலோசித்துக்கொண்டுமிருப்பது வழக்கமாயிருக்கிறது. அவ்விதம் சொல்வதும் நினைப்பதும் கெடுதலேயாகும். எங்கு அவ்வியாதி வந்துவிடுமோ என்ற பயமும் அவ்வியாதியின் எண்ணமும் இவரிடமிருப்பதால் குழந்தையின் மனதிலும் அவ்வெண்ணங்கள் சம்மந்தப்பட்டு வியாதியை உண்டாக்கவும் கூடும். குழந்தையின் எண்ணத்தின் பலம் நம்முடையதைவிட குறைவாயிருப்பதால் நம் எண்ணத்தை மீறுவதற்கு சக்தியற்றிருக்கிறது. ஆகவே நாமே இந்த வியாதிக்குக் காரணமாகிறோம். மேலும் நாம் வியாதி வந்துவிடுமோ என்று பயப்படும்போதெல்லாம் அதே சீராக யார் யார் பயந்திருக்கிறார்களோ அவர்களெண்ணங்களையும் நம்மிடமே கவர்ந்து நமது எண்ணத்தின் வேகத்தை அதிகரிக்கிறோம். இதன் பிசகு இவ்வளவு என்று சொல்லாமலே புலப்படும். சாதாரணமாக கொஞ்சம் உடம்பு ஏதாவது அசௌகரியமாயிருந்தால் அதையே கவனித்து விசாரப்படின் அதிகமாகின்றது. அவ்வாறின்றி "எனக்கு ஒன்றுமில்லை. சௌக்யமாய்த் தானிருக்கிறேன்" என்று உறுதியாய் நினைத்துக்கொண்டிருப்பின் முன்னிருந்ததுபோலல்லாமல் கொஞ்சம் சௌக்யமாகவே தோன்றுகிறது. இதை எல்லோருமே அப்பியசித்துப் பார்ப்பின் அதன் உண்மை விளங்கும். தலைவலி முதலிய சில்லரை உபத்திரவங்களில் இம்மருந்தை நம்பிக்கையுடனுபயோகித்தால் நன்மையைத் தருகிறது.



குழந்தைகள் எதையாவது பார்த்தால் "இது என்ன? ஏன் இவ்விதம் இருக்கிறது." என்பனபோன்ற பல கேள்விகளை ஒன்றன்மேலொன்றாய் கேட்கும் தன்மையை எல்லாரும் கவனித்திருக்கலாம். அவ்விதமான கேள்விகளுக்கு பொறுமையுடன் தங்களுக்குத் தெரிந்தமட்டிலும் விரிவாய் பதில் சொல்லவேண்டும். குழந்தையின்மேல் சினம் கொள்வது சரியல்ல. அநேகர் அவ்விதம் ஆவலுடன் கேட்கும் குழந்தைகளை அதட்டுகிறார்கள். விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் குழந்தைகளை அவ்விதம் நடத்துவதால் அவைகளின் மூளை அபிவிருத்திக்கே கெடுதல் நேரிடும். பல விடங்களுக்கும் அழைத்துப்போய் எல்லாவற்றையுங் காட்டி குழந்தைகள் கேட்கும் கேள்வி கட்கெல்லாம் பொறுமையுடன் சாந்தமாயும் சந்தோஷமாயும் பதிலுரைத்தால் மிகவும் முக்கியமானது.

எஸ். சுவாமிநாதன் பி. ஏ.,

## SCIENCE LESSON

## STEAM AND BOILING

### நீராவியும் ஜலம் பொங்குதலும்.

ஜலத்துக்குப் பொங்கும் டெம்பரேசர் நிலையானதாயிருப்பினும் உப்புப் போன்றவஸ்துக்கள் ஜலத்தில் கலந்தால் அப்பொழுது ஜலம் 212 டிகிரி டெம்பரேசரிலிராது. முன்போலவே ஒரு பாத்திரத்தில் ஜலம் எடுத்துக் கொண்டு காய்ச்சுவோம். ஜலம் 212 டிகிரி சூடானவுடன் அதனுள் ஒரு ரூபாய் எடை உப்பைப்போடுவோம். போட்டபின் மறுபடி ஜலம் கொதிக்க ஆரம்பித்ததும் ஜலத்தின் டெம்பரேசரைப் பார்த்தால் 212க்கு மேலேயே இருக்கும். இன்னும் ஒருரூபா எடை உப்பைச் சேர்த்தால் இன்னும் கொதிக்கும் டெம்பரேசர் உயர்கின்றது. ஆகையால் கரைந்துள்ள வஸ்துவின் பரிமாணத்துக்குத் தக்கபடி பொங்கும் டெம்பரேசரும் ஏறி நிற்கும். ஆனால் ஆவியின் டெம்பரேசர் மட்டும் 212 டிகிரியிலேயேதான் எப்பொழுதும் நிற்கின்றது. எப்படியெனில் தெர்மாமீட்டரை ஜலத்துக்குமேல் ½ அங்குலத்தில் பிடித்துக் கொள்ளுங்கள். தெர்மாமீட்டர் 212 டிகிரிக்கு வந்து நிலையாய் அவ்விடத்திலேயே நிற்கக் காணலாம். நாம் எடுத்துக் கொள்ளும் ஜலம் சுத்தமாய் இருப்பினும் இல்லாவிட்டாலும் பொங்கும் ஜலத்திலிருந்து வரும் ஆவிமட்டும் 212 டிகிரியில் நிலையாய் இருப்பதுபற்றி 34-வது பாடத்தில் தெர்மாமீட்டரின் நிலையான ஸ்திதியைக் கண்டுபிடிக்க நீர் ஆவியில் வைக்கவேண்டுமென்று சொன்னோம். (மனோரஞ்சினி ஜூலை 1912௵ 137, 138 பக்கம் பார்க்க).

கரைந்துள்ள வஸ்துக்களைத் தவிர்த்து இன்னுமொரு காரணத்தாலும் கொதிக்கும் டெம்பரேசர்—பொங்கும் டெம்பரேசர்—மாறுவதுண்டு. வாய் குறுகலான ஒரு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு அதற்குத் தக்கபடி ஒரு கார்க் போடுவோம். கார்க்குக்கு இரண்டு துவாரம் விடவேண்டும். ஒரு துவாரத்தில் தெர்மாமீட்டரை நுழைத்து விட்டு மற்றொன்றில் ஒருவளைந்த கண்ணாடிக் குழாயைச் சொருகுவோம். கண்ணாடிக் குழாய்க்கு ஒரு இரப்பர் குழாய் வேண்டும். பாத்திரத்தைக் காய்ச்சலாம். ஜலம் பொங்கினதும் ஒரு இடுக்கியால் ரப்பர் துவாரத்தின் வாயைமூடுவோம். தெர்மாமீட்டரை உடனே பரீக்ஷை செய்யுங்கள். 213, 213½ டிகிரி வரையில் ஏறிவிட்டது. உடனே இடுக்கியை எடுத்து விடுங்கள். என்ன நிகழ்கின்றது? "புஸ்" என்று வெகு வேகமாய் ஆவி பாத்திரத்தினின்று வெளிப்போகின்றது; ஏன் அப்படி? உள்ளே ஆவி வந்துகொண்டேயிருக்க வெளியே போகாமல் நாம் இடுக்கியால் மூடினோம் அல்லவோ? அவ்வாறு உள்ளேயே தங்கி நிற்கும் ஆவி ஜலத்தை நன்றாய் அழுத்தத் தொடங்குகின்



றது. ஜலத்தின் மீது அழுத்தம் அதிகமாகவே ஜலம்கொதிக்கும் டெம்பரேசரும் ஏறுகின்றது. இம்மாதிரியே அழுத்தத்தை அதிகமாக்க அதிகமாகப் பொங்கும் டெம்பரேசரும் ஏறுவதைக்காணலாம். நமது பாத்திரத்தில் அதிகமாய்ப் பரீக்ஷை செய்யமுடியாது. ஏனெனில் கொஞ்சம் அழுத்தம் அதிகமாய்ப் போய்விட்டால் கார்க்கையே பிடுங்கிக்கொண்டு தெர்மாமீட்டர், கண்ணாடிக்குழாய், முதலான எல்லாம் ஆகாயத்தில் பறந்துவிடும். ஆகையால் பரீக்ஷை செய்யும்போது ஜாக்கிரதையாக இருப்பது அவசியம்.

அழுத்தம் குறைந்தபோது குறைந்த டெம்பரேசரிலேயே ஜலம்கொதிப்பதையும் மேற்சொன்ன கருவியைக்கொண்டே காட்டலாம். முன்போலவே ஜலத்தைப் பொங்கவிடலாம். ஜலம் பொங்கி ஆவி வெளிக்கிளம்பவே உள்ளிருக்கும் காற்றையெல்லாம் வெளியே தள்ளிவிட்டு பாத்திரமெல்லாம் ஆவிமயமாய்விடும். கண்ணாடிப் பாத்திரமாய் இருக்கவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் உள்ளே கொதிப்பது தெரியாதல்லவா?

அப்பொழுது விளக்கை எடுத்துவிட்டு உடனே ரப்பர்குழாயையும் மூட வேண்டும். இப்பொழுது பாத்திரத்துள் ஜலமும் நீராவியும் தவிர வேறு ஒன்றுமில்லையல்லவா? ஜலத்தின் மேலழுத்துவது நீராவியேதான் அல்லவா? சற்றுஜலத்தை பாத்திரத்தின் மீதுதெளித்து நீராவியைக்குளிரச்செய்வோம். உள்ளே இருக்கும் ஜலம் 'தளதள' வென்று கொதிக்கும். ஏன்? நீராவி குளிரவே அழுத்தம் குறைகின்றது. டெம்பரேசர் என்னவென்று பாருங்கள். சுமார் 200 டிகிரிக்குக் கூட குறைவாய் இருக்கும்.

ஆர். கே. சுவாமி. பி. எ., எல். டி.

---

## THE HISTORY OF THE CIVILIZATION OF MAN.

### மனிதனுடைய நாகரிக அபிவிருத்தி.

இவ்வுலகம் எவ்வளவு வருஷங்களுக்கு முன் சிருஷ்டிக்கப்பட்டதென்பதை நம்மால் நிர்ணயிக்க முடியாது. ஆயினும் அது வெகுகாலத்திற்குமுன், சுமார் இரண்டு கோடிவருஷங்களுக்கு முன் என்பது மட்டும் நிச்சயம். இவ்வுலகம் எவ்வாறு சிருஷ்டிக்கப்பட்டதென்பதையும் நம்மால் தர்க்கிக்க முடியாது. ஆனால் நாம்சொல்லக்கூடியது என்னவென்றால் மனிதன் அக்காலங்களில் எவ்வாறு வசித்து வந்தான், பிறகு எவ்வாறு கொஞ்சங் கொஞ்சமாய் நாகரிகமடைந்து இப்பொழுது தற்கால நிலைமையையடைந்தான் என்பதுவே. இப்பவும் இவ்வுலகில் முன் காலங்களில் வசித்த மாதிரியே அநேகர் வசித்து வருகிறார்கள்; ஆனால் அவர்கள் மிகச் சிலரே.

முற்காலத்திய மனிதனையும் அவன் வசித்த விதத்தையும் இப்பொழுது நாம் பார்த்தால் இவனும் மனிதனா என மயங்குவோம். ஆடைகள் கிடையாது; குடியிருக்க வீடு கிடையாது; காடுகளெல்லாம் திரிந்துகொண்டிருப்பார்கள். பசித்தபோது சமீபத்திலிருக்கும் எம்மிருகத்தையேனும் பிடித்து அப்படியே பச்சையாகத் தின்று விட்டு குளத்து நீரையேனும் ஆற்று நீரையேனும் குடிப்பார்கள். அநேகர் மனிதனையே அடித்துத் தின்று விடுவார்கள். அவர்கள் நிலம் பயிரிடுவதில்லை: காய்கறிகளின் உபயோகத்தையே அறியார்கள். மரத்தாலாகிய தடி ஒன்றே அவர்கள் ஆயுதம். இவ்வாறாக கொஞ்ச வருஷங்கள் சென்றன.

சுமார் நூறுவருஷங்களுக்குப் பின் மனிதனைப் பார்த்தால் முன்னிருந்தவனைவிட இவன் சற்று நாகரிக மடைந்தவனாயிருக்கிறான். இவன் மாம்சத்தை நெருப்பில் வாட்டிப்புசிக்கிறான். மரக்குச்சிகளை நெருப்பில் நுனியைக் கூராக்கி அம்புகள் போல உபயோகிக்கிறான். தான் கொன்ற மிருகங்களின் தோல்களையுரித்துக் காயவைத்துக் குளிர் காலங்களில் கம்பிளிபோல் உபயோகப் படுத்துகிறான். ஆயினும் நிலம் பயிரிடலும், காய்கறிகள் புசித்தலும் இன்னும் தெரியவில்லை. இவர்கள் பலர் ஒன்று சேர்ந்து மற்றொரு கூட்டத்தாருடன் சண்டைக்குச் செல்கிறார்கள். சண்டையில் ஜெயித்தவர், இறந்த மனிதரின் பிணங்களைச்சுட்டுத் தின்று விடுவது வழக்கம். சாதாரணமாய் இறந்தவரின் பிணத்தையே அவன் உறவினர் தின்று விடுவதுவழக்கம்.

இன்னும் சுமார் 200 வருஷங்களுக்குப் பின் மனிதனைப் பார்த்தால் இவன் இன்னும் ஒரு படிமேலே ஏறியிருக்கிறான். இவனுக்கு காய் கறிகளின் உபயோகம் தெரிந்திருக்கிறது. இவன் மனித மாம்சம் தின்பதில்லை. இவன் வெண்கல செப்புப் பாத்திரங்களை உபயோகிக்கிறான். சண்டை செய்வதில் கத்தியும் ஈட்டியும் உபயோகிக்கிறான். இவன் தன் குடும்பத்தில் இறந்தவரை ஓரிடத்தில் அடக்கம் செய்து அதன்மேல் ஓர் மண் மேடை கட்டுகிறான். பூமிக்குள்ளிருந்து தற்காலம் கண்டு பிடிக்கப் பட்டவைகளில், இம் மனிதன் உபயோகப் படுத்திய பாத்திரங்களும் ஆயுதங்களும் அகப்படுகின்றன. அகப்பட்ட எலும்புகளிலிருந்தும் மண்டையோடுகளிலிருந்தும், இவன் குறைந்த மனோவல்லமையுடையவனென்றும், நீண்ட கைகளும் குட்டையான தேகமும் பெற்றவன் என ஊகிக்கிறார்கள்.

பின் வரும் சுமார் ஐந்நூறு வருஷங்களில் பற்பல இடங்களிலிருந்து மனிதர் வெளியூருக்குக் கூட்டங்கூட்டமாய் சென்றுகொண்டிருக்கிறார்கள். இக்காலத்திலிருந்தவர்கள் ஆடுமாடுகள் மந்தைமந்தையாய் வளர்த்து வந்தார்கள். இவர்களெல்லாரும் கம்பிளி வஸ்திரங்கள் தரித்திருக்கிறார்கள். தத்தம் தேசத்தில் விருத்தியாகிவரும் ஜனத்தொகைக்கு இடம்



போதாமையாலும், அன்னியர்நெருக்குவதாலும், பிறதேசத்தில் சுகமாய்க் கவலையின்றி வாழலாம் என்ற எண்ணத்தாலும் பலர் ஒன்று சேர்ந்து வெளியூர்களுக்குச் சென்று வசிக்கத்தொடங்கினார்கள். இக்காலத்திலே தான் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறினார்கள். கிரேக்கியர்கள் யவன தேசத்தில் குடியேறினார்கள்.

இனிவரும் சரித்திரம் பொதுவாக மனிதனின் நாகரிக வபிவிருத்தியைக் குறித்தாலும், அவ்வபிவிருத்தி தேசத்திற்குத் தக்கவாறு மாறியிருக்கிறது. அக்காலங்களில் நாகரிக வெளிச்சம் இந்தியாவிலிருந்தே பாவியது. இந்தியா அதியுன்னத நிலைமையிலிருந்தது. கிரேக்க தத்வசாஸ்திரிகளும் மற்ற நூலாசிரியர்களும் இந்தியாவிற்கு வந்து ஹிந்து தத்வத்தைக் கற்றுப்போனதாயும் தெரியவருகிறது. அப்பொழுது மற்ற தேசங்களில் ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்களில் முன்போன்ற மனிதரே வசித்து வந்தனர். ஆனால் இவர்கள் முரட்டுமனிதரே யாயினும் வியாபார விஷயம் கொஞ்சந் தெரிந்தவராயிருக்கிறார்கள்.

இந்தியரும் கிரேக்கரும் உயர்ந்த பதவியிலிருந்தும் சுமார் ஆயிரம் வருஷங்கள் கழித்து அவர்கள் நிலைமை மற்றவர்களால் பறித்துக்கொள்ளப்பட்டது. இந்தியாவை மகமதியர் ஆண்டுவந்தனர். கிரேக்க தேசத்தை ரோமாபுரியார் ஆண்டுவந்தனர். ரோமாபுரியார் கொஞ்சகாலம் உயர்ந்த நிலைமையிலிருந்தார்கள். பிறகு தனித்தனியே சில்லரை ராஜ்யங்கள் கிளம்பின. முரட்டு ஜெர்மன் ஜாதியார் அடிக்கடி கொள்ளையடிக்கத் தொடங்கிப் பல இடங்களில் ஒரே நிலையாகக் குடியேறினார்கள். இப்பொழுதான் இங்கிலாந்துதேசத்தில் சாக்ஸனியர் தற்கால இங்கிலீஷ்காரரின் முன்னோர்குடியேறினர். இவ்விதமாக ரோம ராஜ்யமும் விழுந்துவிட்டது.

பிறகு, நாம் மனிதனின் நாகரிக அபிவிருத்தியைத் தொடர்வோம். ஒரே இடத்தில் நிலையாக வசிக்கத் தொடங்கியபடியால் மனிதன் பூமியில் பயிரிடத்தொடங்கினான். உழுவதும், விதைபோடுவதும், நீர்பாய்ச்சுவதும் அவனுக்கு நன்றாய்ப்பழகியது. மாம்ஸ ஆகாரத்தைச் சிலர் அடியோடு விட்டுவிட்டார்கள். காலஞ் செல்லச்செல்ல எல்லா விதத்திலும் அபிவிருத்தி உண்டாகியது. மிருகத்தின் தோல்களை செவ்வையாய்ப் பதனிடக் கற்றுக்கொண்டனர். ஆட்டு ரோமத்தினால் வஸ்திரங்கள் நெய்ய அறிந்தனர். ஒரே இடத்தில் நிலையாக வசித்தபடியால், அவ்விடத்திய பூமியைவெட்டி அதில் அகப்பட்டவைகளை உபயோகிக்கத் தொடங்கினர். இரும்பு ஆயுதங்களும் சாமான்களும் உபயோகிக்கத் தொடங்கினர். பொன், வெள்ளி முதலிய உலோகங்களை ஆபரணங்களாகவும் காசுகளாகவும் உபயோகித்தார்கள்.

மேலும், ஒரு ஊரில் அகப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஒரு சாமானை அந்த ஊரார் உபயோகத்திற்குக் கண்டு மிகுந்திருந்ததை, அச்சா

மான் அகப்படாத மற்றொரு ஊரில் கொண்டுபோய் விற்கத்தலைப்பட்டனர். இவ்விதமாக வியாபார வபிவிருத்தியுண்டாகியது. தத்தம் ஊரில் அகப்படாத வஸ்துவை வரவழைத்தார்கள். ஆகவே ஊருக்கு ஊர் வர்த்தகக்கட்டுப்பாடு உண்டாகியது. பிறகு தேசத்திற்கு தேசம் வர்த்தகம் தொடங்கியது. ஆகவே கப்பல் யாத்திரை அதிகப்பட்டது. மனிதனின் தேவை அதிகப்பட அதிகப்பட வேலைக்குச் சாதகமான இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. தேவையே கண்டுபிடிப்பதற்குக் காரணம். துன்பமடைந்தவர் தாம் துன்பம் நீக்க வழி அறியத்தொடங்குவார்கள். சில தேசங்களில் தேசத்தாருக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் அகப்படாததினால், எது தம்தேசத்தில் அகப்படுகிறதோ அதை விருத்திசெய்து அந்தவிருத்திக்குச் சாதனமானவைகளையும் கண்டு பிடித்து, அது அகப்படாத பரதேசங்களில் அதை விற்று தம்தேசத்துக்கு வேண்டியதை வாங்கிச் செல்வார்கள்.

மனிதர்கள் ஓரிடத்தில் ஒன்றாய் வசிக்கத் தலைப்பட்டாராதலின், அவர்களுள் சண்டை சச்சரவுகளைத் தடுப்பதற்கும், தேசத்தை அன்னியரிடமிருந்து காப்பதற்கும் ஒரு வன்மை மிகுந்த அதிகாரம் தேவையாயிற்று. அரசன் ஒருவன் ஏற்பட்டான்; இராஜ்யவிஷயங்களைக் கவனிக்க அமைச்சர்கள் ஏற்பட்டார்கள்; தேசபாதுகாப்பிற்கு போர்வீரர் ஏற்பட்டார்கள். தேசத்தார்கள் சண்டை சச்சரவு செய்துகொள்வதைத் தடுக்கவும், வலியவன் இளையவனைத் துன்பப்படுத்தாமலிருக்கவும் நியாயஸ்தலங்களும், தேசவமைதிகாக்கும் வீரர் கூட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன.

ஜனங்கள் ஓரிடத்தில், பிறர்பயமின்றி, அமைதியாய் வசிக்கத் தொடங்கியதால், பலர் தத்வஆராய்ச்சியும் மத ஆராய்ச்சியும் செய்யத் தொடங்கினர். நீர், நிலம், வாயு, அக்னி, ஆகாயம் இவைகளை கடவுள் எனமுதவில் எண்ணினாலும், பிறகு என்றும் அழியாத, சகலவல்லமையும் பொருந்திய பரப்பிரம்மம் எனப்படும் ஒரு சக்தி உளது என்றும் அச்சக்தியின் வன்மையாற்றான் இவ்வுலக வ்யவகாரங்களும் மற்றும் சகல காரியங்களும் நடக்கின்றன என்றும் உணர்ந்து அந்நீதியைப் பிறர்க்குப் போதிக்கத் தொடங்கினர்.

ஆ! உலகம் எவ்விதம் காலம் செல்லச் செல்ல மாறுகிறது? இனிமேல் மனிதன் எவ்வாறு இருப்பனோ?

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே.

வி. என். ஆர்.

---



# STORY OF PERDITA.

# * பார்டிடாவின் கதை.

(82-வது பக்கத் தொடர்ச்சி)

## அண்டிகோனஸ், குழந்தை இவர்களின் தலைவிதி.

அண்டிகோனஸ் இராஜாவினுடைய பெண்குழந்தையை எடுத்து கப்பலில் செல்லும்பொழுது, புயல்காற்று திடீரென்று அடிக்க ஆரம்பித்து கப்பலை ஆஸ்திரியாவின் கடற்கரைக்குச் சமீபத்தில் அடித்துவந்தது. இந்த இராஜ்யம் பாலிக்ஸ்னஸ் என்ற நற்குணமமைந்த அரசனுடையது. லியான்டஸும், பாலிக்ஸ்னஸும் குழந்தைப்பருவ முதற்கொண்டு இவர்கள் தந்தைகள் சாகும்வரையில் சேர்ந்து வளர்க்கப்பட்டும், கல்வியும் ஒரே பாடசாலையில் சேர்க்கப்பட்டு போதிக்கப்பட்டும் வந்தார்கள். இவ்விருவர்களுடைய தந்தைகள் அத்யந்த சினேகிதர்கள். இவர்களிறந்தவுடன் லியான்டஸும், பாலிக்ஸ்னஸும் ஒருவர் ஒருவரைவிட்டுப் பிரிந்து தங்கள் தங்கள் இராஜ்யத்தை ஆண்டுவர நேர்ந்தமையால் பிரிந்து சென்றுவிட்டார்கள்.

இங்கு கப்பல்வந்ததும் அண்டிகோனஸ் குழந்தையை ஓரிடத்தில் போட்டுவிட்டு, அதன் தலைவிதிப்படி செத்தால் சாகட்டும், பிழைத்தால் பிழைக்கட்டும் என்று எண்ணிக்கொண்டு கப்பலுக்குத் திரும்பிச் சென்றான். அரசனது துராலோசனைக்கும் கெட்ட காரியங்களுக்கும் இசைந்தவனை கடவுள் தண்டிக்காமல் விட்டுவிடுவரா? காட்டின் புதரிலிருந்து ஒரு கரடி ஓடிவந்து இவனைப்பிடித்துக் கிழித்துக் கொன்று விட்டது. இவன் ஸிஸிலிக்குச் சென்று அரசனிட்ட வேலையைச் செய்ததாகச் சொல்லமுடியாமற்போனது தெய்வச்செயலன்றோ? கெட்ட எண்ணமுள்ள அரசனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்ததற்கு இது தகுந்த தண்டனையல்லவா? நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கிறது என்பது உண்மையாயிற்று.

நிற்க, மண்தரையில் போடப்பட்ட குழந்தைக்கு அழகான உடுப்புகள் தரிக்கப்பட்டும், விலையுயர்ந்த நகைகள் அணியப்பட்டுமிருந்தன. ஏனெனில் ஹார்மியோன் தனது கணவரிடத்தில் இக்குழந்தையை யனுப்பும்பொழுது ஒருவேளை அவர் மனம் குழந்தையின்மீது திரும்பி தன்மீது இரக்கங்கொள்ள மாட்டாராவென்று எண்ணி இவ்விதம் அழகு செய்து அனுப்பினாள். அண்டிகோனஸோ அதன்மேல் உடுப்பின் நுனியில் ஒரு கடுதாசி எடுத்து அதில், பார்டிடா என்ற பெயரை எழுதி கட்டிவிட்டான். பார்டிடா வென்றால் உயர்ந்த வம்சத்தில் பிறந்தவளென்றும் இவளதுதுக்கமான தலைவிதி இதுதான் என்றும் அர்த்தம்.

* இங்கிலாந்திலிருந்து 100 சித்திரப்படங்கள் வந்திருக்கின்றன. ஒவ்வொரு பத்திரிகையிலும் இவ்வித சித்திரப்படம் பிரசுரிக்கப்படும்—ப. ர்.



## இரக்கமுள்ள ஆட்டிடையனும் பார்டிடாவின் புதிய வீடும்.

இந்த பரிதாபமான குழந்தை பூமியில் படுத்துக்கொண்டிருந்தது. "அனுதோதெய்வரக்ஷகா" என்பதற்கிணங்க, இரக்கமுள்ள இடையன் தன் ஆடுகளுடன் இங்குவந்தவுடன் இக்குழந்தையைக்கண்டுமனமகிழ்ந்து, அன்புடன் இதை உடனே தன் வீட்டிற்கு எடுத்துக்கொண்டுபோய் தன் மனைவியிடத்தில் கொடுத்தான். அவள் இக்குழந்தை தங்களுக்குக் கிடைத்ததின் பொருட்டு மிக்க ஆநந்தங்கொண்டு அதை மிக்கபிரியத்துடன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்த்துவந்தாள். இவர்களது தரித்திரம் இக்குழந்தையின் மீதிருந்த விலையுயர்ந்த நகைகளை



ஒளித்துவைக்கும்படி தூண்டிற்று. இப்படி வெகுகாலம் செய்வது சரியல்லவென்று எண்ணி இந்த ஊரைவிட்டு வேறு கிராமத்திற்குசென்று ஒரு குடிசையை விலைக்குவாங்கிக்கொண்டு அதில் வசித்துவந்தார்கள். இங்குள்ளவர்களுக்கு இவனுக்கு எவ்விதமாய் இவ்வளவு விலையுயர்ந்த நகைகள் கிடைத்தனவென்று தெரியாதாகையால் சில நகைகளைவிற்று நிலம் வாங்கிக்கொண்டு சுகமாக காலத்தைக் கழித்துவந்தான். இவனை அக்கிராமத்தார்கள் தனமுள்ள இடையனென்று சொல்வார்கள். இடையனும் இடைச்சியும் பார்டிடாவைத் தங்கள் குமாரத்தியைப்போல் பாவித்து வளர்த்து வந்தார்கள். அவளும் இவர்கள்தான் தன் பெற்றோர்களென்று எண்ணி அவர்களிடத்தில் மிக்க அன்பாய் வளர்க்க வளர்ந்துவந்தாள்.

குழந்தையாகிய பார்டிடா வெகு அழகுள்ளவளாகவும், அடக்கமுள்ள கன்னிப்பெண்ணாகவும் தினே தினே வளர்ந்துவந்தாள். சாதாரணமாக ஏழைகளாகிய ஆட்டிடையர்களுடைய குமாரர்களுக்கு கல்வி வாசனையிருப்பது அரிது. அவர்களுடைய குமாரத்திகளுக்கு கல்வி அறிவுயிருக்குமா ? இராதல்லவா ? நமது பார்டிடாவும் பாடசாலைக்கு அனுப்பப்படவில்லையாகையால் கல்வி அறிவு எப்படியுண்டாகும்? இவள் இவ்விதம் இருந்தபோதிலும் இவளுக்கு இயற்கையாயுள்ள வரப்பிரசாதம்—தன் தாயாரிடமிருந்து பரம்பரையாய்வாய்ந்தகுணம்—இவளுக்கு எவரும்போதிக்காத மனதில்பிரகாசித்துக் கொண்டிருந்தது. இவளது வணக்கம், அச்சம், நாணம், பயிர்ப்பு முதலியவைகள் அவ்வூரிலுள்ளவர்களின் மனதைக் கவர்ந்தன. எல்லா ஜனங்களும் இவளது இனிய மொழிகளையும், நன்னடத்தை, தெய்வபக்தி முதலியவைகளையும் கண்டு மனமகிழ்ந்து இக்கன்னியாப் பெண்மணியை ஆசீர்வதித்துவந்தார்கள்.

C. S. R.

---

## RAJAH'S DIARY.

### ராஜா டைரி.

சிறுபெண்கள் ஒரு காரியத்திற்கும் பயன்படமாட்டார்கள். அவர்களால் தீமையே யொழிய நன்மையே கிடையாது. என் தாயாருடைய ஆப்த தோழி ஒருவள், கோமளா என்னும் தன் பெண்ணுடன் கூட எங்கள் வீட்டுக்கு வந்தாள். கோமளா மிகவும் அழகாயும், சாதுவாயு மிருந்தமையால் அவளை என்னுடன் விளையாட அழைத்தேன். அவளும் தன் தாயாரின் உத்திரவு கேட்டுக்கொண்டு விளையாட வந்தாள். அவள் ஒரு பெரிய வெள்ளைக்கார பொம்மை ஒன்று வைத்திருந்தாள். அது சதா கண்ணைச் சிமிட்டிக்கொண்டேயிருந்தது. அதைப்பார்க்கப் பார்க்க என் குதூகலம் அதிகரித்தபடியால் அதின் தலையில் ஒரு ஆணியை வைத்தடித்து

ஒரு பெரிய துவாரம் செய்து பார்த்தேன். இரண்டு ஈயக் குண்டுகள் கம்பிகளால் கட்டி உள்ளே தொங்கவிடப் பட்டிருந்தமையால் அவைகள் சதா ஆடிக்கொண்டிருக்க அதினால் பொம்மையும் சதா கண்மூடித்திறந்து கொண்டே யிருந்ததாக தெரியவந்தது. இப்பொழுதோ அந்த பொம்மை வக்ரபார்வையாய் பார்க்கிறது. இந்த அல்ப விஷயத்திற்காக கோமளா ஒரு சிறு குழந்தையைப்போல் அழுதாள். இப்படியும் முட்டாள்கள் உண்டா! பொம்மையின்கண் சிமிட்டாவிட்டால் என்ன? இப்படி பரீட்சை செய்து செய்து பார்த்ததால் சிமிட்டும் கண் வைத்து பொம்மை செய்யும் விதம் கற்றுக்கொண்டோமல்லவா. அதற்காக சந்தோஷப்படாமல் வீணாய் அழும் முட்டாள்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஸ்வயபுத்தியும் கிடையாது, சொல்புத்தியும் கிடையாது. இந்த தர்மசங்கடத்திற்கு என்ன செய்கிறது? தவிர என்பணத்தைக் கொண்டு கோமளாவுக்கு ஒரு புதிய பொம்மை நான் வாங்கித் தரவேண்டுமென்று என் தாயார் சொல்லுகிறார். நான் வில்லாட்டம் கற்றுக்கொள்வதற்காக ஒரு வில்லும் அம்புகளும் வாங்குவதற்காக கொஞ்சம்கொஞ்சமாய்ப் பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். அதில் பாதி பணத்திற்கு இன்னும் தண்டச்சிலவு ஏற்பட்டுவிட்டது. இந்த அநியாயத்திற்கு யாரிடம் முறையிட்டுக்கொள்ளுவது? இதுவும் என் அதிர்ஷ்டம் தான்!

கோமளா இன்னும் ஒருவாரம் எங்கள் வீட்டில் இருப்பாளாம். இந்த ஒருவார காலமும் நான் சாதுவாய் யாதொரு போக்கிரித்தனமும் செய்யாமலிருந்தால் என் தாயார் எனக்கு ஒருவில்லும் அம்புகளும் வாங்கிக்கொடுப்பதாய் சொல்லியிருக்கிறார். இம்மாதிரி விஷமம் செய்யாமல் யோக்யனா யிருந்தால் வில்வாங்கிக்கொடுப்பதாய் என் தாயார் என்னிடம் சொல்லி இத்துடன் ஆறுதரமாகிறது. ஒவ்வொரு தடவையிலும் ஏதாவது அசந்தர்ப்பங்கள் என்பெயருடன் சம்பந்தப்பட்டு நடந்து விடுகின்றன. ஆகையால் எனக்கு வில்லும் கிடைப்பதில்லை. சரிவர ஒழுங்காய் நடந்து வரும் குடும்பங்களிலும் தவறுதல்கள் உண்டாகுமென்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள். எங்கள் குடும்பத்திலோ சதா தவறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றன. ஆகையால் எங்கள் குடும்பம் எல்லா குடும்பங்களை விட சிலாக்கியமானதென்றும், ஒழுங்கானதென்றும் கட்டாயம் சொல்ல வேண்டுமல்லவா ?

ஏழு தினங்களில் ஒன்று கழிந்துவிட்டது. இரண்டாம் நாளும் எப்படியாவது சரியாய் கழியவேண்டு மென்று தெய்வத்தை பிரார்த்தித்தேன். ஏனெனில் மறுநாள் என் தகப்பனாருடன் நான் ஒரு ஊருக்குப் போவதாய் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் "ஆங்காலமெல்லாம் அனியாயம் செய்து விட்டு, சாங்கால மெல்லாம் சங்கரா, சங்கரா



வென்றால், சங்கரன் கண்ணெடுத்துக் கூடபார்க்கமாட்டே னென்கிறார்." நான் எவ்வளவு வேண்டிக்கொண்டும் தெய்வம் கொஞ்சம் கூட கருணையில்லாமல் எனக்கு ஒரு கெடுதலை விளைத்ததே! இதுவோ தெய்வபக்திக்குப் பலன்! இருந்தாலும் தெய்வத்தை நிந்திக்கலாகாது. 'தீமை முதலில் நேர்ந்தால் நன்மை பின்னேவரும்' என்று என் உபாத்தியாயர் சொல்லியிருப்பதைப் பார்ப்போம்.

நல்லது! நேற்று நான் செய்த காரியத்தைச்சொல்லுகிறேன். நானும், கோமளாவும், பகல் முழுவதும் பலவிதவிளையாட்டுகள் விளையாடினோம். சாயங்காலமானதும் என் உபாத்தியாயர் எனக்கு சொல்லியிருந்த "காணாமல்போன கண்மணி" என்ற ஒரு கதை என் ஞாபகத்துக்கு வந்தது. அதைக் கோமளாவுக்குச் சொன்னேன். அவளும் அதைக்கேட்டு நான் மிகவும் கெட்டிக்காரனென்று மெச்சினாள். பிறகு நான் அக்கதையில் வரும் திருடனாயும், கோமளா காணமல் போன கண்மணியாயும் இருந்து விளையாடலாமா வென்றேன். அவளும் சம்மதித்தாள்.

உடனே என்னுடைய உடுப்பை அவளுக்குக் கொடுத்து தரித்துக் கொள்ளும்படிசெய்து என்னுடைய கைவண்டியி லேறிக்கொள்ளும்படி செய்தேன்; அவளும் ஏறிக்கொண்டாள். என்னால் கூடிய வேகமாய் வண்டியை இழுத்துக்கொண்டு எங்கள் தோட்டத்திற்குள் மறைவான ஓர் இடத்திற்குப்போனேன். அங்கே வண்டியை நிறுத்திவிட்டு கோமளாவைப் பார்த்து "பெண்ணே! நான் யார் தெரியுமா? நான்தான் வீரசூர பராக்ரமசாலி யென்று பெயர்போன காமாட்சிதேவன். நான் உன் பெற்றோர்களிடமிருந்து உன்னை திருடிக்கொண்டு வந்திருக்கிறேன். இனிமேல் என்னுடன்தான் நீவசிக்கவேண்டியது. ஒருக்கால் யாராவது தேடிவந்து கண்டுவிட்டால் அவர்கள் உன்னை தங்கள் பெண் என்று தெரிந்துகொள்ளாதபடி உனக்கு இப்பொழுது ஆண் உடுப்பு கொடுத்து தலையை மொட்டையடிக்கப் போகிறேன். பேசாமல் என் சமீபத்தில்வா" என்று சொல்லிக்கொண்டு முன்னமே என் சட்டைப்பையில் தயாராய் ஒளித்துவைத்திருந்த கத்தரிக்கோலை எடுத்து "வேண்டாம், வேண்டாம், அம்மாள் திட்டுவள்" என்று கோமளா சொல்லி அழுதுகொண்டேயிருக்க, நான் ஒருபெரிய கள்வர் தலைவனைப்போல் நடித்துக்கொண்டு அந்தப் பெண்ணின் தலையிலிருந்த மயிர் முழுமையும் கத்தரித்துவிட்டேன், பிறகு அங்கேயிருந்த வேலியின் சமீபத்தில் அவளை அழைத்துப்போய்விட்டு "பெண்ணே, நீ காணமல் போய்விட்டாய் என்று உன் தாய் தகப்பன்மார் தேடுவார்கள். ஆனால் நீ அவர்களைப்பற்றி இனிமேல் நினைப்பதில் பிரயோஜனமில்லை. என் பெண்ணாகவேயிருந்து சரியாய் நடந்துவந்தால் நான் உன்னை வளர்த்துவருகிறேன். ஆனால் நீ சதா ஆண் உடைதரித்து வரவேண்டும். இப்பொழுது

இங்கேயேயிரு. நான்போய் ஆகாரம்கொண்டுவருகிறேன்" என்று காமாட்சிதேவன் சொன்னதுபோல் நான் கோமளாவிடம் சொல்லிவிட்டு வண்டியை இழுத்துக்கொண்டு வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டேன். நான் வீடுசேருவதற்குள் மழை பிடித்துக்கொண்டு ஓயாமல் அடித்தது. அது நின்றதும் போய் கோமளாவை வீட்டிற்கு அழைத்துவரலாமென்றிருந்தேன். மழையோ நிற்கவில்லை. வீட்டில் எல்லாரும் சாப்பிட உட்கார்ந்ததும் என் தாயார் என்னையும் கோமளாவையும் தேடினாள். கோமளாவை விட்டுவிட்டு தனியே உள்ளே போவதற்கு எனக்கு பயமாயிருந்ததால் மனதை திடம் செய்துகொள்ளும்வரை வாசலிலேயே ஒளிந்து இருந்துவிட்டு பசி வருத்தம் அதிகரிக்கவே மெதுவாய் உள்ளே போனேன்.

என்னைப்பார்த்ததும் " இதோ வந்துவிட்டார்கள். ராஜா ! கோமளா எங்கே? அவளையும் சாப்பிட அழைத்துவா " என்றாள் கோமளாவின் தாயார்.

நாங்கள் 'காணாமல்போன கண்மணி' என்ற ஆட்டம் ஆடினோம். கோமளா காணாமல் போய்விட்டாள் என்றேன்.

" எங்கே காணாமல் போய்விட்டாள் " என்று என் தாயார் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

நானும்சாப்பிட உட்கார்ந்துகொண்டே "ஊரோரத்திலிருக்கும் நம்முடைய சிறிய தோட்டத்தில்" என்றேன்.

அப்பொழுதுதான் இடித்துக்கொண்டிருந்த மின்னலும் இடியும் எங்கள் வீட்டின் பேரிலேயே விழுந்து விட்டாற்போல் எல்லாரும் வாசலுக்குத் தாவி ஓட ஆரம்பித்தார்கள். என் தகப்பனாரும் என் கையை கெட்டியாய் பிடித்துக்கொண்டு "நீ சொல்வது நிஜம்தானா" என்று என்னை அதட்டிக் கேட்டார்.

" ஆமாம், நான்தான் காமாட்சித்தேவன் வேஷம் போட்டுக்கொண்டு கோமளாவை திருடிப்போய் தோட்டத்தில் வேலிஓரமாய் ஒளித்துவைத்துவிட்டுவந்தேன். இப்பொழுது மழை அதிகமாயடிக்கிறதினால் நான் போய் அழைத்துவர முடியவில்லை. நீங்கள் சீக்கிரம் வண்டியுடன்போனால் அவளை அழைத்து வரலாமென்றேன்.

கோமளாவின் தாயார் கையைப் பிசைந்து கொண்டு ஒருசிறு குழந்தை வாழைப்பழத்திற்கு அழுவது போல விம்மிவிம்மி அழுதாள். உடனே கோமளாவை அழைத்து வராவிடில் தன் பிராணம் போய் விடுமென்றாள். கோமளா மழையில் நனைகிறாளேவென்று சொல்லியழுதாள். ஏன் அதற்காக அவ்வளவு வருத்தப்பட வேண்டும்? அவள் கொஞ்சம் மழையில் நனைந்தால் தானென்ன? சர்க்கரையா அல்லது உப்பா கரைந்துபோவதற்கு?



"வெட்கமில்லாமல் எப்படித்தான் இங்கே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாயோ ! உன் சட்டைப்பையில் அடைபட்டிருப்பது என்ன ?" என்றாள் துருதுருத்த ஆநந்தா.

" ஒன்றுமில்லை கோமளாவின் தலைமயிர். அவள் உங்களுக்குத் தெரியாமலிருக்கும் வண்ணம் அவள் மயிரைக் கத்தரிக்க வேண்டியிருந்தது. அவளை வேஷம் மாற்றி வைத்திருக்கிறேன். தோட்டத்தில் தேடும்பொழுது ஒருகிழிந்த உடைதரித்துக் கொண்டு முகத்தில் மைபூசப்பட்டு, மொட்டையடித்துக் கொண்டிருக்கும் ஒரு பையனைப் பார்த்தால் அவன் தான் கோமளா வென்று தெரிந்து கொள்ளுங்கள்." என்றேன்.

கோமளாவின் தாயார் இதைக் கேட்டதும் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்து விட்டாள். என்தாயார் அவளுக்கு சைத்யோபசாரங்கள் செய்தாள். என்தகப்பனார் ஒரு விளக்குடன் சில சிநேகிதர்களையும் அழைத்துக் கொண்டு அநியாயமாய் சாப்பாட்டைவிட்டு எழுந்திருக்கச் சொல்லி என்னையும் அழைத்துக் கொண்டு எங்கள் சிறிய தோட்டத்திற்குச் சென்றார்.

எனக்கோ இவை ஒன்றும் பிடிக்கவே யில்லை. என்ன கலகம்? என் குழப்பம்? எவ்வளவு ஆர்பாட்டம்! இருந்த போதிலும் இவை யெல்லாம் பார்க்க வெகு தமாஷாய்த்தானிருந்தது. நிஜமாகவே வீட்டில் குழந்தைக் காணாமல் போனால் தாயார் படும்கஷ்டமும், அவளுடைய புலம்பலும் தகப்பனார் பரபரப்புடன் எக்காரியந்தான் செய்வதென்பதுகூடத் தெரியாமல் திகைத்து நிற்பதும், வம்பர்கள் துக்கம் விசாரிப்பதும், அவர்கள் சில கோளின் மேல் குற்றம் சாட்டும் சுபாவமும், எல்லாம் பார்க்க பரிதாபப்படக்கூடியதும், வருத்தப் படக்கூடியதாயுமிருந்தது.

இருந்தாலும், பசி ஒரு பக்கம் அதிகரிக்க சாப்பாட்டை விட்டு விட்டு கோமளாவை ஒளித்து வைத்த இடத்தை காண்பிப்பதற்காக நானும் போக வேண்டியிருந்தது. வழி முழுமையும், நான் அவர்களுடன் இல்லாதவன் போலவே பாவித்துக்கொண்டு என்னை போக்கிரி யென்றும், மிகவும் கெட்டபையனென்றும், பலவிதமாய் இகழ்ந்துபேசின அவர்கள் அசப்பத்தனத்தை என்னென்று சொல்வது! என்னைப் போன்ற நல்ல எண்ணமுடைய பையன்கள் ஏதாவது விளையாட்டுக்காகச் செய்தால் அதை மற்றுமிருப்பவர்கள் ப்ரமாதப் படுத்திவிடுகிறார்கள். இம்மாதிரி விளையாடுவது கெடுதலென்று தெரிந்திருந்தால் நான் இப்படி செய்தேயிருக்க மாட்டேன் !

அரசமரத்து பிள்ளையாரே இந்த வெள்ளிக்கிழமைதினம் உனக்கு இரண்டு தேங்காய் உடைக்கிறேன். என்மேல் குற்றமில்லாமல் கோமளா அகப்பட வேண்டுமென்று வேண்டிக் கொண்டே தோட்டத்திற்குப் போ

னேன். அங்கே நான் விட்டு வந்தயிடத்திலேயே கோமளா அழுதுகொண்டு மழையால் நனைக்கப்பட்டு வேலியோரமாய் பதுங்கியிருந்தாள். என் தகப்பனாரும் அவளைவாரி யெடுத்து வண்டியில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு அவள் தாயாரிடம் கூட்டிக்கொண்டு போனார். நானும் மற்றும் கூடவந்தவர்களும் நடந்து போகவேண்டியிருந்தது. வீட்டில் கோமளாவுக்கு நடந்த உபசரணைகள் சொல்லி முடியாது. அவளைத் தேடப்போய் நானும் மழையில் நனையவில்லையா? என்னை மாத்திரம் ஏன் ஒருவரும் கட்டிமுத்தமிடவில்லை! எனக்குபசி அதிகமாயிருந்தும் ஒருவரும் எனக்கு கல்கண்டு பட்சணங்களும் கொடுக்கவில்லையே! சூடாய் காபி கோமளாவுக்கு மாத்திரம் தானே வைத்துக் கொடுத்தார்கள். அவளருகில் சேர்பாவில் போய் உட்கார்ந்த என்னை துரத்திவிட்டார்களே! அது நியாயமா? இம்மாதிரி பெரியவர்கள் வஞ்சனை செய்வது சரியாவென்று நீங்களே யோசியுங்கள்.

"மாடியில் அறையில்போயிரு, நான்வருகிறேன்" என்று என் தகப்பனார் சொன்னதும் அதின் அர்த்தம் புரிந்தது. முதுகுக்கு எண்ணெய் தடவிக் கொள்ளவேண்டியது தான். இருந்தாலும் சத்துருபடையெடுத்து வந்தால் கோட்டைகட்டி அதற்குள் ஸிவாஜீ மகாராஜா ஒளிந்துகொள்வது வழக்கம் என்று உபாத்தியாயர் சொல்லியிருக்கிறாரே. நானும் அம்மாதிரியே இப்பொழுது ஏன் செய்யக்கூடாது என்று எண்ணிக்கொண்டு என் தகப்பனார் அறைக்குள் சென்று கதவைச்சாற்றி அதன்பின் மேஜையை யிழுத்துப் போட்டு அதின் பேரில் பெரிய கண்ணாடி விளக்கையும், முகம்பார்க்கும் நிலைக்கண்ணாடியையும், புஸ்தகம் வைக்கும் சிறியகண்ணாடி அலமாறியையும், வைத்திருந்தேன். தகப்பனார் வெகு வேகமாய் வந்தார். கதவு சாற்றியிருந்தது. ஆனால் சன்னலை சாற்ற மறந்துபோய்விட்டேன். சன்னல் வழியாய் பார்த்தார். நான் என் கோட்டை மத்தியில் உட்கார்ந்திருந்தேன் "அடே ராஜா, கதவைத்திற" என்றார்.

"சக்தியிருந்தால் கோட்டையை முற்றுகை போட்டு பிடித்துக்கொண்டு பிறகு என்னை சிறை படுத்திக் கொள்ளலாம். இல்லாவிடில் நான் ஜெயித்ததாக ஒப்புக்கொண்டு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளலாம். அதின் முக்கிய நிபந்தனை (1) என்னை அடிக்கக்கூடாது. (2) நேற்றுமுழுமையும் எவ்வளவோ அடக்கமாய் யாதொரு விஷமமும் செய்யாமலிருந்ததற்காக அம்மா சொன்னபடி எனக்கு ஒரு வில்லும் அம்புகளும் வாங்கிக் கொடுக்க வேண்டும்" என்றேன்.

என்கோட்டையைச் சுற்றி வைத்திருந்தது கண்ணாடி சாமான்களாகையால் தகப்பனார் சமாதான உடன் படிக்கைக்கு ஒப்புக்கொண்டார். பசி வருத்தம் அதிகமான படியால் நானும் வெளியே வந்தேன். தகப்பனாரும்



பெரியமனுஷ்யராகையால் சொன்ன பேச்சுத் தவறவில்லை. டைரியே! நானும், உனக்கு வாக்களித்தபடி என் சங்கதிகளை உன்னிடம் சொல்லிவிட்டேன். இதோ தூங்கப்போகிறேன். நமக்கு தெய்வம் துணையிருப்பாராக.

(இன்னும் வரும்)

பி. வி. சேஷாத்திரி சர்மா

---

## கற்பறிந்த கணவன்

## CHAPTER I.

மாசிமாதம் ஓர் வெள்ளிக்கிழமை யன்று மதுரை வாசிகளனேகர் சாயரட்சை கர்ப்பூர தீபாராதனைக்காக ஆலயம் சென்றனர். பூரண சந்திரன் ஒளிக்குத் தன் நிறம் தோற்பதா என்பது போல மதில்களில் சுண்ணாம்புப் பட்டைகள் ஒளிவீசின. கதம்பவனமலரின் வாசனையும் இனிய தென்றற் காற்றும் அந்நிலவில் பக்தர்களையும் கூட வெளிப் பிராகாரத்திலேயே சற்றுதங்கி உலாவிச்செய்ததென்றால் மற்றவர்களைக்கேட்பானேன்? வைதீகப் பெரியோர்கள் சிலர் சிவப்பழமென உருத்திராட்ச மாலைகள் அணிந்து பக்தியாய் வேதகானம்செய்து ஒதுங்கி நடந்தனர். யுவதிகள்கூட உல்லாசமாக சம்பாஷித்து ஏகினர். சிறுவர்கள் துள்ளிவிளையாடிக் கொண்டு மற்றவர்களுக்கு குறுக்கும் நெடுக்குமாக தொந்திரவுசெய்தனர். இவர்களில் ஒரு வாலிபன். "என் பாலு உன்னைச்சென்ற வெள்ளிக்கிழமை பள்ளிக்கூடத்தில் பார்த்ததுதான். முந்தாநாள் முதல் உன்னிடம் ஒரு விஷயம் பேசவேண்டுமென்றால் உங்களும் தெரியவில்லை. நடேசனைக் காட்டச்சொல்லலாமென்றுபுறப்பட்டேன். கும்பிடப்போனதெய்வம்நீயேஎதிர்ப்பட்டாய்."

பாலசந்திரன்:—"என் தினகரம், என்னவிஷயம்? அவ்வளவு அவசரம்."

தின:—"போன நாயிற்றுக்கிழமை எங்க மாப்பிள்ளை ஸ்ரீனிவாஸன் அவன் பெரியப்பா பிள்ளைகள் நாகநாதன் நடேசன்...ராஜாமணி பால; "யார் ராஜாமணி."

தின:-"அவன்தான் நீசாட்சிசொல்லி அபராதம்கொடுத்து வந்தானே"

பால:—"நோ நோ (nono) நான் காரணமில்லை."

தின:—"கேளேன் எல்லாருமாக என்னையும் அழைத்துக் கொண்டு ஆனைமலைக்குப் போனார்கள். பேச்சு நடுவில் ராஜாமணி உன்னைப் பற்றி வாயில் வந்தபடி வைது வயிற்றெரிந்தான். அவனை ஸ்கூலிலிருந்து டிஸ்

மிஸ் பண்ணிவிட்டார்களல்லவா? தண்டனைப் பட்டவனானதால் வேலைக்கும் லாயக்கில்லை. காரணம் உன் சாட்சியமேயாம்."

பால:—"நான்ஸென்ஸ்(Nonsense)நான்என்ன உண்மையைத்தானே சொன்னேன். இவனுக்காக கொஞ்சம் ஏற்றுக் கொண்டு கூட சொல்லியிருக்கிறேன். மற்ற சாட்சிகள் இவனுக்குப்பூரா பிரதிகூலமாகச் சொன்னார்கள். அப்தல்கரீம் சண்டையில் இவன் தான் முதல் கை நீட்டினான். போலீஸ் இன்ஸ்பெக்டர் திடீரென வந்து இருவரையும் பிடித்துக் கொண்டார். துலுக்க சாட்சிகள் துலுக்கன் பக்கமே புளுகுகிறார்கள். என் சாட்சியமில்லாவிட்டால் இவனுக்கு ஜெயில்வாசம்கிடைத்திருக்கும். இதுதான் அவன் நன்றியோ, கிடக்கிறான் பயல். ஹெட்மாஸ்டர் இவனைத் தொலைக்க எது சாக்கு என்று கார்த்திருந்தார்."

தின:—"இருக்கமாட்டாரோ? காபியடிக்காதே காபியடிக்காதே என்று எத்தனை தரம் கிளாஸ் வாத்தியார் சொல்லியிருக்கிறார். வெளியில் வந்தால் சாணி உருண்டை கல் பிரயோகம் செய்வானேயென்று ரொம்ப நாள் பயந்தார். எக்ஸாமினேஷன் ஹாலில் பகிரங்கமாய் புஸ்தகத்தை மஸ்லின் அங்கவஸ்திரத்தால்மூடி காபியடித்தால் யார்சகிப்பார்? மஸ்லின் அங்கவஸ்திரம் நல்ல உபயோகத்துக் கேற்பட்டது!

பாலு:—"பாட்டர்ஸன் காதுக்கு இது எட்டியிருந்தால் அன்றைக்கே வேலை தீர்ந்திருக்கும்."

தின:—விடுசனியனை, என்ன நான் சொல்லவந்தது இதல்ல. வக்கீல் பொன்னுசாமி அய்யருக்கும் ஒரு பெண் இருக்கிறாளாம். இவளைத் தனக்கு நிச்சயம் செய்துவிட்டதால் சீக்கிரம் கலியாணம் நடக்குமென்று நாகநாதன் சொன்னான். அவளைப்பற்றி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். அவள் கட்டழகியாம். படிப்பில் மிகதேர்ந்தவளாம். ஆங்கிலம், ஸம்ஸ்க்ருதம், தமிழ் மூன்றிலும் நன்றாககற்றவளாம். ஸங்கீதத்தில் வித்வான்களுக்கு ஒத்த ஸாமர்த்தியமுண்டாம். வயது 13க்குள். இது உண்மையாய் நடக்கக் கூடியதா. என் மாப்பிள்ளை என்ன சொல்லியும் எனக்கு நம்பிக்கை வரவில்லை. ஆமாம் அவள் உனக்கு கூட ஏதோ உறவாமே."

பாலசந்திரன் தங்கள் பின் பக்கத்தில் சற்று விலகி வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணை யடிக்கடி கவனித்து வந்தவன் "அடே யப்பா, உன் உற்சாகத்தை பார்த்தால் இப்பொழுதே அவளைத் தூக்கிக்கொண்டு போய் விடுவாய் போலிருக்கிறதே! ஐயோபாவம் மிஞ்சிவிட்டதே! நாகநாதனுக்கு நிச்சயமாய் விட்டதே."

தின:—"முழுவதும் கேட்காமல் உன் சுபாவக்குறும்புத்தனத்தை காட்டுகிறாயே. போன புதன்கிழமை எங்கள் ஸம்மந்தி ஸப்ரிண்டண்டு ரங்க



சாமி அய்யர் எங்காத்துக்கு வந்திருந்தார். அவரும் பொன்னுசாமி அய்யரும் அந்தரங்க நண்பர்களாம். நாகநாதன் தனக்கு வேண்டாமென்று அப்பெண் சொல்லிவிட்ட படியால் வேறுவரன் பார்க்க வேண்டியது தானென்று அவர் சொன்னாராம். அதன்மேல் எங்கப்பா என் ஜாதகத்தை அனுப்பியிருக்கிறார்."

இவ்விதம் சம்பாஷித்து வந்த வாலிபர்களின் முகங்கள் சந்தோஷமே அவதாரமானது போல விளங்கியன. இருவரும் ஆஜானு பாகுவாய் வளர்த்தி யதிகமாயிருந்த போதிலும் முகத்திலுள்ள இளமையினால் பதினாறு வயதுக்குள் மதிக்கலாம். தினகரன் சிவந்த நிறமுடையவனாயும் அதிலட்சணவானாய் பார்ப்போர் புருஷமூர்த்தி யிவனே என வியக்கும் வண்ணம் காணப்பட்டான். பாலசந்திரன் இவனை விடச் சற்று உயரமாய் பச்சை நிறமுள்ளவனாயும் பார்ப்போர்க்கு சற்று அச்சத்தையுண்டாக்க வல்ல கம்பீரமுடையவனாயும் அதிகுதூகலமுள்ளவனாகவும் காணப்பட்டான். இருவர் அங்கங்களிலும் ஆடவர்க்குரிய சில உயர்ந்த ஆபரணங்கள் விளங்கிற்று.

கடைசி வார்த்தையைக் கேட்டவுடன் பாலு வேடிக்கையை விட்டுவிட்டு தினகரன் ஒருக்கால் தங்கள் வீட்டுக்கு மாப்பிள்ளையாகலாமென்றதை யோசித்து சந்தோஷத்துடன் "நீ இந்நேரம் புகழ்ந்த பெண் என் அத்தையின் புத்திரி. அவளுடையஅழகு, அறிவு, அருமைமுதலியவைகளை என்னைப்போல எவரும் நன்றாயறியமாட்டார்கள். நாகநாதனை மணம்புரிய அவளுக்குஇஷ்டமில்லை; எனக்கும்பிடிக்கவில்லை. அதனால்தான் அதுநின்றுவிட்டது. எனக்கும் அவளுக்கிசைந்த கணவனை யமைக்க வேண்டுமென்ற கவலை இதுவரை அதிகமாயிருந்தது. இனிமேல்.—"

தின:—"ஏன் உங்களுக்கேற்ற வரன் கிடைத்தாய் விட்டதோ?"

பால்:—"ஆம்"

தின:—"ஓகோ நீ அம்மாஞ்சி யிருக்க வேறு மாப்பிள்ளை தேடுவார்களா? முன்னமே இது எனக்குத் தோன்றவில்லையே. அடடா!

பால்:—"என்ன ஆத்திரம் உனக்கு. நானும் அவளும் சகோதரபாவமாகவே வளர்ந்து வந்தோம். எங்க அத்திம் பேருக்கு புத்திரனில்லாததால் என்னையே புத்திரனாக அபிமானிக்கிறார்கள். மேலும் எங்க தாத்தா தான் பொன்னுசாமி அய்யரை முன்னுக்குக் கொண்டு வந்தார். எங்க அம்மா வெகுகாலம் முன் இறந்துவிட்டபடியால் என்னை எங்க அத்தை தான்வளர்த்து வந்தாள். அவர்களிருவர்க்கும் எங்கள் பேரில் சமமான வாஞ்சை. எதுவாகட்டும் எங்காத்தில் நானும் எங்க அத்தங்காளும் சொல்வது தான் நடக்கும்.

தின:—"அது தான் அவளுக்கு வெளியில் ஜாதகம் பார்க்கிறார்களோ. நம் அதிர்ஷ்டம் எப்படியோ." என்று புன்கையுடனும் வெட்கக் துடனும் வினவ,

பால:—"புன்னகையுடன் கமலத்துக்கு நாயகன் தினகரனன்றி வேறுயார் இசைவான்?"

தின:—"வேடிக்கை பண்ணாதே. இது என்ன பொம்மைக்கலியாணமா நம் இஷ்டப்படி நடத்துவதற்கு?" என்று பெருமூச்செறிந்தான்.

பால:—"அடடே வீணாக ஏன் வருத்தப்படுகிறாய்? நிசமாகத்தான் நான் முயற்சி யெடுத்தால் இவ்விஷயம் நடக்கும். எனக்கு உன்னைத் தான் பிடித்திருக்கிறது. நீ அவளுக்கு தகுந்த கணவனே. அழகும் அவளுக்கேற்றதாய் இருவரும் புத்திசாலிகள். இவ்வூரில் பெண்பிள்ளைகள் நாயகமாக அவள் இருப்பது போலவே நீயும் பையன்கள் முதன்மையாயிருக்கிறாய். வெகு நாளாய் எனக்கு ஆச்சரியம்! பள்ளிக் கூடத்து பாடங்கள் வாத்தியார்கள் சொல்வதை நீ கவனிப்பதேயில்லை. ஆயினும் பரீட்சைகளில்மாத்திரம் முதல்மார்க்கு உனக்கு; வீட்டிலும் ராத்திரி நேரங்களில் நீபடிப்பதில்லையாம். எனக்கு புட் பால், டெனிஸ் என்றால் பைத்தியம். புஸ்தகத்தைத் தூரே எறிந்து விடுகிறேன். ஆயினும் ராத்திரிகளில் வாசித்து வாசித்துப் பார்த்தும் ஒருநாளாவது முதல் மார்க்கு வரமாட்டேன் என்கிறதே. முக்கியமாக உன்னிடம் ஒரு குணம். வீண் வம்புக்குப் போகாமல் தன் வேலையை மாத்திரம் கவனித்துக்கொண்டு வருவதும்மற்றவர்களை வருத்தப்படாமல் மரியாதையாய் நடத்துவதும்தான். புஷ்பத்தைக் குரங்கினிடம் கொடுத்தாற்போல, எவனுக்காவது கொடாமல் அவள் அருமையறிந்து நடக்கக்கூடியவனுக்கே கமலாவைக்கொடுக்கப்போகிறோம். ஆனால் ஒரு விஷயம், அவள் சிறுபெண்ணாயினும்பெரியவர்க்குள்ளமுதிர்ந்த அறிவுள்ளவள், அவள் உன்மேல் இஷ்டப்பட்டாலொழிய யாராலும் நடக்காது. ஆனால் அவளை வழியாக திருப்ப என்னால் முடியும்.

தின:—"நீங்கள் அவ்வளவு" ஒற்றுமையாயிருக்—

பால:—"முன்னமே சொன்னேனே. நாங்களிருவரும் ஸகோதரர்களே. அவ்விதமே எங்கள் பெரியவர்களும் பாவிக்கிறார்கள். சரி, நீ அவளை கலியாணம் செய்துகொள்கிறாயா?"

தின:—கரும்பு தின்னக் கூலியா? அதிருக்கட்டும், அவளை நேரில் பார்த்து அவள் சாதுர்யத்தைக் காண ஆவலாயிருக்கி—ற—து—

பால:—"ஆஹா... அப்படியே செய்கிறது—நீ—வெகு—யோ—



தின:—"கோபிக்காதே: எப்போ பார்க்கலாம்"

பால:—"இப்பொழுதே பார்க்கிறது. (தனக்குள்) இவன் கண் உள்ளவனா? அருகில் வரும் பெண்ணை கவனியாமல் பேசிக்கொண்டு வருகிறான். ஒருக்கால் அகாரணமாக பரஸ்திரீகளைப் பார்க்கக் கூடாதென்று மரியாதையினால் இப்படி செய்கிறானோ? இச் செய்கையை தற்கால நூதனநாகரீகக்காரர், முட்டாள்தனமாவோ கருதுவார்கள்; ஆனால் நம்பெண்ணுக்கு நல்லதுதான் என்று நினைத்து தினகரனை நோக்கி, "சற்றுநில்" என்றான். இவர்களுக்குப்பின்னால் மின்னற்கொடிபோல துள்ளித் துள்ளி விழும் தனது மீனலோசனங்களுடனும் கௌரவத்துடனும் வந்த ஒரு பெண்மணி இவர்கள் நின்றதும் "பாலு, ஏன் நிற்கிறாய் நாழிகையாய்விட்டதே. மணி $7\frac{1}{2}$ இருக்காதா? என்று தனது யாழினு மினிய மொழியால் வினவ, தினகரன் சித்திரப் பதுமைபோல அசைவற்று அவளைப்பார்க்காதுபோல் பார்த்து ப்ரமிக்கலானான். ஏனென்றால் அப்பெண்மணி சுமார் 13 வயதேயாயினும் தேவகன்னிகைகளை யொத்து பூரணசந்திரனைப் பழித்த முகத்துடன் ஸர்வாபரணங்களு மணிந்து ஜகன்மோகினிபோல பார்ப்பவர்கள் அதிசயிக்கும் அழகு வாய்ந்திருந்தனள். அவள் பூண்ட வஜ்ர ஆபரணங்களும் உயர்ந்த ஜரிகை நெய்த உடையினாலும் நடையுடை பாவனையினாலும் அவள் பெரிய தனவான் வீட்டில் பிறந்தவளென்பது விசிதமாக விளங்கும். சாதாரணமாக சிவப்பு அல்லது வெள்ளைநிறம் அதிகம் படைத்த முகத்தினற்கு குழல்கள் செம்பட்டையாயிருப்பதுதான் சகஜம். அதைச் சில தேசத்தார் தங்கமயிர் எனக் கொண்டாடுவதுமுண்டு. அவர்களுக்குக் கருங்குழல் என்றாலும் பூரணசந்திரவதனம் என்றாலும் இகழ்ச்சியாகும். முறையே, (காக்கை நிற மயிர்) இரத்தம் செத்த நிறம் முகம் என்று இகழ்வார்கள். இத்தேசத்தாரோ மேல் நாட்டாரின் சிவந்த முகத்தை அவர்கள் Rosy என்று கொண்டாட, அதை குரங்கு மூஞ்சி என்று பரிகசிப்பதுண்டு. நாட்டு வழக்கங்களை மாத்திரம் பொறுத்ததில்லை. சீதோஷ்ண நிலைமைகளும் இவற்றிற்குக் காரணமேயாம். நம் நாட்டில் ஒருவர் மனது சந்தோஷமடைந்ததென்றால் அவன் மனங் குளிர்ந்ததென்றும் அதிர்ப்தியடைவதென்றும் அவன் மனம் சுடச் சொன்னானென்றும் சொல்வது வழக்கம். இங்கிலாந்து மாதிரி தேசங்களிலோ மனங்குளிர என்றால் கெட்டவிஷயத்தையும் மனம் உஷ்ணமாக என்றால் நல்லசமாசாரத்தையும் குறிப்பிடும். நம்முடைய கமலாவுக்கோ நம்கவிகள் கூறும்வண்டினமோ, மேகமோ வென்று ஐயுறும், கருங்குழல் சுருண்டுசுருண்டு நெற்றியின் இயற்கை

வடிவத்தையும் இருமடங்கு அழகு செய்தது. கூந்தல்நடுவில் பிரகாசிக்கும் வஜ்ராபரணமானது அரவம் சூழ்ந்த மதி யென மதிக்கத்தக்கதாயிருந்தது.

கமலா தன் அம்மாஞ்சியின் பக்கலில் யாரோ ஸௌந்தரியமுள்ள புருஷனைக்காணவும் வெட்கித் தலைகுனிந்து சற்றுநேரம் சென்று நிமிர்ந்து பார்க்கவே, அவள் தன் மீது அளவற்ற ஆவலுடன் பார்ப்பதை யறிந்தும் அவள் சரீரத்தில் என்று மனுபவித்திராத சந்தோஷத்தை யுணரலானாள். அவ்வுணர்ச்சியும் இன்னதென்று பூராவாக அவளால் அறிய முடியவில்லை. அவ்வாலிபர்களிருவரும் பாலராயினும் சிறந்த ரூபவான்கள். அப்பொழுதிருந்த உல்லாசத்துடன் முகத்தில் பூரண சந்திரன் தவழ அவர்களைப் பார்த்தவர் எவர்தான் களிப்படையார்? தினகரன் இடுப்பில் பட்டுக்கரை சரிகை வேஷ்டி யுடுத்து வைர முகப்புவைத்த தங்க அரைஞாணும் காதில் விலையுயர்ந்த வைரக்கடுக்கனும் நிலவில் ஜ்வலிப்பதைப்பார்த்தால் அவன் செல்வமாய் வளர்ந்தவனென விளங்கும். பாலசந்திரனோ இவனைவிட காம்பீர்யமும் குதூகலமுமுற்றவன். கமலா வெட்கி நிற்பதைக்கண்டு பாலன் "இதோபார் கமலா என்ன வெட்கம்? இவர் என் சிநேகிதர்தான். ஆனால் சகலகலாபாரங்கதர். சங்கீதத்தில் வித்துவான்" (கமலம் தலை நிமிர்ந்து தினகரனை உற்று கவனித்தாள். தினகரன் பாலனை "கேலி பண்ணாதே. சும்மாயிரு" என்று சொல்ல) "கேள் இவர் ம-ள-ள-ஸ்ரீ டிப்டி கலக்டர் துரையப்பய்யரின் குமாரர் சூரிய அய்யர். இதோபார் சந்திரனும் சூரியனும் சேர்ந்து பிரகாசிக்கிறார்கள். பயப்படாதே, இவர் வெப்பமில்லாத சூரியன்தான். (தினகரன் மறுபடி தடுக்க) என்ன நான் சொல்வது பொய்யா. பார் அவர் கடியார சங்கிலியின் நுனியில் தங்க (மெடல்) பதக்கம் தொங்குகிறது. அது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் ராஜதானி பூராவுக்கும் முதன்மையாகத் தேறியதற்கு இனாமாக அவருக்கு அளிக்கப்பட்டது." தினகரன் தன்மனமடங்காமல் கமலம் முகம் இதைக்கேட்க எப்படி யிருக்கிறதென்று அறியவேண்டி அவளைப்பார்த்தான். இதை கவனித்த பாலன் "அடேடே என்ன ஜம்பமடா அப்பா. உன் பூச்சு அங்கே பலிக்காது. போன வருஷம் அவள் பள்ளிக்கூடத்துக்கு கவர்னரும் லேடியும் வந்தபோது பாட்டுப்பாடி நல்வரவு கூறி யழைத்தது இவள்தான். அவளுக்குப்பல ஸீமாட்டிகளினால் அளிக்கப்பெற்ற ப்ரைசு சாமான்கள் புஸ்தகங்கள் ஒரு பீரோ நிறைய இருக்கிறது. எந்த புருஷனுக்கும் அவ்வளவு கிடையாது என, தினகரன் சற்று வாட்டங்கொண்டு, கமலாவைப் பார்த்து அவள் முகம் நிர்மலமாயிருக்கத் தானும் நிதானமடைந்தான். கமலாவும் "அம்மாஞ்சி, நீ ஏன் அற்பத்தைப் பெரிதாகக் காட்டுகிறாய்? எப்படியிருந்தாலும் புருஷனுடைய மகிமைக்கு ஈடாகுமா" என, தினகரன்



அவளை உற்றுப்பார்க்க, கமலா முகங்கவிழ்ந்தாள். பாலன் "பேஷ்! அதற்குள் ஏற்றுப்பேச ஆரம்பித்துவிட்டாயே. ஏனப்பா கோவில்கூட வண்ணான்தீட்டு ஷர்ட்டும் ஷோக் சாந்துப்பொட்டும் கேட்கிறதோ? சோஷல்ரிபாமோ? என்று நடந்துகொண்டே "கமலா, நான் சொல்லவந்ததென்ன தெரியுமா? இவருக்கு கலியாணம் சீக்கிரம் ஆகுமாம். யாரைத் தெரியுமா? உனது தோழியை. நீ அவளிடம் இவரைக்கலியாணம்செய்துகொள்ளச்செய்வாயா?"

தின:—"உன் சேஷ்டைகளை விடமாட்டேயே?

கம:—"யாரப்பெண்? என் தோழியா அம்புஜமா, கங்காவா?"

பால:—"அதெல்லாமில்லை. பேரென்னவோ. அவள் வக்கீல் பொன்னுசாமி அய்யர் பெண்ணாம்.' அவ்வளவுதான் எனக்கு—

கமலா:—"வேடிக்கை வேண்டாம்" என்று திரும்பி தினகரனைப்பார்க்க அவன் முகமாறுபாட்டை திகைத்து மௌனமாயிருந்தாள். பாலசந்திரன் இவர்கள் இருவரின் நிலைமையையும் கண்டு மனோபாவத்தை யறிந்தவள்போல் குறும்பு சிரிப்புடன் சரி, சம்மதந்தானே நம் இஷ்டப்படி இனி கலியாணம்தான் பாக்கி. (கமலா சற்று புன்னகை செய்ய) இதோ பார். விக்னேசுவரர், இது நிறைவேறட்டும் இவர்க்கு பத்து தேங்காய் உடைக்கிறேன்" என்று நகைத்தான்.

இதுவரை தாராளமாக நடந்துவந்த கமலாவும் தினகரனும் ஏன் இதற்குள் மாறவேண்டும்? கமலம் பாலன்புறமாய் மறைவாக மறுபுறமாகச் செல்வானேன்? தினகரன் கண் இன்னேரம் பின்னால் பெண் வருகிறதோ பூதம் வருகிறதோ என்று கவனியாதவன் இப்போது எதிரே கல்தடுக்குவதும்தெரியாது பாராதவன்போல் பார்ப்பானேன்? கமலம் தான் கௌரவம்ஜாஸ்தியுள்ளவள். தன்மனதில் உண்டாகிய அவாவை முகத்தில் காட்டக்கூடாதென்றெண்ணினாலும் தனக்குப் புருஷனாகக்கூடியவன் தன் மனதுக்கு எவ்விதத்திலும் இசைந்தவனா யிருக்கக்கண்டு முகம் பிரசன்னமடைந்து தேகமும் பரவசமடைந்தது போலவே காணப்பட்டாள். பாலன், "இன்று வெள்ளிக்கிழமை. கூட்டம் ஜாஸ்தி. கமலா இங்கே இரு. நான் போய் நைவேத்தியத்துக்கு புஷ்பமும் குங்குமம் முதலியதும் வாங்கிவருகிறேன். தினகரம், நீ அவளைப் பார்த்துக்கொள் நகைகள் பத்திரம்" என்று சொல்லி விரைவாகச்சென்றான். கமலா தான் தினகரனுடன் தனியே விடப்பட்டதும் சற்றுவிலகி கல்யாண மண்டபத்தில் உள்ள கல்யானையின்மீது சாய்ந்துகொண்டு தன் கைமோதிரத்தைக் கழற்றி கழற்றிப் போட்டுக்கொண்டிருந்தாள். தினகரனுக்கு இச்சமயம் கிடைத்தது அதிர்ஷ்டமென்றெண்ணினானாயினும் அவளுடன் பேச நாவெழவில்லை. அவள் அழகும் ஆடையாபரணங்களும் அவள் முக வொளியும் வயது மிஞ்சிய கௌரவம் காட்டும் முகமும் அவளை தேவஸ்திரியென

சோபிக்கச் செய்தது. அவ்வழகை சற்றுநேரம் கண்குளிரப் பார்த்துவிட்டு அருகில் கல்யாணியின் மறுபுறம் சென்று சற்று தியங்கி, "கமலா, நீ என்னபாஷைகள் கற்றிருக்கிறாய்" என்றான். கமலா இவன் எண்ணத்தை இவனறியாமல் கண்டு பேச்சுக்கொடுக்க இழுக்கிறான். இப்பொழுது என்ன செய்வது? பதில் சொல்லாவிட்டால் கேவலமாயெண்ணி அவமதித்ததாக எண்ணுவானோ என்று சற்று நாணத்துடன் "தமிழ் தான் நன்றாய் தெரியும். ஸம்ஸ்க்ருதம், ஆங்கிலம், தெலுங்கும், சுமாராகத் தெரியும். இப்போது முக்கியமாக சங்கீதம்தான் பயின்றுவருகிறேன்."

தின:—"தமிழில் சில கவிகள்கூட நீ கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். ஏதோ என் படிப்பு பரீட்சைக்குத் தவிர மற்றவிதம் யோக்கியதையில்லை. என் கொள்கையே கற்றறிந்த பெண்கள் தான் நாட்டிற்கு முக்கிய சம்பத்து" என்று அவளை பார்க்க, கமலாவுக்கு தன்னை புகழ்வதைக்கண்டு ஒருவிதத்தில் வெட்கமுண்டாகி அவனை முகமெடுத்து மறுபடி பார்க்க தைரியமற்று நின்றாள். இதற்குள் பாலன் ஒரு கையில் தின்பண்டங்களும் மற்றகையில் புஷ்பங்கள் விபூதிப் பொட்டளங்களும் எடுத்துவந்து "தினகரா இந்த பட்சணத்தை வாங்கி ஆளுக்குக் கொஞ்சமாக கொடு" என, அவன் அவ்விதமே கமலாவிடம் கொடுக்க அவள் வாங்கினாள். பாலன் கொல்லென நகைத்து "பேஷ், பேஷ், தம்பதிகளோ அல்லவோ. இதுதான் முறைமை" என, கமலா வெட்கம் பொறுக்காமல் அவனைக் கடிந்துகொண்டாள்.

தின:—"ஏதப்பா, நீ சொல்வதைப்பார்த்தால் ராத்திரிக்குள் முகூர்த்தம் நடந்துவிடும் மாதிரி சொல்கிறாயே. தெய்வசங்கல்ப மெப்படியோ?"—

பால:—"நீயும் நானும் நினைக்கிறபடிதான். தெய்வசங்கல்பமுமிருக்கும், அதற்காகத்தான் கொண்டுவந்தேன்" என்று புஷ்பம் விபூதியையும் காட்டினான். கூட்டத்தை விலக்கிக்கொண்டு மூவரும் அம்மன் சன்னதியண்டை போனார்கள். தினகரன் அம்மனைத் தோத்திரஞ்செய்யக் கைகூப்பியும் அவன் கண்கள் கமலத்தின் உடைபாவனைகளையே தியானித்தன. அவனுக்கு ஒன்றிலுமே நம்பிக்கை கிடையாது. பக்திக்கு மிவனுக்கும் வெகுதூரம். "உலகில் ஜனங்கள் நன்னடக்கை தவறாதிருக்குமாறு இவைகளெல்லா மேற்பட்டன. நாம் நியாயமாய் நடக்கும் பட்சத்தில் இவை அனாவசியம்" என்பது அவன் மதம். கர்ப்பூர தீபாராதனை முடிந்து கூட்டம் கலைந்ததும் பாலன் தன்னிடமிருந்த புஷ்பத்தையும் விபூதிப் பொட்டளத்தையும் அம்மன் சன்னிதியில் வைத்து ஒரு குழந்தையை அவற்றில் ஒன்றை யெடுக்கச் சொன்னான். குழந்தையும் பூவை எடுத்து திரும்பி கமலாவைப் பார்த்ததும் அவளிடம் கொண்டு போய்க் கொடுத்தது. தங்கள்



மனோரதம் நிறை வேறியதைக் கண்டுகமலாவும்பாலனும் ஆனந்தித்து அக்குழந்தைக்கு பட்சணம் கொடுத்து விட்டு பலவாறாக பேசிக்கொண்டு உல்லாசமாக வீடு சென்றனர். உடனே பாலன் "தினகாம்! உன் கல்யாணம் நிச்சயம். இதுவரை என் விஷயம் அம்மன் வரம் தவறினதில்லை" என, தினகரன் நகைத்து விடை பெற்றுச்சென்றான். தன் கைகளை மார்பின் மீது கட்டிக்கொண்டு ஆகாயத்தை நோக்கி வீடு செல்லுகையில் கமலாவின் ரூபலாவண்யத்தை நினைத்து தனக்குள் மெதுவாக,

"மைவடிவக்குழலியர் தம்வதனத்தை நிகரொவ்வா மதியே மானே
செயவடிவைச் சிற்றிடையைத் திரு நகையை வெயத் தோளைத் தெய்வமாக
இவ்வடிவைப் படைத்த வடிவெவ்வடிவோ யானறியே னுண்மையாகக்
கைப்படியத்திருமகளைப் படைத்தவளைப் படைத்தனகமலக்கோனே"

என்று பாடி முடிக்கவும் தன் வீடு போய்ச் சேர்ந்தனன்.

K. N. சீனுவாசாசாரியார்.
எம். எ; எம். எல்;

---

# ஹாஸ்யத்துணுக்குகள்.

## TIT—BITS

ஓரூரில் ஒரெளியவர் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்திருந்தார். ஒரு நாள் இனிஸ்பெக்டர் வந்து அப்பள்ளிக்கூடப் பிள்ளைகளை பரீக்ஷித்துக் கொண்டிருக்கையில், பையன்கள் "வாயப்பயம்" என்பதைக்கேட்டு அவர் உபாத்தியாயரை நோக்கி, என்ன ஐயா! இப்படியா சொல்லிவைக்கிறது? என, உபாத்தியாயர் நான் என்ன பண்ணுவது அப்படி "வயக்கமாய்" விட்டது என்றார்.

* * * * * *

அப்பா: டேய், ராமா! சந்தியா வந்தனம் பண்ணினாயா?
பிள்ளை: பண்ணினேன்.
அப்பா: எவ்விடத்தில்?
பிள்ளை: குமரன் கோவில் வாய்க்கால்லே.
அப்பா: அதில் ஜலம் இல்லையே!
பிள்ளை: இருக்குன்னுட்டு அடுத்தாத்து சுப்பன் தானே சொன்னான்.

* * * * * *

கோர்ட்டில் ஒருவக்கீல் தன் கக்ஷிவாதத்தைப்பற்றி வாதித்துக்கொண்டிருக்கையில், முன்சீப் மெதுவாக "ஏதோ கழுதை கத்துகிறது!" என்று

அடிக்கடி சொல்லிக் கொண்டு ஹெஹெ எனக்கனைத்துக் கொண்டிருந்தார். இதை கவனித்த வக்கீல் ஒன்றுமறியாதது போலிருந்தார். சற்று நேரம் கழித்து, முன்சீப் ஜட்ஜ்மெண்டு வாசித்துக் கொண்டிருக்கையில் வெளியே நிஜமாகவே ஒரு கழுதை கத்தினது. முன்சீப் சும்மாயிராமல் "அது என்ன சப்தம்?" என, உடனே வக்கீல் எழுந்து, "ஒன்றுமில்லை! கோர்ட்டாரவர்கள் எதிரொலி போற்றோன்றுகிறது" என்றார். முன்சீப் வெட்கித் தலைகுனிந்தார்.

* * * *

பின்வரும் விளம்பரம் ஒன்று ஒரு சமாசாரப் பத்திரிகையில் ஒரு சமயம் காணப்பட்டது:—

தேவை.

"ஒரு நல்லபங்களா! என்ன வாடகையிருந்தாலும் தேவலை. ஒரு விஷயத்தில்மட்டும் வீடு திருப்தியாயிருக்கவேண்டியது என்னவெனில்:— என்மனைவி தனக்கு தன் பெற்றோர்கள் தன் கலியாண காலத்தில் அளித்த தலை நகைகளுடன் உள்ளே நுழைந்தால் அவள் தடுக்கப்படாமலிருக்க வேண்டும்."

* * * * *

V. N. R.
நமது விகடகவி.

---

# முக்கிய அறிவிப்பு.

நாம் சுமார் 2 மாதகாலம் கோயம்புத்தூருக்குத் தேக சௌக்கியத்திற்காகப் போயிருந்தமையாலும் பத்திரிகைக்குப் போதுமான திரவியசகாய மில்லாமையாலும் பத்திரிகையை திருவல்லிக்கேணி கமர்ஷியல்பிரஸ் என்ற அச்சாபீசுக்கு மாற்றின படியாலும் பத்திரிகை வெளிவர தாமதமானதைப்பற்றி மிகவும் விசனப்படுகிறோம். அடுத்த பத்திரிகை அடுத்தவாரத்தில் வெளிவரும்.

பத்திராதிபர்.



## சமாச்சாரக்குறிப்பு.

**பறக்கும் மீன்.**—மீன்களில் அநேக இனங்கள் இருக்கின்றன. இவைகளில் பறக்கும் சுபாவமுள்ள மீனும்ஒன்று. இதன் மார்பில் இரு பக்கங்களிலும் இரண்டு இறக்கைகள் உண்டு. இதனால் இந்த மீன் சமுத்திரத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் குதித்துப் போகவும் பறக்கவும் செய்கின்றது. இந்த மீன் முக்கியமாய் அதனுடைய வலுவான வாலினாலே ஜலத்திலிருந்து வெளியில் கிளம்புகிறதென்றும், அதன்சிறகுகள் பிறகுதான் பறப்பதற்குச் சகாயமாயிருக்கின்றனவென்றும், ஆகையால் முக்கியமான பாகம் அதன் வாலில் தானென்றும் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அது பறந்து அதிக தூரம் செல்லும்போது இந்தச் சிறகுகள் அதற்கு குடைகள்போலிருந்து அது கீழே விழுந்துவிடாமலிருக்கும்படி உபயோகப்படுகின்றன. இப்படி இந்த மீன் ஜலத்தில் 200 கஜம் அல்லது அதற்கு அதிகமான தூரம் பறந்து போய் குதிக்கும். பறந்து போகும்போது கப்பல் முதலியவைகளில் மோதிக்கொள்ளாமல்பறவைகளைப்போல் உடனே பக்கமாய்த்திரும்பி வேறுதிசையை நோக்கிப் பறந்து செல்லும் சக்தியும் இதற்கு உண்டு.

**திருவல்லிக்கேணி கவர்ன்மெண்ட் பெண் பாடசாலை.**—திருவல்லிக்கேணியிலிருக்கிற கவர்ன்மெண்ட் எலிமெண்டரி பெண் பாடசாலையையும் அதைச் சேர்ந்துள்ள போதனாமுறைப் பயிற்சி வகுப்பையும் ஸெகன்டரி ஸ்கூலாக உயர்த்த கவர்ன்மெண்டார் சாங்க்ஷனையிருக்கிறது.

ஸெகண்டரி ஸ்கூல்சிப்பந்திகளின் சம்பளம்.

| | | | |
|---|---|---|---|
| சூபரின்டெண்டெண்டு | ரூபாய் | 250-முதல் | 300-வரையில் |
| தலைமை உபாத்தினி | ,, | 150-முதல் | 175-வரையில் |
| முதல் உதவி | ,, | 100-முதல் | 125-வரையில் |
| இரண்டாவது உதவி | ,, | 75-முதல் | 100-வரையில் |
| இரண்டு உதவிகள் தலைக்கு | ,, | 75-முதல் | 100-வரையில் |
| மூன்று உதவிகள் தலைக்கு | ,, | 59-முதல் | 60-வரையில் |
| மூன்று உதவிகள் தலைக்கு | ,, | 40-முதல் | 50-வரையில் |
| மூன்று உதவிகள் தலைக்கு | ,, | 30-முதல் | 49-வரையில் |
| ஒரு தெலுங்கு போத | ,, | 50-முதல் | 90-வரையில் |

போதனாமுறை வகுப்பு.

| | | | |
|---|---|---|---|
| முதல் உதவி | ரூபாய் | 150-முதல் | 175-வரையில் |
| இரண்டாவது | ,, | 125-முதல் | 150-வரையில் |
| மூன்றாவது | ,, | 100-முதல் | 125-வரையில் |

பொது வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஒரு சங்கீத உபாத்தினி | ரூபாய் | 40 | |
| ஒரு சித்திர உபாத்தினி | ,, | 40-முதல் | 60-வரையில் |
| ஒரு குமாஸ்தா | ,, | 20-முதல் | 25-வரையில் |
| இரண்டு சேவக ஆஸாமி | ,, | 8 | |
| ஒரு காவல் | ,, | 6 | |
| ஒரு தோட்டக்காரன் | ,, | 7 | |
| மாணவிகளை அழைத்துவர | | | |
| 3 ஆசாமிகள் தலைக்கு | ,, | 3 | |
| ஒரு தூப்புக்காரி | ,, | 4 | |

**HE. லேடி ஹார்டிஞ்சின் தயாள குணம்:**—H.E, லேடி ஹார்டிஞ்சின் அருமையான தயாள குணத்தைக் காட்டக்கூடிய விஷயமொன்று "வேதிக் மகாஜன் அண்ட் குருகுல சமாசார்" என்ற பத்திரிகையில் காணப்படுகிறது. பத்திராதிபரான ப்ரொபஸர் ராமதேவர் எழுதுகிறார்:—"நமது சிறுகுமாரத்தி (குருகுலத்திலே கல்விகற்றுவரும் ஒருசிறுமி) கொஞ்சகாலமாய் வியாதியினால் வருந்திவந்தாள். வைத்தியர்களின் உத்தரவுப்படி நாங்கள், சீதோஷ்ண நிலைமை மாற்றத்தினாலுண்

டாகக் கூடிய நன்மைகளால் வியாதி குணமாகக் கூடுமென்ற எண்ணத்துடன் சிறுமியை ஸிம்லாவுக்கு அழைத்துச் சென்றோம். வியாதி இன்னதென்று அறியக் கூடாததாயிருந்தது. ஒவ்வொரு வைத்தியரும் ஒவ்வொருவிதமாக வியாதியைப்பற்றிச் சொன்னார்கள். எமது சினேகிதர்களில் ஒருவர் இவ்விஷயத்தை லேடி ஹார்டிஞ்சின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். காருண்யமுள்ள அப்பெருமாட்டி உடனே, ராஜப்பிரதிநிதியின் சொந்த வைத்தியரான ஸர் ராபர்ட்ஸை அனுப்பி குழந்தைக்கு வைத்யம் பார்க்கும்படி ஆக்ஞாபித்தார். ஸர் ராபர்ட்ஸ் வெகு பக்ஷமுடன் குழந்தையைவந்துபார்த்து எங்களுடைய கவலையைத்தீர்த்தார்! H.E லேடி ஹார்டிஞ்ச் இந்த அதியற்புதச் செய்கையோடு திருப்தியடையவில்லை. அவர் எங்களை நேரே தருவித்துச் சிறுமியைப்பற்றிய சமாசாரங்களைவிசாரித்தார். இந்தபக்ஷமான செய்கைகள் உண்மையான ஆரியர்களுக்குரியஹிருதயம் லேடி ஹார்டிஞ்சினிடத்தில் இருப்பதை வெளிப்படுத்துவதோடு, ஆளுவோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைஒழிப்பதற்கு ராஜரீக முறையில் செய்யப்படும் ஆயிரஞ்செய்கைகளை விட அதிகமாகவே இந்தச்செய்கைகள் அதிக உதவி செய்கின்றது." லேடி ஹார்டிஞ்ச் ஒரு சாமான்யச் சிறுமியின் க்ஷேமலாபங்களைப்பற்றி இவ்வளவு தூரம் கவலையெடுத்துக் கொள்கிறாளென்று சாதாரணமாய் எவரும் நினைக்கமாட்டார்கள். மேற்கண்ட விஷயமானது லேடி ஹார்டிஞ்சின் உண்மையான காருண்யத்தை வெளிப்படுத்துகின்றது.

* * * * * *

**அரச சக்ரவர்த்தி குடியேற்ற நாடுகளைத் தரிசிக்கச் செல்லுதல்:**—மகத்துவந் தங்கிய நமது அரச சக்ரவர்த்தி ஐந்தாம் ஜார்ஜ் அவர்களும் மேரிராணியாரும் விரைவில் கனடா, ஆஸ்திரேலியா, நியுலேன்டுமுதலியகுடியேற்றநாடுகளைத் தரிசிக்கச் செல்வாராம்.

* * * * * *

**வானமளாவிய கட்டிடங்கள்:**—யுனைடெட் ஸ்டேட்ஸிலுள்ள நியூயார்க் பட்டணத்தில் காணப்படும் அநேக விசேஷங்களில், அதி உன்னதமாக கட்டடங்கள் கட்டப்பட்டிருக் கும் விசேஷமு மொன்றாகும். சமீபத்தில் 56 தளங்களுள்ள ஒருகட்டடங் கட்டப்பட்டு முடிந்திருக்கிறதெனத் தெரிகிறது. மான் ஹாட்டன் என்ற இடத்தில் முப்பதுக் கதிகமாக தளங்களையுடைய ஒன்பது கட்டடங்களும், இருபது அல்லது அதற்கதிகமாக தளங்கள உள்ள அறுபது கட்டடங்களும், 9, 10 தளங்களுள்ள கட்டடங்களில் 1 160-ம் இருந்து வருகின்றன. இவ்வளவு உன்னதமான கட்டடங்கள் உலகத்தில் எந்த இடத்திலும் கட்டப்பட்டிருக்கவில்லை. இப்படி அதி உன்னதமாய் கட்டிடங்கள் கட்டப்படுவது அபாயத்திற் கிடமானது. இவ்வளவு உயரத்திற்கதிகமாய் கட்டடங்கள் கட்டப் படக்கூடாதென்று சட்டத்தினால் வரையறுக்கப் பட்டாலொழிய கூடிய சீக்கிரத்தில், முப்பது நாற்பது தளங்களுடைய கட்டடங்கள் சர்வ சாதாரணமாகிவிடும். இவ்விஷயமாய், விசாரணைசெய்து, ஆலோசனை சொல்லும்படி யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன்மெண்டார் கமிட்டி யொன்று நியமித்திருக்கிறார்கள்.

* * * * * *

**வைஸ்ராயின் பிறந்தநாள்**—ஜூன் மீ 20௳ வைஸ்ராயின் பிறந்தநாள் ரொம்ப விமரிசையுடன் எல்லாவிடங்களிலும் கொண்டாடப்பட்டது. பாடசாலைக் குழந்தைகளுக்கு சிற்றுண்டிகள் கொடுக்கப்பட்டன. ராஜப்ரதிநிதியின் படங்கள் அநேக இடங்களில் எல்லாருக்கும் இனாமாகக் கொடுக்கப்பட்டன. பல இடங்களில் ஊர் கோலங்களும், கோவில்களில் அவருக்காகப் பூஜைகளும் சிறப்பாக நடந்தன.

* * * * * *

**ராஜப் பிரதிநிதியும் மைசூரும்.** ராஜப்பிரதிநிதி நவம்பர் மாதத்தில் காக்கென் கோட் காட்டுக்கு விஜயஞ் செய்யப்போகிறார். அக்காடு மைசூரிலிருந்து, மானந்தவாடிக்குப் போகும் பாதையிலிருக்கிறது. 50 மைல் தூரம் வரையிலும் மின் சார விளக்குப் போடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

* * * * * *



**திரும்பிவிட்டார்.** M. பயின்கேர் ஜூன் 27௳ பிரான்ஸுக்குத் திரும்பிவிட்டபடியால் அவரை வழி அனுப்ப ஸெயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையிலிருந்து விக்டோரியா ஸ்டேஷன்வரையில் தெருக்கள்தோறும் ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஜயார்ஜ் அரசரும், வேல்ஸ் இளவரசரும், கானாட்கோமகனும், மற்றுமுள்ள ராஜ குடும்பத்தினரும் லார்ட்மேயரும் விக்டோரியா ஸ்டேஷனுக்குச்சென்று அவரை வழியனுப்பினார்கள்.

* * * * * *

**பாரிஸுக்கு வந்து சேர்தல்.**—27௳ மாலை M. பயின் கேர் இங்கு வந்து சேர்ந்தார். ப்ரெஞ்சு மந்திரிகளும் பிரிட்டிஷ் தூதரும் ரெயில்வேஸ்டேஷனில் அவரை வரவேற்றார்கள். தெருக்கடோறும் ஜனங்கள் கூட்டமாக நின்று அவரை ஆரவாரத்துடன் வரவேற்றார்கள்.

* * * * * *

**திருவனந்தபுரத்தில் நம்பூத்ரிகளின் படிப்பு.**—நம்பூத்ரி வகுப்பார் இங்கிலீஷ் படிப்பில் முன்னேற்றமடையாதவர்களாக இருக்கிறார்கள். இங்கிலீஷ் படிக்கவேண்டுமென்ற உணர்ச்சி, இப்போதுதான் அவர்களுடைய மனதில் உண்டாயிருக்கிறது. இங்கிலீஷ் படிப்பு அவர்களுள் அபிவிருத்தியாவதற்கான வழியை அனுஷ்டித்து வருகிறார்கள். அதற்காகப் பல விடங்களில் கான்பரென்ஸுகள் கூடப்படுகின்றன. பொது மீட்டிங்குகள்கூடிப் பேசிவருகிறார்கள். எடப்பள்ளி ராஜவம்சத்தைச்சேர்ந்த ஜூனியர் மெம்பர்கள் இந்த விஷயத்தில் அக்கரைஎடுத்துக்கொண்டு வருகிறார்கள். எடப்பள்ளியில் நம்பூத்ரிகளுக்கென்றே ஒரு ஸ்கூல் ஸ்தாபிக்கப்படும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்தஸ்கூலில் இங்கிலீஷ் கற்பித்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பலநம்பூதரிகள் அதற்கு சந்தாப்பணம் அனுப்பிவருகிறார்கள். இப்பொழுது ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் இங்கிலீஷ் ஸ்கூல் பிரைமெரி ஸ்கூலாக இருக்கும். அதில் படிக்கும் மாணவர்களின் சௌகரியத்திற்காக ஹாஸ்டல்கள் ஏற்படுத்த யோசனை செய்திருக்கிறார்கள். மத படிப்பும் அந்த ஸ்கூலில் கற்பித்து வருவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது.

* * * * * *

**பதினாறுமைல்நீளமுள்ள ஒரு மலைச்சுரங்கம்:**—கனடாதேசத்தில்‘ கனடியன் பசிபிக்ரெயில்வே என்று ஓர்புகைரதமார்க்கம் இருக்கின்றது. அந்த வண்டிகள்ராக் மலைகளின்மேல்ஏறிச் செல்லும் போது பல சங்கடங்கள்நேருகின்றமையால் குறித்த மலையைக் குடைந்து அதற்கூடாகப் புகைரதப்பாதையிட எண்ணியிருக்கிறார்கள். அப்படிக் குடையவேண்டிய தூரம் 7மைலாம். இதனை 16 வருஷத்தில் 20 லக்ஷம் ரூபாசெலவு செய்து நிறைவேற்றத் தீர்மானித்திருக்கிறார்களாம்.

* * * * * *

**டெல்லியில் ஸ்திரீகளுக்கு ஒரு மேடிகல் காலேஜ்:**—டெல்லியில் ஸ்திரீகளுக்கு ஒரு மெடிகல்காலேஜ்ஸ்தாபிப்பதைப்பற்றிய பிரேரணை முதிர்ச்சியடைந்து வருகிறது. போபால் பீகம் சாகிபர் அந்தக்காலேஜுக்கு எற்கெனவே கையொப்பஞ் செய்திருக்கும் தொகையைத் தவிர இப்போது ரூபா-30000 கையொப்பஞ் செய்திருக்கிறார்கள்.

* * * * * *

**இடியினால் நேர்ந்த அசாதாரண சம்பவம்.**—ஹங்கேரியிலுள்ள கோப்பனி ஸேன்டோ என்னுமிடத்தில் இடியினால் நேர்ந்த ஒரு அசாதாரண சம்பவமொன்று கூறப்படுகிறது. ஐந்து வருஷங்களுக்கு முன்னே ஜோஹன்னாலோவஸி என்ற ஒரு ஸ்திரீ வேறு ஐவருடன் வைக்கோல் போரடித்துக் கொண்டிருக்கையில் ஆகாயத்திலிருந்து இடிவிழவே, கூட இருந்த ஐவரும் இறந்து போய் ஜோஹன்னாமாத்திரம் பிரக்ஞையற்று சில நேரம்தரையில் விழுந்து கிடந்து பிறகுபிழைத்துக் கொண்டனளாம். ஆனால் அதிலிருந்து ஊமையாய் விட்டனளாம். பிறகு சிலதினங்களுக்கு முன்னே மறுபடியும் போரடித்துக்கொண் டிருக்கையில் முன்போலவே இடியொன்று விழப் பிரக்ஞையற்றஸ்திதியில் வீட்டுக்குக் கொண்டுபோகப் பட்டாள். பிரக்ஞை தெளிந்து எழுந்ததும் பழையபடி பேச ஆரம்பித்துவிட்டனளாம்.

**சந்த்ரமண்டலத்துக்குப் போவது:**—பேர்போன ப்ரெஞ்ச் இஞ்சினீயர் ஒருவர் 49 மணி 17 நிமிஷம் 55 செகண்டு நேரத்தில் சந்த்ர மண்டலத்துக்குப் போய் விடலாம் என்று சொல்லுகிறாராம். அபாரமான சக்தியுள்ள மோட்டார் யந்திரம் அமைக்கப்பட்டுள்ள லேசான ரதமொன்று தயாரித்து அதன் மூலமாய் சந்த்ரனிடத்திற்கு யாத்திரை செய்ய வேண்டுமென்கிறார்.

பூமிக்கு ஒரு குறிப்பிட்ட தூரம் வரையில் தான் ஆகர்ஷண சக்தி யிருக்கிறதென்றும்] அந்த எல்லை வரையில் ரொம்ப வேகமுள்ள ஆகாசத்தில் போய்விட்டால் பின்பு ஆகர்ஷண சக்தியில்லையாகையால்பெரும் பாகத்தை ஸுலபமாய்க் கடந்துவிடலாமென்றும், சந்த்ரனண்டை செல்லும்போது அதற்குள்ள ஆகர்ஷணசக்தியால் ரதம் இழுக்கப்பட்டு விடும் என்றும் சொல்லுகிறார். மேலே போகப்போக ஆகாயம் குறைந்து போய் சந்த்ரமண்டலம் போகும் வரையில் ஆகாயம் இல்லாமலோ குறைவாயோ இருப்பதை உத்தேசித்து என்ன ஏற்பாடு செய்வார்களோ தெரிய வில்லை. மேலும் சந்த்ரமண்டலத்தில் ஆகாயம் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. கொஞ்ச காலத்துக்கு முன்னால் செவ்வாயிலுள்ளவர்களோடு பேசுவதற்கு ஏற்பாடு பலிதமாகும் என்றும் சிலசாஸ்திரிகள் சொல்லி வந்தார்கள். ஒருவர் செவ்வாயில் மனிதரே இல்லை யென்று சாதித்தார். சந்த்ரமண்டல யாத்ரையும் செவ்வாய்க்ரகத் தபால் ஏற்பாடு போல் ஒரு வேடிக்கை யாயிருக்கலாமென்று தோன்றுகிறது.

* * * * * *

**கொசுக்களைப் பிடிக்க ஒரு புதிய கருவி.**—கொசுக்களைப் பிடிப்பதற்கு ஒரு புதிய கருவி யொன்று கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாய்க் கூறப்படுகிறது. அந்தக்கருவியை ஓர் அறையில் வைத்து விட்டால், விளக்கைகண்டு அந்தப் பூச்சிகள் அதில் தானாகவந்து விழுவதுபோல, கொசுக்கள் அக்கருவியில் வந்து விழுந்து மாளுகின்றனவாம். அக்கருவி 5, 6, அங்குல நீளமுள்ளது ½அங்குலச் சிற்றளவுமுள்ள ஒரு கண்ணாடிக்குழாய்தானாம். ஆனால் அதில் சாஸ்திர ஆராய்ச்சியாலான சூக்ஷமங்கள் அடங்கியிருக்கின்றன. அக்கருவி சுற்றுப் பக்கம் மூப்பது அடி தூரம் வரையில் சக்தியைச் செலுத்திகொசுக்களை தன்னிடம் இழுத்துக்கொள்ளக்கூடியதாம். அவைகள் வந்து விழுந்தவுடன் அக்குழாயில் தடவப்பட்டிருக்கும் பசையில் ஒட்டிக்கொண்டு மாண்டுவிடுகின்றன வெனக்கூறப்படுகிறது. சீக்கிறத்தில் அக்கருவி மேனாட்டிலிருந்து இந்தியாவுக்குவந்து உபயோகப்படுத்தப்பட பார்க்கலாம்.

* * * * * *

**ஒரு ஸாமான்யமான ரத்த சுத்திமருந்து:**—40- வயஸுக்கு மேற்பட்டவர்கள் நிறைய ஜலம் குடிப்பது நல்லது. அநேக இடங்களில் ஜலத்தில் சுண்ணாம்பு, மாக்னீஷ்யம் என்னும் உலோகங்கள் ஸம்பந்தப்பட்ட உப்புக்கள் இருப்பதால் ஜலம் கடுக்கிறது. ஜலத்தைக் காச்சிவிட்டு சாப்பிடுவது நல்லது. வெந்நீர் தீர்த்தம் ஒரு டம்ளர் நிறைய மெதுவாக சிப்பிக் குடித்தால் நரம்புகளுக்கு சுறுசுறுப்பு ஏற்படுவதோடு, ரத்தமும் சுத்தப்படுகிறது.

---

## MODEL NOTES OF LESSONS FOR TEACHERS.

### மாதிரி பாடம்—பாலர் வகுப்பு.

ஒரு பையன் கையில் ஏதோ தின்பண்டம் வைத்துக்கொண்டிருந்தான். அதை ஒரு காகம் பிடுங்கிக்கொண்டு போய்விட்டது. பையன் அழுதுகொண்டே காகத்தைப் பார்த்துக்கொண்டு ஓடினான். காகம் பையன்வீட்டுப் பிழக்கடையில் ஒரு தென்னமரத்தின்மேல் உட்கார்ந்தது. அது அம்மரத்தில் கூடுகட்டியிருந்தது. காகம் கூட்டில் போய் உட்கார்ந்தவுடன் கூட்டிலிருந்து ஒரு முட்டை தவறி கீழே விழுந்தது. விழுந்த வேகத்தினால் முட்டை உடைந்து அதிலிருந்து ஒரு குஞ்சு வெளிப்பட்டது. இதைப்பார்த்து பையன் பயப்பட்டு பையன் தன் தாயாரிடம் நடந்தவைகளைச் சொல்லி அழைத்துவந்து காட்டினான். அதற்கு தாயார் "என்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1 - NOV 1913
MADRAS.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol XV. புத்தகம் ௧௫. | Madras: July & August 1913. சென்னை: ஜுலை மீ, ஆகஸ்டு மீ 1913 | No. 7&8. இலக்கம் 7&8

## JEWEL MANIA.

## நகைப்ரியம்.

---

ஆடையாபரணங்களின்மேல் பெண்களுக்கு தேவதாப்ரியம். நகைகள் அவர்களுக்கு அழகைக்கொடுப்ப தொன்றாயினும் அவை கேட்டைத் தருவதற்குக் காரணமாகின்றன. தம் மனதிற்கிசைந்த ஆபரணங்களை அணியவேண்டுமென்று பெண்கள் ஆசைப்படுவதால் அதிருப்தியும் கலகமும் வீட்டில் ஏற்படுகின்றன. எதற்காக மேலும் மேலும் அணியவேண்டுமென்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. அயல்வீட்டு சேஷம்மாள் அணிவதால் தானும் பூட்டிக்கொள்ள வேண்டுமென்ற ஒரே நியாயந்தான் அவர்களுக்குத் தெரியும். தம் புருஷனைப் பிரியப்படுத்தத்தான் நகைகள் வேண்டுமென்று அவர்கள் உணருவதில்லை.

நகை பூட்டிக்கொள்ள தேகத்தில் துவாரம் செய்துகொண்டு அந்த கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்வார்கள். புலாக்கு தொங்குவதினாலும், காலில் காப்பு கனப்பதாலும் உண்டாகும் உபத்திரவத்தையும் ஒரு பொருட்டாய்க் கருதமாட்டார்கள். தம் ஸ்திதியையும், யோக்கியதையுங்கூட கவனிப்பதில்லை.

புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக் கொண்டாற்போல் ஏழைகளாயுள்ள பெண்கள் பணக்காரப் பெண்களைப் பார்த்துவிட்டு தாங்களும் அவர்களைப்போ லிருக்கவேண்டுமென்று நினைக்கும்போது அதனால் உண்டாகும் மனக்கலக்கமும் அதிருப்தியும் பல. எவ்வகைப் பெண்களும் பாக்கியவதிகளானாலும், ஏழைகளானாலும் உயர்ந்த நகைகள் வேண்டுமென்று வற்புறுத்தி தலையணை மந்திரோபதேசம் செய்யாம லிருப்பதில்லை. கடன் பட்டாயினும் நகை செய்துதரும்படி மன்றாடுகிறாள். அவள் மனம்கோணக் கூடாதென்ற விசுவாசத்தால் நகைகளுக்காக கடன்பட்டு, பின்பு கடனை தீர்க்க வகையறியாமல் கையைப் பிசைவதை நாம் பார்க்கலாம். அச்சம

யம் நகைகள் பூணுவதால் நாயகியடையும் மகிழ்ச்சி எப்படியிருக்குமோ தெரியாது! நாளாக வட்டி வளருகிறது. பழயவெள்ளத்தை புது வெள்ளம் அடித்து போவதுபோல் புதுக்கடனுக்காக பழைய முதலையும் இழக்கும்படி நேரிடுகிறது. இருப்பது போதுமென்று மனத்திருப்தியோடிருந்தால், மனரம்மியத்தோடும் உற்சாகத்தோடுமிருக்கலாம்; கையிலிருப்பதற் கழிவில்லை.

சிலபெண்கள் பழைய நகைகளை அழித்து புதுமாதிரியான நகைகளைச் செய்வதால் தட்டானுடைய தட்டல் பொடித் தங்கமும், கட்டான் கூலியும் நஷ்டமே. பின்பு இன்னும் புதுமாதிரியைப் பார்த்து அணிந்திருக்கும் நகையை மாற்றத் துணிகிறார்கள். இதனால் பணநஷ்டமும் மனக்கலக்கமும் உண்டாகிறதேயொழிய வேறில்லை.

சிலபெண்கள் தங்களுக்கு சொந்தநகையில்லாதவிடத்து இரவல் நகையைப் பெற்றுக்கொண்டு விவாகங்களுக்கும் உற்சவங்களுக்கும் செல்கிறார்கள். பத்திரமாய் ஒப்புவிக்க வேண்டுமென்ற மனக்கலக்கத்தால் நகைமேலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பதால் மனோரம்மியம் அடைவதில்லை. ஏதாவதொன்றை இழந்தாலோ வீட்டிலுள்ள சாமான்களைத் தான் விற்றுக் கொடுக்கவேண்டி வரும்.

தற்காலத்தில் பெண்கள் முன்போல அதிக நகைகளையணிவதில்லையென்றும், பொறுக்கி மினுக்கான சில நகைகளைத்தான் அணிவதாயும் சொல்லிக்கொள்கிறார்கள். காதிற்கு வைரக்கம்மலும், நாசிக்கு மின்னியும் கழுத்திற்கு காசுமாலை, கடியார சங்கிலியும் மாத்திரம் சிட்டையாய் சில நகைகளைமட்டும் அணிகிறோமென்று பெருமை பாராட்டுகிறார்கள். நகைகள் கணக்கில் குறைவானாலும் மதிப்பில் நூறுமடங்கு அதிகமே. ஒரு நகையைக்கொண்டு பத்து நகைகள் செய்யலாம்..

பழைய சிவப்பென்று புது சிவப்பை வாங்கியும் வைரத்தை வாங்குவதில் மோசம்போயும் பொருளை இழந்தவர்கள் பலர். நகைகளைக் கள்ளர்களுக்குத் திருட்டுக்கொடுக்காதவர்களில்லை. நகையைக் காப்பாற்றமுயன்று காதையும் கையையும் கூந்தலையும் இழந்தவர்கள் சிலர். அகஸ்மாத்தாய் கைநழுவவிட்டு கண்பிதுங்கி நிற்பவர்கள் பலர்

சுய அழகிருந்தால் மேலழகு என்னத்திற்கு? யாரோ அழகுக்கழகு செய்வார்? அகோரமுள்ள ஸ்திரீகளுக்குத்தான் நகைப்பகட்டும் மினுக்கும் வேண்டும்.. உத்தம லக்ஷணமும் உயர்ந்த குணமுமுடையவர்களுக்கு வெளிவேஷ மென்னத்திற்கு?

பெண்கள் அணியவேண்டிய உத்தம ஆபரணங்கள் சிலஉள. அவை கற்பும், கல்வியும், செல்வக் குழந்தைகளுமே. இவை மூன்றுமிருந்தால் எவ்வகை யாபரணமும் வேண்டியதில்லை. புருஷனை வருத்தித் துன்பப்படுத்த வேண்டுமென்றால் கேட்கவேண்டிய நகைகளின் ஜாப்தாவிற் களவில்லை. தன் புருஷனைப் பிரியப்படுத்தவே நகைகளையணிவதுண்மையானால் அவனை வற்புறுத்தி கடன்பட்டு அடையும் நகைகளினால் பலனில்லை. புருஷனும் மனைவியும் சந்தோஷமாய் வாழ்வதே சிறந்த ஆபரணம்.



K. V. சுப்பிரமணிய அய்யர்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED ... B.I A. ... MADR...

## கமலாலயம்.

ஐப்பசி மாதத்தில் அடை மழைபிடித்துக்கொண்டு ஓயாமல் வருஷிக்கின்றது. ஆயினும் கமலாலயத்தில் சபை கூடாமல் இருப்பது சாத்தியமா? மேலும் இன்று இவ்வூர் ஸ்கூலுக்குப் புதிதாய் வந்து இருக்கும் "வாத்தியார் அம்மாள்" பிரசங்கம் செய்யப் போகிறார்களாம். அந்த அம்மாள் சென்னையில் பெண்டிர்க்கு ஏற்பட்ட பிரஸிடென்ஸி ட்ரெயினிங் ஸ்கூலில் உபாத்தியாய முறை கற்றவராம். மெட்றிகுலேஷன் பரீக்ஷைக்குக் கூட போனவர் என்கிறபடியால் அவர் உபன்னியாசம் நன்கு பிரகாசிக்கும் என்பதற்கு ஐயமில்லை. அது காரணம் பற்றியே தினம் தினம் வருகிறவர்களை விட இன்னும் அநேக ஜனங்கள் வருகின்றனர். வீதியெல்லாம் வண்டிமயமாய் நிற்பதால் வழியே இல்லை. மணி 5 தான் ஆனாலும், வீடெல்லாம் இருண்டு கிடக்கின்றது. விளக்குஏற்றவேண்டும், போகிறேன் உள்ளே.

முன்னமேயே அனேகர் உள்ளே உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும், பேசிக்கொண் டிருக்கின்றனர். அவர்களையெல்லாம் வழக்கம் போல் ஞானம்பிகையும் சாவித்திரியம்மாளும் உபசரிக்கின்றனர். தீபம் ஏற்றவே வீடெல்லாம் பிரகாசிக் கின்றது.

ஞானம் "வீரா! அதோ! வண்டி வந்துவிட்டது, ஓடு, சரியான வழி காட்டி அழைத்துக் கொண்டுவா. நானும் நொடியில் வந்து சேருகிறேன்." என்றாள்.

நான் திரும்பிப் பார்க்கவே, ஒருவண்டி அப்பொழுது தான் வந்து நின்றது. ஓடிப்போய்ப் பாக்கவே, "வாத்தியார் அம்மாள்" இறங்கிக் கொண்டிருந்தார். "இவ்வழியாய் வரவேண்டும்" என்று வண்டிப் புதர்களுக்குள் ஒரு சிறுவழி காட்டவே, என்ன நான் வரப்பொழுதாயிற்றோ? வண்டிகளைப் பார்த்தால் பலபேர் வந்து காத்து இருப்பதுபோல் தோன்றுகின்றதே என்ன, நான் "அப்படியில்லை, இப்பொழுதே மணி 5 ஆயிற்று; கொஞ்சம் அதிகமாகவே தான் ஜனங்கள் வந்து இருக்கின்றனர்," என்றேன். வாசற்படி போவதற்குள் ஞானம்பாளும் வந்து விட்டாள்.

"வரவேண்டும், வரவேண்டும்," என உபசார வார்த்தைகளோடு உள்ளழைத்துக்கொண்டுபோகவே நானும் வாயிலில் காத்துக்கொண்டு நின்றேன். உள்ளேபலருடனும் சற்றுபேசிய பின்னர் ஞானம் "ஆனால் பொழுதாய்விட்டபடியால் பிரஸங்கம் ஆரம்பிக்கலாமே" என்ன—"வாத்தியார் அம்மாள்" —"ஆரிய உத்தமிகளே—இன்று நான் பேசப்போகிற விஷயம், பம்பாயில் ஒருமஹான் ஆங்கில பாஷையில் பிரசங்கம் செய்தது; அதை நமது சபைக்குத் தக்கப்படி மாற்றி மொழிபெயர்த்து எழுதியிருக்கிறேன்.—படிக்கிறேன் கேளுங்கள்.

---

## சிறுபிராயத்தில் கலியாணம் செய்வதினால் உண்டாகும் தீமைகள்.

ஆரியர்களாகிய நம்முன்னோர் வழிகளின் நேர்மையே நேர்மை! உலக மார்க்கங்களில் ஒவ்வோர் வழியிலும் அவர்கள் அநுஷ்டித்துவந்த ஆசாரங்களின் மேன்மை எல்லாராலும் மெச்சப்படுகின்றது. இல்லறம் துறவறம் என்ற இரண்டு பெரிய வழிகளில் மட்டுமின்றி அவைகளின் ஒவ்வொரு பிரிவிலும் அவ்வான்றோர் செய்திருக்கும் ஏற்பாடுகள் வியக்கத் தக்கனவாய் அமைத்து இருக்கின்றன. மனிதவாழ்க்கையை அவர்கள் நான்கு பெரும் பிரிவுகளாய்ப் பிரித்தனர். அதாவது பிரமசாரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம். இவற்றுள் முதலிலே சொல்லப்பட்டுள்ள பிரம்மசாரியமே மனிதவாழ்க்கைக்கு மிகவும் அவசியமானது. இத்தருணத்தில் சிறுவர் தாம் கற்கவேண்டுவதை யெல்லாம் தக்க ஆசானிடம் மாசறக் கற்று, வேறு யாதொரு கவலையும் இல்லாமல் பின் நடத்தவேண்டும் வாழ்க்கைக்குத் தேவையான சன்மார்க்கங்களை அறிந்து கொள்ளுகின்றனர். பிரும்மசாரி ஆசிரமத்தில் சிறிது பிசகினால் பின் வரும் வாழ்க்கையின் ஐயமும் அதே அளவு குறைபடும். கற்கவேண்டியகாலத்தில் கல்லாமல் வீணே காலத்தைப் போக்கினால் முதிர்ந்தபின் ஜீவிக்கவழிதெரியாமல் தடுமாற வேண்டி வருகிறது. பிரும்மசாரியத்தில் சரிவரநடந்து வேண்டிய வித்தையைக் கைக்கொள்வானாயின் பின்னால் அதுவே மிகுந்த இன்பத்தைத் தரும். இது எல்லாருக்கும் பொதுவான விஷயமே. உயர்ந்த வகுப்பினர் என்று சொல்லிக்கொள்ளுகிற துவிஜர்களும் தாழ்ந்த வகுப்பினராகிய ஏனையோர்களும் வாழ்க்கைக்கு வேண்டிய வழிகளை சிறுபிராயத்தில் வேறு விஷயங்களில் மனதைச் செல்லவிடாமல் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமே. அப்படியில்லாவிட்டால் அவர்களது வாழ்க்கை பயனடைவதில்லை. இந்த சங்கதியை முற்றிலும் அறிந்தே ஆரியர்கள் முதல்பாகமான பிரும்மசாரியத்துக்கு அதிக சிறப்புவைத்தனர்.



சிறுவர்கள் கவலையின்றிக் கற்க குருகுலமும், ஐயம் திரிபு இல்லாமல் கற்கத்தக்க ஆசானும், அவர்கள் மனம் நல்வழியிலேயே எப்போதும் செல்லும்பொருட்டு அவர்களைச்சுற்றி நல்ல மனிதர்களும், நல்ல இடங்களும், நற்காரியங்கள் நிகழ்ந்துகொண்டும், இருந்தன. ஆனதுபற்றி அச்சிறுவர்களது மனம் அமைதியாய் சந்தோஷத்தோடு மேன்மேலும் கற்கவேண்டுமென்ற ஆசையுடனே வருத்தமின்றி எளிதில் பலவிஷயங்களைக் கற்றுக்கொண்டன. கற்றபின் அவரவர் ஜன்மாந்திரவாசனைக்குத் தக்கபடி இல்லறவாழ்க்கையையோ துறவறத்தையோ மேற்பூண்டனர்.

முற்காலத்தில் ஒருவனுக்காவது தக்கவயதுவராமல் கலியாணம்நடந்ததாகத்தெரியவில்லை. பெண்களுக்கும் வெகு இளம்பிராயத்தில் கலியாணம் செய்ததாகவும் பிரமாணங்கள் காணப்படவில்லை. பெண்களுக்கும்சிறுபிராயமுதல் கல்விகற்றுகொடுத்து பகுத்தறிவுவந்த பிற்பாடேபாணிக்கிரகணம் செய்துகொடுத்ததாக புராணங்களும் காப்பியங்களும் கூறுகின்றன.

இவ்வாறு ஆண்பெண் இருவருக்கும் தக்கவயது வந்தபிறகு தான் கல்லியாணம் செய்ததினால் அக்காலத்தார் வாழ்க்கை மிகவும் இனிமையாய்இருந்தது. ஜனங்களும் நல்ல பலசாலிகளாய் இருந்தனர். சண்டை சச்சரவுகளுக்கும் இடம் இல்லாமல் இருந்தன.

இக்காலத்திலே இவ்வழக்கங்கள் முற்றிலும் பறந்து விட்டன. எவ்வகையாலேயோ கற்கும் பிராயத்தில் பலகவலைகள் ஏற்படுகின்றன. கலியாணம் பகுத்தறியும்வயது வருவதற்கு முன்னமேயே நடந்து விடுகிறது. ஆரியர் களது வழிகளை முற்றிலும் துறந்துவிட்டு, அவர்களிடத்திலிருந்த ஆசாரங்களை வழுவாமல் நடத்திக்கொண்டு வருகிறோம் என்று சொல்லும் நாம், ஆஷாடபூதிகளே. ஒவ்வொருவரிடத்திலும் பழகி அவரவரிடத்திலுள்ள நன்மைகளைக் கிரகித்துத் தீமைகளை அகற்ற வேண்டியிருக்க நம்மவர் அதற்கு முற்றிலும் கைவிட்டு அவர்கள்மாறாக ஆரியர்களது நல் வழக்கங்களை முற்றிலும்கைவிட்டு அவர்கள் நடந்துவந்தமாதிரி தாங்களும்நடப்பதாக வெளிக்குமட்டும் பெருமை சொல்லிக்கொள்ளுகிறார்கள். நம்மவர்களுள் பெரும்பான்மையோருக்கு வீட்டுக்கவலைகள் இல்லாமல் உயிருக்கு இன்றியமையாத கல்வியைக்கற்பதற்கு பொழுதேகிடைப்பதில்லை. வெகுசிறுவயதிலேயே மணக்கோலம்முடிந்து அவ்விஷயமாய் அநேகந்தடவை வேறு ஊர்களுக்குப்போயும், சிற்சில வீடுகளில் அவற்றால் உண்டாகும் சிறுசண்டைகளில் தலையிட்டுக்கொண்டும், இன்னும் இதுபோன்றபலவிஷயங்களால் வித்தியாபிவிருத்திக்குத் தடை ஏற்படுகின்றது. இவ்வாறு சிறுபிராயம் வீண்ஆகவே கொஞ்சம் வயது சென்றபின் வீட்டைவிட்டகன்றுபோய் கல்விகற்போமென்றால், அக்காலத்துக்குள் அவர்களே மனையாளுடன் இருக்கவேண்டிய காலம் வந்துவிடுகிறது. இக்காலம் வரவேண்டியது தான்

தாமதம்; உடனேகற்கும் விருப்பமே அடியோடு போய்விட எவ்வகையாலாவது சம்பாதித்து சாப்பிடு வதற்குவழி தேடினால் போதும் என்று தோன்றுகிறது. இவ்வாறு கஷ்டப்படும் ஜனங்களுக்கு எது செய்யத்தான் உற்சாகம் கொடுக்கும்!!

இவ்வளவு கஷ்டமும் பட்டு கற்றுத்தேர்ந்தவர்களும் சிலர் உண்டு. ஆயினும் அவ்வாறு விருத்தியடைகிறவர்கள் மிகவும் அருமையே. இத்தகைய கஷ்டம் சிறு பிராயத்தில் கலியாணம் செய்வதை நிறுத்தினால் ஏதோ ஓர் வகையாய்ச் சிறிதாவது குறையுமல்லவா?

சிறு வயதில் கலியாணம் செய்வதினால் உண்டாகும் கெடுதி இம்மட்டோ? இன்னும் உள்ளன.

பெண்களும் புருஷரும் சிறு பிராயத்திலே மணம் செய்துகொண்டு குழந்தை பெறுவதற்குத் தக்க வயது வராமல் இருக்கும்போதே குழந்தைகளை அடையவேண்டி வருகிறது. இதனால் அநேகர் உயிர் இழக்கிறார்கள். இறவாது உயிர் பிழைப்பினும் மிகுந்த நோய்க்கு ஆள் ஆகிக் குழந்தைகளும் பல பிணிகளால் பீடிக்கப்படுகின்றன. இது விஷயத்தை நாம் தினம் தோறும் கண்ணாரக்காண்கிறோம். ஒரு தேசத்தில் பெரும்பான்மையோர் நோயாளிகளாயும் புஜபல மற்றும் இருப்பதைப் பார்க்கிலும் தேசத்துக்கு வேறு என்ன கேடு வேண்டியிருக்கிறது.

தவிர, மனத்தால் எண்ணுவதற்கும், கண்களால் பார்ப்பதற்கும், காதுகளால் கேட்பதற்கும் மிகுந்த வருத்தத்தைத் தரும் இன்னொரு விஷயத்துக்கும் இவ்வகைக் கலியாணங்களே காரணமாயிருக்கின்றன. அது யாதெனில் குழந்தைப் பருவத்திலேயே புருஷர்களை இழக்கும் சிறுமிகளுடைய விஷயமே. ஒரு குழந்தைக்குக் கலியாணமென்பதே இன்னதென்று தெரியாமல் இருக்கும் காலத்தில் அக்காரியம் நிறைவேறி சில மாதங்கட்கெல்லாம் அப்புருஷனை இழந்து விட்டு, தன் வயதுள்ள சிறுமிகள் வயது வந்தகாலத்தில் சந்தோஷமாய் இருக்க, இவள் மட்டும் மற்றவர்களுடைய பலவந்தத்தினால், ஒரு சந்தோஷ சமாசாரத்திலும் தலையிடாமல் புறம்பாய் இருக்கவேண்டுமென்றால், அதைவிட துக்கமான செயல் வேறு என்ன இருக்கின்றது! தக்க வயது வந்து பகுத்தறியும், உலக வழிகளின் தன்மையும் சரிவரக்கற்ற பின் கல்யாணம் நடந்து, புருஷனுடன் சில நாள் வாழ்ந்து, பிறகு இக்கொடும் விதிக்கு ஆளாக வேண்டியதாய் இருப்பினும் மிக்க வருத்தத்தைத் தருமென்பதற்கு ஐயமில்லை. அங்ஙனமாயின், தான் ஒன்றும் அழியாமல் குழந்தையாய் இருக்க தன் பெற்றோர்களும் உறவினர்களும் செய்து வைத்த ஓர்காரியத்தின் பலனை உயிர் உள்ளவரை அநுபவிக்க வேண்டிய கஷ்டம்நேர்வது நியாயமா! இவ்விஷயத்தைப் பற்றிப் பேசப் புகின் பெருகும்.



தவிரவும் பலசச்சரவுகளுக்கும் இக்கலியாணங்களே காரணமாகின்றன. பணத்தை உத்தேசித்தோ அல்லது ஆஸ்தியை உத்தேசித்தோ, அல்லது மனிதர்களுடைய தாக்ஷிண்யத்துக்கு உட்பட்டோ, கலியாணம் செய்யுங்கால் வதூவரர்களுடைய மனப்போக்குகளை கவனியாமல் இளம்பிராயத்திலேயே விவாகம் முடிப்பதால் பருவம் வந்த காலத்து ஒருவர்மனம் ஒருவருக்குப் பொருந்தாமல் பலவிதமான சண்டைகள் உண்டாகின்றன.

இவ்வாறு பலவிதமான தீமைகளைப் பற்றியே பேசுவதினால் இவ்வொழுக்கத்தில் நன்மையே இல்லையென்றும், ஆங்கிலேயர் மாதிரி தங்கள் மனப்படி காதலர்களைத் தெரிந்து எடுக்கும்படி விடவேண்டுமென்றும், சொல்லவந்தவன் அல்ல. மகான் விவேகாநந்தஸ்வாமி சொல்லுகிறபடி ஒவ்வோர் ஒழுக்கத்திலும் நன்மைகளும் தீமைகளும் கலந்தே இருக்கின்றன. தீமைகளைமட்டும் ஒழித்து நன்மைகளையே அடைய விரும்புவது மிகப்பேதைமை. நன்மை வரும் என்று நினைத்து நமது ஒழுக்கங்களை முற்றிலும் கைவிடுவதும் புத்தியில்லாதவர் செய்யும் வேலையாகும். ஆகையால் நாம் செய்ய வேண்டுவது யாதெனில் கூடிய மட்டில் நமது ஒழுக்கங்களையே சீர்திருத்தி, நன்மைகளைக் கூடிய மட்டில் அதிகப் படுத்தும் வழிகளை அநுசரித்து, தீமைகளைக் கூடிய மட்டில் குறைப்பதற்கு வேண்டிய சாதனங்களை தேடிக்கொள்ள வேண்டும்; அதுவே கற்றறிந்தோர் செய்யும் வேலை. தேசமும், ராஜாங்கமும், நாகரீகமும் மாறுபட, மாறுபட, அம்மாறுபாடுகளுக்கு இணங்க நமது ஆசாரங்களிலும் சீர்திருத்தம் இருக்க வேண்டியது நியாயமே அல்லவா? இவ்விதம் செய்து கொள்ளாமல் இருப்பதால் நமக்குப் பல கேடுகள் உண்டாவதும் அன்றி அன்னியதேசத்தார் நமது வீம்பையும் பிடிவாதத்தையும் பார்த்து நகைப்பார்கள் அன்றோ?

மேல்காட்டிய துன்பங்களை விலக்க வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டே பரோடா, மைசூர், இவ்விராஜாங்கங்களில் இளம் பிராயத்தில் நடத்தும் கலியாணங்களைத் தடுக்க புதிதாய்ச்சட்டங்கள் பிறப்பித்து இருக்கின்றனர். இச்சட்டங்களால் பலநன்மைகள் விளைகின்றன வென்றுசொல்லவும் வேண்டுமோ! 12, 14வயதுக்குமேல் பெண்களுக்கும், 18, 20வயதுக்குமேல் புருஷர்களுக்கும் கல்லியாணம் செய்வது மிகவும் நல்லது. அவ்விதம் செய்ய ஆரம்பிப்பது நம்போன்ற பெண்டிர்களின் முயற்சியினாலேயே ஆகவேண்டிய காரியம். கல்வியறிவில்லாப் பெண்டிர்கள் எத்தனை சீர்திருத்தங்களுக்கு இடையூறு செய்கின்றனர்!!

கமலாலயத்துப் பெண்டிர் சங்கத்தில் நான் இன்று இவ்விஷயத்தைப் பற்றிப் பேசமேற்கொண்டது என் சொற்றிறமையையும், படிப்பின்விரிவையும், காட்ட வேண்டியன்று. ஏனெனில் அவைமிகக்குறைவே யென்று

இத்தனை நேரத்தில் உங்களுக்கு நன்று தெரிந்து இருக்கும். இல்லாவிட்டால் நீங்கள் இவ்விஷயத்தைக் கேட்டமட்டும், பொழுது போக்காய் இருந்ததென்று எண்ணிவீட்டுக்குப் புறப்பட்டு போவதற்கும் அன்று. இது விஷயத்தைப்பற்றி நீங்கள் ஒவ்வொருவரும் தீர்க்காலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உங்களுக்கும் குழந்தைகள் இருக்கின்றன. அவர்களுக்கும் கலியாண மாகவேண்டும். நமது நாட்டின் நன்மையை நாடி ஒவ்வொரு பெண்டிர் சபையிலும் இவ்விஷயத்தை முற்றமுற்ற விவரித்துப் பேசி பலருக்கும் இந்நன்மைகளைப் போதித்தால் கூடியசீக்கிரம் ஏதாவது கதிமோக்ஷம் பிறக்கும் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

இவ்வாறு நாமே சீர்ப்படுத்திக்கொள்ளாமல், நமது ராஜாங்கத்தாரால் சட்டங்கள் ஏற்படவேண்டு மென்று எதிர்பார்ப்பது மிகவும் அசாத்தியம். இராஜாங்கத்தார் இவ்விஷயத்தில் தலையிட்டுக் கொண்டால் மதசம்மந்தமானவிஷய மாகையால் எவ்விதம் எல்லாருக்கும் திருப்திகரமாய்ச் சட்டங்கள் செய்யமுடியும்? நம்மிடமிருந்து சீர்திருத்தங்கள் புறப்படுமானால் அப்பொழுதுதான் இராஜாங்கத்தாருடைய உதவியை எதிர்பார்க்கலாம்.

பொழுது அதிகரித்து விட்டபடியால் அன்று சபைகலைந்தது.

வாயில்காப்போன்.

# சிசுக்களை போஷிக்கும் வகை.

இது சென்னையில் வைத்தியம் செய்துவரும்
டாக்டர் யூ. ராமராவு அவர்களால் எழுதப்பட்டது.

சென்னையில் நடக்கும் சிசுக்களது மரணம், விசேஷமாய் குழந்தை பிறந்த ஒரு வருஷத்திற்குள் நடப்பது. சரீர சுகசம்பந்தமான விதிகளை அனுசரித்து உணவு கொடுக்காததனாலும், முலைப்பால் கொடாததனாலு மென்றே பெரும்பாலு மேற்படுகிறது. ஆகவே, இது விஷயமாய்க் கீழ் கொடுக்கப்படும் சில முக்கியாம்சங்களைக்குறித்து குழந்தைகளை போஷிக்கத் தெரியாதவும், அறியாதவும் மாதாக்களுக் கனுகூலமாய்ப் பிரசுரிக்கப் படுவதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டிய தவசியம்.

சிசுக்களைப் போஷிக்க இரண்டு வழிகளுண்டு. ஒன்று முலைப்பால் கொடுத்தல், இரண்டாவது புட்டிப்பால் கொடுத்தல். குழந்தைகளுக்கு இவைகளுள் மிகச் சிறந்தது முலைப்பால் தான். ஏனெனில் புதிதாய்ப் பிறந்த குழந்தையின் குடல் ஸ்திரீகளது பாலைத்தான் ஜீரணிக்கச் சக்தி



யுள்ளது. முலைப்பால் குடித்து வளரும் குழந்தைகள் புட்டியினின்று பால் குடித்து வளரும் குழந்தைகளைப்போல் நோய் நொடியால் பீடிக்கப் படா. ஆகவே ஒவ்வொரு தாய்மாரும் கூடுமானவரையில் தம் குழந்தையைத் தாமே பால் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

தாயின் அகால மரணத்தாலோ அல்லது தேக அசௌக்கியத்தாலோ தம் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமற்போனால் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடிய செவிலித் தாயைக்கொண்டாவது பால் கொடுக்கச் செய்ய வேண்டும். அந்தச் செவிலித்தாய் சரீர சௌக்கிய முள்ளவளாய் திடகாத்திரசரீரியாய், ஜாஸ்தியான வாதசரீரமுள்ள வளாயிராமலிருக்க வேண்டும்; க்ஷயரோகம், குஷ்டம் முதலிய தொத்துவியாதிகள் எதுவும் அத்தாய்மாரிடம் காணக்கூடாது. அத்தாய்மார்கள் 20 வயதிற்குமேல் 30 வயதிற்குள்ளும் இப்போது பால் கொடுக்கப்போகிற குழந்தைக்குச் சரி சமான வயதுடைய குழந்தையைத் தாங்களும் உடைத்தானவர்களாயு மிருக்க வேண்டும். நிச்சலமான மனத்தையும் பெற்றிருக்கவேண்டும்; துராகிருதமான மனோவிகாரங்களுக்கு இடங்கொடாதவர்களா யிருக்கவேண்டும். இடங்கொடுத்தால் அவர்கள் கொடுக்கும் பால் பிரயோஜனப்படாமல் வயிற்று வலி, வயிற்றுப்போக்கு, இழுப்பு, முதலிய கொடிய நோய்களை குழந்தைக்குண்டாக்கி விடும்.

குழந்தை பிறந்த பிறகு இரண்டு மணிக்கொரு முறையல்லது 4 மணிக்கொருமுறை தாய் முலைப்பால் பருகும்படி விடவேண்டும். முதலில் முலைக்காம்பை சர்க்கரை கலந்த தண்ணீரால் ஈரப்படுத்துவது நலம். குழந்தை பிறந்த இரண்டு நாளுக்குள் அரிசிக் கஞ்சியாவது இதர ஜீரண கடினமான வஸ்துவையாவது கொடுத்தல் மிகவும் கெடுதல். அந்த இரண்டு நாட்களிலும் தினமொன்றுக்கு நான்கு தடவைகளுக்குமேல் 6 தடவைகள்வரையில் முலைப்பால் குடிக்க விடலாம். முதல் ஐந்து வாரங்களிலும் பகற்காலத்தில் இரண்டுமணிக்கொருமுறை தவறாமலும் ஆறாவது வாரத்திலிருந்து 12-வது வாரம் முடிய $2\frac{1}{2}$ மணிக்கொரு முறையும், மூன்றாவது மாதத்திலிருந்து 9-வது மாதம் முடிய 3 மணிக் கொருமுறையும், 9-வது மாதத்திலிருந்து 12-வது மாதம் முடிய $3\frac{1}{2}$-மணிக்கொரு முறையும் சரியாய் முலைப்பால் கொடுத்து வரவேண்டும். இரவில், முதல் வாரத்தில் ஒரு முறை அல்லது இரண்டு முறையும், பிறகு 5-வது மாதம் வரையில் இரவு 10 மணிக்கு ஒரே தடவையும், ஐந்தாவது மாதத்திற்குப் பிறகு, இரவு 10 மணிக்கு மேல் காலை 6 மணி வரையில் ஒன்றும் கொடுக்காமலுமிருக்க வேண்டும்.

குழந்தைக்குச் சரியான காலங்களில் முலைப்பால் கொடுப்பதில் வெகு கருத்தாயிருக்க வேண்டும். குழந்தை அழுத பொழுதெல்லாம் பால் கொடுப்பதென்பது, குழந்தையின் ஜீரணசக்திக்கு கெடுதலை யுண்டாக்குவ

தோடுகூடவயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, அஜீர்ணம் முதலியவைகளையும் உண்டாக்கும். குழந்தைக்குச் சரியான காலங்களில் ஆகாரங் கிடைத்திருந்தால் அது அழுததன் காரணம் தாகத்தாலிருக்கும். அப்போது கொஞ்சம் சூடு தண்ணீர் கொடுத்தால் மறுமுறை பால்கொடுக்கும் வரையில் தாங்கும். 15 நிமிஷங்களுக்கு மேல் ஒரு குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

அந்நிய ஸ்திரீகளது பாலும் குழந்தைக்குக் கிட்டாதபோனால் கைம்முறையில் குழந்தைக்கு ஆகாரம் கொடுத்து வரவேண்டும். ஸ்திரீகள் முலைப்பாலுக்கிணை எந்த ஜெந்துவின் பாலுமாகாது. ஆனால் இலகுவில் நமக்குக் கிடைக்கக்கூடிய ஜெந்துவின் பால் பசுவின் பால் தான். பசுவின் பச்சைப்பால் குழந்தையின் ஜீரணத்திற்கு தகுந்ததல்ல. ஸ்திரீகளது முலைப்பாலிலும் பசுவின் பாலிலும் கொழுப்பு சரிசமமாக இருந்த போதிலும் மிசிரவகையில் பேதமுண்டு. பசுவின்பாலில் புஷ்டி கொடுக்கும் ஸத்து.(நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு),சர்க்கரை(நூற்றுக்கு $4\frac{1}{2}$ பங்கு) மேலும் அது புளிப்பாய் எதிர் களிக்கக்கூடியது. ஸ்திரீகள் முலைப்பாலோகாரமாய் எதிர்க்களிப்பது. பசுவின்பாலில் ஸ்திரீகள் முலைப்பாலிலிருப்பதை விடபாலடைக்கட்டி அதிகவிசேஷம். அதிசீக்கிரத்தில்ஜீர்ணிக்கமுடியாத கெட்டித்தயிராய் விடும். ஸ்திரீகள்பால் நேர்த்தியாயும் அதிசீக்கிரத்தில் ஜீர்ணிக்கக்கூடியதாயுமுள்ளது. பசுவின் பாலை ஸ்திரீகள் பாலுக்குச் சமதையாய் வெரும் தண்ணீர் விட்டாவது பார்லி தண்ணீருடன் கலந்தாவது நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு வீதமிருந்த புஷ்டிகொடுக்கும் பதார்த்தத்தை $1\frac{1}{2}$ வீதம் குறைத்துவிடலாம். இவ்விதம், நீர்கொண்டு பாலை சமப்படுத்தலால் அப்பால் ஜீர்ணிக்கத் தகுந்ததாய் விடுகிறதுமல்லாமல் அப்பாலின் இதா உபவஸ்துக்களும் சாந்தப்படுகிறது. கொழுப்புக் குறைந்துள்ளதாயிருந்தால் நூற்றுக்கு 16 அல்லது 20 மடங்குள்ளதான ஆடையின் சேர்க்கையால் அது சரிப்பட்டுவிடும். குழந்தையின் ஜீர்ணத்திற்கு சாதாரண சர்க்கரை அல்லது வெள்ளைச் சர்க்கரையைக்காட்டிலும் பாலிலுள்ள சர்க்கரையே மிக்க ஏற்றது. இதனாலுண்டாகும் புளிப்பு எதிர்க்காளத்தைக் காரமானதாய் மாற்றவேண்டுமானால் கொஞ்சம் சுண்ணாம்பு தண்ணீராவது ஸோடா பைகார்பொனேட்டாவது சேர்த்துக்கொள்ளலாம்.

முதலில் ஒரு பக்ஷத்திற்குக் கொடுக்கப்படும் பால், பாலும் தண்ணீரும் ஒன்றுக்கு மூன்றாயிருக்கலாம். பிறகு மூன்று மாதம் வரையில் ஒன்றுக்கு இரண்டாயும், பிறகு ஆறுமாதம் வரையில் ஒன்றுக்கு ஒன்றாயும், பிறகு 9-வது மாதம் வரையில் இரண்டுக்கு ஒன்றாயும் கலந்துகொடுக்க வேண்டும். முதல் மாதத்தில் குழந்தைக்கு வேளை ஒன்றுக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ அவுன்ஸ் பாலும், இரண்டாவது மாதத்தில் 2 அல்லது 3 அவுன்ஸும்,



மூன்றாவது மாதத்தில் 3 அல்லது 4 அவுன்ஸும்; 4, 5-வது மாதங்களில் 4 அல்லது 5 அவுன்ஸ் பாலும், 6-வது மாதத்தில் 5 அல்லது 6 அவுன்ஸும், 7 முதல் 9-வது மாதம் முடிய 6 அல்லது 7 அவுன்ஸுகளும், 9 வது மாதமுதல் 12 வது மாதம் முடிய 8, 9 அவுன்ஸுகளும், கொடுத்துவரவேண்டும். பச்சைப் பாலை தேகத்திற்கு புஷ்டியைத் தரத்தக்கதெனினும் மதராஸ் பாலை குழந்தைக்குக் காய்ச்சாமல் கொடுக்கக்கூடாது. ஏனெனில் இப்பாலில் ஜீரணகருவியைக்கெடுக்கக்கூடிய அநேக கிருமிகளிருக்கின்றன.

இப்போது குழந்தைகளுக்கு ஆகாரத்திற்குப் பதிலாய் சர்வசிலாக்கியமானதெனக் கருதப்பட்டுக் கொடுக்கப்பட்டு வரும் பிரசித்திபெற்ற ஆகாரங்களைப்பற்றிக் கூறுதுபோனால் சிசுக்களைப் போக்ஷிக்கும் வகையைப்பற்றி யாம் பேசப் புகுந்தது முடிவடையாது. குழந்தைகள் பிறந்த 9 மாதத்திற்குள் கஞ்சிப் பசையுள்ள எந்த ஆகாரமும் கொடுக்கக்கூடாது. ஆகவே எந்த ஆகாரம் அதி சீக்கிரத்தில் கரையக்கூடிய கார்போ-ஹைட்ரேட்ஸாய் மாற்றப் பட்டிருக்கிறதோ அது 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு உபயோகமாகும். அப்பேர்ப்பட்ட ஆகாரங்கள் ஹார்லிக்ஸ் மால்டட் மில்க், அலென் பரிஸ் புட்ஸ் நெம்பர் 1, 2. மெல்லினஸ் புட்.

கெடுதலானபுட்டியும் அழுக்கடைந்த ரப்பர் முலைக்காம்பும் சரியாய்த் தயாரிக்கப்படாத ஆகாரம் எவ்வளவு கெடுதல் செய்யுமோ அவ்வளவு கெடுதலை யுண்டுபண்ணு மாகையால், பால் குடிக்கும் புட்டியை எவ்விதம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் எப்படி அதைக் காப்பாற்ற வேண்டுமென்றும் இங்கே குறிப்பிடுவது அநாவசியமன்று. புட்டியானது படகு போலும், மூலை முடுக்குகளில்லாமலும் இலகுவில் கழுவக் கூடியதாய் பள்ளங்களுமில்லாமலுமிருக்க வேண்டும். குழந்தை பால் குடித்தவுடனே புட்டியிலுள்ள மிகுதிப் பாலைக் கீழே சுத்தமாய் வடித்துவிட்டு நன்றாய் ஸோடா பவுடர் கலந்த நீரைக்கொண்டு கழுவிவிட வேண்டும்.

ரப்பர் முலைக்காம்பை உடனே சுத்தமான நீரைக்கொண்டு உட்புறமும் வெளிப்புறமும் கழுவவேண்டும். அந்த ரப்பர் காம்பு வெகுநேரம் பாலில் படும்படி வைத்திருக்கக்கூடாது; ஏனெனில்கொழுப்புசுத்தமானரப்பரில்பட சீக்கிரம் அது கெட்டுப் போய்விடும். ஒரு சிட்டிக்கை ஸோடாபைகார்பொனேட் கலந்த பச்சைத் தண்ணீரில் ரப்பர் முலைக்காம்பைப்போட்டு வைத்தல்நலம். அந்தரப்பரின் துவாரம், புட்டியைத் தலைகீழாய்க்கவிழ்த்தால் பால் அதிக வேகமாகவாவது அதிக ஜாஸ்தியாகவாவது வராமல் சிறியதாயிருக்க வேண்டும். பால் கொடுக்கப்பட்டவுடன் புட்டியினின்றும் நிப்பிலை(ரப்பர் முலைக்காம்பை)எடுத்துபோரிக் ஆஸிட்கலந்தநீரில்போட்டுவைக்கவேண்டும். குழந்தைக்கு வெறும்நிப்பிலைக்கொடுத்தால், நிப்பில்வழியாய்காற்றுஉட்சென்று வயிற்றுவலி யுண்டாக்குமாகையால் அவ்விதம் செய்யவேகூடாது.

## A VIRTUOUS KING.

## நீதி மன்னன்—ஒரு பழங்கதை.

முற்காலம் தொடங்கி நாகரீகம் மேலிட்டு, அறிவு பெருகி, தர்மம் தழைத்து, சிறப்புற்று ஓங்கிய நாடுகளுள், சீனதேசம் ஒன்று. அத்தேசத்தில் பல வருஷங்களுக்கு முன்னர் 'காங்ஹி' என்று ஒரு அரசன் இருந்தான். அவனது நேர்மையும் நீதியும், நடுநிலைமையும், அடக்கமும், பிரஜைகளிடத்துள்ள அன்பும் அளவிடக்கூடாதன. நமது இந்து தேசத்திலே பூர்வம் செங்கோல் நடத்தின ஜனகன், இராமன், தர்மபுத்திரன், பொற்கைபாண்டியன்— எனச்சொல்லும் அரசர்களை நிகராவான். தன் தேசத்து மன்னுயிர்களைத் தன்னுயிர்போல் காப்பாற்றுவதும், துஷ்டர்களைத்தண்டித்துச் சாதுக்களை விசுவாஸிப்பதும், பொய்மையைக்கொன்று மெய்மையை நிலை நாட்டுவதும்— அவன் ஓயாமல் செய்யும் தொழில்கள். குற்றம் செய்தோன் எத்தகைய மனிதனாயினும் சரி, ருஜு⁻வானால் மிகக் கொடுமையாய்த் தண்டித்துவிடுவான்.

இவ்வாறு இராஜ்யபாரம் செய்து வருகையில் ஒரு நாள் காலையில் அரசன் வேட்டைக்குப் புறப்பட்டான். பிரபுக்கள், சேவகர்கள், வேட்டையாட்கள், புடைசூழ கொட்டு முழக்குடன் வனம் நோக்கிப் பிரயாணப்பட்டார்கள். அவ்விடம் சேர்ந்ததும் மான், பன்றி, முயல் முதலான மிருகங்களை வேட்டையாடுவதில் மனம் செலுத்தி ஒவ்வொருவரும் மிருகங்களின் பின்செல்லவே, ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தனர். வெய்யில் அதிகரித்து தேகம் இளப்படையவே, அரசன் பின் திரும்பிப் பார்த்தான். கண்ணுக்கு எட்டியவரையில் ஒருவரும் தென்படவில்லை. இனித் திரும்பவேண்டியதுதான் என்று தீர்மானித்து ஊர்நோக்கிப்புறப்பட்டான். பாதையில் வந்து சேரும்பொழுது சுமார் நடுப்பகல் ஆய்விட்டது. சாலை மரங்களின் நிழலிலே மெதுவாய் குதிரையை விட்டுக்கொண்டு போகும் போது ஏதோ ஹீனஸ்வரமாய் அழுகைக்குரல் அரசன் காதில் கேட்டது. நாற்புறமும் சுற்றிப் பார்த்தான்; ஒன்றும் கண்ணிற் படவில்லை. 'இப்பெரு மரங்களின் மறைவில் யாராவது ஒளிந்து நிற்பார்களோ!' என்று குதிரை விட்டு இறங்கி அம்மரங்களின் பக்கத்தில் போனான்.

அங்கே மரத்து மறைவில் ஒரு கிழவன் இரண்டு கைகளையும் கன்னத்தின்மேல் வைத்துக்கொண்டு, தரை நோக்கிய கண்களோடு, அசை வற்ற சிலைபோல உட்கார்ந்து கொண்டு, தாரை தாரையாய் கண்ணீர்பெருக மெல்லிய குரலோடு அழுதுகொண்டிருந்தான். அரசனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. "நான் நீதி மன்னன் என்று சொல்லுவதும்



உண்மையா? எனது இராஜ்யமா இது? என் தேசத்திலும் இவ்வாறு பிரஜைகள் அழுவது நியாயமா? நான் அரசனா யிருப்பதில் என்ன பயன்!! இதனைத் தீர விசாரிப்போம்" என்று அக்கிழவன் பக்கத்துக்குப் போய் அவன் தோளினமேல் கையைவைத்து "அப்பா" என்றான். அது வரையில் கிழவனுக்குத் தன்னருகில் மனிதன் வருகிறான் என்பதே தெரியவில்லை. அரசன் கை மேலேபட்டதும் கிழவன் திடுக்கிட்டு எழுந்தான். அவனை தைரியப் படுத்தி 'நீ இவ்வாறு விசனமுறுவதற்குக் காரணம் என்ன? என்னிடம் பயமில்லாமற்சொல்லு!' என, கிழவன் "ஐயா என்னுடைய கொடுமையை என்னஎன்றுசொல்வது! எனக்குப் பரம்பரையாய்ச் சொந்தமானநிலம் ஒன்று இவ்வூரில்இருந்தது. அதைப் பயிரிட்டு வாழ்ந்து வந்தேன். அதன் வளப்பமும், பெருமையும், கண்டோர் மனத்தைக் கவரும். என்னைப் போன்ற ஏழைகட்கு இத்தனை நல்ல நிலம் இருப்பது இவ்வூர் அதிகாரிக்குப் பொறுக்கவில்லை. ஏதோசிலகாரணம்காட்டி அந்நிலம் அரசனுக்குச் சேர்ந்ததென்று தான் பிடுங்கிக்கொண்டுவிட்டான். அன்று முதல் பரம ஏழையாய் விட்டேன். நானும் என் அருமை மகனும் வயல்களில் உழைத்துப் பிழைத்தோம். அதுவும் அவ்வதிகாரிக்குப் பொறுக்கவில்லை. நேற்று என்னருமை மகனைப் பிடித்துத் தனது அடிமைப்பாக்கிக் கொண்டு விட்டான். இனி நான் எவ்விதம் பிழைப்பது? ஒன்றும் தோன்றாமல் இங்கே புறப்பட்டு வந்து விட்டேன். இனி எனக்கு நாட்டில் என்ன வாழ்வு இருக்கின்றது.? காடுகளில் அலைந்து பிராணனை விடுவேன்" என்றான்.

அரசன் தன் கோபத்தை மறைத்துக்கொண்டு அன்பு ஒழுக "என் அன்பிற்குரிய அப்பனே! கவலைப்படல் வேண்டாம். நான் உம்முடன் வருகிறேன். இருவரும் போய் அவ்வதிகாரியை மற்றும் ஒரு முறை கேட்டுக்கொள்ளுவோம். இப்பொழுதாவது அவருக்கு மனது இரங்காதோ!! எனக்கு அவர் தெரியாவிடினும் நானும் என்னால் கூடிய மட்டில் சொல்கிறேன்" என்றான். "ஐயா, நீர் உமது வழியே போங்கள்; நீங்கள் சொல்வதால் ஒன்றும் பிரயோஜனப் பட மாட்டாது." என்றான் கிழவன். "பெரியவரே நீர் அப்படி எண்ண வேண்டாம். ஒருமுறை இருக்குமாறு ஜனங்களுக்கு மனம் வெகுநேரம் இருப்பது அரிது; மேலும் இன்னொரு முறையும் கேட்டுப் பயன் படாவிட்டால் உம்மிஷ்டப்படி நடக்கலாம். இங்கிருந்து உம்மூர் எவ்வளவு தூர மிருக்கும்?" என்றான்.

கிழவன் "ஐயா, நீர் வீணே உமது வேலையைக் கெடுத்துக்கொண்டு எனக்காகப் பிரயாசைப்படுகிறீர். என் ஊர் இங்கிருந்து 5 மயிலுக்கு மேல் இருக்கின்றது" என்றான். "ஆனால் புறப்படும்" என்று தூண்டவே

கிழவன் மறுபடியும் "என்னைப்பற்றி உமக்கும் இன்று அவமானமும் திட்டும் வரப்போகின்றது. நீரோ போகாவிட்டால் விட மாட்டீர் போல் தோன்றுகின்றது. நான் இங்கே அதிக நேரம் நின்றதற்கே வருந்துகின்றேன். ஆயினும் போவோம் வாருங்கள்," என்றான். புறப்படவே மரத்தடியில் குதிரை நிற்பதைப்பார்த்து "சுவாமி நான் கிழவன் உமது குதிரையோடுகூட ஓடிவரமுடியாது, அனாவசியமாய்த்தாமதமாகுமே எனபயப்படுகிறேன்" என்றான். அதற்கு "அது உண்மையே; ஆனால் நான் சிறுபிள்ளை; நடக்கவும் ஓடவும் சக்தியுண்டு; ஆகையால் நீர் குதிரை மீதேறிக்கொள்ளும்; நான் நடந்து வருகிறேன்" என்றான் அரசன். அதற்குக் கிழவன் உடன் படுவானா? அது பற்றி அரசன் "ஆனால் என் குதிரை பலமுள்ளது; இருவரையும் தாங்கும். ஆகைபால் இருவரும் ஏறிப்போவோம்" என்று, கிழவனைத்தன் பின் புறத்தில் ஏற்றிக்கொண்டு, கிழவன் வழி காட்ட குதிரையை மெதுவாய் ஓட்டிக்கொண்டு போனான்.

கிராமாதிகாரியின் கச்சேரிக்குச்சென்றதும் வேட்டைக்காரனைப் போன்று உடைதரித்து வந்து இருக்கும் அரசன் அதிகாரியை அழைப்பித்தான். அவ்வதிகாரி கடும் வெயிலில், மாலைப்பொழுதில் தன்னை வரச் சொன்னவர் எவரோ என்று சந்தேகத்தோடு எதிர்வந்து நிற்கவே, அரசன் தன்னுடைய வேட்டைக்குரிய உடைகளைக்கழற்றி எறியவே, அரசன் அணியும் பதக்கமும், இன்னும் இதர சின்னங்களும் அவன் மார்பில் விளங்கின. இராஜாதி ராஜன் தன் முன் வந்து நிற்பதைக்கண்ட கிராமாதிகாரி அவன் காலில்விழுந்து வணங்கினான். தன்னைக்கூட்டிவந்த மஹாப்பிரபு யார் என்பது கிழவனுக்கு அப்பொழுது தான் தெரிந்தது!! உடனே நடு நடுங்கி, உடல் பதற, வாய் குளற, "என் அரசே! இராஜ ராஜ! கருணைக் கடலே! கிருபா நிதியே! எளியோர் நேசனே!! போற்றி! போற்றி!!" எனக்கீழ் விழுந்து பலமுறை நமஸ்கரித்தான். அங்ஙனம் விழுந்து தொழும் கிழவனை ஆதரவோடு குனிந்து எடுத்து 'பயப்படாதே' என்று அபயம்கொடுத்த மன்னவன்நிலைமையும், நன்றியறிவால் மனம்நிரம்பிவிம்மி விம்மி யழும் கிழவன் தன்மையும், தன் அக்கிரமச் செயலால் முகம் வெளுத்து அரசன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் கூடாது மண்டியிட்ட வண்ணமே அவமானக் கடலிலே விதியற்று மூழ்கி நிற்கும் அதிகாரியின் இழிவும் எத்துணைத்தென்று வர்ணிப்பது!! மனத்தில் நிகழ்பவற்றையெல்லாம், ஒளிக்காமல் முகத்தில் காட்டும் படம் வரைவோர்களே அவற்றை முற்றும் விளக்கிக் காட்டுவார்கள்.

இதற்குள் கானகத்தில் வேட்டையாடி பிரபுக்கள் எல்லாரும் ஒன்று கூடி அரசனைக் காணாமல் பலவாறு தேடிக்கொண்டு ஷை வழியாய்க் குதிரையின் காலடிச்சுவடுகளைக் கொண்டு குறிப்பாய்த் தேடிக் கொண்டு வந்தனர். சரியான வழியின்றி வேறு வழியாய்க் குதிரை போய் இருப்பதை அறிந்து ஏதோ விசேஷமிருக்கலாம் என்று எல்லாரும் கடுவேகமாய் வருகிறார்கள். வரும் சமயத்தில் கிராமக் கச்சேரியின் வெளிப்புறத்தில் மேற்கூறிய காட்சியை அவர்கள் கண்ணுற்று என்னவென்று தெரியாமல் மதிமயங்கினர் போன்று அரசன் பக்கத்தில் வந்து நின்று கொண்டனர். அப்பொழுது ஒவ்வொருவரும் தாங்கள் விடும் மூச்சையே கேட்கக் கூடியதாய் இருந்ததென்றால் எவ்வளவு பயத்தோடும் அமைதியோடும் அவர்கள் நின்று இருக்கவேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.



இவ்வாறு திகைத்து நிற்கும் தன் பரிவாரங்களுக்கும் பிரபுக்களுக்கும், இராஜப்பிரதிநிதிகளுக்கும், கிராம நகர அதிகாரிகளுக்கும், தனது துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனம் நன்கு விளங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கிழவனை நோக்கி அவன் வரலாற்றை ஆதியோடு அந்தமாய்ச் சொல்லும்படி கட்டளையிட்டான். கிழவன் சொல்லி முடித்ததும் அவ்வதிகாரியின் மீதுள்ள வெறுப்பின் குறியாக அனைவரும் 'உஸ்' என்றார்கள். மற்ற வார்த்தை ஒன்றும் பேசவில்லை. உடனே இராஜன் "அதிகாரியாரே! இக்கிழவன் சொல்வது நிஜமா?" என்ன—அதிகாரி "ஆம்" என்று ஒப்புக்கொண்டான்.

உடனே அரசன் "பிரபுக்களே! நீங்கள் எல்லாரும் இவ்விஷயத்தை முற்றும் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? உங்களில்ஒவ்வொருவருக்கும் நகரமோ, கிராமமோ, ஜில்லாவோ கொடுத்து இருப்பது என்ன காரணத்துக்கு என்று தெரியுமா? நான் ஒருவன்; என்னால் எனது பிரஜைகளை எல்லாரையும் நேரே பார்த்துக் காப்பாற்றக்கூடுமா? என்னைப் போல் பிரஜைகளுக்குப் பிதாவாய் இருந்து காக்கவேண்டியவேலை உங்களுடையதே அல்லவா? இவ்வாறு முறை தவறுவோர் இருப்பதிலும் இல்லாது இருப்பதே நன்று. ஆகையால் இவ்வதிகாரியை இப்பொழுதே தூக்கில் போடுங்கள்' என்று சொல்லிவிட்டு, அருகில் நிற்கும் கிழவனை நோக்கி "ஐயா! உம்மிடமிருந்து இந்த துன்மார்க்கன் பிடுங்கிக்கொண்ட ஆஸ்தியும், மகனும் உம்முடையதே. அத்துடன் இவ்வூருக்கு உம்மையே அதிகாரியாக்கியிருக்கின்றேன். நீர் அதிகாரம் கிடைத்தபின் அக்கிரமத்துக்குத் தலைப்பட்டால் உமக்கு இக்கதியே தான். நன்றாய் கவனித்துக் கொள்ளும்" என்று சொல்லிவிட்டு அவ்விடம் விட்டுச் சென்றார்.

அற்பனுக்கு ஐசுவரியம் வந்தால் தலைதடுமாறுவான் என்று சிலர் சொல்வதுண்டு; அப்படியின்றித் தன் பழைய நிலைமையை நினைத்துக் கொண்டு நீதிவழுவாமல் தன்னிடம் ஒப்புவித்த கிராமத்தைக் கிழ்வன் காப்பாற்றினான் என்று தெரிய வருகின்றது.

"உண்மை உரைப்போன்."

## ரஸிகை.

### ஓர் இனிய தமிழ் நாடகம்.

(70ம் பக்கத் தொடர்ச்சி)

ரஸிகை:—ஹா! உனக்கு விவாஹத்தில் சிறிதும் விருப்ப மில்லையா! பின்பு எதைத்தான் நீ விரும்புகிறாயடி?

வசீகரி:—நான் எதை விரும்புகிறேனென்று முன்னமே சொல்லி விட்டேனே.

ரஸிகை:—நமது நாட்டின் க்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் நீ விரும்ப வில்லையா?

வசீகரி:—ஆமாம் அக்கா, நமது தேச க்ஷேம மொன்றைத்தான் நான் விரும்புகிறேன்.

ரஸிகை:—நீ சொல்வது உண்மையானால், வசீகரி! உன்னைப்போன்ற சிறந்ததேசாபிமானி உலகத்திலிருப்பதரிதென்னலாம். அன்றியும், உன்னை "ஆசை நிகளத்தினை நிர்த்தூளி பட உதறிய" நிகரற்ற பால ஸந்யாசினி என்றுங்கூறலாம்.

வசீகரி;—என்னக்கா என்னைப்பரிகஸிக்கிறாய்! நீ இப்படிப் பரிகஸிப்பதற்காகவா என் உள்ளத்தை உனக்குச் சொன்னேன்?

ரஸிகை:—நான் பரிகஸிக்கவேயில்லையடி, உண்மையைத்தான் சொன்னேன். நீ மாத்திரம் உண்மையைச் சொன்னாயோ என்னவோவென்று சந்தேகிக்கிறேன்.

வசீகரி:—நீ உரைத்தது எப்படி உண்மையாகும் அக்கா? தேச க்ஷேமத்தைப் பற்றி ஆசை என் அகத்தில் அமர்ந்திருக்க, என்னை "ஆசை நிகளத்தினை நிர்த்தூளி பட உதறினவள்" என்றாயே. இது பரிகஸப்பேச்சல்லவோ?

ரஸிகை:—அல்லவேயல்ல வசீகரி! அது பரிகசப்பேச்சேயல்ல, ஆசை நிகளத்தினை நிர்த்தூளிபட உதறி" என்ற அற்புத மொழிகளைத் திருவாய் மலர்ந்தருளிய வரும், அவ்வாறு ஆசையனைத்தையும் உதறி அகத்தை வென்றவருமாகிய மகான் தாயுமானவரும், "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்றனர். உலகக்ஷேமத்தை மாத்திரம் விரும்பி மற்றெவ்வித அவாவையும் துறந்த அரிய தேசாபிமானிகளை மெய்த்துறவிகளென்றே கூறலாம். ஆகையால், வசீகரி! நீ கூரியயாவும் சத்தியமானால் ஒரு ஸந்யாசினி நீயே யாவாய்.



வசீகரி:—அக்கா! நமது அம்மணி சாரதாம்பாள் உனக்குச் சிறந்தவாக்கு வல்லமை அளித்திருக்கிறாள். அவ்வல்லமையினால் நீ என்னென்னவோ நியாயங்களெடுத்துக்கூறி என்னை ஸந்யாசினி என்றழைத்துப் பரிகஸிக்கிறாய். எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஸந்யாஸத்திற்கு முக்கிய லக்ஷணம், யானெனும் அகந்தையை வெல்லுதலாம். ஆனால் அந்த அகந்தையே வசீகரி என்ற ஒரு பெண்ணுருவெடுத்ததெனச் சொல்லலாம். அவ்வாறிருக்க, நீ என்னை ஸந்யாசினி என்றாய். அகந்தையின் அவதார ஸ்திரீயை ஸந்யாசினி என்றழைப்பது தான் ஸத்யமாகுமோ?

ரஸிகை:—சற்று யோசித்துபேசடி, வசீகரி, முதல்முதல் நீ என்னசொன்னாய்? தேச க்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் நீ விரும்பவில்லை என்றாய். ஆகையால் நான் உன்னை ஸந்யாசினி என்றேன். இப்பொழுதோ, அகந்தையின் அவதார ஸ்திரீ என்று நீயே உன்னை அழைத்துக் கொள்ளுகிறாய். பிரபஞ்ச நலத்தை விரும்புதலைத் தவிர சுய நலவிருப்பமொன்று மில்லாதவள் எப்படி "யான்" என்ற அகந்தையுடையவளா யிருப்பாள்? நீதான் உண்மையில் முரண்படப் பேசுகிறாய்.

வசீகரி:—சரிதான். நீ சொல்லியது மெய்யே. நான் முரணாகவே பேசினேன். உண்மையில் நான் மிகுந்த அகந்தை யுடையவள் தான். அவ்வகந்தையினாற்றான் நான் சுய நல மனத்தையுந் துறந்து உலக நலத்தையே கருதும் உத்தமி என எண்ணிக் கொண்டேன். இப்பொழுதுதான் உன்னோடு ஸம்பாஷித்ததினால் நான் எண்ணியது தவறென்று உணர்ந்து கொண்டேனக்கா.

ரஸிகை:—அப்படியானால் நீ ஸந்யாசினி யல்லவோ.

வசீகரி:—அல்ல.

ரஸிகை:—நீ உலக க்ஷேமத்தை மாத்திரம் கருதுகின்றவளு மல்ல?

வசீகரி:—அல்ல, அல்ல.

ரஸிகை:—சில சுயநலங்களையும் நீ விரும்புகின்றாய் போலும். அவ்வாறு விரும்புகிறவளா யிருந்தாற்றான் நீ அகந்தையுடையவ ளாவாய்.

வசீகரி:—ஆமாம், அக்கா, சுயநல அபேக்ஷையைத் துறந்த தூயவர்களே அகந்தையை வென்றவர்கள். அவ்வாறு வென்றவர்களே மெய்ஞானத்தை யுடையவர்கள். அந்த ஞானத்தை அடைவதற்கு நான் இன்னும் எத்தனை ஜன்மங்க ளெடுக்கவேண்டுமோ?

ரஸிகை:—வசீகரி! இந்தக் கதைகளெல்லாம் எனக்கு வேண்டாம். நீ சுயநல விருப்பமுடையவளா, இல்லையா?

வசீகரி:—ஆமாம் அக்கா, நான் சுயாபிமானமும் சுயநல விருப்பமும் உடையவள்தான்.

ரஸிகை:—நீ விரும்பும் சுயநலங்கள் என்னென்னவென்றுதான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

வசீகரி:—நான் விரும்பும் நலங்கள் எவையென எனக்கே நன்றாய்த் தெரியவில்லை.

ரஸிகை:—நன்றாய்த் தெரியாவிட்டால் அக்கறையில்லை. தெரிந்த வரையில் சொல்.

வசீகரி:—என்மேல் கோபித்துக்கொள்ளாதே யக்கா. நீ கேட்கும் கேள்வியையே நான்நன்றாய் உணர்ந்துகொள்ளவில்லை. அன்றியும் அதற்கு எப்படிப் பதிலுரைப்பதென்றுந் தெரியவில்லை. முதல் முதல் நீ விரும்பும் விஷயங்களைச் சொல். நீ சொல்லும் விதத்தை நான் நன்றாய்க் கவனித்துக் கொண்டிருந்து அவ்விதமாக நான் விரும்பும் விஷயங்களைச் சொல்லுகிறேன்.

ரஸிகை:—நான் விரும்பும் விஷயங்களைத்தான் முன்னமே உனக்குச்சொல்லிவிட்டேனே.

வசீகரி:— நீ முன்பு சொன்ன விஷயங்கள் எனக்கு ஞாபகத்திலில்லை. எல்லாவற்றையும் இப்பொழுது தெளிவாய்ச்சொல்.

(ரஸிகை சிறிதுநேரம் மௌனமாயிருக்கின்றாள்.)

வசீகரி:— நாமிருவரும் உயிர்ச்சகோதரிகள். என்னிடத்தில் உன் உள்ளத்தைச் சொல்ல ஏன் இவ்வளவு நாணப்படுகிறாய்?

ரஸிகை:—(சிறிது நேரம் மௌனம். பின்பு தலை தாழ்த்திக்கொண்டு புன்முறுவலுடன் கூறுகின்றாள்.) சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேனடி. நிறைந்த சௌந்தரியமும், சிறந்த கல்வியும், ஸகல கல்யாண குணங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக என்னிடத்தில் முதிர்ந்த அன்பையு முடைய, என் அகத்திற் கிசைந்த நாயகனை அடைவதே எனது பேரவா. (தலையை நிமிர்த்தித் தன் தங்கையின் முகத்தைப் பார்த்துக்கொண்டு வசீகரி என் உள்ளத்தாசையைச் சொல்லிவிட்டேன். இப்பொழுதேனும் உன் விருப்பத்தை சொல்வாய்.

வசீகரி:—என் எண்ணங்களெல்லாம் ஆகாசகோட்டைகளக்கா. நிறைவேறக்கூடாத விஷயங்களை எண்ணியிருக்கிறேன்.

ரஸிகை:—மனத்திற் பதிந்து நிலைத்திருக்கும் எவ்வித ஆசையும் நிறைவேறாமற் போகாது. அஞ்சாதே.



வசீகரி:—இல்லையில்லை யக்கா. என் விருப்பம் இந்த ஜன்மத்தில் நிறைவேறாதென்றே எண்ணுகிறேன்.

ரஸிகை:—உன் விருப்பம் இன்னதென்று தான் சொல்லேன். அதுநிறைவேறும் நிறைவேறாதென்பதைப் பற்றிப்பின்பு ஆலோசிப்போம்.

வசீகரி:—(சிறிது நேரம் மௌனம்.) என்வீண்மனோராஜ்யங்களை நாவினாற் சொல்வதற்கு எனக்கு வெட்கமாயிருக்கிறது. மற்றொருநாள் அவைகளை உனக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது நாழிகையாகிறது. நமது அம்மணியைத் தியானிப்போம் வா.

ரஸிகை:—வசீகரி! நீ உன் ரகஸ்யத்தை இப்பொழுது எனக்குச் சொல்லாவிட்டால் என்மனம் தியானத்திற் செல்லாது. நாணப்படாதே என்று எனக்குமாத்திரம் சொன்னாயே. இப்பொழுது நீ ஏன் இவ்வளவு நாணப்படுகிறாய்? சொல்லம்மா, நீ என் கண்மணியல்லவா!

(அன்பினாற் பரவசமெய்திய அகத்தோடு தன் ஆருயிர்த்தங்கையை ஆலிங்கனஞ்செய்து அவளது கன்னங்களை முத்தமிடுகின்றாள். வசீகரியின்நெஞ்சமும் பரவசமுற்றாப்பதைக்கின்றது.)

(இன்னும் வரும்.)

S. A. சுப்பராயன்.

---

## சிதம்பர ஸ்தல யாத்திரை.

ரயில் மாயவரம் ஸ்டேஷன் வந்து சேர்ந்தது. ஸ்டேஷன் முழுதும் ஒரே கூட்டமாய் ஹோ என்ற பேரிரைச்சல் நிரம்பியிருந்தது. "ஏயா ஓ கூலி,! கூலி!" என்ற கூலிக்காரர் சப்தமும் "அங்கே போகாதே" "பிடடா அவனை என்று செந்தலைப்புலிகள் செய்யும் அமளியும், "அடே கட்டேலே போதே! மேலே பட்டுத்தொலைச்சுயே! எழவு!" "ஐயோ! கூலிக்காரன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறானே!" என்று பார்ப்பினிகளுடைய கூக்குரலும், சாமான் விற்பவர்கள் போடும் சப்தமும், நீராவி வண்டிகள் செய்யும் பேரரவமுமே எங்கும் நிரம்பியிருந்தது. ஓர் பதினாறுட்டைப் பிராயத்தானொருவன் இரு கூலிக்காரர் சுமந்து வரும் மூட்டைகளுடன் ஓர் வண்டியில் ஏறினான். அவனுடன் அவன் மாதாபிதாக்களும் சகோதரிகள் இருவரும் இருந்தனர். சிறுமிகளுக்கு முறையே ஒன்பதும் ஏழும் வயதிருக்காலம். வண்டியில் ஏறின பிறகு காலையிலிருந்து பிரயாணம் செய்து வந்தவராதலின் சிறிது சிற்றுண்டி சாப்பிட்டனர். கதிரவனும் தனக்கும் பங்குகிடைக்குமோ என வண்டியுள் நெடுந்தூரம் எட்டிப்பார்த்தனன்.

"அப்பா, சிதம்பரம் போறபோது எத்தனைமணி?" என்று ஞானம் கேட்டாள். இதற்குள் சிறியபெண், "ஏன்னா! இப்பதானே அஞ்சுமணிக்குப் போறதுன்னு சொன்னா. அதுக்குள்ளே மறந்துட்டையே" என்றாள். இதற்குள் அம்மா "இந்தா! ஞானம் இந்த தோசையை வாங்கிக்கோ" என்று கூப்பிட, அவள் "நேக்கு வாண்டாம்" எனக் கெஞ்சிச் சொல்லிவிட்டுச் சன்னலண்டை உட்கார்ந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சின்னப்பெண் அம்மா விடம் போய் "நேக்கு அம்மா!" என வாங்கிக்கொண்டுபோய் ஜன்னலண்டை உட்கார்ந்து தின்னத் தொடங்கினாள். இதற்குள் வண்டியும் புறப்பட்டு மாயவரம் ஸ்டேஷனைவிட்டு வைதீஸ்வரன் கோவில் வந்துசேர்ந்தது.

"அதோ பாத்தியா! கோபுரம் தெரியறது!" என்று ஞானம் காட்டினாள். எல்லாரும் ஹர ஹர என்று தெய்வத்தைத் தொழுதார்கள்.

ஞானம்:—ஏன் அம்மா இந்த ஸ்வாமிக்கு வைதீஸ்வரர் என்ற பேரு?

அம்மா:—இவர் தன்பக்தாளுக்குவரும் வியாதிகளையெல்லாம் போக்கிடுவர். அதான்பேரு. காளமேகப்புலவர் என்று ஒருவர் வேடிக்கையாய்ப் பாடியிருக்கிறார் என்ன சொல்லட்டுமா!

"வாதக்காலாந்தமக்கு மைத்துனர்க்கு நீரிழிவாம்
போதப்பெருவயிறும் புத்திரர்க்கு—ஓதக்கேள்
வந்தவினை தீர்க்கவகையறியார் வேளூரா
ரெந்தவினை தீர்ப்பாரிவர்."

ஞானம்:—என்ன அர்த்தம்?

அம்மா.—இந்தப் பரமசிவனுக்கு வாதநோய் அதான காலைத்தூக்கிண்டிருக்கிறார். இவர் மச்சினர் அதாவது விஷ்ணுக்கு நீரிழிவு. அதான் அவர் சமுத்திரத்திலேயே படுத்துக்கொண்டிருக்கிறார். பிள்ளை பிள்ளையாருக்கோ பெரு வயறு. இப்போக்கொத்த வியாதியெல்லாந்தீர்க்காத இவர் தன் பக்தாள் வியாதி என்னத்தை தீர்ப்பார்? என்று பரிகாசமாகப்பாடினார்.

ஞானம்:—பாவம்! அக்கா, சித்தி எல்லாரும் சிதம்பரம் பார்க்கவல்லையே!

காந்:—நாம்ப பாத்துட்டு போயிடுவோம்.

ஞான:—இன்னும் எத்தனை ஸ்டேஷனிருக்கு!

அம்மா:—கொள்ளிடந்தாண்டினால் சிதம்பரந்தான்.

ஞான:—அதாங்கூடப்பாடுவமே! "கொள்ளிடக்கரை சேர்ந்தார்" என்று.

காந்:—ஹூ ஹூ அப்படி யொண்ணுமில்லை.

அம்மா:—கொள்ளிடக்கரை போனான் நந்தன் கோபுரங்களைக் கண்டான்.



ஞான:—பள்ளச்சாதியிலும் பறைச்சாதி நானென்று

இதற்குள் ரயில்புறப்பட்டு கொள்ளிடம் (ஆனைக்காரன் சத்திரம்) ஸ்டேஷன் வந்துசேர்ந்தது.

காந்:—இந்தூரிலே ஆனைக்காரன் ரொம்பஜாஸ்தி யோனோ?

ஞான:—யாரு ஆனைக்காலனா?

அம்மா:—ச்சே! என்று எல்லாரும் சிரித்தார்கள். கொள்ளிடம் பாலத்தைத் தாண்டியாய் விட்டது. சிதம்பரக் கோவில் கோபுரங்கள் கண்ணுக்குத் தெரிந்தன.

அம்மா:—'கோபுர தெரிசனமே எந்தன் பாபவிமோசனமே' என்று பாட, ஞானமும் கூடப்பாடினாள். சிதம்பரஸ்டேஷன் வந்துசேர்ந்து, ரயில் ஸ்டேஷனைக் கண்டதும் ஞானம் "இதுதானோ சிதம்பரம்" என்று கேட்க, ஆமென்று சொல்லிவிட்டு எல்லாரும் கீழேயிறங்கினார்கள். ரயிலுக்கு இவர்களுக்கு வேண்டிய சிநேகரொருவர் வந்திருந்து தம்வீட்டுக் கழைத்துச் சென்றனர். அந்தவீட்டில் அவர் சகோதரியும் அச்சகோதரியினிரு குழந்தைகளு மிருந்தனர். வீடு ஒரு சிறந்த குடிசை, இவர்கள்வீட்டிற்குப்போய் வண்டியிலிருந்திறங்கு முன்னமே அந்தஸ்திரீ தன் 8வயதுப் பெண்ணுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்றும் அதற்கு வரன் நீங்களேவேட்டையாடிக் கொண்டு வரவேண்டு மென்றும் நமது "அம்மா" விடம் முறையிட்டுக்கொண்டாள். அந்தோ! நம்மவர்களின் நிலைமை பரிதபிக்கத்தக்கதே! வயிற்றில் குழந்தையுண்டாகுமுன்னமே இது பெண்ணாயிருந்தால் இன்னாருக்குக் கல்யாணம் பண்ணவேண்டும் என்று யோசனைசெய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். ஒருக்கால், தான் நிச்சயித்த பையன் பின் கலியாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன் என்பானோ எனப்பயந்து அவன் கையால் தன் கழுத்தில் ஒரு தாலியை வாங்கிக் கட்டிக்கொண்டு கூட விடுவார்கள்போலும்! வந்தவர்கள், மூட்டையையிறக்கிவிட்டு, அவ்வீட்டுப் பையனைக் கூட்டிக்கொண்டு, கோவிலுக்குச் சென்றனர். வெயிற்கால மாதலாலும், ரயிலேறி வந்த களைப்பினாலும் ஸ்நானம்செய்ய இச்சையுண்டாகி சிவகங்கை எனப்படும், கோவில் குளத்தில் ஸ்நானம்செய்ய இறங்கினர்.

ஞானம்:—"என்ன அப்பா! ஜலம் பச்சையாயிருக்கே?

காந்தி:—"பச்சையிலை முளைச்சிருக்கு.

அப்பா:—"இல்லேடி, தேவலோகதீர்த்தம், அப்படிதானிருக்கும்."

ஞான:—போங்கப்பா தேவலோகத் தீர்த்தம் இப்படித்தானிருக்குமோ?

இவ்வாறு பேசிக்கொண்டே ஸ்நானத்தை முடித்து ஈரவஸ்திரத்தைப் பிழிந்து கட்டிக்கொண்டு கரையேறினார்கள். சற்றுதூரம் சென்றவுடன் அம்மா, நடேசனைக் கூப்பிட்டு "கால்ரூபா கொடுத்தேனே. அதையெடு, கோவிலெ ஸ்வாமிக்கு அரச்சனைபண்ணணும்" என, நடேசன் மெதுவாகப் பின்னிடைந்து இடுப்பைத்தடவிப் பார்த்துக்கொண்டு விழித்தான். அதற்குள், அப்பா, "ஏண்டா, குளத்திலேபோட்டையோ" என, அவன் ஆமெனத் தலையசைத்தான். இதற்குள் அம்மா "எங்கேடா! எடுத்தாயா?" அப்பா, "இங்கே வேறே, விசேஷம், நீ கோவில் அர்ச்சகருக்குக் கொடுக்கப்படாதுஎன்று, கங்காதேவிக்கு கொடுத்துவிட்டான் நடேசன்"; ஞானம் "நீங்கள் ஒருஅணா கொடுத்து கல்பூரஹாரத்தி எடுக்கணும் என்று சொன்னே?"

அம்மா:—நடேசந்தான், குளத்திலே போட்டுட்டானே! போனாப்போறது.

கோவில் பிரகாரத்தைச் சுற்றிக்கொண்டு ஸ்ரீநடராஜர் சன்னிதி சேர்ந்து எம்பெருமானை வாயாரதுதித்து, கண்குளிர தரிசித்து, மகிழ்ந்தனர். பூஜாகாரியங்கள் ஒழுங்கே நடந்தேறியது. அம்மன் கோவில் சென்று அம்மனை தெரிசித்துக்கொண்டு சீக்கிரம் வீடுசேர்ந்தனர்.

இராப்பொழுதைச் சீக்கிரமே கழித்து பொழுது விடிந்தவுடன் ஒரு தீட்சதருக்குச் சொல்லியனுப்பித்து, அவர்விரும்பிய பொருட்களைத் சேகரித்தெடுத்துக் கொண்டு, அவருடன் மறுபடியும் கோவிலுக்கு கிளம்பினார்கள்.

கோவிலையடைந்து, கோவிந்த ராஜ பெருமாளைச் சேவித்த பிறகு, கோவில் பிராகாரங்களையும் மற்றஇடங்களையும் சுத்திபார்த்துவிட்டு ஸ்ரீ நடராஜர்சன்னிதிசேர்ந்தார்கள். அப்பொழுது தீபாராதனை சமயமாயிருந்தது. ஸ்வாமியை தரிசித்தார்கள். இதற்குள் தீக்ஷிதர் சிபார்சின் பேரில், ஒரு கதவைத்திறந்து ரஹஸ்ய தரிசனம் எனக்காண்பித்தார்கள். ஒரே வெட்டவெளி. அதில் ஸ்வர்ணபில்வமாலைகள் தொங்குகின்றன. அதுதான் ரகசியம் இவ்வுலகம் அநித்யம். இதைச்சுற்றி யிருக்கும்மாயையை நீக்கினால் ஒரே வெட்டவெளியைத் தவிற வேறொன்றில்லை. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றேயாதலின் இம்மாயையை நீக்கினால் அப்பிரும்மத்தைத் தவிறவேறொன்றில்லை.

ஸ்படிகலிங்கத்திற்கு அச்சமயம் அபிஷேகம் நடந்தது. பற்பல திரவ்யங்கள் பாத்திரங்களில் வைத்திருந்தார்கள். அன்னாபிஷேகம், க்ஷீராபிஷேகம், முதலியயாவும் முறையே நடந்தேறின. இது முடிந்த பிறகு, ரத்னசபாபதிக்கு அபிஷேகம் செய்யத் தொடங்கினார்கள். அபிஷேகம் பாதியானவுடன் எல்லாரையும் வெளியே அனுப்பிக்கதவுகளை யெல்லாம் தாளிட்டு ஒரு கதவை மாத்திரம்திறந்துகொண்டு இருவர் நின்றுகொண்டு ஒவ்வொருவராய் உள்ளே விட்டுக்கொண்டிருந்தார்கள்.



இவர்கள் தெரிசனம் செய்த பிறகு வெளியே நின்றுகொண்டு, ஒரு தனியானவிடத்தில் சிரமபரிகாரம்செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது,

ஞான:—"ஏ அம்மா! இந்த ஸ்வாமிஏன் ஒத்தைக்காலை தூக்கிக் கொண்டிருக்கிறார்?"

அம்:—"ஆனந்தத் தாண்டவமாடறார் ஸ்வாமி!"

நடே:—"இல்லை. ஞானம், இப்ப வெயில்ரொம்ப ஜாஸ்தியாயிருக்கோன்னோ நாம்பகூட ஆத்துக்குப் போறத்தே காலை காலைத் தூக்கிக்கொண்டு ஓடுவமே! அதான் ஸ்வாமி காலைக் கீழேவைக்க முடியாதே ஒத்தைக்காலை தூக்கிக்கொண்டு குதிக்கிறார்.

காந்:—ஹா ஹா ஸ்வாமிக்குக்கூட தாங்கமுடியல்லை யோக்கும்.

ஞான:—அதொண்ணு மில்லை.

நடே:—இன்னொண்ணு சொல்றேன், கேளு. ஸ்வாமி பேரென்ன?

காந்:—நடராஜா.

டே.—அதான், நடக்கிறதிலே ராஜா. அவர் நடக்கிறதிலே ரொம்பவும் கெட்டிக்காரர். அதினாலே இரண்டுகாலை கீழே ஊணிண்டுட்டால் ரொம்ப வேகமாக ஓடிப் போயிடுவோம்னுட்டு ஒத்தைக்காலை மட்டும் கீழேவைத்துக்கொண்டிருக்கார்.

காந்:—ஹா ஹா நீ பொய்யெல்லாஞ் சொல்லு.

ஞான:— நான் ஒண்ணுசொல்றேன். இந்த ஸ்வாமி சுடுகாட்டிலிருக்கிறார். கீழேயெல்லாம் அசிங்கமா யிருக்குமோன்னோ. ஐயோ! கீழேயெல்லாம் இப்படி யிருக்கேன்னுட்டுக் காலைக்கீழேவைக்க பயந்துண்டு தூக்கின் டிருக்கிறார்.

காந்:—ஆமாமா, ஸ்வாமிவந்து ஹான்னு ஒருமூச்சுவிட்டா செடுக வாசனையாப் போயிடுமே.

ஞான:—ஏன்னா! இந்தஸ்வாமிக்கு குடியிருக்கவேறே இடமில்லையா? ஏன் சுடுகாட்டிலேபோய் உட்காந்திருக்கார்?

காந்:—உக்காந் திருக்காரோ? நின்னுண்டுன்னா.

நடே:—நான் சொல்றேன் பாரு: இந்தஸ்வாமி சுடுகாட்டிலே உக்காந்திண்டு மனுஷாளை யெல்லாம் பாத்து "இவ்வுலகம் பொய்: ஒருநாளில்லாட்டா ஒருநாள் நீங்களெல்லாம் இங்கே தான்வரணும். அதினாலே

பொய் சொல்லாமல் திருடாமல் ஸ்வாமிக்குப்பயந்து நட. அப்போ நீ இங்கே வந்தாக்கே உன்னைநான் சௌக்கியமாய் மோக்ஷம் சேர்ப்பேன்" என்று சொல்றார். ஏன் அம்மா ! அப்படித்தானே ?

இதற்குள் உள்ளே கூப்பிட்டபடியால் உள்ளே சென்றார்கள். தீக்ஷிதர் ஒருவனிடம் ஏதோமுணு முணுன்னு கெஞ்சிவிட்டு ரத்னசபாபதி தரிசனம் செய்ய அழைத்துச் சென்றனர். உள்ளே ஒரு ருத்ராக்ஷதாரி பீடத்திலுட்கார்ந்துகொண்டு ஒருவிக்ரகத்திற்கு கல்பூரஹாரத்தி காண்பித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் உள்ளே சென்று தரிசனம் செய்தார்கள். முன்னிருந்து பார்த்தால் ஒரேகருப்பாயிருந்த விக்ரகம் பின்னால் தீபம் காண்பித்தவுடன் முன்பக்கம்ஒரேசிகப்புஜோதியாய் பிரகாசித்தது.

(இன்னும் வரும்)

வி. நடராஜன்.

---

# ஜாதகம் பொய்க்குமா, தேவிவரம் தவறுமா ?

## அத்தியாயம் II.

முற்கூறியவெள்ளிக்கிழமை சாயங்காலமே கட்செட்டி மண்டபத்திலிருந்து மேலச் சித்திரவீதி போகும் வழியில் ஒருவர் நடந்து போய்க்கொண்டிருந்தார். அவருக்குச்சுமார் 60 வயதிருக்கலாம். நெற்றியிலும் மார்பிலும் அவர்பட்டைபட்டையாய் விபூதியணிந்துகொண்டும், உடையை முழங்காலுக்குமேல் எடுத்துக் கட்டியும் நெருப்புக் கோழியைப்போல கஜத்துக்கொரு அடியெடுத்து வைத்துக்கொண்டும், கழுத்தில் கணக்குக்கடங்காத உருத்திராட்சங்களணிந்தும் போவதை நோக்கில் அவர் ஒருவைதீக சிரேஷ்டரென்று விசிதமாகும். இவர் மேலச்சித்திரவீதிதிரும்பினதும் சரேலென்று எதிரேவந்த ஒருவரைக்கண்டு தனது தபால்பெட்டி போன்ற வாயைத்திறந்து கடோரமாய்ச் சிரித்து வந்தனம் செய்ய, மற்றவர் கூழைக்கும்பிடு போட்டுக்கொண்டு "அடடா ஸாமிநாத ஜோஸ்யரவாளா, எங்கே இப்படி. ஸௌக்கியந்தானா." என்று சொல்லிக்கொண்டே தனதிடுப்பிலிருந்த பொடிடப்பியை யெடுத்து சுமார் ஒரு அணா பெறுமான பொடியை தன்னிரண்டு நாசித்துவாரங்களிலும் நிரப்பித்திணித்துவிட்டுக் கையைச் சுடேர் சுடேரென்று உதறிவிட்டுத் தன் மேல் அங்கவஸ்திரத்தால் துடைத்துக் கொண்டார். இது ஜோஸ்யருக்கு அருவருப்பை யுண்டாக்கிற்றெனினும் அவர் கேட்டகுசலப்பிரஸன்னத்திற் கெதிர்மொழியாக; "இப்படித்தான் வக்கீல் பொன்னுஸ்வாமி அய்யரவாள் வரும்படி யழைத்தார்" என, மற்றவர், "ஏனையா, தம் குமாரியைராஜா ராமையர் குமாரனுக்கு கொடுப்பதாக ஒப்பினர் போலிருக்கே. எப்பொழுது கல்யாணம், என்ன சமாசாரம், ஜோஸ்யரே எல்லாம் உங்களுக்குத் தெரியுமே" என்றுகேட்க.



ஜோஸ்யர்.—"என்னமோ ஐயா, அப்படித்தான் முதலில் சொல்லி ஜாதகம் பார்த்தார். பொருத்தமும் அப்படிக் கெடுதலில்லை. என்ன நினைத்துக் கொண்டாரோ? நேற்றுதினம் திடீரென்று 'ஜோஸ்யரே நாளை வெள்ளிக்கிழமையன்று ஜாதகம் பார்க்கவேண்டும் வாருங்கள்,' என்றார். ஆகையால் இதோ போகிறேன். நாழிகையாய் விட்டதே. இதை நான் சொன்னதாக யாரிடமும் சொல்லவேண்டாம்." என,

மற்றவர் —"எனக்கு என்னையா, ஏதோ பிரஸ்தாபமாயிருந்ததே யென்று கேட்டேன். வேறொன்றுமில்லை யென்று கும்பகோணம் ராமானுஜய்யங்கார் இச்சமாசாரத்தை ராஜாராமய்யர் புத்திரன் நாகநாதனுக்குத் தெரிவிக்கும் பொருட்டு வெகு அவசரமாய்ப் போய்விட்டார். பிறகு ஜோஸ்யர் ஏதோ யோசனையாய்ப் பத்தடிநடந்ததும் சரேலென்று திரும்பி ஒரு மாடிவீட்டிற்குள் நுழைந்தார்.

அம்மாளிகை வாயிலில் சிறுமதில் போன்று சுவரெடுத்து இருப்புக் கம்பிகளினாலாகிய கதவு அமைக்கப்பட்டிருந்தது. சுவர்களின்மேல் வரிசையாய்ப் பூஞ்செடிகள் வைத்திருந்தது. அது மூன்றடுக்குள்ளமாளிகை. கீழிருந்து நோக்கின், மாடத்தின் சாளரங்கள் வழியாய் பற்பலவித சித்திரப்படங்களும் வினோதப்பொருள்களும் நமக்குநன்றாய்ப்புலப்படும். ஜோஸ்யர் மேற்படி மாளிகையினுட்புகவும் அங்கிருந்த வேலைக் காரர்களெல்லாம் எழுந்திருந்தார்கள். அதில் ஒருவன் "சாமி பெரியஎஜமான் இப்பத்தான் வந்தாவா. உங்களைக் கூட்டியாரச் சொல்லிவிட்டு இப்போதான் உள்ளே போனாகா. அதற்குள்ளாக நீங்களே வந்துட்டீங்க. உங்களைத்தான் எதிர் பார்த்துக் கிட்டிருக்காகா. சீக்கிறம் போங்கசாமி போங்க" என்று அழைத்துச் சென்றான்.

ஜோஸ்யர் உட்புகுந்து மிக்கபெரிதான அழகிய ஒருஹாலையடைந்தார். அந்த ஹாலில் நாலாபக்கமும் சுண்ணாம்பு பூசிய சுவர்களில் ரம்பா, ஊர்வசி, திலோத்தமை, சகுந்தலை, தமயந்தி முதலிய சித்திரப்படங்களும் மற்ற ஐரோப்பிய விசித்திரங்களும் வரிசையாய்த்தொங்கவிடப் பட்டிருந்தன. கீழ்தளம் பச்சை, வெள்ளை, சிகப்பு, மஞ்சள், வர்ணங்களில் மழமழவென்று இழைக்கப்பட்டு பிரதி பிம்பித்தது. அவைகளின் மத்தியில் பலவித உயர்ந்த ரத்தினகம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. உயர நடுவில் பித்தளையில் தங்கமுலாம் பூசிய கம்பியில் ஒருசந்திரப்பிரகாசமான விளக்கொன்று பூதக்கண்ணாடியாற் சூழப்பட்டு ஜிலு ஜிலு வென்று ஒளிவீசிக் கொண்டிருந்தது. ஒருவினோதமான சிறு கடியாரயந்திரம் ஒன்று பிறருதவியன்றி இவர் காதுக்கினிமையாய் வாத்திய கோஷஞ்செய்து கொண்டிருந்

தது. அவ்வறை முழுவதும் ஸோபாக்களாலும் நாற்காலிகளாலும் நிரம்பியிருந்தன.

ஊதா வெல்வெட்டில் பூ சித்திரித்த ஒரு சாய்வான சோபாவின் மேல் ஒருவர் சாய்ந்துகொண்டுபக்கத்திலுள்ள மேசையின் மேலுள்ள ஒரு மெழுகுவர்த்திவிளக்கண்டையில் ஆங்கிலப்பேபரொன்றைப்பிரித்துப் படித்துக்கொண்டிருந்தார். இவருக்கு 40 வயதிருக்கலாம். சிவந்தநிறமும், கட்டுவிடாமல் பருத்த தேகமும் உடைய இவருடைய செவியிலணிந்த வஜ்ரத்தினொளியும், விளக்கில் தொங்கிக் கொண்டிருக்கும் பூதக்கண்ணாடியினொளியும், அவ்வறை முழுவதும் பார்ப்போருக்கு இரத்தினக்குவியலோவென்று பிரமிக்கும் வண்ணம் ஜோதிவீசின. குட்டையாய்ப் பருத்தவிரல்கள் யாவற்றிலும் கணையாழிகள் விளங்கின. இவரது முகம் மிக்க சாந்தமாய்க் காணப்பட்டது. எதிர்ப்புறத்தில் ஒரு ஆஸனத்தில்மற்றொருவர் உட்கார்ந்துகொண்டு அடிக்கடி கொட்டாவி விடுவதும் அங்குமிங்கும் பார்ப்பதுமாயிருந்தார். கருத்தநிறமும், பருத்ததொந்தியும், அகன்ற முகமும் வாயும், எண்ணக்கூடாத அம்மைத்தழும்பும், உற்றுப்பார்த்தாலொழிய கண்ணுக்குப்புலப்படாத நேத்திரங்களும், பருத்த தலையும், நீண்ட மூக்கும், யானைக்கால் போன்ற கால்களும் உடையவராய்ப் பார்ப்போர்க்கு பெருநகைப் புண்டாக்கும் தன்மையாய்த் தோன்றினர். இவர் சாய்வுஸோபாவில் வீற்றிருக்கும் பொன்னுஸவாமி அய்யரின் ஸகோதரர். இவர் பெயர்பிச்சுவையர். பொன்னுஸ்வாமி அய்யரின் ஸோபாவுக்குப் பக்கத்தில் கீழே இரத்தினகம்பளத்தில்60,65வயதுடையவராய், காதிற்பட்டைச் சிகப்புக் கடுக்கன் தரித்தவொருவர் சில காகிதக் கட்டுக்களை வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாய்ப் பிரித்துப் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். இவர் பொன்னுசாமி அய்யரின் மைத்துனர். முத்துஸ்வாமி அய்யர் மிகச்செல்வவானாயினும் டாம்பீகமற்றவர். திருநெல்வேலி ஜில்லாவில் கல்லிடைக் குறிச்சி யென்றொரு கிராமத்தில் ஐம்பது லட்சம் ரூபாய் சொத்துக் கதிபதியாயிருந்த மிராசுதார். சங்கரஐயரின் குமாரர். சங்கரையர் ஜீவந்தராயிருக்கும்போதே இழந்துபோனமுதற்பெண். தனதருமைஇரண்டாம் புதல்வியாகிய காமகோடிக்கு விவாகம் செய்யவேண்டி மருமகன்தேடும் பொருட்டு திருநெல்வேலிக்கு வந்திருந்தார். தன் பெண்ணை யாங்கிலம் கற்று கீர்த்திபெறக் கூடியவனுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஆவலுடன் அவ்வூர் ஆங்கிலகலா சாலைக்குப்போய் விசாரிக்கலானார். அப்பொழுது எப். ஏ. வகுப்பில் முதலாவது மாணவனாய் அழகும் புத்தியும் சிறந்து அமையப்பெற்றும் தாய் தந்தைகளற்று ஏகஸகோதர னொருவனே முக்கிய பந்துவாய் சற்று தரித்திரமுள்ளவனான ஒருபையன் மிகவும் அதிர்ஷ்டவானாவானென்று தெரியவந்தது. பண்ணையார் மறுநாளே அவ்விருவரையும் தன் சொந்த ஊருக் கழைத்துச் சென்று மூத்தவனுக்குத்தன் குமாரியையும் இளையவனுக்கு மற்றொரு பெண்ணையும் விவாகம் முடித்து வைத்தார். பெரியவன் கஷ்டமறிந்த வனாகையால் சிரத்தையுடன் பயின்று கல்வியில் கீர்த்திபெற்று உயர்ந்த வக்கீல் பரீட்சைகளில் தேறினான். இளையவனோ படிப்பில் கருத்தில்லாது கெட்ட விஷயங்களிலும் வீண்டாம்பீகங்களிலும் புத்தியை செலுத்தி ஒன்றுக்குமுதவாதவனானான். பண்ணையார் தன் ஏக புத்திரனாகிய முத்து ஸ்வாமியை ஆங்கிலம் பயிலவிடாமல் விவசாயம் முதலியவற்றைச் சீர்பெறக் கற்பித்தார்.



மிராசுதார் தனக்குக் காலம் கிட்டினவுடன் தன்குமாரன் முத்துவையும் தனதருமைப் புதல்வி காமகோடியின் கணவனாகிய பொன்னுஸாமியையும் அழைத்து தன் ஆஸ்திகள் முழுமையையும் அவர்களிருவர்க்கும் பகிர்ந்து கொடுத்தார். அவரிறந்த ஆறுமாதங்களிலேயே முத்துஸாமி அய்யரின் மனைவி சண்பக வல்லியம்மாள் ஒரு ஆண்மகவை யீன்று பிரஸவத்திலேயே காலஞ் சென்றாள்.

பொன்னுஸாமி அய்யர் ஹைகோர்ட்டு வக்கீலாய் மதுரைக்கு வந்ததும் தனக்கு ஸர்வ பாக்கியமுமளித்த பண்ணையாரின் குமாரரும் தாரமிழந்தவருமான முத்து ஸாமி அய்யரையும் கூட அழைத்து வந்துவிட்டார். அவரைத்தன் ஸகோதரர் போலவும் அவரது குமாரனைத் தனது புத்திரனைப் போலவும் பாவித்து வந்தார். ஈஸ்வர கிருபையினால் இவருக்கு ஒரேஒரு அழகிய பெண்ரத்தினம் பிறந்திருந்தாள். புத்திரனில்லாவிட்டாலும் முத்துஸாமி அய்யரின் குமாரனையே புதல்வனாக வளர்த்து வந்ததனால் தன்குறையைச் சற்று மறந்தார். தன்பார்வையின் சொத்தைத்தவிர இவரே அளவற்ற பொருளைச் சம்பாதித்தாராகையால் இவரைச் செல்வத்தில் குபேரனெனலாம். நல்ல மனதுடையவர். பிறர்க்குத் தீங்குநினையார். எத்தகைய எளியவரையும் தனக்கு ஸமானமாகவே பாவிப்பார்.

K. K. சீனிவாசாசாரியார்.
எம். ஏ. எம். எல்.

# முக்கிய அறிவிப்பு.

நாம் சுமார் 2 மாதகாலம் கோயம்புத்தூருக்குத் தேக சௌக்கியத்திற்காகப் போயிருந்தமையாலும் பத்திரிகைக்குப் போதுமான திரவிய சகாய மில்லாமையாலும் பத்திரிகை திருவல்லிக்கேணி கமர்ஷியல் பிரஸ் என்ற அச்சாபீசுக்கு மாற்றினபடியாலும் பத்திரிகை வெளிவர தாமதமானதைப்பற்றி மிகவும் விசனப்படுகிறோம். அடுத்த பத்திரிகை அடுத்த வாரத்தில் வெளிவரும். C. S. இராமசுவாமிஐயர்.

## மாதிரி பாடம்—முதல் வகுப்பு.

ஆற்றங்கரைக்கடுத்த ஓர் கிராமத்திலுள்ள ஒருபையன் அவ்வாற்றில்' இருகரையும் புரண்டு வெள்ளம் வருகையில் வேடிக்கை பார்ப்பதற்காக அங்குவந்தான். வெள்ளம் வரும்போது பிரயாணிகள் சுலபமாய் ஆற்றைத் தாண்டுவதற்கு படகுகள் விடுவது வழக்கம். படகுக்காரர் வீட்டுக்கு போகிறபோது படகைமரத்தில் கட்டிவிட்டுப் போவார்கள். இந்தப் பையன் அங்கு போனபோது படகுக்காரர்கள் எல்லாம் சாப்பாட்டுக்குப் போயிருந்தார்கள். இவன் இதுதான் சமயமென்று ஒருபடகை அவிழ்த்து நடுஆற்றில்போனான். வெள்ளம் அதிகமாய்வரவே படகுகவிழ்ந்து இவனும் ஆற்றில விழுந்துவிட்டான். இவனுக்கோ நீந்தத்தெரியாது. தத்தளிக்கிறான். அப்போது இவனுக்குப் பின்னாலேயே ஓடிவந்தஇவனுடைய நாயானது உடனே ஆற்றில் குதித்து நீந்திக்கொண்டுபோய் அப்பையனுடைய தலைமயிரைப்பிடித்து இழுத்துக் கொண்டுவந்து அவனைக்கரைசேர்த்தது.

| பாடம் | பாடத்தை நடத்தும் மாதிரி | உதாரணங்கள். |
|---|---|---|
| ஷை கதை | ( ) கதை விவரிப்பு சித்திரத்தைப் பிள்ளைகள் உற்றுப் பார்த்தல். | (1) ஒருபலகையின்மேல்கமளியண்ணால் ஒரு ஆறு போலவும், கிராமத்தைப்போலவும் ஆற்றில் வெள்ளம்வருவதுபோலவும் உதாகரித்துஅதில்சிறுசிறு காகிதக்கப்பல்களை விட்டு ஷை கதையைப் பிரத்யக்ஷமாக உதாகரித்துக் காட்டலாம். ஆறுகள் இருக்கிற பக்ஷத்தில் ஆற்றங்கரைக்குப் பிள்ளைகளை அழைத்துப்போய் காட்டவும். |
| | (2) சித்திர விவரிப்பையாவது (Story illustration drawing) களிமண்விவரிப்பையாது (clay modelling illustration) பிள்ளைகளுக்கு காட்டி கதையின் சங்கிரகத்தைவரவழைத்தல். (Ele-cit) | (2) சம்பந்தமான தொழில்கள்: சாத்தியமானமட்டும் செய்யலாம். 1. மணல் விளையாட்டு: ஆற்றங்கரை போலவும் ஆறுபோலவும்செய்வது. 2. காகிதம்மடித்தல் கப்பல்,படகு. 3. களிமண் வேலை. நாயின் முகம், படகு. 4. சித்திரம். படகு, நாய். 5. தூர்சிவைத்தல், படகு. 6. விதை வைத்தல். நாய் தலை. 7. வர்ணசாக் வேலை. நாய். |
| | (3 உபாத்தியாயர் முகமலர்ச்சியோடு பிள்ளைகளுக்கு உற்சாகம், உண்டாகும்படியாய் தகுந்த அபினயங்களாலும் முகக்குறியாலும் ஷை கதையைச் சொல்லவும். | (3) கதை நடித்தல். ஷை கதையில் ஒருவித சம்பாஷணையும் இல்லாததால் கதை நடித்தலுக்கு இது தகுதியானதன்று, ஆதலால் பாட்டாக பாடவும், |
| | (4) பிள்ளைகளின் சொந்த பாஷையில் ஷை கதையைத் திருப்பிச்சொல்லல். | (4) **Pleasure talk on Nature.** 1. வெள்ளம் என்றால் என்ன? 2. வெள்ளத்துக்குக் காரணம்? 3. ஆறுகளின் உற்பத்தி? 4. ஆறுகளின் நீர்மட்டம் (Level)? 5. ஜலத்தின் ஓட்டத்துக்குக்காரணம்? 6. ஏன் படகு கவிழ்ந்தது? |

என். சுப்பிரமணிய ஐயர்.



## நமது துண்டு பத்ரிகை.

கும்பகோணத்தில் ஸ்திரீகள் சங்கம்:— ஆகஸ்டுமீ 17வ நாஷனல் இந்தியன் சங்கத்தின் மெம்பர்கள் மிஸ்ஸஸ் யேட்ஸ் பங்களாவில் கூடினார்கள். ஸ்ரீமதிமிஸ்லிஞ்சு (பெண்கள் பாடசாலை இன்ஸ்பெக்டரெஸ்)' சகோதரி சுப்பலட்சுமி, மிஸ்ஸ்ஸ் சுப்பராவ், லக்ஷிமிவாக அய்யங்கார் முதலியவர்களும் மீடிங்குக்கு வந்திருந்தார்கள். ஸ்கூல் சிறுமிகள் வந்திருந்தோர்களை தங்கள் இனிய பாட்டுகளினால் சந்தோஷப்படுத்தினர். சகோதரி சுப்பலட்சுமி ஸ்திரீகளுக்கு கல்வி அவசியம் என்பதை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டினர். தமது ஜீவியத்தையே ஒருதாரணமாக எடுத்துக்காட்டினர். வீணாக வம்புபேசுவதிலும், உபயோகமற்ற தொழில்களில் நேரத்தைச் செலவிடாமல் இகபரத்திற்குச் சாதகமான கல்வியைக் கற்று அஞ்ஞானத்தை ஓட்டித், தம் வாணாளைச் சந்தோஷமாகவும் தேசத்திற்குப் பலனாகவும் கழித்தல் எவ்வளவு மேன்மை. இது மிகவும் உண்மையே. ஸ்ரீமதி ஜானகி அம்மாள் (மருத்துவக்குடி) சகோதரி சுப்பலட்சுமியின் உபந்நியாசத்திற்கு அவருக்கு வந்தனமும் அப்பொழுதைச் சந்தோஷமாக இவ்வாறு கழிக்குமாறு தம்மை யன்புடனழைத்த மிஸ்ஸஸ் யேட்ஸ் அம்மாளுக்கு வந்தனமும் செலுத்தினார்.

டாக்டர் ராஷ்விகாரிகோஸ் கல்கத்தா யுனிவர்சிடிக்கு, ரசாயன சாஸ்திர பரிக்ஷை விருத்தியின்பொருட்டு, மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க உதவுமாறு பத்துலட்சம் ரூபாய் கொடுத்தாரென்பதைக் கேட்டு மிகவும் சந்தோஷ மடைகிறோம்.

இந்தியன் மெடிகல் சர்விஸ்:—சென்ற போட்டிப் பரீட்சையில் தேறிய பன்னிருவரில் ஐவர் இந்தியரென்று, அவற்றில் வரிசைக் கிரமத்தில் முதல் மூவரும் இந்தியரென்றுமறிய நம்மவர் சந்தோஷமடைவர். மூன்றாவதாகத் தேறியிருப்பவர் ஒரு சென்னைவாசியர். இந்தியாவில் அபூர்வ தேர்ச்சியடையமுடியாது என்று சாதாரணமாய் எண்ணப்படும் வைத்திய சாஸ்திரத்தில் இந்தியர்கள் முன்னிற்பது நாம் சந்தோஷப் படவேண்டிய விஷயமே.

தியஸாபிகல் சங்கம்:—அநேக வருஷங்களாக, ஏற்பட்டிருக்கும் தியஸாபிகல் சங்கம்,இவ்வுலகில் செய்திருக்கும் நன்மைகள்பல, பஞ்சமர்களுக்குக் கல்வி புகட்டிவருகிறது. ஸம்ஸ்கிருத பாஷையில் ஓர்பிலாஷையை ஜனங்களுக் குண்டாக்கி, பனையோலைகளில் எழுதப்பட்டிருந்த அநேக கிரந்தங்களை தற்கால புஸ்தக ரூபமாக்கி சகல ஜனங்களுக்கு உபயோகமாகுமாறு அச்சங்கம் செய்துளது. இவை யெல்லாம் புகழத்தக்கதே. ஆயினும் தற்காலம் அச்சங்கத்தினருள் அபிப்ராய பேதம் உண்டாகி சங்

கத்தின் ஊழல்கள் வெளிக்கிளம்பிவிட்டன. சமீபத்தில் சென்னைக் கோர்ட்டுகளில் நடந்த கேசுகள் இவைகளை ரூபிக்கும். அவ்வாறான தப்பபிப்ராயங் கொண்டவர்களை சபையில்வைத்திருப்பது உசிதமல்ல.

எழும்பூர் கவர்ன்மெண்டு விதவாச்ரமம்:— சென்ற ஆகஸ்டுமீ 16உ சனிக்கிழமை கும்பகோணம் பிரும்மவித்யா லாட்ஜில் ஒருமீட்டிங் நடந்தது. ஸ்ரீமதி மிஸ்லிஞ்சு அம்மை அக்கிராசனம் வகித்தனர். ஆனரபில் ராவ்பஹதூர் V. K. ராமானுஜாசாரியர், சப்ஜட்ஜு மிஸ்டர்பாலசுப்ரமணிய அய்யர், மிஸ்டர் T. சங்கராராவ், B. சுப்பாராவ், லக்ஷிமிவராக அய்யங்கார், V.R. சுப்ரமணிய அய்யர், A. சுப்பிரமணிய அய்யர், V S. விஸ்வநாத அய்யர் முதலிய அநேககனவான்கள் வந்திருந்தார்கள். மிஸ்லிஞ்சு அம்மை நமது மகாணத்தில் பெண்கல்வி அபிவிருத்தியைப்பற்றிச்சந்தோஷமாகவே பேசினார். பெண் கல்வி யபிவிருத்தியின் பொருட்டு உழைக்கும் கிறிஸ்துவப் பாதிரிமாரின் ஊக்கம் வியக்கத்தக்கதே. ஆனால் சுவதேச மதத்தைப் பற்றியும், ஆசார ஒழுக்கங்களைப் பற்றியும் அவர்களிடம் கல்விபயில்வோருக்கு ஒன்றும்தெரியாது. ஆகவே தான், பெண்கல்வி யபிவிருத்திக்கு பிராமண வகுப்பினரே சிறந்தனரென்றும், அவ்விஷயத்தை ஊக்கத்துடன் ஏற்றுக்கொள்ள ஒருவர்முன் வரும்வரை காத்திருந்தனரென்றும் சொன்னார். அவ்வாறே இப்பொழுது சகோதரி சுப்பலட்சுமிமுன்வந்து விதவைகளைப்படிப்பித்து அவர்களை தேசத்திற்குழைக்குமாறு செய்ய ஆரம்பித்திருக்கிறார் என்று சொல்லிமுடித்தார். பிறகுசகோதரி சுப்பலட்சுமி, ஹோம்விஷயங்களைப்பற்றி ஒரு சிறிய ரிபோர்டு வாசித்தனர். இப்பொழுது 15 சிறுமிகள் வாசித்துக் கொண்டிருக்கிறார்களென்றும், ஒவ்வொருவருக்கும் சாப்பாடு போட்டுமாதம்மாதம் அவர்கள் புஸ்தக துணிமணிச்செலவு நிமித்தம் ரூபா5 கொடுப்பதாகவும், அவர்கள் நிமித்தம் அவரவர் தாய்தகப்பன்மார் யாதொரு செலவும் செய்யவேண்டியதில்லையென்றும் தெரிவித்தார். பொதுஜனங்கள் கொடுக்கும் சொற்பதொகையிலிருந்து, ஹோமில் வாசிப்போர்களுக்கு சம்ஸ்க்ருதமும் சங்கீதமும் போதிக்கப்படுகிறது. ஹோமிலிருப்பவர்கள் மிகச்சந்தோஷமாக ஒத்துமையுடனிருக்கிறார்களென்றும், அடிக்கடி ஹிந்து மததத்வங்களைப்பற்றி அவர்களுக்கு மத போதனை தாமே செய்வதாகவும் சொன்னார். இவர் பேசியபிறகு திருவாரூர் மிஸ்டர் விசுவநாதய்யர், இந்த ஹோமினால் நம்தேசம் அடையப்போகும் நன்மைகளைச் சொல்லமுடியாது என்றும், இச்சமயத்தை யிழக்காமல் நம்மவர்கள் தத்தம் பெண்களை யனுப்புவது அவசியம் என்றும் சொன்னார். ஆனரபில் ராவ்பகதூர் K. V. ராமானுஜாசாரியர் சகோதரி சுப்பலட்சுமிக்கும் அக்கிராசனாதிபருக்கும் வந்தனமளித்தனர். மிஸ்டர் A. சப்ரமணிய அய்யர் ரூபா 50 கொடுத்துதவினார்.



தஞ்சாவூர் ஜில்லா சோஷல் கான்பரேன்ஸ்:—இஜ்ஜில்லா நான்காவது சோஷல் கான்பரென்ஸ் சென்ற 23,24ந்தேதிகளில் சீர்காழியில் மிஸ்டர் A. லக்ஷ்மீ பதியின் அக்கிராசனத்தின் கீழ் மிகச்செவ்வனே நடந்தேறியது. அநேக பெரிய கனவான்களும் மற்றுமனேக ஜனங்களும் கூடியிருந்தார்கள். பெண்கல்வி யபிவிருத்தியும் கல்லியாணச் சீர்திருத்தமும் இதரமதத்திற்குச் சென்றவர்களை திரும்பச் சேர்த்துக்கொள்ளுவதும், சமுத்திரயாத்திரை சென்றவர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்தல் சாஸ்தரீயமல்லவென்றும், அநேகர் பேசினார்கள். இத்தீர்மானங்களெல்லாம் யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதைப் பற்றி நாம் மிகுந்த சந்தோஷப்படுகிறோம்.

வி. என். ராஜ்.

---

## சமாச்சாரக்குறிப்பு.

மைசூர்பஞ்சம ஸ்கூல்களுக்கு கிராண்டு.—மைசூர் நகரில் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பஞ்சம ஸ்கூல்களுக்கு வருஷத்திற்கு 4000ரூபாய் கிராண்டு கொடுத்து வரும்படி கவர்ன் மெண்டார் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இப்படிச் செய்ததைப் பார்த்தால், அவ்வித ஸ்கூல்களின் விருத்தியினால் எவ்வளவு நன்மை உண்டென்பதைக் கவர்ன்மெண்டார் கண்டறிந்திருக்கிறார்கள் என்று வெளியாகிறது.

*          *          *          *          *

ஸிந்தியா மகாராஜாவின் நன்கொடை.—டெல்லியில் ஏற்படப்போகிற யூனானி ஆயுர்வேத மெடிகல் காலேஜுக்கு ஸிந்தியா மகாராஜா. 25,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். அந்த காலேஜ் முயற்சி நிரம்ப விருத்தியடைந்து வருகிறது.

*          *          *          *          *

ராஜப் பிரதிநிதியின் சுற்றுப் பிரயாணம்.—ராஜப்பிரதிநிதி ஸிம்லாவை விட்டு அக்டோபர்மாதம் மத்தியில் சுற்றுப்பிரயாணம் புறப்படுகிறார். அவர் கபர்தாலா, பிக்கானீர், எல்லோரா, ஹைதராபாத்; பீஜப்பூர், ஜெர்ஸோப்பா, மைசூர், பங்களூர், கோலார் பொன் சுரங்கங்கள், மதுரை திருச்சி, தஞ்சாவூர், சென்னை, கட்டாக், கயா, பங்கிப்பூர், பர்த்பூர் இவ்விடங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் போய்விட்டு டில்லிக்கு டிசம்பர்மாசம் முதல் வாரத்தில் திரும்புகிறார்.

*          *          *          *          *

பர்மாவில் ஒரு கிராமம் நெருப்பால் எரிந்து சாம்பலாயிற்று.—பர்மா நாட்டைச் சேர்ந்த ஸெனிடோன் என்ற ஒரு கிராமத்தில் 300-வீடுகள் சில

நாட்களுக்கு முந்தி நெருப்பால் வெந்து சாம்பலாயிற்று. சுமார் ஆயிரம் ஜனங்கள்வரையிலும் குடியிருப்பதற்கு வீடுகளில்லாமல் தவிக்கிறார்கள்.

* * * * *

கழுகுக்கிரையான ஒரு குழந்தை.—கான்டனைச் சேர்ந்த ஆண்டவூர்க் கிராமத்தில் ஒரு குழந்தையை யொரு பெரிய கழுகு தூக்கிக்கொண்டு போய்விட்டது. அப்போது குழந்தையின் தகப்பனார் காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்தார். குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. போலீஸ் காரர் குழந்தையைத்தேடிச் சென்றனர். குழந்தை அகப்படவில்லை.

* * * * *

போபாலில் எல்லா இந்திய மாதர்களின் சித்திரத் தொழிற் பொருட் காட்சி.—போபால் சமஸ்தானத்து பீகம் சாகிபா போபாலில் அடுத்த ஜனவரி மாதத்தில் எல்லா இந்தியமாதர்களின் சித்திரத் தொழிற் பொருட் காட்சி யொன்று நடத்தத் தீர்மானித்திருக்கிறார். அப்பொருட் காட்சியை ஜனவரிமாதம் 1-ந் தேதி முதல் 5-ந் தேதிவரை புருஷர்கள் போய் பார்த்து வரலாம். 5-ந்தேதி முதல் 10-ந்தேதி வரை கோஷா ஸ்திரீகள் போய்ப் பார்த்து வரலாம். சரிகை வேலைகள், வர்ணப் படங்கள், தையல் வேலைகள், வேறு சித்திர வேலைகள், இவைகளுக்குப் பொன்னினாலும், வெள்ளியினாலும், வெண் கலத்தினாலும் செய்யப்பட்ட பதக்கங்கள் கொடுக்கப்படும். போபாலிலுள்ள P. W. லேடிஸ் கிளப்பின் செக்ரெட்டேரிக்கெழுதி அப்பொருட் காட்சியைப் பற்றி சகல விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

* * * * *

பல்பாசியைப் போக்கவழி.—பல்லை ப்ரதிதினமும் காலையில் ஸரியாய்த் தேய்த்து சுத்திசெய்யத் தவறுவதால், பல்லிடுக்குகளிலுள்ள ஊத்தை சேர்ந்து அழுகிப்போய் வாயில் துர்நாற்றமுண்டாகிறது; பல்லிடுக்குகளில் பாசிபிடித்து விடுகிறது. மக்னீஷியா என்ற பஸ்மம் மருந்துக் கடைகளில் அகப்படும். பல்ப்ரஷை வெந்நீரில் நனைத்து பஸ்மத்தில் ஒத்தி, மூன்று முறை பாசிமேல் தேய்த்து விட்டால், பாசி நீங்கி பல் சுத்தமாய்விடும்.

* * * * *

ப்ளேக்குக்குப் புதிய மருந்து:—பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த லூடியானாவில் பிளேக் நோய் பரவியிருக்கிறது. அங்கே தர்ம கைங்கரியம் செய்து வரும் ஸால் வேஷன் ஆர்மியைச்சேர்ந்தவர்கள் இந்த நோய் கண்டவர்களுக்கு 'டிங்க்சர் ஆப் ஐயோடின்' (Tincture of Iodine) மருந்தில் ஒரு துளியை ஜலத்தில் விட்டு உள்ளுக்குக் கொடுத்து, அதையே ப்யூபோ (கட்டி) மேலும் பூசினார்களாம். இந்த சிகிச்சை செய்யப்பட்ட 51. பேர்களில் 50-பேர் சொஸ்தமானார்கள். கான்பூரில் இந்த மருந்தாலேயே 60 பேரில் 59 பேர் பிழைத்துக்கொண்டார்களாம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 ... 1913

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஒளவையார்.

Vol XV. Madras: September & October, 1913. No. 9 & 10

புத்தகம் கரு. சென்னை: செப்டம்பர்மூ, அக்டோபர்மூ 1913. இலக்கம் 9&10

## STORIES FROM THE HISTORY OF ROME.

### I FOUNDATION OF ROME—A ROMANCE.

### ரோமாபுரி எப்படி ஸ்தாபிக்கப் பட்டது—ஒரு விசித்திரகதை.

சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு முன் இட்டாலியா தேசத்தில் ஆல்பா என்னும் ஒரு சிறுபட்டணத்தை அமூலியஸ் என்னும் ஓரரசன் ஆண்டுவந்தான். இவன் மகா குரூபி. பழிபாவத்திற்கு அஞ்சாதவன். இவன் ராஜ்யாதிகாரத்தை அடைந்தவிதம் மிகவும் வெறுக்கத்தக்கது. அரசனாயிருந்த தனது சகோதரனை ஊரார் பைத்தியம் பிடித்தவனென நம்பும்படி பித்தலாட்டங்கள் செய்து அவனைக் காட்டிற்குத் துரத்திவிட்டு, ராஜ்யத்தை யபகரித்துக்கொண்டான். அவ்வாறு அபகரித்த ராஜ்யம் தனக்கும் தன் மக்களுக்குமே சாஸ்வதமாக நிலைத்திருக்குமாறு, தன் சகோதரன் பெண்பெற்ற இரு ஆண் குழவிகளையுங் கானகத்திலெறிந்து விட உத்தரவு அளித்தான். ஐயோ பாவம்! எப்பாதகங்களேனும் செய்து ராஜ்யத்தை யடையத்துணிந்த இக்கொடூரன் சந்தோஷமாக நெடுநாள் வசித்திருக்கவில்லை.

கானகத்தில்விடப்பட்ட அந்த இரு குழந்தைகளும் எவ்வாறு ஜீவித்திருக்கும். அநாதைக்குத் தெய்வமேகதி. சர்வாந்தர்யாமியாகிய கடவுள் ஒவ்வொரு ஜீவனுடைய சுகதுக்கங்களையும் கவனித்துக்கொண்டே யிருக்கிறார். இவ்விரு குழந்தைகளையும் அவர் ரக்ஷிக்க ஏற்பாடு செய்தார். அவ்வழியே சென்ற ஒரு பெண் ஓநாய் இக்குழந்தைகளின் அழகைக் கண்டு, பிரமித்து தன் பாலை ஈந்து அக்குழந்தைகளின் பசியைப் போக்கி, அவைகளைத்தன் குகைக்குள் கொண்டுபோய் வளர்த்து வந்தது.

"டேய்! அபியா! ஆடுகளெல்லாம் வேலியைத் தாண்டி தோட்டத்துக் குள்ளே போறதுரா! விடாதே! அந்த வீட்டு எஜமான் 'பொல்லாதவன்டா" எனக்கூவினான் ஒரு ஆட்டிடைப்பையன். இதைக் கேட்ட அபியா, "நான் என்னடா பண்றது! இந்த ராமுலஸ் ஸோடு விளையாட்டுக்குச் சண்டை போட்டேன். அந்தத் தடியன் சேற்றிலே தள்ளிப் பிட்டான், அதுக்குள்ளே ஆடெல்லாம் ஓடிப் போயிடுச்சு" என்றான்.

பையன்:—“அந்த தடியன் ஓநாய்ப்பால் குடிச்சு வளந்த பயலோனே!

இதைக் கேட்ட ரீமஸ் என்னும் இன்னொரு பையன்:—“ஏண்டா! அதிகப் பிரசங்கித்தனமாய் ஏதாவது பேசினா பல்லுகில்லுபோயிடும்” அடியா “இவன்கூட ஓநாய்ப் பால் குடிச்சு வளந்தபயல்டா!” என்றான்.

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அந்த வீட்டுத் தோட்டக் காரன் ஆடுகளையெல்லாம் அடித்துத் துரத்தினான். நமது இடைப்பையன்களும் தத்தம் ஆடுகளை ஓட்டிக்கொண்டு கிராமம் போய்ச் சேர்ந்தனர்.

ஓநாய்ப்பால் குடித்து வளர்ந்த இருசிறுவர்களும் யாவரென நாம் சொல்லாமலே தெரியவரும்.

இது நிற்க, ஆல்பா ராஜ்யத்தில் அரசன் செய்யும் அக்கிரமச் செயல்கள் ஜனங்களின் ஆத்திரத்தை மூட்டிவிட்டது. அநேக பிரபுக்கள் இவ்விரு சிறுவர்களைப்பற்றி ஆலோசித்துக் கடைசியாக அமூலியஸைத் துரத்திவிட்டு அச்சிறுவர்களுக்கு ராஜ்யாபிஷேகம் செய்வதெனத் தீர்மானித்தார்கள். அவ்வாறே ராமுலஸ்ஸையும் ரீமஸ்ஸையும் ஒரு பிரபு தன் கிரகத்திற்கு அழைத்துவந்து அரசனுக்குத் தெரியாமல் அவர்களுக்கு சகல கலைகளையும் போதித்து, யுத்தவிஷயங்களில் மிகுந்த தேர்ச்சியடையுமாறு செய்தான்.

அவர்களும் முரட்டு ஓநாய்ப்பால் குடித்து வளர்ந்தவர்களாதலின் படபடப்பான வீராவேசம் நிரம்பி யுத்தத்தில் தீரர்களெனப் பெயர்பெற்றனர். சிறுவர்களுக்கு இருபது வயதாகிக்கொண்டிருந்தது.

அரசனந்தப்புரத்தில் அமூலஸ் படுக்கையில் கிடந்த வண்ணமே தூக்கமின்றி கொடியகனுக்கள் கண்டு பயந்து பிதற்றிக் கொண்டிருக்கிறான். எங்கும் நிஸ்ஸப்தமாயிருக்கிறது. வேலைக்காரிகளெல்லாம் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். நேரம் மூன்றாவது ஜாமம். சமீபத்திலிருந்த விளக்கின் வெளிச்சமும் எண்ணெயில்லாததினால் கொஞ்சங்கொஞ்சமாய் குறைந்து வந்து கடைசியாக ஒரே இருட்டாய்ப் போய் விட்டது. அரசன் அரைத் தூக்கமாயிருந்த வண்ணமே ‘ஐயோ அண்ணா! உன்னைத் துரத்தி விட்டு உன் குழந்தைகளைக் கொன்று விட்டு நானடையும் சுகம் என்ன?’ என முணுமுணுத்தான். திடீரென்று படுக்கையினின்று எழுந்துட்கார்ந்தான். வெகு தூரத்தில் சங்கத்வனி சப்தம்கேட்டது. யோசித்தான். ஒன்றும் புரியவில்லை. மறுபடியும் படுத்தான். யோசிக்க ஆரம்பித்தான். ‘ஐயோ அச்சிறு குழந்தைகளைக் காட்டில் போட்டேனே! புலி கரடிகள் தின்றிருக்குமே! ஐயோ! அத்தாயார் வருத்தமெவ்வாறிருக்கும்.?,



என்ன பாவம் செய்தேன்! முன்னிருந்த சந்தோஷமெல்லாம் போய் விட்டதே. மனோவேதனையதிகரித்து, சந்தோஷமற்று துன்பப்படுகிறேன். கடவுளே! என்னை மன்னித்து அநுக்ரஹிப்பீரா! என்றான். ‘கடவுள் அநுக்ரஹிப்பார்’ என்று ஒரு தொனி உண்டானதாக எண்ணினான். ‘உன் சகோதரனிடம் மன்னிப்புகேள்’ என்று ஒரு உத்தரவு எழும்பியது. ஆ! அவரை எங்கே காண்பேன்! எனது செய்கையினால் அவரிவ்வுலகிலிருப்பதும் சந்தேகம் என்று யோசித்துக்கொண்டிருக்கையில் கதவு திறக்கப் பட்டது. அரசனுடைய சேவகன் நுழைந்து ‘ஐயனே! பிரபுக்களெல்லாரும் இரு சிறுவர்களை யழைத்துக்கொண்டு ராஜவிருதுகளுடனும் மேளதாளங்களுடன் கோட்டை மதிலைக்கடந்து ராஜசபையில் நுழைகிறார்கள்’ என்றான். ராஜன் ‘சரி, நான் பார்த்துக்கொள்கிறேன்’ என, சேவகன் வெளியே போய் விட்டான்.

கிழக்கு வெளுத்தது. இருள் பிரிந்தது. நெடுகப் பரந்திருந்த அந்தகாரமான இருட்டு நீங்கி வெளிச்சமாகிக் கொண்டிருந்தது. ஆஸ்தான மண்டபத்தில் பிரபுக்கள் ஒன்றுகூடி யிருக்கிறார்கள். சிறந்த ராஜலக்ஷணங்கள் அமையப்பெற்ற பலிஷ்டரான அழகிய இரு வாலிபர்கள் உயர்ந்த உடுப்புகளை யணிந்துகொண்டு கம்பீரமாக வீற்றிருக்கிறார்கள். பிரபுக்கள் ஏதோ யோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று பக்கத்துக் கதவைத்திறந்துகொண்டு ஒருவன்‘அண்ணா! நான்செய்தபாவத்தை மன்னிக்கவேண்டும்’ என ஓடிவந்து, அவ்வாலிபர்கள் சமீபத்தில் வீற்றிருந்த ஒரு விருத்தர் காலில்விழுந்தான். அவரும் அவனைத்தூக்கி ‘அப்பாவருத்தப்படாதே! நான் நீ செய்ததை குற்றமாக எண்ணவில்லை’ என்று சொல்லுமுன் அரசனாகிய அமூலியஸ் கீழேவிழுந்தான். தொட்டுப் பார்த்தால் பேச்சுமூச்சில்லை. அவன் விஷபானம்செய்து இறந்துவிட்டான்.

வாலிபர்களில் மூத்தவனாகிய ராமுலஸ்ஸுக்கு மகுடாபிஷேகம் சூட்டி அரசனாக நியமித்தார்கள். ரீமஸ் முதல்மந்திரியாக வேலைபார்த்து வந்தான். ஆனால் அவ்விருவரும் வேறு ராஜ்யம் ஸ்தாபிக்க வேண்டுமென்ற பேரவா கொண்டு, தங்கள் பாட்டனாருக்கு ஆல்பா ராஜ்யத்தை யொப்பிவித்துவிட்டு யாத்திரைசெய்யப் புறப்பட்டார்கள். கொஞ்சதூரஞ் சென்றவுடன் அவ்வூர் மடாதிபதியைச்சந்தித்து அவர் யோசனையைக்கேட்க, அவர் சுமார் ஏழு மைல் தூரத்துக் கப்பாலுள்ள ஒருவசதியான இடத்தை வர்ணிக்கவே ராமுலஸ்ஸும் ரீமஸ்ஸும் அவ்விடத்தைத் தமக்கு காண்பிக்குமாறு அவரைவேண்ட, அவரும் இணங்கி அழைத்துப்போயினர். ஆ! எவ்வளவு ரமணீயமான இடம்! டைபர் எனனும் நதியில் கரைதளும்ப தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. ஏழு குன்றுகள் ஒவ்வொரு மைல்தூரத்தில் ஏழு கிரீடங்கள்போல் தங்கள் சிகரங்களை மேலே நீட்டிக்கொண்டிருந்தன. நதியோடே, மேற்கே இரண்டு மூன்றுமைல் சென்றால் சமுத்திரம் கண்

னுக்குத் தென்படும். இவ்விடத்தைப் பார்த்தவுடன் இருவருக்கும் உடனே அவ்விடத்தில் ஒரு பட்டணம் உண்டாக்க வேண்டுமென்ற ஆசையுண்டாகியது. உடனே அவர்கள் திரும்பி ஆல்பாவுக்குச் சென்று தங்களுக்கு வேண்டிய சில சிநேகிதர்களை யழைத்துக் கொண்டு பட்டணத்திற்கு தேவையான கோட்டை கொத்தளங்கள் கட்டத் தொடங்கினார்கள். பட்டணம் ஸ்தாபித்தால் என்ன பெயர் வைப்பது என்று யோசித்தார்கள். பட்டணம் ஸதாபிப்பவன் பெயரை வைப்பதே வழக்கம். ஆனால் இருவர் பட்டணம் கட்டுதலால் யார் பெயரை வைப்பது என தர்க்கிக்கத் தொடங்கினார்கள். கடைசியாக மடாதிபதியாகிய புரோகிதர் சகுனம் பார்த்துத் தீர்மானிப்பதே நல்லது என, உடனே சகோதரரிருவரும் மலைமேலே நின்று சகுனத்தைக் கவனித்தார்கள். ராமுலஸ்ஸுக்கு பனிரண்டு கழுகுகளும் ரீமஸ்ஸுக்கு ஆறு கழுகுகளும் கிடைத்தது. ஆகவே ராமுலஸ் என்னும் பெயரை யொட்டி 'ரோம்' எனப் பெயரிடுவதாகத் தீர்மானித்தார்கள். ரீமஸ்ஸுக்கு இவைகளெல்லாம் பொறாமையைக் கிளப்பி விட்டது. ஆகவே கோபங்கொண்டு அப்பொழுதுதான் நாலடி உயரம் எழுப்பப்பட்டிருந்த கோட்டை மதிலை ஆத்திரத்துடன் தாண்டினான். அவர்களுள் ஒரு கோட்டைமதிலை ஒருவன் தாண்டுவானாயின் அக்கோட்டையும் பட்டணமும் உருப்படாது என்ற ஒரு எண்ணம் உண்டு. இவ்வாறு ரீமஸ் தாண்டியதைக்கண்ட ராமுலஸ் வெகுண்டு கத்தியினால் ரீமஸ்ஸைக் குத்திக் கொன்றுவிட்டான். என்ன கோபம்! அந்தோ! ஓநாய்ப்பாலின் மகிமையோ!

ரோமாபுரி பட்டணம் கட்டி முடிந்தாய்விட்டது. தற்சமயத்துக்கு வேண்டிய சில வீடுகளும் சிறிய கோட்டையும் கட்டப்பெற்று முடிவடைந்தது. ஆமாம்! வீடுகள்கட்டியாய்விட்டது, ஜனங்களுக்கெங்கேபோவது? தற்காலங்களில் பூமிக்குத் தாங்கமுடியாதபடி அவ்வளவு ஜனங்கள் விருத்தியாகிவர முற்காலங்களில் ஜனங்கள் குறைந்து ராஜ்யங்கள் க்ஷீணமடைந்தன. ராமுலஸ் தன் பட்டணத்திற்கு ஜனங்கள் சேர்க்க என்னசெய்யலாமென்று யோசித்தான். கடைசியாக ஒரு யோசனை தோன்றியது. 'ஒரு அநாதைகள் வீடு' என்று தன் பட்டணத்திற்குப் பெயரிட்டு, ஒவ்வொரு ஊரிலிருந்தும் துரத்தப்பட்டவர்களையும், யஜமானிடமிருந்து தப்பிவந்த வேலைக்காரர்களையும் மற்றும் பலரையும் பரிவுடன் வரவேற்று தன் பட்டணத்தில் குடியேற்றினான். கூடிய சீக்கிரம் சுமார் இரண்டாயிரம் மனிதர்கள் ராமுலஸ் பட்டணத்தில் வசிக்கத் தொடங்கினார்கள்.

அக்காலங்களில் இப்பொழுதைப்போல் ஸ்திரீகள் சுயேச்சையாய் வெளியே போவதில்லை. மனிதர்களும் ஸ்திரீகளை வெகு ஜாக்கிரதையாய் பாதுகாத்து வந்தார்கள். ஆகவே ராமுலஸ் பட்டணத்தில் ஸ்திரீகளே யில்லை. மனிதர்கள் மட்டும் வசித்துவந்தார்கள். ராமுலஸ் எண்ணப்படி அவன் பட்டணம் என்றும் சாஸ்வதமாய் இருக்க ஹேதுவில்லை போலும்.



இந்தக் கஷ்டத்தைத் தீர்க்க ராமுலஸ்ஸும் அவன் முக்ய சபையோர்களும் ஒருநாள் ஒன்றுகூடி யோசித்தார்கள். கடைசியாக ராமுலஸ் சொன்ன ஒரு யோசனையை எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள்.

ரோமாபுரி பட்டணத்தில் ஜனங்களெல்லாம் வெகு சந்தோஷமாக வீடுகளை அலங்கரித்து வைத்திருக்கிறார்கள். ஆஸ்தான மண்டபத்தில் பெரிய விருந்து ஒன்று நடக்கப் போகிறதாம். பட்டணம் முழுதும் தோரணங்கள் கட்டி வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மண்டபத்தில் ஒரே அமக்களமாயிருக்கிறது. என்னவென கவனிப்போம். சபையில் தேசத்துச்சனங்களெல்லாரும் விருந்துக்கு வந்திருக்கிறார்கள். அவரவர்கள் தத்தம் மனைவிமக்களுடன் மிகவும் சந்தோஷமாக விருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரோமன்களும் அவர்களுடன் கலந்துட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். சாப்பாட்டு கடைசியில் சாராயம் சாப்பிடத்துவக்கினார்கள். சபையினர்களெல்லாம் விருந்தை மெச்சிக்கொண்டு ராமுலஸைப் புகழ்ந்து கொண்டே சாராயம் குடித்தார்கள். பலர்பிதற்றத் தொடங்கினர். சிலர் கீழேஉருண்டார்கள். சிலர் எழுந்து குதித்தார்கள். வேறு சிலர் வெளியே ஓடினார்கள். இச்சமயம் அவ்விடமிருந்த ரோமன்களனைவரும் முன் சொல்லியபடி குடிக்காமலிருந்தார்கள். அவ்விடம் வந்திருந்த ஸ்திரீகளனைவரையும் ஆளுக்கொருவளாகத் தூக்கிக்கொண்டு தத்தம் கிரகத்துக்கு விரைவாக ஏகினர்.

ரோமாபுரி பட்டணம் ஸ்தாபிக்கப் பட்டது. ஜனங்கள் குடியேறி விட்டார்கள். பட்டணம் யாதொரு அழிவின்றி இன்னும், (அதன் பழைய கீர்த்தி குறைந்திருந்தாலும்,) இவ்வுலகத்திலுள்ள பெரியபட்டணங்களுள் ஒன்றாயிருக்கிறது.

V. N. ராஜ்.

## ரஸிகை

(179-வது பக்கத் தொடர்ச்சி.)

வசீகரி:—(ரஸிகையின் கன்னமொன்றை முத்தமிட்டு முறுவலுற்று மொழிகின்றாள்) அக்கா! உன்னிடத்தில் என் அவாவைச் சொல்லாமல் வேறு யாரிடத்திற் சொல்வேன்! ஆகையால் நானும் சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். உலகத்து நங்கையர்களிற் பெரும்பாலார்க்கு மாறாக நித்ய கன்னிகையாயிருப்பதே எனது முக்கிய விருப்பம்; அன்றியும்; ஓர் நாட்டிற்கரசியாகி, நமது அம்மணியின் பால் அரிய பக்தி பூண்டு, அவளது கடாக்ஷத்தினால், செழுமை, கல்வி, அறிவு, ஒழுக்கங்களில், அந்நாடு ஈக

நாட்டிலும் மேம் பட்டுத்துலங்க உழைப்பதில் என் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணஞ்செய்வதே இப்பிறப்பில் எனக்குப்பேரானந்தமாகும்.

அக்கா! ஓர் நாட்டிலுள்ள உயிர்களுக்குத் தலைவியாகும் உன்னத பதவியை விரும்பி அரசியாகக் கருதினேனென்று எண்ணாதே. அந்த ஜீவர்கள் அனைவரது சுகத்திற்காக உழைக்கும் அடிமையாகும் பதவியையே விரும்புகிறேன். அவ்வாறு பல்லாயிரம் ஜீவர்களின் நலங்களுக்குழைப்பதற்குத் தக்க பதவி அரச பதவியென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆகையினாற்றான் அந்தப்பதவியைக் கோறினேன். மற்றொரு விஷயம் உனக்குச் சொல்லுகிறேன். அப்பொழுதுதான் நீ என் உள்ளத்தை நன்றாய் அறிந்துகொள்வாய். நமது அம்மணியின் அருளினால் ஒருகால் நான் ஓர் நாட்டிற்கு அரசியானாலும், நான் விலையுயர்ந்த ஆடை யாபரணாதிகளை யணிந்துகொள்ளல், சொகுசான ஹம்ஸதூவி மஞ்சங்களில் சயனித்தல், நாவிற்கு நவநவமான சுவைகளைத்தரும் நானாவித ஆகாராதிகளையுண்ணல், முதலிய ராஜபோகங்கள் என்னப்படும் இன்பங்களைத் துறந்துவிடுவேன்.

அரசசபையி லிருக்கும்பொழுது மகுடம் செங்கோல் முதலிய அத்யாவஸ்யமான ஆபரணாதிகளை மாத்திரம் அணிந்துகொள்வேன். அவைகளையும் ஏன் துறந்துவிடக் கூடாதென்று நீ கேட்கலாம். ஸர்வஜன க்ஷேம அபிவிர்த்திக்காக உழைப்பதற்கு மிக்க அநுகூலமாயுள்ள ராஜ்யாதிகாரச் செல்வாக்கையும் பிரஜைகளின் அன்பையும் பெறுவதற்கு இச் சின்னங்கள் முக்கிய காரணங்களென்னலாம். ஆகையால் அவைகளைக் கைவிடேன்.

அரண்மனையி லிருக்கும்பொழுதும் அரச சபையி லிருக்கும்பொழுதும் அதிக விலையில்லாத பரிசுத்தமான வெண்பட்டுடைகளையே தரித்துக்கொள்வேன். நமது அம்மணியும் வெண்கலை தரித்துத் தானேபிரகாசிக்கிறாள். அன்றியும் நான் எப்பொழுதும் அரண்மனையிலேயே தங்கியிரேன். பல்வேறு வித நடை உடை பாவனைகளையுடைய எனது பிரஜைகளோடு பழகுதற்குத்தக்கவாறு சமயோசிதமாய்ப் பல்வேறுவிதமாக எனது நடைஉடை பாவனைகளை மாற்றிக்கொண்டு வருஷத்திற்கு ஆறுமாதங்களுக்குக் குறையாமல் எனதுதேசத்தின் எப்பக்கங்களிலும் சஞ்சரித்து, பிரஜைகளனைவரோடும்பழகி, அவர்களது குறைகளை அறிந்து, அவைகளைநிவர்த்திப்பேன்.

ஜனங்களுக் குழைப்பதி னிமித்தமாக இன்னும் என்னென்னவோ அவ் விஷயங்கள் என் அகத்தில் நிறைந்திருக்கின்றன. ஆனால் அக்கா! எண்ணங்களெல்லாம் வீண்மனோராஜ்யங்கள் தானே. அவைகளைப்பற்றி விரிவாய்பேசுவதில் என்னபிரயோஜனம்? நீ வற்புறுத்தியதால் ஒருவாறு சுருக்கமாய்ச் சொல்லிவிட்டேன். (புன்னகையுடன் தலை தாழ்த்திக் கொள்ளுகின்றாள், அவளது இருவிழிகளினின்றும் இரண்டு ஜலத்துளிகள் பொங்கி அவளது இருகன்னங்களிலும் படிகின்றன.)



ரஸிகை:—(தன் வலக்கையால் தன் சகோதரியின் கன்னங்களில் நின்றஜலத்துளிகளைத் துடைக்கின்றாள்.) வசீகரி! ஏன் விசனிக்கின்றாய்? காருண்யம் நிறைந்த உன் விருப்பங்கள் என்மனோராஜ்யங்களாகும்? அவைகள் யாவும் நிறைவேறக் கூடியவைகளே. சாரதாம்பாளருளினால் நீ உனது ஜன்மபூமிக்கே அரசியாவாய். நான் உனக்கு முன் பிறந்தவளே யாயினும் அறிவில் நீ என்னைவிட மிகச்சிறந்தவள். நீ உன் வாழ்நாள் முழுவதையும் தேசத்திற்காக உழைக்கத் தீர்மானித்திருக்கிறாய். அன்றியும் அரசாக்ஷி பொறுப்பை வகிக்க எனக்குச் சிறிதும் விருப்பமுமில்லை, சக்தியுமில்லை. ஆகையால் நமது தந்தைக்குப்பின் நீயே நமது நாட்டிற்கு அரசியாக வேண்டும்.

வசீகரி:—இல்லையில்லை யக்கா. நான், நமது தந்தைக்குப்பின் இத்தேசத்திற்கு ராணியாகும் உரிமையை உன்னிடமிருந்து கவர்ந்து கொள்ளும் அற்ப சிந்தையுடையவளே யல்ல. தேச க்ஷேமத்திற்காக நான் அரசியாகக்கருதினேன். ஆனால் அரசியாயிருப்பதைப் போலவே அரசியின் உயிர்ச்சகோதரி யாயிருப்பதும் தேசக்ஷேமத்திற்குழைப்பதற்கு அநுகூலமாகவேயிருக்கும், ஆகையால் நீ ராணியாகுங்காலத்தில் நான் உன்னோடு வசிக்கும் பாக்யத்தைப்பெறுவதே எனக்குச் சம்பூரண திருப்தியை அளிக்கும். ஆனால் அக்கா! உயிர் சகோதரி களாயினும் நாமிருவரும் ஸ்திரீகள் தானே. மங்கைப் பருவ முற்ற நங்கையர்க்கு மணஞ் செய்யாதிருப்பது தவறென்றெண்ணி நம்மிருவருக்கும் மணஞ்செய்து நம்மை பிரித்து விடுவார்களே. விவாஹத்தைப்பற்றி நினைத்து விட்டால், என் மனம் பதறுகிறது. ஹே அம்மணீ! சகல கலாவல்லீ! விவாஹம் என்ற சாகரத்தில் விழாதவாறு நீ தான் என்னைக்காப்பாற்றவேண்டும். (விழிகளில் மீண்டும் ஜலம் பொங்குகின்றது. தன் ஆடையின் முன்றானையை அக்கண்களில் ஒற்றிக்கொள்ளுகிறாள்)

ரஸிகை:—என்னடி! விவாஹத்தைச் சாகரமென்று கருதுகிறாய்!

வசீகரி,—ஆமாம் அக்கா. அது சாகரந்தான். எனது அவாவனைத்தையும் அவலமாய்க் கரைத்துவிடும் கொடியசாகரம். உயிர்ச்சகோதரிகளாகிய உன்னையும் என்னையும் பிரிக்கும் பாதகசாகரம்.

ரஸிகை:—இல்லையில்லையடி. இப்பொழுது நீ இப்படித்தான் பேசுவாய். ஆனால், உன்னைப்போல் உலகக்ஷேமாபிவிர்த்திக் குழைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் உத்தம நாயகனொருவனை நீ காதலித்து, அவனது காதலையும் நீ கவர்ந்து கொண்டால் பின்பு நீ விவாஹத்தை என்ன சாகரமென்று கருதுவாய் தெரியுமா? இணையற்ற இன்பசாகரமென்று தான் கருதுவாய். உன்னுடைய உயர்ந்த நோக்கங்களில்

ஒன்றேனுமில்லாத நான் இந்நாட்டிற்கு அரசியாக, நீ எனது உயிர்ச் சகோதரியாக என்னோடு வசித்தல் உனதுவிருப்பங்களை நிறைவேற்றி உனக்குச் சம்பூர்ண திருப்தியைக்கொடுக்கும் என்று நீசொல்லியது தவறு. உண்மையில் உனதுஉயர்ந்த விருப்பங்களுக்கும் உனது சௌந்தரியத்திற்கும், உனது கல்விக்கும் இசைந்த உனது அகத்திற் கினிய நாதனை மணந்து நீங்க ளிருவரும் இந்த ஸாஸ்வதி தேசத்திற்கு அரசனும் அரசியுமானாற்றான் நீ சம்பூர்ண திருப்தியை யடைவாய். ஆகையால் வசீகரீ! உனது ஆசைகளெல்லாம் நிறை வேறும் வண்ணம் நீ உனக்குத் தக்க காதலனை அடைவதற்கு நமது அன்னை அருள் புரியுமாறு நீ அந்த அம்மணியைத் தியானித்துக் கொண்டிருக்க வேண்டும்.

வசீகரீ:—என்னக்கா! நித்திய கன்னிகையா யிருப்பதே எனது முக்கிய விருப்ப மென்று சொன்னேன். நீயோ, எனது எண்ணங்களெல்லாம் நிறை வேறுவதற்கு நான் விவாஹஞ் செய்து கொள்ள வேண்டு மென்று சொல்லுகிறாய். வெகு அழகா யிருக்கிறது உன்னுடைய புத்தி மதி!

ரஸிகை:—விவாஹமின்றி கன்னிகையா யிருப்பதில் என்ன இன்பமடி யிருக்கிறது.?.

வசீகரீ:—விவாஹஞ் செய்து கொள்வதில் என்ன இன்பமக்கா இருக்கிறது?

ரஸிகை:—என்ன இன்பமா! சொல்லுகிறேன் கேள். முதலில் நான் கேட்கும் ஒரு விஷயத்திற்கு மாத்திரம் பதில் சொல். நீ என்னோடு சம்பாஷித்து விளையாடிக் குலாவி யிருத்தலை விட தனிமையா யிருப்பது தான் உனக்கு அதிகஇன்பத்தைக் கொடுக்கிறதா ?

வசீகரி:—இல்லை யில்லை. ஏகாந்தத் திலிருப்பதைவிட உனதருகே யிருப்பது தான் எனக்கு அதிக ஆநந்தம்.

ரஸிகை:—அவ்வாறானல், ஏகாந்தத்திலிருப்பதை விட உன் உள்ளத்திற் கினிய காதலனோடு சம்பாஷித்துக் குலாவி யிருப்பதும் அதிக ஆநந்தந்தானே ?

வசீகரி:—சீச்சி ! என்னவார்த்தைகளைப் பேசுகிறாயக்கா ! நீ என் சொந்த சகோதரி. என்னுயிர்த்தோழி. ஏன்? என்னுயிர்த்தலைவி யென்றே சொல்லலாம், உன்னோடுகுலாவி யிருப்பது எனக்குமிகுந்த ஆனந்தம். உன்னைப் பிரியும்படிநேரிட்டால் பின்பு ஏகாந்தமென்ற தோழிதான் எனது இனியதோழியாவாள். வேறெந்தத்தோழியோடு குலாவினும் நான் சிறிதும் இன்பமடையேன். நீ சொன்னபடி ஒருபுருஷனோடு சம்பாஷித்துக் குலாவி யிருத்தலைப்பற்றி நினைக்கும் பொழுது ஹா!



என் மனம் எவ்வளவு அருவருப்படைகிறது தெரியுமா ? சீ ! இனி அப்படிப்பட்ட வார்த்தைகளை என்முன் பேசாதேயக்கா.

ரஸிகை:—புன்னகையுடன், என்னைத்தவிர ஏகாந்தம் என்ற நங்கைதான் உனக்கு இனிய தோழி யென்றாய். நானும் ஒருஸ்திரீ தானே. நான் மாத்திரம் ஏன் உனக்கு இனிய தோழியாகின்றேன் ?

வசீகரி:—அக்கா ! அதற்குக் காரணம் நான் உன்பாற்கொண்டிருக்கும் அன்புதான். வேறொன் றுமில்லை.

ரஸிகை:—நீ என்னிடத்தில் அன்பு பூண்டிருப்பதால் நான் உனது உயிர்த் தலைவியா யிருக்கின்றேன். நீயும் என்னோடு குலாவியிருப்பதில் இன்பமடைகின்றாய். அவ்வாறே நீ உனக்குத்தக்க நாதனிடத்துக் காதலுற்றுவிட்டால் அவனே உன்னுயிர்த் தலைவனாவான். அவனோடு குலாவியிருத்தலே உனக்குப் பேரானந்தமாகும்.

வசீகரி:—அக்கா! நீயும் நானும் ஓர்வயிற்றிலுதித்த சகோதரிகள். குழந்தைப் பருவத்திலிருந்து நாமிருவரும் ஒருவரையொருவர் பிரியாது ஒன்றாய்க் குலாவி விளையாடினோம். ஆகையால் என் மனம் உன்னிடத்தில் முதிர்ந்த அன்பு பூண்டிருக்கிறது. நீ, நான் இன்றுவரையில் ஒரு போதும் பார்த்திராத புருஷனொருவனை இனிமேற்கண்டு அவன்பாற் காதலுறுவதைப்பற்றிப் பேசுகிறாய். காதல் அல்லது அன்பு நெடுநாட் பழக்கத்தினால் அகத்தைச் சார்ந்திருக்குமேயன்றி, புதிதாய்க் கண்ட ஒருவரிடத்து எப்படி உண்டாகும்?

ரஸிகை:—வசீகரி! நீ காதல் அல்லது அன்பு என்று பேசியது பிழை. காதல் வேறு. அன்புவேறு. அன்பு, நீ கூறியவாறே நெடுநாட் பழக்கத்தினாலுண்டாகும். ஆனால் காதல் என்பது ஸ்திரீ புருஷர் இருவர் ஒருவரையொருவர் புதிதாய்க்கண்ட க்ஷணத்திலேயும் அவர்கள் உள்ளத்தில் பதிந்துவிடும் ஓர் அற்புதக்கிளர்ச்சி.

வசீகரி:—(நகைத்துக்கொண்டு) க்ஷணப்பொழுதில் எப்படித்தான் அந்த புதுக்கிளர்ச்சி மனத்திற் பதியுமோ? எனக்கா இந்த அசம்பாவித விஷயத்தில் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாய் ?

ரஸிகை:—இது அசம்பாவித விஷயமா! அப்படியானல் சீதா பிராட்டியும் ராமபிரானும் ஒருவரையொருவர் கண்ட க்ஷணத்தில் அவர்களுள்ளத்தில் ஒப்பற்ற காதலுதித்ததும் பொய்யாகுமா? ய[illegible] வெறு கொண்டு அற்புத சக்திவாய்ந்த சாவித்திரியின் அகத்தில் நிறைந்த காதல் அவள் சத்தியவானைக்கண்ட க்ஷணத்தில் அவள் மனத்திற் பதிந்ததும்பொய்யாகுமா?என்னடிவசீகரீ!ஓரன்ன[illegible]வையின் வார்த்தைகளினிமித்தமாக நிடதநாட்டரசனாகிய நளனும் [illegible] நாட்டரச



[library stamp]

புத்திரியாகிய தமயந்தியும் ஒருவர் பாலொருவர் காதலுற்று மன முருகினார்களென்றால், ஆடவர் அரிவையர்கள் ஒருவரையொருவர் கண்ட க்ஷணத்தில் காதலுறுவது அதிசயமும் அசம் பாவிதமுமாகுமோ? நீ உன் அன்பிற்குரிய என்னோடு சம்பாஷித்துக் குலாவியிருப்பதில் அடையுமின்பத்தை விட, உன் காதற்குரிய தலைவனை மணந்து அவனோடு இனிமையாய்ச் சம்பாஷித்துக் குலாவியிருப்பதால் நீ அடையும் இன்பம் பன்மடங்கதிகமா யிருக்கும். நீ அத்தகைய இன்பமுறுவாறு உனக்கினியகாதலனை மணந்துகொண்ட பிறகுதான் என் வார்த்தைகளினுண்மையை அறிந்துகொள்வாய்.

வசீகரி:—ஜானகியும் சாவித்திரியும் தமயந்தியும் புருஷர்கள் பால்காதலுற்றார்களென்றால் வசீகரியும் அவ்வாறு ஓர்புருஷனிடம் காதல் கொள்ள வேண்டுமென்பதற்கு என்ன நியாயமிருக்கிறது? அக்கா! நீ கூறிய காதல் என்ற கிளர்ச்சியையும் அதன் காரணமாக நிகழும் விவாஹத்தையும் நான் விஷமாக வெறுக்கிறேன். மேலும் மேலும் அந்த விஷயத்தைப்பற்றி என்னோடு பேசாதே. நாழிகையாகிறது. நாம் தியானத்திற்குப் போவோம் வா.

ரஸிகை:—உன்னுடைய நன்மையைக் கோறியே நான் உனக்குப் புத்திமதி சொல்லுகிறேன். மற்றொருமுறை இவ்விஷயத்தைப் பற்றியே பேசுவோம். இப்பொழுது அதிக நாழிகை யாகிறதுதான். போவோம் வா.

(இருவரும் போகிறார்கள்.)

(தொடரும்) சு. அ. சுப்பராயன்.

---

# கற்பிற் சிறந்த கணவன்.

## ஜாதகம் பொய்க்குமா, தேவிவரம் தவறுமா?

### அத்தியாயம் II

(184-வது பக்கத் தொடர்ச்சி.)

இவரது ஸகோதரர் பிச்சுவையரோ இவருக்கு எவ்விதத்திலும் விரோதமாயிருந்தார். முத்துஸாமி அய்யரையும் அவர்புத்திரன் பாலசந்திரனையும் கண்டால் அவருக்கு வெகு த்வேஷம். பாலசந்திரனைப் பொன்னுஸாமி அய்யர் தன் கண்போல் பாவித்தபடியால், அவ்வீட்டில் யாவருக்கும் அவனிடம் பயபக்தியாய் நடந்தார்கள். இதைக்காண பிச்சுவையருக்கு வயிறெறியும். இதின் நிமித்தமாகத் தன் தமையனை யெல்லாரிடமும் நிந்திப்பார். சிறுவயதிலேயே தன் கணவனது துர்நடத்தையையும் கொடுமைகளையும் சகியாத இவர் மனைவி கிணற்றில் விழுந்து தற்கொலை புரிந்தாள்.



அறுபது நாழிகையும் தாசிவீட்டே குடி. இதுவிஷயமாய்ப் பொன்னுஸாமி அய்யர் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வளவு முயன்றும் பலிக்கவில்லை. பிறகு பணங் கொடாவிட்டால் இவன் எவ்விதம் வேசி வீடு செல்வான் பார்ப்போம் என்று ஒரு சிறு காசும் கொடாமல் எவ்வளவு வேண்டிய போதிலும் கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டார். பிச்சுவையரும் கடன்மேற் கடனாய் வாங்க ஆரம்பித்தார். போக்கிரிகளில் முதல் தோடாப்பெற்ற நாகநாதன்தான் இவருக்குக் கடன்முதலியது கொடுத்து வந்தான். ஒருநாள் அவன் இவரிடம் பொன்னுசாமி அய்யரின் குமாரியைத் தனக்கு விவாகம் செய்துவைக்கும் பட்சத்தில் அளவற்ற பொருள்களை அவருக்களிப்பதாகக் கூறினான். பிச்சுவையரும் ஆனந்தப்பட்டு தன் தமயனிடம் இதைப்பற்றி அடிக்கடி தூண்டிக்கேட்டு, பொன்னுஸாமி அய்யர் பாலசந்திரன் போதனையால் இதைத் தடுத்துவிட்டாரென்று பிச்சுவையர் அவன்மேல் கடுஞ்சினங்கொண்டு, எப்படியாவது மற்றைய வரன்கள் வருவதை யெல்லாம் தடுத்துவிட்டால் பெண்ணுக்கு வயதாய் விட்டதென்று அவசரத்தில் நாகநாதனுக்கே விவாகம் நிறைவேறும்படி செய்யலாமென்ற எண்ணத்தினால் கொஞ்சம் மனதாறினார்.

இது இப்படி யிருக்க, ஜோஸியர் உள்ளே வரவும் பொன்னுசாமி அய்யர் எழுந்து, "வாருங்கள் ஜோஸ்யரவாள். யாரடாங்கே, புலித்தோலை விரி" யென, அங்கு ஒரு பக்கத்தில் நின்ற குமாஸ்தா குப்பராவ் புலித்தோலை எடுத்து விரித்தான். ஜோஸ்யர் "அரகர சம்போ, மகாதேவா பிரணதார்த்திஹரா" என்று கொண்டே ஆசனத்தில் அமரவும், அய்யர் தன் தம்பியுடன் ரத்தின கம்பளத்தில் உட்கார்ந்தார்கள். ஜோஸ்யர் "அப்பொழுதே புறப்பட்டேன். நேரமாய்விட்டது. மற்றப்படி நல்ல சமாசாரந்தானே. விசேஷம் ஏதாவதுண்டோ" என,

பொன்னு.—"என்ன, போங்கள். குட்டிக்குப் பத்து வயது நிறைந்து விட்டது. இதுமுதல் வரம்தேடி ஏற்பாடு செய்தால்தான் சரிவரும். வரன் ஒன்றும் சரியானதா யகப்படவில்லை. அடே யாரங்கே—"குப்புராவ் உடனே ஆஜராய் நிற்கவும், "குப்பராவ், இந்தக்குட்டி கமலா, பானு இருவருமெங்கே? வெகுநேரமாய்க் காணோமே, பாரும்" என்றதும், அவர் வெளியே சென்றார்.

ஜோஸ்யர்.—"என்ன ஐயரவாள். ராஜா ராமய்யர் குமாரன் நாகநாதனுக்குக் கொடுப்பதாய் ஜாதகம் பார்த்தீர்களே. பொருத்தமும் இசைந்திருந்ததே." என,

பொன்னு.—"என்ன செய்கிறது? ஜாதகப்பொருத்த மிருந்தால் மனப்பொருத்தமில்லை. மனப்பொருத்தமிருந்தால் இன்னொன்றில்லை. நீங்கள் சொன்ன சம்மந்தம் என் மனதிற்கு அவ்வளவு பொருந்தினதா

யிருக்கவில்லை. இன்றுகூட சில ஜாதகங்கள் வந்திருக்கின்றன. பாருங்கள். ஏதாவதொன்றை நிச்சயம் செய்யலாம். முத்து, அதை அவர் கையில் கொடு" எனவும், முத்துஸாமி அய்யர் தன் கையிலுள்ள ஜாதகங்களை ஜோஸ்யரிடம் கொடுத்தார்.

ஜோஸ்யர்.—அவற்றை யொன்றொன்றாய் எடுப்பதும் இது செவ்வாய் தோஷம் அது மூன்றும்பொருத்தம் என்று சொல்லிக்கொண்டே கீழே தள்ளுவதுமா யிருந்தார். பிறகு சிறிது ஆலோசனையுடன், "ஏன் நம்ம பாலுவிருக்கும்போது வேறு இடம் நீங்கள் பார்ப்பானேன்? அவனுக்குக் கொடுக்கலாமானால் இந்த சிரமமெதற்கு?" என்றார்.

பொன்னு.—"நீங்கள் கேட்டதுபோலதான் எல்லாரு மென்னைக் கேட்கிறார்கள். என் குடும்பத்துக்கே பாலு ஒருவன்தான் ஆண்குழந்தை. எனக்கு வேறு பிள்ளை யிருக்குமானால் இப்போதே ஜாதகம்கூடப் பாராமல் அவளைப்பாலுவுக்கே கொடுத்துவிடுவேன். அதில்லாததால் பாலுவுக்குக் கொடுத்தால் ஒருவிதமாய்ப் போய்விடும். அப்படி யின்றி அவளைத் தகுந்த இடத்தில் கொடுத்துவிட்டு இவனுக்கும் வேறு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துவைத்தால் என் சந்தோஷம் இரட்டிப்பாகும். அவனுக்கும் கமலாவைக் கல்யாணம்செய்வதைவிட ஸகோதரனாகத்தானே கல்யாணத்தை நிறைவேற்றி சிறப்பிக்கவேண்டுமென்று எண்ணம். குட்டிக்கும் அவ்வாறே விருப்பம்தான். ஜாதகம் பார்த்ததாகவும் அவ்வளவு பொருந்தினதாயில்லை என்றும் தன்னிஷ்டமில்லை என்று என் மைத்துனர் சொன்னார். எல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் நான் இவ்விதம் முயற்சி செய்வது" என்றார்.

இப்படி இவர்கள் பேசி ஜோஸ்யரும் ஜாதகங்களைப் பரிசீலனை செய்துகொண்டு வருகையிலேயே, ஒரு ஜாதகத்தைப்பார்த்து, ஜோஸ்யர் "இதுவல்லவோ ஜாதகம். பேஷ்! இந்தப் பையனல்லவோ யோகவான். இதோ பாருங்கள். நம்முடைய குழந்தை ஜாதகத்துக்கென்றே சிருஷ்டித்தாற்போ லிருக்கிறது" என்று ஆச்சரியப்பட்டார்.

பொன்னு.—"அப்படியானால் மற்றதை யெல்லாம் யோசித்து இப்பையனுக்கே கொடுத்துவிடலாம். முத்து இந்த ஜாதகம் யாருடையது பார்" என, அவர் "இது உள்ளூர் ஜாதகம்தான். தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி முதலான யிடங்களிலிருந்து வந்தவைகளையும் பாருங்கள்" என,

ஜோஸ்யர்.—"எதுக்கு? வேண்டாம், எதுவும் இதற்கு சமானமாக மாட்டாது" என்றார்.

பொன்னு.—"ஸரி, அப்படியானால், இதுவே போதும், உள்ளூர் ஸம்பந்தமே சிலாக்கியம்"



இச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே வந்த கமலா பாலசந்திரனிருவர்களும் அவர்கள் கல்யாணவிஷயமாய் ஏதோ முடிவு செய்கிறார்களென்றறிந்துகொண்டதும் கமலா நேரே உள்ளே செல்ல,

பாலசந்திரன்.—"நீங்களென்ன ஜாதகம் பார்க்கின்றீர்கள். கமலாவுக்கா? அதுதான் நிச்சயம்" என்று சிரித்துக்கொண்டே, பிச்சுவையர்க்கருகில் வரவும், பிச்சுவையர் அவர்கள் ஜாதகம் பார்க்க உட்கார்ந்தது முதல் வயிற்றெரிச்சலும் கோபமும் கொண்டிருந்ததினால் தனது த்வேஷியான பாலகனைக் காணவும் பொங்கி திடீரென பிச்சுவையர் "சீ சீ நாயே, அயோக்கியக்கழுதே, அப்புறம்போ" என்று முகத்தைக் கடுகடுத்துக்கொண்டு முணுமுணுத்தார். பக்கத்திலுள்ளோர்களுக்கு காரணம் தெரியாமல் பிரமித்து நிற்க, ஜோஸ்யர் பிச்சுவையரே என்ன விசேஷமென்று கேட்டார்.

பிச்சுவையர்.—"நான் பொறுக்கப்பொறுக்க அசாத்தியமாய்ப்போய் விட்டது. இவன் கிட்ட நெருங்கும்போதே தெரியும். நானும் என்ன செய்கிறேனென்று பார்த்துக்கொண்டே யிருக்கையில் வேணுமென்றே என் கையை மிதிக்கிறதா" என்று அவனைப் பின்புறம்நோக்கிப் பலமாய்த் தள்ளினார். அப்போது பொன்னுசாமி அய்யர் அங்கில்லாதிருப்பாராயின் பாலன் பிச்சுவையரை எமபுரத்துக் கனுப்பியிருப்பான். அவன் தன்னாற் கூடியவரை கோபத்தை யடக்கிக்கொண்டு "அப்பா, பொய் சொன்னாலும் பொருந்தச்சொல்லவேண்டும். நான் தற்செயலாய்க்கூட மிதிக்கவில்லையே. அவர் தன் கைகளால் முழங்காலைக் கட்டிக்கொண்டிருக்கையில் நான் எவ்வாறு அவர் கையை மிதிக்கக்கூடும்,' என்று வருத்தத்துடன் சொன்னான். பொன்னுசாமி அய்யர் தனது சுபாவமான சாந்தத்துடன் "பிச்சு அவனுடன் உனக்கென்ன? இந்தா, இந்தக் காகிதக்கட்டுக்களை யெல்லாம் உயர எடுத்துப்போ" எனப் பிச்சு அய்யரும் எடுத்துச்சென்றார். பொன்னுசாமி அய்யர் "பாலு நீ என்னவோ நிச்சயமாய்விட்டது என்று சொல்லவந்தாயே அதென்ன" யென்று சிரித்துக்கொண்டு வினவ, பாலனும் தன்கோபத்தை மறந்து முகமலர்ச்சியுடன் "நானும் கமலாவும் சாயங்காலம் கோவிலுக்குப் போயிருந்தோம். அங்கே என் கிளாஸ்ப்பையனொருவனும் கூடவந்தான். நான் வேடிக்கையாய்க் கமலாவை கல்யாணம் செய்துகொள்கிறாயா என்று அவனைக் கேட்டேன். அவனை உங்களுக்குக்கூடத் தெரியுமே, போனவருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் முதலாகத் தேறி மெடல் வாங்கவில்லையா? அவன்தான். கமலாவுக்கு அவன்மேல் ஆசை யிருக்கும்போலிருக்கிறது. அவன் புத்திசாலி. நான் அப்போதுதான் அம்மன் சன்னிதியில் புஷ்பம் வைத்துப்பார்த்தேன். நல்லபுஷ்பம் அகப்பட்டது. வேறென்ன மீனாட்சி

கமலாவை யவனுக்கே யளித்துவிட்டாள். நீங்களும் ஜாதகமும் என்ன செய்யமுடியும்" என்று குதித்தான்.

ஜோஸ்யர்.—"நீ என்ன பச்சைகுழந்தை? ஜாதகம் பொய்க்குமா? அப்பா! இந்த ஜாதகனுக்குத்தான் இவள் பாரியாகவேண்டும். பொருத்தத்தை வேண்டுமானால் பார்—" என,

பாலு.—"பொருத்தம் ஏழாம்பொருத்தம்தான். தேங்காய் வாழைப்பழத்துக்குப் பிடித்த கேடுதான். நான் சொல்வது பொய்யானால் இனி ஒருபோதும் தெய்வத்தை நம்பமாட்டேன்" என்றான்.

ஜோஸ்யரும் "என் ஜோஸ்யம் பலிக்காவிட்டால் நான் இனி ஜாதகத்தை ஏறிட்டுப் பார்க்கிறதில்லை" யென்று கூறவும், முத்துசாமி அய்யர் போடா அதிகப்பிரசங்கி உள்ளே போ என்று பாலனைக் கடிந்தார். பாலன் முணுமுணுத்துக்கொண்டு உள்ளே சென்றான். இதற்குள் வேலைக்காரனொருவன் வந்து சூப்ரின்டெண்டு ரங்கசாமி அய்யர் வந்திருப்பதாகத் தெரிவிக்க, பொன்னுசாமி அய்யர் ஜோஸ்யரைச் சற்று பொறுக்கச் சொல்லி வெளியே சென்றார்.

இது நிற்க; உள்ளேசென்ற நம் கதாநாயகியாகிய கமலா என்ன செய்கிறாளென்று பார்ப்போம். அவள் சமையலறையில் தன் தாயாரைக் காணாது நகை உள்ளில் நுழைந்தனள். அங்கு பரதேவதைபோல் முப்பத்தைந்து வயது நிறைந்தும் யௌவனம் மாறாதவளாய்ச் செவியில் வைரக் கம்மலும் கழுத்தில் காசுமாலையும் கையிற் கங்கணமு மணிந்து, ஒரு அம்மணி நகைகளைச் சுத்திசெய்து பரிசோதனை செய்துகொண்டிருந்தனள். தர்மவரம் ஊதா மேக வர்ணத்தில் சரிகைபோட்ட பட்டாடையும் அதற்கேற்ற பச்சை ரவிக்கையு மணிந்திருந்தாள். அவ்வம்மணி இடையிடையே பக்கத்துக்கூடத்தில் நடந்தமேற்கூறிய சம்பாஷணையைக் கவனித்து வந்தனள். அச்சமயம் கமலா "அத்தே" என்று கொண்டு உள்ளே வந்தாள். (பாலசந்திரன் இவ்வம்மணியை அத்தை யென்று அழைத்துவருவதால் இவளும் அவ்வழக்கத்தையே அனுசரித்தாள். அப்படியே பொன்னுசாமி அய்யரை இவ்விருவரும் அப்பா வென்று அழைப்பார்கள்). கமலாவைக்கண்டதும் காமகோடியம்மாள், "கமலா எங்கேடியம்மா போயிருந்தாய் நான் உன்னைத்தேடு தேடு என்று தேடினேனே." என்று கொண்டே தன் மடியிலெடுத்து அவளையழகு பார்க்கலானாள்.

தன் குமாரியின் அழகு அன்றுதினம் ஆடையாபரணங்களினால்மென்மேலும் ஜ்வலிப்பதைக் கண்டு திருஷ்டி விழுந்ததோ வெனப்பயந்தாள். இந்த அம்மாள் வெகு ஸாது. பொறுமையுடையாள். நாணம், மடம். அச்சம், பயிர்ப்பு முதலியகுணங்களுடன் பர்த்தாவே தெய்வமெனபாவித்



துவருவாள். இப் பதிவிரதாசிரோன்மணியின்மீது பொன்னுஸ்வாமி ஐயருக்கு அளவற்ற அன்பு.

காளை மாடு கால்படி பால் கறந்தது. என்றால் அதையும் நம்பக் கூடியவள். வாலிபத்தில் பொன்னுஸாமி ஐயருக்கு இவ்வம்மணி இவ்வாறு ஒன்று மறியாத பேதையாயிருந்ததைப்பற்றி சிறிது மனக்குறையுமுண்டு. ஆனால் சிற்சில ஸமயங்களில் யாரேனும் தம்பதிகள் சச்சரவுசெய்துகொண்டிருப்பதைப் பார்த்து இம்மட்டும் வாய் திறவாமல் நாம் சொன்னபடி தட்டாமல் நடப்பதும் நம் அதிர்ஷ்டம் தானென்று களிப்பார். மேலும் ரதியைப் பழிக்கும் ரூபமும் குபேரனைப் பழிக்கும் செல்வமும் படைத்து தன் சாயலையொத்த புத்திரிகா ரத்னத்தையும் ஈன்ற காமகோடியம்மாளை தனக் கென்றே அவதரித்த தெய்வமோ வென்று கருதி ஐயர் ஆனந்தப்பட்டார்..

சாதாரணமாய் எந்த நாடுகளிலும் ஆண்பாலார் பெண்பாலார் இருதிறத்தாருக்கும் சந்ததியடையவேண்டு மென்ற விருப்பமிருப்பது ஸகஜந்தான். இருந்த போதிலும் திருநெல்வேலி ஜில்லாவிலே இந்த ஆசைக்கு ஆண் பெண் இருதிறத்தாருக்கும் அளவுகிடையாது.

ஒருபெண் ருதுசாந்தி செய்து புருஷன் வீடு வந்தால் அவள் ஆறு மாதத்திற்குள்ளாக கற்பவதியாயிருத்தல் வேண்டும். இல்லையோ அவள் பாடு திண்டாட்டந்தான்.

மாமி நாத்தியாகிய புண்ணியவதிகள் அவளை பலவிதத்திலும் ஏசுவதும் தவிர அவள் புருஷனுக்கு இரண்டாம் தரம் விவாகம் செய்து விடுவதாகப் பயமுறுத்துவார்கள். அப்பெண் என்செய்வாள்? அவளுக்கு வயதோ பதின்மூன்றிருந்தால் அதுவே அதிகமென்னலாம். உலகம் இன்னதென்றறியாத பருவத்தில் அவள் இத்தகைய சங்கடங்களை எவ்வாறு பொறுப்பாள்? தெய்வத்தை நொந்து காலை ஐந்து மணிக்கு விரைக்கும் குளிரில் ஆற்றங்கரைக்குச் சென்று ஸ்நாநம் செய்து ஒருமாம் விடாமல் அரசப்பிரதட்சணம் செய்து வருவாள். அதினால் உடம்பில் அநேக வியாதிகள் உண்டாகிறது. இதுவாயினும் அவர்கள் தேகச்ரமத்துடன் போய்விடுகிறது. சிலபெண்கள் பிறந்தகம்போய் மருந்து சாப்பிடுகிறேனென்று சென்று முறையிட்டதும் அவர்கள் பயந்து சாதாரண மனிதரிடம் உள்ள யோக்கியதை கூட அற்றவனையும் பணத்தையும் பாவையரையுமே மனதின்கண் சிந்தித்து வெளி வேஷம் போட்டு மந்திரமாயங்கற்ற யோகி போல் நடக்கும் போலிச் சந்நியாசிகளிடம் அழைத்துப்போகிறார்கள்.

அவன் இல்லாத பகட்டெல்லாம் செய்து மயக்கி அவளை மனதொப்ப உப பத்னியாக்கிக்கொண்டு விடுகிறான். அவன் செய்யும்மாயங்களுக்கு

உட்படாமல் உத்தமியாயே யிருப்பினும் அவள் உலக அபவாதத்துக்குட்பட்டு தன் ஆயுள் முழுவதும் கணவனாலும் மற்றவராலும் வெறுக்கப்பட்டு துன்பத்துக்குள்ளாகின்றாள். அவ்வாறு அபவாதத்துக்குட்படாமலே தெய்வச் செயலாய் பிரஸவிப்பினும் சிறிய வயதிலுள்ள தேக நோயாலும் மன நோயாலும் வருந்தி அதே காரணமாய் மாண்டுபோகிறார்கள். என்ன ஆண் குழந்தை. ஆ ஈச்ரவன் அருளின்படி நடக்கின்றதென்பதை யறியாமல் வீண் விஷயங்களில் கிடந்துழலும் இவர் மடைமை என்னென்பது.

இத்தகைய ஆபத்துக்களொன்றும் காமகோடியம்மாளுக்கு ஏற்படவில்லை.

தன் கணவனிடம் இத்தகைய அன்பையும் அழகிய புத்திரியையுமடைந்த இவ்வம்மணி மோட்சம் என்பது இதுதான் என எண்ணியிருந்தனள்.

தாய் கேட்ட கேள்விக்குப் பதிலாக கமலா "நான் பானுவுடன் கோவிலுக்குப் போயிருந்தேன்," என காமகோடி, "இன்று வெள்ளிக்கிழமையாயிற்றே ராத்திரி இந்த கூட்டத்தில் சேவகன் துணையில்லாமலா போனீர்கள். நகைகள் பத்திரமாயிருக்கிறதா" வென்று சோதிக்கலானாள். "கமலா மோதிரத்தைக் காணோமே" என்று வினவ, கமலா யோசித்துத் தான் கல் யாணையின் மேல் தினகரனருகில் பேசிக்கொண்டிருக்கும்போது நழுவவிட்டதாக ஞாபகம் வந்தது. அதை ஒப்புக்கொள்ளக் கூசினாள்.

இவளுக்குப்பின்னால் இவள் அறியாமல் நின்ற பானு நகைக்க கமலா "அம்மாஞ்சி உம்...ம் மோதிரத்தைக் கண்டாயா என்றாள். பானு "என்னை ஏன்கேட்கிறாய்? நீ யாரிடம் இஷ்டப்பட்டு கொடுத்தாயோ அவனைக்கேட்டால் கொடுத்து விடுகிறான்" என, கமலம் கோபத்துடன்பார்த்தாள். அவன் "இந்தாம்மா நீ கல்யாணையின் கீழ் போட்டுவிட்டாயாம். தினகரன் எடுத்து என்னிடம் கொடுத்தான்" என்று மோதிரத்தை ஒப்புவித்தான். இவர்கள் பேசிக்கொண்டதும் அந்த அம்மாளுக்கு அர்த்தமாகவில்லை. பானுவைப்பற்றி "உன்னை மச்சுனன் ஏதோ சுள்ளென விழுந்தாரே என்ன" என்றுவினவ, பானு "அவனுக்கு என்னவேலை? பேமானி, அவன் ஒழிந்தால்தான் அப்பாவுக்கு க்ஷேமம் அத்தே. கமலாவை நாகநாதனுக்குக் கொடுக்கவில்லையென்றது முதல் நான்தான் அதற்கு காரணமென்று என்னைக்கரிக்கிறான். இன்று வேடிக்கையாக நான் 'கமலாவுக்கு என்ன ஜாதகம் பார்க்கிறீர்கள் அது நிச்சயமாய்விட்டதா' என்றேன். பொய்க்கேனும் தன் கையை மிதித்து விட்டேனென்று என்னை திட்டினான். அப்பா இல்லாவிட்டால் அவனைத் துவயலாக்கியிருப்பேன். நாகநாதனுக்காக இவருக்கென்ன இவ்வளவு அக்கறை தெரியவில்லை." என்றான்.



காமகோடி 'அதிருக்கட்டும் என்னவோ நிச்சயமாய்ச் சொன்னாயே. அதென்னவிஷயம்' என்றாள். பானு கமலாவைப் புன்சிரிப்புடன் பார்த்து "மேலூர் டிப்டிகலெக்டர்பிள்ளை என்கூடப்படிக்கிறான். இன்றைக்கு அவன் கோவிலில் என்னைக்கண்டு கூடவந்தான். அவன் வெகுகெட்டிக்காரன், தீர்ந்த அழகுள்ளவன்; வேடிக்கையாய் கமலாவைக் கலியாணம்செய்துகொள்கிறாயா" என்று அவனைக்கேட்டேன். அவன் கமலாவைப்பார்ப்பதற்கு முன்னே இதை இச்சித்தவன் இவளைக்கண்டதும் நிச்சயமாகவொப்புக்கொண்டான். நம் கமலாவுக்கும் அவன்மேல்தான்—நான் சொன்னால்—அவள்முகத்தைப் பார்த்துக்கொள் நீயே—எங்கே தேடினாலும் இப்படிப்பட்ட வீரன் கிடையாது. கோவிலில் புஷ்பம்வைத்து பார்த்தேன். நல்லபுஷ்பம் அகப்பட்டது. ஜாதகம்பார்ப்பதுகூட அனாவசியம். இதைப்பற்றி அப்பாவைக்கேளுங்கள்." காமகோடி "ஜோஸ்யரேதோ ஜாதகம் பொருத்தம் நல்லதென்றாரே, அது சிலாக்கியமல்லவோ? அதைப் பார்த்தாயோ?" என்று கேட்க,

கமலா.—"அவருக்கென்ன! நாகநாதன் ஜாதகம்பொருந்தினதென்று சொன்னாரல்லவா. அது போலத்தானிருக்கும்" என்றாள். இதனால் கமலாவுக்கு தினகரன் தான் பிடித்திருக்கிறதென்று தாய் அறிந்துகொண்டதும் முத்துசாமி அய்யர் உள்ளே வந்தார். "முத்தண்ணா, ஜோஸ்யர் சொல்லுகிற பையன் யார்" என, முத்து "யாரோ டிப்டிகலெக்டர் பிள்ளையாம்." பானுவுக்கு ஒருசந்தேகம் உதித்தது. உடம்பு சிலிர்க்க ஒரே யோட்டமாய் ஓடி ஜோஸ்யரிடம் அந்த ஜாதகன் பெயரைக் கேட்க, அவர் பார்த்து "அவன் பெயர் தினகரன். இதிலுள்ள கிரகப்படி நல்ல ரூபவானாயிருத்தல் வேண்டும். ஜாதகத்துக்குகந்தபடியே நாமதேயமும் பொருந்தியிருக்கிறது பார்." என, உடனே பாலன் "பேஷ்! பேஷ்! பழம்நழுவிப் பாலில் விழுந்தது. இவனைத்தான் நானும் சொன்னேன். இது தெரியாமல் வீண் தர்க்கம் செய்தோமே. அவன் ஜாதகமா அது. அது அம்மன் வாக்கும் பலித்தது' உமது ஜோஸியமும் பலித்தது" என்றான்.

வாயிலில் ரங்கசாமி அய்யருடன் பேசிவிட்டு உள்ளே வந்த பொன்னுஸாமி அய்யர் இவ்விஷயத்தைக் கேட்டு மிகவும் ஆனந்தங்கொண்டனர். "துரைபப்பயருக்கு ரங்கசாமி அய்யர் மூலம் சொல்லியனுப்பி யிருக்கிறேன். எல்லாம் சரிதான். நம்ம குட்டிக்கு சம்மதந்தானா? முதலில் அது தான் முக்கியம் என்றுகேட்க, பாலன் கோவிலில் நடந்தவைகளைச் சொன்னான். அய்யர் 'பேஷ்! பேஷ்! அப்படியா சங்கதி. நீங்களே பேசிக்கொண்டாய் விட்டதா" என்று நகைக்க, கமலா ஓடி தாயிக்குப்பின் ஒளிந்துகொண்டாள். பிறகு பீரோவைத்திறந்து ஒரு பட்டுப்பீதாம்பரமும், ஐந்து ரூபாயும் எடுத்து தாம்பூலத்துடன் ஐயர் ஜோஸ்யரிடம் கொடுக்க, அவர் ஆசிர்வதித்துவிட்டு அளவற்ற களிப்புடன் தனதில்லம் சேர்ந்தனர்.

K. K. ஸ்ரீனிவாசாசாரியார், எம். ஏ., எம். எல்.

# STORY OF PERDITA.

# பர்டிடாவின் கதை.

(141-வது பக்கத்தொடர்ச்சி.)

## பாலிக்ஸினிஸுடைய குமாரன் இடையன் குடிசைக்கு வருதல்.

போஹீமியாதேசத்து அரசனாகியபாலிக்ஸினிஸுக்குஒரேபுத்திரன். அவன்பெயர் ப்ளோரிஸல். இவன் ஒருநாள் இந்த இடையனுடைய வாசஸ்தலத்திற்குச்சமீபத்தில் வேட்டையாடிக் கொண்டிருக்கும்பொழுது கிழமனிதனுடைய வளர்ப்பு புத்திரியைக்கண்டான். இவள் இடையனது புத்திரியென்பதை இராஜ குமாரன் அறிந்திருந்தபோதிலும் இப்பெண்ணினது அழகும், வணக்கமும், இராணிக்குத் தகுந்த நடக்கையும் இவளை அதிகமாய் மெச்சும்படி இராஜபுத்திரனைச் செய்தன.

இவன் அன்றுமுதல் டோரிசில்ஸ் என்ற பெயரை வகித்துக்கொண்டு ஒரு பிரபுவின் குமாரனைப்போல் மாறுவேஷத்துடன் இவ்விடையன் வீட்டிற்கு அடிக்கடி போக ஆரம்பித்தான். இவன் வரவை இடையன் முதலியவர்கள் கண்டு, இவனை மரியாதையுடன் வரவழைத்து வந்தார்கள். ஏனெனில் இராஜகுமாரனும் மரியாதையாயும், கபடமற்றவனாயும், தைரியசாலியாயு மிருந்ததைக் கண்டு அவர்கள் மகிழ்ந்து தங்கள் குடிசைக்கு வரும் ஒரு பிரபுவின் குமாரனை மரியாதையுடன் உபசரித்து வந்தார்கள்.

இவ்விதம் இராஜகுமாரன் அரண்மனையை விட்டு அடிக்கடி வெளியில் போய் வருவது இராஜனுக்கு சம்ஸயத்தை யுண்டாக்கி திகைக்கும்படி செய்தது. உடனே சிலரிடம் இச்சங்கதியைச் சொல்லி தன் குமாரன் எங்கு அடிக்கடிபோய் வருகிறான் என்பதை அறிந்துவரும்படி இவர்களுக்கு ஆஞ்ஞாபித்தான். இவர்கள் அரசன் கட்டளைப்படி சென்று யாவற்றையும் செவ்வனே அறிந்துகொண்டு, அரசனிடத்தில் தாங்கள் பார்த்து அறிந்துகொண்டவைகளைச் சொன்னார்கள். அரசனும் தன்குமாரன் இடையனது குமாரத்தியின்மீது இச்சை வைத்திருக்கிறான் என்பதை கண்டு பிடித்துவிட்டான்.

உடனே முன்னொரு சமயம் மற்றொருவன்மீது அரசன் மிக்க குரோதமாயிருந்த பொழுது அரசனது உயிரைக் காப்பாற்றின கேமிலோ என்ற நம்பிக்கையுள்ள நண்பனை அழைத்து, தன்னுடன் பர்டிடாவின் வளர்ப்பு தகப்பனாகிய இடையனது வீட்டிற்கு வரும்படி விரும்பினான்.

ஆட்டு மயிரைக் கொய்பவர்களுடைய விருந்து. மகிழ்ச்சியான காலக்ஷேபம். பர்டிடாவின் அழகு. அடோலிகஸ் என்ற சில்லரைசாமான் விற்போனின் வரவு.



பாலிக்ஸினிஸும், கேமிலோவும் மாறு வேஷத்துடன் வயதுசென்ற கிழவன் வீட்டிற்கு வந்தார்கள். அப்பொழுது ஆட்டுமயிரைக்கத்திரிக்கும் விருந்தை வெகுவிமரிசையாக நடத்திக் கொண்டிருந்தார்கள். இவ்விருவரும் அந்நியர்களாயிருந்த போதிலும், அங்குவந்த ஒவ்வொருவிருந்தாளிகளுடன் இவர்கள் உபசரிக்கப்பட்டார்கள். குதூகலமாய் விருந்து நடக்குமிடத்திற்கு வந்தவர்களை அழைத்துக் கொண்டுபோய் அங்குள்ள விருந்தாளி களுடன் சேர்ந்திருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்.

உல்லாசமும் விளையாட்டுமே விசேஷமாகக் காணப்பட்டன. மேஜைகளின்மீது சுத்தமான துணிபோடப் பட்டிருந்தது. பட்டிக்காட்டு ஜன



அடோலிகஸ் சில்லரை சாமான்களை விலைக்கு கொடுப்பதை ஸ்திரீகள் வாங்குகிறார்கள்.

ங்கள் செய்யும் இவ்விருந்துக்கு அறுசுவையோடு போஜனம் தயார் செய்யப்பட்டது. சில வாலிபர்களும், வாலிபப் பெண்களும், வீட்டுக்கெதிரிலுள்ள புல் மேடையில் நடித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் அங்கு சில்லரைசாமான்களை விற்கவந்த அடோலிகஸ் என்பனிடம் நாடா, கைச்சட்டை, கால்சட்டை, குல்லாய், குழந்தைகள் விளையாடும் பொம்மைகள், பாத்திரங்கள் முதலியவைகளை வாங்கிக் கொண்டிருந்தார்கள். இவ்வியாபாரியோ கள்ளன். ஒரு விலைக்கு பத்துமடங்கு சொல்லி வேடிக்கை வார்த்தைகளால் அங்கு வாங்கவந்தவர்களை ஏமாற்றி தான்கொணர்ந்த சாமான்களை யெல்லாம் விற்றுவிட்டான். இவ்வித சுறுசுறுப்புள்ள வியாபாரம் ஒருபக்கம் நடந்துகொண்டிருக்கும் பொழுது ப்ளோரிஸலும், பார்டிடாவும் தங்களைச் சூழ்ந்துள்ள வாலிபர்களும், வாலிபப்பெண்களும் மூடத்தனமான விநோதஆட்டங்களில் குதூகலமாயிருக்கையில் அவ்விதம் தங்கள் மனதை ஆட்டங்களில் செலுத்தப் பிரியப்படாமல் தனிமையாக ஒரு மூலையில் உட்கார்ந்து பேசுவதில் அதிக மகிழ்ச்சியடைந்திருந்தார்கள்.

## அரசன் வருகை.

அரசன் தன்குமாரன் கூடத் தன்னைத் தெரிந்துகொள்ளாதபடி மாறுவேஷம் பூண்டு தனது நண்பனாகிய கேமிலோவுடன் இவ்விடத்திற்கு வந்தான். தனதுகுமாரனுடன் பார்டிடா மேரைமரியாதையாக பேசிக்கொண்டிருந்தது இவ்வரசனுக்கு அதிக ஆச்சரியத்தை யுண்டுபண்ணிற்று. காட்டுப்புறத்தில் ஜனித்த இவ்வழகு வாய்ந்த பெண்மணியை நான் பார்த்ததேயில்லை. அவள் பேச்சும் செய்கையும் சாமான்யமாயிருந்தபோதிலும் அவளுடைய கம்பீரப்பார்வை அவள் இவ்விடத்திற்குரியவளல்ல என்பதைத் தெரிவிக்கிறது. ஆயினும் இப்பெண்மணி இவ்வீட்டிற்கு எஜமானி போல் தோன்றுகிறாள்.

நிற்க, பார்டிடாவைப் பார்த்து அவள் தகப்பனார், "அம்மா குழந்தாய்! விருந்தாளிகளை யெல்லாம் மரியாதையாக விருந்துண்ண அழை" என்றார். தகப்பனாரிடத்தில் மரியாதையும் அன்புமுள்ள பார்டிடா தன் தகப்பன் வார்த்தையைச் சிரமேற்கொண்டு விருந்தாளிகளை யெல்லாம் உட்கார்ந்து விருந்து உண்ணும்படி வேண்டிக்கொண்டாள். யாவரும் விருந்துண்ட பின், பூச்செண்டுகளைத் தனது திருக்கரங்களில் எடுத்துச் சென்று முதியோர், வாலிபர் என்ற வித்தியாசமின்றி யாவருக்கும் வழங்கி, ஒவ்வொரு விருந்தாளியிடத்திலும் தகுந்த மாதிரி சிற்சில வார்த்தைகளையும் புன்னகையுடன் பேசினள். விருந்தாளிகள் இக்கன்னியப் பெண்ணின் வாக்சாதுர்யத்தையும், இவளுடைய மரியாதை, வணக்கம், முதலியவைகளையுங்கண்டு அதிசயித்தார்கள்.

பத்மராஜா.



# ஸின்டர்லா முதலிய மாயா விநோதக்கதைகள்

## ஸின்டர்லா 1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 - ... 1913
MADRAS.



ஒருகாலத்தில் ஒரு சிறிய பெண் ஒரு ஊரில் வசித்துவந்தாள். அப்பெண்ணின்பேர் ஸின்டர்லா. அவளுடையதாயார் இறந்துவிட்டாள். அவளுடைய தகப்பனார் மறுபடியும் கலியாணம் செய்துகொண்டார். இவள் ஸின்டர்லாவுக்கு மாற்றாந்தாயல்லவா. இவளுக்கு இரண்டு புத்ரிகளுண்டு. இவர்கள் ஸின்டர்லாவைவிட வயது முதிர்ந்தவர்கள். இவர்கள் ஸின்டர்லாவிடம் மிகவும் ப்ரியமற்று இருந்தார்கள்.

இவர்கள் நல்ல ஆடைகளைத் தரித்துவந்தார்கள். ஸின்டர்லாவோ கந்தைத்துணிகளை அணிந்து வந்தாள். இவர்கள் நல்ல நேர்த்தியான அறைகளில் படுத்து நித்திரை செய்வார்கள். ஸின்டர்லாவோ தாழ்வாரத்தில் ஒரு மூலையில்தான் தூங்குவாள். இவளுடைய தமக்கைகள் நன்றாகப் புசித்துவிட்டு நாள்முழுவதும் வேலையொன்றும் செய்யாமலிருப்பார்கள். இப்பெண்மணியோ வீடுமுழுவதும் துடைப்பாள். கிராதி, நெருப்புமூட்டுமிடம் முதலியவைகளைச் சுத்திசெய்வாள். பீங்கான்களைத் தேய்த்துக் கழுவுவாள். காலையிலிருந்து இராத்திரி தூங்கப்போகும்வரையில் இவளுக்கு இவர்கள் வேலையிட்டுவந்தார்கள். சாயங்காலவேளையில் சமயல்அறையில் தனிமையாக யிருக்கவேண்டிவரும். தனக்கு குளிர் இல்லாமலிருக்க, நெருப்புத்தணலிருக்கும் இடத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பாள்.

ஒருநாள் அந்த ஊர் அரசன் இரண்டு விருந்து செய்வித்தான். அதற்கு அந்தவூரிலுள்ள ஸ்திரீகளெல்லாம் வரவழைக்கப்பட்டார்கள். ஸின்



டர்லாவின் சகோதரிகள் காலைமுதல் சாயங்காலம் வரையில் வேலையொன்றும் செய்யாமல் தாங்கள் அணியும் நேர்த்தியான உடுப்புகளைப்பற்றி பேசுவார்கள். வீண்பேச்சு பேசுவார்கள். இவர்களை விருந்துக்கோ, கலியாணத்திற்கோ யாராவது அழைக்கவந்தால் ஸின்டர்லாவை வெளிப்புறம் அனுப்பிவிடுவார்கள். ஸின்டர்லாவை ஒருவரும் அவ்விருந்துக்குப் போகும்படி கேட்க நினைக்கவேயில்லை.

முதல் விருந்து தினம் வந்தது. ஸின்டர்லா தனது சகோதரிகளுக்கு உடுப்புகளைச் சீராய் உடுத்தி, தலைவாரிப் பின்னுவாள். அப்பொழுது இவர்கள் பிரபுக்களோடு சேர்ந்து கூத்தாடுவதைப்பற்றி பேசுவார்கள். இதை ஸின்டர்லாகேட்டு விசனமுற்று அழுவாள்.

"ஸின்டர்லா! ஏன் அழுகிறாய்?" என்று சகோதரிகளில் ஒருத்தி கடுகடுத்த முகத்துடன் கேட்டு, "நீ ஒழுங்காய்நட, இல்லாவிடின் நான்—" என்று சொன்னாள்.

'ஓ, அவ்விருந்துக்குப்போக நான் விரும்புகிறேன்' என்று ஸின்டர்லா விம்மியழுதாள்.

'நீ விருந்துக்குப் போகவேணுமா?' என்று சகோதரிகள் கைகொட்டி நகைத்தார்கள். "அழுக்கடைந்த கந்தைத்துணியை யணிந்துள்ள உன்னைப்போன்ற பெண்மணிதான் அரசன் அரண்மனைக்குப்போகவேண்டும்!"

இவர்கள் உடுப்புகளைத் தரித்துக்கொண்டதும் வண்டியிலேறி அரண்மனைக்குச் சென்றார்கள். பரிதாபமான ஸின்டர்லா புகைவாயிருக்குமிடத்தில் ஒரு மூலையில் உட்கார்ந்து துக்கத்துடன் அழ ஆரம்பித்தாள்.



என் ப்ரியமுள்ள "ஸின்டரல்லா, என்ன சங்கதி? ஏன் அழுகிறாய்?" என்ற பக்ஷமுள்ள தொனி இவள் காதில் விழுந்தது.

ஸின்டரல்லா, சந்தோஷத்துடன் குதித்தாள். ஏனென்றால் இந்தத் தொனி ஒரு தேவதையின் வாயினின்று வந்தது. இந்த தேவதை ஸின்டரல்லாவிடத்தில் அதிக பக்ஷமாயிருந்தது. இந்த தேவதை தனக்கு இஷ்டப்படி இவளிடத்திற்கு வந்து, இவளுடன் பேசிவிட்டுப்போகும்.

'விருந்துக்குப் போகவேண்டுமென்று அழுகிறாயா?' என்று தேவதை கேட்டது.

'பரவாயில்லை, நீ போகலாம்; ஆனால் நான் சொல்லுகிறபடியே நீ செய், முதலில் நீ போய் ஒரு பெரிய பூசணிக்காயைக் கொண்டுவா."

ஸின்டரல்லா உடனே ஓடிப்போய் ஒரு பூசணிக்காயைக் கொண்டுவந்தாள். அந்த தேவதை அதனுள் குடைந்து, தனது தண்டத்தால் அதைத் தொட்டாள். அது உடனே ஒரு அழகான கோச்வண்டி ஆய்விட்டது. அதனுள் பட்டால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



'இப்பொழுது நீ போய் சுண்டெலிப் பொறியைக் கொண்டுவா' என்று தேவதை சொல்லிற்று. ஸின்டர்ல்லா உடனேபோய் ஆறு சுண்டெலிகளுடன் அதைக் கொண்டுவந்தாள். பிறகு அந்த தேவதை அதன் கதவைத்திறந்து ஒவ்வொரு சுண்டெலியையும் தனது தண்டத்தால் தொட்டது. ஓடின சுண்டெலிகள் ஆறு நேர்த்தியான குதிரைகளாக மாறிவிட்டன.

'இப்பொழுது உனக்கு ஒருகோச்மேனும், சில காலாட்களும் தேவையல்லவா? தொல்லைப் புறத்தில் ஒரு கூண்டு இருக்கிறது. அதைப்போய்க்

கொண்டுவா," என்று தேவதை சொல்லிற்று. ஸிண்டால்லா அதை எடுத்துவரவே, அதிலிருந்த மூன்று எலிகளும் மூன்று பெரிய கோச்மேன்களாய் விட்டார்கள். இரண்டு காலாட்கள் சேவகருடைப்புடன் தென் பட்டார்கள்.



"இப்பொழுது வண்டியிலேறி அரண்மனைக்குப்போ, என்றது தேவதை.

'இந்த அழுக்கடைந்த கந்தைத்துணியுடனும், மேலங்கியுடனுமா போவது' என்று அச்சத்துடன் ஸிண்டரல்லா கேட்டாள். தேவதை அதைக்கேட்டு சிரித்து அவளைத் தனதுமாயா ஜாலத்தடியால் தொட்டது. ஸிண்டர்ல்லா தேகத்தில்விலையுயர்ந்தவும், அலங்கார மானவுமான உடுப்பு தென்பட்டது. அவள் பாதங்களில் அழகான ஜோடும் இருந்ததைக்கண்டு களித்தாள்.

பத்திராதிபர்.

## FUN & LAUGHTER.

## RAJAH'S DIARY.

## ராஜா டைரி

(147-வது பக்கத் தொடர்ச்சி.)

சமர்தான உடன்படிக்கைப் படி ஒரு வில்லும் அம்பும் எனக்கு வாங்கிக்கொடுத்தார்கள். முன்னமேயேநிச்சயிக்கப்பட்டபடி என் தகப்பனாருடன் கூட கற்பபுரி என்னும் ஊருக்கு ஒரு கலியாணத்தின் பொருட்டு புதிதாய் வாங்கிக்கொடுத்த வில்லை யெடுத்துக்கொண்டு நானும் போனேன். அங்கே எனக்கு ஒரு சிநேகிதன் சேர்ந்தான். அவனும் நல்ல சுறுசுறுப்பான பையன். இருவரும் வில்வித்தை கற்றுக்கொள்வதற்காக அங்கே ஈஸ்வரன்



கோயில் மைதானத்திற்குப் போனோம். அங்கே ஒரு தாழ்ந்த மரத்தில் ஒரு பெரிய பத்திரிகைக்கடுதாசியை மாட்டிவிட்டு அதை குறியாக வைத்துக்கொண்டு வில்லடித்து பழகினோம். ஆனால் அங்கே மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் நான் அம்பெய்யும் சமயத்திலெல்லாம் பிசாசு பிடித்தாற்போல் வாலைத்தூக்கிக்கொண்டு, அவைகளுக்கு அதைவிட்டால்வேறு இடம் இல்லாதது போல், அந்த மரத்தையே சுற்றிச்சுற்றி தாவித்தாவி குதித்துக் கொண்டிருந்தன. கடைசியில் நான் குறிபார்த்து அம்பெய்யும் சமயத்தில் ஒரு பசு குதித்துக்கொண்டு எதிர்த்து வர என் அம்பு அதின் கண்ணில் பாய்ந்தது. அதுவும் கத்திக்கொண்டு கீழே சுருண்டு விழுந்தது. யாரோ ஒருவன் அதன் அருகில் ஓடினான். பழி என்மேல் வந்துவிடும் என்னும் பயத்தால் நானும் என் சிநேகிதனும் வில்லை அங்கேயே எறிந்து விட்டு வீட்டுக்கு ஓடி வந்து விட்டோம். ஆனால் அந்தமாட்டுக்காரன் அந்தவில்லை அடையாளமாய்எடுத்துக்கொண்டு என் தகப்பனாரிடம் வந்து சங்கதியைச்சொல்லி முறையிட்டுக்கொண்டான். என் தகப்பனாரும் அவனுக்கு அறுபதுரூபாய்கொடுத்து சமாதானப்படுத்தி அனுப்பினார். வில்லை பென்னிடம் கொடாமல் முறித்தெறிந்துவிட்டாரே!! இப்படித்தானே பணத்தின் அருமைதெரியாமல் பண்டத்தை வீண் செய்வது. நான் வில்வித்தையில் தேர்ச்சிஅடைந்து அர்ஜ்ஜுனன் போல் உலகப்பிரசித்தி பெறலாமென்றிருந்தேன். இந்தப் பாழும்பசு பழியாய் குறுக்கேவந்ததே! அது முட்டாள்தனமாய் நான் வில்பயிற்சி செய்து கொண்டிருக்கும் இடத்தில் வந்து நின்று கண்ணைப் போக்கிக்கொண்டால் அதுவும் என் குற்றமா?

நான் கலியாணம் காலம் முழுமையும் இங்கே கற்பபுரியில் வேடிக்கையாய் கழிக்கலா மென்றிருந்தேனே! அதற்கும் விகாதம் ஏற்பட்டுவிட்டது. கல்யாண காலத்தில் எல்லோரும் வேடிக்கை செய்வது சகஜம் தானே. நான் ஏதாவது செய்தால் மட்டில் ஏன் எல்லோரும் என்னை மாத்திரம் கெட்டபையன் என்று சொல்லவேண்டும்? கலியாண மாப்பிள்ளையோ சுமார் (45) நாற்பத்தைந்து வயதுள்ள சிறுவாலிபர். பெண்ணோ சுமார் வயது பதினொன்றுள்ள கிழவி. ஆகையால் கொஞ்சம் வேடிக்கை செய்யலாமென்று தோன்றிற்று. பெண்ணுக்குத் தாலிகட்டுவதற்குமுன் ஒருவருக்கும் தெரியாமல் மணையிலிருந்த மாப்பிள்ளையின் வஸ்திரத்தையும், தாரைவார்ப்பதற்காக தன்கணவன் சமீபத்தில் நின்று கொண்டிருந்த மாமியார் வஸ்திரத்தையும் சேர்த்து ஊசிநூல்கொண்டு தைத்துவிட்டேன். கலியாணச்சடங்குகள் முடிந்ததும் மாப்பிள்ளை முன்னே போக, பெண்ணுக்கு விவாஹ மான பெருமையால் கண் கூடத்தெரியாமல் போன, மாமியாரும், தன் வஸ்திரம் இழுக்கப்பட, தன் கணவர் தான் முன்னே போகிறா ரென்று நினைத்துக்கொண்டு, தானும் மாப்பிள்ளையுடன் பெரி

யோர்களை நமஸ்கரிக்கப்போனாள். கலியாணப் பெண் தன்னை கணவன் கைபிடித்து அழைத்துப் போகாமையால் திகைத்து நின்றாள். அங்கிருப்பவர் எல்லாரும் நகைத்தார்கள். நான் செய்த சமாசாரம் ஒருவருக்கும் தெரியாதென்றிருந்தேன்; ஆனால் அங்கே யிருந்த சில போக்கிரிப்பையன்கள், நான் ஊசி நூல் வைத்திருந்தமையால், நான் தான் செய்திருக்க வேண்டுமென்றார்கள். பொய் சொல்லக் கூடாதாகையால் நானே ஒப்புக்கொண்டேன். என் தகப்பனாருக்கு என்மேல் வருத்தம்போல் தோன்றிய போதிலும் அப்பொழுது வெளிக்காட்டிக் கொள்ளவில்லை யாகையால் என்னைக் கலியாண வைபவத்திலிருந்து ஊருக்கு அழைத்துப் போக மாட்டாரென்றிருந்தேன். ஆனால் நான் விளையாட்டுக்காக செய்த மற்றொரு காரியம் அந்த சந்தேகத்தை தீர்த்து விட்டது.

அதாவது என்னிடமிருந்த பேனாக்கத்தியை ஒரு பையனுக்குக் கொடுத்துவிட்டு அவனிடம் இருந்த ரப்பரால் (Rubber) செய்த பாம்பு ஒன்றை வாங்கிக் கொண்டேன். சாதாரணமாய் நம்கலியாண வீடுகளில் இரவில் சமையல் அறைகளில் வெளிச்சம் மட்டாயிருப்பது வழக்கமாகையால் என்னுடைய ரப்பர்பாம்பை சமையல் செய்து வைத்திருக்கும் பாத்திரங்களின் கீழ் ஓரமாய் ஒருவருக்கும் தெரியாமல் போட்டுவிட்டு வெளியே வந்துவிட்டேன். பிறகு எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் பரிசாரகர்களும் மற்றவர்களும் அவசரமாய் பரிமாரிக் கொண்டிருக்கையில் உள்ளே காரியமாய் போகிறாப்போல் போய் ஐயோ!! இதோ ஒரு பாம்பு! என்றேன். "பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்று என் பாட்டி சொல்லும் பழமொழி சரியாய் விட்டது. ஆள்கள் கையிலிருந்த தட்டுகளையும், பாத்திரங்களையும் கீழே தாறுமாறாய் போட்டுவிட்டு ஓடினார்கள். அவர்களின் அவசரத்தில் பெரியபாத்திரங்களிலிருந்த சாமான்களின் சிலவற்றையும் கொட்டிவிட்டார்கள். பாம்பென்ற சமாசாரம் வீடுபூரா க்ஷணப்பொழுதில் பரவவே, சாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களெல்லாரும் சாப்பிடுவதைவிட்டு எழுந்துவந்து விட்டார்கள். சில தைரியவான்கள் எல்லாரையும் தள்ளிக்கொண்டு "பாம்புக்கு ராஜா மூங்கில் தடி" என்று சொல்லிக்கொண்டு பெருத்த மூங்கில்தடிகளோடு முன்னுக்குவந்து வெகுஜாக்கிரதையாய் பாத்திரத்தை தள்ளிவிட்டு தடியை ஓங்கி பாம்பை அடித்தார்கள். ரப்பர்பாம்பாகையால் அது கிளம்பி விழுந்து, மறுபடியும் கிளம்பி கூட்டத்திற்குள் விழ எல்லாரும் பயந்தோடினார்கள்.

"எல்லாரும் வெளியே போங்கள் இதோ ஓரே அடி அடித்து அதைக் கொன்று விடுகிறேன்" என்றார் ஒருவீரர்.

"பாம்புக்கு ராஜா ராஜாதான்." என்று சொல்லிக் கொண்டு நான் விரைவாய் பாம்பை வாலால் பிடித்துக் கொண்டு வெளியே ஓடினேன்.



எல்லாரும் நான்மிகவும் தைரியசாலி யென்றார்கள். அதற்குள் எனக்கு அந்தப்பாம்பைக்கொடுத்த பையன் ஓடிவந்து அதுஅவன் எனக்குகொடுத்த ரப்பர் பாம்பென்று உண்மையைச் சொல்லிவிட்டான். உடனே என்னை மெச்சினவர் களெல்லாம் என்னை கெட்டபைய னென்று இகழ்ந்து பேச ஆரம்பித்தார்கள். அங்கே என்னை வைத்திருப்பது சரியல்ல வென்று என் தகப்பனார் என்னை ஊருக்கு அழைத்துவந்து விட்டார். ரப்பர் பாம்புக்கும் நிஜபாம்புக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாத முட்டாள் ஜனங்களால்நான் கலியாண வேடிக்கைபார்ப்பது கெட்டது. என்பதைக் கேட்டு தகப்பனாரும் இனி என்னைஎங்கும் அழைத்துப்போவதில்லை யென்றும், இனிமேல்நான் பள்ளிக்கூடத்திற்குப் போய்வாசிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார். இந்த கஷ்டத்திற்கு என்ன செய்கிறது!

என் பிரியமுள்ள டைரியே! சில தினங்களாக நடந்த சங்கதிகளை உன்னிடம் சொல்ல முடியவில்லை. "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழிப்படி எனக்கு கஷ்டத்தின் மேல் கஷ்டம் வர என் சங்கதிகளை உன்னிடம் சொல்லி உன்னை வருத்தப்படுத்த எனக்கு இஷ்டமில்லாமையால் இது வரை உன்னைப் பாராமலிருந்தேன். ஆனால் உன்னிடம் என் சுகதுக்கங்களை சொல்லிக் கொள்ளாவிடில் என் மனம் சாந்தமடைகிறதில்லையாகையால் இன்றுஉன்னிடம் சொல்லத்துணிந்தேன். அன்று கற்பபுரியிலிருந்து திரும்பிவந்த மறுதினம் மத்தியானம் என் தமக்கை கமலாவின் சிநேகிதர் கருணாகரர் என்ற டாக்டர் ஒருவருடைய ஆபீசுக்குப்போனேன். ராமன் என்ற என் தோழன் ஒருவனும் அங்கே வருவதுண்டு. அவனுடன் கூட நான் அங்கே விளையாடுவது வழக்கம். அன்றையதினம் கருணாகரர் அவசரமாய் யாரோ வலிப்பால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த ஒருவரைப் போய்ப்பார்க்க வேண்டியிருந்ததால் என்னை அவர் திரும்பிவரும் வரை ஆபீசைக்கவனித்துக் கொள்ளும்படி சொல்லி விட்டுப்போனார். நானும் சரியென்று அவருடைய நாற்காலியில் நான்தான் ஒரு பெரிய டாக்டர் என்ற எண்ணத்தோடு கௌரவமாய் உட்கார்ந்து கொண்டு "நாமும் டாக்டர் பரிட்சை பாஸ் செய்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம்." என்று யோசித்துக்கொண்டே கொட்டாவி விட்டுக் கொண்டும் தூங்கி விழுந்து கொண்டுமிருந்தேன். அப்பொழுது அந்த தெருக்கோடியில் குடியிருக்கும், லோபி யென்று பெயரெடுத்திருந்த தர்மாம்பாள் என்றவள் பேதிக்கு மருந்து வேண்டுமென்று வந்தாள்.

டாக்டர் வெளியே போயிருக்கிறார் என்றேன். "டாக்டர் இருந்தால் தான் என்ன, நான் மருந்துக்காக ஒரு பைசா கூட கொடுப்பது வழக்கமில்லை" யென்றுசொல்லிக்கொண்டு மருந்து சீசாக்கள் வைத்திருக்கும் அலமாரியிடம்போய் ஒரு நீலபவுடர் உள்ள சீசாவிலிருந்தும்,ஒரு வெள்ளை பவு

டர் உள்ள சீசாவிலிருந்தும், கொஞ்சம் கொஞ்சம் எடுத்து தனித்தனியாய் காகிதத்தில் கட்டிவைத்துக் கொண்டாள். நான்மரியாதையாய் அந்தமருந்தை சிரப் (Syrup)விட்டுகரைத்துக் கொடுக்கட்டுமா வென்றேன். அவளும் சரியென்று கொடுத்தாள். அந்தஇரண்டுபவுடர் களையும் தனித்தனியே இரண்டு கண்ணாடி டம்பளர்களில் கரைத்து நீலபவுடரை முதலில் சாப்பிடும்படி கொடுத்து பிறகு வெள்ளை பவுடரைக் கொடுத்தேன்.

அவளும் நான் கொடுத்தபடி சாப்பிட்டுவிட்டாள். க்ஷணப்பொழுதுக்கெல்லாம்தர்மாம் பாளுக்கு வலிப்புவந்துவிட்டது. திடீரென்று கீழேவிழுந்து விட்டாள். முகமெல்லாம் கருத்துஇங்கி (Ink) சாப்பிட்டவள் போலாய் விட்டது. எங்கே இறந்து போய்விடுவாளோ வென்றபயம் எனக்குவந்து விட்டது. தெருவில் டாக்டரை தேடிக்கொண்டு ஓடினேன். அவரை எங்கேயும் காணோம். தெருவிலிருந்த சிலஜனங்களிடம் தர்மாம்பாள் எங்கள் ஆபீசில் சாகக்கிடக்கிறாள் என்று சொன்னேன். அவர்கள் ஓடி வந்து அங்கேகளைத்துப்போய் விழுந்திருந்த அவளை எடுத்து ஒரு சோபாவின்மேல் படுக்கவைத்து, சோடாகொடுத்து, விசிறிகொண்டு விசிறினார்கள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் களைப்புத்தீர்ந்து எழுந்து, அவர்கள் அவளை களைப்புக்குக் காரணமென்ன வென்று கேட்க, பவுடர் இரண்டையும் சேர்த்து கலக்கி சாப்பிடாமையால் அவைகள் இரண்டும் வயற்றுக்குள் போய் கலங்கிபொங்கினதால் தான் மயக்கமுற்றதாகச் சொன்னாள். போகும்பொழுது என்னைப்பார்த்து கோபமாய் பல்லை நெரித்து தலையை ஆட்டிவிட்டுப் போனாள். அவள் டாக்டரை மோசம் செய்ய நினைத்ததற்கு பலன் அல்லவோ அது! அவள் முட்டாள்த்தனமாய் என்னை பவுடர் இரண்டையும் சேர்த்து கலக்கி கொடுக்கும்படி கேட்காமல் அப்படியே தனித்தனியாய் சாப்பிட்டு இக்கெதி யடைந்தால் அதுவும் என்குற்றமா?

எல்லாரும் வெளியேபோன பிறகு அங்கே உலாத்திக் கொண்டிருந்தேன். ஒருபீரோவில் வெல்வெட் முடிபோட்ட பெட்டிஒன்று வைத்திருந்தது. அதில்ஏதாவது நகைகளிருக்க லாமென்று திறந்து பார்த்தேன். ஆனால் பலவிதமான கூர்மையான கத்திகள்தான் அதில்காணப்பட்டன.

(இன்னும் வரும்)

பி. வி. சேஷாத்ரி சர்மா.

---

## வாந்திபேதியை தடுப்பதற்கும், சொஸ்தம் செய்வதற்கும் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

1. மிதமாயும், காலாகாலத்திலும், வழக்கம்போல் ஆகாரத்தை புசிக்கலாம். நன்றாய் பழுக்காத அல்லது அழுகிப்போன பழங்களை அல்லது காய்கறிகள் முதலியவைகளை உண்ணக்கூடாது. நன்றாய் பாகம்



செய்யப்பட்ட காய்கறிகள், கனிந்த பழங்கள் இவைகளை யுண்ணலாம். கெட்டுப்போன மாமிசம், மீன், ஆறிப்போன அன்னம் இவைகளை உண்ணவேகூடாது. குழந்தைகளுக்கு புளித்துக் கெட்டுப்போகாத நல்லபாலை வாங்கிக் கொடுக்கவேண்டும். பால்காரன் பாலில் சேர்க்கும் தண்ணீர் மிகவும் அசுத்தமானது. ஆதலால் பாலை எப்பொழுதும் காய்ச்சியே உபயோகப் படுத்தவேண்டியது.

2. கக்கூஸ், சாக்கடை, குப்பைத்தொட்டி முதலியவைகளிலிருந்து உண்டாகும் துர்நாற்றம் தேகத்துக்குமிகவும் கெடுதியானது. மேற்சொன்ன இடங்களை (Phenyle) முதலிய மருந்துகளை தண்ணீரில்கரைத்து தினம் 2 அல்லது 3 தடவை தெளித்து சுத்தமாய் வைக்கவேண்டும். காய்ந்த குப்பைகளை வீட்டில் வைக்காமல் குப்பைத் தொட்டியில் கொட்டவாவது தீ வைத்து கொளுத்தவாவது வேண்டும். நீர் சம்பந்தமான குப்பைகளை சாக்கடையில்கொட்டி நன்றாய்தண்ணீர்விட்டு கழுவவேண்டும்.

3. வாந்திபேதியுள்ள காலங்களில் தண்ணீரை அப்படியே உபயோகிப்பது மிகவும் கெடுதியானதால், நன்றாய் வடிகட்டி கொதிக்கவைத்து உபயோகப் படுத்தவேண்டும்.

4. இப்படி வாந்திபேதியுள்ள காலங்களில் ஒவ்வொருவரும்டாக்டர்களால் கொடுக்கப் பட்டாலொழிய வேறு எவ்விதத்திலும் சுகபேதிக்கு மருந்து சாப்பிடவே கூடாது.

5. குளிரை தடுப்பதற்கும், வியர்வையை தடுக்காமலிருப்பதற்கும், வயிற்றில் இழுப்பை தடுப்பதற்கும் கம்பிளிச் சட்டை, கம்பிளி பெல்ட்டு முதலியவைகளை உபயோகிக்கவேண்டும்.

6 நீர் வசிக்கும் வீடு, படுக்கும் அறை முதலிய இடங்களில் நல்ல காற்று பரவும்படியாய், ஜன்னல்களையும், கதவுகளையும் நன்றாய் திறந்து வைக்கவேண்டும்.

7. மதுபானம் செய்தால் வாந்திபேதியை உண்டுபண்ணுமாதலால், உண்பதிலும் மதுபானம் செய்வதிலும் மிதமாயிருத்தல் நல்லது.

டாக்டர். யூ. ராமராவ்

---

## ஹாஸ்யத்துணுக்குகள்.

### TIT—BITS

ஒரு கனவான், தனக்குத் தெரிந்த ஒருவர் அரெஸ்டு செய்யப்பட்டதால், 3000 ரூபாய்க்கு அவரை ஜாமீனில் விடும்படி கோர்ட்டாரைக் கேட்டுக்கொண்டார். அச்சமயம் பிராசிகியூடிங் போலீஸ் இனிஸ்பெக்டர் மிஸ்டர் லெண்டர் கோர்ட்டாருக்குத் தன் சாதுர்யத்தைக் காட்டுமாறு; அக் கனவானை நோக்கி "ரூ. 3000 மதிப்புள்ளவர்தான் நீர் என்பதற்கு என்ன

நிச்சயம்?" என, அவர் உடனே தன் கணக்கை எடுத்து தன் சொத்து விபரத்தைச்சொல்ல, மொத்தம் ரூ. 2960 ஆயிற்று. உடனே மிஸ்டர் லெண்டர் "ஆம்! மற்ற ரூ. 60-க்கு என்ன?" கனவான்: ஓ! அதுக்கென்ன ரூ. 60-க்கு மிஸ்டர் லெண்டர் என்பவரிடமிருந்து ஒரு பிராமிசரி நோட் வைத்திருக்கிறேன்" என்றார்.

இதைக்கேட்ட ஜட்ஜ் எல்லாரும் சிரிக்கவே, மிஸ்டர் லெண்டர் வெட்கி, ஜாமீன் ஒப்புக்கொள்வதைப்பற்றி வாய்திறவாமலிருந்துவிட்டார்.

* * * * * *

ஒரு பெரிய மீட்டிங் சமயத்தில், ஒரு ஐரோப்பிய மாது பிடிவாதமாக பெஞ்சுமேலேயே நின்றுகொண்டு பின்னிருப்பவர்களுக்கு மறைத்துக்கொண்டிருந்தாள். பின்னிருந்தவர்கள் என்னசொல்லியும் கேளாமல் நின்றுகொண்டிருக்கவே, ஒருபெரியவர் எழுந்து "இந்தஸ்திரீ தன் கால் மேஜோடுகளிலிருக்கும் இரு பெரிய ஓட்டைகளைப் பிறருக்கு இவ்விதமாகவா காண்பிக்கவேண்டும்" என்று சொல்ல, அவள் வெட்கி உட்கார்ந்துவிட்டாள். சமீபத்திலிருந்த ஒருவர் இப்பெரியவரை நோக்கி "ஐயா! என் பொய் சொல்கிறீர்?" என, அவர் "ஐயா! இரண்டு ஓட்டைகளில்லாவிடின், கால்களை எவ்வாறு உள்ளே விடமுடியும்"

* * * * * *

வக்கீல்:—கழுதைக்கும் கைதிக்கும் வித்தியாசம் என்ன?

கைதி:—(சற்று விழித்துவிட்டு) எனக்குத் தெரியவில்லை. என்ன?

வக்கீல்:—என்னவா? ஒரு பேதமுமில்லை.

* * * * * *

இரண்டு கிராமவாசிகள், பீப்பாய்களிலிருந்து ஜலத்தை மொண்டு மொண்டு ஒரு கிணற்றை ரொப்பிக்கொண்டிருந்தார்கள். ஒரு பட்டணவாசி, அவ்வழியே போகையில் இச்செய்கையைப்பார்த்து ஆச்சரியப்பட்டு "நாங்கள், கிணற்றிலிருந்து பீப்பாய்களை ரொப்புவதே யொழிய, பீப்பாயிலிருந்துகிணற்றை ரொப்புவதையறியோம்" என, அவர்களிலொருவன், நீர் பட்டணவாசியோ? வந்தவர்: ஆம்.

அவன்:—அதான், எனக்குத்தெரியுமே. தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று அவாள் எண்ணம்.

* * * * * *

ஒரு பிராமணனுக்கும் பைராகிக்கும் சண்டைவர பைராகி காரே, பூரே, என்றுவைய, பிராமணனும், மட்டி, கழுதை, என்று எவ்வளவு வைதும் பைராகி ஓபாததைக்கண்டு மேஜை, நாற்காலி, கல் சட்டி, விளக்கு மோர்க்குழம்பு, என்று வாயில் வந்ததை யெல்லாம் சொல்ல, பைராகி இதே தடா இவர் பாஷையில் ரொம்ப வசவு வார்த்தைகளிருக்கே என்று சொல்லிக்கொண்டுபோய் விட்டான்.

வி. என். ராஜ்

---

## மாதிரி பாடம்—இரண்டாம் வகுப்பு.

ஒரு கிராமத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு ஒரு பெரிய பழத்தோட்டம் இருந்தது, அதில் பழுக்கிற பழங்களை அடுத்தப்பட்டணத்திற்கு கொண்டு போய் விற்று வருவது வழக்கம். ஒருநாள் அதிகாலையில் கூடை நிறைய பழங்களை யெடுத்துக் கொண்டு போகும் போது அக்கூடையிலிருந்து இரண்டு பழங்கள் கீழே விழுந்தன. இருட்டாயிருந்தாலும், கிழவனானதலால் இவனுக்கு காதுசற்று கேளாததாலும் கிழவன் பழங்கள் விழுந்ததைக் கவனிக்கவில்லை. இவன் போய்க்கொண்டே யிருந்தான். இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஒரு பையன் அப்பழங்களைப் பொறுக்கி



பழக்காரனைக்கூவிஅழைத்து அவனிடத்தில்கொடுத்துவிட்டான். பழக்காரன் அப்பையனுடைய யோக்கியதைக்குமெச்சி அப்பழங்களை அவனுக்கே கொடுத்து விட்டான்.

| பாடம் | பாடத்தை நடத்தும் மாதிரி | உதாரணங்கள். |
| --- | --- | --- |
| ஷை கதை | As in the 1st Standard | (1) தோட்டத்தில பழங்கள் பொறுக்குவது போலும்<br>2. கிழவன் பழங்களை தலையில்கொண்டு போவது போலும்.<br>3. பழங்கள் கீழே தவறி விழுந்தாற் போலும்<br>4. பையன் அவைகளைப் பொறுக்கி கிழவனைக் கூவி அழைப்பது போலும்<br>5. கிழவன் பையனுக்குப் பழங்கள் இனமாய்த் தருவது போலவும் கரும்பலகையில் Quick action drawing களால் உதாகரித்து கதையைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்க.<br>**(2) Correlated Mannual occupation.**<br>1. சித்திரம். மா, மாதுளை, கிச்சிலி, கொய்யா, திராக்ஷை முதலிய பழங்கள்.<br>2. வர்ண சாக்வேலை. ஷை பழங்களை எழுதிதகுந்த வர்ணங்கள் கொடுக்க.<br>3. களிமண் வேலை. ஷை பழங்கள்.<br>4. ஓலை வேலை, தட்டு.<br>5. காகிதம் மடித்தல், தட்டு,<br>(3) கதை நடித்தல். ஷை கதையைப் பாட்டுகேளே யில்லாமல் சம்பாஷணையோடு நடித்தல்.<br>4) இயற்கை சம்பந்தமான சம்பாஷணை.<br>விடியற்காலம், பகல், மாலை, இரவு இவற்றின் நேரம்.<br>(Stages of Man) பாலியம், யௌவனம் கௌமாரம், வர்த்திக்யம் young age middle age old age<br>பஞ்சேந்திரியங்கள் விருத்தி யடைவது அவைகளின் பலம் குறைவது. வார்த்திகத்தினால் கண்பார்வை மங்குவது, காது மந்திக்கிறது,<br>(5) சமாசாரப் பாடம் Information lesson.<br>1. வர்த்தகம்.<br>2. பண்டமாற்றல். |

என். சுப்ரமணிய ஐயர்.

## சமாச்சாரக் குறிப்புகள்

ஆச்சரியமான தண்டனைகள்:—பென்னிங்டனென்னும் நகரில் ஒருவன் குடித்து மயங்கியிருந்ததுபற்றி அவனுக்கு நியாயாதிபதி 7 நாள் படுக்கையினின்று மெழுந்திருத்தல் கூடாதென்று தண்டனை விதித்தனர். புருக்லினில் ஒருவன் தனது மனைவியையும் பிள்ளையையும் நிர்க்கதியாக விட்டமைபற்றி, அவனுக்கு நியாயாதிபதி நீ ஒருவார பரியந்தம் ஒருமுறை உன் மனைவியையும் பிள்ளையையும் கோணித்தீவிற் கிட்டுக்கொண்டு செல்லல்வேண்டும்; தினந்தோறுமவளுக்கு ஒருமுறையாவது முத்தங் கொடுக்கவேண்டும்; வாரத்திற்கு ஐந்து டாலர் கொடுக்கவேண்டும்; கூடுமானவரை புஷபங்கள் கொடுக்கவேண்டும்; உன் வீட்டு வியவகாரத்தில் உன் மாமியார் வருவது கூடாது. இவ்வாறு நான்கு வாரம் நடக்கவேண்டும். பிறகுநீங்களிருவரும் என்னிடத்திற்குவரவேண்டும். இவ்விதிக்கிணங்கி நடக்காவிடின், நியாய ஸ்தலத்தை அவதூறு செய்தாயென்று நீ தண்டிக்கப் படுவாயென்று கூறினர்.

*　　*　　*　　*　　*　　*

அஜீரணத்துக்கு ஒரு சிகிச்சை:—இரைப்பையில் ஆகாரம் ஜீரணமாகாமல் தங்கிவிடுமானால், அதனால் நமக்குண்டாகும் பாதைகளதிகம். ப்ரஞ்ச் வைத்ய ரொருவர், இப்படி அஜீரணத்தா லவஸ்தைப்படுவர்களை குழந்தைகள் போல் கைகளை ஊன்றி தவிழ்ந்தோடச்சொல்லி, அவர்களின் இரைப்பைகளை எக்ஸ்ரே (Xray) போட்டோபடம் பிடித்துப் பார்த்ததில், ஆகாரம் சடுதியில் ஜீரணமாவதை அறிந்தாராம். இந்த முறையை அனுபவத்தில் பார்த்து உண்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

*　　*　　*　　*　　*　　*

ஒரு மரவிசேடம்:—காலிபோர்னியாவில் பதினெட்டடிக் குறுக்களவுள்ள ஒரு மரம் வெட்டப்பட்டதாம். அம்மரம் குறுக்களவிற் கேற்றவாறாக அதிக உயரமாயு மிருந்ததாம்.

*　　*　　*　　*　　*　　*

மைசூரில் கைம்பெண்களின் கல்வி:—தேவராஜ்-பகதூர் தர்ம கல்வி பண்ட் ட்ரஸ்டிகளின் ரிபோர்ட்டில் அடியிற்கண்டபடி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்காலர்ஷிப்புகளைப் பெறுகிறவர்களின். தொகை 43 முதல் 67. அவர்களின் வயது 13 முதல் 37 வரையிலும் உள்ளன. ஸ்காலர்ஷிப் பெறுகிறவர்களுள் நால்வர் கணக்கன் மார்களிடமிருந்து பிரிந்தவர்கள். மற்றவர்கள் அனைவரும் கைம்பெண்களாவர்ர்கள். ஒருத்தி ஜெயின வகுப்பைச் சேர்ந்தவள். மற்றவர்கள் அனைவரும் பிராமண வகுப்பைச் சேர்ந்த திரிமதஸ்தர்கள் ஆவார்கள். ஒருத்தி சென்னை ராயபுரம் மெடிகல் ஸ்கூலில் அப்பாத்தகிரி பரீட்சைக்குப் படித்து வருகிறாள், மொத்த வரும்படி 6372-ரூபாய்; மொத்தச்செலவு 5815-ரூபாய்-30 வருஷங்களுக்கு முந்தி இது ஏற்பட்டபொழுது ட்ரஸ்டிகள் பெண்களைத் தேடிச் சேர்த்து இவர்களுக்கு ஸ்காலர்ஷிப்புகளும் கொடுக்க வேண்டியிருந்தது. 1913-ம் வருஷத்தில் வயது சென்ற கைம்பெண் ஸ்திரீகள் தேசத்தின் பற்பல பாகங்களிலிருந்து வந்து இதில் சேர்ந்து வாசித்து வருகிறார்கள்.

MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

**Vol XV. | Madras: November 1913 | No. 11.**

புத்தகம் கரு. | சென்னை: நவம்பர்மீ 1913. | இலக்கம், 11

## Welcome to H. E. Lord and Lady Hardinge.

## நமது வைஸ்ராய் அவர்களுக்கு நல்வரவு.

நமது வைஸ்ராய் அவர்களும் லேடி ஹார்டிஞ்ஜு அவர்களும் தங்களது பரிவாரங்களுடன் சென்னைக்கு இம்மாசம் 24உ பகல் பனிரெண்டரை மணிக்கு வந்து சேர்வார்கள். சென்னையிலுள்ள இந்திய மாதர்களுக்காக நாம் இவர்களுக்கு நல்வரவு கூறுகிறோம். அவர்கள் இங்கு வருகிறார்கள் என்பதைக் கேட்க யாவருக்கும் அதிக சந்தோஷமாயிருக்கும்.

வைஸ்ராய் 5-வருஷங்களுக்கு ஒரு தடவை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இடத்தையும் போய்பார்த்து வருவது வழக்கம். இவ்வழக்கத்தை யனுசரித்தே இப்பொழுது நமது வைஸ்ராய் லார்ட்ஹார்டிஞ்ஜும் லேடிஹார்டிஞ்ஜும் மைசூர் முதலிய விடங்களைச் சுற்றிப் பார்த்து வருகிறார்கள்.

இவர்களுக்கு இந்திய ஜனங்களின் மீதுமிக்க அநுதாபமுண்டு. வங்காளிகளுக்கு இருந்த குறைகளைத் தீர்த்து விட்டார். கான்பூர் மசூதி விஷயமாக மகமதியர்களுக்கு திருப்தி யுண்டாகும் வண்ணம் செய்து முடித்தார்கள். கல்வி அபிவிருத்தியின் பொருட்டுத் திரண்ட திரவியம் பாடசாலைகளுக்கு நன் கொடையாக கொடுத்து வருகிறார்கள். சென்ற டிசம்பர்மீ 23உ ராஜாப்ரதி நிதி தமக்கு ஒரு

[நமது வைஸ்ராய், லேடி ஹார்டிஞ்ஜு, இவர்களுடைய உருவப்படம் இப்பத்rிகையுடன் அனுப்பப்பட்டிருக்கிறது. ப—ர்.]

கிராதகனாலோ, கிராதகர்களாலோ வெடிகுண்டால் எறியப்பட்டு காயங்கள் பட்டு வேதனையோடு படுத்திருக்கும்போது கூட "என் உயிரை வாங்கச் செய்யப்பட்ட முயற்சியால்எனக்கு இந்தியாவினிடத்தும் இந்தியர்களிடத்து முள்ள நேசப் பான்மை மாறிவிடாது. அது என்னுடைய ராஜீயமுறைகளிலும் ஆட்சியின் பான்மையிலும் மாறுதலைச் செய்துவிடவும்மாட்டாது. இந்தியாமுழுவதும் திகிலும், வெட்கமும் அடைந்து மனம் குன்றிப்போகுமேயென்று நான் அனுதாபப்படுகிறேன்" என்றார்கள்.

இப்படிப்பட்ட உத்தமரை ராஜ ப்ரதி நிதியாய் நாம் பெற்றது நமது பெரும்பாக்கியமல்லவா? அதிகசந்தோஷம் இந்தியர்கள் அடைவதற்கும் இது ஒரு காரணம்.

வைஸ்ராயும் லேடி ஹார்டிஞ்சும் சென்னையில் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்கள். அதாவது 24உ, 25உ; 26உ; அக்காலத்தில் சென்னை முழுவதும் கொடிகளாலும், அழகு வாய்ந்த பந்தல்களாலும், மகரதோரணங்களாலும் பற்பல வர்ணமுள்ள எலக்ட்ரிக் விளக்குகளாலும் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

ராஜப்ரதி நிதியும் லேடி ஹார்டிஞ்ஜூம் நமது கவர்னர்மாளிகையில் தங்கியிருப்பார்கள். ஏற்கனவே அநேக மஹாராஜாக்களும் ராஜாக்களும் வந்திருக்கிறார்கள். இவர்கள் ராஜ ப்ரதி நிதி அவர்களிருப்பிடம் சென்று மரியாதை செய்வார்கள். வைஸ்ராயும் அவர்களைத்தனித்தனியே திரும்பிப் போய்ப்பார்ப்பார்கள். இருமுறையிலும் மரியாதைக்காக அதிர்வெடி போடப்படும்.

ராஜ ப்ரதி நிதி அவர்களும் லேடி ஹார்டிஞ்ஜூம் சில முக்கியமான கட்டடங்களைப் போய்ப்பார்ப்பார்கள். முன் லார்ட்மின்டோவால் அஸ்திவாரக்கல் போடப்பட்ட பீபில்ஸ் பார்க்கிலுள்ள கார்புரேஷன் கட்டடத்தை லார்ட் ஹார்டிஞ்ஜு திறப்பார்கள். சென்னை

REGISTRAR OF BOOKS ... 1913



சர்வ கலாசாலையைச் சேர்ந்த புஸ்தகசாலை கட்டடத்திற்கு University Library அஸ்திவாரக்கல்லை வைப்பார்கள். இந்தியகனவான்கள் அடங்கிய காஸ்மபோலிடன்க்ளப்பில் ஒரு தோட்டக்கச்சேரி நடக்கும். லேடி ஹார்டிஞ்ஜு அவர்கள் திருவல்லிக்கேணியிலுள்ள விக்டோரியா காஸ்ட் அன்ட் கோஷா ஆஸ்பத்ரியைப் போய்பார்ப்பார்கள். இந்திய மாதர்கள் இவர்களுக்கு நல்வரவுபத்திரம் வாசித்து நல்வரவு கூறுவார்கள்.

நமது நண்பரும், சிறந்த மாதாந்தரப் பத்திரிகையாகிய விவேக சிந்தாமணியின் பத்திராதிபருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஸி.வி. சுவாமிநாதய்யரின் முயற்சியால் பாடசாலைப்பிள்ளைகள் கையில் அழகானகொடிகளை ஏந்திக்கொண்டு தங்கள் பாடசாலைகளில் வைஸ்ராய் அவர்களைக் குறித்து வாழ்த்து பாடல்களைப் பாடுவார்கள்.

இவ்வைபவங்களையெல்லாம் பார்க்கப் பார்க்க நமக்கு மகிழ்ச்சியையுண்டாக்கும். இவர்கள் சென்னையில் தங்கியிருக்கும் வரையில் நாம் மகோற்சவமாகக் கொண்டாடுவோம்.

கவர்ன்மெண்ட் ஹவுஸில் லெவியும் வெகுசிறப்பாக நடக்கும். அச்சமயம் இந்திய கனவான்களும், ஐரோப்பிய கனவான்களும் விஜயஞ்செய்திருப்பார்கள். நமது வைஸ்ராயவர்களுக்கு நாம்மற்ற இராஜதானிகளிலுள்ளவர்களைவிட இராஜ விசுவாசத்திலும், பக்தியிலும், கவர்ன்மெண்ட் உடன் ஒத்து உழைப்பதிலும் குறைந்தவர்களல்லவென்பது தெரியும்.

கடைசியாக எப்போதும் இந்தியர்களது நன்மையையே நாடி வேண்டிய உதவியைப் புரியும் நமதுகாருண்ய வைஸ்ராய்க்கும் அவர் மனைவி லேடி ஹார்டிஞ்ஜுக்கும் நல்வரவு கூறி இவர்கள் சுகஜீவிகளாயிருக்கும்படி ஈஸ்வரனை பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

## வாந்திபேதியை தடுப்பதற்கும், சொஸ்தம் செய்வதற்கும் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

8 வாந்திபேதியைப்பற்றி பயப்படாமலும், அதையே மனதில் நினைத்துக்கொள்ளாமலுமிருக்கவேண்டும். ஏனென்றால் பயம், மனோவியாகூலம் முதலியவைகள் தேகத்தை பலஹீனப் படுத்தி வாந்திபேதி வருவதற்கு ஹேதுவாகின்றது.

9. வாந்திபேதிக்கு முன் காணும் அஜீர்ணம் எளிதில் சொஸ்தம் செய்யக்கூடியது. இந்த அஜீரணத்துக்கும் சாதாரணமாய் உண்டாகும் அஜீரணத்துக்குமுள்ள வித்யாஸத்தை கண்டுபிடிப்பது அரிது. ஆதலால் அஜீரணம் கண்டவுடனே ஒரு டாக்டரிடத்தில் தெரிவித்து வைத்தியம் செய்துகொள்ள வேண்டியது மெத்த அவசியம். அவைகள் இரண்டும் வெவ்வேறு வியாதிகளாயிருந்தாலும் ஒன்று மற்றொன்றுக்கு காரணபூதமாயிருக்கிறது.

10. ஒவ்வொருவீட்டிலும் ஒருபுட்டி குலோரோடையின் (Chlorodyne) அல்லது காம்பரோடையின் (Camphorodyne) இருக்கவேண்டும். வாந்திபேதி கண்டவுடன் பெரியவர்களுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீரில் 40 முதல் 60 துளி வரையிலும், குழந்தைகளுக்கு ஒரு வருஷத்துக்கு ஒரு துளிவிழுக்காடு வயதுக்குத்தக்கபடி போட்டு உடனே உள்ளுக்கு கொடுக்கவேண்டும். முதலில் கொடுத்த மருந்தை வாந்திசெய்துவிட்டால், மறுபடியும் ஒரு தடவை கொடுப்பதுடன் வயிற்றுக்கும் கடுகு அரைத்து பத்துபோடவேண்டும். வயிறு, கால், கைகளில் குறக்குவலிவந்தாலும் மேன்மேலும் தண்ணீர்போல வாந்தியும் பேதியும் உண்டாகுமானால் அது தான் உண்மையான வாந்திபேதி. மிக்க கடுமையான நிலைக்கு வந்திருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். இப்போது மேற்சொன்ன மருந்துகளை கொடுக்கக்கூடாது. பனிக்கட்டியை நாக்கில் வைத்து உரிஞ்ச செய்தாவது அல்லது பால், சோடா, பனிக்கட்டி மூன்றையும் கலந்து குடிக்கச் செய்தாவது வாந்தியை நிறுத்தவேண்டும். கால், வயிறு இவைகளில் குறக்குவலி உண்டானால் சுக்குப்பொடி அல்லது கற்பூரதைலம் (Turpentine) தேய்த்தால் நின்றுவிடும். கால் கைகளில் சீதளம் தட்டாமலிருப்பதற்கு வெந்நீர் நிரப்பிய புட்டிகளைக்கொண்டு ஒத்தடம் கொடுக்கவேண்டும்.

11. வாந்திபேதி முதல்முதல் கண்டவுடனே நோயாளியை படுக்கையிலிருக்கச் செய்யவேண்டும்; கெட்டியான ஆகாரம் ஒன்றும் கொடுக்கக்கூடாது. இந்த விதிகளை அனுசரிப்பதினால் வைத்தியர் தேவையில்லை



என்று நினைக்கக்கூடாது. இவைகளெல்லாம் டாக்டர் வருவதற்குமுன் செய்யவேண்டியவைகள்.

12. உங்களுடைய பந்துக்களுக் காவது, சிநேகிதர்களுக் காவது அல்லது வேலைக்காரர்களுக்காவது வாந்திபேதி கண்டு அவர்களுக்கு வீட்டிலேயே சரியானபடி வைத்தியம் செய்ய சௌகரியப்படாவிட்டால் உடனே அவர்களை ஆசுபத்திரிக்கு அனுப்பி விடவேண்டும் அங்கே அவர்களுக்கு நல்ல மருந்து கொடுத்து காபாற்றுவார்கள். மேலும் அப்படி செய்வதினால் உங்களுடைய குடும்பத்தில் வேறு யாருக்காவது வாந்திபேதி வாராமல்தடுப்பதுடன் கண்டவர்கள் பிழைப்பதற்கு ஹேது உண்டாகின்றது. ஏழை ஜனங்கள் வாந்திபேதி கண்டவர்களுக்கு நல்ல வைத்தியம் செய்வது மிகவும் கஷ்டம்.

13. வாந்திபேதியின் விஷமானது வாந்தியிலும், பேதியிலும் இருப்பதால் அவைகளை உடனே அப்புறப் படுத்துவதுடன் அவைகளை நன்றாய் சுத்திகரிக்கவேண்டும். மேற்படி வாந்திபேதிகளை பினாயில் போடப்பட்ட ஒருபாத்திரத்தில் ஏந்தி நன்றாய் மூடி, பாத்திரத்துடன் ஜனம் போக்குவாத்தில்லாத ஒருவிடத்தில், தோட்டிவரும்வரையில் வைத் திருக்கவேண்டும்.

14. விஷசம்பந்தப்பட்ட துணிகள், பாத்திரங்கள் இவைகளைபினாயில் முதலிய மருந்து கலக்கப்பட்ட தண்ணீரைக் கொண்டு நன்றாய் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இதுஉங்கள் வார்டு சானிடரி இன்ஸ்பெக்டரால் செய்யப்படும். அவர்செய்ய வரும்போது தடுக்காமல், வாந்திபேதி கண்டவுடன் அவருக்கு தெரியப்படுத்தி, துணி, பாத்திரங்கள், படுக்கை முதலியவைகளை சுத்திகரிப்பதில் உங்களைவிட அவர்களுக்கு நன்றாய் தெரியுமாதலால் அவரைக்கொண்டு செய்யச் சொல்வதுடன் வாந்திபேதி பரவுதலையும் தடுக்க வேண்டும். துணிகளை தீயில் போட்டு கொளுத்துதல்மிகவும் உத்தமம். வாந்திபேதி கண்ட வீடுகள்எல்லாம் அது முடிந்தவுடன் கந்தகப்புகை போடுவதுடன் பினாயில் ஜலத்தை தெளித்து சுத்தம் செய்யவேண்டும்.

15. வாந்திபேதிக்காரர்களிடத்தில் நெருங்கி உதவிபுரிந்து கொண்டுவந்த ஒவ்வொருவரும் தாகத்துக்கு சாப்பிடும் முன்னும், போஜனம் செய்யுமுன்னும் முகம், கை, கால்களை நன்றாய் கழுவிக்கொண்டு சாப்பிடவேண்டும். வியாதிக்காரர் இருந்த அறையில் சாப்பிடவே கூடாது.

டாக்டர் யு. ராமராவ்.

# ஜெர்மன் சக்கரவர்த்தினி.

(சுதேசமித்திரன்)

சென்ற 25-வருஷங்களுக்குள் ஜெர்மனிதேசம் விசேஷ முன்னேற்றத்தை அடைந்திருப்பதற்கு ஜெர்மன் சக்கரவர்த்தினி முக்கிய காரணம் என்று அபிப்பிராயப்பட்டு, ஒரு ராஜ தந்திர நிபுணர் பின் வருமாறு அவரைப்பற்றி 'ந்யூயார்க்டைம்ஸ், என்ற பத்திரிகையில் எழுதுகிறார்:—ஜெர்மன் சக்கரவர்த்தினியின் செல்வாக்கு தேசமெங்கும் எட்டி யிருக்கிறது. வேறெந்த ஜெர்மன் சக்காவர்த்தினியும் இவ்வளவு செல்வாக்குடையவராயிருந்ததில்லை என்பது பிற்காலத்தில் விளங்கும். அவருடைய மற்றெல்லா குணங்களைக் காட்டிலும், பிறரை வசியப்படுத்தும் குணமே மிகப்பெரிது. ஆகையினால்தான் தம் சொல்லை சக்கரவர்த்தி கேட்டு நடக்கும்படி அவர் செய்கிறார்; ஆனால் தம் மனைவியின் இஷ்டத்தை அனுசரித்துத் தாம் நடக்கிறதாகக் கூட சக்காவத்திக்குத் தெரியாது. ராஜ சபையிலுள்ள பிரமுகர்களா யுள்ளவர்களும் தேசத்திலுள்ள ராஜதந்திர நிபுணர்களும் சக்கரவர்த்தியின் குலதெய்வமாக அவரை நினைப்பது மல்லாமல் சக்கரவர்த்திக்கு யோசனை சொல்லுகிறவர்களில் அவரே மிகப்புத்திசாலி என்றும் நினைக்கிறார்கள்.

இந்த சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்ததுமுதலாக மதப்பற்று தேசத்தி லுண்டாயிருப்பதற்கு சக்கரவர்த்தினியே காரணம். இந்த ஆளுகை காலத்துக்குமுன், ஆண்களெல்லாம் கோவிலுக்குப் போவதை அடியோடு விட்டு விட்டார்கள். பூஜை நடக்குங் காலத்தில் ஸ்திரீகளைத் தவிர வேறு யாரும் கோவிலி லிருப்பதில்லை. ஒரு குடும்பகாரியஸ்தனுக்கு என்ன மதிப்பு இருக்கிறதோ அவ்வளவு மதிப்புத்தான் பாதிரிகளிடமும் வைக்கப் பட்டு இருந்தது. ஆனால் அந்தக் காலம்போய் இப்பொழுது எல்லாம் புதிதாயிருக்கிறது. சக்கரவர்த்தினியின் இஷ்டப்படி சக்காவர்த்தி கோவிலுக்குப் போவதில் தவறாதவராய்விடவே, பணக்காரர்களும் ஏழைகளும் எல்லோரும் கோவிலுக்குப் போகத் தலைப்பட்டுவிட்டார்கள்.

எந்த நல்லகாரியத்துக்கு ஒத்தாசைசெய்யவும் சக்காவர்த்தினி தயார்; சொந்தத்தில் அவர் செய்யும் தர்மங்களுக்கு அளவில்லை. ஆனால் ஸ்திரீகளுக்கு உயர்தாக் கல்வி கொடுக்கவேண்டு மென்பதையும், புருஷர்களுக்கு அடங்கி இராமல் ஸ்திரீகளும் சுயேச்சை 'புடையவர்களாய் விடவேண்டு மென்பதையும் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியைப்போல் அவரும் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஸ்திரீ சுதந்திரவாதக் கொள்கைகளை அவர் மிகவும் வெறுக்கிறவர். ஸ்திரீகள் தங்களுடைய எல்லைக்குள் அடங்கியிருந்து தம்புருஷர்களுக்கும், குழந்தைகளுக்கும், குடும்பத்துக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதுதான் ஸ்திரீகளுடைய முக்கியமான வேலை என்பது அவருடைய அபிப்பிராயம். வீட்டு வேலையை கவனிக்க வேண்டிய அவசியமில்லாத ஸ்திரீகள் வியாதிப்பட்டவர்களுக்குப் பணிவிடைசெய்வதாலும், சிறுகுழந்தைகளை வளர்ப்பதாலும், தர்ம ஸ்தாபனங்களை அமைத்து அவைகளை நடத்துவதாலும் தங்களுடைய பொழுதை நல்வழியில் செலவிடக்கூடுமென்பது அவருடைய அபி'ப்பிராயம். புருஷர்களைத் தள்ளிவிட்டு அவர்களுடைய வேலைகளைச் செய்ய முயற்சி செய்வதைக் காட்டிலும், மேற்கண்ட வேலைகளைச் செய்வதால் ஸ்திரீகளுக்கு நல்ல செல்வாக்கு உண்டாகி அச்செல்வாக்கால் நன்மை பிறக்குமென்று அவர் சொல்லுகிற வழக்கம். அவர் சொல்லுகிறதற்கு அவரே பெரிய ருஜு; அவருடைய செல்வாக்கு நாடெங்கும் பரவி யிருக்கவில்லையா?



சக்கரவர்த்தினி பால்யமா யிருக்கையிலேயே அவருடைய தகப்பனார் இறந்துபோய்விட்டார். ஆகையால் தமது சிறிய தகப்பனாரும் விக்டோரியா மகாராணியின் மாப்பிள்ளையு மாகிய ப்ரின்ஸ்கிரிஸ்டியன் என்றவருடைய பார்வையின்கீழே அவர்வளர்ந்தார். ஆகையால் தம்முடைய சிறிய தகப்பனுடனும் அவருடைய மனைவியுடனும் பால்யப்பருவம் முழுமையும் அவர் இருந்ததால், விக்டோரியா மகாராணியை அடிக்கடி காணநேர்ந்தது. இந்தப் பழக்கத்தின் பலனாக, ஆங்கிலபாஷையை அவர் நன்றாய்ப்பேசுகிறார். ஒரு நாள் வேட்டைக்குப் போயிருந்த இடத்தில் சக்கரவர்த்திக்கும் அவருக்கும் பழக்க முண்டாயிற்று. வேட்டைக்குப்போன இடத்தில் திரும்பிவா வழி தடுமாறிப்போக, அங்கு கண்ட ஒரு பெண்ணை வழி கேட்டார். அந்தப் பெண் தான் இப்பொழுதுள்ள சக்காவத்தினி கண்ட வுடனேயே தமக்கு அப்பெண்ணிடத்தில் காதலுண்டாய் விட்டதாக சக்காவர்த்தி அடிக்கடி சொல்லி யிருக்கிறார். விவாகமாய்க் கொஞ்ச காலம் வரையில் ராஜாங்க வழக்கங்களை அனுசரித்து நடப்பது அவருக்கு மிக்க கஷ்டமாயிருந்தது.

தம் காலத்துக்கு முன் ஜெர்மனியின் முதல் மந்திரியா யிருந்து ஜெர்மனியை விசேஷ முன்னேற்றத்துக்குக் கொண்டுவந்த பிஸ்மார்க் என்றவர் தம்முடைய தகப்பனுக்குப் பெருந்தீங்கிழைத்தவ ராயினும், தம்முடைய கணவனை விசேஷமாக தூஷித்தவராயினும் அவற்றை எல்லாம் மனதில் நினையாது மன்னித்து, அவர் இறந்துபோனதாகக் கேள்விப்பட்டவுடன் வெகுதூரம் பிராயணம் செய்து கொண்டுபோய் துக்கம். விசாரிக்க சக்கரவர்த்தினி சென்றதைக் கொண்டு அவருடைய பெரிய புத்தி விளங்கும்.

ராஜ குடும்பங்களில் ஸ்திரீ புருஷர்கள் அன்னியோன்னியமாகப் பேசிக்கொள்ள அவகாசம் கிடைப்பதே அரிது. அதை அறிந்து தமக்கு விவாகமானது முதல் காலைச்சாப்பாட்டு காலத்தில் தம் குடும்பத்தைத்

தவிர அன்னியரை பந்தியில் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை என்று ஒரே வழக்கமாக வைத்துக்கொண்டுவிட்டார். அந்த சமயம் ஒன்றில்தான் ஸ்திரீ புருஷர்கள் அன்னி யோன்னியமாகப் பேசிக்கொள்ளுவார்கள். இந்த அன்னியோன்னியப்பேச்சே சென்ற 25-வருஷங்களில் அவருக்கு உண்டாயிருக்கும் செல்வாக்குக்குக் காரணம். அவருடைய குழந்தைகள் எல்லாம் அவரை தெய்வமாகத்தான் கொண்டாடுகிறார்கள்.

---

# ஸிண்டர்லா முதலிய மாயா விநோதக்கதைகள்.

## ஸிண்டர்லா 1.

(216-வது பக்கத் தொடர்ச்சி.)

'என் ப்ரியமுள்ள குழந்தாய்! வந்தனம், நான் போய்வருகிறேன்.'

"ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கவனித்துக்கேள். மணி 12 அடிப்பதற்கு முன்னமேயே நீ அரண்மனையிலிருந்து திரும்பி வரவேண்டும். அப்படிச் செய்யாவிடின் கோச் (Coach) பூசணிக்காயாக மாறிவிடும். மற்ற வஸ்துக்களும் முன்னிருந்த மாதிரி ஆய்விடும்" என்று சொல்லி அவளை முத்தமிட்டு விடைபெற்று தேவதை சென்றது.



அவ்விதமே ஸிண்டர்லா தேவதை சொன்னதைக் கேட்டு அரண்மனைக்குச் சிறப்புடன் சென்றாள். அரசகுமாரன் வண்டி வருவதை யறிந்து தானே நேரில் வந்து அவளை இட்டுக்கொண்டு அரண்மனைக்குள் போனான். அங்கு இவளுடன் யாவரும் சேர்ந்து கூத்தாடினார்கள். அரசகுமாரன் இவளுடன் சந்தோஷத்துடன் பலதடவை கூத்தாடினான். இவளைப் போல் அழகுள்ள ஒருவளையும் தான் இதுவரையிலும் பார்த்ததில்லையென்று நினைத்தான். ஸிண்டரல்லாவோ தான் இன்னது செய்கிற



தென்று தெரியாமல் அதிக சந்தோஷத்தில் மூழ்கியிருந்தாள். பதினொன்றே முக்கால் மணிக்கு இவள் எழுந்து அரசன் அரசியினிடத்தில் முகமலர்ச்சியுடன் விடைபெற்று தன்வீடு சென்றாள். அரசகுமாரன் வெளியில் இவளுடன்வந்து இவளுக்கு மரியாதைசெய்து இவளை அனுப்பினான்.

இவள் வீட்டுக்குப் போனதும் மணி பனிரண்டு அடித்தது. ஒவ்வொரு புதிய சாமானும் மறைந்துவிட்டது.

ஸிண்டரல்லா வழக்கம்போல் நெருப்பண்டை சமயல் அறையில் உட்கார்ந்திருந்தாள். இவளுடைய சகோதரிகள் அப்பொழுதுதான் வீட்டிற்கு வந்தார்கள். அவ்விருந்தில் அவர்கள் கண்ட அந்த சௌந்தர்யமுள்ள பெண்மணியைப்பற்றியும் அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த சிறந்த உடுப்பைப்பற்றியும் புகழ்ந்து பேசினார்கள். 'அந்தப் பெண்மணி எந்த வீட்டைச் சேர்ந்தவளென்று ஒருவருக்கும் தெரியாதென்றும்' அவர்கள் சொன்னார்கள்.

மறுநாள் இராத்திரி இரண்டாவது விருந்துக்கு ஸிண்டரல்லா தனது சகோதரிகளுக்கு உடுப்பைத் தரித்துக்கொண்டிருக்கும்பொழுது தனது தமக்கையைப்பார்த்து "இன்று இரவு என்னை இட்டுக்கொண்டு போகமாட்டாயா? உனது உடுப்புக்களில் ஒன்றை எனக்கு தயவுசெய்துகொடுப்பாயா" என்று கேட்டாள்.

தமக்கை 'நிச்சயமாகவே, நான் கொடுக்க முடியாதென்று நினைக்கிறேன். அரசகுமாரனுக்கு எதிரில் உன்னை இட்டுக்கொண்டுபோய் ஏன் அவமானமடையவேண்டும்? அந்த அழகுபொருந்திய பெண்மணிக்கு உன்னைப்போல ஈனமான சகோதரி எங்களுக்கு உண்டென்பது தெரியவேண்டுமோ?" என்றாள்.

இவர்கள் மேற்கூறியவண்ணம் பேசிக்கொண்டே உடுப்புகளைத் தரித்துக்கொண்டபின் அரசன் அரண்மனைக்குச் சென்றார்கள்.

ஸிண்டரல்லா தனது சகோதரிகள் அரண்மனைக்குப் புறப்பட்டுப் போனதைப் பார்த்தாள். பின்பு விசனத்துடன் சமையல் அறைக்குப் போனாள். தேவதை உடனே இவள்முன் தோன்றிற்று. முன்போல ஒரு பூசணிக்காய், ஆறு சுண்டெலிகள், எலிகள் முதலியவைகளைக் கொண்டுவரும்படி ஸிண்டரல்லாவுக்கு தேவதை சொல்லிற்று.

தேவதை இவைகளைத் தனது தண்டத்தால் தொட்டு ஸிண்டரல்லா முன்னைவிட அதிக அழகாக தென்படும்படி செய்தது. ஸிண்டரல்லா தேவதைக்கு நமஸ்காரம்செய்தபொழுது "இன்றைய தினமும் கடிகாரம் பனிரண்டு அடிப்பதற்கு முன்னதாக அந்த இடத்தைவிட்டு வந்துவிடு. இதைக்கவனி; மறக்காதே" என்றது.

ஸிண்டரல்லா சகலவைபவத்துடன் அரண்மனைசேர்ந்து முன்னைவிட அதிக சந்தோஷத்துடன் அங்கிருந்தவர்களுடன் கூடிக் குலாவிக்கொண்டிருந்தாள். அரசன் வெகுநேரம் இவளுடன் சேர்ந்து குதித்தான். இவ்விதம் இவர்கள் குதித்தமையால் ஸிண்டரல்லா இளைப்புற்றாள். உடனே ராஜகுமாரன் இவளை போஜனம் உண்ணும்படி சொன்னான். இப்பெண்மணியும் மனமகிழ்ந்து போஜனம் புசித்தவுடன் தேவதை சொன்னது இவள் ஞாபகத்திற்கு வந்தது. கடிகாரத்தைப் பார்த்தாள். மணியோ பனிரண்டு அடிக்க ஒரு நிமிஷமிருந்தது!

ஸிண்டரல்லா என்ன செய்வாள்? பாவம்! உடனே அவசரமாக அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு வெளிவர ஓடிவந்தாள். எங்கு பார்த்தாலும் மணி பனிரண்டு அடிக்கும் சப்தம் கேட்டது.

இவள் அரண்மனை வாசற்படியண்டை வந்தபொழுது சரியாக மணி பனிரண்டு ஆய்விட்டது. உடனே முன்போல ஸிண்டரல்லா அழுக்குத் துணியுடன் அவலக்ஷணமாக தென்பட்டாள். வண்டியுமில்லை, சேவகர்களுமில்லை.



ஸிண்டரல்லா வேகமாக தன் வீட்டுக்கு ஓடிவந்தாள். வழியில் இவள்காலில் அணிந்திருந்த விலையுயர்ந்த ஜோடுகளில் ஒன்று நழுவி விழுந்துவிட்டது. ஆனால் அதைத் தேடி கண்டுபிடிக்க திரும்பிப்போக அவள் துணியவில்லை. வண்டியும் நல்ல உடுப்பும் இல்லையல்லவா? இரவும் குளிர் மிகுந்திருந்தது. தேவதையின் வார்த்தையின்படி தான் கீழ்ப்படிந்து நடப்பதாகவே அதிகமாகவிரும்பிக்கொண்டு தன்வீட்டைநோக்கி ஓடிவந்தாள். தனது சகோதரிகள் வீட்டிற்கு இன்னும் வரவில்லை.



உடனே தன்னிடத்திலிருந்த உணர்ந்த கந்தைத்துணிகளைத் தரித்துக் கொண்டாள். இவள் சகோதரிகளும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

அரசகுமாரனுக்கு இன்னது செய்கிறதென்று தெரியவில்லை. அவள் ஓடியபொழுது அந்த அருமையான ஸ்திரீயைப் பின்தொடர்ந்து வேகமாக ஓடினான். ஆனால் வழியில் ஒரு ஸ்திரீயையும் அவன் காணவில்லை. வாசற் படியண்டை இவன் வந்தவுடன் அங்கு மூலையைச் சுற்றி விரைவாய் ஓடும் ஒரு அவலக்ஷணமுள்ள சிறிய பெண்ணைக்கண்டான். இவளைப் பற்றி சிறிதும் கவனிக்கவில்லை. ஆனால் அந்த மூலையில் அப்பெண் என்ன செய்கிறாளென்று ஆச்சரியங்கொண்டான். கடைசியில் அரண்மனையை நோக்கித்திரும்பிப் போனான். போகையில் பூமியில் ஸிண்டரல்லா அணிந்திருந்த அழகான ஒரு ஜோடு கிடந்தது. அதைப்பார்த்ததும் மகிழ்ச்சியுடன் அதை எடுத்து தனது சட்டைப்பையில் போட்டுக்கொண்டான்.

மறு நாள் கட்டியக்காரன் அந்த சிறந்த பாதரக்ஷையின் சொந்தக்காரியைக்கண்டு பிடிக்க அரசகுமாரன் விரும்புகிறானென்று உரக்க சொல்லிக்கொண்டு நகரமுழுவதும் சுற்றிப்போனான். ஏனெனில் அப்பெண்மணியை அரசகுமாரன் மணம்புரியப் போகிறான். ஆகையால் விருந்துக்கு வந்திருந்த ஸ்திரீகள் தங்கள் காலில்போட்டு முயற்சி செய்யவும், அது அவர்களில் எவருக்காவது சரியா யிருக்கிறதாவென்று பார்க்கவும் விரும்புகிறார்" என்றான் கட்டியக்காரன்.



அந்த பட்டணத்தில் உள்ள ஸ்திரீகளெல்லாம் அந்த ஜோட்டை தங்கள் தங்கள் காலில் போட்டுப்பார்த்தார்கள். அது ஒருவருக்கும் சரிப்படவில்லை. கடைசியில் ஸிண்டராலாவின் தகப்பன் வீட்டுக்கு கட்டியக்காரன் வந்தான். அந்த இரண்டு சகோதரிகளும் தங்கள் கால்களில் அதைத்

திணிக்கமுயல தங்களால்ஆனமட்டும் செய்தார்கள்; ஏனெனில் அரசகுமாரனைமணம்புரிய அதிகமாக இச்சைப்படுவதாக அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அந்தஜோடு மாயா சக்தியுடையதா யிருந்தமையால் எப்பொழுதும் காலுக்கு அதிகச்சிறியதாகவே யிருந்தது.

இச்சமயத்தில் கட்டியக்காரன் திரும்பிப் போகும்பொழுது, ஸின்டர்ல்லா கதவின் வழியாக எட்டி எட்டிப் பார்ப்பதைக் கண்டான். "நான் அதை என் காலில் போட்டு முயற்சி செய்யட்டுமா" என்று அவள் கேட்டாள்.

'நீ கூடவா? என்ன புத்தியீனம்!' என்று கைக்கொட்டி அவ்விரு சகோதரிகளும் இடி இடி யென்று சிரித்தார்கள். மேலும் "அரசகுமாரன் அழுக்கடைந்த சிறிய சமையல்காரியை மணம் புரிய நினைப்பானோ!' வென்றும் பரிகாசமாகச் சொன்னார்கள்.

இவர்கள் இப்படிச் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்த கட்டியக்காரன் "அவளும் அதைப் போட்டு முயற்சி செய்யட்டும். அந்த ஜோட்டின் சொந்தக்காரியைக் கண்டுபிடிக்க என்னால் கூடிய ஒவ்வொன்றையும் நான் செய்யவேண்டும்" என்றான். ஸின்டர்ல்லா உடனே உட்கார்ந்து அந்த ஜோட்டை தன் காலில்போட முயன்றாள். அதுவும் அவள் காலுக்குச் சரியாயிருந்தது.



அவள் அப்பொழுது தன் பையிலிருந்து மற்றொரு ஜோட்டையும் எடுத்தாள். ஒரு நிமிஷத்தில் தேவதை இவர்களுக்கு முன்வந்து நின்றது. தேவதை அவளைத் தனது தண்டால் தடவிற்று. க்ஷணநேரத்தில் அவள் அரசகுமாரியைப்போல் ஆய்விட்டாள்.



இவளது சகோதரிகள் ஆச்சரியத்துடன் உற்றுப்பார்த்தார்கள். பின் அரண்மனையில் அவர்கள் கண்ட ஸ்திரீ தங்கள் சகோதரியென்று அறிந்து ஸின்டரல்லா முன் தங்கள் தலைவணங்கி தங்களை மன்னிக்கும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். ஸின்டரல்லா நல்ல பெண்ணானதால் அவ்விதமே அவர்களை மன்னித்து அவர்கள் யோக்யதையை யறிந்தும் அவர்களை அதிக பக்ஷத்துடன் நடத்திவந்தாள். அவள் அவர்களிடம் விடைபெற்று அரசன் மாளிகைக்கு கட்டியக்காரனுடன் போனாள். உடனே அரசகுமாரனுக்கும் இவளுக்கும் விவாகம் நடந்தது. இவர்கள் வெகு சௌக்யமாய் வாழ்ந்து வந்தார்கள்.

ஸி, எஸ். ரா.

## சிதம்பரஸ்தல யாத்திரை

(184-வது பக்கத் தொடர்ச்சி)

சிகப்புக் கல்போலிருந்தது. பிறகு வெளியேவந்துசேர்ந்தனர். வாசற்படியில் ஒருவர்க்கொருவர் இடித்துக்கொண்டிருக்கும் கூட்டமாயிருந்தது. "போகாதே நில்" "ஏலே! காசு எங்கடா?" "இவனை தள்ளுடா வெளியில்!" என்று கோவில்ஆட்கள் போடும்சப்தம் காதைத்துளைத்தது. இந்த ரத்னசபாபதி தரிசனம்செய்வதற்கு ஆளொருவனுக்கு ஒருஅணாகூலியாம்! ஆ! என்ன ஆச்சரியம்! தெய்வகிரஹத்தை இவர்கள் வியாபார இடமாகவும் பணம் சேர்க்கக் கூட்டும் காட்சி சாலையாகவும் செய்துவிட்டார்களே! ஐயோ! காலத்தின் கோலத்தை வர்ணிக்தலரிது. கீர்த்திபெற்ற ஸ்தலங்களிலெல்லாம் வருவோர்கள் ஸ்வாமி தரிசனம்செய்ய வொட்டாமல் கதவைத்தாளிட்டுக் கொண்டு இவ்வளவு பணம் கொடுத்தாலொழிய உள்ளே விடுவதில்லையென ஹடம் செய்கின்றனர்.

சிலர் சர்வாந்திர்யாமியானகடவுளை இவர்கள் உள்ளேவைத்துப் பூட்டிக்கொள்ளமுடியாது, நான் மானஸீகமாய்க் கடவுளைத் துதிக்கிறேன் என வெளியே செல்கிறார்கள். வேறு சிலர் பணத்தைக் கொடுத்துவிட்டு உள்ளேசெல்கின்றனர். இன்னும்சிலர் மற்றவருக்காகத் திறந்தசமயம் உள்ளே நுழையப் பிரயத்தனிக்கிறார்கள். அப்படிச் செய்வதில் சிலசமயம் ஜயமடைந்தாலும் பலசமயம் தள்ளுண்டு அடிப்பட்டுவிழுகின்றனர். இதுவே கலகத்திற்குக் காரணமா யிருக்கிறது. மற்றும் சிலர், உள்ளே செல்வதற்கும் இடனற்று வெளியே செல்வதற்கும் தைரியமின்றித் திகைத்துநின்று கொண்டிருக்கின்றனர். அந்தோ! தற்காலத்தில் கோவில்களின் நிலைமை யெவ்வளவு கேவலமா யிருக்கிறது. கட்டளைக்காரர் சண்டையிட்டுக்கொ

[அடுத்த பத்திரிகையில் 8 சித்திரப் படங்கள் அடங்கிய ஒரு விசித்திரகதை பிரசுரிக்கப்படும். பார்.]

ண்டு கோவில் நடவடிக்கைகளை நிறுத்தி விடுவதும், பஞ்சாயத்தார்கள் கோவில் சொத்தை வயிறார த்தின்று வருவதும், கோவில் உத்ஸவங்கள் நிறுத்தப்பட்டு கோவிலில் ஒரு விளக்கேற்றக் கூட ஆளில்லாமலிருப்பதும் இன்னும் அநேக விஷயங்களும் நாம் அறிந்த விஷயமே.

ஆயினும் இவ்வாறுபணம்வசூலிப்பதற்குக் காரணம் கேட்போமாயின் கோவிலுக்குச் சொத்துச் சேர்க்கவேண்டி யிருப்பதனால் அவ்வாறு வசூலிக்கவேண்டி யிருக்கிறது என்னலாம். இக்காரணத்தை எம்மனிதனும் ஒப்புக்கொள்வான். ஆயினும் இம்மாதிரி காரணம் சொல்லிக்கொண்டு வசூலாகிவரும் பணத்தையெல்லாம் கோயில் நிதியோடு சேர்க்காமல் அர்ச்சகர்களும் மற்றவர்களும் தின்றால், பணம் கொடுக்க எவரும் மனமிசையார். மேலும்பணம்வசூலாகிறதாயின் சகலரையும் ஒன்றாய்ப்பாவித்து யாவரிடமும் வசூலிக்காமல், எவரேனும் பெரிய உத்யோகஸ்தர் பின்னிரண்டு பில்லை சேவகர் பராக்கு எச்சரித்துவர, உள்ளே நுழைந்தால், அப்பொழுது சாதாரணஜனங்களை யிடித்துத்தள்ளிவிட்டு, "யஜமான் வரானும்" என்று வரவேற்றால், ஜனங்களுக்கு எப்படியிருக்கும் என்பதை எழுதவேண்டிய தில்லை.

நம் தேயத்துக் கோவில்கள் சீர் கேடான நிலைமையில் இருக்கின்றன என்பது நமது நேயர் யாவரும் அறிந்தவிஷயமே. கோவில்கள்தாம் அப்படி யிருக்கிறதென்றால் கோவிலுக்குத் தாம் கடவுள் வழிபாடு நிமித்தம் சொல்வதாய்ச் சொல்லிக்கொண்டு கோவில் செல்பவர்களிற் பலர் உண்மையான பக்தியுடன் கோவிலுக்குச் செல்வதில்லை. அவன் தினேகாலமும் கோவிலுக்குச் செல்கிறான். அவன் சிறந்த பக்தன் என்று பிறர் மெச்சுவதற்கே கோவிலுக்குச் செல்லுகிறான். கோவிலுக்குச் சென்று அவ்விடத்தில் நடக்கும் விஷயங்களைக் கவனிப்போம்.

நமது கோவில்களில் ஜவுளி வியாபாரம் அடிக்கடி நடக்கிறதென்று சொல்லலாம். அநேகர் பிறர் கண்ணையும் கவனத்தையும் கவரத்தக்க உயர்ந்தவிலையுள்ள வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் பூண்டு வருகிறார்கள். மற்றவர்கள் அவைமேலே கவனமா யிருக்கிறார்களே யொழிய தாம்வந்த காரியத்தைப் பார்ப்பதில்லை. ஆராதனை நடுவிலேயே, "ஏண்டி, இந்தப் புடவை எங்கே வாங்கித்து? என்னவிலை, எத்தனைமுழம், எந்தூர் தரி, அகலம்என்ன சாயம்போகல்லையோடி," எனப் பலகேள்விகேட்டு விசாரிக்கிறார்கள். இதேமாதிரிநகைகளையும் விசாரிக்கிறார்கள். அந்தநகை போட்டுக்கொண்டு வந்தவள்பாடு திண்டாட்டந்தான். ஒவ்வொருத்தி கேட்கும் பல கேள்விகளுக்கு பதிற்சொல்லிக் கொண்டும், ஒவ்வொருவளுக்கும் நகையைக் காட்டிக்கொண்டும் நிற்கவேண்டி யிருக்கிறது. கோவில் என்ன கடைத்தெருவா ? உயர்ந்த நகைகள் தெய்வ ஆராதனைக்கு வந்த இடத்தில் என்ன செய்யும் ? அநேக நகைகளைச் சுமந்துகொண்டு மெதுவாகவா, தண்டை, சதங்கை முதலியவை "இதோபார், என்னைப்பார், உன்னைப் பார்!" என்று சொல்வதுபோல் கலீர், கலீர் என்று சப்திக்கின்றன பெருமாள்மாடு வேடிக்கை பார்க்கும் சிறுவர் சிறுமிகள்போல் மற்றவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்.


MADRAS.

மேலும் கோவிலில் பொடிக் கடை வியாபாரம் பூர்த்தியா யுண்டு. மூக்கடைக்கும் தருணம் தன்னை மறந்து மடியைத் தடவி பொடியைக் காணாமல் கடிதோடிப் பலரிடம் கெஞ்சிக் கொஞ்சம் சேகரித்து முகர்ந்து மூக்கிலிட்டு பலரைத்தும்பச் செய்கிறார்கள். மேலும் தெய்வாலயத்தில், ஆராதனை சமயத்தில் கையை விரித்து தலையை அசைத்துக் கண்ணைச் சுழற்றிப் பலவித அபினயங்களைப் பிறர் பக்திக்குறிகளாக எண்ணும்படி காண்பிக்கிற நாடகக் காரர்களும் உண்டு. இப்பேற்பட்ட அபிநயங்களை ஜனங்கள் மெச்சி வெகுமதி கொடுப்பார். கடவுளுக்கு மனோபக்தியேயன்றி வெளிவேஷம் ப்ரியமல்ல. இதைக்கண்டு ஏமாறக்கூடியவரல்ல. ஸ்வாமி வீட்டைச் சயனபண்டபமாக்குவோர்கள் பலர். தெய்வக்கிரஹத்தைச் சோம்பேரிமடமாக்குவோர் பலர். தெய்வத்தை மறந்து ஆடு கள்ளித்தழைத் தேடிச்செல்வதுபோல, கோவிலுக்கு வருவோர் பலரையும் கொஞ்சம் வெற்றிலை, கொஞ்சம் பாக்கு முதலியன யாசித்து சாவகாசமாய் ஓரிடத்திலுட்கார்ந்துமென்று தின்று எச்சலுமிழ்ந்துக் கொண்டு கோவிலைப் பாழாக்குவோர் பலர். வேறு பலர் கோவிலைப் பரிட்சைக்கூடமாக்கி, வருவோரையும் அர்ச்சகரையும் பரிகரிசித்துக் கொண்டிருப்பர். அந்தோ! தெய்வாலயங்களின்கதி இவ்வாறோ! நமதுதேச முன்னெழுச்சிக்கு தேசத்தினர் சுயமதத்தின் தத்வங்களையறிந்து அதின்படி ஒழுகுவதே முதல் தேவை.

இவர்கள் ரத்னசபாபதி தரிசனம் பார்த்துவிட்டு அம்மன் சன்னதி சென்றார்கள். மூலவிக்ரகத்தையும் அம்மனையும்தரிசனஞ் செய்தார்கள். "ஏன் அம்மா! இந்த அம்மன் ஒரு கையை கீழே காட்டிக் கொண்டும் இன்னொருகையைக் மேலே காட்டிக்கொண்டும் இருக்கிறாள். அதுஏன்?" என ஞானம் கேட்டாள். அம்மா "அதுதன் பக்தர்களுக்கு அபயம் கொடுப்பதாக காட்டுகிறாள்."

வி. நடராஜன்.

---

# கற்பிற்சிறந்த கணவன்

## "பசுவின் வயிற்றில் புலி பிறந்தது" அல்லது

## துரையப்பய்யர் குடும்பம்

மேலூர் டிவிஷன் மதுரை ஜில்லாவைச் சேர்ந்தது: ரிவினியூ, மாஜிஸ்ட்ரேட் இரண்டு அதிகாரங்களும் டிப்டிகலெக்டரிடம் தான் ஜனங்களுக்கு

பயமும் மரியாதையுமுண்டு. துரையப்பய்யர்கோயம்புத்தூர் ஜில்லாவில் பவானியென்னும் கிராமத்திற் பிறந்தவர். குழந்தைமுதல்செல்வத்தில் வளர்ந்து மிகுந்த கர்வமும் பெருந்தன்மையும் கம்பீரத்தோற்றமு முடையவர். இவர் உத்யோகமான சில நாள்களிலேயே வேலையில் திறமானவரென்பதையும் உண்மையுள்ளவரென்பதையும் காட்டி விட்டார். தனக்கவசியமில்லாத காரியங்களில் பிரவேசிக்கமாட்டார். ஆனால் யாராவது ஒரு சிறிய குற்றம் செய்தாலும் மன்னிக்கமாட்டார். தன் கீழ் உத்யோகஸ்தர்களாகிய தாசில்தார், ஸப்மேஜிஸ்ட்ரேட் யாராவது லஞ்சம் வாங்கினதாகத் தெரியவந்தால் எவ்விதத்திலாவது அவர்களைக் கெடுக்கமுயலுவார். அவர்களெல்லாம் இவரைக்கண்டால், சிங்கத்தைப்போல் நடுங்குவார்கள். சாந்தம் அவ்வளவு அதிகமாயில்லை. படிப்பற்றவரையும் நாகரீக மற்றவரையும் வெறுப்பார். வெகு முன் கோபி. இவரது மனையாளாகிய அம்புஜம்மாளும் இவருடன் பேசுவதென்றால் ஸமயம் பார்த்துத்தான் பேசுவாள். எத்தகைய கோபம் வந்தாலும் துரையப்பய்யருக்கு அம்புஜம்மாளைக் கண்டவுடன் சூரியனைக் கண்ட பனிபோல விலகும். அவ்வம்மணி அவரை முற்றும் கைவசப்படுத்தி வைத்திருந்தாளெனவே சொல்லலாம்.

தற்காலத்தில் நம் நாட்டில் வசிக்கும் சில துஷ்ட ஸ்திரீகளைப்போல் மருந்தீட்டினாலாவது ஓயாது சொல்லு தலையணை மந்த்ரோபதேசத்தினாலாவது மேன்மினுக்கினாலாவது வசப்படுத்தவில்லை. ஆதிமுதல் அவர்கள் எள் என்பதற்கு முன் எண்ணெய் என்று இங்கிதமறிந்து அவர் மனங்கோணாதபடி நடந்து வந்ததனாலேயே அவர் இவள் வசமானார். இவ்வாறு இவள் இப்படிநடந்தது இவள்புத்திசாலித்தனமும் அன்பும்தவிர வேறொருகாரணமுமுண்டு. இவள் செல்வவான் வீட்டில்பிறந்தும் குழந்தையிலேயே தாயையிழந்து இளைய தாயின் வலையில்சிக்கி தன்னை துன்புறுத்திய தன் தந்தையினால் மெய்நொந்து தான் தனக்கு கணவனன்பைத்தவிர வேறுகதியில்லையென்று அவருக்குப் பணிவிடைசெய்துவந்தாள். இவளுக்கு பத்துவயதுக்கு மூத்த சகோதரனாகிய ராமசந்திரனோ தன் வீட்டில் படும் ஸங்கடங்களை ஸகியாமல் தன் மாமனிடம் கொஞ்சம் பணம் பெற்று 10-வயதுள்ள தன் ஸகோதரியை அவள் கணவனாகிய துரையப்பய்யரிடம் அத்தொகையுடன் ஒப்புவித்து அவளைத்துன்புறுத்தாமலிருக்கும்படி கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். துரையப்பய்யரும் அறைமனதுடன் ஸம்மதிக்க தங்கள் துர்ப்பாக்கியத்தைப்பற்றி வருந்தின அம்புஜத்தை ஸமாதானப்படுத்தி விட்டு, தான் வட இந்தியாவை நோக்கி வெறுப்புடன் சென்றான். அவர் தகப்பன் தன் சுயபுத்தி வந்து மகனைத்தேடி வீணாயிற்று; பிறகு பெண்ணை எவ்வளவோ வேண்டியழைத்தும் அம்புஜம்மாள் மறுத்து விட்டாள். பிறகு அவள்மாமி வீட்டைத்தவிர வேறு கதியில்லாமல் துரைப்பய்யரின் பெற்றோர் பிறந்



தவரின் கொடுமைகளுக்கடங்கி வயிறு நிறையச்சோறற்று, உடுக்க நல்ல உடையில்லாமல் ஹிம்ஸைப்பட்டு இவ்வனாதையை என்ன செய்தாற்றான் யார் கேட்பார்களெனும்படி இருக்க, துரையப்பய்யர் இதுவிஷயம் உபேட்சையாயிருந்ததினால் அம்புஜம்மாள் இருதயம் வெடித்து துக்கம் பொங்கி அழுது வந்தாள்.

அழுதழுது ஆற்றுவாற்று பின்னாலாவது விடிவு காலம் எப்படி வருமென்று யோசிக்க, தன் கணவனன்பே தன்னைக்காக்க உபாயமென்று எண்ணி, அது முதல் தான் கோரின விரதத்தையே கைக்கொண்டு, யார் என்ன சொன்னாலும் எதிர்க்காமல் பணிந்து, மெய் வருத்தம் பாராமல் வேலைகளை யெல்லாம் செய்துவரவே, இத்தகைய பெண்ணிடம் யாருக்குத்தான் மனமிரங்காது. துரையப்பய்யரின் கன் மனமும் கரைந்து அவள்மேல் அன்புள்ளவரானார். அவர் தன்னை ஸமமாய்ப்பார்த்து வார்த்தையாடும் பொழுதும் அடிமை போல பயந்து பக்தியுடன் பதிலுரைப்பாள். இவள் குதூகலமாய்ச் சிரித்து எவரும் பார்த்ததில்லை. சிறுவயதின் சிறுமையும் தன் அருமைத்தமையன் பிரிவும் எப்பொழுதும் துன்பத்தையுண்டாக்கின. கடைசியில் துரையப்பய்யர் இவள் சொல்லை வேதமாக நினைத்து நடக்கலானார். இவர்களுக்கு தினகரனென்ற புத்திரனும் புஷ்பாம்பாளென்ற பெண்ணும் பிறந்தார்கள். தினகரன் பிறந்ததும் அவனழகையும் அறிவையும் கண்டு அம்புஜம்மாள் தன் துக்கத்தை யொருவாறு மறந்து குதூகலமாயிருக்கலானாள். தினகரனிடம் துரையப்பய்யருக்கும் அளவற்ற வாஞ்சை. அவருக்கு எப்போதும் சிறுவரிடத்தும் படித்தவரிடம் ப்ரேமையதிகம். புத்திரன் கல்வியில் யாவராலும் கொண்டாடப்பட்டு தேர்ச்சியுள்ளவனென்றதினால் அவனிடத்தில் தன் உயிரையே வைத்திருந்தாரெனலாம். ஆனால் சந்திரனுக்கும் மாசுண்டு. அப்படியே தினகரனுக்கும் தங்கத்துக்கும் மாற்றுண்டு என்பது போல் ஒரு கெட்ட குணமுண்டு. நல்லதோ கெட்டதோ தான் நினைத்ததையே செய்யவேண்டுமென்ற அடங்காப்பிடிவாத மொன்றிருந்தது. வயதானால் அது போய்விடுமென்று துரையப்பய்யர் கண்டிக்காமலிருந்து விட்டார். சிற்சில சமயங்களில் தன் புத்திரன் அழகையும் வித்தையையும் பற்றி தன் போன்ற உத்யோகஸ்தரிடம் புகழுவார்.

இவர் மகள் புஷ்பாம்பாளோ இவனுக்கெவ்விதத்தும் எதிரிடையாயிருந்தாள். அவளது நிறம் சிவப்பே யென்றாலும் அவள் அவயவங்கள் பிரம்மா சோம்பேறித்தனத்தால் கண், மூக்கு கைகால்களைமனம் போனபடி ஒட்டிவைத்தானோவென்று தோன்றும். ஆனால் அவள் மனதில் தான் சிவப்பாகையால் தன்னைவிட உலகத்தில் அழகு கிடையாதென்று எண்ணம். தன் தோழிகளிடம் சிலவேளை 'நீ என்னதான் சொல்லு, 'சிவப்பொரு அழகும் டுகை யொரு மணமும்' என்பாள். இவளுக்கும் தற்கால நாகரீகத்திற்

கும் வெகுதூரம். படித்தபெண்களெல்லாரும் கெட்டவர்களென்று இவளபிப்பிராயம். சோழி, பல்லாங்குழியாடுவதில்இவளுக்கு யாருமிணையில்லை. எப்போதும் அவள் முகம் துர்வாஸ ரிஷியின் அவதாரமாக புலப்படும். நல்ல வஸ்திரம் ஆபரணங்களணியாவிட்டாலும், வேறு யாராவது உயர்ந்த ஆடைகள் தரித்திருக்கக்கண்டால் அம்மாதிரி தனக்கொன்றுசெய்துகொள்வாள். இவளைக்கல்வியிலும் ஸங்கீதத்திலும் பயிலும்படி வீட்டோர் என்ன சொல்லியும் பயன்படவில்லை. இவளை போலீஸ் ஸூப்ரண்டென்டு ரங்கஸாமி ஐயர் புதல்வன் ஸ்ரீநிவாஸனுக்கு விவாகம் செய்து கொடுத்திருந்தார்கள். ரங்கசாமி அய்யர் தகப்பனார் அவரைக்குழைந்தையாய் விட்டிறந்ததனால்சிறியதகப்பனாரால் போஷிக்கப்பட்டு அவருதவியினால் போலீஸ் வேலையிலமர்ந்தவர். இவர் சிற்றப்பா புத்ரனாகிய ராஜாராமையரென்பவர் தன் தகப்பனாரளவற்ற பொருள் வைத்து இறந்தபடியால் வேலையிலமராமல் வியாபாரத்தில் அப்பொருளை செலவிட்டுக்கொண்டு வந்தார். அவருக்கு நாகநாதன், நடேசன் என்றிரு குமாரர்களுண்டு. ரங்கஸாமி அய்யருக்கு ராஜாம்பாளென்று ஒரு குமாரியுமுண்டு. ஸ்ரீனிவாஸனுக்கு இப்பொழுது 18 வயதிருக்கலாம். அவன் ஒரு உத்ஸாகபுருஷன். அவன்முகத்தில் எப்பொழுதும் ஸந்தோஷம் கூத்தாடும். ஸங்கீதத்தில் பைத்தியங்கொண்டவன். பெண் கல்வியைப் பற்றி எவ்விடம் பிரஸங்கங்களோ அங்கெல்லாம் அவனைக்காணலாம். பொன்னுசாமி அய்யர் பெண்கமலாவுடன் சேர்ந்து விளையாடினவனாதலால் அவளழகையும் கல்வியையும் கண்டு அவளைவிவாகம் செய்துகொள்ள முயன்றான். இவர்கள் தந்தைகளிருவரும் அந்தரங்க ஸ்நேகிதர்களானதால் நடக்கும் போலிருந்தது. ஆனால் ஜாதகம் பொருந்தவில்லை. ஆதலால் ரங்கஸ்வாமிஅய்யர், துரையப்பையர் ஸம்பந்தத்தை நடத்தினார். ஸ்ரீனிவாஸனுக்கு புஷ்பத்தை மணம்புரிய இஷ்டமேயில்லை. புஷ்பம் சிறுமியாயினும் விளையும்பயிர் முளையிலே தெரியும் என்பது போலத்தன் அவலகுணங்களை விளக்கிவிட்டாள்.

தன் பெண் குழந்தையை அம்புஜம்மாள் தன் நாத்தி மாமியோர்களிடம் விட்டு விட்டாள். அவர்கள் எவ்வளவு துன்புறுத்தியும், தன் புத்திரனையவர்களிடம் ஒப்புவிக்கவில்லை. அவர்கள் தன் மேல் அசூயை பற்றியவராதலின் அக்குழந்தையின் மனத்திலும் அசூயை யுண்டாக்கி விடுவார்கள் என்று பயந்தாள். ஓர் குடும்பத்தில் தகப்பனுக்குப்பின் குடும்பபாரத்தை வகிப்பவன் முதல் புத்திரன் ஆதலின், குழந்தையில் அவனுக்கு கெட்ட அபிப்பிராயம் ஏற்பட்டால் குடும்பமே குலைந்துபோய் விடுமல்லவா. பின் வரும் காரியங்களை யூகித்தறிவதில் இவ்வம்மணி புத்திநுட்பமுள்ளவள். அவள் எண்ணியவாறே புஷ்பமும் வளர்ப்பின் காரணமாக தாய்மேல் அசூயையுற்றாள். தினகரனுக்கு விளையாடும் பருவம் வந்ததும் தாயே அவனுடன்



விளையாடுவாள். அவனும் வயதுக்கு மேற்பட்டபுத்தி மானாகையால் தன்னைப் பெரியவனாக மதித்து விளையாடி அப்போதப்போது புத்தியுரைக்கும் தாயின்மேல் அன்புற்றவனாயினன். இருவரும் மனதொத்த சினேகிதர்கள் போலிருந்தார்கள்.

இக்குழந்தையின் அத்தை குப்பம்மாள் இவனை வைத்துக்கொண்டு, ஆபாசமான வார்த்தைகளும் அபினயங்களும் கற்பிப்பாள். தன் தாயின் உபதேசத்தாலும் அன்பாலும் இக்குழந்தை தன் வயதுக்கு மிஞ்சிய புத்தியைவகித்து அவளுக் குடன்படாமல் மௌனமாயிருக்கும். அவளுக்குக் கோபம்வந்து இது ஆத்தாளைப்போல் தீசல் என்று எரிந்து விழுந்து, என்னம்மா வாடீ என்று புஷ்பத்தைச் சீராட்டி சோழியை உருட்டிக் "காண்டுங்குண்டலம்" என்று ஆடுவாள். அக் குழந்தை குதிக்கும். அவர்கள் சொல்லிக் கொடுத்தபடி கன்னா பின்னா வென்று பிதற்ற, அவள் தன் தாய் நேசர்கள் உட்பட களிப்பாள். தவிர அச்சிறு பெண் குழந்தை அத்தை பாட்டியின் உபதேசப்படி மழலைச் சொற்களால் "மொட்டே மெட்டே மொளகுஸார் சம்பளிமொட்டே டேக்குமார், நாட்டு மொட்டைக் குக்கலியாணம் பாட்டுபாட வாடி மொட்டையக்கா." வென்று சொல்லிக் குதிக்க, இவர்கள் மகிழ்ந்து வயிறுகிழிய சிரிப்பார்கள். அக்குழந்தை வயதுக்கு மிஞ்சிய திருட்டுத் தனம் செய்வதைக் கண்டு மெச்சுவார்கள். இவ்விதம் பல விஷயங்களில் சலுகைக் கீடுப்பட்டு அப்பெண் முரண்டி சில வேளைகளில் இல்லாததைக் கொண்டுவா என்று அழுது சாதிக்கும். இந்த முரட்டுத்தனம் துரையப்பய்யரின் சுபாவகுணம். குடும்பகுணமாக இது தினகரனுக்கும் குழவிப் பருவத்திலிருக்க அம்புஜம்மாள் "ஐயோ நான் உன் தகப்பனார் முதலியவரிடம் பட்டது போதாதா. அது போல் எவள் உன்னிடம் வந்து இடிபடப்போகிறாளோ" வென்று தன்னால் கூடிய வரை முயன்று அக்குணத்தை மாற்ற, 5, 6, வயதுக் குள்ளாகவே முறட்டு சுபாவம் மாறிவிட்டது. எப்பொழுதாவது தற்செயலாய் வெளியாவதைத் தவிர மற்றப்படி மறைந்து விட்டதெனலாம்.

அவனுள்ளத்தில் தந்தையிடம் தோன்றாத அன்பு என்னும் அழகிய பெருஞ்செல்வம் இருக்கக்கண்டு தாய், "இது ஒன்றே சகல கெட்டகுணங்களையும் நீக்கும் மாற்று" எனக்கருதி மகிழ்ந்தனள்.

அக்காலத்திலேயே அக்குழந்தைக்கு, எண்சுவடி, தமிழ், ஆங்கில இலக்கம் அவைகளின் தொகைகளின் அளவு, ஔவையின் நூலாகிய ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம் என்ற அழகிய உலகநீதிகள், சம்ஸ்கிருத சுபாஷித மஞ்சரியின் உத்தமமான ச்லோகங்கள், மகா பாரதம், ராமாயணம், இந்தியாவில் இதற்குமுன் ஆண்டவர்கள், தற்காலத்தில் ஆள்பவர் அவரவர்களுடைய குண விசேஷங்கள், தெய்வபக்தி, மதாசாரி

யர்கள் அவர்களுடைய கொள்கைகளில் உள்ளது உள்ளபடி, தற்கால நாகரீகம், இவைக ளெல்லாவற்றையும் சாப்பிடும் பொழுதும் தூங்கும் பொழுதும் அப்பாலகன் மனதில் ஊன்றும்படி சதா கதைசொல்லிக் கொண்டே அக்குழந்தை மனதில் உத்சாகத்தை உண்டாக்குவாள். அப் பாலகனும் வேறு எண்ணமின்றி மென்மேலும் கதைக்கேட்க ஆசைமிஞ்சி வரவர அவள் சொல்லாவிடினும் சொல்லச்சொல்லி தொந்தரைசெய்ய தலைப்பட்டான். அத்துடன் பள்ளியில் போகு முன்னமே தன் தாயினால் கிரந்த அக்ஷரங்களும், தமிழ் எழுத்துகளும் கூட்டி கூட்டி வாசிக்கவும் கற்றுக் கொண்டான். அதைப்பற்றி துரையப்பய்யர் தன் மகனைத்தழுவி தன் மனைவியை தன்னுள் மெச்சிக்கொண்டார். (இன்னும் வரும்)

K. K. ஸ்ரீனிவாசா சாரியார் எம். ஏ., எம். எல்.,

---

## ஹாஸ்ய துணுக்குகள்.

(என்ன நடந்தது நீங்களே சொல்லுங்கள்.)

1. கமலம் சாயங்காலம் இருட்டும் சமயத்தில் அறையில் உலாவிக் கொண்டிருந்தாள்.

* * * * * *

தினகரர் தோட்டத்திலிருந்து அவளுக்கென்று தான் பறித்துவந்த ரோஜாபுஷ்பத்தை அவளுக்குக் கொடுக்க அவளருகில் சென்றார். என்ன? உங்கள் மூக்கு ஜில்லென்றிருக்கிறது என்றாள் கமலம்.

* * * * * *

2. வாத்தியார்:—ராஜா! ஏண்டா பாடம் படிக்கவில்லை.

பையன்:—இல்லை சார். அடுத்தாத்து சேச்சனைக் கூடகேளுங்கள் சார். நான் இன்று விடியற்காலம் எழுந்து பாடம் நன்றாய் படித்தேன்.

வாத்தியார்:—அப்படியானால் ஏண்டா பாடம் தெரியவில்லை?

பையன்:—இல்லை சார்—அப்புறம்—பழையது—

வாத்தியார்:—ஏன் பழையது சாப்பிடவில்லையா? பசியால் பாடம் சொல்லத் தெரியவில்லையா யென்ன?

பையன்:—இல்லெ—பழையது கெட்டியாய் எருமைத் தயிர் போட்டு சாப்பிட்டேன். இப்போ பாடம் கீழே பழையது மேலேயாயிருக்கிறது.

* * * * * *

3. தன்னைப்போன்ற அழகுடையவர்கள் வேறொருவருமில்லையாது என்று கர்வங்கொண்டிருந்த ஒரு ஸ்திரீ ஓரிடத்திற்கு போகவேண்டி ரோட்டில் பீட்கொடுத்துக் கொண்டிருந்த போலீஸ் சேவகனொருவனைப் பார்த்து கர்வமாய் ஸ்திரீ:—" இங்கிருந்து மல்லீஸ்வரர் கோவிலுக்கு எவ்வளவு தூரமிருக்கும்" என்றாள்.

போலீஸ்:—அம்மா நீங்கோ, மெத்த அளவா யிருக்கீங்கோ, கோயில் இங்கிருந்து $1\frac{1}{2}$ மைல் தூரமிருக்கிறது. ஆனால் நீங்கோ உருண்டாக்கே $1\frac{1}{2}$ உருள்தானிருக்கும்'

B. V. S.



## மாட்சிமை தங்கிய ராஜப் பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ் பிரபு அவர்கள் 1913 ௵ நவம்பர் மாதத்தில் சென்னைக்கு விஜயம் செய்த மகோற்சகாலத்தில் மாதர் மனோரஞ்சினி நேயர்களான இந்தியப் பெண்கள் அவருக்கு நல்வரவு கூறல்.

---

செல்வமிகுந்தோங்கி சிறப்புமிகும் சென்னை நகரந் தனைக்காண
மல்லல் ராஜப் பிரதிநிதி மன்னே! லார்டு ஹார்டிஞ்! பேர்
எல்லை யில்லாக் கருணைமிகும் இறைவா! வருக வருகவே;
அல்ல லகற்றி எமையளிக்கும் அளியோய்! வருக வருகவே. 1

உன்றன் நல்ல உயிர்க்கிறுதி உன்னுந் துரோகி செயல்கேட்டு
நின்ற துயரக் கவலையொடு நிறைந்த எங்கள் கண்களிக்க
மன்ற ஈசன் அருளாலே வாழ்வுற் றிடுவோய்! வருகவே;
என்று மெங்கள் சென்னை நகர்க்கு உரவோய்! வருக வருகவே. 2

அரசன் செங்கோல் நிதம் வாழ அனைத்து முயிரும் இன்புறுக
வரையா அன்பின் மாதர் மனம் இரஞ்சித்துறுமிப் பத்திரிகை
உரைசேர் நேயப் பெண்களெல்லாம் உள்ளங் களிக்க, வருகவே
விரைவின் எங்கள் சென்னைக்கே மேலோய்! வருக வருகவே 3

சி. கே. சுப்பிரமணியம். பி. ஏ.

---

## மாதிரி பாடம்—மூன்றாவது நான்காவது வகுப்புகள்.

ஒரு கிராமத்திலுள்ள ஒருகுடியானவன் தன்வயலில் குளிரினால் விரைத்து இறக்கும் ஸ்திதியிலிருந்த ஒரு சர்ப்பத்தைத் தன் வீட்டிற்குக் கொண்டுவந்து அதைத் தணலுக்கருகில் வைத்து அதற்கு உஷ்ண மூண்டாக்கச் செய்து அதற்குப்பால் வாங்கி வரப்போனான். அப்போது தீயின் உஷ்ணத்தினால் பாம்புக்குகுளிர் நீங்கிற்று. உடனே அது தன் அருகிலிருக்கும் குடியானவனுடைய குழந்தையொன்றைக்கடிக்க முயன்றது. குழந்தை ஓ வென்றலரவே, குடியானவன் "உபகாரம் செய்தவனுக்கு

அபகாரம் செய்யஎத்தனித்தாயே, துஷ்டா! துஷ்டர்களுக்குஉபகாரம்செய்தால் தீங்கு நேரிடுமென்பது சரியே என்று அதை நையப்புடைத்தான்.

| பாடம் | பாடத்தை நடத்தும் மாதிரி | உதாரணங்கள், பரஸ்பர சம்பந்தங்கள் |
| --- | --- | --- |
| ஷி கதை | (1) ஷி கதையைப்பிள்ளைகளுக்கு விசதமாய்ச் சொல்லல். | 1) பரஸ்பரசம் பந்த பாடங்கள்.<br>1. Drawing: பாம்பு, வயல்.<br>2. Brush: வயல்.<br>3. Crayon work: பாம்புவயல்.<br>4. Clay Modelling: பாம்பு.<br>5. Paperfolding: பாம்புபெட்டி.<br>6. Leaf work: Do<br>7. வியாசம். பாம்பைப்பற்றி அல்லது கதையைச் சுருக்கிஎழுதல். கதையை சங்கிரகித்து எழுதுகையில் கதையில் எந்த அம்சம்முக்கியமானது எந்த அம்சம் எழுதாமல் விடலாம் என்பதைப் பிள்ளைகள் அறியவேண்டியது. வியாசத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் கதை விவரிப்பு சித்திரம் எழுதியிருக்கவேண்டும். |
| | (2) ஷிகதையைப்பிள்ளைகளுக்கு சொன்ன பின் பிள்ளைகளை அவர்களின் சொந்தமான பாஷையில் திருப்பிச்சொல்லச் செய்யவும். இவ்வகுப்புகளில் பாஷை திருத்தமாயும் கதையின்பாவத்தை நன்றாய்த்தெரிந்து எந்த சந்தர்ப்பத்தில் ஆச்சரியமோ அப்போது ஆச்சரியமும், கோபரஸத்தில் கோபமும், சந்தோஷம் வீரம், பயம், வேண்டுகோள் முதலிய பாவங்களைத் தெரிந்து அவற்றிற் கொத்து சம்பாஷிக்கச் செய்யவும். | 2. சமாசாரப் பாடம்: — குடியானவன், தொழில், பயிர்த்தொழில்.<br>**Nature talk:—**<br>பனிக்காலம்—குளிர்.<br>பனி என்றால் என்ன?<br>பனி எப்போது பெய்யும்?<br>குளிரினால் இறப்பதேன்?<br>தேகத்திற்கு எவ்வளவு உஷ்ணம் தேவை? |
| | கதையைத் திருப்பிச் சொல்வதற்குப்பதிலாய் (Composition) எழுதச்செய்வது நலம். கதை விவரிப்பு சித்திரமும் அவ்வியாசத்திற்கு எதிரில் ஆங்காங்கு எழுதவேண்டும். | |

என். சுப்பிரமணிய ஐயர்.



# சமாச்சாரக் குறிப்புகள்

திருநெல்வேலிசெம்புபோன்ற மணல்:—திருநெல்வேலிஜில்லாவில் கடலோரமாயுள்ள ஓர் ஊரில் ஏராளமான செம்புபோன்ற மணல் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டுபிடித்தவர் மிஸ்டர் சேட் ஸ்ரீகிருஷ்ணதாஸ். அவர் பிக்கானியர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவர். அவர் இப்பொழுது கன்னியாகுமாரியில் இருந்துவருகிறார்.

* * * * * *

ஜப்பானிய நவீன பெண்கள்:—இங்கிலாந்திலே சிலவருஷங்களாகச் சில பெண்கள் தாங்களும் ஆடவரைப்போல் இராச்சியபரிபாலன விஷயங்களிற் பிரவேசிக்கவேண்டுமென்று விரும்பி அதற்கு இராசங்கத்தார் இடங்கொடாமையால் பலவிதமான கலகங்களை விளைத்துவருகின்றார்கள். இப்பொழுது ஜப்பானிலும் சிலபெண்கள் அந்த ஆங்கில ஸ்திரீகளைப் பின்பற்றி தாங்களும் இராச்சியசம்பந்தமான விஷயங்களிற் பங்குபெறவிரும்பிக் கலகம் விளைக்கின்றனர்.

* * * * * *

திருச்செங்கோடுபெண்பாடசாலை:—உபாத்தியாயர் மனைவிகளைப் பள்ளியில்வாசிக்க வைத்தால் இரட்டிப்பு சம்பளம்கொடுப்பதாய் மேலதிகாரிகளிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறது. இப்பாடசாலைக்கு ஒரு ஹெட்மிஸ்டிரஸ் ஏற்படுத்தினால் தமது மனைவிகளைப் படிப்பிக்க சம்மதமென்று உதவி உபாத்தியாயர்களும், இன்னும் சிலரும் பதில் அனுப்பியிருக்கிறார்கள். அப்படி ஏற்பட்டால் சிறுமிகளும் மேல் வகுப்புகளில் வாசிக்க முன் வருவார்கள். இதில் கை நெசவுத் தொழிலும் விசேஷமாய்க் கற்பிக்கப் போகிறார்களாம்.

* * * * * *

ஸ்திரீநியாயவாதிகள்:—பிரான்சு, ருஷிய, சுவிட்சர்லாண்டு, ஐக்கிய மாகாணங்கள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து இந்நாடுகளில் ஸ்திரீகள் ஒரு ஆட்சேபனையுமின்றிவக்கீல்களாக விருந்துநியாயவாதஞ் செய்யலாம். இங்லாந்தில் இல்லை. மிஸ். கிறிஸ்டபல் பாங்கர்ஸ்டு பி. எல். பரீட்சையில் தேறியும் வக்கீலாகி கோர்ட்டுகளில் வழக்காடச் சுதந்தரங் கொடுக்காததால்தான் அவள் இவ்வளவு மும்மரமாகி ஸ்திரீ சுதந்தரத்துக்காகப் போர் புரிகிறாளாம். பிரான்சுதேசத்தில் 10ஸ்திரீகளுக்கு அதிகமாகவும், ஐக்கிய மாகாணங்களில் 40 ஸ்திரீகளுக்கதிகமாகவும் வக்கீல்களாக இருந்துவருகிறார்கள். இவர்களில் சிலர் மிக்க பிரதாபம்பெற்று அதிக சாமர்த்தியமாக விவாதஞ்செய்கிறார்கள்.

* * * * * *

கோயமுத்தூரில் ஸ்திரீகளின் சங்கம்.—கோயமுத்தூர் ஸ்திரீசங்கத்தின் மெம்பர்கள் மிஸஸ் ஹெம்மிங்வேயின் வீட்டில் கூடினார்கள். மிஸஸ் மோபர்லி முதலிய பல ஐரோப்பிய ஸ்திரீகளும், மிஸஸ் ஸ்ரீனிவாச ராவ், மிஸஸ் நாகராஜ அய்யர், மிஸஸ் ராமசாமி சிவன், மிஸஸ் பத்ம நாபாச்சார், மிஸஸ் ரங்காச்சாரியர், மிஸஸ் குழந்தைவேலு, மிஸஸ் சம்பந்த முதலியார், ஊத்துக்குழி ஜமீன்தாரணி, மிஸஸ் வெங்கட கிருஷ்ணராவ், மிஸஸ் வேங்கடப்பா, மிஸஸ் C. V வெங்கடரமண அய்யங்கார், மிஸஸ் திருவெங்கடசாமி முதலியார், மிஸஸ் V. சுப்பிரமணிய அய்யர், மிஸஸ் டேவிட், மிஸஸ் தேவைக்காயம்,

மிஸ்ஸ்ஸ் பாக்கியநாதன் முதலியவர்கள் போயிருந்தார்கள். அவர்களுள் சிலர் தங்கள் பெண் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போயிருந்தார்கள். விருந்தினர்களை மிஸ்ஸெஸ் ஹெம்மிங்க்வே வரவேற்றார். சிறுகுழந்தைகளுக்குத் தகுந்த விளையாட்டுகளும், ஸ்திரீகளுக்குத் தகுந்த விளையாட்டும் ஏற்பட்டன. தையல் வேலை, கடைக் கணக்குகள் முதலியவைகளில் போட்டிப் பரீட்சைகள் வைக்கப் பட்டிருந்தன. குழந்தைகளுள் வெகுமதி யடைந்தவர்கள் மிஸ் வெங்கடகிருஷ்ணராவும், மிஸ் B டேனியலும். மிஸ்ஸஸ் ஹெம்மிங்குவே, அவர்களுக்குப் பரிசுகளைக் கொடுத்தார். போட்டித் தையல் வேலைகளில் வெகுமதி பெற்றவர்கள் மிஸ்ஸஸ் V. சுப்பிரமணிய அய்யரும், மிஸ்ஸஸ் லட்சுமணராவும், மிஸ் திருவேங்கடசாமி முதலியாரும், மிஸ் கங்காபாயு மாவார்கள்.

*        *        *        *        *        *

**மலைகளின்உயரம்:**—மலைகளின்உயரம் இவ்வளவென்று நிச்சயமாய்ச் சொல்லுதல்' கஷ்டமாகின்றது. ஏனெனில் உயரமான மலைகளின்உச்சியில் பனிக்கட்டிகள் வந்து உறைவதால் மலைகள் உண்மையான உயரத்தைக் காட்டிலும் அதிக உயரமாக இருப்பதாகத் தோன்றுகின்றன. வெயிலில் பனி கரைந்துபோவதால் பகலில் மலைகள் குறைந்த உயரமாகவும், இரவில் அதிக உயரமாகவும் இருப்பதாகக் காட்டுகின்றன. இம்மாதிரி உலகத்திலுள்ள மலைச்சிகரங்களில் உயரமானதென்று ஜனங்களால் நம்பப்பட்ட எவரஸ்ட் சிகரமானது 800அடி உயரம் காலத்துக்குக் காலம் அதிகமாயும்குறைந்தும் இருப்பதாகத்தோற்றுகிறது என்று சொல்லப்படுகிறது. ஒரேநாளில் பகலில்300அடிகுறைவாயும் இரவில்300அ அதிகஉயரமாயும் ஆகிறதாம். ஆகையால் மலைகளின் உயரம் இவ்வளவென்று நிச்சயமாய்ச் சொல்லாமல் இவ்வளவு அடிவரையிலும் உயரமாயிருக்குமென்றுமாத்திரம் சொல்லமுடியும்.

*        *        *        *        *        *

**வியாதிவராமல் காத்துக்கொள்ளும் விதம்:**—பல காரணங்களால் சரீரத்தில் விஷம் உண்டாகி அது அதிகரிப்பதால் அநேகவிதமான வியாதிகள் சம்பவிக்கின்றன. ஆகாராதி முதலியவைகளில் நாம் மிதமாயும் சரியாயும் இருந்துசுகாதார விதிகளை யனுசரித்து தேகாரோக்கியமாயும் சுத்தமாயும் இருக்க முயலுவோமானால் சரீரத்திலுண்டாகும் விஷம் மட்டுப்பட்டு அதனால் சாதாரணமான வியாதிகள் வாராமல் தடுப்பதற்கு முக்கியமானது சரீரத்தை உள்ளும்புறமும் சுத்தமாய் வைத்துக்கொள்வதே. சரீரத்தை அழுக் கில்லாமல் சுத்தமாய் நாம் வைத்துக் கொள்வதால் தேகத்தின் சௌக்கியமும் ஆரோக்கியமும் விர்த்தியாகின்றது. நிரம்ப நேரத்துக்குப் பிறகு, அதாவது நல்ல பசியுண்டான பிறகு மிதமான ஆகாரம் சாப்பிடவேண்டும். சுத்தமான ஜலம் தினசரி அதிகமான வளவு சாப்பிடவேண்டும் வழக்கமாயும் ஒரே திட்டமாயும், தேகாப்பியாசம் செய்யவேண்டும். தினம் அழுக்குப் போக ஸ்நானம் செய்யவேண்டும்; குடலைச் சரியான ஸ்திதியில் இருக்கும்படி வைத்துக்கொள்ளவேண்டும்; தினசரி மலப்பிரவர்த்தி ஆய்விடவேண்டும்; மட்டுக்குமிஞ்சினவேலை, தொந்தரை, மனக்கவலை, முதலியவைகள் நேரிடாம லிருக்கவேண்டும். இம்மாதிரி ஒவ்வொருவரும் சரியாய் நடந்து தங்கள் தேகத்தைக் காத்து வருவார்களானால் சாதாரணமாய் நேரிடக்கூடிய வியாதிகள் வாராமல் செய்து கொள்ளலாம்.

OFFICE OF THE REGISTRAR ... FEB 1914 MADRAS



தென் ஆபிரிக்காவில் ஜெயிலிலுள்ள நமது சகோதரிகளும், குழந்தைகளும்.


# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."—ஔவையார்.

Vol XV. | Madras: December 1913 | No. 12

புத்தகம் கரு. | சென்னை: டிசம்பர்மீ 1913. | இலக்கம், 12


## நமது வைஸ்ராய் அவர்கள்.

நமது வைஸ்ராய் அவர்களும் அவர் மனைவி எச். ஈ. லேடி ஹார்
டிஞ்சும் நவம்பர்மீ 24உ பகல் 12-மணிக்கு சென்னைக்கு வந்து சேர்ந்
தார்கள். உடனே குண்டுகள் போடப்பட்டன. மவுண்ட்ரோடிலும் ஸ்டே
ஷனிலிருந்து மவுண்ட்ரோட் வரையிலும் கணக்கு வழக்கில்லாமல் ஜனங்
கள் சிறிது பெய்த மழையைக்கூட கவனியாமல் நமது ராஜ ப்ரதிநிதியைக்
கண்டு களிக்க வேண்டுமென்ற ஆவலுடன் கண் கொட்டாமல் பார்த்துக்
கொண்டிருந்தார்கள். வைஸ்ராயவர்களும் அவர் மனைவி லேடி ஹார்டிஞ்
சும் வரும்பொழுது கைகொட்டி தங்கள் முழு சந்தோஷத்தைத் தெரி
வித்தார்கள். வைஸ்ராயவர்கள் தமது டொப்பியை எடுத்து வழி நெடுக
மரியாதையாகச் சென்று கவர்னர் மாளிகைக்கு வந்தார்கள். உடனே
மறுபடியும் குண்டுகள் போடப்பட்டன. அங்கு வந்திருந்த பிரமுகர்க
ளைக் கண்டு களித்தார்கள். அநேக சங்கங்களைச் சேர்ந்தவர்கள் உபசா
ரப் பத்திரங்கள் வாசித்துத் தங்கள் நல்வரவைக்கூறினார்கள். வைஸ்ராய்
அவர்கள் அவைகளுக்கு பின்வருமாறு மிக்க அநுதாபத்துடன் பதில்
அளித்தது யாவருக்கும் அதிக திருப்தியை யுண்டாக்கியது. இவர்கள்
நமக்கு செய்த நன்மைகளோ பல. இன்னும் எவ்வளவோ செய்வார்கள்
என்பதற்குத் தடையில்லை. நம்மவர்களிடத்தில் மிக்க அநுதாபமும் ப்ரிய
மும் இவருக்குண்டு. தென்ஆபிரிக்கா விஷயமாக இவர் பேசினவார்த்தை
களால்தெரியும். இவரை அதற்காக சில இங்கிலீஷ்பத்திரிகைகள் அவ்விதம்
பேசியிருக்கக் கூடாதென எழுதுகின்றன. ஆனால் அநேக பத்திரிகை
கள் இவரைப் புகழ்ந்து, வாழ்த்துகின்றன. இவரது மனைவி லேடி ஹார்
டிஞ்ச் மாதர்சங்கத்திற்கும், கோஷா ஆஸ்பத்திரிக்கும் சென்று நம்மவர்க
ளுடன் அன்புடன் பேசிவந்ததும் புகழத்தக்கதே. இவர்கள் சுகஜீவிகளா
யும் தீர்க்காயுஸுடனுமிருக்க ஈசன் கிருபை செய்வாராக.

பத்திராதிபர்.

## நமது வைஸ்ராய் அளித்தபதில்.

"உபசரணைப் பத்திரங்களில் மஹாஜன சபை, காங்கிரஸ் கமிட்டி, ஐரோப்பிய வர்த்தக சங்கம், இந்திய வர்த்தகசங்கம், மகம்மதியர் சங்கம், கார்பொரேஷன் இவைகள் கொடுத்த பத்திரங்கள் நமக்கு முக்கியமானவை. இவைகளெல்லாம் ஒன்று தப்பாமல், போன வருஷம் ராஜப் பிரதிநிதிக்கு நேரிட்ட விபத்தினின்று அவரும் அவருடைய மனைவியாரும் தெய்வ சங்கல்பத்தால் உயிர் தப்பினதைப்பற்றிச் சந்தோஷப்பட்டுச் சொல்ல, அதை ராஜப் பிரதிநிதியும் திருப்தி பாராட்டி அங்கீகரித்தார்."

"மஹம்மதிய சங்கத்தார் தங்களினத்தாரின் கல்வி அபிவிருத்திக்காக செய்துவரும் முயற்சிகளைப்பற்றி லார்ட் ஹார்டிஞ்ச் அனுதாபத்துடன் பேசினார். மஹாஜன சபையும் காங்கிரஸ் கமிட்டியாரும், நிர்வாக அதிகாரத்தை நீதி விசாரணை அதிகாரத்தினின்று பிரித்துவிட வேண்டுமென்ற பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிட, அது மகா கஷ்டமான பிரச்சினை யென்றும் இப்போது கவனிக்கப்பட்டு வருகிறதென்றும் பதில் சொன்னார். தேவஸ்தானங்களின் விசாரணையைப்பற்றிப் புதுச்சட்டம்செய்ய அநுமதி வேண்டுமென்று கேட்டதற்கு, அதைப்பற்றி இந்தியா செக்ரிடேரியிடம் கடிதப்போக்குவரத்து செய்துகொண்டிருப்பதாகவும், சீக்கிரத்தில் ஜனங்களுக்குத் திருப்திகரமான முடிவுசெய்யப்படுமென்று தாம்கோருவதாயும் சொன்னார்.

"தென்னாபிரிக்கா இந்தியரின் விஷயத்தைப்பற்றிச் செய்த முறைப்பாட்டுக்குப் பதில், இந்தியா கவர்ன்மெண்டு ஏற்கனவே செய்திருக்கும் பல முயற்சிகளை எடுத்துச் சொல்லி, திருச்சினாப்பள்ளியிலிருந்துவந்த தந்திப்படி ஒரு விசாரணைக் கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்று இந்தியா சேக்ரிடரிக்குத் தெரிவித்திருப்பதாயும் தென்னாபிரிக்கா வெள்ளையர் கொடுமைகள் செய்யவில்லை என்று மறுத்தபோதிலும், அந்த மறுப்பில் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கும் கொடுமைகள் உலகத்தில் நாகரிகமுள்ள ஜனங்களனைவரும் நிந்திக்கக் கூடியனவாயிருக்கின்றன" வென்று லார்ட் ஹார்டிஞ்ச் சொன்னார்.

"தென் இந்தியாவின் பொருளாதார நிலைமை விஷயமாய், பல பிரேரணைகள் உபசரணைப் பத்திரிகைகளில் குறிப்பிடப்பட்ட படியால், அவைகளைப்பற்றி விஸ்தாரமாய்ப் பதில் சொல்லப்பட்டது. இந்த மாகாணத்து டிஸ்ரிக்ட் போர்டுகள் தனியான வரியை வசூல் செய்து ஜனங்களின் பணத்தைக் கொண்டு கிளை ரெயில்வேக்கள் போடுவது நல்ல முயற்சி யென்று சிலாகித்தார். மெட்ராஸ் பாங்கியும் வேறு சிலபாம்களும் (Firms) இந்த ரயில்வேக்களுக்காகக் குறையும் பணத்தைத் தாங்கள் கொடுப்ப



தாக முன்வந்திருப்பதையும் சொன்னார். சென்னைத் துறைமுகமும் மற்ற கீழ்க்கரைகளிலுள்ள துறைமுகங்களும் திருத்தப்பட்டு, மாகாணத்து வியாபாரம் அதிகமாயிருப்பதைப் பற்றியும் சொன்னார். சட்ட சபை ஸ்தாபனங்களில் திருத்தங்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு, காலம் இன்னும் போய்த்தான் அத்திருத்தங்கள் கவனிக்கப்பட வேண்டு" மென்று பதில் சொன்னார்.

கார்பொரேஷனுக்கு பதில் சொன்னதில் "அதிகாரப் பிரிவினை கமிஷன் செய்த சிபார்சுகள், இந்தியா மந்திரியால் ஆமோதிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார். கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களைப் போலல்லாமல் சென்னை நகரத்தில்மாத்திரம், விஸ்தாரமான பசுந்தரைகள் இருப்பது நகரத்தின் பாக்கியமென்றும், அதைப் பத்திரப் படுத்தி வைக்க வேண்டுமென்றும் சொன்னார். சென்னை கார்பொரேஷன் நகரத்தின் அபிவிருத்தியின் பொருட்டு $1\frac{3}{4}$ கோடி ரூபாய் வடிகால் வேலைகளிலும் தண்ணீர் வசதி வேலைகளிலும் செலவிடப் போகும் விஷயம் விரும்பத் தக்கதென்றும் கடந்த வருஷத்தில் கார்பொரேஷனுக்கு 25-லக்ஷம் ரூபாய் இந்தியா கவர்ன்மெண்ட் இனாம் கொடுத்திருக்கிறதென்றும், இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கும்போது தம்முடைய கவர்ன்மெண்ட் கார்பொரேஷனுக்கு வேண்டிய உதவி செய்யத் தயாரா யிருப்பதாகவும், சென்னை ஜனங்களிடத்திலும், கார்பொரேஷனிடத்திலும் தம்முடைய அனுதாபம் எப்பொழுதும் இருந்து வருமென்று உறுதி கூறுவதாகவும் சொன்னார். வருஷா வருஷம் கார்பொரேஷன் சென்னையிலுள்ள ஆஸ்பத்திரி முதலிய கவர்ன்மெண்ட் ஸ்தாபனங்களுக்குச் செய்து வரும் 50 ஆயிரம் ரூபாய் திரவிய சகாயமும், இனிமேல் இந்தியா கவர்ன்மெண்டாரால் அந்த ஸ்தாபனங்களுக்குச் செய்யப்பட வேண்டு மென்பதை தமது கவர்ன்மெண்ட் அங்கீகரித்திருக்கிறதென்றும் சொன்னார். சுதேசமித்திரன்."

---

## தென் ஆபிரிக்காவில் கஷ்டப்படும் இந்திய ஸ்திரீகளும் குழந்தைகளும்.

நவம்பர் மாசப்பத்திரிகையில் தென் ஆபிரிக்காவில் நம்மவர்கள் படும் கஷ்டங்களைக் குறித்தும் அவர்களுக்கு திரவிய சகாயம் செய்ய ஒவ்வொருவரும் முன்வர வேண்டுமென்று அடங்கிய ஒரு அநுபந்தம் அனுப்பியிருந்தோம். இப்பத்திரிகையில் ஜெயிலிலிருக்கும் ஸ்திரீகள் குழந்தைகள் அடங்கிய சித்திரப்படம் ஒன்றை தயார் செய்து வைத்து அனுப்பியிருக்கிறோம். நமது சகோதரிகளும் குழந்தைகளும் வெகுதூரத்திற்கு அப்பாலுள்ள தென் ஆபிரிக்காவில் படாத கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண்

டிருப்பதைக்கேட்கநமக்கு ஒருவிதநடுக்கம்உண்டாய் விசனத்தையுண்டாக்குகிறது. ஆயினும் மனோதைரியத்தைக் கைவிடாமலிருந்துவரும் நமது சகோதரர் சகோதரிகள், குழந்தைகள் முதலியவர்கள் பின்னிட்டாவது சுகமாகயிருக்க நாமெல்லோரும் நம்மாலியன்ற பெரும் உதவிசெய்ய முன்வர வேண்டும். அதாவது மாதர்கள் சென்னையிலும், ஒவ்வொருபட்டணத்திலும் சபை கூடி எல்லா சகோதரிகளிடத்திலும் கையெழுத்து வாங்கி, மனு தயார்செய்து, நமது காருண்யமுள்ள மேரி ராணியாருக்கும் எச் ஈ. லேடி ஹார்டிஞ்ச், எச்.ஈ.லேடி பெண்ட்லண்ட் முதலியவர்களுக்கும் அதை அனுப்பமுன் வருவார்களென்று நம்புகிறோம். இவ்விதம் பம்பாய்முதலியவிடங்களில் மாதர்கள் செய்து வருகிறார்கள். நாமும் இச்சமயத்தை வீணாகவிட்டு, விடாமல், இப்படிச்செய்தால் மேரி ராணியாரும், எச் ஈ. லேடி ஹார்டிஞ்சும், எச்' ஈ. லேடி பெண்ட்லண்டும்தங்களாலியன்றஉதவி செய்யக்கூடும். இச்சமயத்தைக் கை நழுவவிடாமல் ஒவ்வொரு ஊரிலும் சபை கூட்டிவைக்க மாதர்கள் பின்வாங்கமாட்டார்களென்று நம்புகிறோம். மேலும் தங்களாலியன்றளவு பண உதவியும் செய்ய முன்வரும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம் .இந்த பண்டுக்கு உத்தேசித்த பணத்தை, சென்னைப்பட்டணம், பீச்சிலிருக்கும் 'இண்டியன் பாங்கில், இண்டியன்தேன் ஆப்பிரிகாலீக்கணக்குக்கு என்று எழுதியும் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.

---

## நீர் ஆவியும் ஜலம் பொங்குதலும்.
## இரண்டாம் பாகம்.

ஜலத்தின் மேற்றளத்தில் அழுத்தம் அதிகமாகும் ,போது பொங்கும டெம்பரேசரும் அதிகமாகின்றதென்றும் அழுத்தம்குறையும்போது பொங்கும் டெம்பரேசர் குறையுமென்றும் போன பாடத்தில் சொன்னோமல்லவா? அப்படியானல் கடலோரத்துப் பிரதேசத்தில் எந்த டெம்பரேசரில் ஜலம் பொங்குகின்றதோ அதே டெம்பரேசரில் மலைப்பாங்கான உயர்ந்த இடங்களிலும் ஜலம் பொங்குமா என்பதை விசாரிக்கவேண்டும்.

சமுத்திர மட்டத்தில் இருக்கும் இடங்களில் வாயுவின் அழுத்தம் எவ்வளவோ, அதைவிட மலைப்பாங்கான இடங்களில் வாயுவின் அழுத்தம் குறைவென்றும், பூமியின் உயரம் அதிகமாக அதிகமாக வாயுவின் அழுத்தம் அவ்வவ்விடங்களில் குறைகின்றதென்றும் முன் ஒரு பாடத்தில் படித்து இருக்கிறோம். வாயுவின் அழுத்தம் குறையவே ஜலத்தின்மேற்றளத்தின் மீதுள்ள அழுத்தமும் குறைந்துபோகுமல்லவா? அது காரணத்தால் ஜலமும் குறைந்த டெம்பரேசரில் பொங்க வேண்டியது நியாயமே.



அதுவேதான் பரிசை்ஷ செய்து பார்த்தபோது நிகழும் விஷயம். கோயமுத்தூரில் எவ்வளவு டெம்பரேசரில் ஜலம் பொங்குகின்றதோ அதைவிடக் குறைவான டெம்பரேசரில் மேட்டுப் பாளையத்தில் ஜலம் பொங்கும். அதை விடக்குறைந்த டெம்பரேசரில் குன்னூரில் ஜலம் பொங்கும். இது அநுபவத்தில் பரிசை்ஷ செய்து பார்க்கக் கூடிய விஷயம்.

ஆயின் அவ்விடங்களில் பருப்பு முதலிய கடின பதார்த்தங்கள் சீக்கிரம் வேகமாட்டாதே என்று நீங்கள் கேட்கலாம். அதுவும் உண்மையே. பருப்பு நன்றாக வேக வேண்டுமானல் பின்வரும் உபாயங்களை அநுசரிக்கவேண்டும். (1) ஜலத்தின் மீதுள்ள அழுத்தத்தை அதிகப்படுத்த வேண்டும். எப்படி? ஒரு வாய் குறுகலான பாத்திரத்தில் ஜலத்தைப் பொங்கவிட்டு வேறு ஒரு பாத்திரத்தால் அதன் வாயை மூடவேண்டும். மூடினபோது நீராவி தாராளமாய் வெளிப்போகாமல் ஜலத்தின்மீது அழுத்துகின்றது. இவ்விதமாக 4, 3 டிகிரி வரையில் டெம்பரேசரை ஏற்றலாம்.

(2) 36, 37, வது பாடங்களில் சொன்னபடி ஜலத்தில் ஏதாவது சில வஸ்துக்களைக் கரையச்செய்தால் அது காரணம்பற்றி கொதிக்கும் டெம்பரேசர் அதிகமாகலாம். ஜலத்தில் கொஞ்சம் சோடா உப்புப் (Soda) போட்டு பருப்பு வேகவைப்பதின் கருத்து இதுவே. மலைப்பிரதேசத்தில் இருப்பவர்கள் இவ்வகை உபாயங்களைச் செய்தே பிரதிதினமும் சமையல் செய்கிறார்கள் என்பதற்குச் சந்தேகமே கிடையாது.

வாயுவின் தன்மையைப் பற்றியும் அதன் அழுத்தத்தைப் பற்றியும் எழுதிய பாடங்களில், வாயுவின் அழுத்தத்தைத் தெரிந்துகொண்டு, அதனின்று அவ்விடத்தின் உயரத்தை நிர்ணயம் செய்யலாமென்று சொல்லியிருக்கிறோம். இப்பாடத்தில் இதுவரையிலும் சொன்ன விஷயங்களிலிருந்து ஜலம் பொங்கும் டெம்பரேசரும் உயரத்துக்குத் தக்கபடி மாறுகிற படியால் அதைக் கொண்டும் கூட ஒரு விதமாய் ஒரு இடத்தின் உயரத்தை கணக்கிட முடியுமென்று சாஸ்திர பண்டிதர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி முற்றிலும் சொல்லுவதற்கு சாத்தியமில்லையாகையால் இவ்வளவோடு நிறுத்துவோம்.

புத்திசாலிகளான சில என்ஜினீர்கள் இவ்வுண்மைகளை அநுசரித்து ஜலத்தை மிக உயர்ந்த டெம்பரேசரில் கொதிக்கும்படி செய்கிறார்கள். சில உயர்தர நீராவி இயந்திரங்களில் ஜலம் சுமாய் 400, 420 டிகிரியில் பொங்கும்படி செய்யப்படுகின்றது. அதாவதுநீராவி 400 டிகிரி டெம்பரேசருக்குச் சூடேறுகின்றது. அப்பொழுது ஆவியின் அழுத்தம் சாதாரண வாயுவின் அழுத்தத்தை விட சுமார் 15, 16, மடங்கு அதிகமாக இருக்கும். அத்தகைய இயந்திரம் ஒன்று உடைந்து விட்டால் என்ன

விபரீதம் ஆகும் என்பதை நீங்கள் ஆலோசனை செய்து பாருங்கள். வாயுவின் அழுத்தத்தை விட அவ்வியந்திரத்தில் உள்ள ஆவி 15 பங்கு அதிகமாய் அழுத்துவது பற்றி அது இயந்திரத்தையே பிடுங்கிக் கொண்டு பக்கத்தில் உள்ள வீடு, மனிதன், 'சுவர் முதலான எல்லாப் பொருள்களையும் நாசமாக்கிவிடும். அதன் பொருட்டே அவ்வித யந்திரங்கள் நேர்த்தியான உருக்கினால் (எஃகினால்) செய்யப்படுகின்றன. மேலும் அவற்றை பரீக்ஷை செய்ய அதிக சம்பளம் கொடுத்து பாய்லர் இன்ஸ்பெக்டர்களை சர்க்காரில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவ்வுத்தியோகஸ்தர் 2, 3 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு யந்திரத்தையும் பரிசோதிப்பார்.

ஆர். கே. சுவாமி, பி. ஏ. எல். டி.

---

## கமலாலயம்

மனோரஞ்சனி படிக்கும் மாதர்களே, என்னைச் சற்று மன்னிக்க வேண்டும். ஒவ்வொரு வாரத்துச் சபையைப் பற்றியும் பேச வேண்டுமானால் முதலில் முகவுரையாக ஏதாவது சொல்ல விஷயம் கிடைப்பதில்லை. சபையில் நடக்கப் போகும் சமாசாரம் சில சமயங்களில் முதலிலேயே தெரிந்தால் அதை ஒட்டிப் பேசுவதற்கு ஏதாவது பிரயத்தனம் செய்ய அநுகூலப்படும். மற்றப்படி அசம்மந்தமான விஷயத்தை, எடுத்துக்கூறி 'அதிகப்பிரசங்கிப் பெயர் பெற எனக்கு இஷ்டமில்லை. மேலும் ஆதியில் நான் கூடியமட்டில், சபையோர் பேசும்' விஷயங்களை மட்டுமே சொல்லுவதாக மேற் கொண்டிருக்கிறபடியால் அவ்விதம் செய்வதேயுக்தமென்று தோன்றுகின்றது.

வழக்கம் போல் இன்றைய தினமும் சபை கூடும். விசேஷமாய் வியாஸம் வாசிக்கவாவது உபன்னியாஸம் செய்யவாவது ஒருவரும் இல்லையென்றே எண்ணுகின்றேன். ஏனெனில் நேற்றுக் கொடுத்தனுப்பின விளம்பரக்கடுதாசியில் ஒரு விஷயமும் தெரியப்படுத்தவில்லை. ஏதோ சிறிது நேரம் சபை கூட்டிவிட்டு எல்லாரும் சம்பாஷித்துக் கொண்டு இருந்த பின்னர் சபை கலைந்து விடும் என்று எண்ணுகின்றேன்—'கல கல' என்று மணி சப்தம் கேட்கின்றதே என்னவென்று பார்ப்போம். அதோ வண்டியில் வருவது யார்? ருக்மணியம்மாள் போல் தோன்றுகிறது. ஏது இன்றைக்கு $4\frac{1}{2}$-மணிக்கே வந்து விட்டார்களே!

ருக்மணியம்மாள் வண்டிவிட்டு இறங்கி உள்ளே நுழைகின்றார்.

வண்டிக்காரன்:—''வீராசாமியாரே (என்னைக் கூப்பிடுகிறான்) என்ன இன்னைக்கு இன்னும் ஒரு வண்டியும் வரவில்லையே.''



நான்.—'' வரும்; என்ன இப்பொழுது பொழுதாய் விட்டதா என்ன இப்பொழுதுதானே $4\frac{1}{2}$-மணி ; வரும் வண்டிகள் சாவகாசமாய் ''

வண்டிக்காரன் '' நாங்கூட சில வண்டிகள் ராஜவீதியில் நிக்கரதைப் பார்த்தேன். அதுபத்தி ஏதாவது தடபுடல் இனிக்கிக்கூட இருக்குமோ என்னு எண்ணினேன்.''

நான் '' தடபுடல் என்ன ?''

வண்டிக்காரன் '' போன எட்டில் யாரோ ஒரு அம்மா என்னவோ மூச்சுவிடாமல் கோடை மழை போலே பொழியல்லையா ? அப்படி ஏதாவது இன்னிக்குக்கூட இருக்குமோ என்னு எண்ணிக்கிண்டேன்.''

நான்:—' அப்படியா ? அவ்விதம் தடபுடல் ஒன்றுமில்லை. போன வாரம் இந்த வாரம் போல் இருக்கிறதா ? இது சொல்ல வேண்டுமோ—''

அதற்குள் உள்ளிருந்து என்னைக் கூப்பிடவே நான் போகவேண்டியதாயிற்று.

ஞானம் '' வீரா கீரிப்பிள்ளைக் கூட்டை எங்கே வைத்து இருக்கின்றாய் ? அங்கே கூட்டிக்கொண்டு போ எங்களை, ருக்மணியம்மாள் கீரிகளைப் பார்க்க வேண்டுமென்கிறார்கள்.'' என்னவே, தோட்டத்துக்கு நடுவே லதாக்கிரகத்துப் பக்கத்தில்வைத்திருக்கும் கீரிக்கூட்டண்டை அவர்களை அழைத்துக்கொண்டு போகவே, ஞானம்பாள் வருவதைப்பார்த்த கீரிப் பிள்ளைகள் சந்தோஷத்துடன் கத்த ஆரம்பித்தன. கூட்டைத் திறந்து அவற்றை மார்பிலும், தோளிலும் வைத்துக்கொண்டு விளையாடினாள். அதைப்பார்த்த ருக்மணியம்மை ஆச்சரியத்துடன் '' ஞானம்பா, இவை உன்னைக் கடிக்காதோ? இப்படி விளையாடுகிறாயே. துஷ்ட ஜந்துக்களை இவ்விதம் எடுத்து விளையாடுவது தப்பு'' என்றாள்.

அதற்கு ஞானம் '' அப்படியில்லை அம்மா ! இவை கடிக்காது ! ஏனெனில் மிகவும் பழகியவை. மேலும் எந்தப் பிராணியும்நாம் அதைத்தொந்தரவு செய்யாவிட்டால் நம்மை அது கடிப்பதே இல்லை, நீங்கள் பயப்பட வேண்டாம்'' என்று ஒரு குட்டியை ருக்மணியம்மாள் மடியில் விட்டாள். கீரிப்பிள்ளை அன்போடு அவள்மீது தன் மூக்கைத் தீட்டிக்கொண்டும் தலையை மடியில் வைத்துப் படுத்துக் கொண்டும் விளையாடிற்று. ஆளுக்கு ஒரு குட்டியாய் எடுத்துக்கொண்டு தோட்டத்தில் சற்று உலாவிக்கொண்டே அங்கிருந்த புஷ்பச் செடிகளைப் பார்த்துக்கொண்டு சென்றார்கள். மணி 5 அடிக்கவே ஞானம் என்னைப்பார்த்து '' வீரா இதோ கீரிகளை கூட்டில் அடைத்துவிடு நாங்கள் சபைக்குப் போகிறோம் பொழுதாய் விட்

டது” என்று சொல்லிவிட்டு விரைந்து ஓடினாள். நானும் கிரிகளை விட்டு விட்டு கதவண்டை போய் நிற்கவே, அங்கே அறையில் ஒருபெரிய வாக்கு வாதம் நடந்து கொண்டிருந்தது.

சுந்தரவல்லி “எப்படி இருப்பினும் நீங்கள் ஒரு காரியத்திலேயே ஜனங்களுடைய குணகுணங்களை நிர்ணயம் செய்வது சரியன்று.

அம்மனுஷி அவமரியாதையாய் எல்லாரையும் நடத்துவதாய் இருந்தாலும் இருக்கலாம். நீங்கள் போன சமயம், அவ்விடம் நிகழ்ந்து கொண்டிருந்த காரியம், இவற்றை யெல்லாம் ஆலோசனை செய்து கொண்டு, நீங்கள் அதே இடத்தில் அதே காரியம் செய்துகொண்டிருந்தால் மற்றவர்களை எப்படி நடத்தி இருப்பீர்கள் என்று யோசிக்க வேண்டும்.”

மங்களாம்பாள் “நானா! நானா!! நீங்கள் இவ்வளவு கேவலமாய் என்னை நினைப்பீர்கள் என்று எண்ணவேயில்லை. நான் எவரையும் எச்சமயத்திலும் அவமதிக்கவே மாட்டேன். இன்னமும் கேளுங்கள். நான் அவர்கள் வீட்டுக்குப் போனபோது மணி $4\frac{1}{2}$. இரண்டு மூன்று பேர்களே அம்மனுஷியுடன் உட்கார்ந்துஇருந்தனர். என்னைக்கூட்டிக்கொண்டுபோன சினேகிதி அந்த அம்மாளிடத்தில் “ஜானகியம்மாள்! இதோ என்னுடன் வந்துஇருக்கிறவர் மதுரையில் ரேன்ஜ் ஆபீஸருடைய மனைவி சுந்தரவல்லியம்மாள். மதுரைக் கமலாலயத்துச் சபையில் ஒரு மெம்பர்.” எனவே, வாவென்று கூடக் கூப்பிடாமல் “அப்படியா” என்று சொல்லிவிட்டு தன் நாற்காலியை விட்டு எழுந்து போய்விட்டாள். அப்படிப்பட்டவளை அனைவரும் ஸ்தோத்திரம் செய்கிறார்கள். என்னத்துக்கு என்பதை நீங்கள் ஆலோசிக்க வேண்டியது. அவள் தகப்பனார் 2-லக்ஷம்ரூபாய் ஆஸ்தி சம்பாதித்து இருக்கிறாராம். ஒரே பெண்ணும். ஆகையால். இப்படி யெல்லாம் மற்றவர்களை அவமரியாதை பண்ண வேண்டுமா? மேலும் வேலை ஏதாவது இருந்தாலும் சரி; அதுவும் இல்லை. பட்டாடையும் வைர நகைகளும் போட்டுக்கொண்டு அப்பொழுதுதான் நுழைந்த ஒரு பெண்மணியைக்கண்டு அவளிடத்தில் ஓடிப்போய் விட்டாள். இப்படியா வந்தவர்களுக்கு மரியாதை செய்வது? எனக்கு அப்பொழுது உண்டான மன வருத்தத்துக்கு அளவில்லை. ஆயினும் என் சினேகிதிக்காக முடியும் வரையில் அவ்வீட்டில் இருக்க வேண்டி யிருந்தது” என்று ஒரே அடியாய் மூக்சுவிடாமல் பேசித்தீர்த்தாள்.

ஒருவரும் பதில் சொல்ல முடியவில்லை. கிழவி அகிலாண்ட நாயகியம்மாள் மெதுவாய் “குழந்தைகளே! நீங்கள் ஒருவிஷயத்தை கவனிக்க வேண்டும். பெருந்தன்மை யென்பது சுபாவமாய்ச் சிலருக்கு வருகின்றது. சிலருக்குக் கற்றுக் கொடுத்தால் வருகின்றது. சில கீழ்மக்கட்கு சொல்லிக் கொடுத்தாலும் வருவதில்லை. நான் குழந்தையாய் இருக்கும்



போது என் தகப்பனார் எனக்கு ஒரு கதை சொல்வதுண்டு. அது எனக்கு இன்னும் நன்றாய் ஞாபகம் இருக்கின்றது. சொல்லுகிறேன் தயவுசெய்து சற்றுக் கேளுங்கள் :—

## பெருந்தன்மையை விளக்கிய அரசன் கதை

பண்டைக்காலத்திலே வட இந்தியாவில் இராஜ புத்திர அரசர்கள் அரசாட்சி நடத்திய நாளில் பாஞ்சாலதேசத்தில் வீரபத்திரவர்மா என்னுமொரு அரசன் இராஜ்ய பாரம் செய்து வந்தான். அவன் மநு நீதிவழுவாது அரசாண்டும், தன்னுயிர்போல மன்னுயிரைக் காத்தும், குற்றவாளிகளை தண்டித்தும், சற்ஜனரைப் போற்றியும், உலகாண்டதை இன்னுமும் அத்தேசத்தார் கொண்டாடுகின்றனர். அரசாக்ஷி செய்யும் வழியில் வீரபத்திரவர்மாவுக்கு மகனென்றும், மனைவி யென்றும், தம்பியென்றும், தாயென்றும், வித்தியாசம் செய்யவே தெரியாது. போரில் யுத்தம் செய்யுங்கால் தன் ராணுவ உத்தியோகஸ்தர்களின் உயிர் எவ்வளவு சிறந்ததோ, அவ்வளவு சிறப்புடைத்து, ஒவ்வொரு வீரனுடைய உயிரும், என்பதே அவ்விராஜனுடைய நிலையான கொள்கை. மன நிரம்பிய அன்புடன் ஒவ்வொரு வீரனையும் ஆதரவாய் நடத்தின படியால், ஒவ்வொருவனும் அரசனைத் தந்தை யென்றெண்ணி சிரமேற் கொண்டனர்.

இவருக்கு விக்ரமன் என்ற மூத்த குமாரன் பிறந்தான். விக்ரமன் இளம்பிராயம் முதல் தன் அம்மான் வீட்டில் வளர்ந்தது பற்றி பஞ்சால தேசத்தில் அநேக வருஷங்களாய் இருக்கவே யில்லை. பிரஜைகள் எல்லாரும் நம் இளவரசைப் பார்க்கவேண்டு மென்று ஆசைப் பட்டுக்கொண்டிருக்கையில், அரசன் கட்டளைப்படி விக்ரமனைப் பாஞ்சால தேசத்துக்குக் கொண்டு வந்து விட்டனர். வீரபத்திரனிடத்தில் தந்தையும் மக்களையும் போல் பழகிய இராஜ புத்திர வீரர், சகோதர வாஞ்சையோடு விக்ரமனுடன் பழகும்படி நெருங்கவே, அவன் அவ்வீரர்களைக் கடிந்து, இகழ்ந்து, ஏளனம் பண்ணினது மன்றி, அவர்களுக்கும் தனக்கும் உள்ள தாரதம்மியத்தை எடுத்துக்காட்டி அவர்களை நிந்தித்தான். இராஜ்யத்தில் மிக்க தனவந்தர்களும், சேனைத்தலைவர்களும், இராஜாதிபதிகளும்—ஆகிய பிரபுக்கள் வந்து இளவரசனைக் காணவே, அவர்களையும் தன் சேவகர்கள் என்றும், தன்னிடம் உழைத்துப் பிழைக்கின்றவர்கள் என்றும், பித்தன் போல் பிதற்றலுற்றான். நாளடைவில் எல்லாரும் இளவரசனை வெறுக்கத் தொடங்கினர்.

மேலும் இவ்விளவரசுக்கு வித்தை கற்பிக்க ஏற்படுத்திய குருவும் பிள்ளையின் குணத்தைச் சிறிதும் மாற்ற முடியவில்லை. அரசன் சரியாய் இருக்கும் வரையில் இளவரசனைப்பற்றி யார் அதிகமாய் கவனிக்கின்றார்கள்!! நாளடைவில் பிள்ளையின் குணம் இத்தன்மைத்து என்று அரசனுக்

குத்தெரிந்தது. இதைக் கேள்வியுற்ற போது அரசனுக்கு உண்டான துக்கத்துக்கு அளவில்லை. "தவறாது கொல்லும், பின் வாங்காப்புலி யேறு" போன்ற இராஜபுத்திரவீரர்களிடத்தில் இச்சிறுவனுடைய டம்பம் செல்லுமா? எனக்குப் பின்னர் இவன் ஒரு நிமிஷமேனும் இராஜ்யபரிபாலனம் செய்யக்கூடுமா? குழந்தை யென்று பல வருஷகாலமாய் உண்மையைக் கற்பிக்க வழிதேடாமல், அவனை மனம் போன படியே விட்டு விட்டேன்; இப்பொழுது வயது வந்தும் இப்பிள்ளையின் குணம் மாறவில்லையே!! கலியாணம் செய்தால் மாறுவானோ என்று எண்ணி அதையும் செய்து வைத்தேன்; எதும் பயன்படவில்லை. சத்குருவென்று எவரும் கொண்டாடும் சார்வ பூமரும் இவனை நல்வழிக்குத் திருப்பக் கூடவில்லை. அறிவில்லாப் பிள்ளையை பெறுவதினும் தந்தைக்கு வேறு துன்பம் உண்டா" என்று பலவாறாக வருத்தப்பட்டுப் பிறகு "ஆயினும் என்னால் கூடிய மட்டில் பிரயாசைப்பட்டு இவனைக் கட்டாயம் திருத்தவே வேண்டும். என் உயிர் உள்ள வரையில் முயல்வேன்" என்று மறுபடியும் தீர்மானம் செய்து கொண்டான்.

காலக்கிரமத்தில் விக்ரமன் மனைவி ஒரு மகனைப் பெற்றாள். இதுவும் நல்லசமயம் என்று அரசன் தன் மகனுடைய அரண்மனைக்குச் சென்று "பிள்ளாய் இன்று எனக்குப் பௌத்திரன் பிறந்தான்; உனக்குப் புத்திரபாக்கியம் உண்டாயிற்று. என்னிலும் பாக்கியவான் உண்டோ! என் குலத்தை உத்தாரம் பண்ணப்பிறந்து இருக்கும் கண்மணியைப் பார்த்துவரப் போவோம் வா" என்று அழைத்தான்.

பிரஸவக் கிரகத்துக்கு முன்வந்து நின்றதும் அரசன் "நீ சற்று இவ்விடம் இருப்பாயாக; இதோ வந்துவிட்டேன்" என்று தன் மந்திரியுடன் ஏதோ பேசுவான் போல அப்புறம் போனான். தொட்டிலின் பக்கத்தில் நெருங்கவே இளவரசன் முன் இரண்டு குழந்தைகள் தென்பட்டன. இரண்டும் ஒரே விதமாய்க் கைகளையும் கால்களையும் ஆட்டிக் கொண்டு கண்கூடத் திறவாமல் படுத்து இருக்கின்றன. தன் குழந்தை எதுவென்று இளவரசனுக்குப் புலப்படவில்லை. சுற்றிலும் பார்த்தான். ஒரு சேவகராவது தாதியாவது அங்கே காணோம். உரக்கக் கூப்பிடவே தம் இளவரசின் குரலும் தெரியுமாகையால் தாதிகள் ஓடிவந்தார்கள். வந்தென்? அவர்களும் இது தான் அரசன் குழந்தையென்று சொல்லக் கூடவில்லை. டம்பமும், அகங்காரமும் குடிகொண்ட வணங்காமுடி மன்னனான விக்ரமனுக்குக் கோபமுண்டதென்று சொல்லவும் வேண்டுமா? "இதோ உங்களைத் துலைக்கின்றேன். என்னை ஏமாற்றவா இவ்விழிவான விளையாட்டு!! என்னருமைப் பிள்ளையின் கட்டிலில் எப்பிள்ளை இணையாக வந்து படுக்கக்கூடும்? என்னை யார் என்று எண்ணி இவ்வேலை செய்



தீர்கள்?" என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டவே, அதையெல்லாம் கேட்டிருந்த வீரபத்ர ராஜன் ஓடிவந்து "அப்பா! விக்ரமா!! இந்தப் புண்ணிய தினத்தில் நீ இப்படியும் கோபிக்கலாமா? நிகழ்ந்ததென்? தீர விசாரிப்போம். இங்ஙனம் வைவதில் பயனென்னே?" என, இளவரசன் நிகழ்ந்ததைச் சொல்லவே, அரசன் "இவ்வளவுதானா! நீ மஹாபெரிய இராஜ வம்சத்தில் பிறந்தவன் என்றும், ஒருவரும் உனக்கு அந்தஸ்தில் சரிசமானமானவர்கள் இல்லையென்றும், தினமும் எனது பிரஜைகளிடத்தில் பெருமை பேசிகொள்ளுகிறாயே! உன் மகன் உன்னைப் போன்ற சிறப்புடையவன் அல்லவா? உன் தேகத்தில் ஓடுவதாகச்சொல்லுகிற உயர்ந்த இரத்தம் உன்மகன் தேகத்திலும் ஓடுமல்லவா? அதைப்பார்த்து உன் மகனைத்தெரிந்து எடுத்துக்கொள். மற்றவர்களை வீணில் கோபிக்காதே. அப்படி உன்னாலேயே உன் மகனைக் கண்டுகொள்ள முடியாவிட்டால் உன் பெருமைப் பாராட்டின் பயன் என்ன?" என்றான். இளவரசு என்ன செய்வான்! அரசன் சொல்வது உண்மை யென்பது நன்றாய்த் தெரிகின்றது. மகனையோ கண்டுகொள்ள முடியவில்லை. வெட்கத்தால் தலைகுனிந்து "இரத்தத்தால் எவ்விதம் இரண்டு குழந்தைகளுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கக்கூடும்? அவ்விதம் செய்யக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. இரண்டு குழந்தைகளும் ஒரே விதமாகவே காணப்படுகின்றன" என்றான்.

உடனே அரசன் தன் பேரப்பிள்ளையை எடுத்துக் கட்டியணைத்துக் கொண்டு "விக்ரமா! இவனே என் குடியைத் தழைக்கவந்த கண்ணப்பன்!! இதோ இவன் காலில் மையினால் ஒரு அடையாளம் செய்து இருக்கிறேன் பார்த்தாயா? இக்குறிப்பின்றி நானும் என் பௌத்திரனைக் கண்டு கொள்வதற்கு நீ பட்டபாடுதான் படவேண்டியிருக்கும். நம்மரசக் குழவியாகிய இது மற்றக் குழந்தைகளைவிட எவ்விதத்திலும் வித்தியாசம் இல்லாமல் இருக்க, நீ அரசனென்றும், அரச குமாரன் என்றும், எங்ஙனம் பெருமை பேசிக்கொள்வது? எவ்விதத்தில் நீயாவது நானாவது சாதாரண மனிதர்களைவிட மேம்பட்டவன் என்று சொல்லக்கூடும்? மேன்மை பிறப்பினால் வருவதன்று; ஏதோ முன் ஜன்மத்தில் செய்த பூஜா பலத்தால் உனக்கு நல்லதிர்ஷ்டம வாய்ந்து இராஜ குமாரனாய்ப் பிறந்து இருக்கின்றாய்; உனக்கு மேன்மை வேண்டுமானால் உன் நல்ல குணத்தினாலும், நல் நடத்தையாலும், வரவேண்டுமே யல்லாமல் நேர் தப்பி நடப்பதினால் வரவேவராது." என்றான்.

இராஜகுமாரன் வெட்கித் தலைகுனிந்து நிற்கவே, அரசன் "இனியாவது உன் உண்மைத்தன்மையை அறிந்துகொண்டு மற்றவர்களைக் காண

மின்றி நிந்திக்காதே" என்றான். இராஜகுமாரனும் இனிச் செய்வதில்லையென்று ஒப்புக்கொண்டான்.

இராஜகுமாரனுடைய நடத்தையில் அன்றுமுதல் பலரும் ஆச்சரியப்படும்படியான மாறுபாடு உண்டாயிற்று. ஆயினும் அக்கிழவரசன் தன் மகனை அவ்வளவோடு விடவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு இன்னும் ஒரு முறை கவுரவத்தின் உண்மைத் தன்மையை விளக்க, ஒருநல்ல சமயம் கிடைத்தது. இளவரசனுக்கு உடம்பு செம்மையில்லாமல் இருந்தது பற்றி அரண்மனை வைத்தியர்கள் அவன் உடம்பிலிருந்து கெட்ட இரத்தத்தை அகற்ற வேண்டுமென்றனர். இளவரசன் தேகத்திலிருந்து எவ்வளவு இரத்தம் எடுக்க வேண்டுமோ அவ்வளவும் எடுத்தபின்னர் வைத்தியர்கள் அரண்மனைச் சேவகன் ஒருவனுக்கும் அவ்விதமே செய்யவேண்டியிருந்தது. இருவர்களுடைய இரத்தத்தையும் இரண்டு வெவ்வேறு பாத்திரங்களில் எடுத்து வைத்திருந்தனர்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு இளவரசன் ஏதோ காரியமாகத் தன் தகப்பனிடம் சென்றான். வந்த மகனோடு பேசிக்கொண்டிருக்கும்போதே வைத்தியர்களையும் அழைப்பித்தான். அவர்களை நோக்கி "வித்தியார்த்திகளே! இரண்டு பாத்திரங்களிலும் உள்ள இரத்தத்தை பரிசோதித்தீர்களே! அவற்றுள் எது சுத்தமானது; எது மிகவும் கெட்டுப் போனது சொல்லுங்கள்" என்றான்.

"அரசே, நாங்கள் பலமாதிரியான பரிக்ஷைகளும் செய்து பார்த்ததில் இந்தப் பாத்திரத்தில் உள்ளது மற்றதைவிடப் பத்துமடங்கு சிறந்ததென்று தோன்றுகின்றது" என்று ஒரு பாத்திரத்தைக் காட்டினர். அரசன் தன் மகனை நோக்கி "மகனே! வைத்தியர் காட்டிய பாத்திரத்தில் எவருடைய இரத்தம் வைத்து இருக்கிறோம் தெரியுமா? அதுதான் உன் சேவகன் சோமநாதனுடைய தேகத்திலிருந்து எடுத்தது. அது உன்னுடைய இரத்தத்தை விடச் சுத்தமாய் இருப்பதாக வைத்தியர்கள் சொல்லுகிறார்களே. அதன் காரணம் உனக்குத் தெரியுமா? அவனுடைய வாடிக்கைகள் நம்மவற்றைவிட மிதமானவை. மேலும் அவனைப் போன்றவர்கள் அநேக காரியங்களில் இயற்கை வழிகளைத் தப்பி நடப்பதில்லை. நம்மைப் போன்ற பிரபுக்கள் என்று பேர் வைத்துக்கொண்டிருக்கிறவர்களோ பெருந் தீனியினாலும், இயற்கை வழிகளை அநுசரியாமல் இருப்பதாலும் தம் தேக சௌக்கியத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். பிறக்கும்போது அனைவருக்கும் ஒரேவிதமான தேகத்தையே சுவாமி கொடுக்கிறார். அதைச்சீராய் வைத்துக்கொள்ளுகின்றவர் சிலர், தப்பிநடந்து தேகத்தைக் கெடுத்துக் கொள்ளுகின்றவர் சிலர். சுவாமி கொடுத்த தேகத்தைச் சரியான வழிகளில் உபயோகித்து மனத்தை விருத்திபண்ணி



பலருக்கும் நன்மை பயக்கும் காரியங்களை எவர் எவர் செய்கிறார்களோ அவர்களுக்கே யோக்கியதையும் கவுரவமும் கிடைக்கும். தன் தேகத்துக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் சுகத்தை நாடி இதர ஜனங்களுக்கு துக்கத்தை விளைவிக்கின்றவன் மீளா நரகத்தை அடைகின்றனன். அவனிடத்தில் அதிகாரம்இருபபின் அதற்குபயந்து அவனிடம் உள்ள வெறுப்பை ஜனங்கள் வெளிக்காட்டாமல் இருப்பினும் சமயம் வாய்த்தபோது அவனுக்கு நிச்சயமாகவே கேட்டை விளைவிப்பார்கள். உனக்கு புத்திசொல்ல இனிமேல் என்னால் மாளாது. எவ்விதம் வேண்டுமானாலும் நீ நடந்துகொள்" என்று சொல்லியனுப்பினான்.

பிற்காலத்தில் விக்ரமன் தன் தகப்பனாருக்குப் பிறகு அரசனானபோது, தன் கெட்டகுணங்களையெல்லாம் விட்டுத் தன்னுயிர் போல் மன்னுயிரைக்காப்பாற்றி, ராஜபுத்திரவீரர்களுக்குள்முதன்மையான அந்தஸ்தை வகித்து, தன் பின்னடையா வீரர்களைக் கொண்டு, ஒரு தடவை இரண்டு தடவை என்னாமல் பலமுறையும் எதிரிகளை வென்று இராஜபுத்திர குலத்துக்கே ஒரு நடுமணிபோல் விளங்கினான் என்பது சொல்லவேண்டுவதில்லை."

கதை முடிந்ததும் மங்களாம்பாள் "தாய்மார்களே பெண்டிராயினும் சரி, புருஷராயினும் சரி தகுந்தபடி சிறுபிராயமுதற் கொண்டே நல்வழியில் பழக்கப்படல் வேண்டும். அவ்விதம் பயிலாப் பாவிகள் திண்டுக்கல் ஜானகியம்மாள் போல் எல்லாரையும் அலக்ஷித்து பகைத்துக் கொள்ளுகிறார்கள்" என்றாள்.

ஞானம் "ஆகவே பிசகு அவர்மேல்இல்லையே போகட்டும். வீரபத்திரவர்மாப்போல் ஒரு பெரியவர் அந்த அம்மாளுக்கும் புத்தி புகட்ட வேண்டும். ஒருவர் இரண்டுபேர் இவ்விதம் அவமரியாதை செய்தால் பிராமணஸ்திரீகளே மரியாதைசெய்வதில்லையென்றுவதந்திபரவிவிடுகிறது." என்றாள்.

ருக்மணி "அம்மைமார்களே நான் அடுத்தமாதம் திண்டுக்கல்லுக்குப் போனால் எனக்கு என்னவேலையிருப்பினும் ஒருதடவை ஜானகியம்மைவீட்டுக்குப் போய் இவ்விஷயங்களை எடுத்துச் சொல்லி அவர் செய்தது தப்பிதம் என்று நேரிலேயே சொல்லிவிடுகிறேன்."

மீனாம்பிகை: "இன்று பாட்டி சொல்லிய கதையால் எவ்வளவு உண்மைகளை அறிந்து கொண்டோம். இனிநான் எங்கள் வீட்டு வாசற்பெருக்கியைக் கூட கடிந்து பேசமாட்டேன். அகிலாண்டம்மாள் வீட்டுச்சேவகர்கள் அந்த வீட்டைவிட்டு வரச்சம்மதியாமல் இருப்பதற்குக் காரணம் இப்பொழுதே விளங்குகின்றது" என்றாள்.

கமலாபாய் "இவ்விதமான கதைகள் இன்னும் சிலவற்றைக் கேட்போமானால் நமக்கு நீதிமார்க்கம் பிடிபடும் என்பதற்கையமில்லை."

சாவித்திரியம்மை: "ஆனால் பொழுதுபோகின்றது. சபைகலைவோம். எல்லாரும் சந்தனம் பூசிக்கொண்டு தாம்பூலம் எடுத்துக் கொள்ளுங்கள்— வீரா! வண்டிகளை பூட்டச்சொல்" என்றாள். அடுத்தவாரம் என்ன நிகழ்வதோ பார்ப்போம்.

வாயற்காப்போன்.

---

## ராஜாடைரி

நான் பேசாமல் இருந்தேன். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அம்மாதிரி கட்டுப்பட்டு இருப்பது என்னால் சகிக்கமுடியாதென்று நினைத்தேன். ஆனால் என் தோழன் ராமன் அங்கே வந்தால் நலமாயிருக்குமென்று ராமனை நினைத்துக்கொண்டே யிருக்க திடீரென்று கோறிய தெய்வம் குறுக்கேவந்தாப்போல் ராமனும் என்னைத் தேடிக்கொண்டு அங்கே வந்தான். அவனை என் கட்டை அவிழ்க்கும்படி சொன்னேன். கட்டவிழ்க்கப்பட்டவுடன் "ராமா, என்னுடைய புதிய நாயையும் அணிலையும் எடுத்துக்கொண்டு எங்கேயாவது நான் கெட்டப்பையனென்று ஒருவருக்கும் தெரியாத யிடத்திற்கு ஓடிப்போகலாமென்றிருக்கிறேன். நீ இதை ஒருவரிடமும் தெரிவிக்காதே" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டேன்.

சுமார் இரண்டுமணி காலம் வரை வழி நடந்து ஊருக்கு வெளியே போய்க்கொண்டிருக்கையில் ஒரு மரத்தடியில் ஒரு சோமாரி (Wagaband) ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் என்னைக் கூப்பிட்டு "எங்கே அவசரமாய்ப் போகிறாய்" என்றான்.

சோமாரிகள் போக்கிரிகளென்று எனக்குத் தெரியுமாகையால் அவனிடம் பொய் சொல்லக்கூடாதென்று நினைத்து "நான் வீட்டைவிட்டு ஓடிவந்துவிட்டேன். நான் அளவற்ற கெட்ட பையனென்றும, என்னை வைத்திருப்பது என் வீட்டார்களுக்கு வெட்கமாயிருப்பதாய் எனக்குத் தோன்றியதால், இனிமேல் அவர்களுக்கு கஷ்டம் கொடாமலிருக்க உத்தேசித்து ஓடி வந்துவிட்டேன்" என்றேன்.

"என்ன கெட்டகாரியம் செய்தாய். கொலைசெய்தாயா, அல்லது களவு செய்தாயா" என்றான் அவன். "அப்படியொன்றுமில்லை. நான் எவ்வளவு நல்ல எண்ணத்தோடு செய்தாலும் நான் செய்யும் காரியமெல்லாம் கெடுதலாகவே முடிகிறது. ஜனங்களுக்கோ என் எண்ணம் எவ்வளவு சிரேஷ்டமானதென்று தெரிந்துகொள்ள புத்தியுமில்லை. ஆகையால்



அவர்களுடன் சேர்ந்திருப்பது என்னால் முடியாதென்று நினைத்து ஓடி வந்துவிட்டேன்" என்றேன்.

என் நாயைப்பற்றி சொல்ல மறந்துவிட்டேன்.

அதைநான்தோந்திகணபதி என்ற என்சினேகிதன் ஒருவனிடமிருந்து ரூபாய் ஒன்று கொடுத்து வாங்கினேன். வரும்பொழுது வழியில் அவன் என்னை விளையாடக் கூப்பிட்டான். நான் காரியமாய்ப் போவதால் விளையாட வரமுடியாதென்றேன். அவன் கோபத்தால் நாயைக் கூப்பிட்டான். அந்த அயோக்கிய நாய் நான் அதை பணம்கொடுத்து வாங்கவில்லைபோல் உடனே கணபதி பின்னால் ஓடிவிட்டது. அந்த நாயை தண்டிப்பதற்கு அது சமயமல்லவென்று நினைத்து ஒரு கல்லைமாத்திரம் எடுத்து கணபதி மேலெறிந்து விட்டு நான் வந்துவிட்டேன். இந்த சங்கதியையும் அந்த சோமாரிக்குச் சொல்லி என்னுடைய அணிலையும் அவனுக்குக்காட்டி ஒரு குரங்குமட்டில் எனக்கு இருந்தால் குரங்காட்டித்தொழில் செய்து பணம் சம்பாதித்து பிழைத்துக்கொள்வேனென்றேன்.

அவனும் "அதோ அந்த காட்டுக்குள் தெரியும் என் வீட்டுக்குவா. என்னிடம் ஒரு குரங்குஇருக்கிறது. அதை உனக்குக் கொடுக்கிறேனென்றான்.

நானும் சரியென்று அவனுடன் கூடப்போனேன். அங்கே வீட்டையும் காணோம், குரங்கையும் காணோம். ஒரு மாத்தடியில் நாலுபேர் பயங்கரமான ஆள்கள் உட்கார்ந்துகொண்டு புலிக்கட்டம்(A game) ஆடிக்கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து புலிக்கட்டம் ஆடி என்னுடன் ஆடியவனை தோர்க்கடித்தேன். அதன்மேல் என்பெயரென்னவென்றான் அவன். என்பெயர் ராஜாவென்றேன். உனக்கு என்ன வேண்டுமென்றான். எனக்கு ஒரு குரங்கு வேண்டுமென்றேன். சக்தியிருந்தால் அதோ அந்த மாத்தின்பேரில் கட்டியிருக்கும் குரங்கை பிடித்துக்கொள் என்றான். நீண்ட கயிற்றால் கட்டப்பட்டு மாத்தின்பேரில் குரங்குஉட்கார்ந்திருப்பது வாஸ்தவமாயிருந்ததால் நானும் அது கட்டியிருக்கும்கயிற்றை அடியிலிருந்து பிடித்துக்கொண்டுகுரங்குபோல் "கீச்சு, கீச் சென்று" கத்திக்கொண்டு மாத்தின்மேல் விரைவாய் ஏறி குரங்கு வேறு கிளைக்குத்தாவிப் போவதற்குள் அதைப்பிடித்துக்கொண்டு முதலில் பளீர் பளீரென்று இரண்டடி கொடுத்தேன். திடீரென்று அடிவிழுந்ததும் அது பல்லைக்கெஞ்ச ஆரம்பித்தது. நானும் அதை இழுத்துக்கொண்டு கீழே யிறங்கினேன்.

அந்த கள்வர்களின் தலைவன் "நீ மிகவும் சாமர்த்தியசாலிதான். இன்று ராத்திரி நாங்கள் சொல்லுகிறபடி சரியாய் நீ செய்யும் பட்சத்தில்

நீ குரங்காட்டித்தொழில் பார்க்கவேண்டியது அவசியமில்லை. உனக்கு வேண்டிய திரவியம் கொடுக்கிறேன். நீ சுகமாய் வசிக்கலாம். நீ சரியாய் நடக்காவிடில் காலை சூரியவெளிச்சத்தை பார்ப்பது அரிது" என்றான்.

இவனுடைய கடைசிவார்த்தைகள் என் காதில் ஈயத்தை காய்ச்சிவிட்டாற்போல் பாய்ந்தன. நான் பதிலொன்றும் சொல்லாமல் சும்மாநின்றேன். ராத்திரி நான் தூங்கிக்கொண்டிருக்கையில் என்னை ஒருவன் வந்து எழுப்பினான். நானும் அவனுடன் கூடவே வெகுதூரம் நடந்துசென்றேன். வழியில் இரண்டுபேர் நின்றுகொண்டு விட்டார்கள். மறற்மூவரும் நானும் ஊருக்குள் போனோம், இருட்டு காடாந்தகாரமாயிருந்தது. பனி பெய்துகொண்டிருந்தமையால் குளிர் அதிகமாயிருந்தது. கம்பளி கொண்டு போர்த்தி அருகில் படுக்கவிட்டுக் கொள்வதற்கு அம்மா அங்கில்லையே என்று நினைத்து துக்கப்பட்டேன். கண்ணில் நீர் பெருகிற்று. ஆனால் நான் அழுவது அந்த கள்வர்களுக்கு தெரியாமலிருக்கும்படி மனதை திடப்படுத்திக்கொண்டு கால் வலித்தபோதிலும் அவர்களுக்கு சரியாய் நடந்து போனேன். நாங்கள் ஒரு பங்களாவின் வேலிச் சுவற்றண்டை போனதும் என்னைசுவற்றின்மேல் தூக்கிவிட்டு அந்த பக்கத்தில் குதித்து கதவைத்திறக்கும்படி சொன்னார்கள். நானும் அப்படியே செய்தேன். பிறகு என்னை அழைத்துக் கொண்டுபோய் வீட்டின் பின்கட்டு நிலவுக்கு அடியில் சிலகற்களைப் பேத்துவிட்டு அதின்வழியாய் உள்ளேபோய் கதவைத் திறக்கச்சொன்னார்கள். நான் யோசித்தேன். சொன்னபடி செய்யாவிடில் என் தலையை ஒரு புஷ்பம்போல் கிள்ளிஎறிந்து விடுவேனென்றான் ஒருவன். உடனே பயந்து உடம்பை சுறுக்கிக்கொண்டு பூனைபோல் பதுங்கி கஷ்டப்பட்டு அந்த துவாரத்தின் வழியாய் புகுந்து உள்ளேபோனேன். முன்னமேயே அவர்கள் கொடுத்திருந்த தீப் பெட்டியிலிருந்து இரண்டு குச்சி எடுத்துக் கிழித்து நான் இருக்கும் அறையைச் சுற்றிலும் கவனித்துப் பார்த்தேன்.

அப்பொழுது என்மனது பட்ட பாட்டை என்னென்று சொல்லுவேன். நெற்றி முகமெல்லாம் வேர்த்துப் போய்விட்டது. கை கால் நடுங்கிற்று. ஐயோ! தன் பிள்ளை திருடனாகிவிட்டான் என்று என் தாயார் கேள்விப்பட்டால் அவள் மனம் என்னமாய்த் துடிக்கும்! நல்லபையனாகி ஒருவருக்கும் கஷ்டமும் கெடுதியும் விளைவிக்காமல் நானே சம்பாதித்து நல்லவழியில் பிழைத்துக் கொள்ளலாமென்று உத்தேசித்து வீட்டைவிட்டு ஓடிவர "கிணறு வெட்ட பூதம் புறப்பட்டாப்போல்" இம்மாதிரி திருடர்களோடு சேர்ந்து திருட்டுத் தொழில் புரிய ஏற்பட்டதே என்று நினைத்து வருந்தினேன். "நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கின்றதே" என்று யோஜித்து நிற்கையில் "நேரமாகிறது. காரியத்தை



சீக்கிரம்முடி" என்று என்னை அதட்டிய ஒரு கம்மலான தொனி வெளியேயிருந்து வந்தது. உடனே இன்னுமொரு தீக்குச்சி கொளுத்திப் பார்த்தேன்.

டைரியே! இன்றைக்கு ராஜா பெரியமனுஷ்யனாய் விட்டான். நம்மூர் போலிஸ்பெரியதுரை. (Police Superintendent) கூட எனக்கு கைலாக்கு கொடுத்தார். (Shook hands) ஊரார் எல்லாரும் நான் மிகவும் கெட்டிக்காரன் என்றார்கள். என் வயதுக்குள் இன்றைக்குதான் என்னை ஒருவரும் கெட்ட பையனென்று சொல்லவில்லை. இந்த சந்தோஷ சமாசாரத்தை உன்னிடம் சொல்லி சுகிக்காமல் நான் வேறுயாரிடம் சொல்லப் போகிறேன்? நாள் தோறும் ஏதாவது வருத்தமான சங்கதியை உன்னிடம் சொல்லி வந்தேன். இன்றைக்குத்தான் ஒரு நல்ல சமாசாரம் சொல்லநேர்ந்தது. இனிமேல் கட்டாயம் நல்ல பையன் என்ற பெயர் வாங்கி விடுகிறேன். என்னை எல்லோரும் வெகு புத்திசாலி யென்றும் ஆனால் போக்கிரியென்றும் சொல்லுகிறார்கள். இனிமேல் புத்தியை நல்ல வழியில் உபயோகப் படுத்துவதாய் நிச்சயித்திருக்கிறேன். நான் செய்தகாரியம் என்னவென்றால்:—

தீக்குச்சி கொளுத்தி அறையைச் சுற்றிலும் பார்த்தேன். அது எங்கள் சமையல் அறை என்று தெரிந்தது. என் தாயார் புடவை ஒன்று அங்கே யிருந்தது. மற்ற சாமான்களும் எங்கள் வீட்டு சாமான்களாகத் தோன்றியதும் அது எங்கள் வீடுதானென்று தெரிந்துகொண்டு, மெதுவாய் இருட்டிலேயே மெத்தைமேல் போனேன். அங்கேவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. விளக்கை நிறுத்திவிட்டு என் தகப்பனார் படுக்கையண்டை போய் மெதுவாய் அவர் தலையணையின் அடியிலிருந்து சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு கீழே வந்து வெளியே நிற்கும் கள்வர்களுக்குக் காட்டி கதவுகள் பூட்டியிருப்பதாயும் அவர்களை மெதுவாய் திறந்துவிடும்வரையில் அங்கேயே யிருக்கும்படி சொல்லிவிட்டு மறுபடிமேலே போய் "அப்பா, அப்பா, எழுந்திருங்கள், மெதுவாய், கைத் துப்பாக்கியுடன் வெளியே போய் திருடர்களை பிடித்துக் கொள்ளுங்கள். இல்லாவிடில் அவர்கள் என் தலையைக் கிள்ளி விடுவார்கள் என்றேன். என் தகப்பனார் உடனே வந்து ஆள்களை மெதுவாய் எழுப்பி வீட்டில் காவல் வைத்து, என்னைப் போய் கதவைத் திறக்கும்படி சொன்னார். நானும் பின்கட்டுக் கதவைத் திறந்துவிட்டு வீட்டிலிருந்து சில வெள்ளி சாமான்களை முதலில் எடுத்து அவர்களிடம் கொடுத்தேன். அவர்கள் ஆசை அதிகமாக உடனே மூவரும் உள்ளே வந்தார்கள். தயாராயிருந்த என் தகப்பனாரும் மற்றவர்களும் சேர்ந்து அவர்களைப் பிடித்துக் கொண்டார்கள். வீட்டிலிருந்தவர்களெல்லாம் கூக்குரலிட அக்

கம் பக்கத்தார்கள் எல்லாரும் ஒன்று கூடினார்கள். இந்த திருடர்கள் அதுவரையில் சுமார் 20, 30 வீடுகளில் கொள்ளை யடித்திருந்தமையால் இவர்கள் பிடிபடவே எல்லோரும் என்னைக் கொண்டாடினார்கள். மறுநாள் காலையில் போலிசார்களோடு கூட திருடர்களிருந்த காட்டிற்குப் போய் மற்ற இருவர்களையும் காட்டிக் கொடுத்தேன். இவர்கள் திருடியிருந்த சொத்துக்களும் அகப்பட்டு விட்டன. என்றால் ஜனங்களுக்கு ஒரு நன்மை உண்டானதைப்பற்றி என் ப்ரியமுள்ள டைரியே! உனக்கு சந்தோஷம்தானே!

பி. வி. சேஷாத்திரிசர்மா

---

## STORIES from THE HISTORY of ROME.

## அரசர்கள் ஆட்சி.

முன்னொரு அத்தியாயத்தில் ரோமாபுரியை ஸ்தாபித்த விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்தோம். இப்பொழுது ரோமாபுரி அரசர்களை கவனிப்போம்.

ராமுலஸ் இறந்து அநேக வருடங்களாயின. இப்பொழுது துளசி ஹாஸ்டில்யஸ் என்பவன். அரசாட்சி செய்து வருகிறான். அரசனது முக்ய கவலை தன் ராஜ்யத்தை விஸ்தீரணப்படுத்த வேண்டும் என்பதே. ஆல்பா பட்டணத்தை யொழித்துத் தானே சுயமாக ஆட்சிபுரிய அவனுக்கு மிக ஆசை. ஆகவே அநேக வருடங்கள் இருபட்டணத்து ஜனங்களுக்கும் கடும்போர் நடந்தது. * * * * *

துளசிஹாஸ்டில்யஸ் : ஏ! வீரா! போய் மந்திரியை அழைத்துவா. (வீரன் போகிறான்). என்ன அநியாயம்! ஒரு பட்டணத் தரசன் நிமித்தமாக தினம் ஆயிரம் ஜனங்கள் மடிந்துபோகிறார்கள். இவ்வுலகத்து வியவகாரங்கள் அதிசயிக்கத்தக்கன. ஐயோ பாவம்! (மெதுவாக மந்திரி அறைக்குள் நுழைந்து அரசனுக்கு வந்தனம் புரிந்து நின்றான்.)

மந்திரி : பிரபோ ! என்ன கொஞ்சங் கவலைபோலும் ?

துளசி : ஆம். கொஞ்சமா, மிகவும் கவலையே.

மந்திரி : அடியேன் உத்திரவு.

அரசன் : நமது ராஜ்ய வியவகாரத்தில் என்ன அநியாயங்கள் நடக்கின்றன?

மந்திரி : ஹா ! அப்படியா !

அரசன் : நான் சொல்வது தெரியவில்லையா ? யுத்தவிஷயமாக எவ்வளவு ஜனங்கள் மடிந்துபோகிறார்கள்?

மந்திரி : ஐயோ ! மிகவும் கொடிது ! நான் ஒரு விஷயம்—

அரசன் : சீக்கிரம் !



மந்திரி : எதிரிகள் சேனையிலிருந்து ஒருவனையும் நம் சேனியிலிருந்து ஒருவனையும் சண்டை செய்யச்சொல்லி ஜயித்தவனது கட்சியே, யுத்தத்தில்—

அரசன் : ஆ! அதுவே மிகச்சிறந்தது. நம்மவரில் யாரை அனுப்பலாம்? செர்வியஸ் மிகுந்த தீரன். ஆனால் அவன் தாய் தகப்பன்மாரைக் கேட்போம்.

மந்திரி : மஹாராஜ்! நான் இருக்கிறேன். தேசநிமித்தம், பல உயிர்களைக் காக்கும் பொருட்டு எனது உயிரை ஒன்று அர்ப்பணம் செய்வேன்; அல்லது தேசகீர்த்தியை நிலைநிறுத்துவேன். இதுநிச்சயம்!

* * * * * *

“ அண்ணா ! என்னை விட்டுவிட்டா போவீர்கள் ! கூடாது ” எனக் கதறினான் ஒரு வாலிபன். பக்கத்திலிருந்த சகோதரன் யாரெனக் கவனிப்பின், அரசனது மந்திரியாகிய ஹாரேஷை என்பவனே. இதற்குள் தெருவிலிருந்து ஒருவன் ஓடிவந்து “ அண்ணா நானும் உங்களுடன் வருவேன் ” என்றான்.

பார்த்தான் ஹாரேஷை, என்ன செய்வான் ? கூடாது என்று சொல்வதற்கோ மனம் எழவில்லை. தன்னைத் தூண்டிய நல்லெண்ணமே இவர்களையும் தூண்டினது என நினைத்தான். தேசநிமித்தம் மூவரும் தம் உயிர்களை அர்ப்பிதம் செய்வதாகத் தீர்மானித்தார்கள். ஒருகால் தாம் இறந்து தமது தேசம் தோல்வியடைந்தாலும், அநேக உயிர்கள் சண்டையில் சேதமாவதை நிறுத்தினதற்கு ஒருபக்கம் சந்தோஷமே. சகோதரர்கள் மூவரும் சண்டை செய்யத் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார்கள். எதிர்கக்ஷி சேனாபதியும் அரசனும் இவ்விஷயத்தை அறிந்து தங்கள் ஜனங்களில் மூவரைத் தெரிந்தெடுத்து செய்தி சொல்லியனுப்பினார்கள். மறுநாட் காலை 6 மணிக்குப் போர் ஆரம்பிப்பதாக தீர்மானித்திருந்தது.

* * * * * *

பொழுது புலர்ந்தது. இருள் நீங்கி வெளிச்சம் பரவ ஆரம்பித்தது. இருபக்கத்து ஜனங்களும் மைதானத்தில் ஒருங்கே கூடினர். அரசனுட்கள் “ பராக்கு ” எச்சரித்தார்கள். “ ஐயா ! நமது வீரர்கள் எப்பொழுது வருவார்கள், ” “ யார் நமது வீரர்கள் ? ”, “ இருவர், ” “ இல்லை மூவர், ” “ ஹாரேஷியர்கள், ” “ ஜே, ஜே, அரசன் ! ”

இருகுண்டுகள் வெடிதீர்த்தன. அரசனும் அமர்க்களத்தை அடைந்தான். இருபக்கத்து வீரர்களும் ஜனங்களால் உபசரிக்கப்பட்டு, மைதானத்து நடுவே நுழைந்தார்கள். மூவர் ஹாரேஷியர்களும், மூவர் ஆல்பா பட்டணத்து குரேஷியரும் நடுவே வந்து நின்றனர். இருகக்ஷியாரும்

மத்தியஸ்தரை வந்தனம் செய்தார்கள். ஜனங்கள் ஆரவாரித்தார்கள். சிபாய்கள் அமளியை அடக்கி, போர் ஆரம்பிக்குமாறு சமிக்ஞை செய்தார்கள். சண்டை தொடங்கியது. கத்தி கேடயங்கள் கிண்கிண் என சப்தித்தன. ஹொரேஷியர்கள் கை சற்று சளைத்தது. ஜனங்கள் ஆவலுடன் நிச்சப்தமாக எதிர் பார்த்திருந்தனர். ஹொரேஷியர்களில் இருவர் கீழே விழுந்தார்கள். குரேஷியரில் இருவர்களுக்குப் பலத்த காயங்கள். கத்தி முதலிய ஆயுதங்கள் ஒடிந்துபோகவே முஷ்டியுத்தம் செய்தான். ஒரு ஹொரேஷயன் மூவருடன் யுத்தம் செய்து வருகிறான். ஆல்பானியர்கள் "ஜே! குரேஷிய! ஒருவனே பாக்கி!" என ஆரவாரித்தார்கள். மத்யஸ்தர்கள் சண்டை முடியட்டும் எனக் கையமர்த்தினான். ரோமர்கள் கொஞ்சம் மனத்தளர்ச்சியடைந்தார்கள். ஆனால் சீக்கிரம் தைரியமடைந்தனர். ஏனெனில் காயம்பட்ட இரு குரேஷியரும் கீழே இறந்து விழுந்தார்கள். மிகுந்திருந்த ஒரு குரேஷியனை, நமது ஹொரேஷிய வீரன் சிக்கிரம் கீழே வீழ்த்தினான். ரோமர்கள் ஜயித்தார்கள்.

*　　*　　*　　*　　*　　*

1-வது நகரவாசி: ஏய் ஆல்பானியர் தோத்துப்போயினர். நமது ஹொரேஷியர்கள் ஜயித்துவிட்டார்கள்.

2-வது நகரவாசி: ஹொரேஷியர்கள் சிறந்த வீரர்கள்.

3-வன்: நிரம்ப தேசபக்தி! அவன்தான் உண்மையான புரியான்!

2-வன்: நமது ஜனங்கள் அவனை மிகவும் கனப்படுத்தி அவனுக்கு வெகுமதியளிக்கப்போகிறார்கள். அவன்பொருட்டு, அவனைக் கௌரவப்படுத்துமாறு இப்பொழுது இங்கு கூடியிருக்கிறோம்.

1-வன்: சற்றுப்பொறு: சங்கத்வனி முழங்குகிறது.

4-வன்: அரசனும் ஹொரேஷியனும் ஆல்பா பட்டணம் சென்று திரும்புகிறார்கள்.

3-வன்: இப்பொழுது அப்பட்டணம் நம்மதன்றோ?

ஜனங்கள் இரைச்சலை நிறுத்தி மேடைமேலே நோக்கினார்கள். அரசன் எழுந்து ஜனங்களுக்கு விஷயங்களை விரித்துரைத்தனன். எல்லோரும் "ஹொரேஷிய" எனக் கூவினார்கள். "நீடூழி வாழ்க" என ஆரவாரித்தார்கள். இச்சமயம் ஹொரேஷியனுக்குச் சமீபத்திலிருந்த அவன் சகோதரி திடீரென்று "ஆ!" எனக்கதறி மூர்ச்சித்து விழுந்தனள். விழும்பொழுதே "ப்ரியே! குரேஷிய." எனக் கதறினாள். சமீபத்திலிருந்த ஹொரேஷியன் உடனே அவளைக் கத்தியால் குத்தி அவளைக் கொன்றுவிட்டான். ஜனங்கள் ப்ரமித்து நின்றார்கள். மைதானத்தில் குரேஷியாது ப்ரேதங்களை எடுத்துக்கொண்டிருந்தனர்.



முன்போலவே இன்னொருபெரிய கூட்டம். ரோமாபுரி நியாயாதிபதியின் சபை. ஹொரேஷியன் தன் சகோதரியைக் கொன்ற நிமித்தம், குற்றஞ் சாட்டப்பட்டு மரணத்திற்குத் தயாராக நிற்கிறான். ஜனங்களும் தத்தமக்குத் தோன்றியவாறு பேசிக்கொண்டார்கள். "ஐயோ! பாவம்" "இவனைக்கொல்வது அநியாயம்! தேசத்தின் கீர்த்தியை நிலைநிறுத்தினான்." "அவனில்லாவிடில் நாம் இப்பொழுது அடிமைகளாகவன்றோ இருப்போம்", "தன் சகோதரியைக்கொன்றது கொடிதே." "பாவம் ஒரே குத்து! இறந்துவிட்டாள்." "அவன் தேசவிரோதியை நேசித்தது பிசகே" இவ்வாறு ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். நியாயாதிபதி எழுந்து ஜனங்களைப்பார்த்து "ஹே! ஜனங்களே! இவன் ஹொரேஷியன், நமது தேசத்தைக் காப்பாற்றிய தீரன். இவன் அவசரப்புத்தியால் தன் சகோதரியைக் கொன்றுவிட்டான். தேச சட்டப்படி இவனைத்தூக்கிவிடத்தீர்மானித்திருக்கிறேன்." என்று கூவினார். ஹொரேஷியனும் முழந்தாள் படியிட்டு "நான்செய்த குற்றத்திற்கு, தேச சட்டப்பிரகாரம், நீர் என்னைத் தண்டிப்பதற்கு நான் மனப்பூர்வமாய் வந்தனமளிக்கிறேன்" எனச் சொன்னான்.

ஜனங்கள்சற்றுஒன்றுந்தோன்றாமல்ஊமையர்போலிருந்தனர். ஆனால் ஹொரேஷியோவின் நன்னடக்கை அவர்கள் மனதை இளக்கியது. அச்சமயம் எல்லாரும் ஒருங்கே "அவனைக்கொல்லக்கூடாது" என கூச்சலிட்டார்கள். ஜனங்கள் பொருட்டு ஒருவிருத்தாப்பியன் எழுந்து "ஐயன்மாரே! இவனே நன்னடக்கையுள்ள உண்மையான ரோமாபுரியான். தேசத்தை ரட்சித்தவன். அவசரபுத்தியினால் தன் சகோதரியைக் கொன்றாலும் இப்பொழுது அவனை தூக்கிவிடுவதால் அவள்திரும்பிவரப் போவதில்லை. நமது தேசத்துக்கு ஒருபெரிய நஷ்டம். ஆகவே அவனைக் கொல்லாமல் மன்னிக்க வேண்டியது" என்றான். இன்னொருவரும் எழுந்து "அவன் அவ்வாறு தன் சகோதரி என்றும் பாராமல் அவளைக் கொன்றது அவன் உண்மையான ரோமாபுரியான் என்பதைக் காட்டுகிறது" என்றுசொல்ல, ஜனங்களும் "நிஜம்" என ஆரவாரித்தனர். ஹொரேஷியன் விடுவிக்கப்பட்டான்.

இவ்வாறு ஜனங்கள் இஷ்டத்தை ஒத்து நடப்பது முற்கால ராஜ்யங்களின் வழக்கம். ஜனங்கள் சம்மதத்தை யறிந்தபிறகே அரசர்கள் ஒரு காரியத்தைச் செய்வார்கள்.

அநேகவருஷங்கள் சென்றன.

இப்பொழுது ரோமாபுரி ராஜ்யம் கொஞ்சம் உயர்ந்த பதவியையடைந்திருக்கிறது. அநேக அரசர்கள் ஆண்டுவந்தார்கள். துளசி ஹாஸ்டில்யஸ் இறந்து போய்விட்டான். அவனுக்குப்பிறகு ஆண்ட ஆங்கஸ் மார்ஷியு

னும் காலஞ் சென்றுவிட்டான். மார்ஷியலின் இளங்குழந்தைகளைப்பாது காத்துவருமாறு டார்குவின் என்ற ஒருவன் அவர்களை நீக்கிவிட்டுத் தானே அரசாட்சி புரிந்தான். இவ்வரசன் மிகவும் கெட்டிக்காரன். நயவஞ்சகத்தாலும், வீரசாதுர்யத்தினாலும் அநேக நகரங்களை தன் ராஜ்யத்தோடு சேர்த்தான். தேசத்தில் பற்பல நன்மைகள் செய்து ஜனங்களின் க்ஷேமத்தை விருத்திசெய்தான். ஆனால் அநியாயமாய் அபகரித்த ராஜ்யம் அவனுக்கு நெடுநாள் தக்கவில்லை. ரகசியமாககொலை செய்யப்பட்டான். இவனது மகனைப்பற்றி இன்னொருசமயம் பேசுவோம்.

வி. என் ராஜ்.

---

# சிதம்பர ஸ்தல யாத்திரை

(237-வது பக்கத் தொடர்ச்சி)

நேட "அம்மன், என்கிட்ட அபயமடைந்து என்னை நமஸ்கரி என்று ஒரு கையைக் கீழே காட்டுகிறாள். இன்னொரு கையை மேலே காட்டி நீ அப்படிச் செய்தால் உனக்கு மோக்ஷம் கிட்டும் என்கிறாள்."

அப்பா:—"நீ தலை தெறித்து அகம்பாவம் நிரம்பி நடவாமல் உன்னையறிந்து தலை குனிந்து பெரியோரை வணங்கி வசித்து வந்தால் உனக்கு நற்கதி கிட்டும் எனப்போதிக்கிறாள்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் காந்தாமணி கோ வெனக்கதறினதைக் கேட்டு ஓடிப்போய் பார்க்கையில் அவள் காலில் ஒரு கறுப்புப் பூச்சி ஓடினதெனத் தெரிந்து, யாவரும் சிரித்தார்கள்.

இதற்குள் கோவிலுக்குக்கூட வந்து உதவின தீக்ஷிதாவர்கள் தம் பூர்ண சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு இவர்கள் ஏதேனும் நிரந்தரமான ஒரு கட்டளை ஏற்படுத்தி வைக்கமாட்டார்களா எனப் பேராவல் கொண்டு திரும்பினார். அக்கோவிலில் வழக்கம் என்னவென்றால் ஒரு கனவானிடம் பணம் பெற்று அவர் பெயரால் அவர் விரும்பின சுபதினத்தில் ஸ்வாமிக்கு அபிஷேக அர்ச்சனைகளும் பூர்ண நிவேதனமும் செய்வதாம். இவ்விதமாகப் பல கனவான்களிடம் ஏதேனும் காரணம் சொல்லி கட்டளை ஏற்படுத்திக் கொள்வது வழக்கம். ஐந்து ஆறுகல அரிசியைச் சமைத்து சக்கரைப் பொங்கலாகவோ, வெண் பொங்கலாகவோ தயார் செய்து அதைப் பல பட்டைகளாகப் போட்டு ஸ்வாமி முன்னிலையில் ப்ரப்பி, அதை நைவேத்யம் செய்த பிறகு கோவில் தீக்ஷிதர்களும் மற்ற சிப்பந்திகளும் பிரித்துக் கொள்வது வழக்கம். சில தீக்ஷிதர்கள் தங்கள் பங்கை விற்று விடுவார்கள். இவ்வாறு நைவேத்யம் செய்வதற்கு அவ்வூரார் பாவாடை போடல் எனப்பெயரிட்டிருக்கிறார்கள். இவ்விதமான பாவ



டைகளில் கலியாணமான தீக்ஷிதர்களுக்கு மாத்திரமே பங்கு கிடைக்குமாதலின் தீக்ஷதர்கள் தத்தம் குமாரருக்குச் சிறு வயதிலேயே கலியாணத்தை முடித்துத் தம்பங்குடன் தம் குமாரர் பங்கும் சேர்த்து அடைவார்கள். இத் தீக்ஷிதரென்பார் முற்காலத்தில் பிரசித்தி பெற்ற தில்லை மூவாயிரந்தீக்ஷிதர்களென்னுங் கூட்டத்தாரின்மிச்சம். இப்பொழுது சுமார் இருநூறு பெயரேயுள்ளர். இவர்கள் விவாகம் தம் கூட்டத்தினுள்ளேயே செய்து முடித்துக் கொள்ளவேண்டுமாம். இக்கூட்டத்தில் எவரேனும் சர்க்கார் உத்தியோகத்திற்குச் செல்லக்கூடாதாம். ஆனால் இங்கிலீஷ் படிக்கலாமாம். இது நிற்க,

ஸ்வாமி தரிசனத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். கதிரவன் கொடுமை சகிக்க முடியவில்லை. தரை கொதித்துக் கொண்டிருந்தது. யாவரும் தாண்டவமாடிக் குதித்துக்கொண்டே நடக்க வேண்டியதாயிற்று. வருஷத்திற்கு வருஷம் சூரிய வெப்பம் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது. சூரியனை பூமி நெருங்கிக்கொண்டே யிருக்கிறது என்றும் இன்னும் சில வருடங்கள் கழித்து சூரியன்மேல் விழுந்துவிடும், அப்பொழுது பூமி அக்னிப்பிரளயத்தில் மூழ்கிவிடும் என்றும் சிலர் எண்ணுகிறார்கள்.

நம் சிறு குடும்பத்தை கவனிப்போம். அவர்கள் வீடு சேர்ந்து போஜனமருந்தி சற்றுநேரம் இளைப்பாறிவிட்டு மாலை நான்கு மணி சுமாருக்குத் தில்லை மஹாகாளி கோவிலுக்குக் கிளம்பினார்கள். ஸ்வாமிக்குக் காளியிடம் பயம்போலும். அவளைஊருக்கு வெளியே இருக்கும்படி அனுப்பிவிட்டார். அவர்கள் காளியை தரிசித்து விட்டு மறுபடியும் ஒருதடவை நடராஜாவைத் தரிசிக்க விரும்பிச்சென்றார்கள். கோவிலுக்குள் நுழைந்து சிவ கங்கை என்னும் பொய்கையில் சற்று உட்கார்ந்திருக்கையில், படித்துறைகளில் விநாயகர் விக்ரகங்கள் பல இருப்பதைக் கண்டு "ஏன் அம்மா! இங்கே எல்லாம் என்னத்துக்கு இந்தப்பிள்ளையார் உட்கார்ந்திருக்கிறார் ?" எனக் காந்தாமணி கேட்க, உடனே ஞானம், "நான் சொல்கிறேன். இந்தப் பிள்ளையாரை இவர் அம்மா கூப்பிட்டு "நீ இன்னம் கலியாணம் பண்ணிக்கல்லையே? ஒங்க அம்பி கூடப்பண்ணிண்டுட்டானு' கேட்டாள், அப்பொ பிள்ளையார் 'எங்கஅம்பிதான் எனக்குஞ் சேத்துரண்டு பெண்டாட்டியைக் கலியாணம் பண்ணிண்டுட்டானே' என்றார். அதைக் கேட்காமல் அவர் அம்மா 'நீ பண்ணிக்கத்தான் வேணும்' என்கவே அப்பொ இவர் 'உம்மாதிரி ஒரு பெண் ஆப்பட்டால் பண்ணிக்கிறேன்' என்றார். அம்மா கோபித்து 'என்மாதிரி கிடைக்காது' என்று சொல்லிவிட்டார். பிள்ளையார் அதைத்தான் பார்ப்பமே என்று கோவில், குளங்கரை, தெருக்கோடி, சந்து எங்கே கண்டாலும் போய் உட்கார்ந்து போறவளை யெல்

லாம் பாத்துகிண்டிருக்கார். போறவாளெல்லாம் இந்தப் பிள்ளை யாரு ? என்று சொல்லிக்கொண்டே போறு, அதான் இவருக்குப் பிள்ளையார் என்று பெயர்" என்றாள்.

காந்: நான் போய் இந்தப் பிள்ளையாரை கலியாணம் பண்ணின்டேறேன்.

ஞான: நீ பார்வதியாட்டமா சமத்தாக்கும்.

காந்: ஆமா! நீ ரொம்ப சமத்து, என்று சொல்லிக்கொண்டே ஓடினாள். மற்றவர்களும் எழுந்துசென்றார்கள்.

காந்: ஏ. அம்மா நீங்க சொல்லுங்கோ பார்ப்பம் இந்தப் பிள்ளையாருக்கு ஏன் ஒரு தந்தம் ஓடிந்திருக்கு?

அம்மா: நீ தான் சொல்லேல.

ஞான: அவர் ஒரு ஜெயன்டோடு சண்டை போட்டார். அப்ப ஓடிஞ்சு போச்சு.

காந்: இல்லே அவர் அப்பாவை ஒருநாளைக்கு நமஸ்காரம் பண்ணற போது கீழே வேகமாய் விழுந்ததினாலே ஒரு தந்தம் ஓடிஞ்சு போச்சு. என்னத்துக்கு நமஸ்காரம் பண்ணினோரோ மறந்து போச்சு.

இதற்குள் கோவில்மணி சப்தம் கேட்டதனால் எல்லாரும் வேகமாய் நடந்து சன்னதி சேர்ந்தார்கள். அன்று ஒருபாவாடை நிவேதனம் நடந்தது. தெய்வத்தை தரிசித்து விட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். இரவு போஜனத்தை முடித்துக் கொண்டு வண்டி யேறி ரயில் ஸ்டேஷனுக்கு வந்து இரவு 10-மணி ரயிலில் ஏறி சென்னைக்குத் திரும்பினார்கள்.

வி. என். ராஜ்.

முற்றிற்று.

---

## சென்னை லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப்பில் ஹர் எக்ஸலன்ஸி லேடி ஹார்டிஞ்ச்.

நவம்பர்மீ 26உ சென்னை லேடீஸ் ரிக்ரியேஷன் கிளப்புக்கு ஹர் எக்ஸலன்ஸி லேடி ஹார்டிஞ்ச் விஜயம் செய்தார். மாலை சுமார் 4-மணி முதல் கணக்கற்ற ஐரோப்பிய மாதர்களும் இந்திய ஸ்திரீகளும் கிளப்பில் வந்து குவியத் தொடங்கினார்கள். கட்டடமும்தோட்டமும் பார்ப்பவர் கண்களைக் கவரத் தக்கனவாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மழைக்காகப் பெரிய பந்தல்களும் போடப்பட்டு மிக விமரிசையாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்தன. மேற்படி ஸ்திரீகளெல்லாம் சிறு மெம்பர்களால் ஏற்கப்பட்டு பந்தலினுள் தங்கி, ஹர் எக்ஸலன்ஸியின் வரவை எதிர்பார்த்திருக்க, மேற்படி கிளப்பின் கமிட்டி ஸ்திரீகள் பங்களாவின் வாசலில் லேடி ஹார்டிஞ்சை



வரவேற்க ஆவலாய் காத்திருந்தார்கள். மாலை சுமார் 4·45 மணிக்கு லேடி ஹார்டிஞ்சும் லேடி பெண்ட்லெண்டும் பங்களா வாசலில் மோட்டாரில் வந்திறங்கினார்கள். அவர்களை வைஸ் பிரசிடெண்ட் லேடி அட்கின்ஸன் வரவேற்றார். உடனே லேடி சங்கரநாயரின் குமாரத்தி மிஸ் மாதவி, மிஸ் ரங்கப்பா இருவரும் அழகிய பச்சைக் கிளிகளையுடைய பட்டன் ஹோல்கள் வழங்கினார்கள். பிறகு லேடி அட்கின்ஸனால், லேடி தேசிகாச்சாரி, மிஸஸ் டாட் ஹண்டர், மிஸஸ் சுப்ரமணியம் முதலிய வைஸ் பிரசிடெண்டுகள் அறிமுகம் செய்து வைக்கப்பட, கமிட்டி ப்ரசிடெண்டு மிஸஸ் டாட்ஹண்டரால் செக்ரிடெரிகள்முதலிய மற்ற 8கமிட்டி மெம்பர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். H. E. லேடி ஹார்டிஞ்சு கமிட்டி மெம்பர்கள் பின் தொடர முதலில் பில்லியர்ட் ரூமுக்குச் சென்றார். அச்சமயம் அங்கு ஆடிக்கொண்டிருந்த லேடி தேசிகாச்சாரி, மிஸஸ் பேக்கவேல், மிஸஸ் சீனிவாச அய்யங்கார், மிஸஸ் பத்மனாப அய்யங்கார் முதலிய நான்குபெயரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். லேடி ஹார்டிஞ்ச் சிறிதுநேரம் அவர்களுடன் சம்பாஷித்து, விட்டு லைப்ரேரி ரூம், கமிட்டி ரூம், ஸ்டோர் ரூம் முதலியவைகளைப் பார்வையிட்டார். அங்கு வைக்கப்பட்டிருந்த புஸ்தகத்தில் கையெழுத்துப் போட்டார். பிறகு லேடி அட்கின்ஸனும் செக்ரிடரிகளும் ஹர் எக்ஸலன்ஸியை தோட்ட பந்தலுக்கு அழைத்துச் சென்றார்கள். பந்தலின்வாசலில் மைலாப்பூர் செண் தாமஸ்கான்வெண்ட் ஸ்கூல் ஐரோப்பிய இந்தியச் சிறுமிகளால் இங்கிலீஷில் வெல்கம் பாட்டு பாடி வரவேற்கப்பட்டார். அப்பால் ஓர்புறம் வரிசையாய் நின்றிருந்த கிளப் மெம்பர்களில் சிலர் செக்ரிடெரிகளாகிய மிஸஸ் திருவெங்கடாச்சாரியாலும், மிஸஸ் மேடிலியாலும் அறிமுகம்செய்து வைக்கப்பட்டார்கள். கோஷா ஸ்திரீகளும் ராணிகளும் மிஸஸ் சுப்பிரமணியமால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். ராணி இந்திராகான தேர் எக்ஸலன்ஸிகளுக்குத் தன் கைப்படச் செய்த இரண்டு அழகிய சரிகை துப்பட்டாக்களை மேலே சாத்தினர். பந்தலில் மற்றொரு புறமாய் நின்றிருந்த லேடி ஹார்டிஞ்ச் அட்ரஸ் கமிட்டியை சேர்ந்த ஸ்திரீகள் மிஸஸ் நம்பெருமாள் செட்டி, மிஸஸ் ஹெண்டர்ஸனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அதன்மேல் ஹர் எக்ஸலன்ஸி செக்ரடெரிகளால் டெனிஸ் ஆடும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட, அங்கு சற்றுநேரம் வேடிக்கைபார்த்துவிட்டு பாட்மின்டென் கோர்டிற்குச்சென்று அங்கு சற்று தங்கியிருந்தார். அப்புறம் க்ரோக்கே விளையாட்டைப் பார்த்தவண்ணம் ரிப்ரஷ்மெண்ட் எடுத்துக்கொண்டானதும் தேர் எக்ஸலன்சிகள் சிறந்த ஆசனங்களில் நடுவில் அமர்ந்திருக்க சுற்றிலும் கிளப் மெம்பர்கள் சூழ்ந்திருக்க போடோ பிடிக்கப் பட்டது.

பிறகு லேடி தேசிகாச்சாரியும், மிஸ்ஸஸ் நம்பெருமாள் செட்டியும் அழகிய சரிகை மாலைகள் போட்டார்கள். மிஸ்கார்பெட்டும் மிஸ் கிருஷ்ணனும் வெள்ளி ஓலைகளுடன் பொக்கேகள் கொடுத்தார்கள். மிஸஸ் ஸ்ரீனிவாச அய்யங்காரும் மிஸஸ் திருவேங்கடாச் சாரியரும் விஜயநகரம் மகாராணி, தூணிராணி, இவர்கள் அனுப்பிய கற்பூர மாலைகளைப் போட்டார்கள். H. E. லேடி ஹார்டிஞ்ச் மெம்பர்களுடன் தாராளமாய் சம்பாஷித்திருந்து லேடி பெண்ட்லண்டுடன் சுமார் 6-30-மணிக்கு கிளப்பை விட்டுச்சென்றார். லேடி பாஷ்யமய்யங்கார் குமாரத்தியும், மிஸஸ் நம்பெருமாள் செட்டி குமாரத்தியும், சிறந்த சரிகை கூடைகளிற் பழங்கள் அவர்களுக்கு அளித்தார்கள். மெம்பர்கள் அனைவரும் ஆனந்த கோஷமிட்டுகை தட்டி ஹிப்பிப்புரே என்று மூன்றுதரம் ஆரவாரமிட வண்டி நகர்ந்தது.

பிட்டாபூர் இராணி, கபிலேஸ்வரம் இராணி, திருவனந்தபுரம் மகாராஜாவின் குமாரத்தி, கொல்லங்கோடு இராணிகள், ராமனாதபுரம் இராணிகள், வத்வான் இராணி, சந்தா இராணி, செள்ளபள்ளி இராணி, ஊத்துமலை இராணி, இராணி இந்திராகரன் முதலிய இராணிகளும், லேடி அட்கின்ஸன், லேடி ராமசாமி முதலியார், லேடி தேசிகாச்சாரி, மிஸஸ் பேக்வல், மிஸஸ் வொய்ட்ஹெட், மிஸஸ் கார்பெட், மிஸஸ் ஸ்பென்ஸர், மிஸஸ் சிவசாமிஅய்யர், மிஸஸ் டயாப்ஜீ, மிஸஸ் சதாசிவ அய்யர், மிஸஸ் திருவெங்கடாச்சாரி, மிஸஸ் மேடிலி, மிஸஸ் கிருஷ்ணன், மிஸஸ் நம்பெருமாள் செட்டி, மிஸஸ் டாட்ஹண்டார், மிஸஸ் கிப்பர்ட், மிஸஸ் ஹென்றிக்' மிஸஸ் லாஸரஸ், மிஸஸ் சேஷகிரி அய்யர், மிஸஸ் ரங்காசாரியார், மிஸஸ் மில்லர் முதலிய சீமாட்டிகளும் வேறு சிலருமாக சுமார் 400-ஸ்திரீகள் வரையில் விஜயம் செய்திருந்தார்கள்.

ஓர் மாது.

---

1. **கறையானுக்கு புத்தி அதிகம்.**— கறையான் புத்துகளி லிருக்கும்பொழுது அவைகளைப் புசிக்க பாம்பு வருமாம். அது வரும் சப்தத்தை யறிந்து அவைகள் துரிதமாய் அப்புத்திலிருந்து வெளியேவந்து, வேறு இடத்திற்குப் போய்விடுமாம்.

2. **ஸிலோனில் வாழைகளுக்கு நோய்.**— ஸிலோனில் சிற்சில இடங்களில் வாழைகளுக்கு ஒருவித நோய்கண்டிருக்கிறதாம். அதனால வாழை கெட்டுப் போகிறதாம். வாழை வைத்திருப்பவர்கள் அந்த நோயைத்தடுக்க முயலுவார்களென்று நம்புகிறோம்.

3. ஹர் எக்ஸ்லன்ஸி லேடிபெண்ட்லண்ட மிஸ் ஸி. எம். லீஜுடன் இம்மாசம் 22ட பிற்பகலில் திருவல்லிக்கேணியிலுள்ள இந்துகைம்பெண் கிரகத்திற்குப் போய் சகோதரி சுப்பலக்ஷ்மி அம்மாளால் வரவேற்கப்பட்டு அங்குள்ள கைம்பெண்களைப் பார்த்துவிட்டு தமதுமாளிகைக்குச் சென்றார்கள்.





## BEAUTY AND THE BEAST (2.)

## அழகியும், ம்ருகமும்.

ஒரு காலத்தில் ஒரு தனவானிருந்தான். அவன் பெருத்த வியாபாரி. அவனுக்கு மூன்று புத்ரிகள் உண்டு. அவர்களெல்லாம் மிக்க சௌந்தரிய முள்ளவர்கள். ஆனால் கடைசி பெண் அவர்களைவிட அதிக அழகுள்ளவள். ஆகையால் அந்த ஊர் ஜனங்கள் அவளை அழகி என்று அழைத்துவந்தார்கள்; இப்படி ஜனங்கள் சொல்லிவருவது அவ்விரு சகோதரிகளுக்குப்பிடிக்கவில்லை. ஆகையால் அழகியை குரூரமாய்நடத்திவந்தார்கள்.

தனவந்தனாகிய வர்த்தகன் தன்னுடைய ஆஸ்தியையெல்லாம் காலகதியால் இழந்துவிட்டான்; வீடு வாசலும் போய்விட்டது. பட்டணத்தில் வசிப்பதை விட்டு நாட்டுபுரத்தில் ஒருசிறு குடிசையைக் கட்டிக்கொண்டு தனது குமாரத்திகளுடன் வசிக்கவேண்டி யிருந்தது. அவ்விதமே அங்கே ஒரு தோட்டத்தில் பயிர்செய்து ஜீவனம்செய்துவந்தான். இவனுக்காகவும் அழகிக்காகவும் ஒவ்வொருவரும் மிகவும் விசனப்பட்டார்கள். ஆனால் இவளுடைய சகோதரிகளுக்காக ஒருவரும் விசனப்படவில்லை. ஏனெனில் ஒவ்வொருவரிடத்திலும் முரட்டுத்தனமாய் நடந்துவந்தார்கள். ஒருவருக்கும் கீழ்ப்படிவதே கிடையாது.

வர்த்தகனும் அழகியும் தினம் அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்திருப்பார்கள். வர்த்தகன் தோட்டத்தில் வேலை செய்யும்பொழுது அழகி வீடுமுழுவதும் பெருக்கி சுத்தி செய்துவைப்பாள். சமையல் நன்றாகச் செய்வாள். அவள் தகப்பனார் வீட்டுக்கு வருமுன் வீட்டிலுள்ள பண்டங்



கள் எங்கெந்தயிடத்திலிருக்க வேண்டுமோ அந்தந்த இடத்தில் ஒழுங்காய் அவைகளை வைத்திருப்பாள். ஆனால் இவளுடைய சகோதரிகள் பகல் பத்துமணி வரைக்கும் நித்திரைசெய்து பின் படுக்கையை விட்டு எழுந்திருப்பார்கள். நாள் முழுவதும் இரைச்சல் செய்துகொண்டிருப்பார்கள். அவர்களுடைய தகப்பனார் வீட்டில் இல்லாதசமயத்தில் அழகியைப் படாதபாடு படுத்துவார்கள். அவளிடத்தில் சிறிதும் ப்ரியமாயிருக்க மாட்டார்கள்.

ஒரு தினம் வர்த்தகனுக்கு ஒரு கடிதம் வந்தது. அலுவலாக வேறு ஊருக்குப்போய் வர அதில் எழுதப்பட்டிருந்தது. வெகு அவசரம் என்றும் கண்டிருந்தது. தனக்கு அவ்வேலை செய்வதால் அதிக கூலி கிடைக்குமென்று நினைத்து உடனே புறப்பட தயாராயிருந்தான். "நான் திரும்பி வரும்பொழுது உங்களுக்கு என்ன கொண்டுவர வேண்டும்" என்று தன் குமாரத்திகளைக் கேட்டான்.

முதல் இரண்டு சகோதரிகளும் விலையுயர்ந்த வெகுமதிகளைக் கேட்டார்கள். ஆனால் அழகியோ தன் தகப்பனார் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை வீணாக விரயம் செய்யவிரும்பவில்லை. ஆகையால் பின் வருமாறு சொன்னாள்:—"எனது ப்ரியமுள்ள தகப்பனாரே, ரோஜா புஷ்பங்களைக் கண்டால் அவைகளில் ஒன்று எனக்கு கொண்டுவந்தால் போதும்; நான் சந்தோஷமடைவேன்."

வர்த்தகன் அவ்விதமே செய்கிறேன் என்று சொல்லிவிட்டு ஒரு குதிரையின்மேல் ஏறி புறப்பட்டுவிட்டான். வெகு தூரத்திலுள்ள பட்டணத்திற்கு ஜாக்ரதையாக வர்த்தகன் போய்ச்சேர்ந்தான். தனக்கு வந்த வேலை-



யைச்செய்து முடித்து விட்ட பின் தன் கிராமத்திற்குத் திரும்பிப் போகப் புறப்பட்டான். ஆனால் காட்டில் வெகு தூரம் போனவுடன் இரவு காலம் வந்துவிட்டது! வழியோ தப்பிப் போய்விட்டது! இருள் சூழ்ந்து கொண்டது! புயல் காற்று அடிக்கடி ஆரம்பித்தது. காற்றின் இரைச்சலின் வேகத்தால் ஓநாய்கள் ஊளையிடும் சப்தம் வர்த்தகனுக்குக்கேட்டது. இவன் தட்டுத் தடுமாறி ஒரு மரத்தண்டை போய் அதின் மேல் ஏறி எங்காவது ஒரு வீடு இருக்கிறதாவென பார்க்கப் போனான். வெகு தூரத்தில் வெளிச்சம் இருப்பதைக்கண்டான்; உடனே கீழேஇறங்கினான், அதைநோக்கி மரங்களடர்ந்த வழியே துரிதமாகப் போனான். அம்மரங்களடர்ந்த சாலையின் கடைசிக்கு வந்தவுடன் ஒரு அரண்மனையையும் அதன் வாசற்படியையும் கண்டு ஆச்சரியப்பட்டான்.



வாசற்படியின் கதவுதிறந்திருந்தது. ஒவ்வொரு ஜன்னலின் வழியாக வெளிச்சம் வீசிக்கொண்டிருந்தது. இங்கு யாராவது இருக்கிறார்களாவென்று பலதடவை கெட்டியாகக்கூப்பிட்டான். ஆனால் ஒருவரும் வரவில்லை. ஆகையால் கடைசியாக தனது குதிரையை அங்குதென்பட்ட லாயத்தில் (Stable) கட்டினான். பின்பு அரண்மனையுள் நுழைந்து மண்டபத்துள் நடந்து போனான். அங்கிருந்து பல அறைகளைத் தாண்டிக்கொண்டு போஜனசாலைக்குப் போனான். இங்கே நெருப்புகுண்டத்தில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. இராபோஜனம் தயாராக மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்தது. இவனுக்கு இது அதிக சந்தோஷத்தை உண்டாக்கியது. வியாபாரி உட்கார்ந்து குளிர்காய்ந்து போஜனம்புசித்தான். பின்பு தூக்கம் வரும்போலிருந்தது. ஆகையால் எங்காவது நேர்த்தியான படுக்

கறையிருக்கிறதோ வெனபார்க்க அரண்மனையைச் சுற்றிப்போனான். ஓரிடத்தில் ஒரு நேர்த்தியான படுக்கை அறையிருப்பதைக் கண்டு அங்கு தனது உடுப்புகளைக் கழற்றி ஓரிடத்தில் வைத்துவிட்டு நித்திரை செய்யப் போனான். இது வரையிலும் வியாபாரி ஒருவரையும் காணவில்லை.

காலையில் தனது படுக்கைக்குப் பக்கத்தில் ஒரு நாற்காலியின்மீது புதிய உடுப்புகள் வைத்திருப்பதைக் கண்டான். உடனே அவைகளை எடுத்து உடுத்திக் கொண்டு போஜன சாலைக்குப் போனான். அங்கு மறுபடியும் போஜனம் தயாராயிருந்தது. திருப்தியாக போஜனமுண்ட பின் ஜன்னல் வழியாகப் பார்த்தான். அரண்மனையைச் சுற்றிலும் நேர்த்தியான தோட்டமிருந்தது. அங்கு ஏதாவது ரோஜா புஷ்பமிருக்குமோ வென்று பார்க்கப்போனான். வரிசை வரிசையாக வெண்மையான. ரோஜா செடிகள் வைத்திருப்பதைக் கண்டுகளித்து தனது புத்ரி அழகிக்கு புஷ்பங்களுள்ள ஒரு கொத்தைக் கொண்டு போய் கொடுக்க எடுத்தான். அப்பொழுது பயங்கரமான சப்தம் இவனுக்குப் பின்னால் கேட்டது. பயத்துடன் திரும்பிப் பார்த்தான். இவனுக்குமேல் உயரமாய் எழும்பிவரும் ஒரு விநோத ம்ருகத்தைக் கண்டான். அது பூமி அதிரும்படி உருமிக் கொண்டும் கர்ச்சித்துக் கொண்டும் வந்து கொண்டிருந்தது.



" நன்றியில்லாத மனிதனே! நேற்று இரவிலும் இன்று காலையிலும் உனக்கு தங்க இடம் கொடுத்தேன். உனக்கு வேண்டிய நன்மைகளை யெல்லாம் செய்தேன். நீயோ அவைகளுக்கு ப்ரதி ப்ரயோசனமாக எனது ரோஜா புஷ்பங்களைத் திருடினாய். கால்மணி நேரத்திற்குள் உயிரைவிடதயார் செய்து கொள்!" என்று உருமலுடன் சொல்லிற்று.



வியாபாரி அதன் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி அந்த ம்ருகத்தைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

' ஓ பிரபுவே! நான் ஒருஏழை, எனது இளைய புத்ரிக்காக வீட்டுக்குக் கொண்டு போக சில ரோஜா புஷ்பங்களை மாத்திரம் பறித்தேன். எனது பிரபுவே! நிச்சயமாகவே நான் தங்களுக்கு யாதொரு தீங்கும் செய்ய நினைக்கவில்லை" என்று மிகுந்த பயபக்தியுடன் சொன்னான்.

' நான் பிரபுவல்ல; நானே ஒரு ம்ருகம். நீ உன் வீட்டுக்குத்திரும்பிப் போனவுடன் நீ பார்க்கும் முதல்வஸ்துவை நீ எனக்கு அனுப்பினால் உன்னை இப்பொழுது மன்னிக்கிறேன். இல்லாவிடின் மூன்றுமாதத்திற்குள் இங்கே நீயே திரும்பிவரவேண்டும். என்னிஷ்டப்படி உன்னை நான்நடத்துவேன்" என்றது ம்ருகம்.

(இன்னும் வரும்.)

## சமாச்சாரக் குறிப்பு.

சென்னை யூனிவர்சிடி கான்வோகேஷன்:—சென்றமீ 20வ வியாழக்கிழமை செனட் ஹவுசில், பட்டங்கள் அளிப்பதற்காக, யூனிவர்சிடியார் கூடினார்கள். சுமார் 900பேர்கள் பி.ஏ. எம். எல்., பி. எல். முதலிய பட்டங்கள் அடைந்தார்கள். அவர்களில் பதினொருவர் ஸ்திரீகளாவர். (இரு L. M. S., இரு L. T., ஏழு B. A.) ஸ்ரீமான் ஆனரபில் திவான்பகதூர் ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளை பட்டதாரிகளுக்கு புத்திமொழிகள் கூறினார்.

* * * * * *

சிதம்பரம் முதலிய இடங்களில் வெள்ளத்தினால் மிகுந்த சேதம்:—மழையின் மிகுதியால் கொள்ளிடம் நதி நிரம்பி சமீபத்திலிருந்த கிராமங்களெல்லாம் முழுகிவிட்டன. சமீபத்திலிருந்த ஒரு பெரிய ஏரியும் கரை உடைந்துவிட்டது. கிராம ஜனங்களின் வீடுகளெல்லாம் வெள்ளம் அடித்துப் போய்விட்டது. சேகரித்து வைத்திருந்த தானிய ராசிகள் அழிந்துபோயின. ஏழை ஜனங்கள் குடிக்கக்கூழற்றுத் தவிக்கிறார்கள். ஆடு மாடுகள் அநேகம் இறந்துபோயினவாம். ஜனங்களும் பசியினிமித்தம் சிலர் இறந்தார்கள். ரெயில் தண்டவாளங்களிற் பல வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய்விட்டபடியால், ரெயில் வண்டி கொஞ்சநாளாக ஓடவில்லை. ஆகவே ஜனங்கள் கஷ்டம் விஸ்தரிக்க முடியாது. சீக்கிரம் வெள்ளம் நின்று ஜனங்கள் பழைய நிலையை யடையுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றனம்.

* * * * * *

தென் ஆப்பிரிகாவில் இந்தியர்கள் படும் கஷ்டம் தினே தினே அதிகரித்துக்கொண்டே வருகிறதன்றி குறைந்ததாகக் காணோம். வேலை செய்ய சம்மதமில்லாதவர்களை யெல்லாம் வேலை செய்யுமாறு நிர்ப்பந்தப் படுத்தி, குதிரைச் சவுக்கெடுத்து வேலை செய்யாதவர்களை ஹிம்சிக்கிறார்களாம். நியாயாதிபதிக்கு விண்ணப்பம் செய்வதாகச் சென்றால் குண்டு போட்டுச் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்துகிறார்களாம். ஐயோ! அநியாயம்! இவைகள் முடிவுறுங் காலம் எப்பொழுதோ! ஈசன் திருவருள்.

இச்சென்னைமா நகரில் சென்ற மாசத்தில் பெய்த மழையில், அநேக ஏழை ஜனங்கள் கஷ்டமடைந்தார்கள். அவர்கள் குடிசைகளும், துணி மணிகளும் மழையில் அழிந்தன. இக்கஷ்டத்தை நிவர்த்திக்க, நமது கருணை மிகுந்த கவர்னர் லார்டு பென்ட்லண்டு, ஒரு நிதி சேர்க்க ஏற்படுத்தி தாமும் ரூ. 250 கொடுத்துதவினார். சென்னை கார்ப்பரேஷன் பிரசிடெண்டாகிய ஸ்ரீமான் மூர் துரையவர்களின் ஊக்கத்தால் ரூ. 2,237 சேர்க்கப்பட்டு, சுமார் 600 ஏழை ஜனங்களுக்கு உதவி செய்யப்பட்டது.

வி. என். ராஜ்.

பம்பாய் குஜராத்தி ஸ்திரீகளின் மீட்டிங்:—தென் ஆபிரிக்கா இந்தியர் விஷயமாக 26-ந் தேதி இரவு குஜராத்தி ஸ்திரீகள் மீட்டிங் ஒன்று பம்பாயில் நடந்தது. மிஸஸ் ஜம்னாபாய் அக்ராஸனம் வகித்தார்.

தங்களுடைய புருஷர்களும் சகோதரர்களும் கஷ்டப்படும் காலத்தில் தென் ஆபிரிக்காவிலுள்ள நமது ஸ்திரீகள் அவர்களுடன் தாங்களும் பாடுபடத் துணிந்தது நம் தேசத்திற்கே பெருமையென்றும், அவர்கள் படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்காக ராஜ சக்கரவர்த்தியிடத்திலும் சக்ரவர்த்தினியிடத்திலும் ராஜப்பிரதிநிதியிடத்திலும் முறையிட்டுக்கொள்ள வேண்டுமென்றும் அவர் எடுத்துச் சொல்ல, அவ்வாறே தீர்மானங்கள் செய்யப்பட்டன.

* * * * * *

ஸர் K. சேஷாத்ரி அய்யரின் உருவச்சிலை:—ராஜப்பிரதிநிதி பெங்களூருக்கு விஜயஞ் செய்திருந்த பொழுது நவம்பர் மாதம் 20-ந் தேதியன்று அவர் காலஞ்சென்ற ஸர் K. சேஷாத்ரி அய்யரின் உருவச் சிலையைத் திறந்துவைத்தார். அந்த உருவச்சிலை செய்யப்படுவதற்கு, பண உதவிசெய்ய அவருடைய நண்பர்களும் அவருடைய குணாதிசயங்களைப் புகழுவோரும் சேர்ந்தார்கள். அந்த உருவம் வெண்கலத்தினால் செய்யப் பட்டிருக்கிறது. அது நான்கு வருஷகாலமாய் ஒரு மூலையில் கிடந்தது. அதற்கு இப்பொழுது நல்லகாலம் பிறந்ததென்று கேட்டு, அதற்குப் பணம் கொடுத்தவர்கள் சந்தோஷப் பட்டார்கள். அந்தச்சிலை பெங்களூர் கப்பன்பார்க்கிலுள்ள ஸர் சேஷாத்திரி அய்யரின் மெமோரியல் ஹாலுக்கு எதிரில் நாட்டப்பட்டதாம்.

* * * * * *

பூனாவில் லார்ட் பென்ட்லண்ட்:—செப்டம்பர் 15-ந்தேதி காலை லார்ட் பென்ட்லண்ட் கிர்க்கியிலுள்ள மிலிடெரிபால், தயிர், வெண்ணெய்ச் சாலையைப்போய்ப்பார்த்தார். அவருக்கு அது சம்பந்தமான சகல இடமும் காண்பிக்கப்பட்டது. அந்தச்சாலை விவில் மிலிடெரி உத்தியோகஸ்தர்கள் பலருக்கு பால், வெண்ணெய், முதலியவைகளை சப்ளைசெய்து வருகிறது. அது இன்னும் விஸ்தரித்துக்கட்டப்படுமென்று நம்பப்படுகிறது. அப்பொழுது அது பூனா நகருக்கு சிறந்த பால் முதலியவைகளை சப்ளை செய்யும்.

162059

* * * * * *

பூனா கைம்பெண் ஆச்சிரமத்தில் லேடி பென்லண்ட்:—லேடி பெண்லண்டும், லேடி வில்லிங்டனும், ஒன்றுசேர்ந்து ஹிந்து கைம்பெண் ஆச்சிரமத்தைப் பார்க்கச் சென்றார்கள். அன்றுமாலை சென்னை கவர்னர் தம்பதிகளும், பம்பாய் கவர்னர் தம்பதிகளும்சேர்ந்து, பட்டாளத்தார் நடத்தும் தமாஷாவைப் பார்க்கச் சென்றார்கள்.

600 008.